
கலைஞரின்
கடிதங்கள்



25

09.04.1994 - முதல்
13.11.1994 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 25

09.04.1994 - 13.11.1994

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

பேராசிரியர் அப்பாக் நூல் நிலையம் சென்னை-18 அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் “கோகிலாம்பாள் கடிதங்கள்”, இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய “அன்னைக்கு’, "தம்பிக்கு”, “நண்பர்க்கு’, "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் “தம்பிக்கு” கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய “உடன்பிறப்புக்கு” கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் "முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ’

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

"காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி"
"மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
"கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:


"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,



((மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2122. உண்மையில் தூங்கினால் எழுப்பலாம்!	09-04-1994	23
2123. மார்க்சிஸ்ட் உடைத்தால்; அது மண் சட்டி!	11-04-1994	34
2124. மறைக்கப் பார்த்த மர்மம் என்னவோ?	12-04-1994	41
2125. சிங்க ஏறுகளாக நிமிர்ந்து நிற்போம்!	13-04-1994	47
2126. எழுபதிலும் இருபது; இருபதிலும் எழுபது!	18-04-1994	52
2127. தெம்பு, திறன், தகுதி ஏது?	18-04-1994	56
2128. காந்தியடிகளின் கிராம ராஜ்யம் எங்கே?	21-04-1994	59
2129. ஏடுகளுக்கு என் இதயமார்ந்த நன்றி!	24-04-1994	62
2130. கல்லால் வடித்துக் காலமெல்லாம் காத்திடும் கர்ம வீரன் வரலாறு!	30-04-1994	70
2131. வாங்கிக்கொள்க; வாஞ்சைமிகு முத்தம்!	05-05-1994	76
2132. மலர்கள், அரும்புகள், அந்தோ; மாணவிகள்!	07-05-1994	81
2133. அணிவகுப்போம்; அறப்போர் ஆர்ப்பாட்டத்திற்கு!	11-05-1994	84

2134. எத்தனை இடிகளைத்தான் தாங்குவதோ?	15-05-1994	88
2135. வெல்வோம்; வென்று காட்டுவோம்!	16-05-1994	92
2136. நாடாளும் ராணிக்கு நாவடக்கம் தேவை!	21-05-1994	95
2137. முற்றுகையிட்டுத் தடுத்திடுவீர்!	மு. க. 22-05-1994	99
2138. நீண்டகால நெடுங்கதைகள் தொடரும்!	23-05-1994	103
2139. செயற்குழு முடிவை செயல்படுத்தும் விதம் என்ன?	24-05-1994	107
2140. 71-வது பிறந்த நாளும்; எனது ஆசையும்	01-06-1994	111
2141. எத்தனை மரக்கன்றுகள் வைக்கப்பட்டன என்று அறியத்துடிக்கும் என் ஆவலை நிறைவேற்றுவாயா?	07-06-1994	117
2142. மண்டல தி.மு.கழக மாநாட்டிற்கு வருகை தர - கலைஞரின் அந்த அழைப்புக் கடிதம்	08-06-1994	122
2143. சர்க்கரை விலையும் - இரு சர்க்கார்களின் நிலையும்	09-06-1994	126
2144. ஜனநாயகம் உண்மையாகச் செயல்பட; தேர்தல் கமிஷன் திருத்த மசோதா போதுமானதா?	10-06-1994	130
2145. புதிது புதிதாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கு போலிச் சாமியார்களிடம் எச்சரிக்கை தேவை...!	11-06-1994	135
2146. கா, கா, கா! இது கலைஞர் பாடும் பாட்டு	19-06-1994	143

2147. ஜூலை 10 முதல் தொடங்கும் இடஒதுக்கீட்டு அறப்போர்ப் பணியில் அனைத்துக் கட்சி அமைப்புக்களுடன் கலந்துபேசி களத்தில் குதித்திட வாராய்!	03-07-1994	145
2148. இரு அரசுகளை வலியுறுத்தவே அறப்போர் பிரகடனம்!	04-07-1994	149
2149. அரசியல் விழிப்புணர்வுக்கும் சமூகநீதி மீட்புக்கும் மூதூராம் மதுரை முரசு கொட்ட அழைக்கிறது!	05-07-1994	154
2150.தமிழ்மக்கள் புரட்சிக்குத் தயார் ஆவார்கள்!	08-07-1994	158
2151. மதுரை மாநாட்டு விளம்பரத்துக்கு ஒரு கரித்துண்டு போதுமே!	09-07-1994	163
2152. இடஒதுக்கீடு பிரச்சினைக்கு இறுதித்தீர்வு இல்லையேல்; மதுரை சமூகநீதி மாநாட்டிலேயே போர் முரசு கொட்டப்படும்!	12-07-1994	166
2153. இன்று தவறிவிட்டால், தாமதித்து விட்டால்,தயங்கிவிட்டால் இனிப் பல தலைமுறைகளுக்கு தமிழனுக்கு உய்வில்லை; உரிமையில்லை!	13-07-1994	170
2154. வனத்துறை அதிகாரிகள் கொடுமைக்கு கழக இளைஞன் பலி! நடவடிக்கை வருமா? மறைக்கப்படுமா?	15-07-1994	173
2155. எந்தச் சூழ்நிலையிலும் எவரும் அசைக்க முடியாத உறுதியை உருவாக்கும் வரையில் சமூகநீதிக்கான போராட்டம் தொடரும்!	16-07-1994	176

2156. மக்களை வாழவைக்கும் தொழில் எங்கே வருகிறது? மந்திரிகள் வாரிச் சுருட்டும் தொழிலன்றோ வளருகிறது!	18-07-1994	181
2157. சமூகநீதி - இடஒதுக்கீடு தீர்வு; என்ன நடக்கிறது என்று பார்ப்போம்; நாம் எப்படி நடப்பது என்று மதுரையில் முடிவெடுப்போம்!	20-07-1994	185
2158. மத்திய மாநில ஆட்சிகளின் மக்கள் விரோதப் போக்கை எதிர்த்திட மாவீரர்கள் திரளுகின்றனர் மதுரை மாநாட்டில்!	22-07-1994	190
2159. கொண்டுள்ள குறிக்கோளில் வெற்றிபெறும் வரை; சமூக நீதிக்கோரும் அணியினர் ஓயமாட்டார்கள் இது உறுதி! உறுதி!	24-07-1994	195
2160. இந்தியா எங்கோ போகிறது? தமிழ்நாடு தறிகெட்டு நிற்கிறது! இதற்கெல்லாம் தீர்வுகாண கூடுவோம் கூடல் மாநகரில்!	27-07-1994	200
2161. கண்மணிகளுக்கு இடும் கட்டளை!	28-07-1994	204
2162. மறையாத காவியம் படைப்போம்!	29-07-1994	206
2163. உடல், உயிர், அணு ஒவ்வொன்றும் சிலிர்த்து நிற்கின்றேன்!	04-08-1994	209
2164. குன்னூரில் ஒரு ''குமட்டல்'' பேச்சு!	05-08-1994	213
2165. தோள்களை உயர்த்துவோம்; துரோகத்தைத் துரத்துவோம்!	06-08-1994	218

2166. விளங்குகிறதா விபரீதம்?	10-08-1994	223
2167. மத்திய மாநில ஆட்சிகளில் மலைபோல் குவியும் ஊழல்; அடுக்கடுக்கான ஆதாரங்களுடன்	12-08-1994	229
2168. நோக்கம் தெரிகிறதா? போக்கு புரிகிறதா?	18-08-1994	243
2169. சிந்திக்க ஒரு கதை!	23-08-1994	249
2170. பழச்சாறும்; விருந்தும்!	24-08-1994	252
2171. களிறு மீது ஒரு காக்கை!	29-08-1994	256
2172. இந்தப் பொன் இதழ் என்ன விலை?	01-09-1994	259
2173. கடும் பயணம் தொடருவோம்!	02-09-1994	262
2174. சூரிய விளக்கெடுத்து, சுடர்முகம் தூக்கிப் புறப்படு	06-09-1994	265
2175. காவல்துறை, இனியாவது கவனத்தில் கொள்ளுமா?	07-09-1994	269
2176. எந்நாளும் அண்ணன் பிறந்தநாளே!	15-09-1994	273
2177. கிழக்கு வெளுக்கப் போகிறது!	23-09-1994	276
2178. நடையை நிறுத்தாதே!	24-09-1994	280
2179. செத்துப் பிழைக்கும் மக்களுக்குச் செகத்தை அழிக்கும் சக்தியுண்டு!	29-09-1994	283
2180. பெரியார் திடலில் நடந்தது என்ன?	10-10-1994	286
2181. மனித நேயமும் - மதுரைச் சம்பவமும்	12-10-1994	304
2182. வதந்தி, வன்முறைக்கு வித்து	13-10-1994	310

2183. பொற்காலமாம் இது?	14-10-1994	316
2184. கறுப்பு நாள் தரும் உணர்வு!	17-10-1994	320
2185. ''சகலகலாவல்லித்தனம்''	19-10-1994	324
2186. நாட்டுக்கு நல்ல காலம் எது?	22-10-1994	332
2187. மதுரையிலே முன்னுரையா?	23-10-1994	335
2188. காதுகளில், பூ சுற்றுகிறாரா?	24-10-1994	339
2189. இட்லர், முசோலினி பாதையில்!	25-10-1994	344
2190. இதுவும், காட்டுமிராண்டி யுகமே!	26-10-1994	349
2191. பாதமலர் தூவுகிறார் பாரதப் பிரதமர்!	27-10-1994	353
2192. பாராட்டத் தயங்கிடோம்; இல்லையேல் போராட்டம்தான்!	29-10-1994	357
2193. அதிர்ச்சியும், ஆச்சரியமும்!	05-11-1994	363
2194. ஏன்? ஏன்? ஏன்? என்ன பதில்?	07-11-1994	367
2195. தேசியத் தமிழனும் - திராவிடக்கட்சி ஆட்சியும்!	08-11-1994	371
2196. உடனடிக் கடமையை உணர்ந்திடுவோம்!	09-11-1994	376
2197. உண்மை ஒருநாள் விழித்துக் கொள்ளும்!	10-11-1994	380
2198. நன்கொடை கேட்பதிலும் நாகரிகக்கேடா?	11-11-1994	388
2199. பாசறை அமைகிறது; பல லட்சம் பேர் சிறை ஏகிட!	13-11-1994	394

2122. உண்மையில் தூங்கினால் எழுப்பலாம்!

உடன்பிறப்பே,

மார்க்சிஸ்ட் கட்சி ஏடான தீக்கதிர் முரசொலிக்குப் பதில் என்று தலைப்பிட்ட ஒரு கட்டுரையில் தி.மு.கழகத்தைப் பற்றிய விமர்சனத்தில் முதல் பகுதியை பின்வருமாறு தொடங்குகிறது. முதற்கோணல் முற்றும்கோணல் என்பதுபோல அந்தக் கட்டுரை, ஒரு கடைந்தெடுத்த பொய்யாக ஆரம்பமாவதை சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

> 1992 டிச. 6. தேசத்தையே திடுக்கிடச்செய்த அந்தக் கொடுமை நிகழ்த்தப்பட்டது. அயோத்தியின் பாபர் மசூதி இடித்து தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டது.

நாட்டின் அடித்தளமாகிய மதச்சார்பின்மைக்கே குழி பறிக்கப்பட்டது. இதனை மத்தியிலுள்ள இ. காங்கிரஸ் அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இந்த அக்கிரமத்தை எதிர்த்து மாநிலத் தலைநகரங்கள் அனைத்திலும் மாபெரும் பேரணிகள் - பொதுக் கூட்டங்களை நடத்துவது என தேசிய முன்னணி - இடதுசாரிக் கட்சிகள் முடிவு செய்தன. அவ்வாறே பல நகரங்களில் நடத்தவும் பட்டன. ஆனால் சென்னையில் மட்டும் - மத நல்லிணக்கத்தை தனது பரம்பரைச் சொத்தாகக் கொண்ட தமிழகத்தின் தலைநகரில் மட்டும் - அது நடத்தப்படவேயில்லை. அன்று சென்னையிலும் ஒரு மாபெரும் பேரணி நடத்தப்பட்டிருந்தால், வி.பி. சிங், கருணாநிதி, சுர்ஜித், இந்திரஜித் குப்தா, சித்தபாசு போன்ற தலைவர்கள் அதில் போர்ப்பரணி பாடியிருந்தால் தமிழ்நாட்டில் தலையெடுத்துக் கொண்டிருக்கும் மதவெறி சக்திகளுக்கு அது பேரிடியாய் இருந்திருக்கும் அல்லவா? மதவெறி சக்திகளை எதிர்த்து நாடு தழுவிய அளவில் இயக்கம் நடத்திக்

கொண்டிருக்கும் மதச்சார்பற்ற சக்திகளுக்கு பெரும் உத்வேகம் அளித்திருக்கும் அல்லவா? ஆனாலும் அன்று அந்தப் பேரணி சென்னையில் நடக்கவில்லை. இதற்கான முன் முயற்சிகளை மார்க்சிஸ்ட் கட்சி மேற்கொண்டும் அது நடக்கவில்லை. அதற்கு யார் காரணம், எந்தக் கட்சி காரணம் என்பதை தி.மு.க. தலைமை தனது மனசாட்சியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். இ. காங். உறவு குறித்து அதற்கு ஏற்பட்ட ஊசலாட்டம் அந்தப் பேரணிக்கு ஒரு தடைகல்லாய் விழவில்லையா என்பதை எண்ணிப் பார்க்கட்டும்.

என்று எழுதியிருக்கிறது 8.4.94 தீக்கதிர்!

உடன்பிறப்பே, தமிழக முதலமைச்சர் டெல்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கரசேவைக்கு ஆதரவாகப் பேசியவுடனேயே - செய்தி வந்த அடுத்த நாளே 26.11.1992 தி.மு.க. சார்பில் சிந்தாதிரிப்பேட்டையில் கண்டனக் கூட்டம் நடத்தி, அதில் நான் பேசியிருக்கிறேன்.

டிசம்பர் 6-ந் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட மறுநாள் 7.12.1992 அன்று சென்னை சூளைமாணிக்கம் செட்டி தெருவில் அனைத்துக் கட்சிகள் அதாவது தேசிய முன்னணி இடதுசாரி அமைப்புகளின் சார்பில் நடைபெற்றக் கண்டனக் கூட்டத்தையும் - அந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட பாபர் மசூதி இடிப்புக் கண்டன முழு அடைப்பு குறித்த தீர்மானத்தையும் மார்க்சிஸ்ட் கட்சியின் ஏடு ஏனோ மறந்துவிட்டது.

இதோ அந்தக் கூட்டத்தில் நான் பேசியதை மீண்டும் உனக்கும், அவர்களுக்கும் நினைவூட்டுகிறேன். இந்த இரண்டு கூட்டங்களில் நான் ஆற்றிய உரையை தி.மு.க. இளைஞர் அணியினர் பாபர் மசூதி என்ற தலைப்பில் நூலாகக்கூட வெளியிட்டுள்ளார்கள்.

முதலில் 26.11.1992 அன்று சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் நான் பேசியதிலிருந்து சில பகுதிகள் :-

1949 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ஆம் நாள் நள்ளிரவில் ஒரு ஐம்பது அல்லது அறுபது பேர் அயோத்தியிலுள்ள பாபர் மசூதியிலே பூட்டை உடைத்து

விட்டு, உள்ளே நுழைந்து ராமர் சிலை, லட்சுமணர் சிலை, சீதை சிலைகளையெல்லாம் வைத்து விட்டதை எதிர்த்து மறுநாள் காலையிலேயே அங்குள்ள போலீஸ் நிலையத்தில் முஸ்லிம் பெரியவர்களால் புகார் கொடுக்கப்பட்டது.

டிசம்பர் 26-ந் தேதியே அன்றைய இந்திய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் உத்தரப்பிரதேச முதலமைச்சராக இருந்த கோவிந்த வல்லப பந்திற்கு ஒரு தந்தி கொடுக்கிறார். அந்த தந்தியிலே அவர் கேட்கிறார், இப்படிப்பட்ட அபாயகரமான காரியங்கள் மோசமானதும், விபரீதமான விளைவுகளை உருவாக்கும் அல்லவா என்று!

1950 ஜனவரியில் ஆக்கிரமிப்பு அல்லது மிரட்டல் போன்றவற்றின் மூலம் ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்வதை சகித்துக் கொள்ளவே முடியாது என்று அன்றைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய்பட்டேல் உ.பி. முதல்வர் வல்லபபந்திற்கு கடிதம் எழுதுகிறார்.

அதற்குப் பிறகும் பண்டித நேரு சும்மாயிருக்கவில்லை. நானே நேரில் வந்து அயோத்தி நிலைமைகளை பார்வையிட விரும்புகிறேன். எப்போது வரலாம் என்று சொல்லுங்கள். என்று நேரு வல்லபபந்திற்கு கடிதம் எழுதுகிறார். அதற்கு பந்த் நேருவுக்கு எழுதிய கடிதம்தான் அண்மையில் பல பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் மொழி பெயர்ப்பை சுருக்கமாக உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அன்புள்ள நேரு அவர்களே! இந்த நிலையில் நீங்கள் அயோத்திக்கு வரத் தேவையில்லை. நானே பார்த்துக் கொள்கிறேன். நிலைமை சரியான பிறகு நானே தங்களை அழைப்பேன். நான் கடந்த முறை தெரிவித்திருந்த நிலைமைதான் அப்படியே இருக்கிறது. முஸ்லிம்கள் இது தொடர்பான வழக்கை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு மாற்ற முயற்சிக்கிறார்கள்.

ராம்பூரி தலைமை கமிஷனர் ஜெய்கிரண்சிங்கை அயோத்திக்கு கூடுதல் கமிஷனர் பொறுப்பிலே நியமித்திருக்கிறோம். ஏனெனில் அயோத்தியில் இருந்த போலீஸ் அதிகாரிகள் சரியாக இல்லை. மேலும் அங்கிருந்த வேறு பல அதிகாரிகளும் கூட சரியாக இல்லை.

அங்கே ஒரு நல்ல கமிஷனர் இருக்க வேண்டும் என்பதற்காக ராம்பூர் தலைமை கமிஷனர் ஜெய்கிரன்சிங் என்பவரை அயோத்திக்கு கூடுதல் கமிஷனர் பொறுப்பில் நியமித்திருக்கிறோம். நல்ல அனுபவம் மிக்கவர். விவேகத்தோடு செயல்படக்கூடியவர். நம்பகமானவர். நாம் விரும்பிய வண்ணம் செயல்படக் கூடியவர். பிரச்சினையை திருப்திகரமாக தீர்த்து விட முடியும் என்றும், ராமர் விக்ரகத்தை பாபர் மசூதிக்குள்ளிருந்து, அமைதிக்கு பங்கமின்றி அகற்றி விட முடியும் என்றும் நம்பி காரியம் ஆற்றுகிறார் என பந்த் பதில் கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

எனவே பண்டித நேருவும், சர்தார் வல்லபாய் பட்டேலும், உத்திரப் பிரதேச முதல்வராக இருந்த வல்லபபந்தும் ராமருடைய சிலை, தேவையில்லாமல் ஒரு சர்ச்சையை உருவாக்குவதற்காக பாபர் மசூதியில் இரவோடு இரவாக திருட்டுத் தனமாக வைக்கப்பட்டு விட்டது. அது தகாது. எனவே அந்தச் சிலையை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்பதிலே மிகவும் முனைப்பாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்தக் கடிதப் போக்குவரத்து தக்க சான்றாகும்.

ஆனால் நான் வருந்துவது என்னவென்றால் - ஏறத்தாழ நாற்பத்து மூன்று ஆண்டு காலமாக - இதிலே பெரும்பான்மையான ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி டெல்லியில் இருந்தும்கூட இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமலே இழுத்துப் போடப்பட்டே வந்ததற்கு என்ன காரணம் என்றால் அதுதான் அரசியல்.

அடுத்து; பாபர்மசூதி இடிக்கப்பட்ட மறுநாள் 7.12.1992 அன்று சென்னை சூளையில் தேசிய முன்னணி இடதுசாரி

அமைப்புகளின் கூட்டத்தில் நான் பேசியதில் சில பகுதிகள் வருமாறு :-

நவம்பர் 26 அன்றைய தினம் கரசேவை நடைபெறுவதைக் கண்டித்து நாம் தீர்மானம் நிறைவேற்றியது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும். கரசேவை என்கின்ற பெயரால் நடைபெறவிருக்கின்ற - அராஜகத்தை எப்படியாவது இந்தியாவின் பிரதமர் தடுத்து நிறுத்துவார் என்ற நம்பிக்கையோடும் தேசிய ஒருமைப்பாட்டு மன்றக் கூட்டத்தில் பாரதீய ஜனதா, அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளைத் தவிர மற்ற எல்லாக் கட்சிகளும் பிரதமருக்கு அதிகாரத்தை வழங்கி அவரோடு இந்தப் பிரச்சினையில் ஒத்துழைப்போம் என்று உறுதி அளித்து - அதே வழியில் சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்திலும் இந்த ஒரு பிரச்சினையிலே இந்தியப் பிரதமரின் கரத்தை வலுப்படுத்த தி.மு.கழகம் தயாராக இருக்கிறது என்று குறிப்பிட்டதை நீங்களெல்லாம் நினைவில் வைத்திருப்பீர்கள்.

அதற்குக் கூட சில பேர் வியாக்கியானம் எல்லாம் செய்தார்கள். ஏதோ காங்கிரசோடு ஒட்டிக் கொள்ள கருணாநிதி முயற்சிக்கிறார் என்றெல்லாம்கூட சொன்னார்கள். அவைகளுக்கெல்லாம் இப்பொழுது பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நல்லக்கண்ணு அவர்களும், ஜனதாதள கட்சியின் பொதுச் செயலாளர் ஜெகவீரபாண்டியன் அவர்களும் இன்று இந்தியாவில் ஏற்பட்டுள்ள விபரீத விளைவுகளைப் பற்றி உங்களிடத்திலே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

நேற்று காலையிலிருந்து வந்த செய்திகள் நம்மை அதிர்ச்சியடையச் செய்தது என்றாலும்கூட இரவில் டெல்லியிலிருந்து ஒளிபரப்புகின்ற தொலைக் காட்சியிலும் சரி; சென்னை தொலைக்காட்சியிலும் சரி; பாபர் மசூதியில் சேதம் விளைவிக்க முயன்றார்கள் என்ற அளவிலேதான் செய்தி சொல்லப்பட்டது.

ஆனால் உண்மையை நீண்ட நேரம் மறைக்க முடியாது. வெளிநாட்டிலிருந்து வருகின்ற தொலைக்காட்சிகள் மூலமாக நாங்கள் கண்ணால் கண்டது - காதால் கேட்டது என்ற வகையில் பி.பி.சி. செய்தியிலேயே பாபர் மசூதி தரைமட்டமாக ஆக்கப்பட்டது என்ற செய்தி சொல்லப்பட்டது. அந்தச் செய்தி சொல்லப்பட்ட பிறகுதான் பிரதமரின் தொலைக்காட்சி பேச்சிலே கூட இந்தச் செய்திக்காக வருந்துகிறேன் என்று அவர் கூறிய வார்த்தைகளில் பாபர் மசூதி அறவே இடிக்கப்பட்டு விட்டதென்கின்ற வாசகம் காணப்பட்டது. அதுவரையிலே மறைக்கப் பார்த்தார்கள்.

இன்று மாலையில் ஏடுகளை பார்த்தால் இது வரையில் வடபுலத்திலுள்ள சில மாநிலங்களில் - தென்புலத்திலுள்ள ஓரிரு மாநிலங்களில் - அறுபதுக்கு மேற்பட்ட பிணங்கள் விழுந்திருக்கின்றன. இது அரசின் கணக்கு. இன்னும் எத்தனை பிணங்கள் விழுந்திருக்குமோ தெரியாது. இவைகளெல்லாம் ஏற்படக் கூடாதென்பதற்காகத்தான் தேசிய முன்னணி, இடதுசாரி கட்சிகளுடைய அமைப்பு மற்றும் மதச் சார்பற்ற நிலையிலே இயங்கிக் கொண்டிருக்கிற இயக்கங்கள் அனைத்தும் தங்களுடைய எச்சரிக்கையை பிரதமருக்கும் மத்திய அரசுக்கும் தெரிவித்து வந்தன. ஆனால் அது நிறைவேறாமல் போய்விட்டது.

எனவேதான் இன்று காலையிலேயே தி.மு.கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், ஜனதா தளம், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சிகள் கலந்து பேசி அதில் முடிவு எடுக்கப்பட்டது. அதனை உங்களிடத்திலே படிக்கிறேன்.

சுமார் 43 ஆண்டுக்காலமாக தொடர்ந்து வந்த சிக்கலை உரிய முறையில் தீர்க்க முன்வராமல் வேண்டுமென்றே திட்டமிட்டு, வரலாற்றுச் சின்னமான பாபர் மசூதியை இடித்துத் தகர்த்ததின் மூலம் பாரதீய ஜனதா கட்சியும் அதன் மதவெறிப் பிரிவுகளும் இந்திய நாட்டு ஒருமைப்பாட்டுக்கு அறைகூவல் விடுத்திருப்பதைக் கண்டித்தும், முன்கூட்டியே தக்க

நடவடிக்கை மேற்கொண்டு பாபர் மசூதியைக் காத்திட அக்கறை கொண்டு செயல்படாத மத்திய காங்கிரஸ் அரசின் போக்கினைக் கண்டித்தும், அனைத்து மதத்தினர் உரிமைகளும் காப்பாற்றப்படவும் வருகிற 10-ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் முழு அடைப்பும் வேலை நிறுத்தமும் நடத்துவதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது. இந்தத் தீர்மானத்திற்கேற்ப முழு அடைப்பிலும் வேலை நிறுத்தத்திலும் அனைத்துப் பிரிவு பொது மக்களும், வணிகர்களும், தொழிலாளர்களும், அலுவலர்களும் கலந்து கொண்டு ஒத்துழைப்புத் தர வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இந்தத் தீர்மானங்களை கையொலி மூலம் நீங்களும் ஆதரிப்பீர்கள் என்று கருதுகிறேன். அப்பொழுது கூட்டத்தில் பலத்த கையொலி எழும்பியது.

இந்த 10-ந் தேதி முழு அடைப்பில் குறிப்பிட்ட இந்தக் கட்சிகள் மாத்திரம்தான் கலந்து கொள்ளவேண்டுமென்று இல்லை. நான் முதலிலேயே கட்சிகளுக்கெல்லாம் அழைப்பு விடுக்க விரும்புகின்றேன்.

இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளாத அல்லது கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாத நிலையிலுள்ள வேறு பல கட்சிகள் - தமிழகத்தில் மதச்சார்பற்ற நிலை வேண்டும்; தமிழகத்திலுள்ள எல்லா மதங்களும் அந்த மதங்களுக்குரிய உரிமைகளை பெற்றாக வேண்டுமென்று எண்ணுகின்ற கட்சிகள் இருக்கின்றன. கடவுளின் பெயரால் கலவரங்களை ஏற்படுத்தக் கூடாதென்று எண்ணுகின்ற கட்சிகள் இருக்கின்றன; இங்கே சகோதரத்துவம் செயல்பட வேண்டுமென்று எண்ணுகின்ற கட்சிகள் இருக்கின்றன. பாபர் மசூதி தரைமட்டமாக ஆக்கப்பட்டது கண்டு எங்களைப் போல கண்கலங்கி நிற்கின்ற கட்சிகள் இருக்கின்றன. அந்தக் கட்சிகளுக்கெல்லாம்கூட இந்த அமைப்பின் சார்பாக நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். குறிப்பாக நண்பர் டாக்டர் இராமதாஸ் தலைமையிலுள்ள பாட்டாளி மக்கள் கட்சியை இந்த முழு அடைப்பு வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி அவர்களும் முழு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முஸ்லிம் லீக்கின் தலைவர்கள் அருமை நண்பர் அப்துல் சமது அவர்களையும், இன்னொரு பிரிவின் தலைவராக இருக்கின்ற நண்பர் லத்தீப் அவர்களையும் அவர்களுடைய இயக்கங்களையும் இந்த முழு அடைப்பிலே கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அம்பேத்கரின் பெயரால் பல இயக்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த இயக்கங்களின் தலைவர்களையெல்லாம் இந்த முழு அடைப்பிற்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனதா கட்சியும், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வும் இதில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்தக் கட்சியின் பெயராவது விடுபட்டிருக்குமானால் அது வேண்டுமென்று விடப்பட்டது அல்ல என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்தி எல்லோரும் இதில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு வழியில்லாமல் நாங்களும் கலந்து கொள்வோம் என்று இன்று மாலையில் அறிக்கை விட்டிருக்கின்ற அ.தி.மு.க. கட்சியினரையும் பலத்த கைதட்டல் நான் வாருங்கள் என்று அழைக்கத் தேவையில்லை. அவர்களே வந்து விட்டார்கள் வழிக்கு! முன்பு இந்தக் கொள்கையில் வழுக்கி விழுந்தார்கள். இப்பொழுது வழிக்கு வந்திருக்கிறார்கள். பலத்த கைதட்டல் எனவே அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு பாபர் மசூதி இடித்து தரைமட்டமாக்கப்பட்டது என்று செய்திகள் வருகின்றதே; அந்த நிலை ஏற்படாமல் பாதுகாப்பதற்கு பிரதமரால் முடியவில்லையா என்றால் இங்கே எனக்கு முன்னால் பேசிய தலைவர்கள் எழுப்பிய சந்தேகம்தான் எனக்கும் ஏற்படுகிறது. இதில் ஒரு மறைமுகமான கூட்டு காங்கிரசுக்கும், பாரதீய ஜனதாவுக்கும் இருக்கிறதோ என்ற ஐயப்பாடு எழுவது நியாயம்தான்.

இல்லாவிட்டால் கடந்த பத்து நாட்களாக பத்து பேர் இருபது பேர் என்று சிறு சிறு கூட்டமாக அயோத்தியில் பிரச்சினைக்குரிய பகுதியிலே கரசேவை என்கிற பெயரால் சென்று கொண்டே இருந்தார்கள். அவர்களைத் தடுப்பது என்றால் தடுத்திருக்கலாம். வள்ளுவன் மிக அழகாக இளைவதாக முள் மரம் கொல்க என்று சொன்னான். நரசிம்மராவ் திருக்குறளை படித்திருக்க வாய்ப்பில்லை. உலகத்திலுள்ள பெரியவர்களெல்லாம் கூறுகின்ற அறிவுரைதான் இந்த அறிவுரை!

ஆனால் தொடக்கத்திலேயே நரசிம்மராவ் இதை விட்டுவிட்டார். விட்டு விட்டது மாத்திரமல்ல; நாமெல்லாம் ஏமாறுகிற அளவிற்கு உறுதிமொழிகளைத் தந்தார். என்னென்ன உறுதிமொழிகள் அவை? இராணுவத்தை அனுப்பி வைப்போம். உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு உத்தரப் பிரதேச அரசு கட்டுப்பட்டே ஆக வேண்டுமென்று அவர்கள் மீறினால் நடவடிக்கை எடுப்போம் என்று இதையே சொல்லி வந்தார். ஆனால் நம்மை அவர் ஏமாற்றி விட்டார்.

அங்கே என்ன நடைபெற்றது? ராணுவம் அனுப்பப்பட்டது. எதற்காக ராணுவம் அனுப்பப்பட்டது? பாபர் மசூதியைச் சுற்றி அரண் போல அல்லவா நின்றிருக்க வேண்டும். நின்றார்களா? இல்லை. மாறாக ஐந்து கி. மீட்டருக்கு அப்பால் ராணுவம் நின்றதாம். எதற்கு? பாபர் மசூதியை எப்படி இடிக்கிறார்கள் என்று வேடிக்கை பார்ப்பதற்காக ராணுவம் நின்றதாம்.

அந்த மாநிலத்துப் போலீஸ் - மாநிலத்தை ஆளுகின்றவர் பாரதீய ஜனதா கட்சியினுடைய முதலமைச்சர் - ஆண்டவர் கல்யாண்சிங் - அவர், அவருடைய போலீசுக்கு இட்ட கட்டளை நீங்கள் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருங்கள் என்பதுதான்.

லட்சம் பேர் சேர்ந்தார்கள். இரண்டு லட்சம் பேர் சேர்ந்தார்கள்; என்று தினம் தினம் செய்தி வந்துகொண்டிருக்கிறது. பாராளுமன்றத்திலே நாள் தோறும் குழப்பம்! கூச்சல்! எதிர்ப்புக் குரல்! நடவடிக்கை எடுங்கள் என்று பாராளுமன்றத்திலே கேட்டது மாத்திரம் போதாமல் - தேசிய முன்னணி, இடது சாரிக் கட்சித் தலைவர்களெல்லாம் குடியரசுத் தலைவர் மாளிகைக்கே சென்று கோரிக்கை வைத்தார்கள். பிரதமரைச் சந்தித்து முறையீடு செய்தார்கள்.

> இவ்வளவிற்கும் பிறகு ராணுவம் பாபர் மசூதியை காக்கத் தவறிவிட்டது என்றால் நான் கேட்கிறேன் - பாபர் மசூதியை காப்பாற்ற முடியாத ராணுவம் நாளைக்கு பாரத நாட்டை எப்படிக் காப்பாற்றப் போகிறது என்று தான் பலத்த கைதட்டல் நான் கேட்க விரும்புகிறேன்.

எனவேதான் இங்கே நம்முடைய அணியின் தலைவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல இதற்கு முழுப் பொறுப்பும்

ஏற்க வேண்டியவர் இந்தியாவினுடைய பிரதமர் நரசிம்மராவ் அவர்கள்தான் என்பதிலே யாருக்கும் இருவேறு கருத்துக்கும் இடம் கிடையாது.

ராணுவம் வருகின்ற வழியெல்லாம் கற்களைப் போட்டும், பாறைகளைப் போட்டும், நெருப்பிட்டுக் கொளுத்தியும் ராணுவம் தடுக்கப்படுகிறது.

இந்தக் கல்லுக்கும் நெருப்புக்கும் பயப்படுகிற ராணுவம் சிரிப்பு என்ன ராணுவம் என்று தெரியவில்லை. பலத்த கைதட்டல் நான் ராணுவத்தை குறை சொல்லவில்லை. மாவீரர்கள் நிறைந்த ராணுவம்தான் இது. ஆனால் அவர்களுடைய மனதில் இதைச் செய்ய வேண்டும் என்கிற உறுதியை பிரதமரோ அல்லது மத்திய அரசோ அளிக்காத காரணத்தால் அவர்கள் தயங்கினார்கள்.

இந்தத் தயக்கத்தின் காரணமாகத்தான் இன்றைக்கு இந்தியா மாத்திரமல்ல; அனைத்து நாடுகளிலும் இருக்கின்ற இந்திய நாட்டு மக்கள் பதறிப்போய் இருக்கிறார்கள்.

* * *

உடன்பிறப்பே, பாபர் மசூதி பிரச்சினையில் தி.மு.க. அக்கறை காட்டவில்லை - ஊசலாடிக் கொண்டிருந்தது என்று இப்போது மார்க்சிஸ்டுகள் கூறுவது எந்த அளவுக்கு உண்மைக்கு மாறானது என்பதை சிந்தாதிரிப் பேட்டையிலும் சூளையிலும் நடந்த கூட்டங்களும் அவற்றில் நான் ஆற்றிய உரைகளும் தொடர்ந்து தமிழகம் தழுவிய அளவில் நடத்தப்பட்ட முழு அடைப்பும் விளக்குமென நம்புகிறேன்.

தூங்குபவரைத்தான் எழுப்ப முடியும்; தூங்குவது போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது!

அனபுள்ள,

மு. க.

09-04-1994

குறிப்பு :-

ராஜீவ் பிரதமராக இருந்தபோது நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் இரண்டாவது முறையாக கியானி ஜெயில்சிங் அவர்கள் போட்டியிடுவதற்கு மார்க்சிஸ்ட்

கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் தனது எதிர்ப்பைத் தெரிவிக்காமல் இருந்திருந்தால்; அந்த தேர்தலில் அவர் போட்டியிட்டிருப்பார். ராஜீவின் காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.வி. அவர்கள் குடியரசுத் தலைவராக வந்திருக்க மாட்டார். அதெல்லாம் பெரிய கதை. அப்போது டெல்லியில் நடந்தது என்ன என்பது பற்றி விளக்கினால் சர்ச்சைகள் மேலும் பெருகிக் கொண்டேயிருக்கும்.

2123. மார்க்சிஸ்ட் உடைத்தால்; அது மண் சட்டி!

உடன்பிறப்பே,

நம்மோடு உறவோ, தோழமையோ, தேர்தல் உடன்பாடோ கொண்டிருக்க விருப்பமில்லை; அதனால் பிரிந்து போக முடிவு செய்துவிட்டார்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தலைவர்கள் - அதற்காகப் பழனி, ராணிப்பேட்டை இடைத்தேர்தலில் நமக்குக் காங்கிரசுடன் ரகசிய உடன்பாடு என்று ஒரு கற்பனைக் கதையை 1993 செப்டம்பர் மாதமே பரப்பத் தொடங்கினார்கள். அந்த அவதூறான கற்பனையை உடனடியாகத் தி.மு.கழகத்தின் தலைமை, மறுத்து அறிவித்த பிறகும் - அவர்களது மாநிலக்குழு கூட்டத்திலும் அதே அடிப்படையற்ற குற்றச்சாட்டைக் கூறி தீர்மானம் நிறைவேற்றி வெளியிட்டார்கள். அதையும் சரியான ஆதாரங்களுடன் நாம் மறுத்துப் பதில் அளித்தோம். பழனியிலும் ராணிப்பேட்டையிலும் காங்கிரசை மூன்றாவது நான்காவது இடத்துக்குத் தள்ளிவிட்டுக் கழகம் பெற்றுள்ள வாக்குகளே கழகத்தின் வாய்மையை நிரூபிக்கும் ஆதாரங்கள் என்பதை எடுத்துக் காட்டினோம். அதற்குப் பிறகும் மீண்டும் அவர்களது மாநிலக் குழுவைக் கூட்டி; அதே குற்றச்சாட்டை மறுபடியும் கழகத்தின் மீது சுமத்தி; நம்மை அரசியல் நாணயமற்றவர்களைப் போலக் காட்டிடும் முயற்சியில் ஈடுபட்டனர். சரி; அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள் என்ற தீர்மானத்திற்கு அப்போதே நாமும் வந்துவிட்டோம்.

அதற்குப் பிறகு தோழமைக் கட்சி அணியிலே உள்ள சில தலைவர்கள்; என்னுடனும் பேராசிரியருடனும் பழைய கூட்டணியே தொடர வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கும் போதே - நானும் நிருபர்கள் பேட்டியில் இந்தக் கூட்டணி முறிந்து

விடவில்லை என்று பதில் அளித்துக் கொண்டிருக்கும்போதே - அவர்கள் கட்சிக் குழுவை கூட்டி; மயிலாப்பூர் இடைத் தேர்தலில் தி.மு.க.வை ஆதரிக்கமாட்டோம் என்றும் - ஒரு முற்போக்கு சுயேச்சையைத் தேடிப் பிடித்து ஆதரிப்போம் என்றும் - முடிவெடுத்து அறிவித்துவிட்டனர்.

அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல்; தி.மு.க.வை ஏன் ஆதரிக்கவில்லை என்பதற்குக் காரணம் சொல்லத் தொடங்கி; மறுபடியும் பழைய பழனி, ராணிப்பேட்டை பற்றிய கதையையே திரும்பத் திரும்ப தோழர் நல்லசிவன் எம்.பி. அவர்கள் பரப்பிடும் முயற்சியில் ஈடுபடலானார். இப்போது அவர் தினமணி ஏட்டில் இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக பேட்டியொன்று அளித்து தி.மு.க. மீது புழுதி வாரித் தூற்றியிருக்கிறார். மார்க்சிஸ்ட் கட்சி எடுத்துள்ள இந்த முடிவுக்கு அந்தக் கட்சி வட்டாரத்துக்குள்ளேயே எழுந்துள்ள விமர்சனத்திற்காக; கழகத்தின் மீதும் என் மீதும் இத்தகைய பொய்களை அவர் வாரி இறைக்கிறார் என்றால்; என் பழைய நண்பரைப் பாதுகாத்துக் கொள்ள நாம் பயன்படுகிறோமே என்றுகூட மகிழ்ச்சியடையக் கூடியவன்தான் நான்!

இருந்தாலும் நான் மதித்துப் போற்றும் தலைவர்களின் வரிசையிலே உள்ள ஒருவர் - நெடுங்காலம் நண்பராகப் பழகியவர் - ஒரு பத்தாண்டு காலத்திற்கு மேலாகத் தோழமை கொண்டிருந்த இயக்கத்தின் முக்கிய முன்னோடிகளிலே ஒருவர் - இந்த அளவு தரம் தாழ்ந்து, இவ்வளவு தவறான தகவல்களை, பேட்டி என்ற பெயரால் வெளியிட்டிருப்பது மிகுந்த வேதனைக்குரியதாகும்.

பழனி தொகுதியில் நான் தங்கியிருக்கும் போது என்னைச் சந்திக்க அவரும் அவருடன் வந்த நண்பர்களும் அரை மணி நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று என்றும் சந்தித்த பிறகு எட்டு நிமிடம்தான் பேசினேன் என்றும் ஒரு உண்மைக்கு மாறான தகவல் ஒரு பண்பாடு மிக்க - பழுத்த அரசியல்வாதி என நான் கருதிக் கொண்டிருந்த நல்லசிவன் அவர்கள் வாயிலிருந்து வந்திருப்பது என்னால் நம்பக்கூடியதாகவே இல்லை.

எனக்கு வயது எழுபது எனினும்; தோழமைக் கட்சிகளிலே உள்ள தலைவர்கள், முன்னோடிகள் என்னைவிட வயதில் இளையோராயினும் அவர்கள் வரும்போது எழுந்து நின்று

வரவேற்கும் பழக்கத்தை இன்றைக்கும் கடைப்பிடிப்பவன் நான்! இந்தப் பண்பாட்டை, குடியரசு அலுவலகத்தில் பணியாற்றிய அந்தக் காலத்திலேயே தந்தை பெரியார் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டு அதனை அணுவும் பிறழாமல் பின்பற்றி வருபவன்!

பழனியில் தங்கியிருந்தபோது நல்லசிவன் என்னைச் சந்திக்க வந்தது உண்மை! ஒவ்வொரு நாளும் விடிய விடியத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு விட்டு, ஓய்வெடுத்து, அடுத்த நாள் பிரச்சாரத்துக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது வந்தார். அவர் வந்த செய்தி, குளியல் அறையிலிருந்த எனக்கு கதவைத் தட்டிக் கூறப்பட்டது. உடனே வந்து அவரைப் பார்த்து தேர்தல் பணி குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்.

புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து நிறையப் பேச வேண்டும் தேர்தல் கூட்டங்களில் என்றனர்! நகரங்களில் பேசி வருகிறோம்; கிராமங்களில் புரியாது - என விளக்கமளித்தேன்! கோடிக் கணக்கில் செலவழிக்கும் அ.தி.மு.க.வுடன் போட்டி போட்டு நம்மால் செலவழிக்க இயலாது என்ற கருத்தை இருவருமே பகிர்ந்து கொண்டோம்! தேவையான அளவு நேரம் எடுத்துக் கொண்டு பேசிய பிறகு; நான் அவர்களிடம் சொல்லிவிட்டு, பழனி சட்டமன்ற தொகுதியில் உள்ள கிராமப்பகுதிகளுக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்யப் புறப்பட்டேன். இந்தச் செய்தியை அப்படியே தலைகீழாக மாற்றி; ஏதோ அவர்களை நான் மதிக்காமல் அலட்சியமாக நடத்தினேன் என்று அவரது கட்சியினர் உணர்ந்து சமாதானமடைய வேண்டுமென்ற திட்டத்துடன் என் மீது பழி கூறியிருப்பது மிகவும் வருந்தத்தக்கது!

அவர்கள் நோக்கத்துக்கு, விருப்பத்துக்கு உடன்பாட்டை முறித்துக் கொள்ளட்டும் - யாருடனாவது கூட்டு சேரட்டும் - குறுக்கே நிற்க நாம் யார்? அதற்காகத் திட்டமிட்டு வேண்டுமென்றே பொய்களை விதைத்து அரசியல் அறுவடை நடத்த முனையக் கூடாதல்லவா!

நெருக்கடி நிலையை எமர்ஜென்சி எதிர்த்து தி.மு.க.வும், மார்க்சிஸ்ட் கட்சியும் போராடின. அடக்குமுறையை அனுபவித்தன. எம்.ஜி.ஆரோ நெருக்கடி நிலையை முழுக்க முழுக்க ஆதரித்தார். ஆனால் நெருக்கடி நிலை முடிந்து சட்டமன்றத் தேர்தல் வந்ததும்,

நெருக்கடி நிலையை ஆதரித்த எம்.ஜி.ஆருடன் மார்க்சிஸ்ட் கட்சி சேர்ந்து கொண்டது.

ஆகவே மார்க்சிஸ்ட் கட்சிக்கு சீட்டுகள்தான் முக்கியம். கொள்கை முக்கியமில்லை என்று கூறப்படுகிறதே? - என்று தினமணி நிருபர் எழுப்பிய கேள்விக்கு நல்லசிவன் என்ன பதில் கூறியுள்ளார்?

"நொடித்துப் போயுள்ள தி.மு.க.வின் துணையுடன் காங்கிரசுக்கு வலிமையான எதிர்ப்பை தர முடியாது என்பதால் அந்த முடிவெடுத்தோம். அந்த நேரம் சட்டமன்ற தேர்தல் உடன்பாட்டில் அ.தி.மு.க.வுக்கு மெஜாரிட்டி இடம் ஒதுக்காமல் காங்கிரஸ் நிர்பந்தம் செய்ததால், எம்.ஜி.ஆர். காங்கிரஸ் அணியிலிருந்து விலக விரும்பினார். எனவே நாங்கள் எம்.ஜி.ஆருடன் சேர்ந்து சட்டமன்றத் தேர்தலில் உடன்பாடு கண்டோம். இது நல்லசிவன் அவர்கள் அளித்துள்ள பதிலின் சாராம்சம்!"

எமர்ஜென்சியை ஆதரித்த எம்.ஜி.ஆருக்கும், காங்கிரசுக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்படவில்லை; அதனால் நாங்கள் அவருடன் உடன்பாடு கொண்டு விட்டோம் என்பதில் - எவ்வளவு கொள்கைத் தெளிவு இருக்கிறது என்பதை நடுநிலையாளர்களின் சிந்தனைக்கே விட்டு விடலாம்.

அதனால்தான் நாம் கூறாவிடினும்; பழைய நிகழ்ச்சியை மனதிற்கொண்டு ஐக்கிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மொகித்சென் அவர்கள் கூறுகிறார்; காங்கிரஸ் எதிர்ப்பு என்ற நிலையெடுத்து - மார்க்சிஸ்ட் கட்சி; அ.தி.மு.க.வுடன் கூட்டு சேரலாம் என்று! அது உண்மையோ அல்லவோ; அதுபற்றி நான் ஆராய விரும்பவில்லை!

> தி.மு.க. - காங்கிரஸ் ரகசிய உறவு என மார்க்சிஸ்ட் - அ.தி.மு.க. ரகசிய உறவு என நான் லாவணி பாட விரும்பவில்லை. என்றுதான் 6.4.94 திருச்சி நிருபர்கள் கூட்டத்தில் நான் கூறியிருக்கிறேன்.

உடன்பிறப்பே, நண்பர் நல்லசிவன் அவர்களின் தினமணி பேட்டி முழுமைக்கும் நான் பதில் கூற விரும்பவில்லை.

தேவையுமில்லை. பாபர் மசூதி பிரச்சினை பற்றிய மார்க்சிஸ்ட் கட்சியினரின் அபாண்டமான குற்றச்சாட்டுக்கு ஏற்கெனவே விரிவான பதிலை ஆதாரங்களுடன் அளித்திருக்கிறேன்.

இதோ, அவரது பேட்டியில் மற்றொரு பொய்மை நிறைந்த பகுதி வருமாறு :-

> ராணிப்பேட்டை தொகுதியில் மட்டும் ஆறு நாட்கள் பிரச்சாரம் செய்த கருணாநிதி, பழனி நாடாளுமன்றத் தொகுதியிலும் ஆறு நாட்கள்தான் பிரச்சாரம் செய்தார். பழனி நாடாளுமன்றத் தொகுதியில் ஓட்டுப்பதிவுக்கு முன்பு கடைசி நாலைந்து நாட்களில் தி.மு.க. மாநிலத் தலைவர்கள் யாருமே இல்லை.

இப்படியொரு அப்பட்டமான - இட்டுக்கட்டிய பொய்யை - நல்லசிவன் ஒருவரால் மட்டுமே சொல்ல முடியும்! ராணிப்பேட்டை தொகுதியில் நான் பிரச்சாரம் செய்தது; மொத்தம் மூன்றே நாட்கள்தான்! நல்லசிவன் அவர்களுக்கு அது ஆறு நாட்களாகத் தெரிந்திருக்கிறது! பழனி நாடாளுமன்றத் தொகுதியில் ஆறு நாட்களும் இரண்டாயிரம் கிலோ மீட்டருக்கு பயணம் செய்து; விடிய விடியக் கண் எரிய எரிய உடல் நலம் குன்றுமளவுக்கு நான் பிரச்சாரம் செய்ததை இதயமுள்ளோர் எவரும் மறுத்திட மாட்டார்.

பழனி தொகுதியில் என் சுற்றுப்பயணம் முடிந்தவுடன் தேர்தல் வாக்குப்பதிவுக்கு முன்பு பிரச்சாரத்தின் கடைசி நாளன்று 18.9.93 பொதுச் செயலாளர் பேராசிரியர் பழனியில் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்துகொண்டார்.

13.9.93 முதல்18.9.93 முடிய பொதுச்செயலாளர் பழனி தொகுதியில்தான் இருந்தார். வாக்குப்பதிவு முடியும் வரையில் கோவை இராமனாதனும் - சி.டி. தண்டபாணியும் - காளிமுத்துவும் - வீரபாண்டி ஆறுமுகமும் - தமிழ்க்குடிமகனும் - கோ.சி. மணியும் -வீரப்பன் எம்.பி.யும் - பொங்கலூர் பழனிசாமியும் - தா. கிருட்டிணன் எம்.பி.யும் - சுப. தங்கவேலனும் - தங்கபாண்டியனும் - பெரியசாமியும் - பரமத்தி சண்முகமும் - இப்படிப் பல கழக முன்னோடிகள் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள் அந்த நாடாளுமன்றத் தொகுதியின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றியிருக்கிறார்கள்.

18-ந் தேதி வரை பழனி நாடாளுமன்றத் தொகுதியில் தேர்தல் பணியாற்றிய பேராசிரியர் அவர்களும் - மற்றும் பல கழக முன்னோடிகளும் - நல்லசிவன் அவர்களின் பார்வையில் மாநில அளவிலான தலைவர்களாகத் தெரியவில்லை போலும்! வாக்குப் பதிவுக்கு முன்பு நாலைந்து நாட்கள் யாருமே இல்லை என்று பேட்டி கொடுத்திருக்கிறார். அழுவதா? சிரிப்பதா; அவரது நிலையை நினைத்து; என்று எனக்குப் புரியவில்லை!

சங்கர் தயாள் சர்மா காங்கிரஸ் வேட்பாளர் என்பதற்காக; மார்க்சிஸ்ட் ஆதரிக்கவில்லையாம்; நல்லவர் என்பதற்காக ஆதரித்தாராம் - நல்லசிவன் நவில்கிறார்; தினமணி பேட்டியில்! அடடா; என்ன அற்புதமான விளக்கம்!

இனிமேல், மாமியார் உடைத்தால் அது மண்சட்டி என்ற பழமொழியை மாற்றி; மார்க்சிஸ்ட் உடைத்தால்; அது மண்சட்டி! என்று புது மொழி உருவாக்கலாம். நல்லசிவன் அவர்களது தினமணி பேட்டியை முழுமையாகப் படித்து முடித்தபின் நமது உள்ளத்தில் தோன்றுவது அவர்கள் மீது தோழமையுணர்வோடு கூடிய அனுதாபமே!

நொடித்து போனவர்களுக்கு கைகொடுக்கக் கூடாது - அவர்களை உடனே கைவிட்டு விட வேண்டும் என்பதே மார்க்சிஸ்டு கட்சியின் தோழமை உணர்வுக்கு இலக்கணம் போலும்! இந்த இலக்கணம் நமது இயக்கத்துக்கு இன்றைக்கு மட்டுமல்ல; என்றைக்குமே ஒத்துவராது!

அவர்கள் என்ன செய்வார்கள்; பாவம் நொடித்துப் போனவர்களுடன் கூட்டணியை நீடித்து தங்களுடைய அரசியல் ஆதாயத்தை இழப்பதா? அல்லது ஆதாயம் தரக்கூடியவர்களுடன் சேர்ந்து அவர்களை வலுப்படுத்துவதா என்கிற ஊசலாட்டம் மார்க்சிஸ்டுகளை இப்படி நிலை தடுமாறிப் பேச வைத்துக் கொண்டிருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

11-04-1994

குறிப்பு :-

கழகச் சொற்பொழிவாளர்களுக்கு; கவனமூட்ட விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நம்மிடம் தொடர்பைத் துண்டித்துக் கொண்டதோடு நில்லாமல்; நம்மைப் பற்றிச் செய்துள்ள விமர்சனங்களுக்கு - நான் தந்திடும் விளக்கமே போதுமானது! எனவே; கழகச் சொற்பொழிவாளர்களின் கவனம் அந்தத் திசையில் திரும்பவேண்டாம். கழகம் வலிவுகண்டு புழுங்கிடுவோர்; திசைதிருப்பும் முயற்சிகளில் பல குழுக்களை ஏவிவிட்டுள்ளனர். அதில் கழகத்தினர் கவனம் செலுத்தி; மத்திய - மாநில அரசுகளின் மக்கள் விரோதப் போக்குகளைக் கண்டிப்பதில் செலவழிக்க வேண்டிய நேரத்தை வீணடிக்க வேண்டாமென கேட்டுக்கொள்கிறேன்.

2124. மறைக்கப் பார்த்த மர்மம் என்னவோ?

உடன்பிறப்பே,

நள்ளிரவு வழிப்பறிக் கொள்ளைகள்; வாகனங்களையும், பேருந்துகளையும் மறித்து நடத்தப்படும் கொடுமை, தொடர்கதையாகி விட்டதை அனைத்துக்கட்சிகளும், ஏடுகளும் கண்டித்துக் குரல் கொடுத்த பிறகு; தமிழக அரசு ஓர் அறிவிப்பைச் செய்தது. அதன்படி இரவு முழுதும் ஆயுதப்படை காவலர்களின் ரோந்து இருக்குமென்றும் - இருநூறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுமென்றும் செய்தி வெளியிடப்பட்டது. இந்த ஏற்பாடு வரவேற்கத்தக்க ஒன்றேயாகும். ஆனால் இந்த ஏற்பாடு அறிவிக்கப்பட்ட சிலமணி நேரத்துக்குள்ளாக திருச்சிக்கு அருகே ஒரு வேன் மறிக்கப்பட்டு இரண்டு லட்சம் ரூபாய் நகைகளையும் பறித்துக்கொண்டு வேனில் பயணம் செய்த பதினெட்டுப் பேர்; இந்துக்கள் - முஸ்லிம்கள் ஆண்கள் அறுவர் பெண்கள் பன்னிருவர் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டு பெரியதோர் வழிப்பறிக் கொள்ளை நடைபெற்றுள்ளது.

ஆயுதப்படையினர் ரோந்து - சோதனைச் சாவடிகள்; இவற்றுக்கிடையே இந்தக் கொள்ளை எப்படி நடந்தது எனக்கேட்டு நான் போலீசாரையோ; அரசாங்கத்தையோ குற்றம் சாட்ட முனையவில்லை.

எவ்வளவு ஆயத்தமாக இருப்பினும் - எச்சரிக்கை யுடனிருப்பினும் - போலீசார் அறியாத நிலையில் இதுபோன்ற சமூக விரோதச் செயல்கள் நடைபெற்று விடுவது இயற்கை.

ஆனால்; எல்லா ஏடுகளிலும் வெளிவந்திருக்கிற இந்த வழிப்பறிச் சம்பவத்தை மறைத்திடப் போலீஸ் துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் முனைந்திருப்பது ஏன் என்பதுதான் என் கேள்வி!

நடந்ததொரு பயங்கரமான சம்பவத்தை இருட்டடிப்பு செய்திடும் முயற்சியில் போலீசார் இறங்கியது; வீண் கௌரவத்திற்காக என்பதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? ஏடுகளில் வந்துள்ள செய்திகள் என்ன விபரங்களைக் கூறுகின்றன.

இந்த சம்பவம் பற்றி தினமலர் - கீழ்க்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது :-

திருச்சி அருகே நேற்று முன்தினம் நள்ளிரவு முகமூடி கொள்ளையர்கள் பயங்கரமான வழிப்பறி நடத்தினர். ரோட்டில் லாடம் போட்டு வேனை பஞ்சர் செய்து பயணிகளை கத்தியால் குத்தி கட்டையால் தாக்கினர். மயங்கி விழுந்த பயணிகளிடமிருந்து 60 பவுன் நகைகளை பறித்துக் கொண்டு தப்பினர்.

இந்த பரபரப்பான சம்பவம் பற்றிய விபரம் வருமாறு :-

சேலம் மாவட்டம் பரமத்தி வேலூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த 18 பேர் ஒரு வேனை டி.ஏ.எம். 9979 வாடகைக்கு எடுத்துக் கொண்டு நாகூர், வேளாங்கண்ணி செல்வதற்காக நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு புறப்பட்டனர். வேனை டிரைவர் ராமசாமி என்பவர் ஓட்டி வந்தார். வேனில் முருகையன் 26, இவரது மனைவி சம்பூர்ணம் 22, ரங்கசாமி 45, நிச்சம்மாள் 28, பாப்பா 16, சேட்டு 45, பழனியப்பன் 40, ராமசாமி 25, வஜீர் பேகம் 30, பழனியம்மாள் 47 உட்பட 12 பெண்களும் 6 ஆண்களும் இருந்தனர்.

வேன் திருச்சி நொச்சியம் அருகே நேற்று முன்தினம் இரவு ஒரு மணி அளவில் வந்து கொண்டிருந்தது. அப்போது ரோட்டில் கிடந்த லாடம் ஒன்று வேன் டயர்மீது குத்தி டயர் வெடித்தது. உடனே வேனை டிரைவர் நிறுத்தினார்.

அந்த இடம் மிகவும் இருட்டான பகுதி. வேன் லைட்டுகளை போட்டுவிட்டு டிரைவர் ராமசாமி கீழே இறங்கினார். வெடித்த டயரை கழற்றி விட்டு வேறு டயர் மாற்றுவதற்காக ஜாக்கி வைத்து தூக்கிக் கொண்டிருந்தார். வேனில் இருந்தவர்கள் வேனை விட்டு கீழே இறங்கினர்.

அப்போது சுமார் 10 முதல் 12 வாலிபர்கள் சிவப்பு பனியன், சிவப்பு அரைக்கால் சட்டை, சிவப்பு முகமூடி அணிந்துகொண்டு திடீரென்று அங்கு வந்தனர். அவர்களிடம் கத்தி, கட்டை போன்ற ஆயுதங்கள் இருந்தன. அவற்றால் எல்லோரையும் தாறுமாறாக தாக்கினர். அடிபட்டவர்கள் கீழே விழுந்தவுடன் அவர்களிடமிருந்த நகைகளை பிடுங்கிக் கொண்டனர்.

வேன் டிரைவர் ராமசாமியை பலமாக தாக்கினர். தொடர்ந்து மற்றவர்களை தாக்கிக் கொண்டிருந்தபோது வேன் டிரைவர் ராமசாமி தலையில்பட்ட அடியோடு ரத்தம் சொட்ட சொட்ட வேகமாக தப்பி ஓடினார்.

அங்கிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் சிலர் ஆற்றில் மணல் எடுத்துக் கொண்டிருந்தனர். ராமசாமி சத்தம் போட்டுக் கொண்டே சென்றார். அந்த சத்தம் கேட்டதும் மணல் எடுத்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிவந்தனர். ராமசாமியிடம் விபரத்தைக் கேட்டதும் உடனே அனைவரும் வேன் நின்ற இடத்திற்கு ஓடி வந்தனர். அதற்குள் கொள்ளையர்கள் தப்பி ஓடியிருந்தனர்.

வேனில் வந்தவர்கள் அணிந்திருந்த சுமார் 60 பவுன் நகைகளை கொள்ளையர்கள் பறித்துச் சென்றிருந்தனர். அவர்களால் தாக்கப்பட்டு காயம்பட்டு கிடந்த 18 பேர்களும் திருச்சி ஸ்ரீரங்கம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதில் ரெங்கசாமி, சம்பூரணம், முருகையன், நிச்சம்மாள், பாப்பா, சேட்டு, பழனியம்மாள், ராமசாமி, வஜீர் பேகம், பழனியப்பன் ஆகிய பத்து பேர்களும், கத்திக்குத்து, கட்டை அடி காயங்களுடன் திருச்சி அரசு மருத்துவமனையில் உள்ளனர். மேலும் 8 பேர் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முகமூடிக் கொள்ளையர்கள் 12 பேரும் ஒரு காரில் வந்து இருக்க வேண்டும். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் காரை நிறுத்திவிட்டு ரோட்டில் லாடத்தை வைத்துவிட்டு ரோடு ஓரம் பதுங்கி இருந்துள்ளனர். லாடம் பட்டு வேன் டயர் வெடித்து நின்றவுடன் பதுங்கியிருந்த முகமூடிக் கொள்ளையர்கள் வெளியே வந்து வேன் பயணிகளை தாக்கி 60 பவுன் நகைகளை கொள்ளை அடித்துக் கொண்டு காரில் தப்பியிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது - என்கிறது தினமலர்.

இந்த சம்பவத்தை பொதுமக்களும் பத்திரிகையாளர்களும் அறியாத வண்ணம் உடனடியாக மூடி மறைத்துவிட போலீசார் வரலாறு காணாத வகையில் சுறுசுறுப்புக் காட்டியிருக்கின்றனர்.

இப்படி ஒரு நெடுஞ்சாலைக் கொள்ளையே நடக்கவில்லை என்பது போலக் காட்டிவிட - போலீசார் எடுத்த நடவடிக்கைகளை தினகரன் தொகுத்து வெளியிட்டிருக்கிறது அது வருமாறு :-

கொள்ளையர்கள் வழிமறித்து தாக்கிய வேன் நேற்று அதிகாலை மண்ணச்சநல்லூரில் நிறுத்தப்பட்டு இருந்தது. இதற்கிடையில் கொள்ளை சம்பவம் பற்றி டி.ஐ.ஜி., எஸ்.பி. ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக அந்த இடத்துக்கு போலீசார் விரைந்தனர். அவர்கள் வேனை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்திவிட்டனர். வேன் எங்கே சென்றது என்ற விவரம் தெரியவில்லை.

மேலும் வேனில் வந்த பக்தர்களில் காயம்பட்டவர்கள் 10 பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு இருக்கிறார்கள். அவர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையும் பெற்று இருக்கிறார்கள். கொள்ளை சம்பவம் பற்றி பரவலாக பேச்சு அடிபட்டதும் போலீசார் சுறுசுறுப்புடன் செயல்பட தொடங்கினர். திருவரங்கம், திருச்சி மருத்துவமனைக்கு விரைந்தனர். அங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தவர்களை அவசர, அவசரமாக அங்கிருந்து வெளியேற்றி ஒரு வேனில் அனுப்பிவிட்டதாக மருத்துவமனை பகுதியில் உள்ளவர்கள் தெரிவித்தனர். அவர்கள் ஊருக்கு அனுப்பப்பட்டார்களா அல்லது தனியார் மருத்துவமனையில் ரகசியமாக வைக்கப்பட்டு இருக்கிறார்களா? என்ற விவரமும் தெரியவில்லை.

திருவரங்கம் மருத்துவமனையில் இருந்து திருச்சி மருத்துவமனை வந்தவர்களுக்கு மேல் சிகிச்சை அளிப்பதற்காக டாக்டர்கள் அந்தந்த வார்டுக்கு நேற்று காலை சென்றனர். வார்டில் யாரும் இல்லாததால் டாக்டர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதுபற்றி கேட்டதற்கு அவர்களை போலீசார் அழைத்து சென்று விட்டதாக கூறப்பட்டது.

கொள்ளை நடந்த இடத்தில் வேன் ஒன்று நின்றிருந்ததை தான் பார்த்ததாக அந்த பகுதியைச் சேர்ந்த இளநீர் வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் போலீஸ் சோதனைச் சாவடி உள்ளது. கொள்ளையர்கள் தாக்குதலின் போது அலறியவர்களின் குரல் போலீசாரின் காதுகளுக்கு எட்டியிருக்கலாம்.

இவ்வளவு பெரிய சம்பவம் நடந்து திருச்சி மாவட்டம் முழுவதும் பரபரப்பாக பேசப்பட்ட அதே நேரத்தில், கொள்ளை எதுவுமே நடக்காதது போலவும், இதுபற்றி தாங்கள் இனிமேல்தான் என்ன நடந்தது என்று விசாரிக்கப் போவதாகவும் போலீசார் கூறியதைக் கேட்டதும் வியப்பாக இருந்தது.

- என்று தினகரன் தகவல் வெளியிட்டிருக்கிறது.

அதிகாலை இரண்டு மணியளவில் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்த பத்துப் பயணிகளும் - அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகக் கேள்விப்பட்ட பத்திரிகையாளர்கள், அவர்களை சந்தித்து விபரம் சேகரிக்க - காலை 9 மணிக்கு மருத்துவமனைக்குச் சென்றபோது அவர்கள் யாருமே அங்கில்லை! இந்த மர்மம் யாருக்கும் புரியாததாக இருக்கிறது - என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடும் வியப்புத் தெரிவித்திருக்கிறது.

பக்தர்கள் பயணம் செய்த வேனை அப்புறப்படுத்தியதோடு - மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த பக்தர்களை டாக்டர்களும் அறியாமல் வெளியேற்றி விட்டதோடு போலீசார் நின்றுவிடவில்லை.

செய்தி அறிந்து - தகவல் சேகரிக்கவும், புகைப்படம் எடுக்கவும் விரைந்து வந்த பத்திரிகையாளர்களிடம் வழிப்பறியா.... அப்படி எல்லாம் எதுவும் நடக்கவில்லையே என்கிற ரீதியில் பேசி சம்பவம் நடக்கவில்லை என்பது போல சாதிக்க முனைந்திருக்கின்றனர்.

போலீஸ் கட்டுப்பாடு அறையிலிருந்தும் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திலுமிருந்தும் பத்திரிகையாளர்கள் கொள்ளை பற்றி எந்தத் தகவலையும் பெற முடியாமல் தடைவிதித்திருக்கிறார்கள்.

காயம்பட்ட நிலையில் எடுக்கப்பட்ட டிரைவர் இராமசாமியின் புகைப்படம் கூட ஏடுகளில் வந்துள்ள நிலைமையில்; அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இளம் பெண்கள் உள்ளிட்ட பத்து பேரும் மருத்துவமனையிலிருந்து காணாமற்போய்விட்ட மர்மந்தான் என்னவென்று கேட்காமலிருக்க முடியுமா?

கொலைக்காரர்கள் மறைக்கப்படுகிறார்கள்!

கொள்ளைக்காரர்கள் மறைக்கப்படுகிறார்கள்!

இனி கொலை நிகழ்ச்சியும் - கொள்ளைச் சம்பவங்களுமே மறைக்கப்படக்கூடும் என்ற அளவுக்கு, சட்டமும் ஒழுங்கும் கெட்டுப் போவதை; மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

அன்புள்ள,

மு. க.,

12-04-1994

2125. சிங்க ஏறுகளாக நிமிர்ந்து நிற்போம்!

உடன்பிறப்பே,

இமைப்பொழுதும் என் நெஞ்சை விட்டகலாமல் என்னை இயக்கிக் கொண்டிருக்கும் என்ற வசனத்தைப் பேசி என்னை ஏமாற்றப் பார்த்தவர்கள்; இன்று அதே வசனத்தை அறிக்கைகளில் அடிக்கடி பயன்படுத்தி உன்னை ஏமாற்றப் பார்க்கிறார்கள். நீ ஏமாற மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில்; ஏமாந்து விடாதே என்று என்னையே எச்சரித்த உடன்பிறப்பாயிற்றே நீ! நான்தானே எவரையும் எளிதில் நம்பி, இரக்கம் காட்டி ஏமாந்து விடக்கூடிய பலவீனமுடையவன்! அதனால் உறுதி உள்ளம் படைத்த உன்போன்ற உடன்பிறப்புக்களை வஞ்சநெஞ்சங்கள் வளைக்க முடியாது என்பதை நானறிவேன்.

இரண்டு ஆண்டுகளாகவே திட்டமிட்டு; கொள்கை விளக்கக் கூட்டங்களுக்குச் செல்கிறேன் என்று விளம்பரம் செய்துகொண்டு, கூட்டத்தில் என்னைப் புகழோ புகழ் என்று புகழ்ந்து தள்ளி - இமைப்பொழுது நெஞ்சு இயக்கிக் கொண்டிருப்பது என்றெல்லாம் இதய சுத்தியோடு முழங்குவதுபோல நடித்துவிட்டு; கூட்டம் முடிந்ததும் ஊருக்கு ஊர் கோஷ்டி சேர்த்திடும் முயற்சியில் ஈடுபட்டு; இன்னும் எத்தனை நாள் இவன் உயிரோடு இருப்பது? நான் தலைவனாகிட எவ்வளவு காலம் காத்திருப்பது? என்று ஏக்கத்தை; தனக்கு நெருங்கியவர் சிலரிடம் தன்னையுமறியாமல் வெளிப்படுத்தி; விஷமுள்ளைப் பரப்பிட வேஷம் கட்டி ஆடிக் கொண்டிருந்த சதிகாரர்கள் - வெளிச்சத்துக்கே வந்து விட்டார்கள் என்ற பிறகு; தலைவனுக்கு ஆயுள் எத்தனை காலம்? என்று ஆருடக்காரர்களிடம் அலைந்தலைந்து அறிந்திடத் துடித்தவர்களின் ஆட்டபாட்டம் அம்பலத்துக்கே வந்து விட்டபிறகு; அந்தச் சதிக்கு உடந்தையாக ஒப்பந்தம் செய்து கொண்ட சிலரைத் தவிர - உன்போன்ற தூயவர்கள்; தீயவர் கூடாரமொன்று உருவாகிறது என்பதைத் தெளிவாகப்

புரிந்துகொண்ட நிலையில் தி.மு.க. எனும் நம் ஊன் கலந்து உயிர் கலந்து உணர்வெலாம் கலந்துள்ள இந்த இயக்கம் காத்திட இமயமென எழுந்து நிற்பதைக் காணுகிறேன்.

அதனால்தான்; எதிர்பார்த்தது நடக்கவில்லையே என்ற எரிச்சல் பெருகி - சொரிந்து விட சொரிந்துவிட அப்போதைக்குச் சுகமாக இருந்து; பிறகு ரத்தம் கசியக் கசிய மிகக் கடுமையான எரிச்சலைத் தாங்க முடியாமல் துடிப்பவரின் நிலைமைக்கு ஆளாகியுள்ளவர்கள் - தொடர்ந்து நம்மீது விழுந்து பிறாண்டிட முனைகிறார்கள்! எனவே முனகல்களை அறிக்கைகளாக்குகிறார்கள்! மூடுவிழா நெருங்கிவிட்டதை எண்ணி எழும் முகாரிகளை முரசங்கள் போல முழங்கப் பார்க்கிறார்கள்! இல்லாததும் பொல்லாததும் கூறி; சொல்லாததைச் சொன்னதாகக் கற்பித்து காந்தாரிகளாகக் கதறுகிறார்கள்! பச்சை ரத்தம் பரிமாறுவோம் என்று தன்னையே தியாகத்துக்கு அர்ப்பணித்துக் கொள்ளும் உணர்வுக்கு - பச்சை ரத்தம் குடிப்போம் என்று பகைவர் மீது பாயும் கொலை வெறிக்கும் வித்தியாசம் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே வன்முறையை விதைத்து விளைச்சல் காண விரும்புவார்கள் - அழக் கொண்ட எல்லாம் அழப்போம் எனவும், சிவன் சொத்து குலநாசமெனவும் தங்கள் மீதே சாபங்கள் எனும் ரோடு ரோலரை ஏற்றிக்கொண்டவர்களாக வசைபாடித் திரிகிறார்கள்!

தமிழ் தடுமாறுகிறது எனக்கு, என்று தொடங்கினார்கள் - ஏ.கே.47ஐக் கொண்டு தான் என்னைச் சந்திக்க வேண்டும் என்று ஏடுகளில் விளிம்பு கட்டிய விளம்பரமே கொடுத்து மிரட்டினார்கள் - கருணாநிதி வீட்டுப் பெண்கள் வெள்ளைச் சேலை கட்டிக்கொள்வார்கள் என்று தங்களது திட்டத்தை வேலூர் கூட்டத்தில் வெளிப்படுத்தினார்கள். அண்ணா அறிவாலயத்தை தகர்ப்போம் என்று பல மேடைகளில் பயங்கரமாகத் தோள் தட்டினார்கள்.

இன்றைக்கு இந்தப்பூனையும் பால் குடிக்குமா என்பதுபோல்; தங்களை வன்முறைக்குப் பகைவர்கள்போல வர்ணம் பூசிக்காட்ட நாடகமாடுகிறார்கள்!

அண்ணன் தம்பிகளாய் ஒட்டி உறவாடிய உடன்பிறப்புக்களை முட்டி மோதவிட்டு; உப்பரிகையில் இருந்து ஒய்யார வசனம் எழுதிக் கொண்டிருக்கிறேனாம் இப்படி அறிக்கை

விடுகிறார்கள். முட்டி மோதவிட்டது யார்? எதனால்? என்பதை நீயும் அறிவாய்! நானும் அறிவேன்! நாடும் அறியும்! தமிழ் ஈரப்போராளிகளுக்குள்ளே சகோதர யுத்தம் வேண்டாம் என்று நான் விடுத்த வேண்டுகோள்களையே மறைந்திருந்து விமர்சனம் செய்தவர்களுக்கு, திடீரென்று உடன்பிறப்புகள் மோதிக் கொள்ளக்கூடாது என உபதேசம் செய்யும் உள்ளொளி பிறந்திருக்கிறது பார்த்தாயா?

கட்சிக்குள் தேர்தல், பட்டுக்கோட்டையில் - அந்த நகராட்சித் தலைவராகப் பொறுப்பேற்று அனைவராலும் சீனியண்ணா என்று பாசத்துடன் அழைக்கப்பட்ட சுயமரியாதைச் சுடர் சீனிவாசன் அவர்கள் செல்வன் பன்னீர்செல்வம்! கழகத்திற்காகத் தன் தந்தை வழியில் எந்தத் தியாகமும் செய்வதற்கு முந்துகின்ற காளை அவன்! மறைந்த மன்னை அவர்களுக்குச் செல்லப்பிள்ளைபோல! அந்தப் பன்னீர்செல்வம் பட்டுக்கோட்டை நகரச் செயலாளராக வர முடியாமல் ஜனநாயக முறையில் தடுத்திட வலுவற்றோர்; துப்பாக்கியின் துணையை நாடினர் -

பல பேர் பார்த்திருக்கப் பன்னீர் செல்வத்தைச் சுட்டுத் தீர்த்தனர் - கணவன் கொலையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பன்னீர் செல்வத்தின் மனைவி, தன்னுயிரை மாய்த்துக்கொள்ள; அந்தப் பெண்மணி வளர்த்த இளந்தளிர் ஒருவனும் அதனைத் தாங்காமல் தன்னுயிரைப் போக்கிக் கொள்ள; இந்தச் சோகச் சுமையைத் தூக்க இயலாமல் தஞ்சைத் தரணியே தனலிடைப் புழுவாய் ஆனது! கொலைக்குற்றம் சாட்டப்பட்டவரை; தலைமைக் கழகம், உடனடியாக கழக உறுப்பினர் பொறுப்பிலிருந்தே விலக்கியது! ஆனால்; உடன்பிறப்பே! இன்று உடன்பிறப்புகள் முட்டி மோதிக்கொள்வதா? என உருக்க மிகு அறிக்கை விடுவோர்; அன்றைக்கே அவருக்கு உதவிக்கரம் நீட்டினர். ஒன்றிக் கலந்து பழகினர். உதவாது இது எனத் தலைமை எச்சரித்தும், நானே நேரில் கூறியும் - அதனை உதறியெறிந்து விட்டு அவருடன் இணைந்தே இருந்தனர்! இறுதிவரை அவர் கட்சியில் சேர்க்கப்படவே இல்லை - இருப்பினும் அவர் இன்றைக்கு அந்த அணியில் ஒரு முக்கிய பொறுப்பில்; அதுவும் நிர்வாகத்திலேயே இருக்கிறார்!

கோயில்பட்டியில் தலைமைக் கழகம் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கிறது. அவருக்கு பதிலாக பொறுப்புக்குழுவின் அமைப்பாளராக ஜெயச்சந்திரன் நியமிக்கப்படுகிறார்.

நியமிக்கப்பட்டவர்; வெட்டிச்சாய்க்கப்படுகிறார் - அந்தப் பிணத்தின் முகத்தைக்கூடப் பார்க்க மறுத்தவர்கள் - கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பின்னணியிலிருந்து உதவியவர்கள் யார் என்பது - அந்த வட்டாரத்து உடன்பிறப்புகளுக்கு தெரியாமலா போய்விட்டது!

உடன்பிறப்புக்களுக்குள்ளே மட்டுமா? ஓருயிர் ஈருடல் என, வெள்ளத்தினோடொரு வெள்ளமுமாய் - வீணையும் நாதமுமாய் ஆகிவிட்ட இளங்காதலர்களை; உறவு என்றும் பார்க்காமல் - நாடகத்தில் காவியத்தில் காதலென்றால் நாட்டினர்தாம் நன்றாம் என்பார், வீடகத்தே, கிணற்றோரத்தே, ஊரினிலே காதல் என்றால் உறுமுகின்றார் - பாடை கட்டி அதைக் கொல்ல வழி செய்கின்றார் என்று பாரதி பாட்டில் வரும் கொடியோராய் மாறிக் கொன்று குவித்தோர் இப்போது யாருக்குக் குருநாதர்களாக இருக்கிறார்கள்?

உடன்பிறப்பே; மோதுதல் அரசியல் வேண்டாம் என்பதுதான் தொடக்கத்திலிருந்தே நான் தொடர்ந்து கூறி வருகிற கருத்து - விடுத்திடும் வேண்டுகோள்!

அதனால்தான் முறைப்படி நம்மால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள். ஏற்கெனவே தேர்தல் கமிஷன் நமக்கு வழங்கியுள்ள அங்கீகாரத்துக்கு எதிராக, கழகத்தின் பெயரை, கொடியைப் பயன்படுத்துவதைத் தடுத்திட; சட்டத்தின் துணையை நாடினோம்!

அதுகண்டு துடிப்பவர்கள்; ஆகா! ஊஹூ! தடையை மீறுவோம்! நீதிமன்ற உத்திரவைப் புறக்கணிப்போம் என்று வெகுண்டெழுவார்களேயானால் - அதன் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு!

நம்மைப் பொறுத்தவரையில் இன்று வந்துள்ள நீதிமன்ற ஆணையாயினும்; நாளை வரக்கூடிய நீதிமன்ற ஆணை எதுவாயினும் - அவற்றை மதிக்கும் பொறுப்புஉணர்ச்சி மிக்கவர்கள்!

எனினும் உடன்பிறப்பே; அவர்களின் அறிக்கைகளில் காணப்படும் வாசகங்கள், வன்முறைக்கு மறைமுகமாகத் தூபமிடுபவை போலத் தோற்றமளிப்பதை நீயும் நானும் அலட்சியப்படுத்தி விடுவதற்கில்லை!

காவல்துறையினரின் கவனத்திற்கும், அந்த அறிக்கைகள் சென்றிருக்கும். எனவே அந்தத் துறையினர்; கண்காணிப்புடன் இருப்பர் என நம்புவோம்.

எனினும் எதற்கும்; எத்தகைய வன்முறை வெறியாட்டங்கள் எப்போது, எந்த இடத்தில் ஏவி விடப்பட்டாலும்; அவற்றைத் தாங்கிடும் நெஞ்சுறுதியுடன்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என அண்ணா தந்த கவசங்களைப் பூண்டு - கடைசி மூச்சு உள்ளவரையில் இந்தக் கழகத்தைக் காத்திடும் சிப்பாய்களாம் நாம்; சிங்க ஏறுகளாக நிமிர்ந்து நிற்போம்!

அன்புள்ள,

மு. க.

13-04-1994

2126. எழுபதிலும் இருபது;
இருபதிலும் எழுபது!

உடன்பிறப்பே,

ஆயிரங்காலத்துப் பயிராம், திராவிட இயக்கத்தை, பூண்டற்றுப் போய்விடச் செய்து விடவேண்டுமென்று ஆதிக்கவர்க்கத்தினர் கங்கணம் கட்டிக் கொண்டு அஸ்திரங்கள் பலவற்றை; அவை அக்கினியாஸ்திரங்களாக - வருணாஸ்திரங்களாக - பிர்மாஸ்திரங்களாக - நாகாஸ்திரங்களாக - மோகனாஸ்திரங்களாக - எவையெவை கைக்குக் கிடைக்கிறதோ அவைகளைப் பிரயோகித்துப் பார்த்துக்கொண்டுதானிருக்கின்றனர்.

ஆனாலும் இந்த ஆல்நிகர்த்த ஆயிரமாயிரம் விழுதுகள் கொண்ட தருவாம், நமது கழகம்; நன்றி காட்டுவோர், நன்றி மறப்போர், நலமெனும் நிழல் பெறுவோர், நிழல் தந்த கிளையையே வெட்டுவோர், தூயவர், துரோக சிந்தையர், அனைவர்க்கும் தங்குமிடமளித்து - தனக்கு வரும் ஆபத்து தமிழின மக்களுக்கு வரும் ஆபத்து என்பதால் தன்னைக் காத்துக் கொண்டு, தமிழர்களைக் காத்திட தக்காரைத் தழுவி நின்றும் - தகவிலாரைத் தள்ளி வைத்தும்; தருக்கர் ஏந்தி வரும் அஸ்திரங்களாயினும் - தருக்கர்களே அஸ்திரங்களாக மாறிவரினும் - தடந்தோள் உண்டெனச் சிரிக்கும் வீரனாக; வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் வெற்றித் தோள், இந்தத் தோள்! என நெஞ்சு நிமிர்த்தும் தீரனாக; அவற்றை மூச்சுக் காற்றாலேயே முறித்துப் போட்டும் முரசு கொட்டிய காட்சியைத்தான் - முரசு கொட்டிடும் காட்சியைத்தான் வரலாற்று வரிகளாக்கியிருக்கிறது!

எண்பது ஆண்டுகள் எட்டிப் பிடிக்கும் வயதுடைய திராவிட இயக்கம்; எத்தகைய முன்னோடிகளின் முயற்சியில் நாற்றாகி - பயிராகி - கதிர் குலுங்கி; இந்த ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைக் கைதூக்கி விட்டுள்ளது

என்பதையும், அதற்காக இந்த இயக்கமும், இயக்கத்தின் தலைவர்களும், தளகர்த்தர்களும், அடித்தளத் தொண்டர்களும் சிந்திய வியர்வை, வடித்த கண்ணீர், கொட்டிய குருதி, ஏற்றுக் கொண்ட அடக்குமுறை, கேட்டுக்கொண்ட இழிமொழிகள் எவ்வளவு என்பதையும் இன்றைய தலைமுறையினர் - ஆம்; இளைஞர், மாணவர், வாலிபர் அனைவருமே, படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்; அல்லது கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்! தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில் அக்கறை காட்டினால் மட்டுமே தெரிந்து கொள்ள முடியும்!

நமது முன்னோர் நமக்காக அமைத்துத் தந்துள்ள பாதை இன்றைக்குப் பளபளப்பாக இருக்குமேயானால்; அதற்காக அவர்கள் எத்தனை பாறைகளை உடைத்துக் கல் எடுத்திருப்பர் - உடைக்கும்போது எத்தனை விபத்துக்களைத் தாண்டி வந்திருப்பர் - என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்தால்தான்; முட்காடாக இருந்த இந்தச் சமுதாய இழி நிலை அகற்றி; சமத்துவ - சமதர்ம விளக்கை ஏந்திடவும், சுதந்திரக் காற்றைச் சுவாசித்திடவும், சுயமரியாதை உணர்வைப் பெற்றிடவும் அவர்கள் ஆற்றிய பணியின் பெருமை; உழைப்பின் அருமை - இந்தத் தலைமுறைக்குத் தெரியும்!

இன்று கிடைத்துள்ள புதுமையில்; நாளை உருவாக்க வேண்டுமென எண்ணுகின்ற சிந்தனை, முளை விடுகிறது! வரவேற்கத்தக்கதுதான்! அதேசமயம்; இந்தப் புதுமை கிடைப்பதற்கு முன் நேற்றைக்கு எப்படியிருந்தது என்ற மலரும் நினைவு மனதுக்கு நிறைவு மட்டுமல்ல; எதிர்பார்க்கும் மறுமலர்ச்சிக்கும் தக்க எருவாகும் என்பதை மறந்திடக் கூடாது!

முதலில் நான் குறிப்பிட்டுள்ளவாறு; இந்தக் கழகமெனும் ஆலமரத்தில்; ஆயிரக்கணக்கான விழுதுகள் - அவை ஒவ்வொன்றுமே ஆல மரங்களாக வளர்பவை, வளரக் கூடியவை, வளர வேண்டியவை!

ஆனால், அதற்காக மூலாதாரமான ஆலமரத்தையே வெட்டி அழித்துவிடுவோமென; கோடாரி தூக்கும் குலக்கேடர்கள் - தமக்கும் வயது ஏறும், நரை திரை வரும், என்ற மானிடத்தின் இயல்பையே உணராமல் விடை தேடிக் கொண்டிருக்கும் கடையராவர்!

முதுமை; தேடிச்சேமித்து வைத்துள்ள அனுபவத்தையும் - இளைமையின் செயலாற்றும் திறமையையும் இணைத்து; இந்த இயக்கத்தை, இன இழிவு போக்கும் ஈட்டி முனையாக - பகுத்தறிவுப் பாடிவீடாக - பொதுவுடைமைப் போர்ப் பாசறையாக - தமிழ்மொழி காத்திடும் பேரரணாக - மேலும் மேலும் வலுவாக்கிட வேண்டும் என்றுதான் இளைஞர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணியென இளைய தலைமுறையினரைக் கொண்ட அணிகள் அமைக்கப்பட்டு; அந்த அணியினர் பணிக்கு இணையிலை எனுமளவுக்குச் செயல் ஒளி வழங்குகின்றனர்.

ஆனால்; இது கண்டு கண் எரிச்சல் கொண்டோர், கையில் சிக்கிய பேனாவில் நஞ்சினை நிரப்பிக் கொண்டு - இளைஞர் அனைவரும் இங்கிருந்து எங்கோ போய்விட்டனர் என்று ஏகடியம் செய்கின்றனர்.

அந்த ஏகடியக்காரர்கள் யார் என நான் அறிவேன்! நாடும் நன்றாக அறியும்! விடுதலைப் புலிகள்! என்ற பிரச்சாரத்தை தமது ஏட்டில் ஓயாமல் செய்து; தி.மு.க. ஆட்சியை கலைப்பதற்கு அடியெடுத்துக் கொடுத்தவர்கள்தான்; இன்று கழகத்திற்கு எதிராக அதே விடுதலைப் புலிகளுக்கு தமது ஏட்டை நிழற்குடையாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள்!

விளக்கத் தேவையில்லை - அறிய வேண்டியவர்கள் அறிந்து கொண்டால் சரி! புரிய வேண்டியவர்களுக்குப் புரிந்தால் சரி!

யாருக்கோ புரியட்டும்; புரியாமல் போகட்டும்! கழகத்தில் உள்ள இளைய தலைமுறையினர்; இளைஞர்கள், மாணவர்கள், தொண்டர்கள் - அங்கிங்கெனாதபடி நான் சென்றிடும் இடமெல்லாம் தேனீக்களாய் வருவதைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கிறேனே; அவர்களுக்கு அவசியம் புரிய வேண்டும்!

இதோ சென்னையில் நாம் ஜனவரி 23-ந் தேதி நடத்திய சமூகநீதிப் பேரணியில் பட்டாள நடை போட்ட சிப்பாய்களாம்; இளைஞர்கள்!

காமாலைக் கண்ணர்க்கு ஒருவேளை தெரியாமல் போய்விடுமோ என்றுதான் காலையில் கையில் கிடைக்கும் முரசொலி கடிதத்தில் மீண்டும் அந்தப் படத்தை

இணைத்துள்ளேன். உடன்பிறப்பே; படம்; உனக்காக அல்ல! நம்மைச் சுற்றி பருந்துகள் எப்படி வட்டமிடுகின்றன என்றறிவிக்கும் பாடம் மட்டுமே உனக்காக!

“விருப்பமுள்ளவராம் வெறும் பதவியில் பலபேர்
அவர் வேண்டாம்;
நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை!”

என்று நான் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுதினேன் - அப்போது வயது இருபது! இப்போது எழுபது!

“எழுபதிலும் இருபது உண்டு!
இருபதிலும் எழுபது உண்டு!”

அது கடல் வாகைப் பொறுத்தது அல்ல; உள்ள உறுதியைப் பொறுத்தது! அனுபவத்திற்கும், சுறுசுறுப்புக்கும்; இரண்டும் இணைவதே சிறப்பு!

அன்புள்ள,

மு. க.

18-04-1994

2127. தெம்பு, திறன், தகுதி ஏது?

உடன்பிறப்பே,

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் தமிழக அ.தி.மு.க. அரசின் சார்பிலும், அரசின் பல்வேறு துறைகள் மற்றும் வாரியங்கள், அமைப்புகள் வாயிலாகவும் வெளியிடப்பட்டுள்ள; ஜெயலலிதாவின் புகழ்பாடும் பத்திரிகை விளம்பரங்கள் எத்தனை எத்தனை, எந்த எந்தப் பத்திரிகைகளில் முழுப் பக்கங்களாகவும் அரைப் பக்கங்களாகவும் வந்துள்ளன என்கிற ஒரு கணக்கை நீ பொதுவாகப் பார்த்தால் அது பல கோடிகளைத் தாண்டியிருக்கும். சற்று சிரமம் பாராமல் நீயும் உன் நண்பர்களும் படிப்பகங்களிலே அந்தப் பத்திரிகைகளின் விபரங்களைச் சேகரித்தால் முதலமைச்சருக்குப் புகழ் முத்தாரம் அணிவிப்பதற்கு மட்டும் மக்களின் வரிப்பணம் எத்தனை கோடி வாரி இறைக்கப்பட்டுள்ளது என்பது தெரியும். அ்ஃதன்னியில் அரசின் பல்வேறு இலாக்காக்கள் சம்பந்தப்பட்ட விளம்பரங்களுக்குச் செலவழிக்கப்பட்டுள்ள தொகை இந்தக் கணக்கில் சேராது.

இப்படி வரிப் பணத்தில் முதலமைச்சரை வர்ணித்து அரசின் கருவூலத்திலிருந்து வழங்கப்பட்ட விளம்பரங்கள் ஒருபுறமென்றால்; இன்னொருபுறம், அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள் ஆகியோர், தங்களின் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவும் - தங்களின் அன்றாடக் கொள்ளைகள், அம்மையாரின் கருணா கடாட்சத்துடன் தங்கு தடையின்றித் தொடரவும் - முதலமைச்சரை மூகாம்பிகையென்றும், மூவேந்தரின் வெற்றிகளையே புறங்கண்டவரென்றும், அகிலாண்டேசுவரி என்றும், அன்னை தெரசா என்றும், நாடாளும் தெய்வமென்றும், நாராயணியே என்றும், நின் பாதம் பணிவோமென்றும், உன் பாதத்தில் ஒட்டிய ஒரு தூசு நான் என்றும், மாதாவின் காலில் பட்டுப் புண்ணியம் பெறும் மண் துகள் என்றும், அப்பப்பா - அண்டபகிரெண்டங்களையும் கரையாண்டதாகச் சொல்லப்பட்ட

சர்வேஸ்வரனுக்குக் கூட இல்லாத அத்தனை தோத்திரங்களையும் செய்து, ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு, ஒவ்வொரு நாளும் அளித்து வரும் முழுப் பக்க விளம்பரங்களை எல்லா ஏடுகளையும் தொகுத்து வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு பக்க விளம்பரத்துக்குச் சராசரி ஒரு லட்சம் ரூபாய் என்று வைத்துக் கொண்டால்கூட, இந்த மூன்றாண்டு காலத்தில் மொத்தம் பத்து கோடி ரூபாயைத் தாண்டியிருக்கும். இந்தக் கணக்கு சற்று ஏறத்தாழ இருக்கலாம்.

இப்படி ஏடுகளில் தங்கள் பெயரால் அம்மையாரை ஆராதித்து விளம்பரம் தந்து கொண்டிருக்கும் அமைச்சர்களின் ஒரு மாதச் சம்பளம் என்ன? அவர்களால் எப்படி இத்தனை முழுப் பக்க விளம்பரங்கள் வெளியிட முடிகிறது! ஒருவேளை அந்த ஏடுகள் இந்தப் பணியை ஒரு புனிதப் பணியாகக் கருதி ஓர் உபயம் போல இலவசமாகவே இந்த விளம்பரங்களை வெளியிட்டு அகிலாண்டேசுவரியின் அனுக்கிரகத்தைப் பெறுகின்றனவா? இல்லை! இல்லவே இல்லை!

அமைச்சர்கள் பெயரால் வரும் இந்த விளம்பரங்களுக்கு, அந்தந்த ஏடுகளுக்கும் உரிய விளம்பரக் கட்டணம் அளிக்கப்படுகிறதென்றால்; அந்த அமைச்சர்களுக்கு இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது?

வருமானவரித் துறையினர் இந்தக் கணக்குகளில் கவனம் செலுத்துகின்றனரா; இல்லையா?

பாவம்; அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரி இன்பசாகரன் ஐ.ஏ.எஸ். வீட்டில் நடத்திய சோதனைக்குப் பிறகு, போதுமடா சாமி வேதனை! என்று பெட்டிப்பாம்பாய் அடங்கிப் போய் விட்டனர் போலும்! இனியும் என்னதான் செய்ய முடியும் அவர்களால்!

மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமாகிவிட்டால் எங்கே மூழ்குவது எனத் தேவர் திருமகனார் எழுப்பிய அந்த வினாதான் நம் முன்னே இன்றைக்கும் நிற்கிறது!

ஒரு துறையின் அமைச்சர் - அவர் சற்று உடல் நலங்குன்றி சிகிச்சை பெற்று வந்தார் - அவரைக் கண்டு நலம் விசாரிக்க அவரது நண்பர்கள் சென்றனர் - அவர்களிடம் அந்த அமைச்சர் ஆதங்கத்துடன் சொன்னாராம்; எல்லா அமைச்சர்களும் தங்கள்

இலாக்காக்களின் மூலம் தனிப்பட்ட முறையில் நிறைய திரவியம் சேர்த்து, கணிசமான கப்பப்பணத்தைக் கட்டவேண்டிய இடத்தில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் - என் இலாக்காவில் அந்த வேலைக்குப் போதுமான வழிவகையில்லை; அதனால்தான் ஒரு மாய நகரத்தையே உருவாக்கத் திட்டமிட்டு அதில் என்னால் முடிந்தது, ஒப்பந்தங்களின் மூலம் சில கோடியைச் சுருட்டி; கப்பம் கட்டியது போக மிச்சத்தைக் காப்பாற்றிக் கொண்டேன் என்று!

உடன்பிறப்பே, வரப்போகிறது பார், விழா! அதில் அவர் கொளுத்தப் போகிறார் பார்; விளம்பர மத்தாப்பு! என் செய்வது; நாம் சுட்டிக்காட்டத்தான் முடியும்! தட்டிக் கேட்கும் அதிகாரம் படைத்தவர்கள்தான், தண்டனிட்டுத் தரையில் வீழ்ந்து தாள் தொழுதவாறு கிடக்கிறார்களே! காரணம்; கங்கையே சூதகமாகிவிட்ட கதை தான்!

பங்குச் சந்தை ஊழலே பார் முழுதும் நாறும் பொழுது; இங்கு நடைபெறும் கொள்ளையை ஏன் என்று கேட்கத் தெம்பு ஏது? திறன் ஏது? தகுதிதான் ஏது?

அன்புள்ள,

மு. கருணாநிதி

18-04-1994

2128. காந்தியடிகளின் கிராம ராஜ்யம் எங்கே?

உடன்பிறப்பே,

ஆதிக்கபுரியினர், ஆள் தூக்கும் ஆற்றல் வாய்ந்தோர், ஐஸ்வர்யச் சீமான்கள், மிட்டா, மிராசுகள், இவர்களின் ஏகபோக சாம்ராஜ்யங்களாக இருந்த கிராம ராஜ்யங்கள் - மெல்ல மெல்ல ஜனநாயக உரிமைகளைப் பெற்று, சாதாரண சாமானியர்களான மக்களின் தொண்டர்களும் இடம் பெறக்கூடிய அமைப்புகளாக வளரத் தொடங்கின. வார்டுகளிலோ, வட்டங்களிலோ, டிவிஷன்களிலோ, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் ஊராட்சி முறைகள் - நகராட்சி முறைகள் - மாநகராட்சி முறைகள் - மறைமுகத் தேர்தல்கள் மூலம் கடைப்பிடிக்கப்பட்ட காரணத்தால் அடித்தளத்திலிருந்து ஜனநாயகம் முழுமையாகச் செயல்படவில்லை என்ற குறை நீக்கப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது.

அந்தக் கருத்தை எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் முழுமையாக நிறைவேற்ற முனைந்து, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல்கள் மறைமுகத் தேர்தல்களாக இல்லாமல், நேரடித் தேர்தல்களாகவே நடைபெற்றிருக்கின்றன. அதனை அப்போது எதிர்க்கட்சி வரிசையிலிருந்த தி.மு.கழகம் வரவேற்றிருக்கிறது. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே; காங்கிரஸ் ஆட்சியில் காமராஜர் அவர்கள் ஜில்லா போர்டுகளால் ஒவ்வொரு மாவட்டத்திலும் தனிக்காட்டு ராஜாக்கள் உருவாகிடும் நிலையைத் தடுத்திடும் நோக்கத்துடன்; ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் என்ற அளவுடன் நிறுத்திக் கொண்டும் மாவட்ட அளவிலான ஜில்லா போர்டுகளை ஒழித்துக் கட்டினார்.

ஆனால் இப்போது? தி.மு.கழகம் போன்ற கட்சிகளால் பெரிதும் எதிர்க்கப்பட்டு, எதிர்ப்பதற்கான அந்தக் கருத்துக்களைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அரசியல் சட்டத்துக்கு 73வது திருத்தம் கொண்டு வரப்பட்டு மூன்றடுக்கு முறையை நடைமுறைப்படுத்தும் முடிவுக்கு மத்திய அரசு வந்துவிட்டதோடு; அதற்கான ஒப்புதலை மாநில அரசுகளும் வழங்கிக் கொண்டுள்ளன. அந்த மசோதாவுக்கான தோ்வுக்குழுவில் அங்கம் வகித்த அ.தி.மு.க.வினர் அந்த மசோதாவை எதிர்க்காமலே விட்டுவிட்டு, காலம் கடந்த நிலையில் அந்த மசோதாவை, அது நிறைவேற்றப்படும்போது நாடாளுமன்றத்தில் எதிர்த்தனர். ஆனால் தி.மு.க.வைப் பொறுத்த வரையில் ராஜீவ் காந்தி அவர்கள் இந்த மசோதா பற்றி முனைப்பாக கருத்தறிந்து செயல்பட்ட பொழுதே, தி.மு.க. அரசின் சார்பாகவே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இன்னமும் அந்த எதிர்ப்பு நிலையை நாம் கைவிடவில்லை.

ஊராட்சி முதல் மாநகராட்சிகள் வரையிலான உள்ளாட்சி மன்ற தேர்தல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் நடைபெறவேண்டும் என்பதிலும், பெண்களுக்கும், தாழ்த்தப் பட்டோருக்கு இடஒதுக்கீடுகள் போதுமான அளவு செய்யப்பட வேண்டும் என்பதிலும், தி.மு.க. வுக்கு அதிக அக்கறை உண்டு என்பதால்தான், 1990ஆம் ஆண்டு இறுதியில் தமிழக சட்டப் பேரவையில் பஞ்சாயத்து சட்டத்தைக் கொண்டு வந்து, தொடர்ந்து அந்த அடிப்படையில் 1991 ஆம் ஆண்டு தொடக்கத்தில் உள்ளாட்சி தேர்தல்களை நடத்திட முனைந்தது எனினும் ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் அந்தத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. நடத்தப்பட்டிருந்த கூட்டுறவு சங்கத் தேர்தல்களும்கூட; அடுத்து வந்த அரசினால் ரத்து செய்யப்பட்டு விட்டன என்பதை அனைவரும் அறிவர். இப்போது மாநில அரசு ஒப்புதல் தந்து நிறைவேற்றியுள்ள மத்திய அரசின் இந்தச் சட்டம்; மாநில உரிமைகளைப் பெருமளவு பாதிக்கக்கூடியது!

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் செயலுக்கு மாறாக; மீண்டும் ஜில்லா போர்டுகளை வேறு பெயரில் கொண்டு வந்து கனதனவான்கள் அல்லது காட்டு தர்பார் நடத்துவோர் கையில் பொறுப்புகளை ஒப்படைக்கக் கூடியது! நேரடியாக மக்களே தங்களின் ஊருக்கு, ஒன்றியத்துக்கு, நகருக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக உரிமைகளுக்குப் புறம்பாக;

மறைமுகமாகத் தேர்தல் நடத்துவதின் மூலம் பணக்காரர்களும், பயில்வான்களும், ஆள் அம்பு கொண்ட ஆதிக்க சக்திகளும் மறுபடியும் தோன்றிட வழி வகுக்கக் கூடியது!

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் நடைமுறைக்கு வந்த நேரடித் தேர்தல் முறைக்கு விடை கொடுத்தனுப்பக்கூடியது! இந்தக் கருத்துக்களை தமிழக சட்டப்பேரவையில் தம்பி பரிதி இளம்வழுதியும் தனக்குக் கிடைத்த நேரத்தில் சுருக்கமாகக் கூறியுள்ளார். எப்படியோ, மத்திய அரசு நிறைவேற்றியுள்ள அரசியல் சட்டம் 73-வது திருத்தத்தின் படியான இந்த சட்டம்; மாநிலங்களில் பஞ்சாயத்து தேர்தல்களை விரைவில் நடத்த முடியாத ஒரு சூழ்நிலையைக் காரணமாகக் காட்டப் பயன்பட்டுள்ளதேயன்றி; கிராம ராஜ்யம் என்ற காந்தியடிகளின் ஆசையைக்கூட நிறைவேற்றப் பயன்படவில்லை என்பதுதான் வேதனைக்குரியதாகும்!

அன்புள்ள,

மு. க.

21-04-1994

2129. ஏடுகளுக்கு என் இதயமார்ந்த நன்றி!

உடன்பிறப்பே,

ராயபுரம் ஏழுமலை கொலை வழக்கில் போலீசார் சுதந்திரமான புலன் விசாரணையிலும், நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதைப்போல முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் கூறிக் கொண்டே; தங்களது சட்டமன்றப் பேச்சுகளின் மூலம் - போலீசார் இந்தக் கொலை வழக்கை எந்த முறையில் அணுக வேண்டும் என்பதற்கான ஜாடைகள், ஜாடைகளாகக் கூட அல்ல; பகிரங்கமாகவே காட்டி வருகிறார்கள்.

கழகத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள் பேரணி நடத்தினார்களே; அந்தப் பேரணியை வெற்றிகரமாக நடத்திவிட்டார்கள் என்பதற்காக அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் ஏழுமலை என்பவரை வெட்டிக் கொலை செய்து இருக்கிறார்கள் என்று முதலமைச்சர் ஜெயலலிதா, சட்டப்பேரவையில் கிட்டத்தட்ட ஒரு தீர்ப்பையே வழங்கிவிட்டார். நீதிபதிகள் வழங்கவேண்டிய தீர்ப்பை அவரே வழங்கிவிட்டார். சில நீதிபதிகள்தான் இப்போது வழக்குகளை விசாரிக்கவே அஞ்சுகிறார்களே; எங்கே எப்போது கஞ்சா கேஸ் யார் மீது போடப்படுமோ என்று!

மதிவாணனுக்கும் ஸ்டாலினுக்கும் ஏழுமலை போன் செய்து கடுமையாகப் பேசினார் எனத் தெரிகிறது. அன்றிரவே அவர் கொல்லப்பட்டார் என்று முதலமைச்சர் பேரவையில் பேச; அதை தினகரன் ஏடு முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் எட்டுகாலம் தலைப்பாகப் பிரசுரித்து; அந்த இரு இளைஞர்களுக்கும் இன்னும் ஓரிரு இளைஞர்களுக்கும் இப்போதே தூக்குமேடை தயார் என்பது போலத் துள்ளிக் குதித்திருக்கிறது. வாழ்க அந்த ஏட்டின் நல்லெண்ணம்! வாழ்க! வாழ்க!

பேசியதாகத் தெரிகிறது என்று முதலமைச்சர் கூறியதை மறுத்து வெளியிட்ட ஸ்டாலின் அறிக்கையை தினமலர் கூட முதல் பக்கத்தில் பெரிதாக வெளியிட்டு, எதிரிகளுக்கும் இருதயம் இருக்கிறது என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனால் கழகத்தை ஏணியாகப் பயன்படுத்தி வளர்ந்தவர்கள்; கழகத்தைக் கொலைக் குற்றக் கூண்டில் நிறுத்தி - ஆயுள் தண்டனையோ தூக்குத் தண்டனையோ பெற்றுத்தர எத்துணை ஆவலுடன் துடிக்கிறார்கள்.

அறியாமல் செய்த தவறாக இருக்குமோ என்று கூட நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொள்ள முடியவில்லை. காரணம் அதே தினகரன் 23.4.94 இதழில் - இந்தக் கொலை பற்றி இதுவரை யாரும் வெளியிடாத தகவல்களைத் திரட்டி வெளியிட்டிருக்கிறது அது வருமாறு :-

> "போலீசார் நினைத்து இருந்தால் ஏழுமலை கொலையை தடுத்து இருக்க முடியும். ஆனால் அஜாக்கிரதையாக இருந்ததால் ஏழுமலை கொலை செய்யப்பட்டார். மேலும் குற்றவாளிகள் பிடிபடவில்லை. இதற்கு என்ன காரணம்? என்று விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் வருமாறு :-
>
> ராயபுரத்தில் உள்ள ஒரு மதுக்கடையில் குடிப்பதற்கான பாரை ஒருவர் அனுமதியின்றி நடத்தி வந்தார். இதனால் மதுக்கடைக்கு வாடகைக்கு விட்டவர் பார் நடத்தக் கூடாது என்று கூறினார். ராயபுரம் போலீசிலும் புகார் செய்தார். ஆனால் போலீசார் சட்டசபை நிகழ்ச்சியையொட்டி பாதுகாப்புக்காக கோட்டைக்கு சென்றுவிட்டனர். எனவே மதுக்கடையை வாடகைக்கு விட்டவர் போலீஸ் கமிஷனரிடம் முறையிட்டார். உடனே கமிஷனர் ராஜகோபாலன், ராயபுரம் உதவி கமிஷனர் மாரிமுத்து, இன்ஸ்பெக்டர் காதர் மொய்தீன் ஆகியோரை கடந்த 18-ந் தேதி போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றினார் இதனால் போலீஸ் வட்டாரமே அதிர்ச்சியில் இருந்தது. அன்றிரவுதான் ஏழுமலை கொலை செய்யப்பட்டார்.
>
> ஏழுமலை கொலை செய்யப்பட்ட தகவல் கிடைத்த ஒரு மணி நேரம் கழித்துதான் மந்திரி மதுசூதனன் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் இருந்த 10 போலீசார் சம்பவ இடத்துக்கு வந்துள்ளனர்.

சம்பவம் நடந்ததும் ராயபுரம் போலீசில் புகார் செய்யப்பட்டவுடன் அதிகாரிகள் இருந்து இருந்தால் அந்த பகுதியை ரவுண்டடப் செய்தால் ஏழுமலையை கொலை செய்தவர்கள் எல்லோரும் உடனடியாக பிடிபட்டு இருப்பார்கள். ஆனால் எந்த அதிகாரியும் இல்லாததால் குற்றவாளிகள் தப்பினர்."

- என்கிறது 23.4.94 தினகரன்! இப்படிப்பட்ட பின்னணிகள் இருக்கக்கூடும் என்று கூடக் கருதாமல் கழகத்தினரைப்பற்றி விசுவரூபச் செய்திகளை வெளியிட எப்படித்தான் மனம் வந்ததோ அந்த ஏட்டிற்கு! கொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளை; ஆம், உண்மையான குற்றவாளிகள், கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படவேண்டுமென்பதில்; ஏழுமலையை இழந்து தவிக்கும் குடும்பத்தினரைப் போலவே அக்கறை நமக்கும் உண்டு. நடுநிலையில் உள்ள அனைவரும் இதில் இருவேறு கருத்துக்கள் கொண்டிட இயலாது!

ஆனால் அதே நேரத்தில்; ஒரு குற்றவாளி தண்டிக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை; ஒரு நிரபராதி வீணாகத் தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்ற நீதித்துறை சார்ந்த பொன் மொழியையும் மறந்து விட முடியாது.

ஜெயலலிதா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தராசு அலுவலகத்தில் பட்டப்பகலில் நுழைந்து இரண்டு ஊழியர்களை ரத்தத் தடாகத்தில் மிதக்கவிட்டுக் கொலை செய்தார்கள் கொடியவர்கள்! அந்த பயங்கர நிகழ்ச்சிக்குத் தூண்டுதல் யார் என்பது இந்தப் பட்டணம் முழுதும் பரவலாகத் தெரியும். ஆனாலும், பழி வாங்கும் நோக்கத்துடன் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் உள்துறை செயலாளராக கழக ஆட்சிக் காலத்தில் இருந்தவருமான திரு. நாகராஜன் அவர்களைக் கைது செய்து அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டது. அரசின் தலையீடு நடை பெறுவதற்கு முன்பு போலீசார் முனைந்து முயன்று வடசென்னையைச் சேர்ந்த இரண்டொருவரை அந்தக் கொலையை ஒட்டிக் கைது செய்திருந்தனர்.

அவர்கள் அ.தி.மு.க. அமைச்சர்களின் கையாட்கள் என்று அப்போதே ஏடுகள் செய்தி வெளியிட்டன. தேர்தல் நேரத்தில் அந்த நபர்கள், தங்களின் வேட்பாளர்களுக்காக செய்த விளம்பரங்களில் ஜெயலலிதா கட் அவுட்களைப் பெரிது பெரிதாக வைத்து அந்தக்

கட்அவுட்களில் தங்கள் பெயரையும் பொறித்திருந்ததை; அந்த வழக்கையொட்டி முரசொலி அந்த ஆதாரப் புகைப்படங்களுடன் பிரசுரித்திருந்தது. பின்னர் அந்த ஆளுங்கட்சி நபர்கள் வெளியூரில் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்தனர். அவர்கள் யாரும் நீதிமன்ற நிபந்தனையை மதித்ததாகத் தெரியவில்லை. நீதிமன்ற ஆணையை மீறுவதுதானே இப்போது அரசின் அங்கீகாரம் பெற்ற வீரத்தனம் எனவே அமைச்சர்கள் காரிலேயே அவர்கள் சென்னையில் வலம் வந்து கொண்டிருந்தனர். இந்த இரட்டைக் கொலை வழக்கு என்ன ஆயிற்று? அதன் கதி என்ன? கழக ஆட்சியில் பணியாற்றியதற்காக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் பழிவாங்கி அவமானப்படுத்த முயற்சித்த திருப்தியுடன் வழக்கு கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

அதைப் போலவே மற்றொரு ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா; அவர், கோடிக்கணக்கான ரூபாய் ஊழலுக்கு துணையாக; ஆட்சியாளர் இஷ்டத்துக்கு ஆடவில்லை என்பதற்காக - திராவக வீச்சுக்கு ஆளானார்! அந்த நிகழ்விலும் உண்மைகள் மறைக்கப்பட்டு; வழக்கு எனும் நாடகம் எப்படி முடிந்தது என்று தெரியாமலே முடக்கப்பட்டுப் போயிற்று!

நமது போலீஸ், திறமை மிக்கதுதான்! எல்லாப் போலீசாரும் பாண்டியம்மாள் வழக்குப் போலீசாராகவோ; அல்லது அண்ணாமலை நகர் - முத்தாண்டி குப்பம் போலீசாராகவோ இருந்து விடமாட்டார்கள்.

எனவே நேர்வழி சென்று கடமையாற்ற விரும்புகிற காவல் துறையினரை; சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

காவல்துறையைப் பற்றி பேரவையில் தம்பி பரிதிஇளம்வழுதி சொன்னவுடனேதான் முதலமைச்சர் அவர்கள்; இளம்வழுதி மீது மட்டுமல்லாமல் என்மீதும், கழக ஆட்சியின் மீதும் சீறிப் பாய்ந்து எரிச்சலைக் கக்கியிருக்கிறார்.

சின்னபுத்தி, அற்பபுத்தி

என்றெல்லாம் என்னை மறைமுகமாக அவர் தாக்கிப் பேசியது குறித்து நான் வருத்தப்படவில்லை. ராஜீவ் கொலையில் கோபாலசாமிக்கு சம்பந்தம் உண்டா என்று சமீபத்தில் கூட நிருபர்கள் பேட்டியில் கேட்டபோது, அவருக்கு சம்பந்தம் இல்லை என்று நான் திட்டவட்டமாகக் கூறினேன். ஆனால், நான்

வளர்த்த கடாக்களே என்மீது பாய்ந்து, என்னைக் கொலைகாரன் என்று கூறும்போது; சின்னபுத்தி, அற்பபுத்தி என்று பேசும் ஜெயலலிதாவுக்கும் எனக்கு என்ன அரசியல் நெருக்கம்!

நான் எழுதிய படத்தில் அவர் நடித்தவர் என்ற கலையுலக பழக்கத்தைத் தவிர; அல்லது அவரது நூறாவது படவிழாவுக்கு தலைமையேற்க என்னை அழைத்திருந்தாரே, அந்த திரைப்படத் துறை உறவைத் தவிர; வேறென்ன இருக்கிறது. அதனால், அவரது அந்த சின்னபுத்தி, அற்பபுத்தி போன்ற வார்த்தைப் பிரயோகங்களுக்காக நான் புண்படவில்லை. புண்படவும் மாட்டேன். இனியும் யாரும் என்னைப் புண்படுத்த என் இதயத்தில் இம்மி இடமும் இல்லை.

இருப்பினும்; முதலமைச்சர் அவர்கள் அண்ணா அறிவாலயம் பற்றியும், அதனைத் தகர்த்துத் தரை மட்டமாக்கியிருப்போம் என்றும் பேரவையில் பேசியுள்ளதை தினமணியும், தீக்கதிரும் கண்டித்திருப்பதைப் படித்தாலே, எத்தகைய பண்பாடு ? மிக்க ஆட்சியின் கீழே தமிழகம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

சின்னபுத்தியோடு நாங்கள் நடந்து கொள்ள விரும்பி இருந்தால் இன்றைக்கு அண்ணா அறிவாலயமே நிற்காது, இருக்காது. கோபாலசாமி தலைமையில் நடைபெற்ற பேரணியைப் பயன்படுத்தி, அண்ணா அறிவாலயத்தையே தவிடு பொடியாக்கி இருக்கலாம். ஆனால், அப்படியெல்லாம் நாங்கள் செய்யவில்லை. அவர்களது அறிவாலயத்தைக் காப்பாற்றித் தந்திருக்கிறோம். அதற்காக அவர்கள் நன்றியோடு இருக்க வேண்டும். இதுதான் முதல்வர் பேச்சின் கருத்து. இதே பாணியில் இன்னும் கடுமையான வார்த்தைகளுடன் வியாழனன்றும் அறிவாலயம் பற்றி முதல்வர் பேசியுள்ளார்.

முந்தைய தி.மு.க. அரசு நடந்து கொண்ட விதத்திற்கு அ.தி.மு.க. தலைவர் என்ற வகையில் கண்டனம் தெரிவிக்க முதல்வர் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருக்கிறார். இது முறை அல்ல.

அறிவாலயத்தைக் காப்பாற்றித் தரவேண்டியது தமிழக அரசின் கடமை, தமிழகப் போலீசின் கடமை.

அக்கடமையை சிறப்பாக நிறைவேற்றினோம் என்று பெருமை அடித்துக் கொள்ளலாம். அதற்காக தி.மு.க. நன்றி உணர்வு காட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பது ஜனநாயக உணர்வை வெளிப்படுத்தவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக அறிவாலயத்தை தவிடு பொடியாக்கி இருக்கலாம். ஆனால் செய்யவில்லை என்று முதல்வர் கூறியிருக்கிறார். இத்தகைய சிந்தனையே முதல்வர் மனதில் தோன்றியிருக்கக்கூடாது. அவர் மனதில் தோன்றியதைப் பேசாமலாவது தவிர்த்திருக்கலாம். இத்தகைய பேச்சு தன்னடக்கத்துக்கு விரோதமானது. அரசியல் கண்ணியத்துக்கு முரண்பட்டது.

இது 22.4.94 தினமணி தலையங்கத்தின் ஒரு பகுதியாகும்.

இதோ மார்க்சிஸ் கட்சியின் நாளேடு என்ன எழுதியிருக்கிறது என்பதையும் மக்கள் சிந்திக்கத் தவற மாட்டார்கள்.

தமிழகத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு அமைந்த பிறகு பல சம்பவங்களின்போது எதிர்க்கட்சிகள் மற்றவர்களை குறை கூறினால் அவர்களே இப்படிப்பட்ட சம்பவங்களை நடத்திவிட்டு ஆளுகின்றவர்கள் மீது பழிபோடுகிறார்கள் என்று சொல்வார்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட போது சி.பி.எம்., தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் அலுவலகங்கள், கொடி கம்பங்கள், விளம்பர தட்டி, பேனர்கள் ஆகியவற்றை அ.தி.மு.க. காங்கிரஸ்காரர்கள் அடித்து நொறுக்கினார்கள். இது பற்றி எதிர்க்கட்சிகள் பேசியபோது அவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை செய்து கொண்டு தம்மீது பழிபோடுவதாக கூறினார்.

மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்திற்கும், ஜெயலலிதாவிற்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டபோது அவருக்கு கறுப்புக் கொடி காட்டுமாறு தமது கட்சியினருக்கு ஜெயலலிதா உத்தரவிட்டார். திருச்சி விமான நிலையத்தில் சிதம்பரத்திற்கு கறுப்புக் கொடி காட்டப்பட்டு அவரது காரும் அடித்து

நொறுக்கப்பட்டது. பிறகு நாம் அப்படி கூறவே இல்லையென்றும் காங்கிரஸ்காரர்களே சிதம்பரம் காரை அடித்துவிட்டு தம் மீது பழிபோவடுதாகவும் கூறினார்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக சட்டப்பேரவையில் வியாழனன்று ஒரு கருத்தை ஜெயலலிதா வெளியிட்டார். சென்னையில் கோபால்சாமி அணியினர் பேரணி ஒன்றை நடத்தினார்கள். நாங்கள் மட்டும் அனுமதித்திருந்தால் அவர்கள் அண்ணா அறிவாலயத்தையே தவிடு பொடியாக்கி இருப்பார்கள். தி.மு.க.வை போல எங்களுக்கு சின்னபுத்தி இல்லை என்றும் பெருமைபட்டுக் கொண்டார்.

அதற்கும் மேலே போய் கோபால்சாமி அணியினர்தான் அடித்து நொறுக்க வேண்டும் என்று அவசியல்லை. நாங்களே கரை போட்ட வேட்டிக்காரர்களை அனுப்பி அறிவாலயத்தை அடித்து நொறுக்கிவிட்டு பழியை கோபால்சாமி அணி மீது போட்டிருக்க முடியும். ஆனால் அப்படி நாங்கள் செய்யாமல் அறிவாலயத்தை காப்பாற்றி கொடுத்ததற்கு அவர்கள் நன்றி சொல்ல வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இப்படி ஆவேச அரசியல் நடத்துவதும் இப்படி மோதல்களை தூண்டி விட்டு அதற்கு வேறு ஒருவர் மீது பழி போட்டுவிட முடியும் என்று முதலமைச்சரே ஒரு கட்சியின் பொதுச் செயலாளரே பேசுவது அவருடைய குணாம்சத்தை மட்டும் பிரதிபலிப்பது ஆகாது. அந்த கட்சியின் குணாம்சத்தையும் பிரதிபலிப்பதாகும்.

இது 23.4.94 மார்க்சிஸ்ட் கட்சியின் தீக்கதிர் இதழில் மயிலை பாலு அவர்கள் எழுதியுள்ள முதல் பக்கக் கட்டுரை!

இந்த இரண்டு ஏடுகளின் கருத்துக்களை இன்னும் எத்தனை ஏடுகள் எதிரொலிக்கும் என்று நானறியேன்!

அ.தி.மு.க. இரு அணியாக மோதிக் கொண்டபோது சென்னைக்கட்சி அலுவலகத்தில் தகராறு ஏற்பட்டாலும்; அது தவிர்க்கப்பட்டு தொடர்ந்து அந்த நிலை ஏற்படாமல் கோவையில் இருந்த அ.தி.மு.க. கட்சி மாளிகையை - அதற்கான சாவியைப்

பெற்று, அந்த சாவியை ஜெயலலிதா அணியினரிடம் உடனே தந்து விடுமாறு கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தொலைபேசி மூலம் நானே ஆணை பிறப்பித்தேன் என்ற செய்தியை; தங்கள் வசதிக்காக இன்றைய ஆளுங்கட்சியினர் மறைத்துவிடக் கூடாது!

இப்போதும் மயிலாடுதுறையில், வேலூரில் கழக அலுவலகங்கள் இந்த அரசின் அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டு, வழக்கு நடைபெற்ற பிறகுதான் கழகத்தின் கைக்கு வந்துள்ளது என்பதை நினைவூட்டுவது என் கடமை! வேலூரில் - துரோக அணியினரை ஊர்வலம் நடத்த அனுமதித்து அதன் பெயரால் - கழகக் கட்டிடத்திற்குள் நுழைந்து மாவட்டச் செயலாளர் முகமது சகி எம்.பி. உட்பட நூறு பேரை போலீஸ் அதிகாரிகள் அத்துமீறிக் கைது செய்ததை யாரேனும் மறந்து விடமுடியுமா?

அதற்காக சில அதிகாரிகள் செய்த காரியத்துக்காக, சின்னபுத்தி அற்பபுத்தி என்றெல்லாம் நான் நாகரிகமின்றி நாவசைத்து விட மாட்டேன்!

உடன்பிறப்பே, இறுதியாக இன்றைய கடிதத்தை நிறைவு செய்யும்போது - அண்ணா அறிவாலயம் குறித்து முதல்வர் பேரவையில் ஆற்றிய உரை அரசியல் கண்ணியத்துக்கு முரண்பட்டது என்று குறிப்பிட்டுள்ள தினமணி தலையங்கத்துக்கும் - தீக்கதிர் கட்டுரைக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

24-04-1994

2130. கல்லால் வடித்துக் காலமெல்லாம் காத்திடும் கர்ம வீரன் வரலாறு!

உடன்பிறப்பே,

உனக்கு நினைவிருக்குமென்று நம்புகிறேன்; 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11-ஆம் நாள் திருச்சியில் நடைபெற்ற நமது கழகத்தின் மாநில மாநாட்டில்.... அடடா; அந்தக் காலை நேரத்தில் மகிழ்ச்சி பொங்கிட, லட்சக்கணக்கான மக்களிடையே பின்வரும் அறிவிப்பைச் செய்தேன்.

தென்னாப்பிரிக்காவில் கறுப்பு இன மக்களின் விடுதலைக்காக போராடி 30 ஆண்டு கால சிறைத்தண்டனை பெற்று, 27 ஆண்டுகள் சிறையில் அடைபட்டு கிடந்து தனது 71-வது வயதில் இன்றைய தினம் விடுதலை செய்யப்படுகின்ற நெல்சன் மண்டேலாவை வாழ்த்துவதற்காகவும் இந்த விடுதலைக்காக உலகம் முழுவதுமுள்ள இந்தியா உள்ளிட்ட ஜனநாயக நாடுகள் எழுப்பிய குரலின் வெற்றிக்காகவும் இந்த மாநாடு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் அனைவரும் இரண்டு நிமிடம் எழுந்து நின்று கையொலி செய்ய வேண்டுகிறேன்.

அதனையேற்று மாநாட்டுப் பந்தலில் மட்டுமல்ல; மேடையிலும் அனைவரும் எழுந்து நின்று கடல் அலையெனக் கையொலித்த காட்சி இன்னமும் என் மனக்கண் முன்னால் மறையாமல் இருக்கிறது. இன்று செய்திகள் பார்க்கிறோம்; தென் ஆப்பிரிக்காவின் தலைநகரான ஜோகன்ஸ் பார்க்கில் 350 ஆண்டுகளாகப் பறந்து கொண்டிருந்த வெள்ளை இன ஆதிக்கத்தாரின் கொடி இறக்கப்பட்டு; புதிய கொடி ஏற்றப்பட்டிருக்கிறது. வெள்ளையர் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு; கறுப்பு இன மக்களுக்குள்ளேயே மூட்டிவிடப்பட்ட கலக உணர்வுகளும் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, பெரும்பாலான கறுப்பு இன மக்களின் அரசு ஒன்றைத்

தேர்வு செய்வதற்கான பொதுத் தேர்தலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தேர்தலில் சுமார் 12 லட்சம் பேர் இந்திய வம்சா வழியினரும் தென்னாப்பிரிக்கா கறுப்பு இன மக்களுடன் சேர்ந்து வாக்களிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இனவெறி மோதுதல்களைத் தவிர்த்திடவும் - கறுப்பு இன மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தரவும் தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய போராட்டமும் - அந்தப் போரில் தமிழகத்து வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மாளும் ஈடுபட்டுத் தியாகத் திருவிளக்கான வரலாறும் நமக்கும் அந்த நாட்டு மக்களுக்குமுள்ள பாச உணர்வை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகளாகும்.

இன்று உரிமை பெற்றுள்ள அந்த நாட்டு மக்களிடையே இனி எழக்கூடிய எத்தனையோ பிரச்சினைகளுக்கு; புதிதாகப் பொறுப்பேற்க இருப்பவர்கள் சரியான தீர்வு காண வேண்டிய கடமையுடையவர்களாவார்கள்!

எனினும்; இன்று விடிவெள்ளிபோல் முளைத்துள்ள பெரும்பான்மை இனமக்களின் ஆட்சிக்கு; அன்று வித்திட்டு, அந்தப்போரில் 27 ஆண்டுக்காலம் சிறையில் வாடி நான்கு ஆண்டுகட்கு முன்னர் விடுதலை பெற்றுள்ள நாயகன் நெல்சன் மண்டேலாவின் தியாக சரித்திரத்தை; அந்தக் கர்மவீரன் வரலாற்றை தென்னாப்பிரிக்கா தன்னுடைய மண்ணில்; கல்லால் வடித்து வைத்துக் காலமெல்லாம் காத்திடும் என்பதை யாரே மறுத்திட முனைவர்!

இதோ; போராட்டத்தையே தனது வாழ்க்கையாக அமைத்துக்கொண்ட மண்டேலாவின் வரலாற்று மைல்கற்களை சிறிது மேலோட்டமாகப் பார்ப்போமா?

1918 - ஜூலை 18-ல் மண்டேலா பிறந்தார்.

1938 - பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக வெளியேற்றப்பட்டார்.

1941-ல் தபால் மூலமாக தன்னுடைய பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்துவிட்டு சட்டம் படித்தார்.

1944 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் இளைஞர் பிரிவை தோற்றுவித்தார்.

1948 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் இளைஞர் பிரிவின் செயலாளராக பதவி வகித்தார்.

1950 - இளைஞர் பிரிவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1952 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரசில் தொண்டர் படை தலைவராக நியமிக்கப்பட்டார்.

1952 - ஜூன் 26-ல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தொண்டர் படை பிரிவு தொடங்கப்பட்டது. மண்டேலா தலைமையில் ஊரடங்கு உத்திரவு மீறப்பட்டது.

1952 - டிசம்பரில், மண்டேலா ஜோகன்ஸ்பர்க் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழிலை தொடங்கினார். இந்த தொழிலை தொடங்கிய முதல் கறுப்பர் இவர்தான்.

1953 - செப்டம்பரில் மண்டேலாவுக்கு தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசிலிருந்து ராஜினாமா செய்திட வற்புறுத்தியது அரசு.

1956 - டிசம்பர் 6-ல், மண்டேலா தலைமையில் 156 பேர் கைது செய்யப்பட்டனர்.

1960 - மார்ச் 21-ல், போராட்டத்தில் ஈடுபட்ட 69 கறுப்பர்கள் போலீசாரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வன்முறையில் குதித்தது.

1961 - மார்ச் 29-ல், மண்டேலா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் நீதிமன்றத்தில் தோல்வியடைந்தது. இதைத் தொடர்ந்து புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் ராணுவ பிரிவில் 17 மாதங்கள் தலைவராக பணியாற்றினார்.

1961 - மே மாதம், தேசிய அளவில் வீட்டிலேயே இருந்து கொண்டு நடத்தப்பட்ட உள்ளிருப்பு போராட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

1962 - ஜனவரியில் 11-ந் தேதி எத்தியோப்பியாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட மாநாட்டில் திடீரென்று தோன்றினார். அல்ஜீரியாவில் கொரில்லா போர் முறை பயிற்சி பெற்றார். லண்டன் மாநகரில் இடது சாரி சிந்தனையாளர்களையும் சந்தித்தார்.

1962 - ஆகஸ்டு 5-ல், தென்னாப்பிரிக்கா திரும்பியதும் சட்ட விரோதமாக வெளிநாடு சென்றதற்காக கைது செய்யப்பட்டார்.

1962 - நவம்பரில், நீதிமன்றத்தால் 5 ஆண்டு காலம் தண்டனை விதிக்கப்பட்டு சிறை சென்றார்.

1963 - ஜூலை 11-ல், மண்டேலா சிறையில் இருந்தபோது ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் அலுவலகம் சோதனையிடப்பட்டு பல தஸ்தாவேஜுகளை போலீசார் கைப்பற்றினர்.

1963 - அக்டோபர் 20ல், மண்டேலா மற்றும் 8 பேர் மீது சதித்திட்ட வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

1964 - ஏப்ரல் 20-ல் ஜனநாயக தத்துவத்தை காப்பாற்றிட உயிர்விடவும் தயார் என்ற ஒப்பற்ற அறிக்கையை மண்டேலா வெளியிட்டார்.

1964 - ஜூன் 12-ல், 9 குற்றவாளிகளில் மண்டேலா உள்பட 8 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

1977 - மே மாதம் 16-ல், மண்டேலாவின் மனைவி விண்ணி மண்டேலா ஆப்பிரிக்க இனவெறி அரசை எதிர்த்து போராடினார்.

1980 - ஜூன் 13-ல், மண்டேலா விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற முழக்கம் உலக அளவில் எழுந்தது.

1982 - ஏப்ரல், மண்டேலா ராப்பன் தீவு சிறையிலிருந்து போல்ஸ் மூர் சிறைக்கு மாற்றப்பட்டார்.

1984 - மே 12-ல், மண்டேலாவை சந்தித்திட அவருடைய மனைவி விண்ணி மண்டேலாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

1985 - ஜனவரி 31-ல், மண்டேலாவை விடுதலை செய்திட நிபந்தனை விதிக்கப்பட்டது.

1988 - ஜூலை 18-ல், மண்டேலாவின் 70வது பிறந்த நாளை கொண்டாட தடை விதிக்கப்பட்டது.

1988 - ஆகஸ்ட் 12-ல், மண்டேலாவுக்கு காச நோய் காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

1988 - டிசம்பர் 6-ல், வெர்ஸ்டர் சிறைக்கு மீண்டும் அனுப்பப்பட்டார்.

1989 - மே 17-ல் சட்ட மேற்படிப்புப் பட்டத்தை சிறையில் இருந்தபடியே பெற்றுக் கொண்டார்.

27 ஆண்டு சிறைவாசத்துக்குப் பின் விடுதலையான அவர், நேரே கேப்டவுன் சிட்டி ஹால் எதிரே ஒரு பால்கனியில் இருந்து கொண்டு உரையாற்றினார்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த உரையைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். இவர்கள் மண்டேலாவைக் காண பல மணி நேரம் அங்கே காத்துக் கிடந்தது குறிப்பிடத்தக்கது. இனவெறி ஆட்சியுடன் தொடர்பு ஏதும் வைத்துக் கொள்ளாது அதை ஒதுக்கி வைக்குமாறு சர்வதேச நாடுகளை மண்டேலா கேட்டுக் கொண்டார்.

அதிபர் டி. கிளார்க் கண்ணியமானவர். மெஜாரிடி கறுப்பர் மக்களின் கோரிக்கையை வேறு எந்த அதிபரும் இந்த அளவுக்கு செவி சாய்த்ததில்லை என்று கூறினார். தென்னாப்பிரிக்க அரசுடன் நான் எந்தவித உடன்பாடும் செய்து கொள்ளவில்லை. முழுக்க முழுக்க நாட்டில் சகஜ சூழ்நிலை ஏற்படுவது பற்றி மட்டும்தான் அரசுடன் நான் பேசினேன். ஆப்பிரிக்க தேசிய காங்கிரசுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்று அரசிடம் வலியுறுத்தியுள்ளேன். இதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றே தோன்றுகிறது என்றார் அவர்.

பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக என்னை மட்டும் விடுவித்தால் போதாது. நெருக்கடி நிலை பிரகடனத்தை விலக்கிக் கொள்ளுதல், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல் போன்ற பல நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்று குறிப்பிட்டார்.

இன வாதத்தைக் கைவிட்டு விட்டு ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு ஒன்று தான் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கத் தகுதி படைத்தது, அரசு அதிகாரத்தில் வெள்ளையர் ஏகபோக அதிகாரம் செலுத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

சமூக, பொருளாதார கட்டமைப்பில் அடிப்படையிலேயே பல மாற்றங்களைச் செய்ய வேண்டும். புதிய தென்னாப்பிரிக்காவை உருவாக்கும் பணியில் கறுப்பர்களுடன், வெள்ளையர்களும் சேர வேண்டும் என்று சொன்னார்.

நாட்டின் சிறுபான்மையினராக உள்ள வெள்ளையர் மொத்த நிலத்தில் 87 சதவீதத்தை தங்களது கையில் வைத்துள்ளனர் என்று மண்டேலா சுட்டிக் காட்டினார்.

தென்னாப்பிரிக்காவைச் சுற்றியுள்ள நாடுகளும் நமக்கு ஆதரவாக இருக்கின்றன. பிற நாடுகளும் இனவெறி ஆட்சியைக் கண்டித்து பல தடைகளை விதித்து வந்திருக்கின்றன. மேலும் எங்களது போராட்டத்துககு ஆதரவு அளித்தும் வந்துள்ளன. இதற்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

சிறையில் சிங்கமாக உலவியபோதும் - வெளியே வந்து அந்தக் கிழச்சிங்கம் கர்ச்சனை செய்தபோதும் - இந்தக் கோரிக்கையெல்லாம் நிறைவேறுமா? குறிக்கோள் வெற்றிக்குன்றம் ஏறுமா? எனச் சந்தேகப்பட்டோர்க்கு; இதோ விடை கிடைத்து விட்டது!

ஆதிக்கபுரியாக இருந்த சேற்றுக் குட்டையில்; அன்றலர்ந்த செந்தாமரையாக ஜனநாயகம் மணம் பரப்பி நிற்கிறது - நம் மனம் மகிழ்கிறது - தகுதியும் திறமையும் அதிகார பலமும் இருந்தால்; அவற்றைத் திரட்டி உருட்டி அங்குசமாக்கி, யானையை அடக்கி ஆளலாம் என்பது போல தென்னாப்பிரிக்காவின் பெரும்பான்மை கறுப்பு இன மக்களை ஆட்டிப் படைத்த அங்குசம் தூக்கி எறிப்பட்டு விட்டது.

இப்படி உரிமை முழக்கம் வெற்றி பெறும் இடம் எந்தத் திக்கில் இருப்பினும்; அந்த இடத்துக்குரிய மக்களை வாழ்த்திப் பாராட்டுவது நமது இயல்பு! எனவே, வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

அன்புள்ள,

மு. க.

30-04-1994

2131. வாங்கிக்கொள்க; வாஞ்சைமிகு முத்தம்!

உடன்பிறப்பே,

என் நெஞ்சிலிருக்கும் நீயும், உன் நெஞ்சிலிருந்து நானும் சேர்ந்து; நம்மையெல்லாம் ஆளாக்கி நமது இனத்துக்கென தி.மு.கழகத்தைப் போர் வாளாக்கி நம் கரத்தில் பேரறிஞர் அண்ணா ஒப்படைத்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்தும்; இடையில் இதற்கோர் விபத்து வருமோ என மனம் வெதும்பியும் - ஆறு மாத காலமாக இருளில் மூழ்கியிருந்த நிலைமாறி, தெளிவுமிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி எனப் புரட்சிக் கவிஞர் எழுதியதற்கேற்ப, வானில் உயர்கின்றான் உதயசூரியன் வாழ்க நன்றே! என ஆடிப்பாடும் நாள் இந்நாள்!

கடந்த ஆறு திங்களாக நீ சென்னை வந்து என்னைக் காணும் பொழுதும், நான் வந்து உன்னைக் காணும் பொழுதும் ஊக்கமளிக்கத் தக்க உரைகளை நிகழ்த்துவாய் - உற்சாகமூட்டும் நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டுவாய் - உறுதி குலையாத உடன்பிறப்புகள் என் போன்றோர் நாற்பது லட்சத்துக்கு மேற்பட்டோர் இருக்கையிலே கவலை எதற்கு எனக் கண்களால் பேசுவாய் - ஆயினும் ஓர் ஏக்கம்; என் அன்பே, உன் அகத்தில் ஒளிந்திருப்பதை முகம் காட்டத் தவறவில்லை. அந்த ஏக்கத்தைப் போக்க முடியுமா? அண்ணன் சொன்னாரே ஆயிரங்காலத்துப் பயிர் இந்தக் கழகமென்று; அந்தப் பயிர் தழைக்க வேண்டிய இந்தக் கழனிக்கு வேலியாக இருக்க முடியுமா? வேறு எவரோ சிலர் வயலையே தூர்த்துவிட முனைவதைத் தடுத்திட இயலுமா?

உடன்பிறப்பே, இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நியாயமான விடை கிடைத்திராவிடில் - இன்று எனக்கு மலர்மாலை அணிவித்திடும் நீ; மலர் வளையம் வைத்திடும் அளவுக்கு நான் ஆகியிருப்பேன்! இப்படி எழுதியது கண்டு என்மீது

சீறிப் பாய்ந்துவிடாதே! என்மீது குற்றமல்ல உடன்பிறப்பே, இளம்பருவ முதல் - ஈரேழு பதினான்காம் வயது முதற்கொண்டு இரண்டறக் கலந்து ஊனாக, உயிராக, உயிர் மூச்சாக ஒன்றிவிட்ட இயக்கமல்லவா இது!

ஓர் அரசியல்வாதி இப்படி பேசக்கூடாது தான்! அறிவேன் நான்! வெறும் அரசியல்வாதியாக மட்டும் அன்று முதல் இன்று வரை நான் என் பொது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவில்லையே; என் தந்தை முத்துவேலர் - தாயார் அஞ்சுகம் என்றாலும்கூட; தந்தையாகப் பெரியாரையும், தாயாக அண்ணாவையும் அல்லவா பொதுவாழ்வில் வரித்துக்கொண்டு; உன் போன்ற உடன்பிறப்புக்களையெல்லாம் ஒரு தாயின் உதிரப்புனலில் உதித்தவர்களாகக் கருதி உம் தோள்மீது கைபோட்டு உழைத்துக்கொண்டிருக்கிறேன். எனவே இந்த இயக்கம் என் வாழ்நாளிலேயே, என் கண்முன்னாலேயே, என்னைத் தொழுது ஏத்தியோர் கைகளில் ஒடுங்கிய படைக்கருவியாலேயே சிதைக்கப்படுமென்றால்; பிறகேன் நான் இருக்க வேண்டும்! இதுபோல நான் உணர்ச்சிப் பிழம்பாக, உறக்கமின்றிக் கழித்த நாட்கள் எத்தனை எத்தனை இந்த ஆறு மாதங்களில்!

எதிர்த் தரப்பில் இருந்தோர், இருப்போர் ஏசினர், பேசினர், எடுத்தேன் கவிழ்த்தேன் எனத் தூற்றினர்! அடக்குமுறைகளைக்கூட ஏவினர்! அவர்கள் நம் கண்ணுக்குத் தெரிந்த காரணத்தால்; அவர்களை எதிர்த்து நிற்பது எனக்கும் எனதருமைப் பேராசிரியருக்கும் அவ்வளவு கஷ்டமாக இல்லை! இருக்காது! பலமான எதிரி என்பதில் பெருமையும்கூட!

ஆனால், ஆனால்... கழகமெனும் பச்சைக் கொடியில்.... பச்சை நிறமாக... கொடியாக ...இல்லை! இல்லை! கொடிபோல... நம் கண்களையே ஏமாற்றும் வண்ணம் ஊர்ந்து வந்த பகையை... உட்பகையை; வெட்டி எறிந்திட அல்ல - எட்டி தள்ளிவிடவேகூட எத்துணைத் தயக்கம் காட்ட வேண்டியிருந்தது!

உலகமெங்கும் பரவிக்கிடக்கும் தமிழரின் ஒரே வழிகாட்டியான அண்ணன் கலைஞர் அவர்களே, தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கப் போகிறேன் என அறிவித்ததை திரும்பப் பெற்றதை அறிந்து மன ஆறுதலும் அகமகிழ்வும் கொள்கிறேன்.

நீங்கள் இல்லாத கழகமும் தமிழகமும் இருண்ட கண்டமாகிவிடும், வறண்ட பாலைவனமாகி விடும். இது முகஸ்துதிக்காக எழுதுவது அல்ல உள்ளத்தின் ஆழத்திலிருந்து பீறிட்டு வரும் வடிகட்டிய தூய்மையான வரிகள் என்று வேதாரண்யத்திலிருந்து 1993 அக்டோபர் 10 ஆம் நாள் எழுதிய உடன்பிறப்பு, பிறகு பத்தே நாளில் என்னுடன் உடன்பாடில்லை என்று பிரிந்து போக அவரை ஊக்கப்படுத்திய சக்தி எதுவோ; ஏனோ அந்தக் கலகம்? ஏனோ அந்தச் சதி - எதற்காக அந்த முதுகில் குத்தும் வேலை! எனக்குப் புரியவே இல்லையே! தூக்கி எறிக இப்போதே! உனக்குத்துணையிருப்பேன் என்று தோளைக் குலுக்கிய தோழமையின் உருவைக் கூட அதன் உள்ளத்தைத் துளைத்துப் பிரிவுப் பள்ளத்தில் தள்ளியவர் எவரோ? ஏனோ?

ஏனிப்படி ஒரு பகை? எவருக்கும் எத்தீங்கும் விளைவிக்கவில்லையே! அவரா இப்படி? இவரா அப்படி? நம்பமுடியவில்லையே! ஏன், எதற்காக? எவர் திசை திருப்பினர், எப்படித் திசை திருப்பினர், என்ன சொல்லி அந்த நீங்காத அன்பையும் பாசத்தையும் நீக்கிச் சிதைத்தனர்? ஒன்றாகப் பணியாற்றியது மறந்துபோமோ! ஒன்றாகப் பயணம் செய்தது மறந்து போமோ! கடலின் அலை ஓயாததுபோல அல்லவா, மனதில் இந்த நினைவுகளும் ஓயாது தொடர்ந்தன!

நீர் அடித்து நீர் விலகுமா என்பார்களே; ஆனால் இயக்கத்தின் வேர் அறுக்கவே முற்பட்டனரே - எனப் புலம்பிய நெஞ்சுக்கு, புதிய தெம்பு! புதிய வலிவு! புதிய உற்சாகம்!

யாரால்? யாரால்?

எல்லாம் உன்னால்தான்! ஆம் என் கண்ணாம் உன்னால்தான்!

மாஸ்கோ செஞ்சதுக்கத்தில்கூட இப்படியொரு விழாக்கோலம் இருந்திருக்குமா என வியக்குமளவுக்கு சேலத்தில் என் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மே தின விழாவை நடத்திக் காட்டினார். தம்பி வீரப்பன் எம்.பி. சேலம் தெற்குப் பகுதியில் சாலையெலாம் மின்விளக்குச் சோலையாக்கி இராசீபுரத்தில் மாநாடு போலக் கூட்டம் நடத்தினார்.

பெரியார் சிலை திறப்பு, அண்ணா சிலை திறப்பு, இராவண காவியம் விழா என சேலத்தின் இரு பகுதி மாவட்டச் செயலாளர்களுடனும், டாக்டர் தமிழ்க்குடிமகனார், சுப்புலட்சுமி ஜெகதீசன், கே.பி. இராமலிங்கம், பெரியார் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கே.கே. பெரியசாமி, கரூர் மாவட்டச் செயலாளர் பரமத்தி சண்முகம், தர்மபுரி மாவட்டச் செயலாளர் முல்லைவேந்தன் ஆகியோருடனும் வழியெங்கும் விழிமலர்ந்து - தமிழ்ப்பெருங்குடி மக்களையும் கண்டு மகிழ்ந்தேன்; எனினும் அகழ்ந்தெடுக்க இயலாத சோகச் சுமையொன்று இதயத்தின் ஆழத்தில் அழுத்திக் கொண்டுதானிருந்தது.

அந்தச் சுமையுடன்தான்; சென்னை திரும்பினேன்; சேலம் மாவட்டங்களின் நிகழ்ச்சிகளை முடித்து விட்டு - நினைவை வேறுபக்கம் திருப்ப, மூன்றாம் தேதிக்கு முதல் தேதி என் தமிழ் ஆசானுக்கு எனக்குறிப்பிட்டு கவியரசு வைரமுத்து அனுப்பி வைத்த வில்லோடு வா நிலவே! நூலைப் படிக்கத் தொடங்கினேன். இடையிலேயே டெல்லிக்கு தம்பி முரசொலி மாறனுக்கு ஆர்க்காடு வீராசாமிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டவாறு இருந்தேன். டெல்லியிலிருந்து சென்னைக்குத் திரும்பியிருந்த தம்பி என்.வி.என். சோமுவுக்கும் அடிக்கடி தொலைபேசித் தொடர்பு கொண்டு விசாரித்தவாறு இருந்தேன். பிற்பகல் மூன்றரை மணி அளவில்கூட செய்தி கிடைக்கவில்லை. ஆவலைச் சற்று உறங்க வைத்துவிட்டு; அமைதிக்காக, வைரமுத்துவின் நூலைப் படிப்பதில் ஆழ்ந்தேன்; வருகிற செய்தி வருகிற போது வரட்டுமென்று!

அந்த நூலில்; ஒரு இடத்தில் - மேற்கொண்டு படிக்க முடியாதவாறு - சில வைர வரிகள்! அப்படியே - அந்த இடத்திலேயே நெஞ்சுக்கு நங்கூரம் போட்டு நின்று விட்டேன் - ஆம்; அவ்வளவு அழகான கவிதை வரிகள்!

“மேற்கே சென்று விழுகிற போதும்
சூரியன் முகம் காட்டுமே தவிர,
முதுகு காட்டுவதில்லை; வெற்றி நிச்சயம்!”

என்னே வியப்பு! அந்த வரிகளில் லயித்திருக்கும்போது தொலைபேசி மணி அடித்தது - நானே எடுத்தேன்! ஆம்; அன்று முழுதும் நானே தான் எடுத்தேன்! டெல்லியிலிருந்து முரசொலியும்

ஆர்க்காடும் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு நல்ல செய்தி சொன்னார்கள். என் முத்தம் பெற்றுக் கொள்ளுங்கள் என்றேன் - அவர்களுக்கு அது எதிர்பாராத முத்தம் - நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த முத்தம்; என் தாய் அஞ்சுகத்தின் உருவில் அண்ணாவும், என் தந்தை முத்துவேலர் உருவில் அய்யாவும் அளித்த முத்தம்!

அனைத்தையும் சேர்த்து; அன்பு உடன்பிறப்பே; இந்தா; வாங்கிக் கொள், என் வாஞ்சை மிகு முத்தம்!

அன்புள்ள,

மு. க.

05-05-1994

2132. மலர்கள், அரும்புகள், அந்தோ; மாணவிகள்!

உடன்பிறப்பே,

முல்லை மலர்களாய், மல்லிகை மொட்டுக்களாய் முப்பது பேரை விழுங்கி விட்டது பழவேற்காடு ஏரி! நாற்பது மலர்களுடன் நகர்ந்த அந்தப் படகு; நாற்பது அடி ஆழத் தண்ணீரில் அத்தனை மலர்களையும் கொட்டிக் கவிழ்த்து விட்டது. வாடாமல் மிஞ்சிய ஈரஞ்சு மலர்கள் போக - எஞ்சிய முப்பது மலர்களும் தென்றலில் ஆடிய மலர்களாய்க் காட்சி தந்து, திடுமெனத் தண்ணீரில் வாடிய மலர்களாய்; அய்யகோ - உயிரற்ற உடல்களாய் அமிழ்ந்து மிதந்த அந்த சோகத்தை என்னவென்று சொல்வது?

பத்திரமாக அழைத்துப் போய் ஏரியினை வலம் வந்து இயற்கைக் காட்சிகளைக் காட்டுகிறேன் என்றுதான் படகோட்டிகள் அழைத்துச் சென்றனர். பரந்து கிடக்கும் ஏரியின் அழகும், பறவைகளின் இனிய கீதமும் கண்ணுக்கும் காதுக்கும் இன்ப மூட்டுமெனக் கேள்வியுற்று ஆசை அலை மோதிட ஆனந்தப் பயணமென எண்ணிப் பெற்றோரிடம் விடை பெற்றுச் சென்ற இளந்தளிர்கள், அடுப்பிலிட்ட அல்லித் தண்டுகள் போல அவர்தம் அன்னையர் தந்தையர் முன்னே போடப்பட்டால் எந்தக் கல்லிதயமும் உடைந்து நொறுங்கிச் சிதறுமே!

பாதுகாப்பான பெரிய படகு அல்ல என்று தெரிந்திருந்தும் - அளவுக்கு மேல் பாரம் தாங்காது என்பதைக்கூடப் புரிந்து கொள்ளாமல்; எப்படித்தான் படகில் ஏற்றிக் கொள்ளச் சம்மதித்தனர்? சுற்றுலாவுக்கென அந்தச் சுடர்விளக்குகளை ஏந்திச் சென்ற ஆசிரியர்களுக்குக்கூட; அந்தப் படகுகளின் வலிமை எத்தகையது என்று எப்படித் தெரியாமல் போனது? எச்சரிக்கை எதிலும் தேவை எனப் போதிப்போர்; இதில் எச்சரிக்கையுடன் செயல்பட்டிருக்க வேண்டாமா?

பத்திரிகைகளில் செய்தியைப் படிக்கும் போதும் - மரணத்தின் மடியில் ஒரு நொடியில் விழுந்த அந்த மாணவிகளின் படங்களைப் பார்க்கும் போதும் - நெஞ்சு கனக்கிறது, விம்முகிறது, படபடக்கிறது!

எத்தனை எத்தனை எதிர்காலக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு அந்த இளஞ் சிட்டுக்கள், ஏரிக்கரையிலிருந்து படகேறினவோ! படகு, தமக்குப் பாடையாகுமென நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்களே; டாக்டர்களாக, கலெக்டர்களாக, வக்கீல்களாக, விஞ்ஞானிகளாக, இப்படி எத்தனை எத்தனை வருங்காலத் திட்டங்களை தமது வகுப்புத் தோழிகளிடமும் - வருந்திப் பெற்ற தாய்களிடமும் அந்தச் சின்னஞ்சிறு பறவைகள் விவாதித்து எவ்வளவு கனவு கண்டிருப்பார்களோ - எல்லாம் அந்த ஏரி நீரில் கரைந்து போய்விட்டதே.

விபத்துக்கள் பல நிகழ்ந்துள்ளன! இது புதிதல்ல! ஆனால் ஒரு கூடை நிறைய மலர்களும் அரும்புகளும் ஒரே சமயத்தில்... ஒரே ஒரு கணப்பொழுதில்... சாவுப் படுகுழியில் கொட்டப்படுவதென்றால்... எழுதவே கை நடுங்குகிறது! சோகத்தோடு சோகமாக கோபம் கொப்பளிக்கும் ஒரு சம்பவமும் நடந்ததாக ஏடுகளில் கண்டு திடுக்கிட்டேன்!

நீரில் மூழ்கியவர்களில் மயக்கமான நிலையில் உயிருடன் போராடிக் கொண்டிருந்த பத்து மாணவிகள் கரைக்குக் கொண்டு வரப்பட்டார்களாம். கரையின் அருகே இருந்த அரசாங்க மருத்துவமனைக்கு அந்த மாணவிகளைத் தூக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள். அங்கே டாக்டர்கள் யாரும் இல்லை. டாக்டர், காலை எட்டரை மணிக்கு வந்து பத்தரை மணிக்குப் போய்விட்டாராம். எனவே இரண்டொரு ஊழியர் மட்டுமே இருந்திருக்கின்றனர்.

பின்னர் அந்தப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அந்த மயக்கமுற்றிருந்த மாணவிகளைக் கொண்டு போயுள்ளனர். அந்த நேரத்தில் அவரும் இல்லை. மிகத் தாமதமாகத்தான் வந்திருக்கிறார்; யாரோ தீக்காயமுற்றவருக்கு சிகிச்சையளிக்கச் சென்றுவிட்டு!

அதற்குள்... அந்தோ அதற்குள்... ஏரியில் விழுந்து குடித்திருந்த தண்ணீரை மாணவிகளின் உடலுக்குள்ளிருந்து

வெளியே எடுக்காத நிலையில்; பத்து பேரில் எட்டுப் பேர் பிணமாயினர். தனியார் மருந்தகத்தின் டாக்டர் முயற்சியினால் இரு மாணவிகள் மட்டுமே உயிர் பிழைத்தனர்.

உடன்பிறப்பே, இந்தச் செய்தி அந்த விபத்தை விடக் கொடுமையாக இருக்கிறதல்லவா? பழவேற்காடு ஏரிக்கு சுற்றுலாப் பயணிகள் நிரம்ப வருகிறார்கள்! பத்திரமான படகுகள் இல்லை! பலவீமான படகுகள்; தகுந்த எச்சரிக்கை இல்லை!

விபத்துக்கு ஆட்பட்டோருக்கு சிகிச்சையளித்திட அரசு மருத்துவமனையிருந்தும்; டாக்டர்கள் இல்லை! என் செய்ய; இதனை எழுதுவதால் இழந்தோரை மீட்கப் போவதில்லை - இனியாவது இத்தகைய இழப்புகள்; அலட்சியத்தால் ஏற்படாமல் தடுத்திடப் பயன்படுமல்லவா?

அன்புள்ள,

மு. க.

07-05-1994

2133. அணிவகுப்போம்; அறப்போர் ஆர்ப்பாட்டத்திற்கு!

உடன்பிறப்பே,

கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்பதற்கு அண்ணா சொன்ன விளக்கம்; பிழைப்பு தேடி கடல் கடந்து செல்லும் தமிழர்கள் சிந்திய கண்ணீர் - அதனால் உப்பாக இருக்கிறது, என்பதாகும்! இந்த உருக்கமிகு வாசகத்தை நாற்பதாண்டுகளுக்கு முன்பு வெளிவந்த பராசக்தி படத்திலேயே நான் நினைவூட்டியிருக்கிறேன்.

சுவைப்பதற்கு உப்பாக உள்ள கடல்; பார்ப்பதற்கு நீலமாகத் தென்படும் நிறமும் மாறி மாறி சிவப்பாகவே மாறக் கூடிய நிலை உருவாகி வருகிறது. அதற்கும் தமிழக, புதுவை மாநிலங்களில் உள்ள மீனவர்கள்தான் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். சிங்களத் தீவின் மீது யாரும் படையெடுத்துச் சென்று அதன் காரணமாக சிந்தப்படுகிற இரத்தமல்ல!

பிழைப்புக்கு வழி தேடி, கடற்கரையோரங்களை இயற்கைத்தாயின் மடியாகக் கொண்டு - வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவர்கள், கட்டுமரங்களில், படகுகளில், கயிறு வலையுடன் சென்று பெருங்காற்றுக்கும் - பேரலைகளுக்கும் - சூறாவளி, புயல்களுக்கும், ஈடு கொடுத்து மீன் பிடித்துப் பசி போக்கிக் கொள்கிறார்களே - அவர்களின் உயிரும் இரத்தமும் இன்று மிக மலிவாகப் போய் விட்டன சிங்கள ராணுவத்தினரின் கொலை வெறிச் சேட்டைகளுக்கு முன்னால்!

அஞ்சிடும் நெஞ்சுடன், கஞ்சிக்கலயம் ஆளனின் கரத்தில் அளித்து, கொஞ்சிப் பேசி, கொட்டும் கண்ணீரைத் துடைத்தவாறு வழியனுப்பும் வஞ்சியரும், பிஞ்சுக்கரம் ஆட்டி விடைகொடுக்கும் பிள்ளைச் செல்வங்களும், இத்தனையும் கண்டு, பருவத்தால் முத்தனைய பல் இழந்த மூதாட்டியர், தமது முன்னோர் காட்டிய

தேவதைகளுக்குப் பிரார்த்தனை செய்து கட்டிளங்காளையரையும், அவருக்கு மூத்தோரையும் கடல் தொழிலுக்கு அனுப்புவது என்பது அன்றாடம் மீனவர் வீட்டுக்குச் சோதனை நாள்!

அலைகடல் மீது ஊர்ந்து சென்றோர், திரும்பி வரும் வரையில் அடி வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு, வீட்டிலிருப்போர் ஆழக் கடல் மீது விழியோட்டிக் கரையில் காத்திருப்பர்!

திரும்பி வருவதாக விடை பெற்றோர் சிலர் திருக்கை, சுறாக்களினால் தாக்குண்டதுண்டு - திமிங்கிலங்களுக்கு இரையானதுண்டு - ஏன்; புயலும் தனது பொல்லாத வாய் திறந்து விழுங்கியதுண்டு!

ஆனால்; இன்று நமது நெய்தல் நில மக்கள் அப்படியெல்லாம் விபத்துக்கு ஆளாகிவிடவில்லை - மனித நேயத்தை அறவே கை கழுவிவிட்ட, சிங்கள இராணுவத்துச் சிப்பாய்களன்றோ, தமிழ் மீனவர்களை பிணங்களாக்குகின்றார்கள்! ஏதோ, வருடத்திற்கொரு முறை தவறுதலாக, எதிர்பாராமல் நடந்து விடுகிற நிகழ்ச்சியாக இல்லாமல் - வாரந்தோறும் சிங்கள இராணுவ வெறியர்கள் கொண்டாடி மகிழும் நிகழ்ச்சியாகவன்றோ; இந்தக் கொடிய நிகழ்ச்சி தொடர்கதையாகியிருக்கிறது!

தமிழகப் புதுவை மீனவர்களைச் சுட்டு வீழ்த்த வேண்டியது - அவர்களது படகுகளைக் கவிழ்க்க வேண்டியது - கேட்டால்; எல்லை தாண்ட வந்தனர் என்று ஏதோ ஒரு சாக்குப் போக்குக் கூறி சமாளிக்க வேண்டியது - இதுவே அடிக்கடி தமிழகத்திற்கு தரப்படும் செய்திகளாகும்.

கச்சத்தீவை இலங்கைக்குத் தரும் ஒப்பந்தத்திற்கு இந்திய மத்திய அரசு உடன்பட்ட காலத்தில், அதனை தி.மு.கழகமும் தி.மு.கழக ஆட்சியும் தீவிரமாக எதிர்த்தன. அந்த எதிர்ப்பின் காரணமாகத்தான் 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில், கச்சத்தீவுப் பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமைக்கும், அந்தத் தீவில் நடைபெறும் விழாவுக்கு தமிழகத்திலிருந்து யாத்ரீகர்கள் செல்வதற்கும் வழிவகை காணப்பட்டிருந்தது.

ஆனால் கழக ஆட்சி கலைக்கப்பட்டு அதன் பிறகு 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியில் மத்திய அதிகாரி ஒருவர் அனுப்பிய கடிதத்தை வைத்துக் கொண்டு - அந்த உரிமைகள் விலக்கப்பட்டு விட்டன என்பதை சிங்கள அரசு

அறிவித்து, அவ்வாறு கடைப்பிடிக்கவும் தயங்காது செயல்படத் தொடங்கிவிட்டது.

மாநில அரசு, பலமுறை மத்திய அரசுக்கு இந்த நிலையை எடுத்துக்கூறியும் - பாராளுமன்ற மாநிலங்களவையில் உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தியும் - பயனற்றுப்போய் தமிழ்நாட்டு மீனவரும், புதுவை மீனவரும் தவிப்புக்கு ஆளாவது தடுக்கப்படுவதற்காக எந்த முயற்சியும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

அதிலும், அண்மைக் காலமாக இந்த அநியாயம் சர்வ சாதாரணமாக, இயல்பான நிகழ்ச்சிகளில் ஒன்றாகவே ஆகிவிட்டது!

கடலில் மிதக்கும் உயிரற்ற மீன்களாக மீனவ மக்களும்; கரையில் துடிக்கும் உயிர் மீன்களாக அவர்களின் குடும்பத்தினரும் - என்கின்ற காட்சியை எத்தனை நாளைக்கு சகித்துக் கொண்டிருக்க முடியும்?

மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்தத்தான் முடியும்! அறிவேன் நான்! அதனை மேலும் தீவிரமாக்க வேண்டுமென்று மாநில அரசுக்கு கவனமூட்டவும்; மெத்தனமாக இருக்கும் மத்திய அரசுக்குத் தார்க்கோல் போட்டு வேகமாகச் செயல்படச் செய்யவும்; கடல் நீரை நமது மீனவர் குருதியால் சிவப்பாக்கி மகிழும் சிங்கள ராணுவத்தின் நடவடிக்கைகளைக் கண்டிக்கவும் - மே 12 அன்று தமிழகத்திலும் புதுவை மாநிலத்திலும் கழகம் அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது.

கச்சத்தீவு ஒப்பந்தத்தில் 1976-ல் செய்யப்பட்ட தமிழர்க்கு விரோதமான காரியத்தை, சிங்கள அரசு உடனே கைவிட வேண்டுமென மத்திய அரசு ஓங்கிக் குரல் கொடுத்தாக வேண்டும்.

அதன் நிமித்தமே இந்த அறப்போர் ஆர்ப்பாட்டம் - மே 12-ந் தேதி!

மாநில அரசும், தன் கடமையை உணர்ந்து விரைந்து செயல்பட வேண்டும் - அதனை உணர்ந்திடவே மே 12 - இந்த ஆர்ப்பாட்டம்!

அறப்போர் ஆர்ப்பாட்டத்திற்கான கழக முன்னணியினர் பெயர்கள் - இடங்கள் - அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஆங்காங்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகப்

பட்டியலில் இல்லாத ஊர்களிலும்; வசதிக்கேற்ப அறப்போர் ஆர்ப்பாட்டங்கள் பரவலாக நடைபெற உரிய முயற்சிகளை மேற் கொள்வர்!

உடன்பிறப்பே, உன் போன்றோர் பல்லாயிரக்கணக்கில் தமிழக, புதுவை மீனவர்களின் உயிருக்கான உத்திரவாதத்திற்காக நடத்தப்படும் இந்த அறப்போரில் கலந்து கொள்ள வந்திடுக! என அழைக்கின்றேன்!

அன்புள்ள,

மு. க.

11-05-1994

2134. எத்தனை இடிகளைத்தான் தாங்குவதோ?

உடன்பிறப்பே,

மலையிலிருந்து உருட்டப்பட்டுக் கிடப்பவன் மீது, ஒரு பாறையையும் தூக்கிப் போட்டால் - வாள்தாக்கி வெட்டுண்ட உடலில், மேலும் ஒரு வேல் தாக்கினால் - இப்படியொரு நிலை நமது கழகத்திற்கு நேற்று 13ஆம் தேதியன்று!

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக முதிர்ந்து கனிந்த நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்த எனது இனிய நண்பரும், கழகத்தின் நன்னெறிக் காவலர்களில் ஒருவரும், அமைதியின் உருவம் என அனைவராலும் போற்றப்பட்டவருமான கழகத்தின் பொருளாளர் சாதிக்கைக் காலத்தின் கொடிய கரம் நம்மிடமிருந்து பிரித்துவிட்டது.

வேதனைகள் வெள்ளமாகப் பெருகியபோது அவர் விலகி ஒதுங்கிட முனைந்ததில்லை! சோதனைச் சூறாவளிகள் பலமுறை சுழன்றடித்தபோதும்; அவர் சுகம் காண்பதற்குப் பிறிதோர் இடம் தேடியதில்லை! அடக்குமுறைகள், சிறைவாசங்கள், அவதூறுக் கணைகள்; அம்புகளாக, அடுக்கடுக்காகப் பாய்ந்திட்ட போதும்; அவர் அலறித் தவித்ததில்லை; - ஆனந்த பவன்களின் அழைப்பை ஏறெடுத்தும் பார்த்ததில்லை! ஆட்சி கலைக்கப்பட்டு, பதவி பறிக்கப்பட்டபோதும்; ஆகாது இனி இந்த இடம்! என அடுத்த இடத்துக்கு மாறலாமா என நினைத்தும் பார்த்ததில்லை! இவையனைத்தையும்விட; கழகத் தலைமையின் முதுகில் குத்துவதற்காகப் பேரம் பேசிக்கொண்டு; தம்மையே விற்றுக்கொண்டவர்கள், தளுக்கு மொழி பேசி, நீலிக் கண்ணீர் வடித்து வருக என அழைத்தபோது அவர்கள் முகம் பார்க்கவும் விரும்பவில்லை! எங்கள் போலிப் பொதுக்குழுவில் உமது பொருளாளர் பதவியையும் பறிப்பதாகத் தீர்மானம் போடுவோம்!

எனவே வந்து விடுக! என ஆள் அனுப்பி மிரட்டிய போதும்; மருத்துவமனையில் இருந்துகொண்டே உரத்த குரலில், வீணர்களை விரட்டியடித்தாரே தவிர; உடுமலைப்பேட்டைக் கூட்டத்தில் சிங்கமெனக் கர்ச்சித்து துரோகிகளைத் தோலுரித்துக் காட்டினாரே தவிர; துளியளவும் அவர்கட்குத் துணை நிற்க; மறந்தும் எண்ணினாரில்லை!

ஆம்; அப்பழுக்கற்ற தங்கம்! கழகத்தில் ஜொலித்துக் கொண்டிருந்த வைரம்! கட்டுப்பாடு காப்பதில், கடமையாற்றுவதில், கண்ணியம் பேணுவதில்; கழகத் தலைமைக்கு உற்ற துணை!

கழகத் தொண்டர்களுக்குத் தோழர் - கட்சி வேறுபாடின்றி எல்லோராலும் போற்றப்பட்ட கண்ணியவான்!

உடன்பிறப்பே, இப்படியொரு மாணிக்க மனிதனின் இழப்பை எப்படித்தான் தாங்கிக் கொள்ள இயலும்!

ஈராண்டுக்கு முன் இருதயத்தில் அறுவை சிகிச்சை! நலம் பெற்று அவர் திரும்ப வேண்டுமென்று நாளெல்லாம் காத்திருந்தோம்! நலம் பெற்றார்! நாவினிக்க நெஞ்சினிக்க வாழ்த்தி மகிழ்ந்தோம்! சில திங்களுக்கு முன் உடல் நலிவுற்றார் - அவர் விருப்பத்திற்கேற்ப, இரண்டு மூன்று மருத்துவமனைகளில்; திறமைமிக்க மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது!

நலம் பெற்று விட்டார்; இன்னும் ஓரிரு நாட்களில் வீடு திரும்பிவிடலாம், என்று தம்பி டி.ஆர். பாலுவும், தம்பி உசேனும் என்னிடத்தில் மகிழ்ச்சியுடன் சொல்கிறார்கள்; வானொலி நிலையத்தின் முன் அறப்போர் ஆர்ப்பாட்டத்தை முடித்துவிட்டு; மருத்துவமனை சென்று அவரைக் காணலாமென இருந்தபோது - மருத்துவமனையிலிருந்து தலைமைக் கழகத்திற்கு மீண்டும் திடீரென நலிவுற்றார் எனச் செய்தி வந்தது - தம்பிகள் துரைமுருகனையும் என்.வி.என். சோமுவையும் அனுப்பி வைத்துவிட்டு; நானும் அவர்களைத் தொடர்ந்து செல்கிறேன் மருத்துவமனைக்கு!

நிலைமை கவலைக்கிடம் என்கிறார்கள் டாக்டர்கள்! அதற்குள் பேராசிரியர், வீராசாமி வந்து விடுகின்றனர் - அய்யோ; எத்தனையோ டாக்டர்கள் முயன்று பார்த்தும் முடியவில்லை!

எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தி படைத்ததாக இதயம் இருந்தாலும்; இருள் சூழ்ந்து விட்டது போன்ற ஒரு நிலை!

பட்டினப்பாக்கத்தில் எனதருமை சாதிக்கின் உடல் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அனைத்துக் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் எல்லாம் வந்து மரியாதை செலுத்தி விட்டுச் சென்றனர். எனக்கும் பேராசிரியருக்கும் கழகத்தின் முன்னணியினர்க்கும் ஆறுதல் கூறினர். சற்று மனதைத் தேற்றிக் கொண்டிருந்த நேரம்...

நான், பேராசிரியர், நாஞ்சிலார், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் திருநாவுக்கரசு, பேராயர் எஸ்றா. சற்குணம், ஜெகவீரபாண்டியன் ஆகியோர் சாதிக் வீட்டு வாயிற்புறம் அமர்ந்திருக்கிறோம்; தம்பி ஆர்.டி. சீதாபதி ஓடிவந்து அந்தச் செய்தியைச் சொல்கிறார். அவரைத் தொடர்ந்து ஓடுகிறோம்! என்னவென்று கூறிட; அந்தக் கொடுமையான காட்சியை!

சாதிக் மறைவு கேட்டு, துடித்துப்போன அவரது பள்ளி நண்பரும் - கழக மாவீரனும் - எனக்கும் பேராசிரியருக்கும் நெருங்கிய தோழரும் - கோவை மாவட்டத்தில் கழகம் வளர்த்த தியாக சீலனுமான கோவை பி.எஸ். ஜானகிராமன்; நண்பரின் பிரிவால் ஏற்பட்ட தாங்கமுடியாத சோகத்தால் நெஞ்சு வேதனையுற்று மயங்கிக் கிடந்த காட்சியது! அந்த இடத்திலேயே இருந்த டாக்டர்கள் உடனடி சிகிச்சை மேற்கொண்டனர்! பயனில்லை! மயங்கி விழுந்தபோதே அந்த ஓரிரு நிமிடங்களிலேயே; அந்த உத்தமத் தோழனின் உயிர் அடங்கிவிட்டது!

ஜானகிராமன்; கோவைக்கு நான் செல்லும் போதும், சென்னையிலோ வேறெங்கோ அவரைக் காணும் போதும்; இந்தக் கழகத்தில் எந்தவொரு பதவிக்காகவும், பொறுப்புக்காகவும் பிடிவாதம் பிடிக்காத ஒரு கண்மணியைக் காணுகின்ற களிப்பே எனக்கு மேலோங்கி நிற்கும். ஒரு பொறுப்பு தேவையென்று அவர் கேட்கும்போது அரும்பிடும் அதே மலர்ச்சிதான்; இப்போது இல்லை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று தலைமை கூறும்போதும்

அவர் முகத்தில் திகழ்ந்திடும் அற்புதத்தைக் கண்டு நான் வியந்து போயிருக்கிறேன். அவருக்கு இப்படியொரு திடீர் முடிவு!

எத்தனை அடிகள் இந்த இதயத்தைத் தாக்குகின்றன பார்த்தாயா!

அனைத்து இடிகளையும் என்னுடன் சேர்ந்து தாங்கிட நீ இருக்கிறாய்; உன் போன்ற உடன்பிறப்புக்கள் இருக்கிறார்கள் என்ற அந்த ஒரே தெம்பில்தான் நான் இருக்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

15-05-1994

2135. வெல்வோம்; வென்று காட்டுவோம்!

உடன்பிறப்பே,

தேர்தல் பிரச்சாரத்துக்குப் புறப்படுகிறேன் இன்று! புறப்படும் இடத்தில் உள்ள உன்னிடம் விடைபெற்றுக் கொள்வதும் - என்னை வரவேற்கும் இடத்தில் உள்ள உனக்கு என் பயணம் குறித்து அறிவிப்பதும்; இன்று நேற்றல்லவே - எத்தனையோ ஆண்டுகளாக வாடிக்கையாகி விட்ட ஒன்றுதானே!

இத்திங்கள் முதல் வாரம் சேலம் சென்று திரும்பினேன்; சென்னை வந்ததும் சிந்தை மகிழும் செய்தி டெல்லியிலிருந்து கிடைத்தது. அண்ணன் தந்த கொடி - அண்ணன் தந்த சின்னம் - அண்ணன் கண்ட கழகம் - தமிழர்கள் எண்ணம் போல் நமக்கே உரியவை எனும் பேருண்மை நிலை நாட்டப்பட்டுவிட்டது. உணர்ச்சி வயப்பட்டு உன் போன்ற உடன் பிறப்புகளுக்கு ஒரு கடிதம் எழுதப்போய்; என்னை ஆசை தீரத் திட்டித் தீர்த்துவிட்டீர்கள் நீயும் தொலை தூரத்தில் உள்ள உடன்பிறப்புகளும்; தொலைபேசி வாயிலாக! கடித வாயிலாக! ஏன்; தைரியமாக நேரிலும்கூட! அவ்வளவு உரிமை எடுத்துக்கொள்ள என் உடன்பிறப்புகளுக்கு உரிமை உண்டல்லவா? ஆம்; அண்ணனைத் தம்பி கோபிப்பதும்; தம்பியை அண்ணன் கடிந்து கொள்வதும் பாசத்தின் அடிப்படையில்தான் என்பதை இதயமார உணரும் வரையில் கழகத்தில் கசப்புக்கு இடமேது! கட்டுப்பாட்டுக்குத்தான் குலைவு ஏது?

கழகத்தின் பெயர், கழகத்தின் சின்னம், கழகத்தின் கொடி - இவை மூன்றும் நமது உயிரும், உடலும், அதன் அசைவும் போன்றதன்றோ! இவற்றை இழந்துவிட்ட நிலையில் எப்படியிருப்பது என்ற ஏக்கத்தைத்தான் பெருமூச்சாக்கி, இதயத்திலிருந்து கண்கள் வழி கசிந்த குருதி கொண்டு; நீ தாங்கிக் கொள்ள முடியாத ஒரு வாசகத்தை எழுதிவிட்டேன்!

அதற்காக; நீ என் மீது பாயவிட்டுள்ள பாசமிகு கணைகள்; ஏ, அப்பா! அந்தக் கணைகள் மட்டும் மலரம்புகளாக மாறாமல் இருந்திருந்தால்; என் உடல் முழுதும் சல்லடைக் கண்களாக ஆகிவிட்டிருக்கும். சரி; சரி! என் உடன்பிறப்புகளிடம் மன்னிப்புக் கேட்பதால் எனக்கு என்ன குறைவு வந்து விடப்போகிறது - தலைவனே என்னிடம் மன்னிப்புக்கேட்டான் என்று நீ நிமிர்ந்து நிற்பாய்!

அப்படி நிமிர்ந்து நிற்கும் உனக்கு, நான் தலைவன் என்று நானும் நெஞ்சு புடைத்து நிற்கப் போகிறேன்; அவ்வளவுதான்! உன் உயர்வுதானே என் உயர்வு! இல்லை; இல்லை - கழகத்திற்கு வரும் உயர்வும் தாழ்வும், இரண்டுமே சமமான நிலையில் நமது உயர்வு தாழ்வுகள்தானே!

இப்படியொரு சொந்தபந்தம் இருப்பதால்தான்; வெந்த புண்ணில் வேல் போல பல சம்பவங்கள் ஏற்படினும் - அவற்றுக்கிடையே, கழகத்தின் ஆக்கப் பணிகளிலும் அயராது ஈடுபட வேண்டுமென; அப்படி ஈடுபட்டுக் கொண்டிருக்கிற நான் உன்னைக் கேட்டுக் கொள்கிறேன்.

பெருந்துறை தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்கிறேன்; மயிலையை நீயும் நமது உடன்பிறப்புக்களும் பொறுப்புடன் கவனித்துக் கொள்வீர் என்ற நிறைந்த நம்பிக்கையுடன்! தோழமைக்கட்சிகளின் வெற்றிக்குத் தூய்மையான உணர்வுடன் பாடுபட வேண்டும் என்பதுதானே நாம் கற்ற அரசியல் இலக்கணம்!

பெருந்துறையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளர் நல்லப்பன் அவர்களின் வெற்றிக்கு உழைத்திடும் கழகத்தின் கண்மணிகள் அங்குள்ள கதிர் அரிவாள் சின்னம் நமது கதிரவன் சின்னம்தான் என்ற உணர்வுடன் ஓயாது உழைத்திட வேண்டும்.

பெருந்துறை தொகுதி மக்களின் பேரன்பைப் பெற்றவர் தோழன் நல்லப்பன் என்பதை நானறிவேன், வாக்காளப் பெருமக்கள், தங்களின் பிரதிநிதியாக அவரை சட்டப் பேரவைக்கு அனுப்பி வைக்க விரும்புகின்றனர் என்றும் கேள்வியுற்று மகிழ்கிறேன். எனவே; அந்த நல்ல எண்ணத்திற்குக் குறுக்கே எந்த ஊறும் விளையாமல் பாதுகாத்து அந்தப் பாட்டாளியின் நண்பர் நல்லப்பன் அவர்களுக்கு வெற்றியினைத் தேடித் தந்திட விரைந்து பணியாற்றிடுக!

மயிலைத் தொகுதியின் கழக வேட்பாளர் தம்பி இராமஜெயத்துக்கு மக்கள் தொண்டர் என்ற அடைமொழியே பல்லாண்டுகளாக உண்டு! எளியவர்! இனியவர்! தோழமைக் கட்சிகளின் ஆதரவும், நாளும் தொடர்ந்து கிடைத்து வருகிற செய்திகளைப் பார்க்கிறாய்! எனவே அவர் வெற்றி மேலும் உறுதியாகிறது!

உன் உழைப்பையும் தோழமைக்கட்சி செயல்வீரர்களின் உழைப்பையும் குறைத்து எடை போடுகிறவனல்ல நான்!

இருப்பினும் இரு தொகுதிகளிலும் நமது இரு வேட்பாளர்களும் நமது கழக வேட்பாளர்கள் என்ற எண்ணத்துடன் செயல்வீரர்கள் பாடுபட வேண்டும்.

கழக முன்னணியினர்; தாங்கள் தேர்தலில் நின்றால் எப்படி அல்லும் பகலும் அயராது பணியாற்றுவார்களோ - அப்படிப் பணியாற்ற வேண்டும்.

அதுவே கழகத்திற்காக நாம் என்ன செய்தோம் - என்பதற்கு கிடைக்கும், கடமையுணர்வை நினைவூட்டும் விடையாகும்.

ஆளுங்கட்சியினரையும், வேறு சில கட்சியினரையும் போல, பணத்தை ஆறாக ஓடவிட்டு படாடோபம் காட்டவோ, பளபளப்புடன் மினுக்கவோ; வழியுமில்லை - வசதியுமில்லை! அப்படியொரு நிலையையும் நாம் என்றுமே மேற் கொண்டதுமில்லை!

நமது வற்றாத செல்வம்; அண்ணன் தந்த அழியாத கொள்கைதான்! அந்தக் கொள்கையெனும் கொற்றக்குடை நிழலில்தான்; தகிக்கின்ற கொடும் எதிர்ப்பு வெப்பத்தைத் தாங்கி நிற்கின்றோம்!

இரு தொகுதிகளிலும் வெல்வோம் எனச் சொல்வோம்! வென்று காட்டுவோம்!

அன்புள்ள,

மு. க.

16-05-1994

2136. நாடாளும் ராணிக்கு நாவடக்கம் தேவை!

உடன்பிறப்பே,

பெருந்துறை, மயிலைத் தொகுதிகளின் தேர்தல் பிரச்சாரத்தில்; ஏற்கெனவே எழுதி, தட்டச்சு செய்து தரப்பட்ட பேச்சுக்கள் அடங்கிய தாள்களை மாற்றி மாற்றிப் படித்துக் கொண்டிருந்த முதலமைச்சர் ஜெயலலிதா, திடீரென பெருந்துறை தொகுதியில் ஒரு கூட்டத்தில் தானாகவே பேருரை? ஆற்றிடத் தொடங்கி; என்மீது சீறிப் பாய்ந்து சினத்தைப் பெய்து தாளிக்கும் கடுகாகப் பொரிந்து தள்ளியிருக்கிறார்.

முதலில் மாண்புமிகு முதல்வரின் கோபத்திற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, பிறகு அவர் என்மீது பொழிந்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கான பதிலைப் பார்ப்போம்.

அதிகாரிகளின் மிரட்டல், அமைச்சர்களின் பகீரத பிரயத்தனங்கள், பணமழையில் நனைய வாரீர் என்ற பச்சைச் சிரிப்பின் அழைப்புகள் - இத்தனை இருந்தும்கூட அவரது நிகழ்ச்சிகளுக்கு ஆள் சேர்வது என்பது; நமது நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடும்போது மிகமிகக் குறைவேயாகும்!

காஞ்சி கோயில் என்ற ஊரில் அவர் வருகைக்காகவும் மக்கள், காக்க வைக்கப்பட்டிருந்தனர். எனக்காகவும் மக்கள் காத்திருந்தனர். இரண்டுமே தனித்தனி இடங்களில். ஆனால் நமது நிகழ்ச்சிக்காகக் கூடியிருந்தோர் எண்ணிக்கை; முதல்வர் நிகழ்ச்சியைவிட மும்மடங்கு அதிகம்!

பெருந்துறையிலும் அவ்வாறே! மற்றும் நான் குன்னத்தூரில் நிகழ்ச்சியை நிறைவு செய்கிறேன்; அதுவரையில் குன்னத்தூர் நிகழ்ச்சிக்கு ஜெயலலிதா வரவில்லை. நமது கூட்டத்திலிருப்போரைக் கவர்ந்திழுக்க அருகிலே நடைபெற இருந்த அவர்களின் கூட்ட மேடையில் கண்கவரும் கலை

நிகழ்ச்சிகள் - என்னதான் தலைகீழாக நின்று பார்த்தும் நமது கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள், அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்க வில்லை. அம்மையார் அந்தக் கூட்டத்திற்கு வந்த போது, நமது கூட்டத்தில் பாதிதான் என்பதைக் கேள்வியுற்றிருக்கிறார். வந்ததே ஆத்திரம்!

வேனைப் பிடித்துக்கொண்டு, வானை நோக்கியவாறு தொங்கிக்கொண்டு வரும் கவரிமானையொத்த ? மந்திரிமார்களை நோக்கி நெருப்பு விழி காட்டினார் - வெறுப்பு மொழி பேசினார்.

அதே வேகத்தில் தட்டச்சுப் பேச்சுத் தாள்களைக் கீழே வீசினார் - அடுக்கினார் அவதூறுகளை ஒன்று இரண்டு, நூறு ஆயிரமாக நம்மீது!

கருணாநிதி வாக்காளர்களிடம் பல பொய்களை அள்ளி வீசிக்கொண்டு வருகிறார். அம்மையார் அருளிய வாசகங்களில் இதுவும் ஒன்று! உடன்பிறப்பே, அப்படியென்ன நான் பொய் சொல்லிவிட்டேன்?

தி.மு.க. ஆட்சியில் நியாய விலைக் கடைகளில் அரிசி விலை கிலோ இரண்டரை ரூபாய் - இப்போது ஜெயலலிதா ஆட்சியில் நாலே முக்கால் ரூபாய் என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் சொன்னேன் - அது பொய் என்கிறாரா ஜெயலலிதா! நான் சொன்னது பொய் என்றால், அவர் ஆட்சியில் எந்த நியாய விலைக் கடையில் கிலோ அரிசி இப்போது இரண்டரை ரூபாய்க்குக் கிடைத்திருக்கிறது என்பதைக் காட்டி, தன்னை உண்மையின் உருவம் என்று நிரூபித்துக்கொள்ள முன் வரட்டுமே! யார் வேண்டாமென்றது?

கருணாநிதி, தனக்கே உரித்தான கோயபல்ஸ் பாணியில், விவசாயிகளுக்கான இலவச மின்சார திட்டத்தை இந்த அரசு கைவிட்டு விடும் என்று பொய் பேசியிருக்கிறார். இதுவும் திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சி அம்மையார் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் கக்கியுள்ள கடுஞ்சொற்கள்தான்!

விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்காக, கழக ஆட்சி வழங்கிய இலவச மின்சாரத்தை; ஜெயலலிதா, ஆட்சிக்கு வந்தவுடன் கைவிட்டு விடவில்லையா? அப்படி அவர் கைவிட்டதைக் கண்டித்து மாநிலம் முழுதும் தி.மு.க. வண்டி வாகனப் போராட்டம் நடத்த வில்லையா? அதற்குப் பிறகு இந்த அரசு பணிந்து, இலவச

மின்சார திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வரவில்லையா? இந்த உண்மையை நாட்டுக்குச் சொன்னால்; புதிதாக ஏதோ ஒரு கதையைக் கட்டிக் கொண்டு, கருணாநிதியை கோயபல்ஸ் என்று வர்ணித்து விட்டால் முதல்வரின் பேச்சு அரிச்சந்திர வாக்காக ஆகிவிடுமா? அம்மையாருக்கு ஆயிரக் கணக்கான பட்டங்களை அள்ளி அள்ளி வழங்கியவர்கள்; இன்று அமைச்சர்களாக, வேனில் தொங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் - சமயம் கிடைத்தால் மீண்டும் அந்தப் பட்டங்களைப் புதுப்பித்து வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் சற்றே சினமடக்கிச் சிந்திப்பது அவரது ஆரோக்யத்திற்கே கூட நல்லது!

ஆட்சி தனக்கு மட்டும்தான். தன் குடும்பத்துக்கு மட்டும்தான், என அதிகாரம் அனைத்தையும் குடும்பச் சொத்தாக்கிக் கொண்டவர் கருணாநிதி. உடன்பிறப்பே, சிரிப்பு வருகிறதா உனக்கு? இப்படிச் சில பிரகிருதிகள் வீடு, வாசல், மாடு, மனை, மக்கள் அனைத்தையும் துறந்து அரசியலில் சந்நியாசிகளாக இருப்பதைப் போலப் பிதற்றிக் கொண்டு - சுயநலச் சுரங்கங்களாக நடமாடுகின்றனவே; தமது சொந்த வாழ்க்கை, சொந்தப் பிள்ளை குட்டிகள் வளமாக என்னென்ன செய்து கொண்டிருக்கின்றன அவைகள் என்பதையும் மறைத்துவிட்டு உலவுகின்றனவே; அதுகளைப் போல அம்மையாருமல்லவா பேசியிருக்கிறார்! அவர் அப்படிப் பேசியது அமெரிக்காவிலோ, ஆந்திராவிலோ உள்ள மாளிகைகளில் எதிரொலித்ததோ இல்லையோ; அவர் இருக்கும் வேனில் அமர்ந்திருக்கும் மற்றொரு அம்மையார் அவர்களின் செவிகளில் எதிரொலித்திருக்காதா?

ஆட்சி எனக்கு மட்டும்தான் - என் குடும்பத்துக்கு மட்டும்தான் - என்று நான் கருதி செயல்பட்டேனாமே; அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அடிக்கடி உரையாடலின் போது எங்களிடம் உதிர்க்கும் மொழியில் சொல்ல வேண்டுமானால், அட, ஆண்டவா! நான் என்ன, சபாநாயகரைக் கீழே தள்ளிவிட்டு அவையில் அவர் நாற்காலியிலா அமர்ந்து கொண்டேன்? இல்லையே! துணை சபாநாயகரைத் தூரப்போ எனத்துரத்திவிட்டு, அவை உறுப்பினரல்லாத தோழிப் பெண்ணை அந்த ஆசனத்தில் உட்கார வைத்தவனா நான்?

பொய்த்தவ வேடம் பூண்டே புகுந்த முத்தநாதன் என்று பெரியபுராணத்தை வேறு சொல்லி - என்னை வஞ்சகன் என்றும்,

குழப்பம் விளைவிப்போன் என்றும் சாடியிருக்கிறார்! யார் பொய்த்தவ வேடம் பூண்டவர் என்று விளக்கத் தொடங்கினால், அதுவே மிகப் பெரிய புராணமாகிவிடும்.

காதலித்து, மணந்து, கழுத்திலே மாங்கல்யம் மின்னிட பல்லாண்டுகள் எந்த ஜானகி அம்மையார் எம்.ஜி.ஆர். அவர்களுடன் இல்வாழ்வு நடத்தினாரோ; அந்த ஜானகி அம்மையாரையே எம்.ஜி.ஆரின் மனைவியல்ல என்று பொய் கூறி, அந்த அம்மையார் எம்.ஜி.ஆருக்கு மோரில் விஷம் கலந்து கொடுத்துக் கொன்றார் என்று ஏடுகளுக்குப் பேட்டியளித்து - தமிழக அரசியல் களத்தில் ஒரு பண்பாட்டுச் சிதைவையும் சீரழிவையும் ஏற்படுத்திய இந்தப் பெண்மணி; பாவம் தேர்தலுக்காக - தேர்தல் வெற்றிக்காக - பணத்தை, அதிகார பலத்தை, அனைத்தையும் பயன்படுத்திப் பார்க்கட்டும்! அதை முடிந்தால் தேர்தல் கமிஷன் கவனித்துக் கொள்ளும்! நம்மிடம் நா நீண்டால்; நமது பதில்களும் அதே ரீதியில்தான் நீள வேண்டியிருக்கும்! எனவே, நாடாளும் ராணிக்கு நாவடக்கம் தேவை!

அன்புள்ள,

மு. க.

21-05-1994

2137. முற்றுகையிட்டுத் தடுத்திடுவீர்!

உடன்பிறப்பே,

வேட்டி சேலை
வெள்ளிச் சிமிழ்
தங்க மூக்குத்தி

இப்படித் தரம் பார்த்துத் தானம் வழங்கும் ஏற்பாடுகள் முடுக்கப்பட்டுவிட்டன.

எங்கே விழா? யார் வீட்டில் விழா? எவருக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு? வேட்டி சேலை, வெள்ளிச் சிமிழ், தங்க மூக்குத்தி வழங்கப்படும் விழாவில் அன்னதானம் கிடையாதா; அதை மாத்திரம் ஏன் விட்டு விட வேண்டும்?

அதுவும் உண்டு! ஆனால் உடன்பிறப்பே; இந்த தானதர்மங்கள், யாருக்கோ பெரிய மனிதருக்கான அறுபதாம் வயது நிறைவுக்கோ அல்லது ஆயிரம் பிறை கண்ட எண்பதாம் வயது நிறைவுக்கோ நடத்தப்படும் விழாவுக்காக அல்ல!

ஜெயலலிதா ராஜாங்கத்தில் இடைத் தேர்தல் என்றாலே ஒரு திருவிழாதானே! இப்போது சேஷன் அவர்களின் பார்வையினால் திருவிழாவின் வெளித்தோற்றம் இடம் மாற்றப்படுகிறதே தவிர, உள்ளூர நடத்தப்படக்கூடிய மாய்மாலங்கள், மாயாஜாலங்கள், நான்கடிதத்தின் எடுப்பில் குறிப்பிட்டுள்ள லஞ்ச லாவண்ய மோசடி வித்தைகள் அனைத்தும் மயிலை, பெருந்துறை தொகுதிகளின் தேர்தல் திருவிழாவையொட்டித் தொடங்கப்பட்டு விட்டன.

இதோ இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடாம் ஜனசக்தி இதழ் எழுதியுள்ள தலையங்கத்தைப் படித்துப் பார் :-

> "மாநிலம் முழுதும் வன்முறைக் கலாச்சாரமும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள் கடத்துதல் போன்ற சீரழிந்த போக்கும், இவற்றிலிருந்து மக்களை பாதுகாத்து, நீதியை நிலை நிறுத்துவதில் துணை நின்று சட்டம் ஒழுங்கை காக்க வேண்டிய காவல் நிலையங்களிலே கற்பழிப்பும்,

கொலைகளும் இந்த ஆட்சியில் மலிந்து போய், மக்கள் பீதியுடனே வாழும் நிலை உள்ளது."

சில கிரிமினல் பேர்வழிகளிடம் அதிகாரம் உள்ளதால், காவல் துறையினரும் சுயேச்சையாக செயலாற்ற இயலாத நிலை உள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் ஜெ தலைமையிலான இந்த அரசின் செயல்பாடு மக்களிடத்தில் கடும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சூழலில், மக்கள் தங்களின் வெறுப்பை வெளிக்காட்டும் வாய்ப்பாக பெருந்துறை, மயிலாப்பூர் தொகுதி இடைத்தேர்தல் அமைந்துள்ளது. இந்தத் தொகுதி மக்களின் மனதை மாற்றி, வோட்டுக்களைப் பெற்று, தனது அரசு மக்கள் செல்வாக்கோடு தான் உள்ளது என ஜம்பமடித்திட, சில நலத்திட்ட உதவிகள், இலவசங்கள், அன்பளிப்புகள், தண்ணீருடன் குடங்கள் என்றும் மேலும் பல அதிகார அத்துமீறல்களும் ஜெ அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இறுதிக் கட்டமாக லட்டுக்குள் தங்க மூக்குத்திகளும், மோதிரங்களும் வருவதற்குத் தயாராகி விட்டதாக தகவல்கள் கிடைக்கின்றன.

இதுவரை இரண்டு தொகுதிகளிலும் ஆளும் அ.தி.மு.க. மீது மக்களின் வெறுப்பு எந்த அளவு உள்ளது என்பதை, அந்தத் தொகுதிகளில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள கட்சிப் பிரமுகர்களும் நேரிலேயே அனுபவித்துள்ளனர். மேலும் எதிர்த்துப் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட், தி.மு.க. வேட்பாளர்களுக்கு எந்த அளவு ஏகோபித்த ஆதரவு உள்ளதென்பதையும் கண்கூடாகக் கண்டு, முகம் வெளிறி - மனம் பதறிப்போன மந்திரிகள் என்ன விலை கொடுத்தேனும் வெற்றிக் கனி பறித்தே தீரவேண்டும் என ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன."

உடன்பிறப்பே, ஜனசக்தி இதழ் எழுதியுள்ளதில் இம்மியளவும் தவறில்லை. உண்மை நிலவரத்தின் படப்பிடிப்புத்தான் அது.

எப்படி வாழவேண்டும் என்பதற்கும் எப்படியும் வாழவேண்டும் என்பதற்குமுள்ள வேறுபாட்டைப் பற்றிக் கவலைப்படாத

42232
க894.811б
தினை.25

ஆளுங்கட்சியினர், தேர்தல் ஆணையத்தின் விதிகள் மீறப்படுவது குறித்தோ - ஜனநாயகத்தில் அனைவரும் சமமாகப் பாவிக்கப்பட வேண்டுமென்ற நிலை குறித்தோ - அலட்சிய மனப்பான்மையும் ஆணவமும் கொண்டுதான், அணுகுமுறை மேற்கொள்வர் என்பது நாடறிந்த ஒன்று! நல்லோர் புரிந்து தெளிந்த ஒன்று!

அளித்த வாக்குறுதியை யாம் நிறைவேற்றவில்லை என்பதற்காக ஆத்திரமுறாதீர்; இதோ அளிக்கிறோம் வேட்டி சேலை, வெள்ளிச் சிமிழ், தங்க மூக்குத்தி என அவற்றை அளித்திட முன் வருவர்!

உன்னை விற்காதே! என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரியைப் புறம் தள்ளிச் சிலர், தன்னை விற்றுக் கொள்ளவும் தயாராவர்!

ஆம்; ஓடியாடி உழைத்து, உழுது பயிரிட்டு, மடைகோலி, நீர்பாய்ச்சி, நாற்று விட்டு, களையெடுத்து, பயிர் செழிக்கப் பகலிரவு பாராது பாடுபட்டு; அறுவடைக்குப் பின் களத்து மேட்டில் குவிக்கப்பட்டிருக்கும் தானியமணிகளை; கள்வர் கூட்டம் களவாடிச் செல்ல வருவதைக் கழகக் கண்மணிகள் கண்டும் காணாதது போல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்திடுவரோ? என அண்ணா, தேர்தல் காலங்களில் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதனை நெஞ்சில் பதிய வைத்துக் கொள்!

பகல் வெல்லும் கூகையை எனும் குறள் படித்தோர்; இரவு நேரத்தைத் தேர்வு செய்வர்! அப்போதுதான் ஓட்டு வியாபாரத்துக்கு உகந்த நேரம் என்பது, அவர்தம் கணக்கு!

உடன்பிறப்பே, வெற்றி என்ற ஒரு சொல்லுக்காக வெறிபிடித்து அலைவோர், யாரையும் பிடித்து, எதையும் செய்து, ஏன்; காவலர்களைக் கூடத் துணைக்கு வைத்துக் கொண்டு ஏழை பாழைகளின் கரங்களைக் கரன்சியால் நம்முடன் பிணைப்பர்!

புத்தம்புதிய நூறு ரூபாய்த் தாளையும், சேலை, வேட்டி, மூக்குத்திகளையும் வழங்கி; வாக்குகளைப் பெற்று எப்படியாவது வென்றோம் எனக் காட்டிக் கொள்ளும் நினைப்பே தவிர - ஜனநாயகத்தைக் கொன்றோம் என்ற நிலையும் அவப்பெயரும் வருமே என்ற அச்சமே இல்லாத அமைச்சர்களோ, ஆளுங்கட்சியினர்களோ, இன்னும் இருக்கும் இரண்டொரு நாட்களில் வியூகமே வகுத்திடுவர்! வீதிக்கு வீதி, சந்துக்குச் சந்து நுழைந்திடுவர்! பணமும் பல்வேறு கவர்ச்சிப் பொருள்களும்

ஓட்டுக்கு விலையாகத் தரப்படும் அந்த இருட்டுச் செயலைத் துரத்தியடிக்க நமது அணிகள் ஆரவாரமின்றி தயாராகட்டும்! விழிப்புடன் இருந்து, வெற்றிக் கனியை யாரும் தட்டிக்கொண்டு போய் விடாமல் மயிலை, பெருந்துறை இரு தொகுதிகளில் பணியாற்றும் மாவீரர்கள் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்!

கடந்த காலத்தில் காங்கேயம் தேர்தலில் ஆரம்பத்திலேயே கையில் கிடைத்த வீடணனைக் கொண்டு, உதயசூரியன் சின்னம் கிடைக்காமல் செய்தனர்.

போலித் தேர்தல் - பொய்த் தேர்தல் - மோசடித் தேர்தல் சூழ்ச்சியில் வென்றிடப் பணமுடிப்பை அவிழ்த்து; வழக்கை நடத்தாமல் வழுக்கி விழச் செய்தனர்!

அந்தக் காங்கேயம் தேர்தலுக்குப் புதுக்கோட்டையிலிருந்து அங்குள்ள வாக்காளர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பலர் வரவழைக்கப்பட்டு; அவர்கள் கேள்வி கேட்பாரற்று கியூவில் நின்று திருட்டு ஓட்டுப்போட்டனர். புகைப்படங்கள் கூட பல ஏடுகளில் வெளியிடப்பட்டன. என் செய்வது; வழக்கே லஞ்ச லாவண்ய உழக்குக்குள் அடங்கி விட்டதே!

அதுபோல் இப்போதும் எனக்குக் கிடைத்துள்ள முதல் தகவல்; அதே புதுக்கோட்டையிலிருந்து அமைச்சர் ஒருவர் ஏற்பாட்டில் மட்டும் ஆயிரம் பேர் மயிலைக்கு வருகிறார்களாம்; போலி ஓட்டுக்கள் போடுவதற்காக!

அதேபோல் வேறு சில அமைச்சர்கள் தலைமையில் பெருந்துறைக்கும் அந்த முகமூடி வாக்காளர்கள் செல்கிறார்கள்!

எனவே, பெருந்துறையிலும் மயிலையிலும் கடமையுணர்வுடன் பொறுப்பேற்றுப் பணியாற்றும் கழக உடன்பிறப்புகளும் தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் - மூக்குத்தி அளிப்பவர்களையும், முகமூடி வாக்காளர்களையும், ஜனநாயகத்தைக் கொல்லும் முயற்சியில் வெற்றி பெறாமல் முற்றுகையிட்டுத் தடுத்திட வேண்டும்!

இதுவும் தேர்தல் பணிகளில் ஒரு முக்கியமான பணி! இதில் எச்சரிக்கை இருந்தால்தான் கொய்திட இயலும் வெற்றிக் கொய்யாக்கனி!

அன்புள்ள,

மு. க. 22-05-1994

2138. நீண்டகால நெடுங்கதைகள் தொடரும்!

உடன்பிறப்பே,

அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு; இந்தத் தமிழ்ச் சமுதாயம் தலை நிமிர்ந்து நடப்பதற்காக அணி வகுத்து நாமெல்லாம் கரத்தில் ஏந்தி இலட்சியப் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறோமே; அந்தப் பயணத்தில் பட்டொளி வீசிப் பறக்கும் கொடியை - தூத்துக்குடி கே.வி.கே. சாமி, நெல்லிக்குப்பம் மஜீது, வடசென்னை பாண்டியன், ஆலந்தூர் சின்னான், கோவை ஆரோக்யசாமி, லால்குடி நடராசன் போன்ற தியாகச் செம்மல்களின் செங்குருதியில் தோய்ந்து; அத்தியாகத்தின் பயனாக அண்ணா தலைமையில் ஆட்சியை உருவாக்கிய கொடியை - இழித்தும் பழித்தும் எதிரிகள் கூடப் பேசியதில்லை; ஆனால் ஒரு துரோகப்பதர் தனது ஏட்டில் எழுதியுள்ள தறுலையங்கத்தில் வெறும் இரட்டைப் பரிமாணம் மட்டும் உள்ள தி.மு.க. கொடி என்று குறிப்பிட்டு; அவர்கள் தமிழர் முன்னணிக் கட்சியிடமிருந்து திருடிய கொடி முப்பரிமாணக் கொடியென்றும், அது வடவேங்கடம் தென்குமரி இடையே; அதற்குள் தமிழர் நெஞ்சில் பதிந்து விட்டதென்றும், அந்தக் கொடியை பத்திரிகைகளில் பார்த்தவுடன் சென்னையில் 7.5.94-ல் கூடிய தி.மு.க. செயற்குழுவானது மேல்நாட்டு மாடு போலவும், தமிழ்நாட்டு எருது போலவும் மிரண்டு, அரண்டு போனது என்றும் ஆணவத்தைக் கக்கியிருக்கிறது!

எந்தக் கொடியைப் போட்டுக் கொண்டு - அந்த துரோகப் பதர் சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் வென்றதோ; எந்தக் கொடியை ஏந்திய காரணத்தால் அமைச்சராக நியமனம் செய்யப்பட்டதோ; அந்தக் கொடியை வெறும் இரட்டைப் பரிமாணம் மட்டும் உள்ள

கொடி என்று விமர்சனம் செய்திருக்கிறது. ஆம்; உடன்பிறப்பே! அண்ணா கண்ட கொடி வெறும் இரட்டைப் பரிமாணம் மட்டும் உள்ள கொடியாம்! எத்துணை கடுமையான விஷம் கக்கப்பட்டுள்ளது தண்டனை? விஷயம், யார் யாரை எப்படிக் கொல்லும் - எப்படிக் கொன்றது; என்பதை அறிந்து தெளிந்து தப்பித்துக் கொண்ட பண்பற்ற, அன்பற்ற, நன்றியற்ற பதர்களுக்கு அண்ணா என்ன; அவர் கண்ட கொடி என்ன; எந்தப் பிராணிக்கோ, செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாது என்பார்களே; அதே கதைதான் இதுவும்!

தி.மு.க. செயற்குழுவினர்; இந்த அசகாய சூரர்களின் பிரிவினைக் கோரிக்கைக் கொடியைப் பார்த்து - அடடா; அந்த முப்பரிமாணக் கொடியைப் பார்த்து, சிவப்பு நிறம் கண்ட மேல்நாட்டு மாடு போலவும் - கறுப்பு நிறம் கண்ட தமிழ்நாட்டு எருது போலவும் மிரண்டு அரண்டு போனார்களாம்.

ஏனென்றால்; தி.மு.க.வினர் - 7.5.94ஆம் நாள் வரையில் - கொடிகளில் சிவப்பு நிறத்தையோ, கறுப்பு நிறத்தையோ கண்டவர்கள் இல்லையல்லவா; அதனால் இவர்களின் முப்பரிமாணக் கொடி கண்டு மாடுகளாக மிரண்டார்களாம்! பாவம்; பைத்தியக்காரர்கள்கூட சில நேரங்களில் ஒழுங்காக உளறுவார்கள் - இந்தப் பைத்தியக்காரப்பதரின் உளறலில் ஒரு குண்டூசி முனையளவுகூட சுயபுத்திக்கே இடத்தைக் காணோம்!

தமிழர் முன்னணிக் கட்சியைத் தொடங்கி - முப்பரிமாணக் கொடி கண்டு - அந்தக் கொடியுடன்; இந்த முப்பரிமாணங்களைப் போலவே இரண்டொரு தேர்தல்களில் சுயேச்சையாகப் போட்டியிட்டவர்கள்; இவர்கள் தயாரித்துள்ள கொடி, தமது கொடியின் மறுபதிப்பு என்றனர். அதனை ஆண்டியும் போண்டியும் பகுதியில் முரசொலி கேலியாக வெளியிட்டது.

உடனே முப்பரிமாண முகாமின் வழக்கறிஞர் தமிழர் முன்னணிக் கட்சியினர், கொடிக்கு உரிமை கொண்டாடி வழக்குத் தொடுத்து விடுவாரோ எனப் பயந்து நீதிமன்றத்தில் கேவியட் போட்டு தற்காப்பு செய்து கொண்டனர். பாதிக்கப்பட்ட பாப்பா

பன்னீர் செல்வம் வழக்குப்போட்டார்; இந்த முப்பரிமாணங்கள், அவரை விட்டுவிட்டு - நம்மீது வந்து முட்டிக் கொண்டன!

அதன்பிறகே, முரசொலி; சில படங்களையும் விளக்கங்களையும் ஆதாரங்களையும் வெளியிட்டு தமிழர் முன்னணி என்பது தனித் தமிழ் நாடு கோரிக்கையை வைக்கும் இயக்கம் என்பதையும் மறைக்காமல் கூறியிருந்தது.

அதுவேகூட, தமிழகத்தில் உள்ள பற்பல சிறு அமைப்புகள் போல - தமிழர் முன்னணி சார்பில் மயிலை, பெருந்துறை தேர்தல்களில் நமக்கு ஆதரவு தர விரும்புவதாகத் தெரிவித்த நிலையில்; அந்த முன்னணி, தனித் தமிழ்நாடு கோருகிற காரணத்தால் ஆதரவை ஏற்றுக் கொள்ள இயலாது என்பதை நேரிலேயே தெரிவித்தபோதுதான்; இந்த விபரங்கள் அனைத்தையும் அறிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் இந்த உண்மைகளை உணராத துரோகப் பதர், தனது ஏட்டில் ஏதோ பாப்பாவுக்கு மிட்டாய் கொடுத்தோமாம் - பதம்பாடி நட்டுவாங்கம் செய்தோமாம் - இப்படியாக; தமிழர் முன்னணிக்காரர் பாப்பா பன்னீர் செல்வம் தொடுத்துள்ள வழக்கு பற்றி கேலி செய்து, தேவையின்றி நம் மீது காய்ந்து விழுகிறது!

பழைய தி.மு.க. கொடி கம்பத்தோடு சாய்த்து விடுமென்றும் - உதயசூரியன் அஸ்தமனமாகி விடுமென்றும்; சாபங் கொடுக்கிறது சதிக் கூட்டத்திற்கு மூன்றாண்டு காலமாக மூலையில் ஒடுங்கித் தலைமை தாங்கிடும் முப்பரிமாணப் பதர்! புதிய கொடிக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாதென்று நீதிபதி சுடலைக்கண்ணு, தி.மு.க.வினர் வாயில் மண்சோறு திணித்து விட்டாராம்! இதுவும் துரோகப் பதரின் தலைகனயங்க வாசகம்தான்!

நீதிபதி சுடலைக்கண்ணு திணித்தது மண்சோறு என்றால்; டெல்லிக் கமிஷனில் துரோகிகள் வாயில் திணிக்கப்பட்டது என்ன மலச்சோறா? என்று கேட்டிட எவ்வளவு நேரமாகும்!

அண்ணா கண்ட கொடியை மடக்க - அண்ணா கண்ட கழகத்தை அழிக்க - அண்ணா கண்ட சின்னத்தை முடக்க;

முயன்று முயன்று தோற்றுப் போன துரோகப் பதர்கள்; இப்போது ஏதோ சட்டப்பிரிவுகளையெல்லாம் வாரி இறைத்து தி.மு.க.வையே தடை செய்ய வேண்டும் என்ற ஆசையுடன் தடைலையங்கம் தீட்டியுள்ளனர்!

அந்தோ; எவ்வளவு பஞ்சையான பாரிஸ்டர்கள் துரோகப் பதர்களின் சட்டைப் பைகளுக்குள் இருந்து, சட்டத்தைக் குழப்புகிறார்கள்!

கழகத்துக்காரன், வீண் வம்புக்குப் போக மாட்டான் - வலுவில் வந்திடும் வம்பு கண்டு கோழை போல் குனிந்து கிடக்க மாட்டான் என்பதற்கு; இன்றைய கடிதம் ஒரு சாம்பிள் - மேலும் தொடர்ந்தால் நீண்டகால நெடுங்கதைகள் தொடரும்; முடிவே இல்லாமல்!

அன்புள்ள,

மு. க.

23-05-1994

2139. செயற்குழு முடிவை செயல்படுத்தும் விதம் என்ன?

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உன் கரத்தை முத்தமிடும் பொழுது, பெருந்துறை - மைலாப்பூர் இடைத்தேர்தல்களில் வாக்குப் பதிவுக்கான மே 26-க்கு இடையே ஒரு நாள்தானிருக்கிறது என்பதை நினைவிற்கொள்க! மே 7 ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற செயற்குழுவில் எந்தெந்த மாவட்டக் கழகத்தினர் மயிலைத் தொகுதியிலும், பெருந்துறைத் தொகுதியிலும் பொறுப்பேற்றுத் தேர்தல் பணிகளை ஆற்றிட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

அந்த முடிவுக்கேற்பவும், அந்த முடிவை மதித்தும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணி உடன்பிறப்புகள், செயல்வீரர்களாம் கழகக் கண்மணிகள் இரு தேர்தல் களங்களிலும் தங்கள் பணிகளை வரையறுத்து முறைப்படுத்திக்கொண்டு ஓடியாடி வேலை செய்கின்றனர். கொளுத்தும் வெயிலில் கறுத்துவிட்ட அவர்தம் முகங்களையும் - அவர்தம் மேனியில் முத்து முத்தாக உருவெடுத்து உருண்டோடும் வியர்வைத் துளிகளையும் கண்டு அந்த உழைக்கும் உணர்வு படைத்த உள்ளங்களுக்கு என் தலை தாழ்த்தி வாழ்த்துக்களை வழங்கிய வண்ணம்; நானும் அவர்கள் இழுத்தடிக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று இயன்ற தொண்டினை ஆற்றி வருகிறேன்.

1971 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, இன்னமும் மூச்சைப் பிடித்துக்கொண்டு; ஆனால் முதுகை மட்டும் வளைக்காமல் உழைத்துக்கொண்டிருக்கிற ஒரு வேன் - அதுதான் பெருந்துறைத் தொகுதியிலும், மயிலைத் தொகுதியிலும் எங்களைச்

சுமந்துகொண்டு, இருபத்தி மூன்று ஆண்டுகளாக உழைக்கிறேன் - இன்னமும் என்னை வாட்டி எடுக்கிறீர்களே! என்று கேட்காமல் மேடுபள்ளம் குண்டு குழி என்று பாராமல் ஓடிக் கொண்டிருக்கிறது. அப்படி ஏதாவது தனது அலுப்பை அந்த வேன் என்னிடம் தெரிவித்தால்;

நீயாவது கெட்டியான இரும்பும் அழுத்தமான மரப்பலகையும் கொண்ட உடல் படைத்து உழைத்துக்கொண்டிருக்கிறாய்; என்னைப்பார் - இந்த எழுபதாவது வயது நிறைவுறும் நேரத்தில் - இரும்பாலோ மரத்தாலோ அல்ல; என்பும் சதையும் கொண்டு உருவான இந்த உடலை, ஐம்பத்தி ஆறு ஆண்டுகளாகப் பொது வாழ்வுக்கு அர்ப்பணித்துள்ளேனே;

என்று திருப்பிக் கேட்டுவிடுவேன் அல்லவா! எனவே இந்த பழைய வாகனம் முணுமுணுப்பு ஏதுமின்றிக் கடமையை ஆற்றி வருகிறது!

"எனக்குள்ள கவலையெல்லாம்; இந்த முதுமையடைந்த வேனைப் பார்க்கும்போது - எப்பயனையும் எதிர்பாராமல், முன்பெல்லாம் பெட்ரோல் - இப்போது அதுவுமில்லை; டீசலை மட்டும் உணவாகக்கொண்டு ஓடித் திரிந்து, உறுதுணை புரிந்து, ஒத்துழைப்பு தரும்போது - இன்னமும் செயற்குழு எடுத்த முடிவுக்கேற்ப ஒருசிலர் தேர்தல் களத்திற்குள் நுழைந்திடவில்லையே என்பதுதான்!"

பலர் வந்துள்ளனர் - பகலிரவு பாராது பாடுபடுகின்றனர். பரவசமடைகிறேன். சிலர்; ஆம் - மிகச் சிலர் திருவிழா காண வந்தவர் போல் வந்துவிட்டுச் சென்றுவிடுகின்றனர். அட; இவரா இப்படி என நான் வியப்படையும் அளவுக்கு அவர்தம் போக்கு இருப்பது கண்டு வேதனைகூட எனக்கு!

அன்பு உடன்பிறப்பே, அகத்தில் அலைபாயும் அத்தகைய வருத்தங்களை ஒதுக்கிவிட்டுப் பார்க்கும்போது; கண்துஞ்சாமல், பசி நோக்காமல், கழகத்தின் கண்ணொளியாம் நீயும் உன் போன்ற உடன்பிறப்புகளும் தேனீக்களின் சுறுசுறுப்பைக் காட்டி, மயிலை, பெருந்துறை தொகுதிகளில் பெறவேண்டிய வெற்றிக்காகச்

சூளுரை மேற்கொண்டு சுழன்று சுழன்று பறந்திடுவதை நினைத்து நினைத்து என் நெஞ்சமே தேனருவியில் குளித்துக் குளிர்வது போன்ற உணர்வைப் பெறுகிறேன். உவகை பூக்கிறேன்.

இத்தனை நாளும் நம்ம பட்டபாட்டின் விளைவாகக் களத்து மேட்டுக்குக்கொண்டு வரப்பட்டு குவிக்கப்பட்ட தானியமாக வெற்றி முகடு காட்சி தருகிறது. தானியத்தைக் கொள்ளையிடத் தருணம் பார்த்திருக்கும் கள்வர் கூட்டம், அதற்குரிய நேரமாக நள்ளிரவைத் தேர்ந்தெடுக்கும். அக்கூட்டத்தின் கைகளில் வன்முறை ஆயுதங்களும் - தோளில் தொங்கும் பைகளில் வாக்காளர்களை வீழ்த்தும் கரன்சிக் கத்தைகளும் இருக்கும்! சற்று ஏமாந்தால் நமது தேர்தல் ஏஜெண்டுகளைக்கூடக் கடத்திக்கொண்டு போக முயற்சிகள் நடைபெறலாம்!

அதுமட்டுமா? இறந்தோர் எழுந்துவருவர் - இடம் பெயர்ந்தோர் வாக்குகளை இன்னொருவர் பதிவு செய்வார் - வாக்களிக்க வராதோர்க்குப் பதிலாக போலி வாக்காளர்கள் பொத்தெனக் குதிப்பர்!

இத்தனை சூழ்ச்சிகளையும் சூழ்ந்தெதிர்க்க ஆற்றல் வேண்டும் - அது நிரம்ப உண்டு உன்னிடம் என்பது அறிவேன்!

அஞ்சாமை வேண்டும்; அறம் பிறழ்ந்து ஆட்சியாளர்களும், அதிகார வர்க்கத்தினரும் அத்து மீறிடும்போது எதிர்த்து நிற்பதற்கு!

சோதனை மிகுந்த நேரம் - சோதனையெனும் நெருப்பாறுகளைக் கடந்து வந்துள்ள இயக்கமே; இந்தக் கழகம்!

இந்தச் சோதனையிலும் நீ வென்றுகாட்ட வேண்டும், இரு தொகுதிகளிலும்!

சோதனைகள்தான் ஒருவரை, அவர் இருக்கும் கட்சிக்கும் - நாட்டுக்கும் அடையாளம் காட்டக் கூடியவை!

நெருப்பில் காய்ச்சப்படும் இரும்புத்துண்டு வாளாகும்! வேலாகும்!

தங்கமோ அணிமணியாகும்!

சருகுகளாயிருப்பின்; அவை சாம்பலாகும்!

எனவே; இந்தப் பரீட்சையில் வெல்பவர் எவரோ அவரே என் உடன்பிறப்பாக ஒளிவிடுவர்!

எத்தனை இடர்வரினும் தாங்கிடும் இதயம் பெற்று - வெற்றி; அதுவே வந்து நமது வாசலில் நிற்கும் என மெத்தனமாக இராமல்; கடும் உழைப்பை மேலும் நல்கி,

"காரிருள் அகன்றிட
கதிர் வெளிச்சம் மேவிட"

திட்டமிட்டுக் கட்டுப்பாடு போற்றி திறமையுடன் பணிபுரிந்திட மிகவும் வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

24-05-1994

2140. 71-வது பிறந்த நாளும்; எனது ஆசையும்

உடன்பிறப்பே,

என் அழைப்பை ஏற்றும், தலைமைச் செயற்குழு எடுத்த முடிவைத் தொடர்ந்தும் இடைத் தேர்தல் பணிகளை அயர்வறியாது ஆர்வமுடன் ஆற்றிய உனக்கு இளைப்பாறிக் கொள்ள ஓர் இடைவேளை இருக்கட்டுமென்பதற்காக; இந்த ஆண்டு ஜூன் 3-ஆம் நாள் எனது பிறந்தநாள் விழாவுக்கு நீ சென்னைக்கு வரத் தேவையில்லை என்றும், சென்னையில் விழா நிகழ்ச்சி எதுவும் வேண்டாமென்றும், அறிக்கை ஒன்றை எழுதிக் கொண்டிருக்கும்போது ஆர்க்காடு வீராசாமியும் ஆலடி அருணாவும் குறுக்கிட்டுத் தடுத்தனர்.

கடந்த ஏழெட்டு மாதங்களாக இடையறா அலைச்சல் மேற்கொண்டு, உழைப்பினை ஈந்து கழகம் காத்திட அல்லும் பகலும் உழன்று கொண்டுள்ள என் பாசமுள்ள உடன்பிறப்புகள் என் பிறந்த நாளில் வாழ்த்து தெரிவிக்க நேரிலே வர வேண்டுமா என்ன; அவரவர் இருக்குமிடத்திலிருந்தே வாழ்த்தி விட்டுத் தொடர்ந்து கழகத்திற்கான ஆக்கப்பணிகளை அக்கறையுடன் கவனிக்க வேண்டுமென்பதே என் எண்ணம் என்று என் தம்பிமார்கள் இருவரிடமும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்.

இதற்கிடையில் வீராசாமி எப்படியோ பேராசிரியர் அவர்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் கருத்தைக் கூறிவிட்டார் போலும் - நான் சற்றும் எதிர்பாராத நிலையில் தனது உடல்நலிவையும் பொருட்படுத்தாமல் என் உடன் பிறவாச் சகோதரராம் பேராசிரியர் அவர்கள் என் வீட்டுக்கே வந்து விட்டார்.

ஏற்கெனவே என் பிறந்தநாள் குறித்து இரண்டு கிழமைகளுக்கு முன்பு அவர் கொடுத்த அறிக்கையின் தொடர்பாக,

இடைத்தேர்தல் முடிவுகளையும் என் பிறந்த நாள் கொண்டாட வேண்டிய முறைகளையும் இணைத்த மற்றொரு அறிக்கை அவரால் ஏடுகளுக்கு அனுப்பப்பட்டு விட்டது. ஒருசில மணித் துளிகள் மட்டுமே பேராசிரியரிடம் எனது மறுப்பு விளக்கம் எடுபட்டது. அவர் அண்ணா அவர்களிடமே கண்டிப்பாகப் பேசி, தனது கருத்துக்கு வெற்றிவாகை சூடக் கூடியவர். ஆம்; கழகத்தின் நன்மைக்காக - தமிழினத்தின் வருங்கால நல்லுரிமைகளுக்காக!

காஞ்சியிலிருந்து சென்னைக்கு வரும் போதெல்லாம் அன்று பேராசிரியர் வாழ்ந்த வேளாளத் தெரு வீட்டில்தானே அண்ணாவின் கார் வந்து நிற்கும். அண்ணாவும் நாங்களும் விடிய விடிய விவாதித்து, இந்தத் தமிழ்நிலம், ஒரு விடியல் காண எத்தனை எத்தனை திட்டங்கள் வகுத்திருக்கிறோம். எத்தனை எத்தனை களங்களுக்கான போர் முறை குறித்து சிந்தித்து முடிவுகளை அறிவித்திருக்கிறோம்.

அப்படி இந்த இயக்கத்துடன் ஒன்றிவிட்ட பேராசிரியர் அவர்கள்; நமது பொதுச் செயலாளருமாயிற்றே! அதற்கு மேலாக எனக்கு மூத்தவருமாயிற்றே! எல்லாவற்றுக்கும் மேலாக என் தோள் மீது கைபோட்டுக் கொண்டு, எனக்கும் இயக்கத்துக்கும்; ஏன் - இந்த இனத்துக்கும் துணையாக நின்று; எமை நத்துவாய் எனக்கோடி இட்டழைத்தோரையும் தூசிக்குச் சமமாக நினைத்துத் துரத்திய தூயவராயிற்றே; அத்தகையவர் அழுத்தமாகவும் கண்டிப்பாகவும் பிறந்த நாள் விழா உங்களுக்காக அல்ல; கழகத்திற்காக! என்று சொன்ன போது நான் மௌனமானேன். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்பதற்காக அல்ல; கழகத்திற்காக என்று கூறிய பிறகு அதனை நான் எனக்கிடப்பட்ட கட்டளையாகத் தானே கொள்ள முடியும்!

கழகம் வாழ்ந்திட, வலிவு பெற்றிட, நிலையாகப் பயணம் நடத்திட, அதனால் இந்தத் தமிழினம் பொலிவுடன் திகழ்ந்திட; என் வாழ்விலே வரும் ஒரு திருநாளாயினும், இருள் நாளாயினும் இரண்டையும் ஒன்றாகக் கருதி இந்த இயக்கத்தின் எழுச்சிக்கு அவை பயன்படுமாயின் அவற்றை ஏற்றிடும் மனப்பக்குவம் பெற்றவன்தானே நான்; அதனால் அண்ணாவுக்குப் பிறகு எனக்கு அண்ணனாக வாய்த்துள்ள பேராசிரியரின் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச நீண்ட நேரத்தை வீணாக்க விரும்பாமலே வாய் மூடிக் கொண்டிருந்து விட்டேன்.

எழுபதாவது வயது நிறைவு பெறுகிறது. எழுபத்தி ஒன்றில் அடியெடுத்து வைக்கிறேன். இதில் ஏற்படும் மகிழ்ச்சி உணர்வை; என் தலைவர் அண்ணா அவர்கள் அறுபதாம் அகவையைத் தொடாமலே பிரிந்து விட்டாரே என்ற நினைவு உருக்குலைத்து விடுகிறதே - ஒரே ஆறுதல்; அய்யார் பெரியார் அவர்கள் தொண்ணூற்றி ஐந்தாம் வயது வரை வாழ்ந்து நமக்குத் துணையாக இருந்தாரே என்பதுதான்!

இப்போதும் நமது தலைவர் அண்ணாவையும் - அந்தத் தலைவர்க்குத் தலைவராம் பெரியாரையும் நெஞ்சில் நிலையாகப் பதிய வைத்துக் கொண்டு தானே நமது நெடும் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் தாயும் தந்தையுமாக விளங்கி நமக்குத் தந்து விட்டுப்போன கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் எனும் அசையாச் சொத்துக்களை, எந்த வில்லங்கமுமின்றி இன்னும் எண்ணிலடங்காத் தலைமுறையினர்க்குக் காப்பாற்றித் தர வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது என்பதை எண்ணிச் செயல்படுவதே நோக்கமாக இருந்திடல் வேண்டுமென்பதை என் பிறந்த நாள் செய்தியாக உன்போன்ற உடன்பிறப்புகளுக்குத் தெரிவிக்கின்றேன். இந்த வேண்டுகோளில் எல்லாமே அடங்கியிருக்கிறது என்பதால், தனித்தனிப் பிரச்சினைகளைப் பிரித்துச் சொல்லவோ, அல்லது விரித்துச் சொல்லவோ வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

ஆண்டுதோறும் என் பிறந்த நாளையொட்டி ஏழை எளியோர்க்கு உணவளித்தல், உடைகள் தருதல், பள்ளிச் சிறார்க்கு புத்தகம் முதலிய பொருட்கள் வழங்குதல், இரத்ததானம் அளித்தல், கண்தானம் செய்தல் போன்ற பொதுநலப்பணிகள் பலவற்றில் என் உடன்பிறப்புகள் ஈடுபடுவதை நானறிவேன்! அதற்கென நன்றியும் மகிழ்ச்சியும் தெரிவிக்கிறேன் எனினும்; இந்த ஆண்டு என் பிறந்த நாளில் நானே ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்.

இது நமது கழகத்திற்காக அல்ல; கட்சிகள், கொள்கை மாறுபாடுகள் அனைத்தையும் கடந்து நாட்டு நலனுக்காக விடப்படும் வேண்டுகோள். ஏழை எளியோர்க்கு உணவு, உடை, கண்தானம், பள்ளிச்சிறார்க்கு புத்தகம், இரத்ததானம்

என்பனவெல்லாம் பயனுள்ள பணி எனினும், ஐந்து கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் ஒரு சிலரை மட்டும் சென்றடையக்கூடிய பணிகள்! அதற்காக அவற்றை வேண்டாமென்று நான் உரைத்திடவில்லை.

எனினும் அவற்றை மிஞ்சிடும் மேலான பணியொன்று இருக்கிறது. அந்தப் பணியைத் தொடங்கியவுடனே; அடுத்தநாளே பயன் தந்து விடாது. ஆனால் நாட்டுக்கும், மக்களுக்கும் எதிர்காலத்தில் நிரந்தரப்பயனைத் தரக்கூடிய பணியாகும் அது!

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்ற குறளுக்குரிய பொருளை ஆர்வமின்றிக் கவனிப்போருண்டு.

பெய்யாமல் உயிர்களின் வாழ்வைக் கெடுக்கக்கூடியதும், பெய்வதின் காரணமாக உயிர்களின் நலிந்த வாழ்வுக்கு வளம்சேர்ப்பதும் மழையே ஆகும். மழை வளம் பெருகிட மர வளம் பெருகிட வேண்டுமென்கிறது அன்றும் இன்றும் அறிவியல் ஆய்வுத்துறை! அந்த மழைக்கு மட்டுமல்ல; இன்றைய உலகில் படிந்திடும் பரவலான Pollution மாசுக்குத் தடுப்பரணாக இருக்கவும் மரங்கள் தேவை! தேவை! மிக அதிகமாகத் தேவை!

காடுகளில் வெட்டப்படும் மரங்களை ஈடு செய்ய, காட்டில்மாத்திரமல்லாது நாட்டிலும் மரங்கள் வளர்க்கப்பட்டாக வேண்டும். வீட்டுத் தோட்டங்களில், வீதியோரங்களில், ஆற்றங்கரைகளில், அகன்ற நெடுஞ்சாலைகளின் இருமருங்கில், எங்கணும் எங்கணும் செழித்து வளரும் மரங்களுக்கான செடிகள் தோன்றிட வேண்டும். இதனை ஓர் அரசு மட்டுமே செய்திட வேண்டுமென்பதில்லை.சென்னையில் அண்ணா அறிவாலயம் கட்டப்படுவதற்கு முன்பு, ஏன்; கட்டி முடித்த பிறகும் கூட மரஞ்செடி கொடிகளற்ற பசுமையில்லாத பொட்டல் காடாகத்தான் கட்டிடத்தைச் சுற்றிலுமுள்ள காலி நிலப்பகுதி இருந்தது.

வேல்ராஜ் எனும் கழக உடன்பிறப்பு என்னுடன் இணைந்து நாள்தோறும் அதிகாலை வேளையில் அண்ணா அறிவாலயம் வந்து நட்டுக் காத்திட்ட மரக்கன்றுகள் தான் இன்று பசுமை குலுங்கிட, செழிப்பு சிரித்திட ஓங்கி உயர்ந்த தருக்களாக தலைநிமிர்ந்து நிற்கின்றன; மிகக் குறுகிய காலத்தில்.

அதனால்தான் அன்பு உடன்பிறப்பே; இந்த ஜூன் திங்கள் முழுவதும் - என் 71-வது பிறந்த நாளையொட்டி, நீ விழா நிகழ்ச்சிகள் நடத்துவது ஒருபுறமிருக்கட்டும்; நீ வாழும் ஊரில் - பகுதியில் - உனக்குச் சொந்தமான இடத்தில் - பொதுவான இடமெனில் அரசு அதிகாரிகளுக்கு அறிவித்துவிட்டு - 71 மரக்கன்றுகளை நட்டு, அவற்றைப் பேணிக்காப்பாற்றி வளர்த்திட வேண்டுமென விரும்புகின்றேன்.

மரம்தானே என்று அலட்சியமாக நினைக்காதே! மனிதர்கள் வாயினால் நன்றி சொல்வார்கள் - ஆனால் மரங்களோ, அவை நீண்டகாலம் வாழ்ந்து, அவ்வாறு வாழும் காலம் வரையில் தனது வாயினால் அல்ல; செயலினால் நன்றி காட்டக் கூடியவை! கோடை வெயிலுக்கு மரமே நிழற்கொடை! மழையும் அந்த மரம் வழங்கும் கொடைதான்!

மழையில்லா நாடும், அந்த நாட்டு மக்களும் முறையே வறுமைக் கூடாகவும், அந்தக் கூட்டில் வாடிக்கிடக்கும் புழுக்களாகவும் மாறிடும் நிலையினை எண்ணிடவே இதயம் நடுங்குகிறது!

எனவே உடன்பிறப்பே; தொலைநோக்குடன் ஆற்றிடும் பணிகளுக்கு ஆதரவு கொஞ்சம்தான்; அலட்சியம் மிஞ்சுந்தான்! நாளாவட்டத்தில்தான் அவற்றின் தேவையும், நலனும் புரியும்!

இதனை இப்போதே புரிந்து கொண்டு; நாம் வாழும் நாளுக்கு என்றில்லாமல் நமது நாட்டுக்கும் மக்களுக்கும் என்றென்றும் வளம் பெருக்கிடவும் அதனால் வாழ்வளித்திடவும் வாய்ப்பாக மரக்கன்றுகளை நட்டு, பாதுகாத்து, ஆற்றிட வேண்டிய நற்பணியையும் ஆண்டுதோறும் என் பிறந்தநாளை முன்னிட்டு நீ மேற்கொள்ளுகிற வேறு சில நற்பணிகளுடன் இணைத்துக்கொள்க என உன்னை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மரம் உதவுகிற அளவுக்கு மனிதர்கள்கூட உதவிட மாட்டார். வெட்டுண்ட பிறகும்; தானாக வீழ்ந்த பிறகும் விதவிதமான பொருள்களாக, விறகாகப் பயன் விளைப்பதன்றோ மரத்தின் இயல்பு.

உயிருடன் உயர்ந்து தழைத்து நின்றிடும்போது வானில் உலவிடும் முகில்களை குளிர்காற்றால் உருக்கி மழையாக்கி மாநிலத்தை வாழவைக்கும் ஆற்றல் மரங்களுக்கன்றோ உண்டு.

எனவே மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் என இன்பமாய் இசைப்பதற்கு முன்பு, மரங்களைப் போற்றுதும் மரங்களைப் போற்றுதும் எனச் சுருதி கூட்ட வேண்டியிருக்கிறது.

மரங்கள் குறையக்குறைய மழை குறைந்திடும் - மழை குறைந்தால் மண்ணின் வளம் குறையும்; அதனால் மக்கள் நலன் குறையும். உயிரினமே நலிவுறும்.

அக்குறை போக்கிடத்தான் இனி ஆண்டுதோறும் என் பிறந்தநாட்களை நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் மரக்கன்றுகளை நட்டு, மரம் வளர்த்துக் கொண்டாடி வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கழகம் வளர்க்கக் கொள்கை விளக்கப் பணிபுரிவோம் - ஏற்றுக் கொண்ட போது வாழ்வில்; ஏழை எளியோர் சிரிப்பில் இறைவனைக் காண உழைத்திடுவோம் - அத்துடன் இந்த என் வேண்டுகோளும் நிறைவேறிட முனைந்து செயல் புரிந்திடுவோம்!

பெருமளவில் பேரரசு முன்னின்று இயற்றிடும் செயலன்றோ இது; நம்மால் முடியுமா என மலைத்திடத் தேவையில்லை! சிறு துளிகள்தானே பெரு வெள்ளமாகிறது!

உன் போன்றோரின் வாழ்த்து வெள்ளத்தில் நீந்தியவாறு உன் உடன்பிறப்பாம் நான் வெளியிடும் இந்த ஆசையை நிறைவேற்றிட இந்த ஆண்டு முதல்தொடக்கம் செய்துதான் பாரேன்!

அன்புள்ள,

மு. க.

01-06-1994

2141. எத்தனை மரக்கன்றுகள் வைக்கப்பட்டன என்று அறியத்துடிக்கும் என் ஆவலை நிறைவேற்றுவாயா?

உடன்பிறப்பே,

ஜூன் 3-ந் தேதியன்று என்னை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி, நான் நெஞ்சு நிமிர்ந்து பெருமிதம் கொள்ளக் கூடியதாக அமைந்த ஒரு வாசகம்; தினமணி தலையங்கத்திலேயே இடம் பெற்றிருந்தது. என் பிறந்தநாளையொட்டி, ஜூன் திங்கள் முழுவதும் அதற்குப் பிறகும் இயன்றவரை தொடர்ந்தும்; மரக்கன்றுகள் நடும்படியாக நான் விடுத்த வேண்டுகோளை வரவேற்று எழுதப்பட்ட தலையங்கம் அது. அதில்; இதோ இந்த வாசகம் - அதாவது;

"தி.மு.க. இன்று அதுகண்ட பல சோதனைகளுக்குப் பிறகு தமிழ்ச் சமூக வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தும் வலிமை கொண்ட ஓர் இயக்கமாகவே இருந்து வருகிறது. அதன் தொண்டர்கள், கருணாநிதி ஆணையிட்டால் எத்தனை கடுமையான பணியினையும் கருத்தோடு செய்து முடிக்கும் இயல்பு கொண்டவர்கள்"

என்று தினமணி, தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதைப் படித்திடும்பொழுது என் இதயம் இன்பத்தால் பொங்கி பூரித்திருக்கும் என்பதில் உனக்கு இருவேறு கருத்துக்களே இருக்க முடியாதே! கழக உடன்பிறப்புக்களின் தொண்டுள்ளத்தையும், பணி முடிக்கும் திறனையும், கடமை உணர்வையும், கட்டுப்பாட்டுத் தன்மையையும் உணர்ந்தவன் நான் எனினும்; மற்றவர்களால் அந்த உடன்பிறப்புக்கள் பாராட்டப்படும் பொழுது, ஆகா! எத்தகையோர் நிறைந்த பாசறையில் நாம் படைத்தலைமை ஏற்றிருக்கிறோம் என்ற பரவசம் பன்னீர் அருவியாகப் பொழிகிறது அல்லவா! மரம் வளர்ப்பதும் அதனைப் பாதுகாப்பதும் நான் அக்கறையுடன்

கவனிக்கும் செயல்களில் ஒன்றாகும் - காரணம்; நான் பலமுறை சிறைப்பட்ட பொழுதெல்லாம்; சிறைக் கோட்டங்களில் உள்ள மரநிழல்களே எனக்குப் பெருந்துணையாக இருந்திருக்கின்றன.

முல்லைக்குத் தேரீந்தான் பாரி மன்னன் என்பதில் அவனது வள்ளல் தன்மை எடுத்துக் காட்டப்படுவதைவிட; அக்காலத்திலே மரமாயினும், செடியாயினும், கொடியாயினும் அவற்றைப் பாதுகாத்து வளர்க்க வேண்டுமென்ற உணர்வு இருந்திருக்கிறது என்ற நிலைமை மிகத்தெளிவாக விளக்கப்படுவதாகவே நான் கருதுகிறேன்.

சுற்றுப்புறமும் காற்றும், தூய்மையாக இருக்க மாசு கட்டுப்பாடு எவ்வளவு அவசியமோ; அந்த அளவுக்கு மழை, பருவம் தவறாமல் பெய்திட வேண்டியதும் அவசியமாகும். இந்த இரு அவசியத் தேவைகளையும் நிறைவு செய்து அவனி தழைத்திடக் கூடிய நிலையை உருவாக்கிட மரங்கள், இப்போதுள்ளதை விட இன்னும் பல மடங்கு அதிகமாக வளர்க்கப்பட்டாக வேண்டும்.

தேசிய வன இலாக்கா அறிக்கையின்படி இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 33 சதவிகிதம் மரங்கள் உள்ள பரப்பு இருக்க வேண்டும். ஆனால் இருப்பதோ அனைத்திந்திய அளவில் 20 சதவிகிதம்தான். அதிலும் தமிழ்நாட்டில் 16 சதவிகிதம் தான்! இந்த சதவிகிதம் உயர்த்தப்பட்டால்தான் மக்கள் நல்வாழ்வு பெற முடியும். நலிவற்ற வாழ்வு கிடைக்க முடியும். நாளும் பெருகி வருகிற மாசு Pollution காரணமாக மொத்த சமுதாய மக்களின் எதிர்காலமே பல்வேறு பயங்கர விளைவுகளுக்கு உள்ளாக நேரிடும். சமூகநீதியில் இடஒதுக்கீடு சதவிகிதம் உயர வேண்டும் என்று போர்க்குரல் கொடுக்கிற அதே நேரத்தில் - மரம் வளர்த்துக் காடு பெருக்குவதிலும், சதவிகிதம் உயர வேண்டுமென்ற முனைப்புடன் ஆக்கப் பூர்வமான செயல் திட்டம் வகுத்துக் கொண்டு, ஏதோ ஆர்வத்தின் காரணமாக ஒருநாள் கூத்தாக மரக் கன்றுகளை நட்டோம் என்றில்லாமல்; தொடர்ந்து மரம் நடுகிற பணியிலும், நட்டப்பட்ட கன்றுகளைக் காப்பாற்றி வளர்க்கிற பணியிலும் அயராது ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென உன்போன்ற உடன்பிறப்புக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கிற 16 சதவிகிதப் பகுதியையும் குறைக்கிற அற்புதமான கைங்கர்யத்தைத்தான் அரசை நடத்தும் கட்சியினரும், அதிகாரிகளும் செய்து வருகின்றார்கள் என்பதை

நாள்தோறும் நாம் கேள்விப்படுகிறோம். இதோ இந்தக் கிழமை ஜூனியர் விகடனில் வால்பாறையில் மரங்கள் சூறையாடல் என்ற தலைப்புள்ள கட்டுரையில் ஒரு சில பகுதிகளை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"கோவை மாவட்டம் வால்பாறைப் பகுதியில் தேயிலைத் தோட்டம் அமைப்பதற்காக இயற்கைக் காடுகளையும் ஓங்கி வளர்ந்து நின்ற சில்வர் ஓக் மரங்களையும் வெட்டி சாய்க்க தமிழ்நாடு அரசு நிறுவனமான டேன் டீ டெண்டர் விட்டது. இதை அறிந்ததும் நம் வாசகம் நமக்குக் கொடுத்த தகவலையடுத்து உடனடியாக செயலில் இறங்கிய நமது ஆசிரியர் துரிதமாகச் செயல்பட்டு டேன் டீ நிறுவனத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் ஸ்டே உத்தரவு வாங்கினார். இதன் பயனாகப் பல்லாயிரக் கணக்கான மரங்கள் வெட்டப்பட இருந்தது தடுக்கப்பட்டது."

இந்தச் செய்திகள் அனைத்தும் 4.11.92 ஜூ.வி.யில் விவரமாக வெளி வந்தது.

இப்போது மீண்டும் நம் வாசகரிடமிருந்து பதட்டத்துடன் நமக்கு ஒரு கடிதம்... மீண்டும் வால்பாறைப் பகுதியில் மரங்களை வெட்டும் வேலை மும்முரமாக நடக்க தொடங்கிவிட்டது. மரங்களை வெட்டுவதற்கு எதிராக கோர்ட்டில் வாங்கிய ஸ்டே ஆர்டரைக் கொஞ்சம்கூட மதிக்காமல் தொடர்ந்து மரங்களை வெட்டி வருகிறார்கள் என்று தகவல் தந்தது அந்தக் கடிதம்.

வால்பாறைப் பகுதியில் வாசகம் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது நமக்குப் பெரும் அதிர்ச்சி! எதைச் செய்யக்கூடாது என்று கோர்ட் உத்தரவு சொன்னதோ... அது அங்கு நடந்துகொண்டு இருந்ததை நாம் நேரிலேயே பார்க்க முடிந்தது. நம் கண் முன்னாலேயே கூலி ஆட்கள் நீண்டு வளர்ந்த மரங்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தனர். வெட்டி சாய்த்தனர் என்று சொல்வதைவிட வேருடன் பிடுங்கிக்கொண்டு இருந்தனர் என்பதே சரி. அத்தனையும் உயிருடன் நல்ல நிலையில் இருந்த பச்சை மரங்கள்!

கோர்ட் உத்தரவுப்படி உயிருடன் இருக்கும் பச்சை மரங்களைத்தான் வெட்டக்கூடாது. மரம் பட்டுப் போனபின் வெட்ட எந்தத் தடையும் இல்லையே... இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ஒவ்வொரு மரத்துக்கும் கீழே தீயிட்டு, மரத்தின் அடிப்பகுதியில் மரப்பட்டைகளை அகற்றியும் மரங்களைப் பட்டுப் போகச் செய்கிறார்கள். பின்னர் அதையே காரணமாகக் காட்டி மரங்களை வெட்டி வீழ்த்துகிறார்கள்.

மரங்களை வெட்டக்கூடாது, காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்று ஊருக்கு உபதேசம் சொல்லும் அரசே - கண்மூடித்தனமாக மரங்களை வெட்ட ஆரம்பித்தால், தனியார் நிலங்களில் உள்ளவர்களும் இதையே சாக்காகக் கொண்டு மரங்களை வெட்டி காடுகளைச் சுத்தமாக மொட்டையடித்து விடுவார்கள். இப்போதேகூட அருகில் உள்ள ஒரு எஸ்டேட்டில் 116 ஏக்கர் நிலத்தில் உள்ள மரங்களையெல்லாம் சுத்தமாக வெட்டி எடுத்துவிட்டு வீட்டுமனை போடும் திட்டம் நடந்துகொண்டுள்ளது. இதனால், இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த அபூர்வப் பறவை இனம் ஒன்று இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

அதிகாரி ஒருவர் தனது தொழிலாளிகளிடம், மரங்களை வெட்டக் கூடாது என்றுதானே கோர்ட் உத்தரவு. வேருடன் பிடுங்கக் கூடாது என்று இல்லையே. அதனால், வேருடன் பிடுங்கி எறியுங்கள் என்று உத்தரவு போட்டுள்ளாராம்.

இந்தச் செய்திகளை திரு. எஸ். தேவராஜ் அவர்கள் ஜி.வி.யில் தொகுத்து எழுதியுள்ளார்.

ஒரு புறத்தில் வீரப்பன் மரங்களை வெட்டிக் கடத்துவதாக வால்டர் தேவாரம் தனது படைகளுடன் அணிவகுத்திட - இன்னொரு புறத்தில் வால்பாறையில் அரசு அதிகாரிகளே வீரப்பன்களாக மாறி வினைமுடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே தான் உடன்பிறப்பே; மழை வளத்தைக் குறைத்து, மனித வாழ்வின் நல்வளத்தையும் நசிக்கச் செய்திடும் இத்தகைய நாசச்செயல்களுக்கு ஈடுகொடுத்து எதிர்காலச் சமுதாயத்தை இடுக்கண்ணிலிருந்து மீட்கும் தற்காப்புப் பணியாக; நாள்தோறும்

கூட மரக்கன்று நடலாம் - கழகக் கொடி ஒன்று ஏற்றிட என்னையோ முன்னணியினரையோ அழைக்கும்போது - அதற்கருகே ஒரு மரக்கன்றும் நடலாம்.

மாற்றாரிடமிருந்து கழகக்கொடியைக் காப்பது போலவே, மாடுகள் ஆடுகளிடமிருந்து மரக்கன்றுகளைக் காத்து வளரச் செய்திடல் வேண்டும். ஜூன் திங்களில் மாநில முழுதும் பல்வேறு இடங்களில் - பல்வேறு அமைப்புகள் சார்பில் - உடன்பிறப்புகள் தனித்தனியாக - இப்பணியில் ஈடுபட்டு; அதற்குப்பிறகும் ஆண்டு முழுதும் இப்பணியைத் தொடரலாம்!

ஆர்வமுடன்! அக்கறையுடன்!

எங்கே பார்க்கலாம்; உங்கள் பகுதியில் எத்தனை மரக்கன்றுகள் வைக்கப்பட்டன என்ற விபரங்களை எழுதி அனுப்பி அந்த விபரங்களை முரசொலி வாயிலாக நான் அறிந்து மகிழ்ந்திடும் வாய்ப்பை எனக்கு உன் போன்றோர் அளிக்கிறார்களா என்று அறியத் துடிக்கும் என் ஆவலை நிறைவேற்றுகிறாயா என்று!

அன்புள்ள,

மு. க.

07-06-1994

2142. மண்டல தி.மு.கழக மாநாட்டிற்கு வருகை தர - கலைஞரின் அந்த அழைப்புக் கடிதம்

உடன்பிறப்பே,

இந்த ஜூன் திங்கள் முழுவதும் எனக்குப் பரபரப்பு - அத்தனை கூட்டங்கள், அத்தனை நிகழ்ச்சிகள்! ஜூலை திங்கள் வந்து விட்டாலோ நீ பரபரப்பாகிவிடுவாய்! மதுரை மாநாடு தேதிகள் அறிவிக்கப்பட்டாகிவிட்டன அல்லவா; அதனால்!

மதுரையில் மாவட்ட மாநாடா; மாநில மாநாடா என சந்தேகம் கேட்டு உன் போன்றோரிடமிருந்து பல கடிதங்கள் வந்த வண்ணமுள்ளன.

மாவட்ட மாநாடும் அல்ல; மாநில மாநாடும் அல்ல; இது மண்டல மாநாடு!

மதுரை மாநகரம் - மதுரை புறநகரம் - வைகை மாவட்டம் - திண்டுக்கல் மாவட்டம் ஆகிய பாண்டிய மண்டலப் பகுதிகளில் நான்கினை இணைத்து நடத்திட இருப்பதால் இதற்கு, தி.மு.கழக மதுரை மண்டல மாநாடு எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது!

மதுரை மாநகரச் செயலாளர் காவேரிமணியம் வரவேற்புக் குழுத் தலைவரெனவும் - புறநகர் மாவட்டச் செயலாளர் அக்கினிராஜ், வைகை மாவட்டச் செயலாளர் மூக்கையா, திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் பெரியசாமி மூவரும் மாநாட்டுச் செயலாளர்களாகவும் - தலைமைக் கழகத்தின் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் பி.டி.ஆர். பழனிவேல் இராசன் மாநாட்டு நிதிக்குழுத் தலைவராகவும் பொறுப்பேற்றுப் பணிபுரிவர் என்று ஜூன் 4 ஆம் நாள் நடைபெற்ற தலைமை நிர்வாகக் குழுவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட மறுநாளே மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர், மாநாட்டு நிதிக் குழுத் தலைவரும் மாநாட்டு செயலாளர்களும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் எங்களுடன் கலந்து பேசி, மதுரை மண்டல மாநாட்டுக்கான தொடக்க வேலைகளை குறித்து முடிவெடுத்துக் கொண்டு மதுரைக்குத் திரும்பிவிட்டனர்.

அடுத்து நான்கு மாவட்டங்களின் கழகப் பிரதிநிதிகள் கலந்துரையாடி - மாநாட்டுக்கான பணிகள் சிறப்புற நடைபெறுவதற்கேற்ப, பல்வேறு குழுக்களை அமைத்து அறிவித்திடுவர்.

ஜூலை இறுதி வாரத்தில் மாநாடு என்பதை மாநாடு நடைபெறும் மதுரையில் மாத்திரமின்றி; எல்லா நகரங்கள், ஊர்களிலும் உன்னால் ஒல்லும் வகையெல்லாம் விளம்பரம் செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலையை இந்த ஜூன் திங்களிலேயே தொடங்கிவிட வேண்டும்.

ஜூலை 29 காலையில் கழகத்தின் இதயமாம் பொதுக்குழு கூட இருக்கிறது. தஞ்சாவூரில் கூடி, கழகத்தின் வலிவையும் பொலிவையும் ஆதாரங்கள் பலவற்றுடன் நாட்டுக்கும், நடுநிலையாளர்க்கும் உணர்த்திய பிறகு; நடக்க இருக்கும் பொதுக்குழு!

அமைதியின் உருவமாம், நமதருமைப் பொருளாளர் சாதிக் பாட்சா அவர்களை இழந்துள்ள சூழலில் அவர் இருந்த அந்தப் பொறுப்பில் இன்னொருவரைத் தேர்ந்தெடுக்க இருக்கும் பொதுக்குழு! கழகத்தில் கட்டுப்பாடு குலைத்து அதன் காரணமாக நடவடிக்கைக்கு ஆளான ஓரிருவர் இடங்களுக்கும் தேர்தல் நடைபெற இருக்கும் பொதுக்குழு!

வழக்கம்போல் கழகத்தின் ஆண்டு வரவு செலவுக் கணக்குகளை தணிக்கை செய்த குழுவினர் சார்பாக; கணக்குகள் முன்வைக்கப்பட்டு; அதற்கான விவாதம் நடத்தி, ஒப்புதல் பெறும் பொதுக்குழு!

இன்று நாட்டில் தலைதூக்கியிருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் கருத்துரை வழங்கி; அந்தக் கருத்துக்களை மாநாட்டுத் தீர்மானங்களாக வடித்திடுவதற்குப் பரிந்துரை செய்யும் பொதுக்குழு!

பொதுக்குழுவுக்குப் பிறகு; அன்று மாலையில் மதுரை மாநகர் வீதிகளில் மகத்தான பேரணி - மாபெரும் பேரணி - பேரணி நிறைவில்; மாநாட்டு முகப்பில் கொடியேற்றும் நிகழ்ச்சி! அன்றிரவு கழகக் கொள்கை பரப்பும் இசை, கலை, நாடக நிகழ்ச்சிகள்!

மறுநாள் ஜூலை 30 - சமூகநீதி மாநாடு!

உடன்பிறப்பே; சமூகநீதி என்பது இன்று கேட்டோம்; நாளை கிடைத்தது என்கிற நிலையில் சாதாரண கோரிக்கையல்ல! சாதாரண கோரிக்கைதான்; ஆனால் சாதாரணமானவர்களுக்கான கோரிக்கை என்பதால் சாதாரணமாகக் கருதப்படுகிற கோரிக்கையாகி விட்டது!

இன்று கேட்டு, நாளை கிடைக்குமா? என்பது மட்டுமல்ல; நேற்று கிடைத்திருந்ததையும் இன்று கோட்டை விட்டுவிட்டோமே என்று குமுறும் நிலைக்கு நம்மை ஆளாக்கிவிட்ட கோரிக்கை!

இந்த மாநிலத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக மாத்திரமல்ல; இந்தியத் திருநாடு முழுமையுமுள்ள - மிதிக்கப்பட்ட சமூகங்களுக்கு வேலை வாய்ப்பில் மட்டுமல்ல; கல்வி முதலிய எல்லா வாய்ப்புகளிலும் நியாயமான உரிய இடஒதுக்கீடு தரப்பட்டே ஆகவேண்டுமெனத் தடந்தோள் தட்டும் வீரர்களின் உரிமை முரசமாக மதுரை சமூகநீதி மாநாடு அமைந்திட இருக்கிறது!

மூன்றாம் நாள் அரசியல் மாநாடு - இமய வரம்பிலிருந்து குமரிக்கரை வரையில் ரணமாகிப் போயுள்ள ஜனநாயக நெறிகள், அரசியல் பண்பாடு, இந்தி மொழி ஆதிக்கம், சமுதாயத்தைப் புரையோடிய புண்ணாக ஆக்கிட முனையும் பொருளாதார கொள்கைகள், காலனி மக்களாக நம்மை ஆக்கத் திட்டமிடும் காட் ஒப்பந்தக் கேடுபாடுகள், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஊழல், அதிலும் கொடுமையிலும் பெருங் கொடுமையாக ஏதேச்சதிகார லஞ்ச ஊழல், சகதிச்சேற்றில் அமிழ்ந்து, அமிழ்ந்து, மேலும் ஆழமாக அமிழ்ந்து போய்க் கொண்டிருக்கும் தமிழகத்தின் தத்தளிப்பு - இத்தனைக்கும் இந்தப் பேரியக்கமாம் தமிழ் மக்களின் பாசறையெனும் நமது கழகம் காண முயலும் தீர்வு என்ன என்பதை நிர்ணயிக்கும் மாநாடாகத்தான் தி.மு.க. மதுரை மண்டல அரசியல் மாநாடு திகழ இருக்கிறது!

வர ஒருநாள் - மதுரையில் தங்கிட மூன்று நாள் - திரும்பிட ஒரு நாள் இப்படி ஐந்து நாள் முகாமுக்கு அன்பு உடன்பிறப்பே; உன்னை அழைக்கிறேன்!

இத்தனை முன்கூட்டியே உன்னை அழைப்பதற்குக் காரணம்; முத்தனைய உன் செல்வ மழலைகளுடனும் - பத்தரை மாற்றுப் பொன்னாம் உன் பத்தினிப் பாவையுடனும் - பெற்றோர், நண்பர், உற்றார் உறவினருடனும் -

மதுரைப் பயணத்துக்கு நீ தயாராக வேண்டும் என்பதற்கு - இடையில் தாராளமாக நாட்கள் இருக்க வேண்டும் என்பதுதான் காரணம்!

பயணத்திற்கு முன்னேற்பாடுகள் ஆரம்பமாகட்டும் - அடுத்தடுத்து அழைப்புகள் விடுப்பேன்; அடுத்த திங்கள் மாநாடு வரையில் உன்னை சும்மாவிட்டு விடுவேனா?

அன்புள்ள,

மு. க.

08-06-1994

2143. சர்க்கரை விலையும் - இரு சர்க்கார்களின் நிலையும்

உடன்பிறப்பே,

போபர்ஸ் ஊழல், டிராக்டர் ஊழல், அர்ஷத் மேத்தா ஊழல், இப்படிப் பல ஊழல் கொழுப்பு ஆடுகளைத் தொடர்ந்து ஓடிவரும் குட்டி ஆடாக இப்போது சர்க்கரை ஊழல் வந்து சேர்ந்திருக்கிறது. இந்த ஊழலின் காரணமாக சர்க்கரை விலை ஆறு ரூபாயிலிருந்து; இப்போது பதினாறு ரூபாய் அளவுக்கு உயர்ந்து மக்கள் மனத்தைக் கசந்து போகச் செய்திருக்கிறது.

நாடு முழுதும் கூக்குரல் அதிகமாகவே, சர்க்கரையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி இந்திய உணவுக் கழகமும் - பிரதமர் நரசிம்மராவின் அலுவலகமும் - துறையின் அமைச்சகமும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டதும், மோதிக் கொள்வதும்தான் மிச்சமாக இருக்கிறது.

சர்க்கரை இறக்குமதி சம்பந்தமான எல்லா விபரங்களையும் உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று உணவுத்துறை செயலாளரிடம் பொதுக் கணக்குக் குழு கேட்டுள்ளது. அக்குழு மேற்கொண்டுள்ள விசாரணைக்கு அந்த விபரங்கள் தேவைப் படுகின்றனவாம்.

சர்க்கரை இறக்குமதி தொடர்பாக 1989 ஆம் ஆண்டு திரு. வாஜ்பேயி தலைமையிலான பொதுக் கணக்குக்குழு அளித்த அறிவுரைகளின் பேரில் இந்தத்துறை எடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றிய கேள்விக்கும் இப்போது பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி திங்களில் - பொதுக் கணக்குக் குழு அறிக்கை அளித்த பரிந்துரைகளை சுட்டிக்காட்டி, உணவுத்துறை செயலாளர் ஏ.சி. சென் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

அதில் அரசு வணிகக் கழகம் மூலம்தான் சர்க்கரை இறக்குமதி செய்யப்பட வேண்டுமென்று பொதுக்கணக்குக்குழு வரையறை செய்திருப்பதை சுட்டிக் காட்டியிருந்தார்.

எனினும் உணவுத்துறை அமைச்சர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, சர்க்கரை இறக்குமதியை இந்திய உணவுக் கழகத்திடம் ஒப்படைத்தார் அதே உணவுத்துறைச் செயலாளர்.

இது, 1989-ல் வாஜ்பேயி தலைமையிலிருந்த பொதுக் கணக்குக் குழு தெரிவித்திருந்த கருத்துக்கு மாறுபட்டிருந்ததாகக் காரணம் காட்டி, உணவுத்துறை செயலாளரின் ஏற்பாட்டை உணவுத்துறை இணை அமைச்சர் ஏற்க மறுத்து; செயலாளர் எடுத்திட முனைந்த முடிவை ரத்து செய்துவிட்டார்.

அதன்பிறகுதான் சர்க்கரை குறித்து இத்தனை பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

இப்போது அரசு வணிகக் கழகம் மூலம் 8.5 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்ய ஏற்பாடு ஆகியிருக்கிறது.

முன்பு - இந்திய உணவுக் கழகத்தின் மூலம் இறக்குமதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டபோது - ஒரு டன் சர்க்கரையின் விலை 356 டாலர் என்ற நிலையே இருந்தது.

இப்போது அரசு வணிகக் கழகம் டன்னுக்கு 60 முதல் 70 டாலர் வரையில் கூடுதலாகக் கொடுத்து வாங்க வேண்டிய நிலை; இதனால் அரசுக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாய் இழப்பு! அதே சமயம் சாதாரண மக்கள் முன்னைவிடப் பலமடங்கு அதிகமாக அநியாய விலை கொடுத்து சர்க்கரை வாங்க வேண்டிய அவதி!

இறுதியாக வந்துள்ள செய்தியின்படி கிலோ 15 ரூபாய் 50 காசுக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்வதாக சர்க்கரை ஆலை அதிபர்கள் உறுதி அளித்துள்ளார்களாம்!

இது ஒன்றும் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு இனிப்பான செய்தி அல்ல!

ஏறிவிட்ட சர்க்கரை விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, மத்தியில் உள்ள காங்கிரஸ் ஆட்சியோ; அல்லது மாநிலத்தில் உள்ள ஜெயலலிதா ஆட்சியோ ஒரு சிறிதும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

மாநில முதலமைச்சர் ஐதராபாத்தில் உள்ள திராட்சை தோட்ட மாளிகைக்கு ஓய்வெடுக்க சென்று விட்டார். மாநில அமைச்சர்களோ; எதிர்க்கட்சிகளின் மீது எரிச்சல் கக்கிப் பேசுவதிலும் - ஆத்திர அறிக்கைகள் விடுவதிலும் - நான் ஏன் ஆத்திகனானேன்? என்று பகவத் பிரசங்கம் நிகழ்த்துவதிலும் - ஏதோ பதவியில் தொங்கிக் கொண்டிருந்தால் போதுமென நினைத்துச் செயல்படுவதிலும் பொதுவாழ்வின்? போக்கியங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சர்க்கரை விலையைக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்ளாமல் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அரசு இனிய நித்திரையில் ஆழ்ந்திருக்கும்போது ஆந்திர மாநில அரசு, எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை; இதோ, தினமணி எழுதிக்காட்டுகிறது :-

> "இந்த நிலையில்தான் ஆந்திர மாநில அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. சர்க்கரை ஆலைகள் தங்கள் உற்பத்தியில் 10 சதவீதத்தை ரேஷன் கடைகளுக்காக ஒதுக்கவேண்டும். ரேஷன் விலையில் அந்தச் சர்க்கரை விற்கப்படும் என்று கூறியிருக்கிறது. தங்கள் உற்பத்தியில் 40 சதவீதத்தை லெவி சர்க்கரையாக மத்திய அரசுக்கு சர்க்கரை ஆலைகள் தரவேண்டும். அந்த 40 சதவீதத்துக்கு மேல்தான் 10 சதவீதம் தரும்படி ஆந்திர மாநில சிவில் சப்ளைஸ் அமைச்சர் கோரியுள்ளார்.
>
> ஒருவார அவகாசம் தரும்படி சர்க்கரை ஆலை அதிபர்கள் கேட்டு இருக்கின்றனர். சர்க்கரை கையிருப்பு உத்தரவுக்குக் கூடுதலாக ஆலைகளிடம் சர்க்கரை இருந்தால் கடும் நடவடிக்கை எடுக்க ஆந்திர அமைச்சர் உத்திரவிட்டுள்ளார்."

இப்படியெல்லாம் சிந்திக்க இங்குள்ள அமைச்சர்களுக்கு நேரமேது?

அவர்களது நேரமும் நினைப்பும் தமது குகை மாளிகைகளில் கும்மாளமடிக்கும் குண்டர் பெருமக்களுக்கு; எங்கே என்ன வேலை கொடுப்பது என்பதில்தானே செலவழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன!

மத்தியிலே என்னதான் நடவடிக்கை மேற்கொண்டாலும் அவற்றை வெறும் கண் துடைப்பு நாடகமாக்குகிற அளவுக்கு, மராட்டியத்திலும், உத்திரபிரதேசத்திலுமுள்ள சர்க்கரை லாபிகள் சக்தி வாய்ந்தவை என்று எக்ஸ்பிரஸ் ஏடே செய்திக் குறிப்பொன்றை முதல் பக்கத்திலே வெளியிட்டுள்ளது.

சலுகைகளால் சுயநலத்தின் சுவை கூடுமென்ற சபலமுடையோர்; யார் - எங்கே அரசுப் பொறுப்பில் இருந்தாலும்; அவர்களால் சர்க்கரை விலையென்ன - சகலவிதமான பிரச்சினைகளையும் சமாளிக்க முடியாதுதான்!

அதற்கு இந்த சர்க்கரை பிரச்சினை; ஓர் எடுத்துக்காட்டு!

அன்புள்ள,

மு. க.

09-06-1994

2144. ஜனநாயகம் உண்மையாகச் செயல்பட; தேர்தல் கமிஷன் திருத்த மசோதா போதுமானதா?

உடன்பிறப்பே,

மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளாத நேரமில்லை - ஆனால் இந்த ஜனநாயகத்துக்கு நேரடியாகவே ஆபத்து வந்த நெருக்கடி நிலை காலத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடன் கைகோத்து நின்று இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை நடத்திய இயக்கங்களில் ஒன்றாகத் தி.மு.கழகம் விளங்கியதையும்; கட்டுப்பாடும் ஜனநாயகமும் இந்த நாட்டுக்குத் தேவையே தவிர, கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகமல்ல Discipline and Democracy not Disciplined Democracy என்று குரல் கொடுத்த காரணத்திற்காக ஆட்சி கலைப்பு எனும் பரிசை கழக ஆட்சி பெற்றதையும், வரலாறு மறைத்துவிடமுடியாது என்பதால் ஜனநாயகத்தைப்பற்றி பேசவும், எழுதவும், அதற்கு ஊனம் ஏற்படும் காலத்தில் கண்டித்துச் செயல்படவுமான உரிமை நமக்கு உண்டு.

அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம்; கடமை உணர்வுடனும் - கண்ணியமான தன்மையுடனும் - கட்டுப்பாடு காத்திடும் இயல்புடனும் வலிவு பெற்று பொலிவுற்று ஓங்கி உயரவேண்டுமென்பதற்காக; வைரக்கற்களாயினும் அவை தங்கப்பதக்கத்தில் பதிக்கப்படும்பொழுதுதான் சிறப்பு என்பதற்கேற்ப; கொள்கை, கோட்பாடு, குறிக்கோள்களில் பெருமை பெற்று இக்கழகத்திற்கு சட்டதிட்டங்களும் அவற்றின் அடிப்படையில் ஜனநாயக முறையில் தேர்தல்களும் - நடைமுறைகளும் - என்ற நிலை தொடக்க காலத்திலேயே தோற்றுவிக்கப்பட்டு; அவை இன்றளவும் பேணிக் காக்கப்படுகின்றன.

கழகத்தில் உறுப்பினர் தேர்தல், கிளைக் கழகங்களை அமைத்தல், அவற்றின் பிரதிநிதிகள் ஒன்றிய நிர்வாகிகளைத் தேர்வு செய்தல், ஒன்றியக் கழகச் செயலாளர்களும் பிரதிநிதிகளும் மாவட்டக் கழக நிர்வாகிகளையும், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்தல், அந்த உறுப்பினர்களும் ஒன்றியச் செயலாளர்களும் கொண்ட கழகத்தின் இதயமாம் பொதுக்குழு, தலைமைக் கழகத்திற்கான தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் தணிக்கைக் குழுவினரை தேர்வு செய்தல் - எனப் படிப்படியாக, சட்டதிட்டபடி ஜனநாயக முறையை வழுவறக் கடைப்பிடிக்கும் நமது இயக்கம்; நாமே நினைந்து மகிழ்ந்து பெருமிதமடையக்கூடிய அளவுக்கு அமைப்பு ரீதியான ஜனநாயக இயக்கமாகும்.

உடன்பிறப்பே, கழகத்தின் பெயர் - கொடி - தேர்தல் சின்னம்; இவை வேறு யாருக்கும் உரியதல்ல என்று தேர்தல் கமிஷன் முன்பு வழக்காட வேண்டிய ஒரு நிலை, ஏறத்தாழ ஐம்பத்தி ஆறு ஆண்டு காலப் பொது வாழ்க்கையில் - அண்ணாவுடன் சேர்ந்து தி.மு.கழகம் தொடங்கியவர்களின் ஒருவனான எனக்கும், அதேபோலப் பேராசிரியருக்கும் ஏற்பட்டபோது; தேர்தல் கமிஷனில் நமக்காக வாதாடிய பிரபல வழக்கறிஞர் திரு. கபில்சுபல் அவர்கள் நமது கழகத்தின் அமைப்பு முறையை எப்படிப் பாராட்டியிருக்கிறார் தெரியுமா!

> நானும் இந்தியாவில் எத்தனையோ அரசியல் கட்சி வழக்குகளில் ஆஜராகி வாதாடியிருக்கிறேன். ஆனால் தி.மு.க.வைப் போல இவ்வளவு அருமையான அமைப்பு முறையும், அவற்றுக்கான ஆதார ஆவணங்களும் கொண்ட ஒரு கட்சியை நான் இதுவரை பார்த்ததில்லை என்று பேராசிரியரிடமும் மற்றவர்களிடமும் டெல்லியில் விவாதிக்கும்போது வியந்து கூறியிருக்கிறார்.

இப்படியொரு ஜனநாயகக் கோட்பாட்டுக்கு மதிப்பளித்து, அந்தக் கோட்பாட்டுக்கு நம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் போது; அந்தக் கோட்பாடுகள், சில கட்சிகளின் அளவில் புறக்கணிக்கப்படுமேயானால் அதற்காக நாம் கவலைப்படுவதுமில்லை; கவலைப்படத் தேவையுமில்லை. ஆனால்; நாட்டு மக்கள் தங்களுக்கான ஆட்சிமன்றப்

பிரதிநிதிகளையோ அல்லது ஓர் ஆட்சியையோ தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பை ஜனநாயக முறைப்படி பெற்றிடும் போது; அந்த மக்களைக் கண்ணைக் கட்டிக் காட்டில் விடும் போக்கு இந்தக் காலத்திலும் நீடிப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஜனநாயகம்; அதாவது மக்களே அமைத்துக் கொள்ளும் மக்களாட்சியெனும் மாண்பு, பழந்தமிழகத்திலேயே பழக்கத்தில் இருந்த ஒன்று என்பதை உத்திரமேரூர் செப்பேடுகள் நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற சான்றோர் அடங்கிய மன்றங்களை, தேர்வு முறை மூலம் அந்தந்தப் பகுதி மக்கள் வாக்களித்து அமைத்திருக்கின்றனர் என்பதற்கு அந்தச் செப்பேடு சான்று பகருகிறது.

மன்ற உறுப்பினராகவோ, தலைவராகவோ ஆவதற்கு எத்தகைய தகுதிகள் தேவையெனக் குறிக்கப்பட்டு, அத்தகையோரை குடவோலை மூலமாகத் தேர்ந்தெடுத்தனர் என்பதற்குச் சங்க இலக்கியம் சான்று கூறுகிறது.

போர்க்களத்தில் பிணமாகிக் கிடக்கும் வீரனின் குடலை, கழுகுகள் உருவுவது; குடவோலை முறையில் குடத்துக்குள் போடப்பட்டுள்ள வாக்கு ஓலைகளை உருவி வெளியே எடுப்பதுபோல் உள்ளது என்று; மாவீரனின் தீரச்சாவையும் மக்களாட்சி மாண்பையும் இணைத்து உவமை கூறிப் பாடியிருக்கிறான் சங்க காலப் புலவர் பெருமகன்!

எனவே, பல்லாண்டுகட்கு முன்னரே அரும்பு காட்டிய; ஜனநாயக நெறி - மக்களாட்சி முறை - தமிழகத்துக்கு மட்டுமின்றி இன்று இந்தியத் திருநாடு முழுமையும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருப்பினும் - அந்த நெறியும் முறையும்; தூய்மையான, நேர்மையான வழியில் அடையத்தக்கதாக தற்காலத்துச் சமுதாய அமைப்பில் இல்லை என்பதை நொந்த மனத்துடன்தான் கூற வேண்டியுள்ளது.

நாடு, சமுதாயம், அவற்றின் எதிர்காலம் எனத் தொலைநோக்கோடு சிந்தித்து; தங்களின் பிரதிநிதிகளையோ ஓர் ஆட்சியையோ அமைக்க வேண்டுமென்பதில் சிரத்தையற்றவர்களாகவே மிகப்பெரும்பாலான வாக்காளப் பெருமக்கள் இருக்கிறார்கள்.

மற்றொரு சாராரோ, தங்கள் கையில் உள்ள வாக்குச்சீட்டு தேசத்தில் தலையெழுத்தையோ அல்லது தமிழகத்தின் தலையெழுத்தையோ நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்த படைக்கலன் என்பதை எண்ணிப்பாராமலே; அன்றைய தினத்து ஆதாயம் எவ்வளவு எனக் கணக்கிடும் வாக்கு வணிகர்களாகவே இருக்கிறார்கள்.

கடந்த காலங்களில்; ஏன் இப்போதும் கூட வடபகுதி மாநிலங்களில் வாக்குச் சாவடிகளையே ஆக்ரமித்துக்கொண்டு, வலுத்தவர்கள் இளைத்தவர்களை வென்றிடுவது வாடிக்கையாகி; அந்த உணர்வு மெல்லமெல்லத் தமிழகத்திற்கு பரவி - சாவடிகளை ஆக்ரமித்துக் கைப்பற்றாவிடினும், வாக்காளர்களை வரவொட்டாமல் பணக் கதவிட்டுத் தடுத்தும் - உண்மையான வாக்காளர்களுக்கு மாற்றாக கள்ள வாக்குகளை நிரப்பியும் - எப்படியும் வெல்வது என்று, அறவழிக்கு ஒவ்வாத அராஜகங்களின் மூலம் வாகை சூடுவது ஒருவகை ஜனநாயகம் ? என்றாகிவிட்டது!

இப்போது தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றி நாடு தழுவிய விவாதம் நடக்கிறது. அதனையொட்டி, நாடாளுமன்றத்திலும் மாநிலங்களவையிலும் மசோதாக்கள் வர இருக்கின்றன. கூட்டிக் கழித்துப் பார்க்குமிடத்து; யாரோ ஒரு தனிப்பட்ட மனிதர் மீது தாக்குதல் தொடுத்திடும் முனைப்பு மட்டுமே இந்த மசோதாக்களின் தாத்பர்யமாக இருக்கிறதே தவிர, நேர்மையான முறையில் தேர்தல்கள் நடக்கவேண்டும் - நாட்டில் உள்ள வாக்குரிமை பெற்றோர் அனைவரும் கட்டாயம் வாக்களிக்கவேண்டும் - தவறுகள் நடவாதிருக்க வாக்காளர்கட்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவேண்டும் - என்பன போன்ற கருத்துக்களுக்கு மத்திய அரசினர் முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரியவில்லை.

அரசின் கைப்பாவைகள்தான் தேர்தல் கமிஷனர்களாக இருக்கவேண்டும் என்ற மறைமுகத்திட்டத்துடன்; தர்ம நியாயம் பேசுவது போல் நடிப்பது ஏற்கத்தக்கதல்ல! அத்தகைய எந்தத் திருத்தமும் வருத்தத்திற்கே வித்திடும்!

அதிகார துஷ்பிரயோகமின்றி - தேர்தல் விதிமுறைகளைக் காலில் போட்டு மிதிப்பதை விடுத்து - அமைச்சர்கள் தலையீட்டை அறவே நிறுத்தி - வாக்காளர்களும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும்; அதற்கும் அடையாள அட்டைகள் பயன்படுத்தப்பட

வேண்டும் - தேர்தல் விதிமுறைகளை இம்மியும் மீறக்கூடாது என்பன போன்ற சான்றாண்மை இல்லையேல் ஜனநாயகம் வெறும் போலி வேடமாகவே கருதப்படும்!

தேர்தலில் சீர்திருத்தம் விரும்புவது தூய்மையாக இருந்தால் மாத்திரமே; தேர்தல் கமிஷனுக்காக கொண்டு வரும் எந்த திருத்தமும், சீர்திருத்தமும் செயல்பட இயலும்!

இல்லையேல் ஜனநாயகம் என்பது சர்வாதிகாரசக்திகள் அணிந்து கொள்ளும் போலி முகமூடியாகத்தான் ஆகிவிடும்!

அன்புள்ள,

மு. க.

10-06-1994

2145. புதிது புதிதாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கு போலிச் சாமியார்களிடம் எச்சரிக்கை தேவை...!

உடன்பிறப்பே,

என்னதான் பயங்கரமான படிப்பினைகளைப் பெற்றாலும் - புதிதுபுதிதாக அவ்வப்போது புறப்பட்டு, ஊர்மக்களை ஏமாற்றும் போலிச்சாமியார்களிடத்தில் ஏற்படும் குருட்டு நம்பிக்கையும், அதன் விளைவாக உண்டாகும் இழிவும், இழப்பும் இன்னமும் பெரும்பாலான மக்களின் விழிகளைத் திறந்தபாடில்லை.

இந்தியாவின் ரஸ்புடீன் எனப் புகழ்பெற்று திக்விஜயம் செய்த திரேந்திர பிரமச்சாரி முதல் தெருவில் பிச்சையெடுக்கச் சிறுவர்களைப் பிடித்து அவர்களின் கண்களைக் குத்தி காசு சம்பாதிக்கும் கபோதிச் சாமியார்கள் வரையில்; எத்தனை முறை எப்படி எப்படியெல்லாம் மக்களை ஏமாற்றி இறுதியில் அகப்பட்டுக் கொண்டாலும் - அதனால் தெளிவு பெறாத பாமர மக்கள் - ஏன்; படித்த கூட்டத்தினர்கூட - பணமலை குவிக்க முடியுமா? பதவிகள் தேடி வருமா? உத்தியோக உயர்வு கிடைக்குமா? நோய் தீருமா? என்பன போன்ற வரங்களைப் பெற்றிட அந்தச் சாமியார்களை வட்டமிட்டுக் கொண்டு தானிருக்கின்றனர்.

ஏதோ ஒரு சிலர், மக்கள் தங்கள் மீது கொண்டுள்ள அன்பினால் வழங்கும் காணிக்கைகளைக் கொண்டு கல்வி வளர்ச்சி போன்ற மனிதநேயப்பணிகள் ஆற்றுகிறார்களே தவிர; பெரும்பாலோர் போலிச்சாமிகளாகத்தான் நடமாடிக் கொண்டு பணவேட்டையிலும், பெண் வேட்டையிலும் ஈடுபட்டுக் கடைசியாகக் கொலை கொள்ளைகளின் கதாநாயகர்களாகவும் காட்சி தந்து மறைகிறார்கள்.

இதோ; ஆனைமலை அப்பன் என்று ஒரு சாமியார் - அவரிடம் அருள் பெறுவதென்றால் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் நிர்வாணமாகத்தான் நிற்கவைத்து ஆசி வழங்குவாராம். சாமியார் உடலிலும் அப்போது ஆடை இருக்காதாம். சாமியாரும் பக்தர்களான ஆண்களும் பெண்களும் உடையற்ற நிலையிலேயே ஒருவர் உடலில் ஒருவர் விபூதி பூசித்தடவி விடுவார்களாம். அந்த ஆனைமலைச்சாமிக்கு அந்த வட்டாரத்தில் சீடர்கள் ஏராளமாம். ஏனிருக்கமாட்டார்கள்; அருள்பாலிக்கும் நேரம் அர்த்த ராத்திரி! அருள் பாலிக்கும் முறையோ இரு தரப்பினரும் பிறந்த மேனியாக! சிறந்த சாமியாராகத்தானே அவர் செல்வாக்குப் பெற முடியும்!

இப்படியொரு சாமியார் பற்றிய தகவலை நக்கீரன் வெளியிட்டுள்ளது.

மற்றொரு கொடுமைக்கார சாமியார் குறித்து குங்குமம் ஜூன் 3-ந் தேதியிட்ட இதழில் வெளிவந்துள்ள சுகுமாரன் என்பவர் எழுதியுள்ள செய்திக் கட்டுரையை நீயும் படித்துப்பார்த்து, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருப்பதற்கு அவர்களுக்கும் விபரம் கூறிடவேண்டுகிறேன்.

இதோ குங்குமம் இதழில் வந்துள்ள செய்திக் கட்டுரை :-

சென்ற வாரம் ஒருநாள் உதவும் கரங்கள் வித்யாகர் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

என்னிடம் ஒரு சிறுவனைக் கொண்டு வந்து ஒப்படைத்திருக்கிறார்கள். ஆந்திராவைச் சேர்ந்தவன். அவனுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமையைக் கேட்டால் அதிர்ந்து போவீர்கள் என்று குறிப்பிட்டார்.

மறுநாள் அரும்பாக்கத்தில் உள்ள உதவும் கரங்கள் எனும் அமைப்பின் அலுவலகத்தில் வித்யாகரைச் சந்தித்தோம்.

போன திங்கட்கிழமை அதாவது 16-ந் தேதி காலை பத்து மணிக்கு ஆல் இந்தியா ரேடியோவிலிருந்து எனக்குப் போன் வந்தது. கீரன் என்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பேசினார். வானொலி நிலையத்தில் தோட்டக்காராராகப் பணிபுரியும் கருணாகரன் என்பவர் ஒரு சிறுவனை அழைத்து வந்திருப்பதாகவும், அவனை எங்களிடம் ஒப்படைக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். சரி என்று

சொன்னேன். சிறிது நேரத்தில் அந்தச் சிறுவனை அழைத்து வந்தார்கள். அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனேன். அவனுடைய இரண்டு கண்களும் வீங்கி இருந்தன. ஓயாமல் நீர் வழிந்து கொண்டிருந்தது. கண்களில் ஏற்பட்ட காயம் சீழ் பிடித்துப் புரையோடி இருந்தது என்று வருத்தமாகக் குறிப்பிட்டார் வித்யாகர். சிறுவன் பெயர் கோபி. ஆந்திர மாநிலம் ஏலூரைச் சேர்ந்தவன்.

வானொலி நிலையத்தில் தோட்டக்காரராகப் பணிபுரியும் கருணாகரன் திருநின்றவூரைச் சேர்ந்தவர். பதினைந்தாம் தேதி ஞாயிறு பிற்பகல் வேலைக்கு வருவதற்காக திருநின்றவூரில் ரயில் ஏறி இருக்கிறார். அவர் பயணம் செய்த பெட்டியில் ஒரு சாமியாரும் இருந்தார். ஐயப்ப வேட்டி, துண்டு, தாடி சகிதமாக இருந்த சாமியார் சீட்டில் உட்கார்ந்தபடி காலை கீழே சின்ன மூட்டை மாதிரி இருந்த உருவத்தின்மீது அழுத்தமாக ஊன்றியிருந்தார். அந்த உருவம் ஒரு சிறுவன். அவன் சாமியாரிடமிருந்து தப்புவதற்காகத் திணறிக் கொண்டு இருந்திருக்கிறான்.

பெட்டியில் இருந்த பயணிகளுக்கு இந்த சித்ரவதையைப் பார்த்துப் பொறுக்க முடியவில்லை. பையன் அழுது கொண்டும் கத்திக்கொண்டும் இருந்திருக்கிறான்.

பையன்மீது காலை வைக்காமல் இருக்கும்படி சாமியாரிடம் சொல்லியிருக்கிறார்கள். காலை எடுத்தால் ஓடிவிடுவான் என்று சொல்லி விட்டு அவன் தோளை முன்னைவிட இறுக்கமாக அழுத்தியிருக்கிறார். பயணிகள் பதறிப்போய்த் தடுக்க முயற்சித்திருக்கிறார்கள்.

இந்த விஷயத்தில் நீங்க தலையிட வேண்டாம். இது என் பையன். நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று எச்சரித்திருக்கிறார்.

அதுவரை சாமியாரின் பிடியிலிருந்து தப்புவதற்காகப் போராடிக் கொண்டிருந்த சிறுவன் வாயைத் திறந்து தெலுங்கில் இதி நா நைனா காது இது என் அப்பா இல்லை என்று அழுதிருக்கிறான். தெலுங்கு தெரிந்த சிலர் அதைப் புரிந்து கொண்டு பையனை விசாரித்திருக்கிறார்கள்.

சொந்த ஊர் ஏலூர். விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை அம்மா கூப்பிடுவதாகச் சொல்லி ஏமாற்றுச் சாமியார் கடத்தி வந்திருப்பது தெரிந்தது. பயணிகள் உதவி செய்வார்கள் என்று சிறுவனுக்குப் புரிந்ததும் தோட்டக்காரர் கருணாகரனின் காலைக் கட்டிக்கொண்டு கதறியிருக்கிறான். சாமியாரின் லீலை புரிந்ததும் ரயில் பயணிகள் பையனைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு சாமியாரை மொத்தியிருக்கிறார்கள். சாமியார் வைத்திருந்த பையையும் பிடுங்கி இருக்கிறார்கள். அதற்குள் ரயில் வேகம் குறையவே போலிச்சாமியார் தப்பி ஓடிவிட்டார்.

போலிச் சாமியாரின் பையைச் சோதனையிட்டதில் கூர்முனைக் கம்பிகள் ஐந்து அகப்பட்டன. துருப்பிடித்துப் போன அந்த கம்பி ஊசியால் பையனின் கண்களைக் குத்திச் சிதைத்திருக்கிறார் சாமியார்.

பையனை எங்களிடம் கொண்டு வந்தபோது இரண்டு கண்களும் வீங்கியிருந்தன. இரண்டிலுமே பார்வை இல்லை என்று அழுதான். நாங்கள் உடனடியாக சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தோம் என்று குறிப்பிட்டார் வித்யாகர். இந்தத் தகவலை செவ்வாய்க்கிழமை வெளிவந்த நாளிதழ்கள் வெளியிட்டன.

செய்தியைப் பார்த்த பிறகு செங்கை மாவட்டம் திருவள்ளூர் பக்கம் இருக்கிற வேப்பம்பட்டு கிராமத்திலிருந்து எனக்கு மேலும் அதிர்ச்சிகரமான தகவல் வந்தது. கிராம நிர்வாக அதிகாரி மாதவன் என்பவர், நேத்தே அந்தப் போலிச் சாமியாரையும், அந்தப் பையனையும் செவ்வாய்ப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன்ல ஹேண்ட் ஓவர் பண்ணிட்டோமே. இன்னைக்கு இப்படி நியூஸ் கொடுத்திருக்கீங்களேன்னு கேட்டார். எனக்கு பிரச்சினை தீவிரமானது என்று புரிந்தது. நான் வேப்பம்பட்டுக்கு புறப்பட்டேன் என்று சொன்னார் வித்யாகர்.

ஞாயிற்றுக்கிழமை போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கப்பட்ட சாமியாரும், பையனும் எப்படித் தப்பியிருப்பார்கள் என்று தெரிந்து கொள்ள வித்யாகர்

வேப்பம்பட்டு சென்றிருந்தார். வேப்பம்பட்டு பஜார் ரோட்டில் பெட்டிக்கடை வைத்திருக்கும் ஒருவரும், இளநீர் விற்பனை செய்யும் பெண்மணி ஒருவரும் சாட்சி சொல்லியிருக்கிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு சாமியார் பஜார் ரோட்டில் ஒரு சிறுவனுடன் நடமாடிக் கொண்டிருந்திருக்கிறார். பையனின் கண்கள் சிதைக்கப்பட்டிருந்தன. சாமியார் பையனை அடித்து மிரட்டி பிச்சை எடுக்கச்சொல்லி வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

ஊர் மக்கள் விசாரித்தபோது, என் பையன், என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று வீம்பாகப் பதில் சொல்லியிருக்கிறார் சாமியார். பையன் துடிதுடிப்பதைப் பார்த்து பொறுக்க முடியாத ஊர்மக்கள் பத்துப் பதினைந்து பேர் சாமியாரைப் பிடித்து மொத்தியிருக்கிறார்கள்.

கொஞ்சம் அயர்ந்தால் சாமியார் ஓடிவிடக்கூடும் என்று பயந்த ஊர் மக்கள் சாமியாரைக் கட்டி இழுத்து செவ்வாய்ப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். ஊர் மக்கள், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் நாளிதழ் ஒன்றின் நிருபர் அதில் அடங்குவார்கள்.

போலீஸ் ஸ்டேஷனுக்கு போகும் வழியிலேயே சாமியார் ஊர் மக்களிடம், நீங்கள் எல்லாம் ஆம்பிளையா இருந்தா ஒத்தைக்கு ஒத்தை வாங்க. இப்ப போலீஸ்ல புடிச்சுக் குடுக்கிறீங்களே. இதோ அரை மணி நேரத்தில் வெளியே வந்து காட்டறேன் என்று சவால் விட்டிருக்கிறார்.

செவ்வாய்ப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் சாமியாரைக் கொண்டு விட்டதும் மக்கள் திரும்பிவிட்டனர். அப்போது ஸ்டேஷனில் இருந்தவர்கள் ஒரு கான்ஸ்டபிளும் காவலர் ஒருவரும் ஆக இரண்டு பேர் மட்டுமே.

காவல் நிலையத்தில் ஒப்படைத்த சிறிது நேரத்தில் சாமியார் சுதந்திரமாக வெளியேறியிருக்கிறார்.

அந்த ஸ்டேஷனுக்குப் போய் விசாரித்தபோது முதலில் அவர்கள் கேட்டது நீங்க யார்? எதுக்கு வந்தீங்க? என்பதுதான் என்று வித்யாகர் கூறினார்.

வழக்கமாக ஒரு குற்றவாளி மீது முன்தகவல் அறிக்கை எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்படும். செவ்வாய்ப்பேட்டை காவல் நிலையத்தில் அதுபோன்ற நடைமுறைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்றார் வித்யாகர்.

ஊர் மக்கள் ஒப்படைத்த குற்றவாளியை எப்படி வெளியே விடலாம் என்று கேட்டேன். அந்த சாமியார் பையனை எங்கேயிருந்து கூட்டிட்டு வந்தாரோ அங்கேயே கொண்டுபோய் விட்டுடறதாச் சொன்னார். அதனால விட்டுட்டோம். நீங்க பேசுவீங்க சார். ஜனங்க அடிச்சு இழுத்துக்கொண்டு வந்தாங்க. லாக்கப்பில உயிர் போச்சுன்னா நீங்க பதில் சொல்லுவீங்களான்னு என்னை பதில் கேள்வி கேட்டார்கள். வித்யாகர் கசப்புடன் குறிப்பிட்டார்.

சாமியார்களிடமிருந்து ஊர் மக்கள் கைப்பற்றிய பொருட்களில் இரண்டு சின்ன திரவக் குப்பிகள் இருந்திருக்கின்றன. அவை குங்குமமும் மருந்தும் என்று சொல்லியிருக்கிறார் சாமியார். வேப்பம்பட்டைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீதரன் அவற்றைப் பரிசோதனை செய்து பார்த்ததில் இரண்டு வர்ணம் சேர்க்கப்பட்ட ஆசிட் என்றும் புலனாயிற்று. அது தவிர, கால் கிலோ அளவுக்கு கஞ்சாப் பொட்டலமும், சைக்கிள் சக்கரக் கம்பிகளைக் கூர்மைப்படுத்திய ஐந்து ஊசிகளும் இருந்திருக்கின்றன. அந்தக் கம்பி துருப்பிடித்திருந்தன.

அந்தக் கம்பியால் பையனுடைய கண்களைக் குத்தியிருக்கிறார். துரு ஏறியதால் பையனின் விழிக் காயங்களில் சீழ் கட்டியிருந்தது. இங்கே கொண்டு வந்தபோது டெட்டனஸ் வந்திருந்தது. உடனடி சிகிச்சை மூலம் அபாயத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறோம். பையனின் வலது கண் முழுவதுமாக டேமேஜ் ஆகியிருக்கிறது. இடது கண்ணில் ஊசியால் குத்தும்போது கண்ணை இறுக மூடியிருப்பான் போலத் தெரிந்தது. அதனால் கருமணியில் காயம் படாமல் தப்பியிருக்கிறது. அந்தக் கண்ணிலும் பார்வை மங்கலாகத்தான் தெரிகிறது என்கிறான். வலது கண்ணில் பார்வை வர வாய்ப்பில்லை. நீங்கள் பையனைப் பாருங்கள் என்றார் வித்யாகர்.

வித்யாகரின் கையைப் பற்றிக் கொண்டு தடுமாறி வந்து உட்கார்ந்தான் அந்தச் சிறுவன். நமக்குத் தெரிந்த அரைகுறைத் தெலுங்கில் விசாரித்தோம். அவன் சொன்ன பதில்-

என் பேரு கோபி. இரண்டாம் வகுப்பு படிக்கிறேன். ஏலூர் எங்க ஊர். அப்பா பேரு மகேஷ். சுருட்டு தயாரிக்கிற வேலை செய்றார். அம்மா பேரு சாவித்திரம்மா. தியேட்டர் கிட்ட கடலை வியாபாரம் செய்றாங்க. அண்ணா ஒருத்தன் இருக்கான். பேரு ராகவன். அன்னிக்கு கோவில்கிட்ட விளையாடிக்கிட்டிருந்தேன். அப்ப ஒரு சாது வந்து அம்மா கூப்புடாறங்கன்னு கூப்பிட்டாரு. நான் கூடப் போனேன். அந்த சாது ரயில்வே ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு வந்தாரு. அம்மா எங்கேன்னு கேட்டேன். இதோ காட்டறேன்னு சொல்லிட்டு ரெயில்ல ஏத்திட்டாரு. நான் ஓடப் பார்த்தப்போ பிடிச்சு வெச்சுக்கிட்டாரு. அப்புறம் ஒரு எடத்துக்குக் கொண்டு போய் கண்ணைக் குத்தினாரு. பிறகு பிச்சை எடுக்கச் சொல்லி அடிச்சாரு.

புண்ணாகி நீர் கசியும் விழிகளைத் துடைத்தபடியே கோபி சொன்னதைக் கேட்கும்போது வருத்தமாக இருந்தது. நேற்று வரை பார்வையுடன் இருந்த சிறுவன் இன்று அராஜகமாக இருளில் தள்ளப்பட்டு தடுமாறுவதைப் பார்த்த போது வேதனை மண்டியது.

இந்த விஷயத்தில் போலீஸ் நடந்து கொண்ட விதம் மிக வேதனையாக இருக்கிறது. ஓர் ஏழைப் பையன் என்பதால்தானே இந்த அலட்சியம். இதுவே வசதியான குடும்பத்தைச் சேர்ந்த குழந்தையாக நேர்ந்திருந்தால் அலட்சியமாக இருப்பார்களா? என்று கேட்கிறார் வித்யாகர்.

கோபி மிகவும் ஒத்துழைப்பான சிறுவன் என்றும் பாராட்டினார் வித்யாகர். உதவும் கரங்களுக்குக் கொண்டு வரப்பட்டபோது ஒதுங்கி இருந்தவன் மெல்ல மெல்ல ஒட்ட ஆரம்பித்திருக்கிறான். அவனுக்கு தொடர்ந்து சிகிச்சை நடந்து வருகிறது. ஆந்திர மாநிலம் ஏலூர் காவல் நிலையத்துக்கும் அவனைப் பற்றித் தகவல்

அனுப்பப்பட்டுள்ளது. பெற்றோர்கள் வந்தால் அவர்களிடம் ஒப்படைப்பது, அல்லது ஒரு மாதம் வரை சென்னையில் அவனுக்கு சிகிச்சை அளித்துப் பராமரிப்பது என்பது வித்யாகரின் முடிவு.

மக்களின் விழிப்புணர்ச்சியால் சிறுவன் கோபி காப்பாற்றப்பட்டு உதவும் கரங்களில் அடைக்கலமாகி இருக்கிறார். காவல் துறையின் அலட்சியத்தால் அந்தப் போலிச்சாமியார் தப்பி சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறான்.

கடந்த பதினேழாம் தேதி செவ்வாய்க்கிழமை காலை அதே போலிச் சாமியார் இன்னொரு சிறுவனுடன் அம்பத்தூரில் நடமாடியதைச் சிலர் கவனித்திருக்கிறார்கள். துருப்பிடித்த ஊசிக்கம்பியால் இன்னொரு கோபியின் கண்கள் கொத்தப்படப் போகிறதோ என்று நமக்குப் பயமாக இருக்கிறது.

உடன்பிறப்பே, இந்தக் கட்டுரையைப் படித்த பிறகு உனக்கு என்ன தோன்றுகிறது? எனக்கென்னமோ எத்தனை முறை ஏமாற்றத்துக்கு ஆளானாலும் நமது மக்கள் திருந்தித் தெளிவடைவார்களா என்பது சந்தேகமாகத்தானிருக்கிறது. அதற்காக, நாம் ஆற்ற வேண்டிய பணியை ஆற்றாமல் ஒதுங்கிவிட முடியுமா?

அறிவுத்தெளிவு ஏற்படாத காரணத்தால் எத்தர்களுக்கும் கடவுள் பித்தர்களைப் போல் உலவும் கயவர்களுக்கும் தங்களின் மூளையை அடகு வைத்துவிட்டு சதைப் பிண்டங்களாய்த் திரியும் மக்களைக்கொண்ட இந்தச் சமுதாயத்தைச் சீர்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் நமது இலட்சியப் பயணத்தில் முக்கியமான குறிக்கோளில் ஒன்று என உறுதி மேற்கொண்டு அந்தத் தொண்டினையும் தொடருவோமாக!

அன்புள்ள,

மு. க.

11-06-1994

2146. கா, கா, கா!
இது கலைஞர் பாடும் பாட்டு

கா, கா, கா,
பாட்டொன்று பராசக்தியில்
கேட்டனையா தம்பி!

பகுத்தறிவாளருக்கே
பாடம் போதிக்கும் உடுமலையார் பாட்டு!

பலன் பெறவே கூலிக்கு மாரடித்துத்
தடம் மாறும் கூட்டத்துக்கு, அது வேட்டு!

கா, கா, கா,
பழைய பாட்டு தம்பி அது;
புதிய பாட்டு கேட்டிடுவாய்!

கா, கா, கா, என்று
காக்கா பிடிக்கிறாங்க இப்போ; அதைக்
கண்டுபிடிச்சு காட்டினாக்கா ரொம்ப தப்போ?

கட்அவுட் வச்சாலும் காக்கா; மரபுகளைக்
கத்தரிச்சு எறிஞ்சாலும் காக்கா!

காலடியில் தள்ளி மக்களை மிதிப்பதுபோல் ஏடுகளில்,
கனஜோரா விளம்பர அறிக்கை கொடுத்தாலும் காக்கா!

சபாநாயகரோட ஆசனத்தை ஆக்கிரமிச்சாலும் காக்கா;
சபை நடுவே; அவர், இவர் காலிலே விழுந்தாலும்
காக்கா!

சபையினிலே என் ஜாதி உயர் ஜாதின்னு
சவால்விட்டுக் கத்தினாலும் காக்கா!

மகாமகக் குளியலுக்கும் காக்கா; அங்கே,
மாண்டார்கள் நூறு பேர் என்றாலும் காக்கா!

மண்சோறு மந்திரிகள் தின்றாலும் காக்கா!
வெண்சாமரங்கள் வேப்பஞ்சேலை கட்டினாலும்
காக்கா -
அங்கப்பிரதட்சணம் செஞ்சாலும் காக்கா;
அரிசி விலை அநியாயமாய் ஏறினாலும் காக்கா!

பஸ் கட்டண உயர்வுக்கும் காக்கா;
பல விலைகள் உச்சிக்குப் போனாலும் காக்கா!

கொள்ளைக்கும் காக்கா,
கொலைகளுக்கும் காக்கா,

கொடூரமான வழிப்பறிக்கும் காக்கா,
கோடி கோடியாக் குவிச்சாலும் காக்கா!

கொடுமையென்ன சொல்வேனடா தம்பி; இப்போ
கொள்கைக்கே கொள்ளி வைக்குதடா காக்கா!

பெரியார் அண்ணா பெயரைச் சொல்லிச் சொல்லி,
பித்தலாட்டம் செய்வோரை தூக்கிப் பிடிக்குதடா
காக்கா!

இப்ப, இடஒதுக்கீடு மீனையும் கொத்துதடா கொக்கா;
இதுக்கும் ஜே போட்டு ஜையை வாழ்த்துதடா காக்கா!

அன்புள்ள,
மு. க.
19-06-1994

2147. ஜூலை 10 முதல் தொடங்கும் இடஒதுக்கீட்டு அறப்போர்ப் பணியில் அனைத்துக் கட்சி அமைப்புக்களுடன் கலந்துபேசி களத்தில் குதித்திட வாராய்!

உடன்பிறப்பே,

ஓயாத சுற்றுப்பயணம் - உறக்கமில்லாத இரவுகள் - உரிய வேளையில் உணவருந்த முடியாத அலைச்சல் - இத்தனைக்கும் மேலாக உள்ளத்தில் உலைக்களத்துத் தணலாக ஓர் உளைச்சல் - எல்லாவற்றையும் என் உயிரினும் மேலான உடன்பிறப்பே; நீ அள்ளிப் பொழியும் பாச அருவியில் திளைத்து அந்த அருவியில் கலந்து வரும் அன்பினை மூலிகை மருந்தாக ஆக்கிக்கொண்டு நெஞ்சுறுதியுடன் தாங்கி நிமிர்ந்து நிற்கிறேன் எனினும்; உடலைப் பொறுத்து சில நாட்கள் ஓய்வெடுக்க வேண்டிய அளவுக்கு நலிவு ஏற்பட்டுத்தான் விட்டது.

ஆவடியில் நடைபெற்ற பட்டிமன்ற விழாவுக்குக்கூட மருத்துவர் அனுமதியுடன் ஐந்து நிமிடங்கள் உரையாற்றிவிட்டு வந்துவிடுவதாகக் கூறிவிட்டுத்தான் கலந்து கொண்டேன். ஆனால் அன்றைக்கு எனக்கிருந்த மனச்சங்கடம் - சிலர் வீசிய வேல்களால் இதயத்தில் ஏற்பட்ட ரணம் - அதன் காரணமாக ஆவடியில் என்னுரை அரைமணி நேர அளவுக்கு நீண்டுவிட்டது.

பேசி முடித்ததும், உடல் நலிவினாலும் - நலிவு தீர தரப்பட்ட மருந்துகளாலும் ஏற்பட்டிருந்த களைப்பு, பெருமளவு நீங்கித்தான் போய்விட்டது. நலம் விசாரிக்க வந்த கழக முன்னணியினர் மாவட்ட தளகர்த்தர்கள், எல்லோருமே என்னை ஊக்கப்படுத்தும் செய்திகளையே வழங்கினர். வழங்கிக் கொண்டுமிருக்கின்றனர்.

என் பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டுதோறும் மரக்கன்றுகள் நடச்சொல்லி விடுத்த வேண்டுகோள் வீண் போகவில்லை. பல்லாயிரக்கணக்கில் மரக்கன்றுகள் நடும் பணி நடைபெற்றுக்

கொண்டிருக்கிறது. நட்டுவிட்டால் மட்டும் போதாது; அவை நீரின்றிப் பட்டுப் போகாமலும், பாதுகாப்பின்றிப் பாழாகிவிடாமலும் - செழித்துத் தழைத்திடும் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமே! அது முக்கியமாயிற்றே! மாசுக்கட்டுப்பாடும், மழையும் மனித நலத்துக்கு உயிர்மூச்சு என்பதால்தான் இந்த மிகச்சிறந்த சமுதாயப் பணியில் உடன்பிறப்புகள் நாட்டங்கொள்ள வேண்டுமென மீண்டும் மீண்டும் வேண்டுகிறேன். இது செம்மையாக நடைபெறுவது கண்டும் கேட்டும் கழிபேருவகை கொள்கிறேன்.

அடுத்து, மதுரையில் தி.மு.கழகத்தின் மண்டல மாநாடு பற்றிய பணிகள் மிகத் தீவிரமாக ஆர்வமுடன் நடைபெறுகின்றன என்று அன்றாடம் செய்திகள் வருகின்றன. எஞ்சியுள்ள களைப்பும் எங்கோ பறக்கிறது.

இன்று தமிழ்நிலத்தில் பற்றியெரியும் பிரச்சினையான இடஒதுக்கீடு குறித்து - இறுதியானதும் நிலையானதுமான தீர்வுகாண இடஒதுக்கீட்டில் எத்தனை சதவீதம் எந்தப் பிரிவினர்க்கு ஒதுக்குவது என்ற அதிகாரம், மாநில அரசுகளுக்கு இருக்கும் வண்ணம் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தவும், நாடாளுமன்றத்தைக் கூட்டி நடவடிக்கை எடுக்கவும், இந்தியப் பிரதமர் - தமிழக முதல்வர் - உள்ளிட்ட 18-க்கு மேற்பட்ட அகில இந்தியக் கட்சிகளின் தலைவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் எழுதியதையொட்டி, அந்தத் தலைவர்களை நமது கழக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் விடுதலைவிரும்பி, வெங்கட்ராமன், மிசா கணேசன், முகமதுசகி, ஜே.எஸ். ராஜு ஆகியோர் டெல்லியில் நேரடியாக சந்தித்து ஆதரவு கோரி வருகின்றனர்.

அந்தத் தலைவர்களின் ஆதரவு கிடைத்த பிறகு, அதையொட்டி பிரதமரை சந்தித்து ஆவன செய்யுமாறு வலியுறுத்திக் கோரிக்கை வைப்பது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்து முடிவெடுக்கப்பட இருக்கிறது.

இதற்கிடையே கடந்த 29 ஆம் நாள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் சமூகநீதி அறப்போருக்கென அமைந்துள்ள அனைத்துக் கட்சிகளின் அணியின் தலைவர்களது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை மீண்டும் ஒருமுறை

நினைவுபடுத்துகிறேன்; உனக்கும், அனைத்துக் கட்சிகளின் அமைப்புகளின் செயல் வீரர்களுக்கும்!

இதோ அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு :-

தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கான 69 சதவிகித இட ஒதுக்கீட்டை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் ஜெயலலிதா அரசு தீவிரமாக வாதாடி அந்த இடஒதுக்கீடு நீடிக்க வழி காண்பதற்கு மாறாக ஓராண்டு காலமாக ஆர்வமற்ற போக்கிலும் அக்கறையற்ற நிலையிலும் 50 சதவிகிதத்தை அமல்படுத்துவதாக உறுதிமொழி ஒன்றை உச்சநீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு, அதை வெளிப்படுத்தாமலே ரகசியமாக வைத்துக்கொண்டு தமிழக சட்டப் பேரவையில் 69 சதவிகிதத்திற்கு ஒரு சட்டத்தை நிறைவேற்றி அதற்கான குடியரசுத் தலைவரின் ஒப்புதலை பெறுவதற்கும் உரிய தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளாத நிலையினால் தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் இடஒதுக்கீடு பற்றிய நிலைப்பாடுகளை மேற்கொள்ள மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்படுவதே இறுதியானதும், நிலையானதுமான தீர்வாக இருக்க முடியும். அகில இந்திய அரசியல் கட்சிகளின் மாநில அமைப்புகள் 69 சதவிகிதத்திற்கு தமிழ்நாட்டில் ஆதரவு காட்டியுள்ள நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் சட்டத்தில் மேற்கண்ட திருத்தத்தை இணைத்திட மத்திய அரசின் சார்பில் பிரதமர் உடனடியாக முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

இதனை மத்திய அரசுக்கு வலியுறுத்தவும், அரசியல் சட்டதிருத்தத்தைக்கூட இதுவரை வற்புறுத்தாத ஜெயலலிதா அரசின் மெத்தனப் போக்கை சுட்டிக் காட்டிடவும் இந்த ஆண்டு 69 சதவிகிதம் எப்படியும் நிறைவேற்ற வற்புறுத்தியும், அதற்கான அறப்போருக்கு மக்களைத் திரட்டவும்;

* ஜூலை 10-ந் தேதி முதல் 15-ந் தேதி வரையில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் வட்டத்தலைநகர் களிலும், பேரூர்களிலும் கூட்டங்கள் நடத்தப்படும்.

* ஜூலை 15-ந் தேதி முதல் 22-ந் தேதி வரையில் ஒன்றியங்களில் உள்ள எல்லா கிராமங்களிலும் அனைத்துக் கட்சி சைக்கிள் பேரணிகள் அல்லது நடை பேரணிகள் நடத்தப்படும்.

இதற்கு மேலும் இடஒதுக்கீட்டில் நிரந்தர நிலையான தீர்வுக்கேற்ப அரசியல் சட்டத்தை திருத்துகிற முயற்சியில் மத்திய, மாநில அரசுகள் முன்வராவிடில் :-

அனைத்துக் கட்சி சார்பில் நடத்த இருக்கும் மாபெரும் தொடர் போராட்டத்திற்கு, ஒவ்வொரு கட்சி சார்பிலும் கலந்து கொள்ளும் அறப்போராட்ட வீரர்களின் பட்டியலை அந்தந்த கட்சிகளும் பெற்றிட வேண்டும்.

அந்தப் போராட்டத்திற்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

உடன்பிறப்பே, இந்த முடிவுகளை ஒவ்வொரு கட்டத்திலும் முழுமையாகவும் - வெற்றிகரமாகவும் செயல்படுத்திட வேண்டி, நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் ஓர் அறிக்கை விடுத்துள்ளார். துணைப் பொதுச்செயலாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள், மாவட்ட ஒன்றிய அமைப்புகளுக்குத் தனித்தனியாகக் கடிதம் எழுதியுள்ளார்.

எனவே, ஜூலை 10 முதல் தொடங்கும் இட ஒதுக்கீடு அறப்போர்ப் பணியில் சமூக நீதிக்காக அணி சேர்ந்துள்ள நமது அனைத்துக்கட்சிகளின் அமைப்புகளைக் கலந்து பேசி, களத்தில் குதித்திட வாராய் என அழைக்கிறேன்; அப்போது என் உடலிலும் உள்ளத்திலும் ஒட்டிக் கொண்டுள்ள கடுகளவு களைப்பும் களையப்பட்டு விடுமல்லவா!

அன்புள்ள,

மு. க.,

03-07-1994

2148. இரு அரசுகளை வலியுறுத்தவே அறப்போர் பிரகடனம்!

உடன்பிறப்பே,

3.7.94 தேதியிட்ட ஆனந்த விகடன் போனார்... வந்தார் எனத் தலைப்பிட்டு ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது.

69 சதவிகிதத்திற்கு இடமில்லை; இந்த ஆண்டில் 50 சதவிகிதம்தான் என்ற திடுக்கிடும் நிலை ஏற்பட்டபோது திராட்சைத் தோட்ட இல்லத்தில் ஐதராபாத்தில் அயர்ந்த நித்திரையிலிருந்த அம்மையார் ஜெயலலிதாவின் கவனத்தை ஈர்ப்பதற்காக; ஜூன் 17-ந் தேதி மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் மறியல் என 15-ந் தேதி காலையில் அனைத்துக் கட்சிகள் சார்பில் அறிவிக்கப்பட்டு; அச்செய்தி மாலை ஏடுகளில் வெளிவந்ததும் ஆகா! மீண்டும் இடஒதுக்கீட்டுக்கு ஆபத்தா? இதோ வந்து விட்டேன். 16-ந் தேதியே அனைத்துக் கட்சிகளை அழைத்துப் பேசி ஆவன செய்கிறேன் என்று அரசியல் நாகரிகமான அணுகுமுறையொன்றைக் கடைப்பிடிக்க விரும்பாமல்; இதோ பார்! மறியலை முறியடித்துக் காட்டுகிறேன். அனைத்துக் கட்சிகள் மறியல் செய்ய இடமில்லாமல் அரசு அலுவலகங்களை யெல்லாம் பந்த் அறிவித்து மூடி வைக்கிறேன் என்று தோள் தட்டித் துந்துபி முழங்கி, துதிபாடும் கட்சிகளுக்குக்கூட மதிப்பளிக்காமல் தன்னிச்சையா பந்த் நடத்திவிட்டு - 20-ந் தேதி மறியலில் ஈடுபட்ட கட்சிகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் காவல்துறை அனுமதி வழங்காமல் கடுமை காட்டி - மறியலுக்கு முன்பும் மறியலன்றுமாக சுமார் லட்சம் பேரைக் கைது செய்துவிட்டு; அதற்கிடையே தி.மு.க. பா.ம.க., காங்கிரஸ், ம.தி.மு.க. தலைவர்களின் படங்களைத் தன் விசுவரூபப்படத்துடன் சேர்த்து பத்திரிகை விளம்பரமாகக் கொடுத்து, அவர்களைப் பற்றி அவதூறான விமர்சனங்களைச் செய்து; அய்யோ, தந்தி கொடுத்து

அழைத்தும் என்னுடன் டெல்லிக்கு வர மறுத்து விட்டார்கள் என ஒரு புலம்பல் ராகம் பாடி, அந்த ராகத்துடன் இணைந்து தனது துதிபாடிகளை விட்டு, எதிர்க்கட்சிகளை ஏடாகூடமாகத் தாக்கிப் பேசச் செய்துவிட்டு -

தனது ரத கஜ துரக பதாதிகளுடன் முதலமைச்சர் டெல்லிக்குச் சென்று பிரதமரை சந்தித்து விட்டு வந்ததைப் பற்றித்தான் ஆனந்த விகடன் அந்தத் தலையங்கத்தில் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. அதில் இரு முக்கியமான கேள்விகள் இடம் பெற்றுள்ளன. அவற்றை மட்டும் உன் வாயிலாகத் தமிழக மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

> இடஒதுக்கீடு விஷயத்தில் தமிழ்நாடு நிலை குறித்து பிரதமரை நேரில் சந்தித்து மனு கொடுக்க டெல்லி போய் வந்தார் முதல்வர்....
>
> .... அட்டார்னி ஜெனரலைக் கலந்து ஆலோசித்துச் சொல்கிறேன் என்று பிரதமர் ஒரே வார்த்தையில் பதில் சொல்லி அனுப்பி விட்டது வேறு விஷயம்.
>
> இந்த அளவுக்கு மக்கள் பணத்தை செலவழித்து டெல்லி போன முதல்வர் செய்திருக்க வேண்டியது இது மட்டும்தானா?
>
> இவ்வளவு பெரிய பிரச்சினையின் முக்கியத்துவம் குறித்து தலைநகரில் எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசி ஒரு கருத்தை உருவாக்கும் முயற்சி செய்திருக்க வேண்டாமா?...
>
> போனேன்...வந்தேன் என்று திரும்புவதற்கு, இது என்ன தமாஷ் பயணமா?

இப்படிக் கேட்டிருக்கிறது விகடன்!

உடன்பிறப்பே; இவ்வளவு பெரிய பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி என்று ஆனந்த விகடன் ஆதங்கப்படுகிற அளவுக்கு; இது அம்மையாருக்கு அவ்வளவு பெரிய பிரச்சினையாக மனதில் பட்டால்தானே! சாமான்யர்களான நம்மைப் போன்றவரா அந்த அம்மையார்?

சாமரம் வீசிட, சந்தனம் பூசிட, புகழ்ச் சந்தங்கள் பாடிட, சன்னிதானங்களில் கட்டளைத் தம்பிரான்கள் இருப்பது போல;

அம்மையார் அவர்கள் அமாவாசையைப் பௌர்ணமி என்றாலும், அம்புலியை நட்சத்திரமென்றாலும் ஆமாம் போட்டுப் பம்பை அடிக்கவும், உடுக்கு தட்டவும் சிலர் இருக்கும்போது, இதுவா அவருக்குப் பெரிய பிரச்சினை! அதனால்தான் அவர் டெல்லி போனார் - அவர் போவதற்கு முன்பே துண்டு துளைக்காத கார், டெல்லிக்குப் போயிற்று - எந்த ஜபர்தஸ்துகளும் குறையாமல் நடந்து, பிரதமரைப் போய்ச் சந்தித்தார். உடனே திரும்பி விட்டார்.

ஆனால் சாமான்யர்களான நாமோ; நம்முடன் இந்தப் போராட்டத்தில் கைகோத்து அணி வகுத்திடும் அனைத்துக் கட்சியின் தலைவர்களோ; ஏதோ ஒரு மறியலை மாநில முழுதும் நடத்தி முடித்து விட்டோம் என்று கூறிப் பிரச்சினையைக் கை கழுவி விடாமல்; இது நமது பேரன் பேத்திகளின் காலமெல்லாம் கடந்து நம்மைப் போல் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்காலத்திற்கே கேள்விக் குறி என்பதைப் பழுதற உணர்ந்து; அடுத்து நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள இருக்கும் மகத்தான அறப்போருக் கிடையே; ஆக்கபூர்வமான சில முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம்!

மகத்தான போருக்கு மக்களைத் திரட்ட, ஜூலை 10 முதல் பிரச்சாரத் திட்டம், அனைத்துக்கட்சி சார்பில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆனந்தவிகடன், அம்மையாருக்கு இடித்துக் காட்டியுள்ள அந்த முக்கியமான கேள்விகளுக்கு; அந்தக் கேள்விகள் எழுவதற்கு முன்பே கடந்த ஜூன் 27-ந் தேதியன்றே டெல்லியில் உள்ள அகில இந்தியக் கட்சித் தலைவர்களுக்குக் கடிதம் எழுதி, இடஒதுக்கீட்டில் இருப்பதை இழக்காமலிருக்க அரசியல் சட்டத்தைத் திருத்திட ஆதரவு தருமாறு வேண்டியிருந்தேன். அத்துடன் அந்தத் தலைவர்களைச் சந்திக்க, மாநிலங்களவைக் கழக உறுப்பினர்கள் ஐவர் டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டு; அவர்கள், தமது பணியைத் திறம்பட ஆற்றியுள்ளனர்.

* சமூகநீதிக் காவலரும் முன்னாள் பிரதமருமான வி.பி. சிங்
* பாரதீய ஜனதா தலைவர் அத்வானி மற்றும் சிக்கந்தர் பக்த்
* மார்க்சிஸ்ட் தலைவர் அர்கிஷன்சிங் சுர்ஜித்
* இந்திய கம்யூனிஸ்டு தலைவர் இந்திரஜித் குப்தா

* ஜார்ஜ் பெர்னான்டஸ் மற்றும் ரபிராய்
* இந்திய தேசிய லீக் தலைவர் சுலைமான் சேட்
* இராம் விலாஸ் பஸ்வான்
* மத்திய அமைச்சர் சீத்தாராம் கேசரி
* அகாலிதளம் ராமுவாலிய
* முன்னாள் பிரதமர் சந்திரசேகர்
* அகில இந்திய பார்வார்டு பிளாக்கின் தேசிய செயலாளர் டி.டி. சாஸ்திரி

ஆகியோரை கழக எம்.பி.க்கள் ஐவரும் சந்தித்துக் கலந்துரையாடி, ஆதரவு கோரி, அவர்களும் இந்தப் பிரச்சினையில் நமக்கு அனுகூலமான பதில்களை வழங்கியுள்ளனர்.

ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நிலையில் நமது கழகச் சார்பில், தமிழக எதிர்க்கட்சிகளின் கூட்டு அணியின் கருத்தின்படி எடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சிக்கே இத்தனை ஆதரவு டெல்லியில் உள்ள தலைவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது என்கிறபோது; இதே முயற்சியை தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற முதலமைச்சர் ஜெயலலிதா டெல்லி மாநகரில் இரு நாட்கள் தங்கி எடுத்திருப்பாரேயானால்; இன்னும் அதிகப்பயன், விரைவில் கிடைத்திருக்குமல்லவா!

இடஒதுக்கீட்டில் இருந்ததை இழக்காமலிருக்க; மாநிலங்களுக்கு ஏற்ப அரசியல் சட்டத்திருத்தமொன்று இணைத்திட, எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்திடும்போது மத்தியிலே ஆளுங்கட்சியான காங்கிரசுக்கு அந்தத் திருத்தத்தை அரசியல் சட்டத்தில் இணைப்பது இலகுவான காரியம்தானே! இதற்கான அடித்தளம் அமைத்திட, முதல்வர் எந்த அக்கறையும் காட்டவில்லை. ஆர்வமும் கொண்டிருக்கவில்லை. இதைத்தான் விகடன், சுட்டிக் காட்டியுள்ளது.

நாம் சுட்டிக் காட்டினால்; சுள் என்று கோபம் வருகிறது சிலருக்கு! வாரிச்சுருட்டி எழுந்து, வரிந்து கட்டிக் கொண்டு, நம்மீது வசை பொழிகிறார்கள்! வக்கணை பேசுகிறார்கள்! வக்காலத்து வாங்குகிறார்கள்! நிரந்தரமாக நோய் தீர்ந்து நலம் பெற அறுவை சிகிச்சை தவிர வேறு வழியில்லை என்று ஆகிவிட்ட பிறகு!

இல்லை! இல்லை! இது நான் பறித்து வந்த பச்சிலையில்தான் குணமாகும் என்ற பல்லவியையே பாடிக்கொண்டிருந்தால்; பச்சிலை மீது நமக்கு வெறுப்பு இல்லை - குணமாக்குமென முதலில் எதிர்பார்த்தோம்; ஆனால் அது பற்றிப் பலரும் பல விதமான கருத்து கூறும் போது; பச்சிலை வைத்தியரின் மனம் நோகக்கூடாதென்று நோயாளியை நாம் சோதனைப் பொருளாக ஆக்கி விடக் கூடாதல்லவா? எனவே, அரசியல் சட்ட திருத்தம் எனும் அறுவை சிகிச்சை மூலமே; நிலையான நலமும், பலமும் இடஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குக் கிடைத்து வருங்கால சமுதாயம் வாழ்வு பெற முடியும்.

முதல்வர் முன்னின்று செய்திருக்க வேண்டிய முயற்சி; நாம் ஈடுபட்டுச் செய்கிறோம்! இப்போதும் காலம் கடந்து விடவில்லை - அக்கறையிருப்பின் அவர்களே இப்பணியில் இறங்கலாம்! இங்கே சமூக நீதிக்குக்குரல் கொடுக்கும் சட்டசபைப் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசும்; அங்கே மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசியல் சட்டதிருத்தத்திற்கு அவசரப்படுத்தலாம்! இந்த இரு அரசுகளையும் கண்விழிக்கச் செய்வதே தமிழகத்தில் நாம் அறிவித்துள்ள அறப்போர்ப் பிரகடனத்தின் நோக்கம்!

அன்புள்ள,

மு. க.

04-07-1994

2149. அரசியல் விழிப்புணர்வுக்கும் சமூகநீதி மீட்புக்கும் மூதூராம் மதுரை முரசு கொட்ட அழைக்கிறது!

உடன்பிறப்பே,

மதுரை மண்டல மாநாடு பற்றி நிர்வாகக் குழுவில் பேசி, தேதி குறிக்கும்போது ஏ, அப்பா ஜூலை இறுதியில்தானே; இன்னும் இரண்டரை மாதங்களுக்கு மேல் இருக்கிறதே - அதற்கு இப்பொழுது என்ன அவசரம்! எனும் ஓர் அலட்சியம் நெஞ்சில் இழையோடியது என்னவோ உண்மைதான் எனினும்; இப்போது பார்த்தால் இன்னும் இருபத்தி நான்கு நாட்களே - அதாவது மூன்று முழுமையான வாரங்களே இடையில் இருப்பதை உணர்ந்து என்னையும் உன்னையுமறியாமலே மன்னிக்கவும் நம்மையறியாமலேயே ஒரு வேகம் கிளம்பிவிட்டது. உத்வேகம் தோன்றி விட்டது. உற்சாகம் எழுந்துவிட்டது.

நாள்தோறும் நமது கழக அமைப்புகள் மதுரைப் பயணத்திற்கான ஏற்பாடுகளை விரைந்து தொடங்கிவிட்டன என்ற செய்திகள் என் நெஞ்சில் சிந்திடும் செந்தேன் துளிகளாக இனிக்கின்றன.

எந்தெந்தப் பகுதியில் இருந்து எத்தனை எத்தனை வாகனங்கள், எத்தனை எத்தனை உடன்பிறப்புகள், குடும்பத்துடன், குலவிளக்குகளுடன், குழந்தைச் செல்வங்களுடன், மதுரையில் மூன்று நாட்கள் தங்குவதற்குரிய எளிய வசதிகளுடன் பயணம் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அப்பகுதிகளிலிருந்து வரும் கடிதங்களைப் படித்து அவற்றை நான் கண்களில் ஒற்றிக் கொள்ளும்போது; உடன்பிறப்பே, அது ஒரு தனிச்சுகம்தான் போ!

புயலின் கோரக் கரங்களில் இக்கழகம் சிக்கிடுமோ என எண்ணிய வேளையில்; அந்தப் புயலையே உன் உறுதி மூச்சால் ஊதி விரட்டிவிட்ட உடன்பிறப்பு நீ!

பூகம்பநடுக்கத்தின் பிளவுக்குள் இக்கழகம் விழுங்கப் பட்டுவிடுமோ என அஞ்சிய நேரத்தில்; பூகம்பத்தையே பூச்சுற்றிய கம்பமாக ஆக்கி அதில் இருவண்ண இலட்சியக் கொடியை ஏற்றிய ஏறு நடைச் சிங்கம் நீ!

துரோகம், கழகத்தைத் துளைத்திடாமல் தூய தோள் திறம் காட்டினாய்!

எதிர்ப்புக்கள், என்னுயிரே - உன் முன்னால் ஈசற்பூச்சியின் சிறகுகளாய் உதிர்த்து போயின!

அத்தகைய வீரமும், தீரமும், விவேகமும், தியாகமும், திறமும், திடமனமும் கொண்ட உன் போன்றோர், இந்தக் கொள்கைக் கோட்டையின் அடித்தளக்கற்களாய்த் திகழ்வதால்தான்; நம் கொடி நிழல் கண்டே பகைப்புலம் பதைக்கிறது. பரபரக்கிறது. நம் வலுவைக் குறைக்க வழியுள்ளதா என வயிற்றைப் பிசைந்து கொள்கிறது. வஞ்சகம், நெஞ்சில் வடிய வாய் பிளந்து நிற்கிறது. பாவம்; என் செய்வர் நமது வளர்ச்சி கண்டு தளர்ச்சி கொண்டோர்!

இதுகளா? இன்னும் இருக்கிறதா? என்று; ஏதோ நாம் இல்லாதது போல ஏகடியம் புரிந்து பார்க்கின்றனர்! நாமோ, இருக்கிறமோய்யா என்று நம்மை வெறுக்கிறவர் முன்னே நின்று புன்னகை புரிகிறோம்! வெளிச்சம்படாதிருக்க விளக்கை எடுத்து இரவில் ஒளிக்கின்றனர்; நாமோ நிலவொளியில் தகதகக்கிறோம்!

கருமேகமாய்ப் படர்ந்து நம்மீது கதிரொளி படாமல் காரியமாற்றுகின்றனர்; நாமோ, உதயக் கதிராகவே மாறி ஒளி பொழிகிறோம்!

இருட்டடிப்பு செய்கிறார்களாம்; கலகம் விளைக்கிறார்களாம்; இந்த இயக்கம் இருப்பதில் மட்டும் சிலருக்கு அவ்வளவு வேதனையாம் - கரைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ! காரிருள்தான் சூரியனை மறைப்பதுண்டோ! பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ! எனும் புரட்சிக் கவிஞனின் முழக்கத்தின் பொருள் உணரா மூடங்கள்!

நாம் இருக்கிறோம் என்பது மட்டுமல்ல; நமக்குப் பெருமை தருவது! நாம் யாருக்காக இருக்கிறோம்? எந்தக் குறிக்கோளுக்காக இருக்கிறோம்? எனும் வினாக்களுக்குக் கிடைக்கும் விடையில்தான் நாட்டுக்கும் நமது சமுதாயத்திற்கும் நம் தேவையின் அளவும் அவசியமும் தெரியும்!

மிக மிக முக்கியமான நேரத்தில்; ஆம் - இங்கே இடஒதுக் கீட்டுக்கான அறப்போர்க் களங்கள் அமைந்திடும் நேரத்தில் - மண்டல் கமிஷன் பரிந்துரைகளின் நிறைவேற்றம், வெகு மதமதப்பாக நடைமுறைப்படுத்தப்படும் நேரத்தில் - ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டுவரும் குறைகள் அகற்றப்பட வேண்டுமெனக் குரல் கிளம்பும் நேரத்தில், நமது அரசியல் மாநாடும் - இந்த அரசியல் பணிக்கு அஸ்திவாரமாக அமைந்த சமூக நீதியை வலியுறுத்தி முரசறையும் மாநாடும் மதுரையில் நடைபெறுகின்றன!

ஜூலை இறுதிக்குள் சமூகநீதிப் பிரச்சினையில் சில தற்காலிகமான முடிவுகள் அறிவிக்கப்படலாம். ஆனால் தமிழ்நாட்டிலும் சரி; மண்டல் பரிந்துரையைப் பொறுத்தவரையில் அனைத்து இந்திய மாநிலங்களிலும் சரி; ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை மீட்புக்கான போராட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டியது என்பது தவிர்க்க முடியாத நிலையாகும்!

அது குறித்த முடிவுகளை மதுரை மண்டல மாநாடு அறிவிக்க இருக்கிறது. மாநாட்டுப்பணிகள் சிறப்புறத் தொடங்கப்பட்டு விட்டன என்பதை வரவேற்புக்குழுத் தலைவர் வழக்கறிஞர் மதுரை மாநகர் செயலாளர் காவேரிமணியம் அவ்வப்போது தொடர்பு கொண்டு பேசி வருகிறார் என்னுடன்!

வரவேற்புக்குழுச் செயலாளர்கள் அக்கினிராசு, ஐ. பெரியசாமி, மூக்கையா மற்றும் பல்வேறு குழுக்களின் தலைவர்கள் அயராப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்!

நிதிக்குழுத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன், இக்கடிதம் உனக்கு நான் எழுதும்போது கூட; மதுரை மாநாட்டுப் பணிகள் குறித்த விபரங்களை எனக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தார்!

நாடு முழுதும் சமூக நீதி கிடைத்திடவும் - நாட்டின் ஒரு பகுதியான நமது தமிழகத்தில் சமூக நீதி மட்டுமன்றி நல்லாட்சி அமைந்திடவும் - குமரி முதல் இமயம் வரை உள்ள மக்களின் குறை தவிர்த்திடக் கோலேந்தி மத்தியில் அமர்ந்திருப்போர், அதற்கெனக் குன்றிமணி அளவு அக்கறையும் கொள்ளாது, கொலுமண்டபம் சதமானால் போதுமென எண்ணியிருப்பதைத் தகர்த்து ஏற்றநிலை உருவாக்கிடவும்;

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மூதூர் தங்குதடையின்றி வழிகாட்ட இருக்கிறது!

அதற்கென நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் மேற்கொண்டுள்ள பயண முயற்சிகள் கேட்டு; புல்லரித்துப் போகிறேன் நான்!

தொடர்ந்து எழுதுவேன்; அந்தத் தொந்தரவுக்குள்ளும் ஒரு சுகம் கண்டேனடி தோழி! என்று பாடுவாரே பாவேந்தர்; அச்சுகத்தைக் கடிதங்கள் வாயிலாக நீயும் நானும் கண்டு கொண்டுதானே இருக்கிறோம்; அவர் பாடியது காதலுக்காக! இதுவோ களத்திற்காக! அதைவிட இதில் நமக்கு சுகம் அதிகம்தானே!

அன்புள்ள,

மு. க.

05-07-1994

2150.தமிழ்மக்கள் புரட்சிக்குத் தயார் ஆவார்கள்!

உடன்பிறப்பே,

திரும்பத் திரும்ப ஒரு பொய்யைச் சொல்லிக் கொண்டேயிருந்தால் அது உண்மையாகிவிடும் என்பது ஒரு சிலரின் வக்கிரமான தத்துவம்.

பொதுப்பிரச்சினையில் ஆளுங்கட்சியுடன் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க மறுக்கின்றன. டெல்லிக்கு அழைப்பு விடுத்தேன். எதிர்க்கட்சிகள் புறக்கணித்து விட்டார்கள். இப்படி குமரிமுனையில் நின்று கொண்டு கூப்பாடு போட்டிருக்கிறார் ஜெயலலிதா.

பொதுப்பிரச்சினைகளில் எதிர்க்கட்சிகள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்திடவோ, அறிவுரை கூறவோ ஜெயலலிதாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதை, பொதுப் பிரச்சினைகளில் கடந்த காலத்தில் அவர் நடந்து கொண்ட நிகழ்ச்சிகளே சான்றுகளாக நின்று அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்கின்றன. 1989-ல் மீண்டும் கழக ஆட்சி அமைந்து, நான் முதல்வர் பொறுப்பை ஏற்று காவிரிப் பிரச்சினை பற்றிக் கலந்து பேச கட்சித் தலைவர்களுக்கு நான் கடிதம் எழுதியபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதாவுக்கும் அழைப்பு விடுத்துக் கடிதம் எழுதினேன்.

அதற்கு அவர் எழுதிய பதிலில் காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி நாடகமாடுகிறார் என்றும், அதனால் அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதென்றும் குறிப்பிட்டுவிட்டு; அந்தக் கடிதத்தை அறிக்கையாகவே எல்லா ஏடுகளுக்கும் கொடுத்து வெளியிடச் செய்தார்.

அதற்கடுத்து காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்குமாறு பிரதமர் வி.பி.சிங் அவர்களிடம் செல்லும் அனைத்துக் கட்சித் தூதுக் குழுவில் அ.தி.மு.க. சார்பில் கலந்து

கொள்ள மறுத்ததுமட்டுமல்ல; தூதுக்குழுவில் கலந்து கொள்ள டெல்லி வரை சென்ற காங்கிரஸ் கட்சியினரையும் அதில் கலந்து கொள்ளாமல் அ.தி.மு.க. தலைவியார் ஜெயலலிதா தடுத்துவிட்டார்! அதையும் மீறி ஒரே ஒரு காங்கிரஸ் எம்.பி. திருமதி வைஜெயந்திமாலா மட்டுமே அந்தத் தூதுக் குழுவுடன் சென்று பிரதமர் வி.பி. சிங்கை சந்தித்தார். அதன் விளைவாக அவர் தென்சென்னையில் நிற்கும் வாய்ப்பைக்கூட இழக்க நேரிட்டது.

எப்படியும் அன்று கழக அரசு எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக - பிரதமர் வி.பி.சிங் அவர்களின் ஆட்சியில் காவிரிப் பிரச்சினைக்கான நடுவர் மன்றம் அமைந்தது என்பது காலத்தால் அழிக்க முடியாத வரலாறு!

இந்த முறையில்; ஆளுங்கட்சியாக இருந்த கழகத்தை ஜெயலலிதா அவமதித்த போதிலும் - இடஒதுக்கீடு பிரச்சினைக்காக அவர் எடுப்பதாகச் சொன்ன எல்லா முயற்சிகளுக்கும் கழகம் ஒத்துழைத்த, அவர் கூட்டிய அனைத்துக்கட்சிக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறது.

ஆனால் இப்பொழுது கழகமும், மற்றும் முக்கிய கட்சிகள் பலவும் ஜெயலலிதாவின் அழைப்பை ஏற்க முடியாத சூழ்நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நடுநிலையாளர்கள் சிந்தித்துப் பார்த்திடத் தவறமாட்டார்கள்! இந்த ஆண்டும் 50 சதவிகிதம் என்ற அறிவிப்பு அண்ணா பல்கலைக் கழகத்தின் சார்பில் ஏடுகள் வெளிவந்ததும் - தமிழ்நாடு இயற்கையாகவே பரபரப்பு அடைந்தது.

திருச்சியில் ஜூன் 12 ஆம் நாள் நிருபர்கள் என்னைக் கேட்டபோது; தனிப்பட்ட முறையில் கருத்து சொல்ல விரும்பாமல், அது குறித்து மற்ற கட்சித் தலைவர்களின் கருத்தறிந்து உடனடியாக திருச்சிக்கோ, தஞ்சைக்கோ வந்து என்னை சந்திக்குமாறு கழகத் துணைப்பொதுச்செயலாளர் ஆர்க்காடு வீராசாமிக்கு அறிவித்தேன். சென்னையிலிருந்த வீராசாமி, இயன்றவரையில் சில கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டுவிட்டு ஜூன் 13-ந் தேதி என்னை தஞ்சையில் வந்து சந்தித்தார்.

ஜூன் 13 திருச்சி அரியலூரிலிருந்தும், ஜூன் 14 சென்னை வந்தும் கூடுமான வரையில் கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசி, அவர்கள் வழங்கிய கருத்தின் அடிப்படையில் ஜூன் 15 காலை கழக நிர்வாகக் குழுவிலும் முடிவெடுத்து அனைத்துக் கட்சிகள்

சார்பில் ஜூலை 17 அன்று மத்திய, மாநில அரசு அலுவலகங்களின் முன் மறியல் அறப்போர் அறிவிக்கப்பட்டது.

தொடர்பு கொள்ள இயலாத கட்சித் தலைவர்களுக்கு அறப்போர் மறியலில் கலந்து கொள்ளவும், ஆதரவு வழங்கவும் கடித மூலம் வேண்டுகோள் விடப்பட்டது. 17-ந் தேதி மறியல் நடைபெறும் என அறிவித்துள்ள கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பேசி 16-ந் தேதியன்று ஒரு முடிவு எடுத்திருக்கலாமல்லவா?

அதற்கு மாறாக; முதலமைச்சர் ஜெயலலிதாவின் அணுகுமுறை எப்படி இருந்தது?

17-ந் தேதி மறியல் என்பது, ஏதோ இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு விரோதமானது என்பதுபோல - அதே தேதியில் பந்த் நடத்தி, மறியலை முறியடித்துக் காட்டுகிறேன் பார்; என்ற ரீதியில்தான் ஜெயலலிதாவின் முதிர்ச்சியற்ற அறிவிப்பும், முஸ்தீபுகளும் அமைந்தன!

அத்துடன் அம்மையார் ஆறுதல் பெற்றாரா?

அனைத்துக் கட்சிகள் அரசியல் நாகரிகத்துடன் மறியலை 20-ந் தேதிக்கு மாற்றி வைத்த பிறகு - 17-ந் தேதி முதல் 19-ந் தேதி முடிய முன்கூட்டியே ஐம்பதாயிரம் பேரை மாநில முழுதும் கைது செய்து களித்தது ஜெயலலிதா அரசு!

எனினும் தமிழ்நாடு முழுதும், 20-ந் தேதி மறியல் களம் புகுந்தனர் அனைத்துக் கட்சி வீரர்கள்! அன்றைக்கும் மேலும் ஐம்பதாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்! எந்த நிலையில்? குறிப்பிட்ட மறியல் களம் நோக்கி வீட்டிலிருந்து இரண்டடி எடுத்து வைக்கக்கூட அனுமதிக்காமல் வீட்டு வாசலிலேயே தலைவர்களும், முன்னணியினரும் கைது செய்யப்பட்டனர்!

சென்னையிலும் வேறுபல நகரங்களிலும் அறிவிக்கப்படாத பந்த் ஒன்று நடந்தது போன்றே அன்றைய அனைத்துக் கட்சிகளின் அறப்போர்க்களம் விளங்கியது.

சில அறிஞர் பெருமகன்?களுக்கு வேண்டுமானால் அரைகுறையான இடத்தில் நடைபெற்ற ஐயத்திற்கிடமான களமாக நமது களம் தோன்றியிருக்கலாம்! அப்படி ஒரு தலையங்கத்தைக் கிறுக்கி அவர்கள் தமது தலைநோய் தணித்துக் கொள்ள முயலலாம்!

ஆனால் அந்த 20-ந் தேதி உருவாக்கிய எழுச்சியை; நமக்குக் கிடைத்த வெற்றி என்று நாம் மார்தட்டிக் கொள்ளாவிட்டாலும் - நமது குறிக்கோள் நிறைவேறும் வரையில் போராட வேண்டியிருக்கிறது என்ற உணர்வுடன் எழுந்த அந்த உத்வேகத்தினால்தான்; ஜெயலலிதா உடனடியாக டெல்லிப் பயணத்துக்கு அழைப்பு விடுத்தார் என்பது ஊரறிந்த உண்மை!

அந்த அழைப்புக்கிடையே, அரசின் சார்பிலும் - அ.தி.மு.க. சார்பிலும் ஏடுகள் பலவற்றில் எதிர்க்கட்சிகளை ஏசியும், அவதூறு பொழிந்தும் - அவர்கள் படங்களையும் வெளியிட்டு அநாகரிகமான விளம்பர அறிக்கைகள் பல லட்ச ரூபாய் செலவில் விடப்பட்டன!

இத்தனை அடாவடித்தனத்துக்கும் பிறகு; ஆகா! அவர்களை டெல்லிக்கு அழைத்தேன், வரவில்லை என்றால் - அம்மையார் கூற்றில் நியாயம் இருக்கிறதா? நேர்மையாளர்கள் சிந்தித்துச் சொல்லட்டும்! இப்போதுள்ள பிரச்சினையை கவனித்தால்; அரசியல் சட்டம் திருத்தப்படுவதா? அல்லது தமிழக அரசு நிறைவேற்றிய சட்டத்துக்கு ஒப்புதல் பெற்று அதனை அரசியல் சட்டத்தில் இணைப்பதா? என்ற நிலையிருப்பது புரியும்!

எனவே; நீ ஏன் முதலில் அதற்கு ஒத்துக் கொண்டாய் - இதற்கு ஒத்துக் கொண்டாய் என்ற வல்லடி வழக்குகள் தேவையில்லை!

தமிழக அரசின் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் கிடைத்தாலும் அதனை 9வது அட்டவணையில் சேர்க்க வேண்டுமென்பது கோரிக்கை!

அதற்கு இப்போது வாய்ப்பாகக் கனிந்துள்ள சூழ்நிலையில்; பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களுமே, அரசியல் சட்டம் திருத்தம் பெறுவதற்கு; இருந்த இடஒதுக்கீடு அளவை குறைக்காமல் பாதுகாப்பதற்கு, ஆதரவாக இருக்கிறார்கள் என்பது அவர்கள் எழுதியுள்ள கடிதங்கள் மூலம் தெளிவாகியுள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மத்திய காங்கிரஸ் அரசு; தமிழகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரலுக்கு மதிப்பளிக்க முன் வரவேண்டும்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒத்துவரும் போது, மத்தியில் ஆளுங்கட்சியான காங்கிரஸ் முன்வந்து தனது ஒத்துழைப்பை நல்கி, ஏன்; தானே முன்னெடுத்து இந்த காரியத்தை நிறைவேற்றி;

இடஒதுக்கீட்டில் சதவீத அளவை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகள் பெற்றிடும் வழிவகை செய்திட வேண்டும்.

அரசியல் சட்டத்தை திருத்திட பாராளுமன்றத்தில் உள்ள மிகப் பெரும்பாலான கட்சிகள் ஒரே குரலில் ஒலிக்கும்போது,

ஆளுங் காங்கிரஸ் மட்டும் கையைக் கட்டிக் கொண்டிருந்தால்; அதற்குப் பிறகும் தமிழ்நாட்டு மக்கள் கொதித்து குமுறியெழுந்து ஒரு புரட்சிக்குத் தயாராகத் தயங்கமாட்டார்கள்!

தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகளின் இந்த உள்ளார்ந்த உயிர்த் துடிப்பான உணர்வைப் புரிந்து கொள்ளாமல்; வீணே அந்தக் கட்சிகளின் மீது, ஜெயலலிதா புழுதிவாரி இறைத்துப் பயனில்லை!

காற்றின் வேகத்தில் அந்தப் புழுதி அவர் கண்களையே கப்பிக் கொள்ளும்!

அன்புள்ள,

மு. க.

08-07-1994

2151. மதுரை மாநாட்டு விளம்பரத்துக்கு ஒரு கரித்துண்டு போதுமே!

உடன்பிறப்பே,

தென்னைமரம் வளர்கிறது - அதன் மட்டைகள் ஒவ்வொன்றாகப் பழுத்துப்போய் விழுந்து கொண்டிருக்கின்றன. பச்சைப் பசேலெனப் புதிய மட்டைகள் தோன்றுகின்றன. தேங்காய், இளநீர், அல்லது குருத்தோலை பறிப்பதற்கு அந்தத் தென்னையில் ஏறுவோர் கால் வழுக்காமல் ஊன்றிக்கொண்டு மேலே போக மரத்தில் உள்ள வடுக்கள் உதவுகின்றன. வடுக்களா அவை? இல்லை; சுவடுகள்! ஆம், ஏணிப்படிபோல் அமைந்த சுவடுகள்!

அந்தச் சுவடுகளை உருவாக்கித் தந்தது யார்? பழுத்துப்போய் விழுந்துவிட்ட மட்டைகள்! விழுந்த பிறகும் பழுத்த ஓலைக்கீற்றுகளால் பந்தலாக, பாயாக, தட்டிகளாகப் பயன்படும் மட்டைகள்! அவை விழுந்த இடத்தில் ஏற்படும் சுவடுகளின் துணைகொண்டுதான் தென்னை மரத்தில் ஏற முடிகிறது! இப்படிச் சுவடுகளாக மரத்தை அலங்கரித்துக்கொண்டு, ஓங்கி உயர்ந்த மரத்தின் உச்சியில் கிடைக்கும் பயனை அனைவரும் அடையத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களைப் பற்றி நான் பல நேரங்களில் கூறியிருக்கிறேன், மறந்திருக்கமாட்டாய்!

மதுரையில் நடைபெற இருக்கும் தி.மு.கழக மண்டல மாநாட்டில், மாநாடு நடைபெறும் தமுக்கம் திடலுக்கே சாதிக் பாட்சா நகர் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சட்டம் படித்தவராக, சலியாத உழைப்பாளியாக, சலனங்களுக்கு ஆட்படாதவராக, சபலங்களை நினைப்பதும் தீது எனக் கருதுபவராக, அமைச்சராகவும் இருப்பேன்; அடக்கு முறைகளை ஏற்கும் தியாக சீலனாகவும் இருப்பேன் - அனைத்துக்கும் மேலாக, கண்ணியம் போற்றி, கடமையாற்றி,

கட்டுப்பாடு காத்து - தன்னை ஆளாக்கிய கழகத்திற்கு என்றும் நன்றியுடையவனாக இருப்பேன் எனும் திடசித்தமுடன் இறுதிவரை வாழ்ந்து மறைந்த இனிய உடன்பிறப்பு - நமது சாதிக்பாட்சா! அவர் பெயரால் அமைந்த நகரில் கூடிட இருக்கிறோம்.

மிட்டா மிராசுகள், குட்டிக் குபேரர்கள் நிறைந்த தஞ்சைத் தரணியில் - திராவிட இயக்கப் பாசறையில் ஒரு செஞ்சட்டை வீரனாக வளர்ந்து; என் போன்றோரையும் அவ்வாறு வளர்த்து; சுயமரியாதை பேசுவது சுவையான காலமல்லாத; சுடு நெருப்பைத் தொடுகின்ற காலமாக இருந்த அந்த நாட்களில் பகுத்தறிவுச் சுடராய் ஒளிபொழிந்து, கடைசியாகக் கண்மூடும் வரையில் கழகம் கழகம் என்றே உளமார உச்சரித்துக் கொண்டிருந்த மன்னையார் பெயரால் அமைந்த பந்தலில் அமர்ந்திட இருக்கிறோம்!

அமர்ந்த நிலையில் எதிரே நோக்கிடும் அரங்க மேடைக்கோ என் ஆருயிர்த் தோழர் அன்பிலாரின் பெயர்! குறுநகையும், குமிழ்க் கண்களும், சுறுசுறுப்புக்கே இலக்கணம் வகுக்கும் சுபாவமும் - அந்த சுயமரியாதைச் சுடரின் சொத்துக்கள்! சோழ மண்டலத்தின் இருவேந்தர்கள் இந்த இயக்கத்திற்கு அன்பிலும் மன்னையுமன்றோ!

பந்தலுக்குள் நுழைவதற்கு முன் கம்பீரமாக வரவேற்க இருக்கும் தோரணவாயிலோ, காரைக்குடி சிதம்பரத்தின் பெயரால்!

ஆம்; வருவோரை வரவேற்று, உபசரித்து வாய் மணக்க, இதயம் மணக்க அன்பு மொழியினை வழங்கிடும் செட்டிநாட்டுச் சிங்கம்; அந்தச் சிதம்பரம்! காரைக்குடியில் அண்ணன் இராம சுப்பையாவின் பாசறையில் பயின்று கழகம் வளர்த்த கண்மணி!

அவர் பெயர் கொண்ட தோரணவாயிலில் நுழைந்தவுடன் - கண்ணுக்குக் காட்சியாவது; புதுக்கோட்டை வீரய்யாவின் பொலிவு நிறைந்த முகம் கொண்ட மாநாட்டு முகப்பு! எப்போதும் சிரித்த முகம் - எப்போதும் கழகம் பற்றியே சிந்திக்கும் அகம் - துளியளவு ஊனமும் இயக்கத்திற்கு வரக் கூடாதென தோள் உயர்த்தி நின்ற தோழர்!

உடன்பிறப்பே, மாநாட்டு விளம்பரத்தில் இவர்களின் படங்களையெல்லாம் வரிசையாகப் பார்த்த மாத்திரத்தில் என் கண்கள் பனித்தன.

இவர்களோடும், இவர்களைப் போன்ற இயக்கக் காவலர்கள் பலரோடும் இணைந்தும், அருகமர்ந்தும் எத்தனை மாநாடுகள் நடத்தியிருக்கிறோம்; இன்று அவர்கள் இல்லையே!

தென்னையில் பழுத்த மட்டைகள், வடுக்களை மட்டும் விட்டுச் சென்றதுபோல் பிரிந்துவிட்டனரே எனும் வாட்டம் துளைக்கிறது!

அந்தத் துயரையும் சுமந்து கொண்டு மாநாட்டுக்கு வரும் எனக்கு ஆறுதல் வழங்கிடவும் - துணையிருக்கிறோம் என்று கொடி உயர்த்தி முழங்கிடவும் - நீ அங்கு வர இருக்கிறாய் என்பதே என் இதயத்தின் கனத்தைக் குறைத்திடும் வாய்ப்பாகும் - வாகான மருந்தாகும்.

இயக்கத்தில் நாம் இழந்து விட்ட வீரர்களும், தீரர்களும், விவேகிகளும், தியாகிகளும், நமக்கென்று விட்டுச் சென்றுள்ள பணிகளை முடித்திட அணி வகுப்போம் பாண்டியர் மண்ணில்!

மீனக் கொடி பறந்த பூமியில்; நமது இனமானக் கொடி விண் முட்டப் பறக்கட்டும்!

நாட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன; மாநாட்டுக்கான விளம்பரப் பணிகளை மாநில முழுதும் தொடங்கியிருப்பாய் என நம்புகிறேன். விளம்பரம் செய்ய வேண்டிய கடமையையும் வழி முறைகளையும் தலைமைக் கழகச் செயலாளர் தம்பி துரைமுருகனின் அறிக்கை மூலம் அறிந்திருப்பாய்!

வண்ணச் சுவரொட்டிகளை மட்டும் எண்ணிக் கிடக்காதே!

குறைந்தபட்சம்; கையில் கிடைக்கும் ஒரு கரித்துண்டு கூட, மதுரை மாநாட்டு விளம்பரத்துக்காக; உன்னால் பயன்படுத்தப்படுமேயானால் அப்போதுதான் நீ என் உடன்பிறப்பு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

09-07-1994

2152. இடஒதுக்கீடு பிரச்சினைக்கு இறுதித்தீர்வு இல்லையேல்; மதுரை சமூகநீதி மாநாட்டிலேயே போர் முரசு கொட்டப்படும்!

உடன்பிறப்பே,

மதுரையில் நடைபெற இருப்பது மதுரை மாநகர் மாவட்டம், புறநகர் மாவட்டம், வைகை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் எனப்படும் நான்கு மாவட்டங்களடங்கிய மண்டல மாநாடு போல அதனை நடத்துவதற்கான ஆயத்தங்களைக் கழக மாமணிகள் செய்து வருகிறார்கள்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாமலிருப்பது தமது பொது வாழ்வில் பெருங்குறை என எண்ணி; இப்போதே பயண ஏற்பாடுகள் பட்டி தொட்டிகள் முதல் பட்டினக்கரைகள் வரையில் உள்ள உடன்பிறப்புகளால் மேற்கொள்ளப்பட்டு விட்டன.

செயல் திறன் கொண்ட கழக நிர்வாகிகள்; ஆங்காங்கு தாங்கள் பொறுப்பு வகிக்கும் அமைப்புகளை வேகப்படுத்தி, மாநாட்டுக்கான விளம்பரங்களை மக்களின் கண்கள் படுமிட மெங்கணும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

சுவரொட்டி விளம்பரங்கள் செய்வதென்பது; முன்போல அவ்வளவு சுலபமான காரியமல்ல! ஒரே வண்ணத்தில் 30க்கு 40 என்ற அளவில் ஒரு சுவரொட்டி அச்சிடுவதென்றால்; ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்றிருந்த காலம் போய், இப்போது நாலு ரூபாய்; ஆம், ஒரு சுவரொட்டிக்கு! ஒரே ஒரு சுவரொட்டிக்கு!

ஒரு வண்ணத்துக்கே நாலு ரூபாய் என்றால்; இரு வண்ணம், மூவண்ணமென சுவரொட்டி அச்சிட இன்னும் அதிகமாகும்.

கட்சிப் பணத்தை இதற்காக செலவிடுவதென்றால்; அதில் என் கருத்து கஞ்சத்தனமாக இருக்கும் என்பதை நீ அறிவாய்!

அதனால்தான் மாநாடு ஆனாலும், பேரணி ஆனாலும், கழக விழா நிகழ்ச்சிகள் ஆனாலும்; குறைந்த செலவில் நிறைந்த எழுச்சியைக் காணவேண்டுமென்று, அடிக்கடி கூறிடுவேன்.

கொள்கை முழக்கம் வரவேற்பு வளைவுகள் - அறப்போர் முரசு கொட்டும் பதாகைகள் - அவைகள் அலங்காரத்தில் மூழ்கி இராவிடினும், அவற்றைப் பார்த்திட; படித்திட, இதயத்தில் ஓர் எழுச்சிக் கனல்!

அதேபோல சாலைகளின் இருமருங்கிலும் அசைந்தாடும் கொடிகள்! அண்ணாந்து பார்த்தால் கொடித் தோரணங்கள்! மொத்தத்தில் கழக நிகழ்ச்சி நடைபெறும் ஊரோ, நகரோ கொடிக் காடாக இருந்திடல் வேண்டும்!

இந்த ஆவலின் விரிவாக்கச் செயல்பாட்டினைத்தான், மதுரை மாநகரை வந்து தொடும் சாலைகளிலும் - மதுரை மாநகரிலும்; மண்டல மாநாட்டின்போது நான் காணத் துடிக்கிறேன்.

வைரமணிகள் இழைத்த தொட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருக்கும் குழந்தையை; அந்த விலை உயர்ந்த, கண்கவரும் தொட்டிலுடன் காண்பதற்கு அழகாகத்தானிருக்கும். ஆனால் வைர மணிகள், குழந்தையின் உடலில் குத்தி உறுத்திடும் வேதனை குழந்தைக்கல்லவா தெரியும் -

நமது கழகமோ தாயின் மடியில் படுத்துக் கொண்டு குறுநகை காட்டி, சிறுகை நீட்டி - நம்மைக் களிப்பில் ஆழ்த்தும் குழந்தை!

இந்தக் குழந்தைக்குப் பட்டுச் சட்டை இல்லாமலிருக்கலாம், பளபளப்பு நகைகள் போடாமல் இருக்கலாம் - எனினும் இதனைத் தொடுவதே பட்டுத் துணியைத் தொடுவது போல! இதன் சிரிப்பே, வைரமணிகளின் ஜொலிப்பைப் போல!

எளிமையில் இனிமை காண்பதும், எழுச்சி காண்பதும் இந்த இயக்கம் ஏற்றுக் கொண்டுள்ள முறையாகும் - அந்த முறையில் குறையொன்றும் நிகழாமல் மதுரை மண்டல மாநாடு நடைபெற்றிட நாளும் ஓய்வின்றி உழைத்திடும் உடன்பிறப்புகளையெல்லாம் வாழ்த்துகிறேன்.

கூடல்மாநகரில் நடைபெற இருக்கும் இந்த மாநாடு, ஏதோ; கூடினோம், கலைந்தோம் என்று முடியும் கூட்டத்தினரின் திருவிழா

அல்ல! கொள்கை மறவர் கூட்டம்! குன்றெடுத்த நெடுந்தோளில் பந்தாடும் தன்மானச் சீயங்களின் பாடி வீடு!

முதல் நாள் ஜூலை 29 அன்றே மதுரையம்பதி, களைகட்டிவிடும் - காலையில் கூடும் பொதுக்குழு, தி.மு.கழகத்தின் புதிய பொருளாளரைத் தேர்ந்தெடுத்து, தணிக்கைக் குழு உறுப்பினர்கள் இருவரையும் தேர்ந்தெடுக்க இருக்கிறது. தலைமைக் கழகத்தின் வரவு செலவுக் கணக்கு பொதுக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட இருக்கிறது.

அன்று மாலை கழகம் நடத்தும் மாபெரும் பேரணி! சுருக்கமாகச் சொன்னால், கடலின் அலைகள் கால் முளைத்து வரிசையிட்டு நடந்து செல்வதுபோல் இருக்கும் - தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனும் - ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியப் பாண்டியனும் - வெற்றி பெற்றுத் திரும்புங்கால், மதுரை வீதிகள் எப்படி எழுச்சிப் பெற்று திகழ்ந்தன என்பதை நாம் காணாத குறையை, ஜூலை 29 மதுரையில் கழகப் பேரணி போக்கிவிடும் என்று நம்பலாம்!

மறுநாள் ஜூலை 30, சமூக நீதி மாநாடு - இன்று தமிழகத்தில் எரிமலைக் குழம்பை வழிய விட்டிருக்கும் பிரச்சினை, அனைத்திந்திய தலைவர்களை எல்லாம் சிந்திக்க வைத்துள்ள பிரச்சினை, விகிதாசார அளவுப்படி மிகப் பெரும்பாலோராக இருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் விதியோடு விளையாடும் பிரச்சினை, சமூக நீதி காண்பதற்கு இன்று ஒன்றுபட்டு நிற்கின்ற தமிழகத்து பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், முதல் நாள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்ற இருக்கிறார்கள்.

அதற்குள் பிரச்சினைக்கு நல்ல முடிவு ஏற்படாவிட்டால்; முதல் நாள் மாநாட்டிலேயே ஆற்றப்படுகின்ற உரைகள் அனைத்தும் அறப்போர் முரசு கொட்டும் உரைகளாகவே இருக்கும்!

அடுத்தநாள் - ஜூலை 31 அரசியல் மாநாடு - இந்திய அரசியல் எங்கே போய்க் கொண்டிருக்கிறது; எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதையும் - தமிழக மக்கள் தமக்குத்தாமே தோண்டிக் கொண்ட படுகுழியிலிருந்து எவ்விதம் கரையேறுவது என்பதையும் விளக்கி - வில்லிலிருந்து எழும் கணைகளாக தீர்மான

அறிவிப்புக்களை வெளியிடும் களமாக அந்த மாநாடு காட்சி தரும்! களம்புகக் கண்ணொளி சிந்தி அணிவகுக்கும் தீரர்களின் பட்டாளத்து நடையுடன் உன்நடையும் இணையாதா என்ன? எனவே நடந்திடுவாய் மதுரை நோக்கி? காத்திருப்பேன் உன்முகம் நோக்கி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-07-1994

2153. இன்று தவறிவிட்டால், தாமதித்து விட்டால், தயங்கிவிட்டால் இனிப் பல தலைமுறைகளுக்கு தமிழனுக்கு உய்வில்லை; உரிமையில்லை!

உடன்பிறப்பே,

சமூகநீதிக்கான அறப்போராட்ட அணியின் அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி ஜூலை 10 முதல் 15-ந் தேதி வரையில் மாநில முழுதும் வட்டத் தலைநகர்களிலும், பேரூர்களிலும் கூட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்று, இடஒதுக்கீடு கொள்கையில் மத்திய அரசு கடைப்பிடிக்கும் மந்தநிலையையும், மாநில அரசு எடுத்துள்ள இரட்டை வேட நிலையையும் கண்டித்து மக்களுக்கு அளிக்கப்படும் விளக்கங்கள்; குக்கிராமங்களில் உள்ள பாமர மக்களையும் விழிப்படையச் செய்து வருவதுடன், மாணவர்களையும் தங்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வைத்து வீறு கொள்ளச் செய்து வருகின்றன.

ஜூலை 15 முதல் 22 வரையில் ஒன்றியங்களில் உள்ள கிராமங்களிலும் சைக்கிள்களில் அல்லது நடந்து சென்று நீயும் மற்ற கட்சிகளின் செயல் வீரர்களும் நடத்த இருக்கின்ற பேரணி வாயிலாக; சமூக நீதிக்கான முழக்கம் கேட்காத இண்டு இடுக்கு மூலை முடுக்கு தமிழ்நாட்டிலே எங்குமே இருக்கக்கூடாது.

இடஒதுக்கீடு என்றால் என்ன என்பதை இன்னமும்கூட புரிந்துகொள்ளாத அப்பாவி மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த அப்பாவித்தனமும், அடிமை மனப்பான்மையும், அறியாமையும் அகன்றிடத்தானே இடஒதுக்கீடே கோருகிறோம்!

ஏழுநாள் சைக்கிள் அல்லது நடைப் பேரணியில் அந்த எழுச்சியை அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் உருவாக்கிட ஓய்வின்றி உழைத்திட வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பழங்குடி மக்கள் இந்த மாநிலத்தின் மக்கள் தொகையில் 85 சதவிகிதத்துக்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் என்கிறபோது; அவர்களுக்கென ஏற்கெனவே இருந்த 69 சதவிகிதமும் 50 சதவிகிதமாகக் குறைக்கப்படும்போது; எத்தனை பேருடைய கல்வி வாய்ப்பும், வேலை வாய்ப்பும் பாதிக்கப்படுகிறது - என்பதை ஒடுக்கப்பட்ட மக்கள் உணருமாறு புரியவைக்கும்போது; பாழுங் கிணற்றில் விழுந்தவன், பிடித்துக்கொண்டு ஏறுவதற்கு வீசப்பட்ட கயிறையும் இடையில் வெட்டித் துண்டிக்கிற விஷமத்தனமான கொடுமையை அவர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். எனவே ஜூலை 15 முதல் 22 வரை ஒற்றையடிப்பாதை மட்டுமேயுள்ள ஊர்களில்கூட உன் காலடி படவேண்டும் - உன் விளக்கங்கள் அங்குள்ள மக்களின் செவிகளில் நுழைய வேண்டும் - சிந்தையில் பதிய வேண்டும்.

ஜூலை 15 பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் - சமூக நீதிக்காகத் தமிழகத்தில் பெரியார் ஒரு முனையிலும், பேரறிஞர் அண்ணா ஒரு முனையிலும் போர்க்குரல் எழுப்பியபோது; அக்குரலின் நியாயத்தை அன்றைய பிரதமர் பண்டித நேருவுக்கு எடுத்துரைத்து - அரசியல் சட்டத்தைத் திருத்திட முனைந்து நின்றவர் - அவருடைய பிறந்த நாளில் நமது அனைத்துக் கட்சிகளின் சமூகநீதி அணிவகுப்பு மாநில முழுதும் பேரணிகளைத் தொடங்கி ஒரு வாரம் தொடர்ந்து நடத்துவது மிகமிகப் பொருத்தமுடையதுதானே!

ஜூலை 22க்குப் பிறகு, உடன்பிறப்பே; உனக்கு இடையிலே ஒருவாரம்கூட ஓய்வில்லை - 29-ந் தேதி நீ மதுரை மாநகரில் இருக்க வேண்டுமே!

அன்று மாலையில்தானே மதுரை மண்டல மாநாட்டின் பேரணி!

அந்தப் பேரணி; சமூகநீதிக்கான அறப்போர் அணியாக மாறும்போது எப்படிக் கட்டுப்பாட்டுடன் பட்டாளத்து சிப்பாய்கள் போலக் களம் புகுவர் என்பதற்கான ஒத்திகையாகவே அமையக்கூடும்!

தமிழக மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் ஆட்சியாளரின் ஆணவத்தையும், ஜனநாயக விரோதப் போக்கையும் - தூக்கி

எறிந்திட துள்ளி வருகுது வேல்! என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் அந்த மாவீரர்கள் நடத்தும் மதுரைப் பேரணி!

அந்தப் பேரணியின் பெருஞ்சிறப்புக்கு - பேரெழுச்சிக்கு - இரண்டாம் நாள் மாநாட்டில் சமூகநீதிக்காக அணி திரண்டுள்ள கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு, அறிவிக்கப்பட இருக்கும் மகத்தான போராட்டத்துக்கு; கட்டியம் கூறுவதுபோல இருந்திடல் வேண்டும், ஜூலை 15 முதல் 22 வரையில் சிற்றூர், பேரூர், பட்டிதொட்டி, பட்டினக்கரைகள் எங்கும் நடத்தப்பட இருக்கும் சைக்கிள் ஊர்வலப் பிரச்சாரங்கள், நடை பயணப் பிரச்சாரங்கள்!

விருப்பமுள்ளவராம் வெறும் பதவியில் பல பேர்; அவர் வேண்டாம் - நெருப்பின் பொறிகளே! நீங்கள் தேவை!

என இளைஞர்களை, மாணவ மணிகளை இனமானத்தமிழர்களை அழைக்கிறேன்!

புறநானூற்று காலத் தாய்கள் போல மானம் என் மகன் கேட்ட தாலாட்டு எனப் பாடி மகிழ்ந்து சமூகநீதிப் போர்ப்படைக்கு தன் குலவிளக்கையும் அனுப்பி, தானும் களம் காணத் துடிக்கும் மகளிரை அழைக்கிறேன் மதுரைப் பேரணிக்கு!

இப்போது தவறி விட்டால், தாமதித்து விட்டால், தயங்கி விட்டால், இனி எப்போதும் ஒடுக்கப்பட்ட தமிழனுக்கு இனிப் பல தலைமுறைக்கும் உரிமையில்லை, உய்வில்லை என்பதை உணர்ந்து செயல்பட; தமிழ்க்குலமே! வருக, மதுரைக்கு என்று அழைக்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-07-1994

2154. வனத்துறை அதிகாரிகள் கொடுமைக்கு கழக இளைஞன் பலி! நடவடிக்கை வருமா? மறைக்கப்படுமா?

உடன்பிறப்பே,

காக்கி உடை அதிகாரிகள், காவல்துறையில் இருந்தாலும், சிறைத்துறையில் இருந்தாலும், வனத்துறையில் இருந்தாலும், எத்துறைப் பொறுப்பில் இருந்தாலும் அவர்கள் மக்களின் பாதுகாப்புக்கு; அதிலும் குறிப்பாக உயிர், உடைமைகளின் பாதுகாப்புக்கு மெய்யான விசுவாசத்துடன், மனித நேய உணர்வுடன் கடமையாற்ற வேண்டியவர்கள் என்பதில் இருவிதமான கருத்துக்கே இடமில்லை.

ஆனால் தமிழகத்தில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்துவரும் மிகக் கொடுமையானதும், இழிவானதுமான சம்பவங்களில் வில்லன் பாத்திரம் ஏற்பவர்கள் அந்தத் துறைகளின் ஒரு சில அதிகாரிகளாக இருக்கிறார்கள் என்பதும்; அவர்களின் செயல்களுக்கு இந்த அரசில் கேள்வி கேட்பாரே இல்லாமல் போய் விட்டது என்பதும் ஊரறிந்த உண்மைகளாகும்.

விசாரணை என்ற பெயரால் மரண தண்டனை விதிக்கும் அதிகாரத்தை அந்த அதிகாரிகள் எடுத்துக் கொள்வதும், காவல் நிலையங்களுக்கு வரும் பெண்களைக் கட்டிலறைக்கு வந்த பெண்ணைப்போல நடத்தி, அவர்தம் கற்பைச் சூறையாடுவதுமான தொடர்கதைகளின் சங்கிலிப் பிணைப்பில்; இதோ இன்னொரு நெஞ்சைக் குலுக்கும் சம்பவம்!

சம்பவம் நடைபெற்று ஐம்பது நாட்களுக்கு மேலாகியும் வழக்கம்போல், இந்தக் கொடுமையையும் திரையிட்டு மறைத்திடும் முயற்சிகள் நடைபெறுவதால் இதனை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது வீண் வேலை எனினும்; பொதுமக்கள் கவனத்தில் வைக்கட்டும் என்பதற்காக எழுதுகிறேன்.

இதோ இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ள புகைப்படத்தில் இருப்பவர்கள் சாலிதீன் என்ற இஸ்லாமிய இளைஞரும் அவர் துணைவி பாத்திமாவும்!

சாலிதீனுக்கு வயது இருபத்தி எட்டுதான்! கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் ஆனைமலை ஒன்றியத்தில் சேத்துமடை என்ற சிற்றூரைச் சேர்ந்தவர்.

திருப்பூர் சென்று பழ வியாபாரம் செய்து வாழ்க்கை நடத்தியவர். பாத்திமாவை மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மணந்து கொண்டார். ஒன்றரை வயதில் ஓர் ஆண் குழந்தை.

கழகப்பணியில், குறிப்பாக இளைஞர் அணியில் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்திட்ட தொண்டர்!

அதன் காரணமாக அவர் மீது காழ்ப்புக் கொண்டிருந்த சில அரசியல் ஓநாய்கள்; அந்தப் பகுதியில் நடைபெறும் சந்தன மரக்கடத்தலில் சாலிதீனுக்கும் தொடர்பு உண்டு என வனத்துறை அதிகாரியிடம் வத்திவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து 23.5.94 இரவு 12 மணியளவில், வால்பாறை அட்டகட்டிப் பகுதியைச் சேர்ந்த வனத்துறை அதிகாரி ஆனந்தராஜ் என்பவர் மற்றும் மூன்று அதிகாரிகளுடன் சென்று சாலிதீனை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணைக்கென அழைக்கப்பட்டுச் சென்ற கணவன் வீடு திரும்பாதது கண்டு பதைத்துப் போன பாத்திமா, மறுநாள் தனது உறவினர்களிடமும், கழகத் தோழர்களிடமும் அந்தச் செய்தியைக் கூறியிருக்கிறார்.

அவர்கள் அட்டகட்டிப் பகுதிக்குச் சென்று அதிகாரிகளிடம் விசாரித்தபோது; விசாரணை முடிந்து சாலிதீனை வீட்டுக்குத் திரும்ப அனுப்பி விட்டதாகக் கூறியிருக்கின்றனர்.

பழ வியாபாரம் செய்யும் இடமான திருப்பூருக்கும் சென்று தேடி அலைந்தனர். கிடைக்கவில்லை.

சாலிதீன் என்ன ஆனார் என்பது மர்மமாகவே இருந்தது.

இதற்கிடையே பொள்ளாச்சி உதவி கலெக்டருக்கு வந்த ஒரு கடிதத்தில், கறுப்பு சிவப்பு கரை போட்ட உடை உடுத்திய ஒருவர், அடித்துக் கொல்லப்பட்டு, அவரது பிணம் காரில் கடத்திச் செல்லப்பட்டதாகக் குறிப்பிட்டு, காரின் எண்ணும் எழுதப்பட்டிருந்தது. உடனே உதவிக் கலெக்டர் அந்தக் காரின் ஓட்டுநரை அழைத்து விசாரித்திருக்கிறார். அதில் ஓரளவு உண்மை

வெளிப்பட்டிருப்பதாகச் செய்தி! சாலிதீனின் மைத்துனரும் 6.6.94 அன்று பொள்ளாச்சி உதவி கலெக்டரிடம் அதுபற்றிய புகார் ஒன்றைத் தந்திருக்கிறார்.

உதவி கலெக்டருக்கு வந்தது போலவே செய்தி தாங்கிய ஒரு கடிதம் 15.6.94 அன்று சேத்துமடை முஸ்லிம் ஜமாத்தின் தலைவருக்கும் வந்துள்ளது.

சாலிதீன் அடித்துக் கொல்லப்பட்டு, அவர் பிணம் காரில் கடத்தப்பட்டிருக்கிறது என்றால்; அந்த நிகழ்ச்சியில் தமக்குத் தொடர்பில்லையென்று வனத்துறை அதிகாரிகள் தப்பித்துக் கொள்ள முடியுமா?

விசாரணைக்கென சாலிதீன் என்ற அந்த இளைஞனை அழைத்துச் சென்றவர்கள்; இப்படியொரு கொடுமையைச் செய்திருப்பார்களேயானால் - அந்த அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை? என்ன தண்டனை?

சாலிதீன் துணைவியார் பாத்திமாவும் ஆனைமலைக் காவல் நிலையத்தில் இதுபற்றிப் புகார் ஒன்று அளித்துள்ளார்.

இதுவரை எந்தத் தீவிரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எத்தனையோ காவல்நிலையக் கொலைகள், கற்பழிப்புகள் போல இந்த வனத்துறைக் கொலை மர்மமும் ஆகி விட்டால்; ஆச்சரியப்படுவதற்கில்லை!

அரசாங்கமோ, அல்லது பொறுப்பும் மனிதாபிமானமும் கடமையுணர்வும் கொண்ட காவல்துறை அதிகாரிகள் யாராவது இருப்பின் அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடுமென நம்பலாமா?

அந்த நம்பிக்கை நாசமாகுமேயானால் திரண்டெழும் மக்கள் சக்தியின் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக நேரிடும் என்பதையாவது அலட்சிய சித்தர்கள் உணர்ந்து உரிய முறையில் செயல்படுவார்களா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

15-07-1994

2155. எந்தச் சூழ்நிலையிலும் எவரும் அசைக்க முடியாத உறுதியை உருவாக்கும் வரையில் சமூகநீதிக்கான போராட்டம் தொடரும்!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உனக்கு நான் எழுதும் இந்நாள் - ஜூலை 15 - பெருந்தலைவர் பிறந்தநாள்! இரண்டு நாட்களுக்கு முன்பு எழுதிய மடலிலேயே அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். சமூக நீதிப் போராட்டத்தில் முழு வெற்றி பெறும் வரையில் நமக்கு ஓய்வில்லை என்பதால் இன்று முதல் 22-ந் தேதி வரையில் நமது அனைத்துக் கட்சியினரின் சைக்கிள் மற்றும் நடைப் பேரணிகள் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நடக்க வேண்டுமென்றும் காமராஜர் பிறந்தநாளில் இந்த சமூகநீதிப் பேரணி தொடங்குவது பொருத்தம் என்றும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அன்பு நண்பர் ஆசிரியர் சாவி அவர்கள் இந்த ஆண்டு சாவி இதழ் காமராஜரைப் பற்றிய நினைவுகளைத் தாங்கி வருகிறது என்றும், நானும் அந்த இதழில் ஓரிரு பக்கங்களை நினைவு அலைகளால் நனைக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தார். எழுதினேன். ஏற்கெனவே நான் உன்னோடும் ஊராரோடும் பகிர்ந்து கொண்ட செய்திகள்தான் எனினும், சாவி இதழுக்காகவும் தனியாக எழுதினேன்.

அந்தக் கட்டுரையும் கவிதையும் இணைந்த பகுதியில்; ஒரு பகுதியை மட்டும் மீண்டும் இந்தக் கடிதத்தில் இணைத்துள்ளேன். அது வருமாறு :-

> "அரசியல் களத்தில் அவரும் நானும் ஒருவர் மீதொருவர் சுடுகணைகளைப் பொழிந்து கொண்டதுண்டு.

ஆனால் நான் அவர் மீது வைத்திருந்த மரியாதையும் - அவர் என் மீது காட்டிய அன்பும், ஒன்றையொன்று வென்றிடக் கூடியவை.

1975ஆம் ஆண்டு - பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்துவிட்ட நேரம்.

இந்தியாவிலேயே அந்தப் பிரகடனத்தை எதிர்த்தும், ஜெயப்பிரகாஷ் உள்ளிட்ட தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டதை எதிர்த்தும் தமிழ்நாட்டில் முதல் குரல் கொடுத்தது காமராஜர் தலைமையில் இருந்த காங்கிரசா அல்லது கழகமா என்கிற அளவுக்கு ஒன்றையொன்று முந்திக் கொண்டு செயல்பட்டபோது, கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது.

ஜனநாயகத்திற்கு வந்துற்ற இன்னல் கண்டு அவர் துடித்துப்போய் அதன் காரணமாக உடல் நலிவுற்று படுத்த படுக்கை எனும் நிலை பெற்றார்.

இச்செய்தி கேட்டவுடன் நானும், அன்றைய கல்வி அமைச்சர் நாவலரும் சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு விரைந்து சென்றோம்.

காய்ச்சலின் கடுமையால் கொதித்துக் கொண்டிருந்த அவர் உடலைத் தழுவிக் கொண்டேன். அவரும் தழுவியவாறு, தழுதழுத்த தொனியில் 'தேசம் போச்சு! தேசம் போச்சு!' எனக் கூறியவாறு கண் கலங்கிய அந்தக் காட்சி இன்னும் மனக்கண்ணை விட்டு மறையவில்லை.

'ஜனநாயகம் காத்திட நீங்கள் தலைமை ஏற்றிடுங்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை துறந்துவிட்டு உங்கள் பின்னால் அணிவகுக்கிறோம்' என்று கூறினேன். ஆனால் அவரோ அவசரப்பட வேண்டாம் என்றும், சில நாட்கள் பொறுமையாக இருக்குமாறும் அறிவுரை கூறினார்.

அக்டோபர் இரண்டாம் நாள் மதியம் மறைந்தார் அந்த மாணிக்கத் தலைவர் என்ற தகவல் வந்ததும் நானும் அமைச்சர் ராஜாராமும் தொலைபேசியிலேயே கதறியே அழுதுவிட்டோம். அடுத்த சில விநாடிகளில் திருமலைப் பிள்ளைத் தெருவில் பெருந்தலைவரின் இல்லத்தில் நாங்கள் இருந்தோம்.

கூடப் பிறந்த சகோதரர் ஒருவருக்கு எவ்வளவு பாச உணர்வுடனும் பரிவுடனும் இறுதிக் காரியங்களை ஒரு சகோதரர் செய்திடுவாரோ, அவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி செய்தார் என்று காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ராஜாராம் நாயுடு அவர்கள் சட்டமன்ற மேலவையில் பேசியது இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது."

உடன்பிறப்பே, ஜனநாயகத்திற்கு வந்துள்ள இன்னல் கண்டு அவர் துடித்துப்போனது போலவே; 1950-51ஆம் ஆண்டுகளில் சமூக நீதிக்கு ஏற்பட்ட ஆபத்து கண்டு அதனைத் தவிர்க்க, தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் ஆர்த்தெழுந்தபோது - காமராஜர் அவர்களும் தனது கடமையுணர்ந்து காரியமாற்றினார். அன்று அவர் ஆட்சிப்பொறுப்பில் இல்லை. அவரது கட்சி இங்கே ஆட்சியில் இருந்தது. அங்கே டெல்லியில் பிரதமராக நேரு அவர்கள் இருந்தார். சமூக நீதிக்காக அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாட்டில் எழுந்த பெருங்கிளர்ச்சியின் காரணமாக அரசியல் சட்டமே திருத்தப்பட்டதால்; அதன் பலன், தமிழ்நாட்டுக்கு மாத்திரமின்றி, இந்தியா முழுதுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள், கல்வி வேலை வாய்ப்புகளில் தடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கிடைத்தது.

இன்றுள்ள நிலை என்ன? நமது மாநிலம் அனுபவித்து வந்த 69 சதவிகித உரிமை உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் 50 சதவிகிதமாகக் குறைந்தது.

எனவே அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென 1993 நவம்பரில் சட்டப் பேரவை தீர்மானம் நிறைவேற்றிவிட்டு; ஒருவேளை அதற்குக் கால தாமதமானால் இந்த மாநில அரசு நிறைவேற்றும் சட்டத்திற்காவது குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டுமென 1993 டிசம்பரில் மாநில சட்டப்பேரவையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.

நவம்பர் தீர்மானத்தையும் நரசிம்மராவ் அரசு தட்டிக் கொடுத்துத் தூங்கப் போட்டு விட்டது. டிசம்பர் தீர்மானத்தையும் தாலாட்டுப்பாடி உறங்க வைத்துவிட்டது. மாநிலத்தில் உள்ள

ஜெயலலிதா அரசோ இதனைக் கண்டு கொள்ளாமலே ஐதராபாத் திராட்சைத் தோட்டத்தைக் கண்டு களிக்க ஆந்திரா பக்கம் சென்று விட்டது.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மற்றும் மலைவாழ் பழங்குடி மக்களுக்காகக் காலமெல்லாம் குரல் கொடுக்கும் கட்சிகளின் இடிமுழக்கங்கள், பூகம்பக் குலுக்கல்கள் இவற்றுக்குப் பிறகே இரு அரசுகளும் கண்களைக் கசக்கிக் கொண்டு, சோம்பல் முறித்து எழுந்து வந்தன.

அதிலும் இங்கே மாநில அரசு இருக்கிறதே; அது தன்னை எழுப்பி விட்டவர்கள் மீது எரிச்சலைக் கக்கியது - ஏடாகூடமாக ஏசிப் பேசியது - பணம் இருக்கிறது கையில்; சில பத்திரிகைகள் இருக் கின்றன சட்டைப்பையில் என்ற ஆணவத்துடன் லட்சக்கணக்கான ரூபாய்களை செலவழித்து அரசின் சார்பிலும், ஆளுங் கட்சி சார்பிலும் விளம்பர அறிக்கைகளை விஷமம் பரப்பி வெளியிட்டது!

1993 நவம்பரில் சட்டப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, அரசியல் சட்டமே திருத்தப்பட்டு இடஒதுக்கீட்டில் சதவீதம் நிர்ணயிக்கும் உரிமை மாநில அரசுகளே பெற்றிடும் நிலைமையை இந்த ஒன்பது மாத இடைவெளியில் பெற்றிருக்க முடியும் என்பதை; தேசிய அளவிலான கட்சிகளின் தலைவர்கள் எழுதியுள்ள ஆதரவுக் கடிதங்களைப் படித்துப் பார்த்தாலே தெளிவாகப் புரியும்.

ஆனால் அதற்காக எந்த முயற்சியும் முதலமைச்சர் மேற்கொள்ளவில்லை. டெல்லியில் உள்ள தேசியக் கட்சித் தலைவர்களின் ஆதரவு எதையும் இந்நாள் வரையில் கேட்கவில்லை.

அந்த முயற்சி எடுத்திருந்தால்; இந்தியா முழுதுமுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சமூகநீதி உத்திரவாதம், அரசியல் சட்டரீதியாகவே - ஒரு திருத்தத்தின் மூலம் கிடைத்திருக்கும்.

அதற்கு மாறாக; இங்கே உட்கார்ந்து கொண்டு இதுவரை மாநில அரசு, மத்திய அரசைக் குறை கூறிக் கொண்டிருந்தது. மத்திய அரசோ, உச்சநீதிமன்றத் தீர்ப்பில் ஒளிந்து கொண்டு தப்பித்துக் கொள்ளப் பார்த்தது.

இப்போது, மாநில அரசின் சட்டத்தை குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பி விட்டு; மத்திய அரசு இனி அந்த சட்டத்தின் பாடு - மாநில அரசின்பாடு என்று மாநில அரசின் மீது பாரத்தைப் போடக் கூடும்.

இதெல்லாம் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற நிலையை; அதைத் திருத்துவதற்கேற்ற ஆதரவான சூழ்நிலை இருந்தும் - அப்படித் திருத்த முன்வராததால் - இந்தியா முழுதுமுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவாகும்.

இப்போது, தமிழ்நாட்டு அளவிலாவது அந்த மக்களுக்கு சமூக நீதியில் உறுதியானதும், பாதுகாப்பானதுமான நிலை வாய்த்திட; குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறும் சட்டம், அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டாக வேண்டும் என்பது நம் அனைவரின் திட்டவட்டமான கோரிக்கை!

சமூகநீதியைப் பொறுத்து, மண்டல் கமிஷன் பிரச்சினையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பினால்; தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிமைகள் பறிபோகின்றன! பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அந்தத் தீர்ப்பு முழுமையான மனநிறைவை வழங்கவிடவில்லை -

எனவே எல்லா வகையிலும் - சமூகநீதியை அரைகுறையாகவோ, பாதுகாப்பற்றதாகவோ - ஆக்கும் நிரந்தரமற்ற நிலையை மாற்றி; எந்தச் சூழலிலும் சமூக நீதியை எவரும் அசைக்க முடியாத உறுதியை உருவாக்கும் வரையில் சமூக நீதிக்கான நமது போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

அதனை விளக்கும் மாநாடாகத்தான் மதுரையில் ஜூலை 30 ஆம் நாள் - ஆம்; மாநாட்டின் இரண்டாம் நாள் சமூகநீதி மாநாடு நடைபெறுகிறது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

16-07-1994

2156. மக்களை வாழவைக்கும் தொழில் எங்கே வருகிறது? மந்திரிகள் வாரிச் சுருட்டும் தொழிலன்றோ வளருகிறது!

உடன்பிறப்பே,

Business India எனும் ஆங்கில மாத இதழ், இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் பெரும் அலுவலகங்களைக் கொண்டு நடைபெறும் பிரபலமான ஏடாகும்.

அந்த ஏட்டில் கடந்த ஜூன் திங்களில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரை; தமிழ்நாட்டின் தொழில் துறை எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதை மிகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது.

கடந்த காலத்தில் தொழில் துறையில் முன்னணியில் இருந்த தமிழகம், இப்போது மிகவும் பின்னணியில் இருந்த மாநிலமான மத்திய பிரதேசத்திற்கும் பின்னால் நிற்கும் நிலையை அடைந்துள்ளது என்பதை அக்கட்டுரை சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இத்தனைக்கும் தொழில்துறை வளர்ச்சி பெற முடியாத சூழலுக்கு உட்பட்ட மாநிலமா தமிழ்நாடு என்றால்; இல்லை என்றே பிசினஸ் இந்தியா எனும் அந்த ஆங்கில ஏடு விளக்கமும் அளிக்கிறது.

"The State's infrastructure is one of the best in the country. The indicators are impressive - good roads, rail route of 4,010 k.m., two international ports, an international airport, five domestic air terminals, 4,366 bank branches, 100 percent electrification achieved as early as 1972, and a high level of urbanisation at 36 percent."

அமைப்பு ரீதியாக பார்த்தால் தொழில் தொடங்க நாட்டிலேயே தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலமாகும். சாலைகள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளன. 4,010

கிலோ மீட்டர் தொலைவுக்கு ரயில் பாதைகள் உள்ளன. இரண்டு பன்னாட்டுத் துறைமுகங்கள் உள்ளன. ஒரு பன்னாட்டு விமான நிலையமும், ஐந்து உள்நாட்டு விமான நிலையங்களும் உள்ளன. அதுமட்டுமல்ல, 4,366 வங்கிக் கிளைகள், தமிழகத்தில் உள்ளன. 100 சதவிகிதம் மின்மயமாக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு. இது 1972 ஆம் வருடமே சாதிக்கப்பட்ட ஒரு காரியமாகும் நகர்ப்புற வளர்ச்சி 36 சதவிகிதமாக உள்ளது

இந்த வசதி வாய்ப்புக்களை சுட்டிக்காட்டும் அந்த ஏடு; தொழில்கள் தொடங்கப்பட முடியாத நிலைக்கான காரணங்களைச் சொல்லும்போது தான்; அதைக் கேட்க விரும்பாமல் காதையும் மூடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. படிக்க முடியாமல் கண்ணையும் மூடிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இதோ Business India ஏட்டில் காணப்படும் அந்தக் கவலை தரும் செய்திகள் :-

" Says on well-known industrialist, "We dont't mind corruption so long as it delivers the goods. In the case of the AIADMK governments, the irritant is that it fails to honour its commitment for which we have already paid a fee."

Says one Madras based industrialist, "You need not cultivate every Tom, Dick and Harry. If you can please the presiding deity, Yours interests are taken care of. But if you fall out of favour, your life is a mess." Jayalalitha's whimsical behaviour has reported put off several major industrial houses."

எந்தவொரு காரியம் நடைபெற வேண்டுமென்றாலும் அதற்கு லஞ்சம் தர வேண்டும் என்பது எங்களுக்குத் தெரிந்த ஒன்றுதான். ஆனால் அ.தி.மு.க. அரசைப் பொறுத்த வரையில் எரிச்சலூட்டும் விஷயம் என்னவென்றால் - நாங்கள் லஞ்சம் கொடுத்தால்கூட எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை என்பதுதான் என்று ஒரு பிரபல தொழிலதிபர் கூறுகிறார்.

சென்னை தொழிலதிபர் ஒருவர் அ.தி.மு.க. அரசில் எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்ற

அவசியம்இல்லை. தலைமைப் பொறுப்பிலிருக்கும் நபரை திருப்திப்படுத்தினாலே நினைத்த காரியம் முடிந்து விடும். ஆனால் அப்படி திருப்திப்படுத்தியும் காரியம் நடைபெறாது போனால் பெரும் சிக்கல்தான் என்று கூறியிருக்கிறார்.

இப்படி, முதலமைச்சர் ஜெயலலிதாவின் விசித்திரமான போக்கு காரணமாக பல பெரும் தொழிற்சாலைகளை தமிழ்நாடு இழந்துவிட்டது

அந்தக் கட்டுரையின் நடுவில் விளிம்பு காட்டிய செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது தான்; தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி குறித்து அந்த ஏடு வழங்கியுள்ள சுருக்கமான கருத்துரையாகும்.

Although Tamil Nadus infrastructures is one of the best, Jayalalitha's behaviour as put off businessmen.

தொழில் தொடங்குவதற்கான அனைத்து வசதிகளும் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இருந்தாலும் கூட ஜெயலலிதாவின் நடவடிக்கை பல தொழிலதிபர்கள் தொழில் தொடங்கவொட்டாமல் செய்து விட்டது

உடன்பிறப்பே, மூன்றாண்டு கால ஆட்சியில் எப்படி முன்னேறிவிட்டது பார்த்தாயா தமிழ்நாடு! மூன்று மாதத்திற்கு ஒருமுறை மாவட்டங்களின் அரசின் சார்பில் ஒரு மகாமகத் திருவிழா - மந்திரிகள், வாரியத் தலைவர்கள் மற்றும் அரசின் பல்வேறு துறையினர் இருக்கவே இருக்கிறார்கள் ஏடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுக்க - போற்ற, புகழ, துதித்து, தொழுதிட; அந்த விழாக்களில் நானூறு கோடி, ஐநூறு கோடி என்று ஏட்டளவில் திட்டங்கள் அறிவிப்பு! ஆடம்பரம், அரசாங்கமே தலைநகரைவிட்டு அந்த நகரிலோ, ஊரிலோ பத்து நாள் முகாமிட்டு முன்னேற்பாடுகள்!

ஆனால் உண்மை என்ன? அத்திப் பழத்தைப் பிட்டு பார்த்தால் அத்தனையும் சொத்தை என்பதைப்போல, இடறி விழுந்தால் லஞ்சம் - எழுந்து நின்றால் லஞ்சம் - ஆயிரம் பத்தாயிரம் என்றல்ல; அதெல்லாம் அற்பத் தொகை! லட்சங்கள்? சேச்சே; அவை சொற்பத் தொகை கோடிக்குக் குறைந்து எதுவுமில்லை -

கொடுத்தும் பயனில்லை என்று குமுறுகிறார்கள் தொழில் அதிபர்கள்! என் செய்வது; வளரும் தொழில், மக்களை வாழ வைக்கும் தொழில் நடக்கவில்லை! வாரிச் சுருட்டும் தொழில் வகையாக நடக்கிறது - திட்டம் வகுக்கப்பட்டு நடக்கிறது! இந்த அழகில் அரசு விழா என்ற பெயரால் ஆளுங்கட்சி விழா நடத்தி, திருச்செங்கோட்டில் எதிர்க்கட்சிகளைத் திட்டித் தீர்த்திருக்கிறார் முதலமைச்சர்!

உடன்பிறப்பே, நிலைமை உனக்கும் எனக்கும் மாத்திரம் புரிந்தால் பயன் என்ன? ஊருக்குப் புரிய வேண்டாமா? புரிய வைக்க வேண்டாமா? புறப்படு மதுரைக்கு! தாழ்ந்த தமிழகத்தை; மேலும் தாழ்ந்து தாழ்ந்து தறிகெட்டுப் போகாமல் நம் தலை கொடுத்தாவது தூக்கி நிறுத்துவோம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

18-07-1994

2157. சமூகநீதி - இடஒதுக்கீடு தீர்வு; என்ன நடக்கிறது என்று பார்ப்போம்; நாம் எப்படி நடப்பது என்று மதுரையில் முடிவெடுப்போம்!

உடன்பிறப்பே,

வெள்ளை இருட்டின் கறுப்பு விடியல் என்று சில கிழமைகளுக்கு முன்பு நான் எழுதியிருந்தேனே நினைவிருக்கிறதா உனக்கு?

ஆம்; கறுப்பருக்கு உரிமையுடைய தென் ஆப்பிரிக்கா மண்ணில் ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர் புலி வேஷம் போடுகின்றார்; புல் அளவு மதிப்பேனும் பொதுமக்களுக்குத் தருகின்றாரா? என்று கேட்ட புரட்சிக்கவிஞர் பாவேந்தரின் பாடலுக்கொப்ப - வெள்ளையர் ஆதிக்கம் எனும் கொடுமை அந்தச் சிறுபான்மைக் கூட்டத்தால் பெரும்பான்மையான கறுப்பு இன மக்கள் மீது காலூன்றிக் கொடி கட்டிப் பறந்ததைத்தான் வெள்ளை இருட்டு என்றும், அந்த இருட்டை விரட்டி சுதந்திர ஜனநாயக வெளிச்சத்தைக் கொண்டு வந்த நெல்சன் மண்டேலாவைத்தான் கறுப்பு விடியல் என்றும் பூரிப்பு பொங்கக் குறிப்பிட்டிருந்தேன்.

76-வது வயது தொடங்கும் அந்தக் கிழச்சிங்கத்துக்கு ஜூலை 18-ஆம் நாள் வரலாற்றுத் தியாகிகள் பட்டியலில் என்றுமே மறக்க முடியாத பிறந்தநாள்!

ஒன்றா? இரண்டா? தன் இனமக்களின் அடிமை விலங்கொடித்திட, மனிதருள் நீயுமோர் மனிதன் மண் அன்று! என மார்தட்டிக் கூறி, அந்த மனித சமுதாயத்தின் ஒரு பகுதியினர் இருட்டில் கிடப்பதை அனுமதியேன்; என முழங்கி - அதற்கு வெள்ளை ஆதிக்கம் அளித்த பரிசாக? 27 ஆண்டுகள்

சிறையில் கிடந்து 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அவர் விடுதலையடைந்தபோது திருச்சியிலே நமது கழக மாநாடு நடைபெறுகிறது.

காலையிலே செய்தி வருகிறது மாநாட்டு மேடைக்கு; உடனே நான் ஒலி பெருக்கியின் முன்னால் வந்து அந்த இனிய செய்தியைச் சொல்லி மண்டேலாவுக்கு வாழ்த்துச் சொல்லுகிறேன். பந்தலில் குழுமியிருந்த பல லட்சம் பேரும் எழுந்து நின்று கையொலி செய்து மகிழ்ச்சி தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் கடலோசையென கரவோசை எழுகிறது.

அதற்குப் பிறகு, விடுதலையான மண்டேலா சந்தித்துத் தீர வேண்டியிருந்த பிரச்சினைகள் எத்தனையோ! அவற்றையெல்லாம் நடந்து கடந்து இன்று அந்த நாட்டின் நாயகராகவே விளங்குகிறார்!

நெல்சன் மண்டேலா விடுதலையானபோது திருச்சியிலே தி.மு.க. மாநில மாநாடு!

நெல்சன் மண்டேலாவினால் கறுப்பு இன மக்கள் விடுதலை பெற்று, அவர்தம் தலைவராகவும் - அந்த நாட்டின் அதிபராகவும் அவர் உலவிடும்போது மதுரையிலே தி.மு.க. மண்டல மாநாடு!

தலைநகரம் ஜோகன்ஸ்பர்க்கில் 350 ஆண்டுகளாக விண்முட்டப் பறந்து கொண்டிருந்த வெள்ளை இன ஆதிக்கக் கொடி இறக்கப்பட்டு, புதிய கொடி ஏற்றப்பட்ட அந்த நிகழ்ச்சியை நேரிலேயும்; தொலைக்காட்சியிலும் கண்டு மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்த மனிதநேயப் பண்பாளர்களின் தொகை எண்ணில் அடங்குவதோ!

ஏறத்தாழ பத்து அல்லது அதற்கு மேல் ஒன்றிரண்டு சதவிகிதமே தென்னாப்பிரிக்க மக்கள் தொகையில் உள்ள வெள்ளையர் அந்த நாட்டின் வளங்கொழிக்கும் வசதி வாய்ப்புக்கள் அனைத்தையும் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தார்கள். மண்ணுக்குரியவர்களோ; அந்த மண்ணில் விளையும் வைர வைடூரியங்களையும் தங்கப்பாளங்களையும் தொட்டுப் பார்க்கவும், அவற்றின்கிட்டே நெருங்கவும் அருகதையற்றவர்களாக்கப்பட்டார்கள்!

ஆம்; நரிகள்புசிக்க எல்லாம் கொடுத்தே, சிங்க ஏறுகள் தூங்கிடுமோ? என்று புரட்சிக் கவிஞர் கர்ச்சித்தாரே; அந்தக் கர்ச்சனைதான் அங்கே நாடு முழுதும் கேட்டது.

முதலில் அதற்கு அளிக்கப்பட்ட விடை; அடக்குமுறை, சிறைவாசம் - சித்ரவதை - பல உயிர்கள் பலி!

ஆனால் இன்று? சிங்க ஏறுகள் விழித்துக் கொண்டன! நரிகள் தமது எண்ணிக்கைக்கேற்ப உரிய நியாயமான பங்கை மட்டுமே அனுபவிக்க முடியும் என்ற நிலை பிறந்துள்ளது. வெள்ளையர், கறுப்பர் இனப் பாகுபாடு இன்றி சமமாக மதிக்கப்படுவார்கள் என்று அறிவித்து விட்டே மண்டேலா ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளார்.

அவர் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள் தென்னாப்பிரிக்காவில் ஏராளமாக இருக்கின்றன. சுமார் இருபத்தி ஐந்து லட்சம் பேருக்காவது பத்து ஆண்டுகளில் வேலை வாய்ப்பு அளிப்பதாக மண்டேலா உறுதி கூறியுள்ளார். எல்லோர்க்கும் கல்வி, உணவு, உடை, உறையுள் அனைத்தும் அந்தப் பத்தாண்டுக்குள் வழங்கப்பட முடியும் என்று அவர் நம்பிச் செயல்பட தொடங்கியுள்ளார்.

சமத்துவம், சமதர்மம், சமூகநீதி, ஜனநாயகம் இவற்றுக்காகத் தன்னை வருத்திக் கொண்டு - 27 ஆண்டுகள் சிறையில் கிடந்து - 1918 ஜூலை 18 ஆம் நாள் அடிமைப் புழுதியில் பிறந்து, இன்று 1994 ஜூலை 18-ல் அந்தப் பூமியின் அதிபராக விளங்கும் நெல்சன் மண்டேலாவை அவரது பிறந்த நாளுக்காக வாழ்த்துகிற அதே நேரத்தில்; அவரது நாட்டை விடப் பல மடங்கு பெரியதும், மக்கள் தொகை 80 கோடியளவுக்குக் கொண்டதுமான இந்தியா எனும் இந்த ஜனநாயக நாட்டில் சமத்துவம், சமதர்மம், சமூகநீதி, ஜனநாயகம் எனும் சொற்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இன்னமும் இருப்பதை நாம் நினைவு கூர்ந்திடல் வேண்டுமல்லவா?

இங்கு வெள்ளையர் ஆதிக்கம் இப்போது இல்லை - ஆனால் தென்னாப்பிரிக்க நாட்டு கறுப்பு இன மக்கள் நேரடியாகக் கொடுமைப்படுத்தப்பட்டு, அவமதிக்கப்பட்டு, அவர்களின் கல்வி, வேலை வாய்ப்பு போன்றவை புறக்கணிக்கப்பட்டு - வீழ்ந்து கிடப்பதைப் போல இல்லாவிட்டாலும்; அத்தனை துன்பங்களையும் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்திய நாட்டில் மறைமுகமாக அனுபவித்துக் கொண்டு அழுதிடும் நெஞ்சினராய் இருந்திருக்கின்றனர்.

அவர்கள் சமூகநீதி பெற்று கல்வி வாய்ப்புகளையும் பெற்றால்தானே - சமத்துவம் காண முடியும்! சமதர்மத்தை நிலை

நாட்ட முடியும்! ஜனநாயகத்தை செம்மையாக நடைமுறைப் படுத்த முடியும்!

அந்தச் சூழ்நிலை உலகில் பெரிய ஜனநாயக நாடு எனப்படுவதும், 80 கோடி மக்கள் தொகையைக் கொண்டதுமான இந்தியத் திருநாட்டில் உருவாகிட, அடிப்படைத் தேவையாக இருப்பது சமூகநீதி! சமூகநீதி! சமூகநீதி!

அதற்கெனக் குரல் கொடுக்கும் இயக்கம், தொடர்ந்து தொண்டாற்றும் இயக்கம் தி.மு.கழகம்.

பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் பழங்குடியினர் - தமிழ் நாடு அளவில், மாநில அரசு மட்டத்தில் பெறுகிற சமூகநீதியை இந்திய நாட்டு அளவிலும் மத்திய அரசு மட்டத்திலும் பெற வேண்டுமென்பதற்காகவே பலகாலம் காங்கிரசாட்சியில் மத்தியில் கிடப்பில் போடப்பட்டிருந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல் நடத்துமாறு பிரதமர் வி.பி. சிங்கைக் கேட்டுக் கொண்டு தமிழக சட்டப் பேரவையில் தி.மு.க. அரசு, தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது.

தேசிய முன்னணி அமைப்பில் இடம்பெற்றிருந்த தி.மு.கழகம் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும் மண்டல் கமிஷன் பரிந்துரைக்கு உயிரூட்ட முன்வந்தன.

திரு. வி.பி. சிங் அவர்களின் தலைமையிலான தேசிய முன்னணி அரசு, மண்டல் கமிஷன் பரிந்துரை அமல்படுத்திடும் அறிவிப்பைச் செய்தது.

பின்னர் எத்தனையோ பிரளயங்கள்! ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டாலும் அன்று ஏற்றிவைத்த சமூக நீதி தீபத்தை அணைக்க முடியவில்லை - ஆனால் அதை ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியாத அளவுக்கு மண்டலைப் பொருத்தும் - நமது மாநிலத்தில் இட ஒதுக்கீட்டைப் பொருத்தும் - அணைத்துக்கெடுக்கும் வஞ்சக முயற்சிகள்!

அந்த முயற்சிகளை முறியடித்து; ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்! என்ற, நமது ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றை அண்ணா வழியில் அயராது உழைத்து வெற்றி பெறச்செய்வோம் என்று நெல்சன் மண்டேலா எனும் அந்தக் கறுப்பு விடியலின் பிறந்த நாளுக்கான வாழ்த்து கூறும் வேளையில் சூளுரை மேற்கொள்வோம்!

அந்தச் சூளுரை சமூகநீதிக்காகச் சுழன்றடிக்கும் சூறைக் காற்றாக மாறாமல் - சுமூகமான முடிவெடுக்கும் பொறுப்பு, மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசிடம் இருக்கிறது!

அந்தப் பொறுப்பை மத்திய அரசு தட்டிக் கழித்தால் பொறுத்தது போதுமெனப் பொங்கியெழுவர்; கறுத்த மனிதர்கள் தென்னாப்பிரிக்காவில் எழுந்ததைப் போல!

என்ன நடக்கிறது என்று பார்ப்போம்; நாம் எப்படி நடப்பது என்பதை மதுரையில் முடிவெடுத்து அறிவிப்போம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

20-07-1994

2158. மத்திய மாநில ஆட்சிகளின் மக்கள் விரோதப் போக்கை எதிர்த்திட மாவீரர்கள் திரளுகின்றனர் மதுரை மாநாட்டில்!

உடன்பிறப்பே,

ஜூலை 29, 30, 31 ஆகிய நாட்களில் மதுரை மாநகரம் எவ்வாறு எழுச்சிக்கோலம், எழிற்கோலம் கொள்ள இருக்கிறது என்பது குறித்து மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர், மாநகர் மாவட்டச் செயலாளர் காவேரிமணியம் ஏடுகள் வாயிலாகத் தீட்டியுள்ள வர்ணனைக் காவியத்தைக் கண்டிருப்பாய். களித்திருப்பாய். மதுரைக்குப் புறப்பட இப்போதே உன் கால்கள் பரபரத்துக் கொண்டிருக்கும். எத்தனை வாகனங்களில் - எத்தனை உடன்பிறப்புகள் எங்கெங்கிருந்து புறப்பட்டு; கிளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக் கூட்டம் என மதுரைக்கு வர இருக்கிறார்கள் எனும் செய்தி வந்தவண்ணமிருக்கிறது. எட்டுப் பக்கமாக்கியும்கூட முரசொலியில் வெளியிடத்தான் இடமில்லை.

வரவேற்புக் குழுத் தலைவர் காவேரிமணியத்தின் வர்ணனை வேறு உன் ஆசையை அலைமோதும் வெள்ளமாக ஆக்கியிருக்கும்.

இத்தனைக்கும் காவேரிமணியம் எதையும் தாட்பூட் என்று மிகைப்படுத்திக் கூறக்கூடியவரல்ல! மலையளவு நடத்திக்காட்டுகிறேன் என்பதைக்கூட தினையளவு நடத்திட முயன்று பார்க்கிறேன் என்று கூறிடக்கூடிய அடக்க சுபாவம் படைத்தவர்தான்.

அவரே மதுரையில் குடை பிடித்து நிற்கும் வான் பரப்பை, கொடிகளால் தோரணங்களால் மறைத்துக் காட்டுகிறோம் என்கிறார். தென்றலாய்த் தவழும் வாசகங்கள், புயலாய்ச் சீறும் வாசகங்கள், புரட்சிக் கனலாய்ப் பொங்கும் வாசகங்கள் கொண்ட வரவேற்பு வளைவுகள் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற

இருக்குமென்கிறார். எனவே ஏற்பாடுகள் அவர் குறிப்பிடுவதைக் காட்டிலும் பல மடங்கு ஏற்றமுடையதாகவே இருக்குமென நம்பலாம்.

மாநாட்டையொட்டி 120 அடி உயரத்தில் எனக்கு ஒரு கட் அவுட் எனப் பார்த்தவுடன்; திடுக்கிட்டேன். தேவையில்லை. வீண் செலவு செய்யாதீர் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டேன். செலவு மாநாட்டு நிதியிலிருந்த அல்ல; கோவை சம்சுதீன் ஏற்பாடு என்றனர். சம்சுதீனையே சென்னைக்கு அழைத்து அவரை சமாதானப்படுத்தி, அந்த கட் அவுட் வைக்கும் காரியத்துக்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டாகிவிட்டது.

உடன்பிறப்பே, ஐந்தேகால் அடி உயரமுள்ள உன் சகோதரன் நானே நேரில் வந்து நிற்கப் போகிறேன் என்கிறபோது; அத்தனை அடி உயரத்தில் எதற்காகக் கட் அவுட்?

அதற்கும் மேலாக பல்லாயிரக்கணக்கான அடிகள் உயரத்தில் இந்த இயக்கத்தை உயர்த்தி நிறுத்தி, அதனைக்கண்டு களிப்போம்! அதற்காக கண்ணயராமல் உழைப்போம் வா; கடுமையாக!

எழுச்சிவேண்டும், எழில் குலுங்க வேண்டும், பளபளப்புக்காக - படாடோபத்திற்காகப் பணத்தை விரயம் செய்தல் கூடாது, கழகக்கருவூலம் வந்து சேரும் ஒவ்வொரு காசும் உத்தமத் தொண்டனின் வியர்வை, வியர்வை, வியர்வை என்பதை இன்று நேற்றல்ல என்றுமே உணர்ந்து உன் போன்ற உடன்பிறப்புக்களிடம் உள்ளத்தைத் திறந்து காட்டுபவன் நான் - இந்த என் இயல்பறிந்து செயல்படும் இனியவர் பி.டி.ஆர். பழனிவேல் இராசன்தான் இந்த மாநாட்டின் நிதிக்குழுத் தலைவர் என்கிறபோது; ஆம், அவர் பண்பாளராம் பி.டி. இராசனின் திருமகனார் என்கிறபோது - அவர், திருச்செந்தூர் நெடிய பயணத்தில் என்னுடன் நடந்தது மட்டுமல்ல; தொடர்ந்து தி.மு.கழகத்தின் நெடிய பயணத்திலும் தொண்டுள்ளத்துடன் நடப்பவர் என்பதால் ஒரு செயல் முடிக்க நினைத்தால் அதை வெற்றிகரமாக முடிக்குமட்டும் ஓயமாட்டார் என்பதால், மாநாட்டின் சிறப்பை இப்போதே மகிழ்ச்சியுடன் கணிக்க முடிகிறது.

வரவேற்புக்குழுச் செயலாளர்கள்தான் யார்? யார்?

அடக்குமுறைகள் அடுக்கி வந்தபோதும் அஞ்சாது எதிர்த்து, ஆண்டொன்று மொழிப் போருக்காகச் சிறையில் உழன்று,

அதற்குப் பிறகும் மிசாவின் சித்ரவதையை சிறைச்சாலையில் ஓராண்டு ஆடாமல், அசையாமல், உள்ளம் வாடாமல் அனுபவித்து, அகலாத பற்று பாசத்துடன் கழகப் பணியாற்றும் இயக்கத்தின் அக்கினிப் பிழம்பை எஸ். அக்கினிராசு!

முரட்டு மீசை, முறுக்கான உடற்கட்டு, முகத்தில் எப்போதும் எடுப்பான கம்பீரம் - இப்படி ஒரு புயல் மனிதனுக்கு, இமயப் பனி போல் உருகிடும் இதயம் உண்டு என்பதற்கு எடுத்துக்காட்டாக; எள் என்பதற்குள் எண்ணெய் கொணரும் பேருழைப்பாளி ஐ. பெரியசாமி!

வளைந்ததோ சற்று முதுகு என நினைக்கும் போதே; வஞ்சகர்க்கு வளையாதவன் நான் எனும் உறுதியை விழி வழி வழங்கி, வீணர்க்கு, விபீடணர்க்கு நன்றியெனும் சொல்லுக்குப் பொருள் உரைப்பேன் நான் என்று செயலில் காட்டி படைநடத்தி முரசொலிக்கும் எல். மூக்கையா!

இன்று மூன்று மாவட்ட தளகர்த்தர்களும் வரவேற்புக்குழுச் செயலாளர்கள்!

உழைப்பின் வடிவம் தாவூது ஊர்வலக்குழுத் தலைவர், விளம்பரக்குழுவுக்கு வேலுச்சாமியும், மேடைக்குழுவுக்கு தர்மலிங்கமும், பந்தல் குழுவுக்கு பாக்கியநாதனும், பிரச்சாரக்குழுவுக்கு தீப்பொறி ஆறுமுகமும், உபசரிப்புக்குழுவுக்கு துரை. எழில்விழியனும், தொண்டரணிக்கு சவரிமுத்துவும், அலுவலகக்குழுவுக்கு மிசா. பாண்டியனும், பொதுக்குழு ஏற்பாடுகளுக்கு செல்வராசும் தலைமைப் பொறுப்பேற்று நடத்துகிறார்கள்.

இருநாள் மாநாடுகளையும் தலைமைப் பொறுப்பேற்று நடத்துகிற தங்கத் தம்பிகள் இருவரையும் பற்றி எழுதிடவும் வேண்டுமோ?

இருவருமே இந்தக் கழகத்தின் ஈட்டி முனைகள்!

இருவருமே இயக்கத்தின் வைரமணித் தூண்கள்!

அரசியல்ரீதியாக எதிர்கொண்ட அடக்குமுறைகளைத் தன்னிருதோளில் தாங்கிக்கொண்ட அருமைத்தம்பி வீரபாண்டி ஆறுமுகம், தனிப்பட்ட முறையில் பழிவாங்கப்பட அரசியலார் பின்னிய சூதுவலையில் சிக்கவைக்கப்பட்ட போதும், சிரம்

தாழ்த்தாது செம்மாந்து நின்று தியாக வரலாறு படைத்திட்ட தீரன்! சேலம் தந்த வீரன்! என் சிங்கம் நிகர் தம்பி! கழகக் கட்டுப்பாடு காத்திடும் தம்பி!

அந்தத் தம்பியின் தலைமையில்தான் மதுரையில் சமூகநீதி மாநாடு!

முழுமையான சமூகநீதி முட்டின்றிக் கிடைத்திட; அரசியல் சட்டத் திருத்தத்தை மத்திய அரசே நிறைவேற்றிட முன்வர வேண்டும் என்ற நமது போர்க்குரலுக்கு வடிவமைக்க இருக்கிறது அந்த மாநாடு!

மறுநாள், கழக மாநாட்டுத் தலைவர்தான் கழகத்தின் கண்மணி - அன்புத்தம்பி கோ.சி. மணி! மாட்ட நினைத்த சிறைச்சாலைகள் எல்லாம் இவருக்கு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலைதான்! பழிவாங்க முயற்சித்தவர்களின் சதி வேலைகளையெல்லாம் தவிடுபொடியாக்கிய தஞ்சைத் தரணியின் காவலன்! என் நெஞ்சில் குடிபுகுந்த சகோதரன்! எதிர்ப்புக்கு அஞ்சாத அடலேறு!

அந்தத் தம்பியின் தலைமையில் நடைபெறும் அரசியல் மாநாட்டில்; இன்று நாட்டில் நடைபெறும் மத்திய மாநில ஆட்சிகளின் மக்கள் விரோதப்போக்குகளை எதிர்த்தும், ஜனநாயகச் சீர்குலைவை எதிர்த்தும், ஊழல் எனும் பேரூழியை எதிர்த்தும், இந்திய நாட்டை அயலார்க்கு அடிமையாக்கும் திட்டங்களை, கொள்கைகளை எதிர்த்தும் போர் முரசு கொட்டப்பட இருக்கிறது!

முதல்நாள் மாநாட்டைத் திறந்து வைக்க இருக்கும் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்; தகாதோர் ஆட்சியில், தகாதோர் சூழ்ச்சியால், தடாக் கைதியாக, மாநாடு நடைபெறும் மதுரையில் தான் சிறையில் அடைபட்டுக் கிடந்தார். ஓயாது கழகப் பணியாற்றும் உள்ளமும், உறுதியும் கொண்ட மாதரசு!

மறுநாள் மாநாட்டுத் திறப்பாளர்; தாயும் தந்தையும் கரம்பிடித்து அழைத்து வர அந்தத் தளிர் நடைப் பருவத்திலேயே இயக்கமேடைகளில் எழுச்சி முழக்கம் செய்த திருமதி எஸ்.பி. சற்குணம், இலட்சியம் வெற்றிட எண்ணற்ற தடவை சிறை புகுந்த வீராங்கனை!

இவ்விரு தியாகவல்லிகளும் திறப்பு விழா உரை நிகழ்த்தும் மதுரை மண்டல மாநாட்டில் - இரு வண்ணக் கொடியை ஏற்றிடும்

இளவல் தம்பி பரிதி இளம் வழுதி; இந்த இயக்கத்தின் ஏறுநடை வேங்கை இளம்பரிதியின் அருமைச் செல்வன்! தனியொருவனாகச் சட்டமன்றத்தில் வீரக்குரல் எழுப்பும் இந்த இயக்கத்தின் இந்திரஜித்தன்!

உடன்பிறப்பே, சாதிக்பாட்சா நகரில் - காரைக்குடி சிதம்பரம் தோரணவாயில் கடந்து - புதுக்கோட்டை வீரய்யா முகப்பில் நுழைந்து - மன்னை நாராயணசாமி பந்தலில் - அமர்ந்திருக்கும் உன்னை; அன்பில் தர்மலிங்கம் அரங்கிலிருந்து நான் காணவும் - நீ என்னைக் காணவுமான அந்தக் காட்சியை, நாள்தோறும் கனவில் கண்டு இன்புறுகிறேன்! நேரில் காணும் நாள்தான் நெருங்கிக் கொண்டிருக்கிறதே! சந்திப்போம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

22-07-1994

2159. கொண்டுள்ள குறிக்கோளில் வெற்றிபெறும் வரை; சமூகநீதிக்கோரும் அணியினர் ஓயமாட்டார்கள் இது உறுதி! உறுதி!

உடன்பிறப்பே,

முதலமைச்சர், டெல்லிக்குப் போகும்போது விடுத்த கடித அழைப்புக்குப் பதில் எழுதாத தி.மு.க. தலைவர், இப்போது மட்டும் முதலமைச்சர் எழுதிய கடிதத்திற்கு பதில் எழுதியது ஏன்; என்று சில பேர் கேலிக்கணை தொடுத்துள்ளதாக ஏடுகளில் செய்திகண்டேன்.

பாவம்; அவர்கள் பயப்படத் தேவையில்லை, பதில் கடிதம் எழுதியதோடு நில்லாமல் அவர்களுக்குப் போட்டியாக தி.மு.க. தலைவர் ஆளுங்கட்சிக்கு ஆலவட்டம் சுற்ற வந்துவிடுவாரோ என்று!

அந்தக் கைங்கர்யம் அவர்களோடே இருக்கட்டும்!

இந்திய நாட்டின் தேசிய கட்சியினரின் தலைவர்களுக் கெல்லாம் இட ஒதுக்கீட்டுக்கான அரசியல் சட்டத்திருத்தத்துக்கு ஆதரவு கேட்டு கடிதம் எழுதிய கருணாநிதி, ஐ.நா. சபைக்கும்கூட எழுதினாலும் எழுதுவார் - என்பதாக அந்தச் சிலரில் ஒருவர், பெரிய நையாண்டி என்று கருதி மேடைப்பிரசங்கம் நிகழ்த்தியதையும் நீ அறிவாய்!

ஆனால் தேசியத் தலைவர்களுக்கு நான் கடிதம் எழுதியதைக் கேலி பேசியவர்கள்; வாயடைத்துப் போகுமளவுக்கு அவர்தம் வதம் கரி பூசிக்கொள்ளுமளவுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், இப்போது அதே தலைவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

ஏனம்மா; நீங்கள் ஐ.நா. சபைக்குக் கடிதம் எழுதவில்லை? என்று அந்தப் பெருமகன், முதலமைச்சரைப் பார்த்துக் கேட்கமாட்டார்! கேட்டால் எவ்வளவு சூடாகப் பதில் கிடைக்குமென்று அவருக்குத் தெரியும்.

டெல்லியில் பிரதமரை சந்திக்கப் போகிறேன் வாருங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு ஜெயலலிதா கடிதம் எழுதியபோது அவர் உருவாக்கியிருந்த சூழ்நிலை என்ன? கையாண்ட அணுகுமுறை என்ன?

இன்றைய தமிழக நிதியமைச்சர் நாவலர் அவர்கள்தான் அடிக்கடி வேடிக்கையாக மேடையிலும், தனிப்பட்ட உரையாடல் நேரத்திலும் ஒன்று சொல்வார்.

தலைவாழை இலை போட்டு, கிச்சிலிச் சம்பா அரிசியில் சோறு படைத்து, மணக்க மணக்க குழம்பும், ரசமும் கோப்புகளில் வைத்து, பக்கத்தில் ஒரு கிண்ணப் பாயசமும், அப்பளமும், வடையும், மேலும் அறுசுவை பதார்த்தங்களும் பரிமாறிவிட்டு; வீட்டுக்கு வந்துள்ள விருந்தினரைப் பார்த்து சீ! வந்து உட்கார்ந்து சாப்பிடு! என்றால் மானம் ரோஷம் உள்ளவர்கள் சாப்பிடுவார்களா?

இப்படி அவருக்கே உரிய பாணியில் பேசிப் பலமுறை கேட்டவன் நான்!

அதைப் போலத்தான் அம்மையார் ஜெயலலிதா; எதிர்க்கட்சிகளுக்கு ஒரு பக்கம் அழைப்புக் கடிதங்கள் அனுப்பிக் கொண்டே, இட ஒதுக்கீடு பிரச்சினையை எதிர்க்கட்சியினர் அரசியலாக்கப் பார்க்கிறார்கள் என்றும், எதிர்க்கட்சியில் உள்ள தலைவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றித் தெரியாதென்றும் அந்தத் தலைவர்களின் படங்களையே பிரசுரித்து, மிக இழிவான முறையில் பத்திரிகைகளில் ஒரு பக்க விளம்பரம், இரு பக்க விளம்பரங்கள் கொடுத்துக் கொண்டு; எதிர்க்கட்சிகள் அறிவித்த மறியலுக்கு எதிராக அதே தேதியில் பந்த் அறிவித்து, மறியலுக்கு நாலு நாள் முன்னதாகவே ஐம்பதாயிரம் பேரைக் கைது செய்து சிறையில் அடைத்து; ஜனநாயக விரோதச் செயலில் எவ்வளவு ஈடுபட முடியுமோ அந்த அளவுக்கு ஈடுபட்ட காரணத்தால்தான், அவரது அழைப்பை ஏற்று டெல்லி செல்லவில்லை எதிர்க்கட்சித் தலைவர்கள்!

ஆனால் யாரும் ஒன்றை மறந்து விட முடியாது; இதற்கு முன்பு இட ஒதுக்கீடு பிரச்சினைக்காக முதல்வர் கூட்டிய எல்லாக் கூட்டங்களிலும் எதிர்க்கட்சியினர் தவறாமல் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

1993 நவம்பரில் ஒரு தீர்மானத்தையும், டிசம்பரில் ஒரு சட்டத்தையும் பேரவையில் நிறைவேற்றி விட்டு - பல மாத காலம் பெருந்தூக்கத்தில் இருந்த மாநில அரசையும், படுமெத்தனமாக இருந்த மத்திய அரசையும் எழுப்பி விடவே ஜூன் 14, 15 ஆகிய நாட்களில் எதிர்க்கட்சிகளும், தி.மு. கழகமும் கலந்து பேசி அறப்போராட்டத்தை அறிவிக்க நேர்ந்தது என்பதை அறியாதார் யாரும் இருக்க இயலாது.

93 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ன சொல்லுகிறது?

தமிழ்நாடு அரசு இதுவரை மேற்கொண்டு வந்துள்ள 69 சதவீத இடஒதுக்கீட்டுக் கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவும், நிறைவேற்றப்படவும், இந்த அரசியல் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வருவதைத் தவிர மாற்று வழி வேறு எதுவும் இல்லை.

இப்படி திட்டவட்டமாக, தெளிவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள்; பிறகு,

31.12.93 அன்று சட்டப் பேரவையில் 69 சதவீத இடஒதுக்கீட்டுக்காக தனியாகவே ஒரு சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றி, குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்காக அனுப்புகிறார்கள்.

ஆனால், இதற்கிடையே எந்த ஒரு காலகட்டத்திலும் எதிர்க்கட்சிகளுக்குத் தெரிவிக்காமலே ஒரு ரகசியத்தை மறைத்துவிட்டனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தனியாக ஒரு சட்டம் நிறைவேற்றிய போதும், அல்லது அந்தச் சட்டம் பற்றி விவாதிப்பதற்காக சர்வ கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியபோதும் - அந்த விஷயம் அரசினரால் வெளியிடப்படவே இல்லை.

என்ன ரகசியம் அது? அதுதான் உச்சநீதிமன்றத்தில் இந்த அரசு மன்னிப்புக் கேட்டுக் கொண்டதும், இனி 50 சதவிகிதமே

நடைமுறைப்படுத்துகிறோம் என்ற உறுதிமொழி வாக்குமூலம் எழுதிக் கொடுத்ததுமாகும்.

மனந்திறந்து எல்லா எதிர்க்கட்சிகளிடமும் விவாதிக்க வேண்டிய பிரச்சினையில்; இப்படியொரு உண்மையை மறைக்க வேண்டிய மர்மம் என்ன?

இதுபோன்ற காரணங்களை வெளியிட்டுத்தான் முதல்வரின் டெல்லிப் பயணத்தில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ள இயலாது என அறிவித்தன.

அதன் பின்னர், இடஒதுக்கீடு பிரச்சினையில் சதவீத அளவை நிர்ணயிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கே இருக்கும் விதத்தில் அரசியல் சட்ட இடஒதுக்கீடு பற்றிய பிரிவில் திருத்தம் ஒன்று இணைக்க வேண்டுமென்று கருத்தறிவித்து தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கும், பிரதமருக்கும், முதலமைச்சருக்கும் கடிதம் எழுதினேன். மிகப் பெரும்பாலான முக்கியமான தலைவர்களிடமிருந்தெல்லாம் அரசியல் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவான பதில்கள் வந்துள்ளன. கழக மாநிலங்களவை உறுப்பினர்களும் அந்தத் தலைவர்களை சந்தித்து ஆதரவு கோரி, அவர்தம் ஆதரவைப் பெற்று வந்துள்ளனர். இந்த முறையை முதலமைச்சர் பின்பற்ற வேண்டுமென்றும் பேசியிருந்தேன்.

இதற்கிடையே தமிழ்நாடு சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் கிடைத்து விட்டது எனினும்; தமிழக முதலமைச்சர் அவர்கள், அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீடு சதவித அளவை மாநில அரசுகள் நிர்ணயிக்க வழி காணக்கூடிய திருத்தம் வேண்டும். அது ஒன்றே எந்த நீதிமன்றத்தாலும் கட்டுப்படுத்த முடியாத வலுவான ஏற்பாடு என்ற எதிர்க்கட்சிகளின் கருத்தை ஏற்று - அதற்கு ஆதரவு கோரி எல்லாத் தலைவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார். மத்திய அரசே அந்தத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்துவதற்கு மாறாக, அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த அரசியல் சட்டத் திருத்தத்துக்கு தனி நபர் மசோதா கொண்டு வருவர் என்றும், அதற்கு ஆதரவு தர வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனி நபர் மசோதா கொண்டு வருவதால் பயனில்லை; அதை விரைந்து கொண்டு வருவதோ, வெற்றி பெறுவதோ, விதிமுறைகளின் படி எளிதான காரியமல்ல என்பதால்;

1951-ல் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ள கருத்தைச் சுட்டிக் காட்டி, மத்திய அரசே திருத்தம் கொண்டு வருமாறு வற்புறுத்த வேண்டுமென முதலமைச்சருக்கு தெரிவிக்க வேண்டியது; இட ஒதுக்கீடு பிரச்சினையில் நீண்ட நெடுங்காலமாக ஊறிப்போயுள்ள நமக்குக் கடமை ஆயிற்று!

தனி நபர் மசோதா எனில் கொள்கை ரீதியாக தி.மு.க. எம்.பிக்கள் அதற்கு வாக்களிப்பர்! ஆனால் உண்மையிலேயே திருத்தம் விரைவில் கொண்டு வரப்பட, அது வெற்றி பெற மத்திய அரசின் சார்பாகத்தான் முன் மொழியப்பட வேண்டும்.

தமிழ்நாடு இயற்றிய சட்டத்திலேயே ஒரே பிடியாக இல்லாமல்; இடஒதுக்கீட்டில் அரசியல் சட்டம் மாநில அரசுகளின் உரிமைகளுக்கு வகை செய்து திருத்தப்பட வேண்டுமென்று ஜெயலலிதா உணர்ந்து கொண்டதைப் பாராட்டியும் - அதே நேரத்தில் அத்திருத்தம் தனி நபர் மசோதா எனும் அளவில் கொண்டு வருவது அவ்வளவு சிலாக்கியமல்ல என்பதை அறிவுறுத்தியும்; பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் பழங்குடி மக்களின் நிலையான நலனை முக்கியமாகக் கருத்தில் கொண்டும்தான் பதில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

அரசியல் சட்டத்திருத்தத்திற்கு தொடர்ந்து முதலமைச்சர் முயற்சிகளை மேற்கொண்டாலும், மேற்கொள்ளா விட்டாலும் சமூகநீதிக்காக அணி சேர்ந்துள்ள கட்சியினர் இந்தக் குறிக்கோளில் வெற்றி பெறும் வரையில்; ஓய மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி! உறுதி! உறுதி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-07-1994

2160. இந்தியா எங்கோ போகிறது?
தமிழ்நாடு தறிகெட்டு நிற்கிறது!
இதற்கெல்லாம் தீர்வுகாண கூடுவோம்
கூடல் மாநகரில்!

உடன்பிறப்பே,

மூதூராம் மதுரையில் மூன்று நாட்கள் நடைபெறும் எழுச்சி மிக்க மாநாட்டுக்கு, இன்னும் இரண்டே நாட்கள்தான் இடையே உள்ளன. இனிமேல்தான் என் அழைப்பு கிடைத்தது, அதற்குப் பிறகு நீ பயண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதில்லை. என்றைக்குப் பாண்டி மண்டலத்தில் மதுரைமண்டல மாநாடு நடைபெற இருக்கிறது எனும் செய்தி வந்ததோ, அன்றைக்கே உன் மனக்கண்ணில் மதுரைக் கோபுரங்களும், அந்தக் கோபுர வரிசையால் புகழ்பெற்றுத் திகழும் மதுரை மாநகரத்து மாசிவீதிகளும், அந்த வீதிகளில் வீர நடைபோட்டு நீ நடத்த இருக்கிற பேரணியும் - தீரமன்னர் திருமலை நாயக்கர் பெயரால் உள்ள மஹாலும், மாதர்குலத்தரசி மங்கம்மாளை நினைவூட்டும் சத்திரமும், சாலைகளும், மான மறவர்கள் மருதிருவர் பாதம் பட்ட கூடல் மாநகரின் குன்றாப் புகழும், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த அந்தச் சீரூரின் மங்காப் பெருமையும், காவியும் நீரும் கையிற் தனிச் சிலம்பு ஆவிகுடி போன வடிவும் கொண்ட கண்ணகி நீதி கேட்டு நெருப்பாய் கொதித்த நிகழ்ச்சியும், அந்த நாள் ஆண்ட பாண்டிய மன்னர்கள் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போன்றோர் நடத்திய போர்க்களக் காதைகளும், நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்றுரைத்த நக்கீரப் புலவனின் கம்பீரமும், இவ்வளவும் இன்ன பிறவும் நிழலாடத் தொடங்கியிருக்கும்.

இந்த முறை மதுரை மாநாட்டுக்கு வந்து திரும்பிய பின்னர்; இனி எந்த மாநாடு நடைபெற்றாலும் இந்த மாநாட்டை மறக்க

இயலாது எனுமளவுக்கு உன் மனத்தில் அழியாத முத்திரை பதிக்கும் மாநாடாகும் இது!

எனவே மதுரையென்றதும் நினைவுக்கு வருபவைகளில் இனிமேல் இந்த மாநாடு ஒன்றாக இருக்கும். மாநாடு குறித்து முன்கூட்டியே செய்திகளைத் தந்து மக்களைத் திரட்டும் விளம்பரப் பணியை நடத்திட நம்மிடம் போதிய பொருளாதார வசதியில்லை.

வானொலிகளோ, தொலைக் காட்சிகளோ; மத்தியிலே ஆளும் காங்கிரஸ் கட்சியின் நிகழ்ச்சிகளுக்கு பராக் கூறி பரபரப்பு விளம்பரங்களை வழங்குவதுபோல எதிர்க்கட்சிகளின் மாநாடு போன்ற பெரிய நிகழ்ச்சிகளைக்கூட முன்கூட்டிக் கூறிடும் ஜனநாயகப் பண்பாட்டை என்றைக்கும் பெற்றதில்லை. அமைச்சர்கள் அன்றாடம் ஏடுகளில் பக்கமொன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவிட்டு, முதலமைச்சரை மூகாம்பிகை என்றும் - தெய்வத்தாய் என்றும் - திராவிடத்தலைவி என்றும் - புறநானூற்று வீரத்தையும் விஞ்சி நிற்கும் புரட்சித்தாய் என்றும் - சொந்தமாக மட்டுமின்றி, அரசுத்துறைகளின் சார்பிலும் விளம்பரங்களை அள்ளிப்பொழிகிறார்களே; அதுபோன்ற நிலை நமக்கு இல்லை - இன்று மட்டுமல்ல; ஆட்சியில் இருந்தபோதும் அந்நிலை நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையல்ல!

வேறென்ன வழி, வகை நமக்கு? ஆயிரம், பத்தாயிரம், லட்சமென ஒதுக்கி அதற்கென ஒப்பந்த ஆட்களைப் பிடித்துச் செய்யும் விளம்பரங்களில் பளபளப்பு இருக்கும் - ஏன்; பரபரப்பு கூட இருக்கும்! அப்படி ஓவியம் தீட்டி வைக்கும் தட்டிகள்கூட ஐம்பதோ நூறோதான் நம்மால் ஆகும்!

ஆனால், பட்டி தொட்டி முதல் பட்டினக்கரைகள் வரையில், நான் குறிப்பிட்டுள்ள அந்த விளம்பர முறைகளுக்கு அறை கூவல் விடுக்கும் வண்ணம்; உன்போன்ற உடன் பிறப்புக்கள் அல்லும் பகலும் அயராது உழைத்துத் தீட்டியுள்ள மண்டல மாநாட்டுச் சித்திரங்கள்; அடடா! கண்ணைக் கவருகின்றன! கருத்தைக் கவருகின்றன! கறுப்பு வண்ணம், சிவப்பு வண்ணம் அத்துடன் என் உடன்பிறப்புக்களின் கைவண்ணம்! இதற்கென்ன ஓவியர் ரவிவர்மாவா தேவை; உன் போன்றோரின் சேவையன்றோ ஒவ்வொரு சுவரிலும், தட்டியிலும், உயிர் பெற்று உன் உணர்ச்சிகளின் பிரதிபலிப்பாக ஒளிவிட்டுக் கொண்டுநிற்கின்றன.

ஒருவர் இருவர் எனில் அவர்தம்விரல்களுக்குக் கணையாழிகூட அணிவித்து மகிழ்வேன்; இலட்சோப லட்சம் உடன்பிறப்புக்களுக்குக் கணையாழி வாங்கிட நான் எங்கே போவேன் - அதனால் அண்ணா அணிவித்த கணையாழி மின்னும் என் விரலை; உன் விரலாக நினைத்து இதில் இருக்கும் கணையாழிக்கும் இந்த விரலுக்கும் ஆயிரம் முத்தங்கள் அளிக்கிறேன்; ஆம், தம்பி, இந்த விரல் இலட்சக்கணக்கான உன் போன்ற உடன்பிறப்புக்களினால்தான் அசைகிறது என்ற அசையாத நம்பிக்கையுடன்! இந்த மாநாட்டுக்கு முன் ஏதாவது தங்களுக்குத் தீனி கிடைக்காதா என ஏங்கியோர் சிலர்! பின்னுமொரு சலசலப்பு ஏற்படாதா என எதிர்பார்த்தோர் சிலர்! புதுவையில் புகைகிறது; எனவே போனது தி.மு.கழகம் என்றனர்! புடம் போட்ட தங்கமாய் அங்கும் ஒளிசிந்தக் கண்டு ஓய்ந்தனர்!

பொருளாளர் தேர்தலை வைத்து; பூசல் ஏதும் உருவாகாதா? அதில் குளிர்காயலாமே என்று கனவுகண்டனர்! காத்திருந்து பார்த்தனர்! ஏதேதோ கதைகளும் கட்டினர்! ஆனால் பொறுப்பும், கடமையும், கட்டுப்பாட்டுணர்வும் கொண்ட கழக முன்னணியினராம் என் கண்ணின் மணியனையோர் அந்தக் கனவாளர்களுக்குக் கடுகளவு இடமும் தராமல், முன்னால் கழகத்தை நிறுத்தி அதன் பின்னால் தங்களை நிறுத்திக் கொண்டு, முதலில் இயக்கம் - பிறகே எல்லாம் என்னும் பெருமைமிகு இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கி, என் இதயத்தடாகத்தில் என்றும் நீங்காத மலர்களாய் இடம் பிடித்துக் கொண்டுவிட்டனர்.

எனவே உடன்பிறப்பே, எல்லா வகையிலும் மகிழ்ச்சி பூத்துக்குலுங்கிட; அத்துடன் இந்த மாநாட்டில் எடுக்கும் முடிவுகள் வாயிலாக எதிர்காலத்தில் எழுச்சியும் பொங்கிடும் என்பதால் உனைக்காண என்மனம் துடிக்கிறது!

இந்தச் சமுதாயம் விழிப்புற்று, களிப்புற்று வாழவேண்டுமென்பதற்காக சமூகநீதி அணி அமைத்து மிகப் பிரமாண்டமான ஒரு போராட்டத்தை நடத்திவிட்டு - இன்னும் முழுமையான வெற்றிக்கு போராட்டம் தொடர வேண்டும் என்ற நிலையில் மதுரையில் கூடுகிறோம்!

கொலை, கொள்ளை, பழி தீர்க்கும் படலம், வழிப்பறிக்கொடுமை, ஒரு நொடிக்கு ஒரு ஊழல், எனத்

தறிகெட்டுத் தடுமாறும் தமிழகத்தை மீட்கவும், காக்கவும், திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்த மதுரையில் கூடுகிறோம்!

இந்தியா எங்கே போகிறது என்று தெரியாமல் - அந்நிய ஆதிக்கச் சகதியில் கால் வைத்து; பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்திட வழியின்றி, வழுக்கிவிழும் ஆபத்தைத் தடுத்துத் தவிர்த்திட தயங்கிடோம் என்பதைத் தோள் தட்டித் தெரிவித்துச் சூளுரைத்துச் செயல்பட மதுரையில் கூடுகிறோம்!

வெறும் விழாக் கூட்டமல்ல! வெற்று ஆரவாரக் கூட்டமல்ல!

இலட்சியப்பற்றும், கொள்கை உறுதியும், குறிக்கோளில் நம்பிக்கையும் கொண்டவர்கள் இலட்சோப இலட்சமெனத் திரள இருக்கும் கூட்டம்! அந்தக் கூட்டத்தில் நீயும் நானும் இருப்பதுதானே; நம் இருவருக்குமே பெருமிதம்! எனவே; வருகிறேன், நீ வருவதை எதிர்பார்த்து! வா, உடன்பிறப்பே, வா!

அன்புள்ள,

மு. கருணாநிதி

27-07-1994

2161. கண்மணிகளுக்கு இடும் கட்டளை!

உடன்பிறப்பே,

இக்கடிதம் உன் கரத்தில் தவழும்போது நீ, உன்கோல மயிலுடனும் குழந்தைச் செல்வங்களுடனும் உற்ற உடன்பிறப்புக்களாம் கழகக் கண்மணிகளுடனும் மதுரைப் பயண ஏற்பாடுகளில் ஒன்றியிருப்பாய்!

இதற்கிடையே உனக்குக் கடிதம் எழுதித் தொல்லை கொடுப்பானேன் என்று எண்ணியதுண்டு - இருந்தாலும் மனம் கேட்க மறுக்கிறதே; உனக்கும் என் கடிதமில்லையேல் ஒரு செல்லக்கோபம் - எனக்கும் நாள்தோறும் உனக்கு எழுத வேண்டுமென்பதிலே ஒரு தணியாத சாபம்!

இன்று உனக்கு நான் வேறு எதையும் விளக்கிச் சொல்லப் போவதில்லை. விரைவாக வந்து சேர வேண்டுமென்பதற்காகப் பயணத்தில் தயவு செய்து பரபரப்புக் காட்டாதே! இரவுப் பயணத்தை அருள் கூர்ந்து தவிர்த்து விடுக! என்னதான் நமது வாகனங்கள் எச்சரிக்கையாக ஓட்டப்பட்டாலும், எதிரே வரும் வாகனங்களை ஓட்டுவோர், அதே எச்சரிக்கையைக் கடைப்பிடிப்பர் என்பது என்ன நிச்சயம்?

இதனை நான் இன்று நேற்றல்ல; எத்தனையோ ஆண்டுகளாக நீ கழக நிகழ்ச்சிகளுக்கு வந்து திரும்பும்போதெல்லாம் ஒரு தாயின் பாச உணர்வுடன் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன்.

அண்மையில் சில மாதங்களுக்குள்ளாக எத்தனை எத்தனை விபத்துக்கள்; சாலைகளிலே! நேற்றுக்கூட நமது தொழிற்சங்க செயல்வீரர்களிலே ஒருவரான திட்டக்குடி பெரியசாமி பேருந்து ஓட்டுநர் லாரி ஒன்று மோதியதால் மற்றும் ஏழு பேருடன் உயிரிழந்து நமைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளார்.

நமதியக்கத்தவர் என்று மட்டுமல்ல; வேறு எந்த இயக்கத்தைச் சேர்ந்தவராயினும் அவர்கள் இத்தகைய விபத்துக்களில்,

குடும்பத்துடன் பலியாவதும், சிலர் படுகாயமுற்றுத் துன்புறுவதும் ஏடுகளில் செய்தியாக வரும்போதே இதயம் குலுங்குகிறது. அதே நேரம் உன்னை நினைத்தும் நடுங்குகிறது. எந்தக்கட்சி - எந்தக் கொள்கை - எத்தகைய கருத்து வேறுபாடு - அந்த அரசியல் மோதுதல்கள் எத்தனை இருப்பினும்; நம்மிடம் பழகியோர் விபத்துக்களில் பாதிக்கப்படும் போதும், பலியாகிவிடும் போதும் மனித நேய உணர்வின் காரணமாக - பழைய குடும்ப பாச உணர்வின் காரணமாக பதைக்கத்தானே செய்கிறது! பழகியோர், உடனிருந்தோர், உடனிருப்போர் மட்டுமல்ல; ஒவ்வொரு நாளும் நமக்குப் பரிச்சயமில்லாதோர் பலர் விபத்துக்களில் உயிர்விட்ட செய்திகளைக் காணும்போது கூட கண்கள் பனிக்கத்தான் செய்கின்றன.

வாழ்க்கையில் எல்லாவற்றிலும் எச்சரிக்கை தேவை; எனினும், வாகனப் போக்குவரத்துகளில் மிகமிக அதிகமாகவே எச்சரிக்கை தேவை!

இரு நாட்களுக்கு முன்பு கர்நாடக மண்ணில் வளர்ந்து வரும் ஓர் இளம் நடிகரின் இன்னுயிர் விபத்தொன்றினால் பறிக்கப்பட்டுள்ளது; விடியற்காலை மேற்கொண்ட பயணத்தினால்தான்! இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி உன்னை பயமுறுத்துகிறேன் என்று எண்ணாதே! வந்தவர்கள், பத்திரமாக ஊர்திரும்பினீர்கள் என்ற செய்தி வந்தால்தான் என் வயிற்றில் பால் வார்த்தது மாதிரி இருக்கும்! என இதற்கு முன்பு எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேனல்லவா; அதைத்தான் என் உயிரினு மேலான உடன்பிறப்பே; இன்றைக்கும் வேண்டுகோளாக உன் முன் வைக்கின்றேன்.

என் வேண்டுகோளை சில நேர்வுகளில் ஆணையாகவே ஏற்று பழக்கப்பட்ட உடன்பிறப்பு நீ - இந்த வேண்டுகோள், வார்த்தை அளவில் தான் வேண்டுகோளே தவிர; என் கண்மணிகளுக்கு ஒரு சகோதரன் இடும் கட்டளை என எடுத்துக்கொண்டு, நலமுடன் வந்து மாநாட்டில் கலந்து கொள்க! நலமுடன் திரும்பிச் சென்று என் உள்ளத்தில் உவகை பூத்திடச் செய்திடுக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

28-07-1994

2162. மறையாத காவியம் படைப்போம்!

உடன்பிறப்பே,

இன்றுதான் மதுரைக்குப் புறப்படுகிறோமே; நாளைக்கு - அதாவது 29 காலையில்தான் மதுரையில் சந்திக்கிறோமே என்றிருந்தாலும் கூட, மதுரை வந்தடைந்ததுமே பொதுக்குழுப் பணிகள் காத்திருக்கின்றனவே என்பதால் இலட்சக்கணக்கில் பேரணியில் கூடிட இருக்கிற உன் போன்றோர்க்கு, என்றும்போல் ஒரு வேண்டுகோளை விடுத்திடும் கடமை எனக்கிருக்கிறதே; அதனை இந்தக் கடிதத்தின் வாயிலாகவும் உனக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீ, பேரணியில்; அணிகளுக்கு தலைமை தாங்கி நடத்தியும் வரலாம், அல்லது அந்த அணிகளில் பட்டாளத்து நடை போட்டு வரும் செயல்வீரர்களில் ஒருவராகவும் இருக்கலாம்.

அணிகள் சங்கமமாகி; அது பேரணியானாலும் கூட, மதுரை மாநகரின் வீதிகள் தாங்காத அளவுக்கு எழுச்சி அணி ஆனாலுங்கூட அது நிறைவுறும் வரையில் சீரணியாகவே சிறப்புற்று விளங்கிட வேண்டும்.

சிறு பிரச்சினைக்கும் இடம் தராமல் மண்டல மாநாட்டுப் பேரணி, மாசுமருவற்ற நிலையில் நடைபெற்றது என்ற பெருமை; நீ கடைப்பிடிக்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காரணமாகத்தான் ஏற்பட வேண்டும்.

சலசலப்பு செய்யலாமா - என்று எரிச்சல் கொண்டோர் எதிர்பார்க்கக்கூடும். அவர்களைக் காவல் துறையினர்க்கு அடையாளம் காட்டுவதே உன் முதல் கடமையாக இருக்க வேண்டும்! எனவே, எந்த ஒரு சூழலிலும் நமது கழகப் பேரணி, காட்டாற்று வெள்ளமாக மாறிடாமல் - கரை ஒழுங்குபடுத்தப்பட்டு கட்டுப்பாட்டுடன் பயணிக்கும் பேராறாகப் பெருக்கெடுத்திடல் வேண்டும்.

பார் சிறுத்ததோ என எண்ணிடும் அளவுக்கு படை பெருத்ததோ என மகிழ்ந்திடும் நிலையில் உள்ள கூட்டத்தில்கூட, பாம்பு பாம்பு! என ஒரு விஷமக்காரன் கூச்சல் போட்டுப் பரபரப்பை ஏற்படுத்திட இயலும்!

அப்போதும், பதைப்போ பரபரப்போ அடையாமல்; அமைதியைக் காத்திடுவதே நமது பலமாக அமையும் என்பதை மறந்து விடாதே!

பேரணியில் பெரு முழக்கம் நமது இயக்கத்தின் ஐம்பெரும் முழக்கமான;

* அண்ணா வழியில் - அயராது உழைப்போம்
* ஆதிக்கமற்ற சமுதாயம் - அமைத்தே தீருவோம்.
* இந்தித் திணிப்பை - என்றும் எதிர்ப்போம்.
* வன்முறை தவிர்த்து - வறுமையை வெல்வோம்.
* மாநிலத்தில் சுயாட்சி - மத்தியிலே கூட்டாட்சி

என்பதாக இருந்திடல் வேண்டும்.

அம்ஃதன்னியில்,

"திருத்துவோம் திருத்துவோம் இடஒதுக்கீட்டுக்காக..."

என ஒருவர் கூற,

"அரசியல் சட்டம் திருத்துவோம்"

என மற்றவர் முழங்கிட வேண்டும்.

"ஓயமாட்டோம், ஓயமாட்டோம்!"

"சமுகநீதி பெறும்வரையில் ஓயமாட்டோம்!"

"போரிடுவோம், போரிடுவோம்,
சமுக நீதிக்காக போரிடுவோம்!

"ஓரங்கட்டுவோம்! ஓரங்கட்டுவோம்!"

"ஊழல் ஆட்சிகளை ஓரம் கட்டுவோம்!"

"காட் ஒப்பந்தம் என்ன ஒப்பந்தம்?"

"இந்திய சுதந்திரத்தை, காட்டுக்கு அனுப்பும் ஒப்பந்தம்!"

"உடனே நடத்து உடனே நடத்து"

"உள்ளாட்சி தேர்தலை உடனே நடத்து!"

"மத்திய அரசே! மத்திய அரசே! பங்குச் சந்தை ஊழலில்"

"பங்கு போட்டுக்கொண்டோரை"

"பாதுகாக்கப் பார்க்காதே பாதகத்தைச் செய்யாதே!"

"ஒரு நொடிக்கு ஒரு ஊழல் செய்யும் தமிழகத்து ஆட்சியை..."

"ஓரங்கட்டுவோம்! ஓரங்கட்டுவோம்!"

உடன்பிறப்பே; இவ்வாறு நமது கொள்கை விளக்க முழக்கங்களும், கோரிக்கை ஒலிகளும் மட்டுமே பேரணியில் இடம் பெற வேண்டும் - நான் ஒன்றிரண்டை மட்டுமே குறித்துள்ளேன்! மற்ற முழக்கங்கள் நாட்டு நிலைக்கேற்ப; நாகரிகமாக நல்ல நடையில் அமையட்டும்!

மாற்றாரை, இழித்துரைக்கும் கோஷங்கள் பழித்துக்காட்டும் படங்கள், செயல்கள் எள்முனையளவு தலைகாட்டினாலும், அதனைத் தடுத்து நிறுத்தும் கடமை, பொறுப்பேற்றுள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு!

மதுரையில் கூடினர் - கழகத்தின் மாண்பு காத்தனர் எனும் சிறப்பைச் சிற்பமாகச் செதுக்குவோம் - ஓவியமாகத் தீட்டுவோம்! என்றும் மறையாத காவியமாகப் படைப்போம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

29-07-1994

2163. உடல், உயிர், அணு ஒவ்வொன்றும் சிலிர்த்து நிற்கின்றேன்!

உடன்பிறப்பே,

மூன்று நாட்கள் மதுரை மூதூரில் மண்டல மாநாடு என்றாலும்; போகவும் வரவுமாக அய்ந்து நாட்கள் அலைச்சல் முடிந்து, பயணக் களைப்பெல்லாம் தீர்ந்து மாநாட்டுச் சிறப்புகளை, வராதவர்களிடமும் உற்றார், உறவினர், உற்ற நண்பர்களிடமும் எடுத்துரைத்து மகிழ்ந்து கொண்டிருக்கும் வேளையில்; இதோ இந்தக் கடிதம் என் அன்புமுத்தங்களால் உன்கரங்களைச் சுவைத்து; சகோதரபாசத்தின் உச்சகட்டமாக ஆனந்தக் கண்ணீராலும் நனைத்திடுவதை உணர்ந்து சிலிர்த்திடுவாய் என்பதை நான் நினைத்து உடல், உயிர், அணு ஒவ்வொன்றும் சிலிர்த்து நிற்கிறேன்.

அடடா; அந்தப் பேரணி! பிஞ்சுக்கரங்களில் வாளேந்தி, கால்களில் தண்டையும் கிண்கிணியும் பூண்டு இளந்தளிராக எழுந்து நடந்தானே தலையாலங்கானத்துப் போருக்கு நெடுஞ்செழியன் எனும் பசலைப்பாலகன்; அவனைப்போல் ஆயிரமாயிரம் இளைஞர்கள் நடந்து வந்த கம்பீரம் - அணிந்து வந்த வெள்ளை உடை - தும்பைப் பூ அருவியொன்று கால் முளைத்துப் பெருகி வந்தது மாதிரியன்றோ இருந்தது!

என் தாய்களும், தமக்கைகளும், தங்கைகளும் - வீரமங்கையர் குலமடா இந்தத் தமிழ்க்குலம் என்பதைப் பறைசாற்றும் விதமாகவன்றோ அந்த மகளிர் அணிவகுப்பு அமைந்தது!

தொய்வில்லாச்சேனையென வந்த தொழிலாளர்தனை - மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டுலாவும் மறவேந்தர் மரபினர் யாம் என்பதைக் குணர்த்திய மாணவர் படையினர் -

மற்றும் விவசாயிகள், இலக்கிய வித்தகர்கள், வழக்கறிஞர்கள் இப்படி வரிசை வரிசையாக - இதற்கு முன்பு பல பேரணிகளில் காணப்பட்ட பத்தடி தொலைவு இடைவெளி கூட இல்லாமல் - மடை திறந்த வெள்ளமாக மதுரை மாநகர் வீதிகளிலே நீயும் மற்ற உடன்பிறப்புகளும்; நானும் பேராசிரியரும், பொருளாளர் வீராசாமியும், துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சிலாரும், தலைமைக் கழக செயலாளர் தம்பி துரைமுருகனும், மாநாட்டு நிதிக்குழுத் தலைவர் பழனிவேல்ராசனும் நின்றிருந்த மேடையைக் கடந்து சென்றபோது; ஆம் - அதுவும் மாலை ஆறுமணியிலிருந்து இரவு இரண்டரை மணி வரையில் சென்றபோது; கால் வலியே தெரியவில்லையே! மறுநாள் காலை தூக்கத்திலிருந்து எழுந்தபோதுதான் சற்று வலித்தது! அந்த வலியும் கூட நீ நடத்திக் காட்டிய பேரணியின் நிழலாட்டம் நெஞ்சத்திரையில் ஓடியதால் அக்கணமே தீர்ந்து போய்விட்டது!

இரவு இரண்டரை மணிக்கும் மேல்தான் மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் காவேரிமணியமும், செயலாளர்களான அக்கினிராசு, மூக்கையா, ஐ. பெரியசாமி மற்றும் மாநாட்டு நிர்வாகிகளும் என்னையும் தம்பி பரிதி இளம்வழுதியையும் அழைத்துக் கொண்டு போய் மாநாட்டு முகப்பில் கழகக் கொடியேற்று விழா நிகழ்ச்சியை நிறைவேற்றினர்.

மூன்று நாட்களும் இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், அத்தனையும் கொள்கை விளக்கம் தரும் முரசங்களாகவே ஒலித்தன!

நிகழ்த்தப்பட்ட உரைகளோ; நேரம்தான் பற்றாக்குறையே தவிர, வீரம் - விவேகம் - விளக்கங்கள் நிறைந்தவைகளாகவும், கேட்டாரை மட்டுமின்றி கேளாரையும் ஈர்க்க வல்லவைகளாகவும் திகழ்ந்தன!

முதல்நாள் தம்பி வீரபாண்டியின் தலைமை உரை, சமூகநீதிப் போராட்ட வரலாற்றின் விரிவான தொகுப்பு! நிறைவான பேச்சு! சமுதாய உயிர் மூச்சு!

மறுநாள் அரசியல் மாநாட்டில் தம்பி கோ.சி. மணியின் கொள்கை முழக்கம், கோழைகளின் முதுகையும் நிமிர்க்கக் கூடிய வீரத்தைப் பொழிந்த பேச்சு! வீணரையும் வீழ்த்தும் வாள் வீச்சு!

கொடியேற்றிய பரிதி இளம்வழுதித் தம்பியோ கொந்தளிக்கும் கடல் அலைச் சொற்களால் மன்னை பெயரால் அமைந்த மாநாட்டுக் கொட்டகையையே உணர்ச்சிப் பிழம்பாக்கினார்!

தியாகவல்லிகள் இருவர் மாநாட்டுத் திறப்பு விழா ஆற்றுகிறார்கள் என முன்பே குறிப்பிட்டிருந்தேனே; இருவருமே - ஆம்; சுப்புலட்சுமி ஜெகதீசனும், சற்குணமும் ஆற்றிய உரைகள், நரைதிரை மூப்பு பிணி எனும் சோர்வு என்றுமே இந்தக் கழகத்துக்கு இல்லையென விடுத்த அறைகூவல்கள் என்பேன்!

சமூகநீதி அணியினைச் சேர்ந்த நமது தோழமைக்கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டுக்குச் சிகரமெனத்தகும் சீர்மிகு உரைகளை வழங்கி நமது நன்றிக்குரியவராயினர்!

திரையுலகத்துக் கலைஞர்கள் மூன்று நாட்களும் நம்முடன் இருந்து தி.மு.கழகத்தின் மீது தமக்குள்ள நிலையான உறுதிப்பாட்டை மெய்ப்பித்தனர்!

வளர்த்துவானேன், மாநாட்டுச் சிறப்பை; நமது பேராசிரியர் குறிப்பிட்டதைப் போல முன்பு நடந்த மதுரை பவளவிழா மாநாட்டைப் போல இந்த மாநாடு; இரண்டு மடங்கு எல்லா வகையிலும் சிறப்புடையது!

நிதிக் குழுத் தலைவர் பழனிவேல்ராசனோ இருபத்தி ஐந்து லட்ச ரூபாய் மிச்சத் தொகையைத் தலைமைக் கழகத்துக்குத் தந்ததின் மூலம்; பவள விழா மாநாட்டை விட இதுப் பலப்பல மடங்கு சிறந்தது என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டார்!

ஏனெனில்; சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் நடந்த பவளவிழா மாநாட்டு மிச்சத் தொகை வெறும் முப்பத்து மூவாயிரம் மட்டுமே!

ஆமாம்; நீயும்தானே வந்திருந்தாய் - உன்னிடம் போய் மாநாட்டுச் சிறப்பை எல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறேனே; தேவையா?

தேவையில்லைதான்! இருந்தாலும், பூவைத்து, பொட்டிட்டு, புது உடை அணிவித்துக் குழந்தையின் அழகை வீட்டில் உள்ளோர் பார்த்து மகிழ்ந்திருந்தாலும்; அதன் தாய்க்கு ஆசை விடுகிறதா? 'பாரடீ அதன் சிரிப்பை! பார் பார், சிரிக்கும்போது கன்னத்தில் குழி விழுவதை! இந்தச் சட்டை, குழந்தைக்கு எவ்வளவு அழகு பார்த்தாயா!'

என்று அந்தத் தாய், குழந்தையை மற்றவர்களிடம் தூக்கிக்காட்டி, தானும் உச்சி முகர்ந்து முத்தமாரி பொழியத்தானே செய்வாள்!

அந்தத் தாயின் நிலைதான்; இப்போது என் நிலை!

எல்லாவற்றையும்விட, என் வேண்டுகோளை அப்படியே ஏற்று நீயும் மற்ற உடன்பிறப்புகளும் எவ்வித அசம்பாவிதமும் இன்றி ஊர்ப் போய்ச் சேர்ந்தீர்களே; அதுதான் பெரும் சிறப்பு! என் சிந்தைக்குப் பெரும் இன்பம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

04-08-1994

2164. குன்னூரில் ஒரு "குமட்டல்" பேச்சு!

உடன்பிறப்பே,

கொலை செய்வதையே தொழிலாகக் கொண்ட ஒருவன், வள்ளுவரின் கொல்லாமை அதிகாரத்திற்கு கூவிக்கூவி பொருள் சொல்லிப் போதனை புரிந்து கொண்டிருந்தானாம்!

பாஸ்டர்ட் Bastard என்றே தன் கணவனை அழைத்துப் பழக்கப்பட்ட ஒரு பாவை; பர்த்தாக்களிடம் பத்தினிகள் எப்படிப் பாசமுடன் பழக வேண்டுமென்பதற்குப் பயிற்சி வகுப்பு நடத்தினாளாம்!

ஆடும் மாடும் அன்றாடம் வெட்டி, அவற்றின் மாமிசம் விற்று வியாபாரம் செய்யும் ஒருவன்; அருட்பெருஞ்சோதி - தனிப்பெருங் கருணை என வடலூர் இராமலிங்கரின் வாசகத்தை அனுதினமும் முணுமுணுத்தவாறு இருந்தானாம்!

என்ன, திடீரென்று ஏதேதோ எழுதுகிறாய்? எனக் கேட்கத் தோன்றும் உனக்கு!

நீலகிரி மாவட்டம் குன்னூரில் முதலமைச்சர்; அரசு விழாவொன்றில் ஆற்றிய அரசியல் உரையை ஏடுகளில் கண்டவுடன் என்னவெல்லாமே தோன்றியது - அதனால் அவற்றை எழுதினேன். பொருத்தமாக இருந்தால் சரி; இல்லாவிட்டால் விட்டுவிடு!

குன்னூரில் நீலகிரி மாவட்டத்துக்கு 297 கோடி ரூபாய்க்கான திட்டங்களை தொடங்கி வைத்ததாக ஓர் அறிவிப்பு!

அறிவிப்புகள்தான் ஆயிரக்கணக்கில் அஸ்திரங்கள்போல் புறப்பட்டுக் கொண்டே இருக்கின்றனவே! ஆனால் ஒரு அஸ்திரமாவது இலக்கைப்போய் எட்டிப் பார்க்கக்கூட இல்லை என்பதுதானே இந்த ஆட்சியின் சரித்திரம்!

சர்க்கரை என்று தாளில் எழுதி, அதைச் சுவைத்துப் பார்த்தால் தித்திக்கும் என்பது இந்த ஆட்சியினர் கண்டுள்ள தத்துவம்! அந்த அடிப்படையில்தான் முன்னூறு கோடி, நானூறு கோடியென்று அறிவிக்க மாவட்டந்தோறும் மகாமக விழாக்கள்!

மக்கள் தரும் வரிப்பணத்தில் - எல்லாக் கட்சியினரும் செலுத்தும் வரி வருமானத்தில் நடைபெறும் அரசு விழாவில் என்ன பேசுவது என்ற அடிப்படை நாகரீகத்தைக் கூடக் கற்றுக் கொள்ளாத இந்த அம்மையார், எதிர்க்கட்சிகளைத் தாக்கிப் பேச எப்படி அருகதையுடையவரானார் என்றே புரியவில்லை!

அரசு விழா - மக்களின் வரிப்பணத்தில் நடைபெறும் விழா - அதிகாரிகளில் இதயமிருப்போர்; அய்யோ! இதென்ன கூத்து? அரசு விழாவில் அரசியலா? என ஆச்சரியப்படுகின்றனர். அவர்களிலேயே சூடு சொரணையுள்ளோர், சுளித்துக் கொள்கின்றனர் முகத்தை! 69 சதவிகித இடஒதுக்கீடு பிரச்சினைக்கு இவர், எதிர்க்கட்சிகளை டெல்லி அழைத்தாராம் - வர மறுத்து விட்டோமாம்! ஓர் அபாண்டமான பழியை எதிர்க்கட்சிகள் மீது தூக்கிப் போட்டு; தன்னை அப்பழுக்கற்ற ஜனநாயகவாதி எனக் காட்டிக் கொள்ளப் பெரிதும் முயன்றிருக்கிறார்.

எதிர்க்கட்சிகள் 69 சதவிகிதத்துக்காகக் குரல் எழுப்பியவுடன் அவர்கள் மீது எகிறிப் பாய்ந்த இந்த அம்மையார், மறியல் போராட்டத்துக்குப் போட்டியாக அதே நாளில் பந்த் போராட்டம் அறிவித்த இந்த அம்மையார், எதிர்க்கட்சித் தலைவர்களின் படங்களைப்போட்டு - அவர்களை இழித்தும் பழித்தும் விமர்சித்து அரசு செலவிலும் கட்சி செலவிலும் ஏடுகளில் ஒரு பக்க விளம்பரம் கொடுத்து தனது சேடிச மனப்பான்மைக்குத் திருப்தி தேடிக்கொண்ட இந்த அம்மையார், 69 சதவிகிதம் அறிவித்தது தவறு என்றும் 50 சதவிகிதம் ஆக்கிவிடுகிறோம் என்றும் உறுதிமொழி வாக்குமூலம் உச்சநீதிமன்றத்திலேயே எழுதிக் கொடுத்துவிட்டு, மன்னிப்பும் கேட்டுக் கொண்ட இந்த அம்மையார் - இவருடன் மானத்தைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் எப்படி வருவார்கள் என்று எதிர்பார்த்தாராம்!

தலையில் விழுந்த அடியைத் தாங்கிக் கொண்டு, தரையில் கிடக்கும் ரொட்டியைக் கவ்வித்தின்னும் ஜீவனைப் போன்ற சில அமைச்சர்கள் கிடைக்கலாம் அவரது பெருமையை சிலாகிக்க! ஏன்; அவரது பாதங்களை சேவிக்க!

இடஒதுக்கீடு பிரச்சினையில் ஒன்றுபட எதிர்க்கட்சிகள் மறுத்துவிட்டனவாம்; அடடா! பொதுப்பிரச்சினையில் எல்லாக்கட்சிகளும் ஆளுங்கட்சியுடன் ஒன்றுபட்டுப் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணம்; எவ்வளவு தாமதமாக முதல்வர் மூளையில் முகிழ்த்திருக்கிறது!

1989-ல் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது; காவிரிப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சி கூட்டமொன்றை அவசரமாகக் கூட்ட வேண்டியிருந்தது. அப்போது முதலமைச்சராக இருந்த நான், இந்த அம்மையாரையும் அந்தக் கூட்டத்துக்கு வருமாறு, கடிதம் எழுதி அனுப்பினேன்.

வரவில்லை. வராமல்கூட இருந்திருக்கலாம். ஆனால், ஏன் வரவில்லை! என்பதை விளக்கி எனக்கு இந்த அம்மையார் ஒரு கடிதம் எழுதி, அதனைப் பத்திரிகைகளுக்கும், கொடுத்து வெளியிடச் செய்தார்! காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி நாடகமாடுகிறார்! என்பன போன்ற கடுமையான சொற்றொடர்கள் அவர் எழுதிய கடிதத்தில்!

அதுமட்டுமா? காவிரி நடுவர் மன்றம் கோரிட, பிரதமர் வி.பி. சிங்கிடம் முறையீடு அளிக்கப்போன அனைத்துக் கட்சிக்குழுவிலும் சேர முடியாதெனத் திட்டவட்டமாக அறிவித்ததும் இதே ஜெயலலிதா கூட்டந்தான்!

அதையெல்லாம்கூட மனத்தில் வைத்துக் கொள்ளாமல்; காவிரிப்பிரச்சினைக்கு 1991க்குப் பிறகு ஜெயலலிதா கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் இடஒதுக்கீட்டுக்காக அரசு கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்திலும் தி.மு.கழகம் கலந்து கொண்டே இருக்கிறது.

இப்போது இடஒதுக்கீடு பிரச்சினையில்; முதல்வரே, ஏடாகூடமாக நடந்து கொண்டு, எதிர்க்கட்சிகளைக் குறை சொல்வது என்பது இமாலயத் தவறு!

இன்றைக்கும் கழகத்தின் சார்பில் தேசியத் தலைவர்களுக்கு நான் கடிதம் விபரமாக எழுதி, இடஒதுக்கீட்டு சமூகநீதிக்கு ஆதரவு கேட்டு; அவர்களும் ஆதரவளிப்பதாக பதில் அனுப்பியுள்ளனர்.

அதை வைத்துக் கொண்டுதான்; ஜெயலலிதா கூட நம்மைப் பின்பற்றி இடஒதுக்கீட்டுக்கு ஆதரவு கேட்டு தேசியத் தலைவர்களுக்குக் கடிதம் எழுதியிருப்பதோடு - அரசியல் சட்டம்

திருத்தப்பட வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் கருத்தையே அவரும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறார்.

இன்னொரு வடிகட்டிய பொய்யை வாய்மையின் வடிவம் ? ஜெயலலிதா, குன்னூரியில் கூறியுள்ளார் அது என்ன?

இடஒதுக்கீட்டை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகிற ஆட்களை, எதிர்க்கட்சிகள்தான் தயார் செய்தன என்று பேசியுள்ளார்.

சமூகநீதிக்காகப் போராடும் எதிர்க்கட்சித் தலைவர்களின் ரத்தத்துடன் கலந்தது இந்த இடஒதுக்கீடு கொள்கை!

ஜெயலலிதா யார்? இடஒதுக்கீடு என்பது பொருளாதார அடிப்படையில்தான் இருக்க வேண்டும். சமூக அடிப்படை கூடாது என்று இந்துவுக்கும், எக்ஸ்பிரசுக்கும் பேட்டி கொடுத்தவர். மண்டல் கமிஷன் பரிந்துரையை வி.பி. சிங் நடைமுறைப்படுத்தியபோது எதிர்த்தவர். அவரது குருதியோட்டத்தில் கலந்தது, சமூகநீதியான இடஒதுக்கீட்டுக்கு எதிரான உணர்வுதான்! ஏதோ, இப்போது மக்களின் எழுச்சிக்குப் பயந்து கொண்டு கண்துடைப்புக் கூத்து நடத்துகிறார் என்பதை யாரும் அறியாமல் இல்லை!

தமிழக அரசுக்குப் பல வழக்குகளில் வாதாடுகிற வக்கீல் ஒருவரே; இந்த இடஒதுக்கீடு வழக்கில், தமிழக அரசுக்கு எதிராக வாதாடியதை எண்ணிப் பார்க்கும்போதும் - விஜயன் என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தபோது; அவருக்கு எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு கிடைக்கிற அளவுக்கு அவருடன் ஜெயலலிதா அரசு ஒத்துழைத்ததை சிந்தித்துப் பார்க்கும்போதும் - நான் அடிப்பது போல் அடிக்கிறேன், நீ அழுவது போல் அழு! என்கிற கதையாகத்தான் இருக்கிறது இது என்பதை நாடே நன்கு உணர்ந்துள்ளது.

உடன்பிறப்பே, மதுரையில் கழக மண்டல மாநாடு அமைதியாகவும் அசம்பாவிதம் எதுவுமின்றி நடைபெற்றதாக மதுரை போலீஸ் அதிகாரி ஏடுகளுக்கு செய்தி கொடுத்திருக்கிறார். அதற்கு முரணாக ஜெயலலிதா, மதுரை கழக மாநாட்டில் வன்முறை நடந்தது என்பது போல் வாய் நீளம் காட்டி பேசியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சில நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டி எதிர்க்கட்சிகளைச் சாடுகிறார் ஜெயலலிதா!

குன்னூர், குளிர்ந்த இடம்தானே; அங்கு ஏன் இப்படி கோபம் கிளம்பிற்று முதல்வருக்கு?

இவருக்கு வன்முறையே பிடிக்காதாம். போராட்டங்களில் அசம்பாவிதத்தை அனுமதிக்க மாட்டாராம். சில நாட்களுக்கு முன்பு அ.தி.மு.க. மாணவர்கள் நடத்திய ஜே ஜே வெற்றி விழாவில் 17 பேருந்துகளைக் கொளுத்தியும், சாம்பலாக்கியும், உடைத்து நொறுக்கியும் சேதம் விளைவித்தது கண்டு, இந்த அம்மையார் கசிந்து கண்ணீர் மல்கி ஒரு லட்ச ரூபாய் நஷ்டஈடு கட்சியின் சார்பில் அரசுக்குக் கொடுத்துவிட்டாராம்.

சம்பந்தப்பட்ட துறையில் உள்ள பலரும் சொல்கிறார்கள்; அன்றைய கலவரத்தில் மொத்த பேருந்துகளுக்கு ஏற்பட்ட சேதமும், இழப்பும் 50 லட்சத்துக்கு மேல் இருக்கும் என்று!

ஆனால் ஜெயலலிதாவோ, ஊரை ஏமாற்ற ஒரு லட்சம் கொடுத்துவிட்டு - இழப்பீடு முழுதும் கொடுத்துவிட்டதாக பம்மாத்து செய்கிறார்.

மதுரை தி.மு.க. மண்டல மாநாட்டில் இடஒதுக்கீட்டுக்கு மத்திய அரசு உடனடியாக அரசியல் சட்டதிருத்தம் கொண்டுவராவிட்டால் சமூகநீதி கோரும் அனைத்துக் கட்சிகள் சார்பில் மத்திய அரசை எதிர்த்துப் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதையும் முதலமைச்சரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென நடத்த இருக்கும் இடஒதுக்கீடு கோரும் அறப்போர் கண்டு - மத்திய அரசு கவலைப்பட வேண்டுமே தவிர, மாநில அரசுக்கு ஏன் அந்தப் போராட்டம் வேப்பங்காயாகக் கசக்கிறது!

வெளியில் ஒன்றும் உள்ளே ஒன்றுமாக சமூகநீதி பிரச்சினையில் வேடம் போட்டு மக்களை ஏமாற்றும் வேதவிலாசின் திவ்யரூபம் குன்னூரில் வெளிப்பட்ட குமட்டல் பேச்சின் வாயிலாக தெளிவாகவே மக்களுக்குத் தெரிந்துவிட்டது! இல்லையா உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

05-08-1994

2165. தோள்களை உயர்த்துவோம்; துரோகத்தைத் துரத்துவோம்!

உடன்பிறப்பே,

முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சுமார் நானூறு ரூபாய் விலையில் ஒரு புத்தகம் எழுதினார். அதில் பிரச்சினைக்குரிய பல விஷயங்கள் காணப்பட்டதால் அந்தப் பிரச்சினைகளுடன் தொடர்புடையவர்கள் தங்களது மறுப்புக்களையும் - புதிதாகப் பல செய்திகளையும் வெளியிட்டு வருகிறார்கள். மறைந்த ராஜீவ்காந்தி குறித்து ஆர்.வி. அவர்கள், தனது நூலில் செய்துள்ள விமர்சனத்தை ஏற்காமல் ராஜீவின்பால் பற்றும் பாசமும் கொண்டு அவரைத் தங்களின் இளந்தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தவர்கள் சீறி எழுந்து பல்வேறு வகையான எதிர்ப்புகளைக் காட்டி வருகிறார்கள். அவரது நூலில் தி.மு.க. ஆட்சியைக் கலைத்தமைக்குச் சுற்றி வளைத்துச் சொல்லப்படும் காரணங்களை மறுத்தும் உண்மை நிலையை எடுத்துரைத்தும், நான்கூட லால்பேட்டையில் நடைபெற்ற இந்திய தேசிய லீக் மாநாட்டில் கருத்தறிவித்ததுடன் நிறுத்திக் கொண்டேன்.

குடியரசுத் தலைவராக இருந்த வெங்கட்ராமன் அவர்களது ஆளுமைக் காலத்தில் பழகிய பிரமுகர்களைப் பற்றியோ, நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியோ தனது மனதுக்குப்பட்ட எண்ணங்களை வெளியிட உரிமை படைத்தவர் என்பதில் நமக்கு மாறுபாடு இல்லை. ஆனால் அந்த உரிமையை அவர் உண்மையின் அடிப்படையில் நின்று நிலை நாட்டுகிறாரா; அல்லது பொய்யெனும் போர்வைக்குள்ளிருந்து வெளிப்படுத்துகிறாரா என்பது அவர் எழுதியுள்ள செய்திகளுடன் தொடர்புடையவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதோ அன்றி மறுத்துரைக்க வேண்டியதோ ஆகும்.

ஆனால் இந்த நூலாசிரியர் ஆர்.வி. அவர்கள் தனக்கு வேண்டாத வேலையாக - அல்லது யாரோ வேண்டியதின்

காரணமாக ஏற்றுக் கொண்ட வேலையாகத் தோன்றக் கூடிய ஒரு செயலில் ஈடுபட்டிருப்பது; அவர் பிறந்த தஞ்சை மண்ணுக்கும் - அவர் வளர்த்த தமிழ் மண்ணுக்கும், அவர் இழைத்துள்ள மாபெரும் துரோகமாகும்!

ஆம்; இலட்சக்கணக்கான தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் வயிற்றில் அடிக்கிற பாதகமாகும்! கோடிக்கணக்கான தமிழ்ப்பெருங்குடி மக்களின் வாழ்வை பாலைவனமாக்குகிற கொடுமையானதும், குரூரம் நிறைந்ததுமான பழிகாரச் செயலுமாகும்!

1924 ஆம் ஆண்டு காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்த ஒப்பந்தம் நிறைவேறியபோது; அய்ம்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1974 ஆம் ஆண்டுடன் அந்த ஒப்பந்தம் காலாவதியாகி விடுகிறது என்பதாக ஒரு ஷரத்துகூட அந்த ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை. ஆனால் 1974 ஆம் ஆண்டுடன் ஒப்பந்தம் முடிந்துவிட்டதாக ஒரு திசை திருப்பும் தவறான வாதத்தை கர்நாடக அரசு, தொடர்ந்து எடுத்து வைத்து வருகிறது.

தமிழக அரசு அந்த வாதத்தை எந்தக் கட்டத்திலும் ஏற்றுக் கொண்டதில்லை. அண்ணா முதல்வராக இருந்தபோதும், அதற்குப் பிறகு நான், அதன் பின்னர் எம்.ஜி.ஆர்., மீண்டும் 1989 - ல் நான், இப்போது ஜெயலலிதா - இத்தனைபேர் தலைமையிலான ஆட்சியிலும் 1974 ஆம் ஆண்டுடன் காவிரி ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்ற கர்நாடக அரசின் வாதத்தை ஏற்றுக் கொண்டதேயில்லை.

நடுவர்மன்றம் அமைப்பதற்கான விரைவான நடவடிக்கைகளை 1990 - ல் கழக அரசு மேற்கொண்ட போது அன்றைய பிரதமர் வி.பி. சிங் அவர்களிடம் ஆளுங்கட்சியான தி.மு.க. மற்றும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் சென்று டெல்லியில் முறையீடு அளித்தபோது; அந்தக் குழுவில் கலந்து கொள்ளாமல் தனியாகப் பிரதமரைச் சந்திக்கச் சென்ற அ.தி.மு.க. வினரும், காங்கிரசாரும் அளித்த மனுவில் 1974 ஆம் ஆண்டுடன் காவிரி ஒப்பந்தம் முடிவடைந்துவிட்டது என்ற ஒரு முரண்பாடான வாசகத்தை இணைத்திருந்தனர்.

அந்தப் பிழையான கருத்தை நான் அப்போதே சட்டப் பேரவையில் சுட்டிக்காட்டி; அதன்பிறகு அவர்களேகூட, தங்களைத் திருத்திக் கொண்டனர்.

நமது மாநிலத்தின் சார்பில் நாம் ஒன்றும்; ஒப்பந்தத்தில் உண்மையை மறைத்தோ - அல்லது மாற்றியோ வாதிடவில்லை.

அந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி 1974 - ல் காவிரியின் உபரித் தண்ணீரை கர்நாடகமும் தமிழகமும் பாசனத்திற்காக எப்படிப் பங்கிட்டுக் கொள்வது என்பதைக் குறித்து இரு மாநிலங்களும் கலந்து பேசலாம் என்றுதான் ஷரத்துக்கள் இருக்கின்றனவே தவிர, பன்னெடுங் காலமாக பாசனம் பெற்று வருகிற தமிழ்நாட்டுப் பழம் பெரும் ஆயக்கட்டுகளை யெல்லாம் பாலை நிலமாக ஆக்கிவிட; 1974 ஆம் ஆண்டுடன் காவிரி ஒப்பந்தம் காலாவதியாகி விடுகிறது என்ற நிலையில் எந்த ஷரத்தும் இல்லை.

ஆனால் அப்படியொரு ஆபத்தான ஷரத்து இருப்பதாக - அறியாப்பிள்ளை போல ஆர்.வி. அவர்கள் அவரது நூலில் குறிப்பிட்டிருப்பது, துரோகம்! துரோகம்! தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்டுள்ள மாபெரும் துரோகம்!

இப்படியொரு துரோகத்தை கர்நாடகத்திலேயுள்ள ஒரு கனவான் செய்துவிட்டால்; துரோகம்கூட அல்ல; அந்த கனவான், தப்பித் தவறி தமிழ்நாட்டுக்குச் சாதகமாக ஏதாவது பேசிவிட்டால் - அதனை அந்த மாநிலத்து மக்களும் அரசியல்வாதிகளும் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள்! இந்நேரம் அந்தக் கனவான்; தனது கருத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்! அதுவரை அந்த மாநில மக்கள் விடமாட்டார்கள்!

ஆனால் இங்கே? தமிழன்? பாவம்; அவன் தலையில் மிளகாய் அறைக்கலாம்! தொலையில் கயிறு திரிக்கலாம்!

அதனால்தானே ஆர்.வி. அவர்கள், நமது கண்டனத்தைக் காலில் போட்டு மிதிப்பேன் என்கிறார்!

ஆர்.வி. அவர்களின் நூலில் காணப்படும் தமிழகத்துக்கு விரோதமான அந்தப் பெரும் பிழையை ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. குகன் அவர்கள் இந்து இதழில் ஒரு அறிக்கை வாயிலாகச் சுட்டிக் காட்டினார்!

கழகத்தின் சார்பில் நான் ஆர்.வி.யின் அந்தக் குறிப்பைக் கண்டித்து அறிக்கை விடுத்தேன்.

அ.தி.மு.க. அரசின் அதிகாரபூர்வமான மறுப்பு, ஆர்.வி.யின் கருத்துக்கு எதிராக வருமென இக்கடிதம் எழுதும் வரையில் எதிர்பார்த்தேன். இதுவரை வரவில்லை. வந்தால் மகிழ்வேன்.

இதில் தனிப்பட்ட கௌரவப் பிரச்சினை எதுவுமில்லை! தமிழகத்தின் வாழ்வுப் பிரச்சினை! காவிரி நடுவர்மன்ற விசாரணையின்போது; கர்நாடக அரசின் கையில், இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர் - ஒரு ஆயுதத்தை எடுத்துக் கொடுக்கிறாரே; அதனால் விளையும் ஆபத்தான பிரச்சினை!

அதுவும் உண்மையல்லாத ஒன்றை - ஏதோ, கர்நாடகக்காரருடன் பேரம் பேசிக் கொண்டு எழுதியதைப்போல - எழுதியதுடன் மட்டும் நிற்காமல்; அதற்கும் மேலே ஆர்.வி. அவர்கள் ஒருபடி மேலே போய் தனது ஆணவத்தையும் காட்டியுள்ளார்.

கழகம் விடுத்துள்ள கண்டன அறிக்கையைச் சுட்டிக் காட்டி, தி டைம்ஸ் ஆப் இந்தியா எனும் பிரபல ஆங்கில நாளேட்டின் நிருபர் ஆர்.வி.யிடம் பதிலறிந்து கொள்ள முற்பட்டபோது; நான் இந்த கண்டனங்களை பொருட்படுத்துவதில்லை என்று மெத்தவும் அலட்சியமாக விடையளித்திருக்கிறார் அவர்!

உடன்பிறப்பே, தமிழ் நாட்டின் உரிமைப் பிரச்சினையைப் பிரதானமாகக் கருதாமல்; தனது கௌரவப்பிரச்சினையை மட்டுமே பிரதானமாகக் கருதும் ஆர்.வி. போன்றவர்களை மக்கள்மன்றம் அடையாளம் கண்டு கொள்ளவும், அதே நேரத்தில் தமிழ்நாட்டுக்குக் காவிரி நதி நீரில் உள்ள உரிமைக்கு எந்தக்காலத்திலும் - யாராலும் ஊனம் விளைந்திடாமல் விழிப்போடிருந்து பாதுகாப்போம் என்பதை எடுத்துக் காட்டவும்தான் ஆகஸ்டு 11 - ஆம் நாள் தமிழகத்திலுள்ள எல்லா நகரங்களிலும், காவிரி நதி தீரத்து மாவட்டங்களில் எல்லா ஊர்களிலும், ஏன்; காவிரியால் பயன்பெறும் புதுவை, காரைக்கால் பகுதிகளிலும் கண்டன ஊர்வலங்கள் கழகச் சார்பில் நடத்தப்பட இருக்கின்றன.

இந்தக் கண்டன ஊர்வலங்களை எழுச்சியுடன் நடத்திட வேண்டுமென நமது பொதுச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையினைக் கண்டிருப்பாய்!

கண்டன ஊர்வல முடிவில், இந்தப் பிரச்சினை குறித்துமட்டுமே விளக்க உரையாற்றி, ஆர்.வி. அவர்கள் தனது தவறான தகவலை உடனடியாகத் திரும்பப்பெற வேண்டுமெனவும் வலியுறுத்திட வேண்டும்.

தமிழ் நிலத்தைத் தகர்த்திட, தரிசாக்கிட, துரோகங்களை எந்த வடிவிலே வந்தாலும்; அதனைத் தோளுயர்த்தித் துரத்திடும் ஆற்றல் நமக்கு உண்டு என்பதை அறிவிக்கும் நாளாக ஆகஸ்டு 11 - ஆம் நாள் அமையட்டும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

06-08-1994

2166. விளங்குகிறதா விபரீதம்?

உடன்பிறப்பே,

இறுதியாக ஒருவழியாக திரு. ஆர்.வி. அவர்கள், தனது புத்தகத்தில் தமிழ்நாட்டு நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் எழுதியிருந்த வாசகத்தைத் திருத்திக் கொள்வதாகவும், அந்தத் திருத்தம் அடுத்த பதிப்புகளில் இடம்பெறுமென்றும் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு குறித்து ஆகஸ்டு 8 - ஆம் நாள் யு.என்.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு :-

காவிரிப் பிரச்சினை பற்றி முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் 'எனது குடியரசுத் தலைவர் பதவிக் காலங்கள்' என்ற தனது புத்தகத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களை அடுத்து வரும் பதிப்புகளில் திருத்திக் கொள்ள முன்வந்துள்ளார். இதனால் அதுபற்றி எழுந்துள்ள சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது. காவிரி ஒப்பந்தம் பற்றி ஆர். வெங்கட்ராமனின் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக விமர்சித்தது. அதையடுத்து காவிரி ஒப்பந்தம் 1974-ம் ஆண்டே காலாவதியாகிவிட்டது என்று அந்தப் புத்தகத்தில் தெரிவித்துள்ள கருத்து கர்நாடகத்தின் கருத்தே தவிர, எனது முடிவல்ல என்று வெங்கட்ராமன் விளக்கியுள்ளார்.

அதற்கு ஏற்ப இனி வரும் பதிப்புக்களில் சம்பந்தப்பட்ட பாராக்களில் கீழ்க்கண்டவாறு மாற்றிக் கொள்ளப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

காவிரி தண்ணீர் ஒப்பந்தம் 1974 - ம் ஆண்டே காலாவதியாகிவிட்டது என்று இருப்பதற்குப் பதிலாக, காவிரி

ஒப்பந்தம் 1974 - ம் ஆண்டே காலாவதியாகிவிட்டது என்று கர்நாடகம் அறிவித்து, கர்நாடக அரசு காவிரி தண்ணீர் வெளியிடுவதை நிறுத்தி விட்டது என்று மாற்றிக் கொள்ளப்போவதாக ஆர்.வி. தெரிவித்துள்ளார்.

காவிரி ஒப்பந்தம் 1974 - ம் ஆண்டே காலாவதியாகிவிட்டது என்று தெரிவித்ததற்காக ஆர். வெங்கட்ராமன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேட்டிருந்தார். தற்போது ஆர். வெங்கட்ராமன் தனது பிழையை திருத்திக் கொள்ள முன்வந்ததை தி.மு.க. தலைவர் வரவேற்றுள்ளார்.

இவ்வாறு யு.என்.ஐ. செய்தி நிறுவனம் வழங்கியுள்ள செய்தியை சில ஏடுகள் எந்த அளவுக்கு திரித்தும் மறைத்தும், மழுப்பியும் வெளியிட வேண்டுமோ அந்த அளவுக்கு வெளியிட்டு; ஆனாலும் ஆர்.வி.யின் அறிவிப்பில் இழையோடும் திருத்தம் என்ற உண்மையை மறைக்க முடியாமல் திணறித் திண்டாடி திக்கு முக்காடியிருக்கின்றன.

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடும், தொலைக்காட்சிச் செய்திப் பிரிவும், ஆர்.வி. அவர்கள் தனது எழுத்துக்கு ஏதோ வியாக்கியானம் செய்ததைப்போல மட்டும் செய்தி வெளியிட்டு அவருக்குக் கவசம் அணிந்து காப்பாற்றப் பெரும்பாடுபட்டுள்ளன.

தனது பிரசித்தி பெற்ற அந்த நூலில் ஒரு தவறான தகவல் இடம்பெற்று விட்டதற்காக வருந்துகிறேன் என்றுகூட ஆர்.வி. அவர்களால் கூறிட இயலவில்லை என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

ஆனால் அவரிடம் வருத்தத்தையோ அல்லது மன்னிப்பையோ எதிர்பார்த்து பிடிவாதம் காட்டிக் கண்டனப் போராட்டம் தொடங்கவில்லை.

அவர் எழுதியுள்ள நூலில் ராஜீவ்காந்தி பற்றிய செய்திகள் விவாதத்திற்குரியவை!

அதேபோல தி.மு.க. ஆட்சி உள்ளிட்ட சில ஆட்சிகளின் கலைப்பு குறித்து அவர் எழுதியுள்ள கருத்துக்கள்கூட விவாதத்திற்குரியவை என்பதை நான் மறுக்கவில்லை!

நாமோ, நம்மையல்லாத மற்றவர்களோ ஏற்க இயலாத பல கருத்துக்கள் அவரது நூலில் இடம் பெற்றிருப்பினும்கூட, அவற்றையெல்லாம் நாம் பெரிதாகக் கருதாமல் - அது அவரது கருத்துச் சுதந்திரம் என எண்ணி அவற்றை விட்டு விட்டோம்.

அவற்றுக்குப் பதில் அளித்திட நமக்கிருக்கும் உரிமையை நிலைநாட்டுவதைவிட; தமிழ்நாட்டு மக்களின் மொத்த உரிமைக்கே உலைவைக்கும் வகையில் காவேரி ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டுடன் காலாவதியாகிவிட்டது என்று, இல்லாத ஒன்றை அவர் எழுதி, கர்நாடக அரசின் கரத்தைப் பலப்படுத்திட உதவியுள்ளாரே - அந்த உரிமை அவருக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்டவே கழகத்தின் கண்டன அலைகள் தமிழக முழுதும் வீராவேசமாக எழுந்தது.

ஆர்.வி.யின் புத்தகத்தில் உள்ள அந்த 564 ஆம் பக்கம் எவ்வளவு ஆபத்தானது என்பதை நாம் எடுத்துக்காட்டி, உடனடியாகத் தமிழக அரசு அதற்கு அதிகாரபூர்வமாக மறுப்புத் தெரிவிக்க வேண்டுமென்று ஒருமுறைக்குப் பலமுறை கேட்டும்கூட ஜெயலலிதா மௌனம் சாதித்துவிட்டார்.

ஜெயலலிதாவின் பேச்சைக் கேட்டு கழக ஆட்சியை கலைத்தவரல்லவா; அதனை அவரே ஜாடையாக அந்த நூலில் குறிப்பிட்டுள்ளாரே - அந்த நன்றிக் கடனுக்காக, ஜெயலலிதா ஆர்.வி.யின் அந்தத் தவறான தகவலை, தமிழக நலனுக்கு ஆபத்தான தகவலை அதிகாரபூர்வமாக மறுக்க முன்வராமல் இருந்திருக்கலாம்!

இதை மட்டுமல்ல; ஏற்கெனவே உச்சநீதிமன்றம் சில மாதங்களுக்கு முன்பு வழங்கிய ஒரு தீர்ப்புரையில்கூட காவிரி ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று எழுதியிருந்த குறிப்புக்கு ஜெயலலிதா அரசின் சார்பில் மறுப்பு விளக்கம் உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்கப்படவில்லையென்று 7.8.94 இந்தியன் எக்ஸ்பிரசில் செய்தி வந்துள்ளது!

ஆர். வெங்கட்ராமன் அவர்களின் இந்தப் புத்தகத்தில் காவிரிப் பிரச்சினை பற்றி வந்துள்ள விபரீதமானதும் - உண்மைக்கு மாறுபட்டதுமான - தகவலினால்; கர்நாடக அரசு, தமிழகத்தின்

மீது எந்த அளவுக்குத் தீங்கினைப்பொழியும் என்று நாம் எடுத்துக்காட்டியபோதும் அதனை அவ்வளவாகக் காதில் போட்டுக் கொள்ளாதவர்கள்; இதோ இன்று நாளிதழ்களில் வந்துள்ள செய்தியைப் படித்துப்பார்க்கட்டும் திரு. ஆர்.வி. உட்பட!

தினமணி 9.8.94 சென்னை இதழில் வந்துள்ள செய்தியை அப்படியே தருகிறேன்.

காவிரி நதி நீர்ப் பங்கீடு பிரச்சினை சம்பந்தமாக தமிழ்நாடு முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி பொய்களை அள்ளி வீசுவதாக கர்நாடக மாநில ஜனதாதளம் தலைவர் எச்.டி. தேவெ கௌடா குற்றம் சாட்டியுள்ளார்.

பெங்களூரில் திங்களன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது :-

முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், தான் எழுதியுள்ள சுயசரிதையில், 1924-ல் மன்னர் ஆட்சியின் கீழ் இருந்த மைசூர் மாகாணத்திற்கும், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த அப்போதைய சென்னை மாகாணத்திற்கும் இடையே ஏற்பட்ட காவிரி நதிநீர் ஒப்பந்தம் 1974-ம் ஆண்டில் காலாவதியாகிவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இது மிகவும் சரியானதே. ஆனால் கருணாநிதி இதை ஒப்புக்கொள்ள மறுப்பதோடு ஆர்.வீ.க்கு கண்டனம் தெரிவிப்பது வருத்தத்திற்குரியது.

ஆர்.வீ. கூறியிருப்பதைத்தான் கர்நாடக அரசும் கூறிவருகிறது. உச்சநீதிமன்றமும் இதனை ஏற்றுக் கொண்டிருக்கிறது. உண்மையை மட்டுமே கூறியிருக்கும், ஆர்.வி.க்கு எதிராக உள்நோக்கத்துடன் பிரச்சாரம் செய்வது கவலைக்குரியது. கருணாநிதியும் சில அரசியல்வாதிகளும் இத்தகையப் போக்கைக் கையாளுவது விஷமத்தனமானது.

கருணாநிதி தனது அரசியல் வாழ்வில் கடைசி கட்டத்திலாவது உண்மையைப் பேச ஆரம்பிக்க வேண்டும்.

உடன்பிறப்பே, கர்நாடகத்து நண்பர் தேவெகௌடா அவர்களின் உணர்வை நான் மதிக்கிறேன். நம்மவர்களுக்கு அந்த உணர்வு இல்லையே என்று ஆதங்கத்துடன் அவரது உணர்வை மதிக்கிறேன். அவரது உணர்வு எந்த அளவுக்கு உச்சிக்குப் போயிருக்கிறதென்றால் கருணாநிதி, தனது அரசியல் வாழ்வின் கடைசிக் கட்டத்திலாவது உண்மையைப் பேச ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் கூறுகிற அளவுக்குப் போயிருக்கிறது.

ஆம்; அந்த நண்பர் தேவெகௌடா, அவரது மாநிலத்துக்காக காவிரி ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று அவர்களது பொய்யான வாதத்துக்குப் பொருந்துகிற வாதமாக ஆர்.வி. அவர்களின் புத்தகத்தைத் துணை சேர்த்துக் கொண்ட அந்த நிலையைத்தான்; நாம் முன்பே எச்சரித்தோம், ஆர்.வி. அவர்களுக்கு!

ஆனால் அவர் முதலில் டைம்ஸ் ஆப் இந்தியா நிருபர், கழகத்தின் கண்டனக்குரல் குறித்துக் கேட்டபோது இந்தக் கண்டனங்களையெல்லாம் நான் பொருட்படுத்துவதில்லை என்றுதான் பதில் அளித்தார்.

பின்னர்; ஒப்பந்தத்தில் உள்ள உண்மையான ஷரத்துகள் என்ன என்பதை மக்கள் மன்றத்தில் விரிவாக எடுத்து வைத்து; தமிழகமே போர்க்கோலம் பூணுகிற நிலைமை உருவான சூழலிலாவது ஆர்.வி. அவர்கள் இந்த புத்தகத்தில் ஏற்பட்டுள்ள பிழையை அடுத்து வரும் பதிப்புகளில் திருத்திக் கொள்கிறேன் என்று அறிவித்துள்ளாரே என்பதற்காக மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, நண்பர் தேவெகௌடா குறிப்பிட்டிருப்பதுபோல் - அரசியல் வாழ்வில் கடைசிக் கட்டமாக இருந்தாலும் அல்லது என் வாழ்விலேயே கடைசி மூச்சுவிடும் கட்டமாக இருந்தாலும் - உண்மைக்கு மாறானவைகளை எடுத்துக்காட்டி இடித்துரைக்கவும், தமிழர்களின் உரிமைக்கு ஒரு தினையளவு ஊனமும் ஏற்படாமல் தடுத்து நிறுத்தவும் - நான் குரல் கொடுத்துக் கொண்டே இருப்பேன்; என்னைத் தலைவனாக ஏற்றுள்ள இந்தக் கழகமும் குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கும்

என்பதை மட்டும் தேவெகௌடா போன்றவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரிப் பிரச்சினையில் - இந்த நதிநீர்ப் பங்கீட்டில்; கர்நாடக மாநில மக்களின் நலன்களும், தமிழக மக்களின் நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுதான் தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற கருத்து என்பதை தேவெகௌடாக்கள் தெரிந்து கொள்வது நல்லது!

தனது புத்தகத்தினால் விளைய இருந்த விபரீதத்தை திரு. வெங்கட்ராமன் அவர்கள் இப்போதாவது விளங்கிக் கொண்டிருப்பார் என்று நம்புவோமாக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

10-08-1994

2167. மத்திய மாநில ஆட்சிகளில் மலைபோல் குவியும் ஊழல்; அடுக்கடுக்கான ஆதாரங்களுடன்

உடன்பிறப்பே,

இந்த ஆண்டும் வழக்கம்போல் செப்டம்பர் 15,16,17 ஆகிய நாட்களில் நமது கழக அணிகளின் சார்பிலும், தலைமைக் கழகத்தின் சார்பிலும் தென்சென்னை வடசென்னை மாவட்டக்கழகங்களின் ஒத்துழைப்புடனும், பகுதிக் கழகங்கள், வட்டக் கழகங்களின் பணியாற்றும் திறனுடனும் தலைநகராம் சென்னையில் முப்பெரும் விழா நடைபெற இருக்கிறது. கலை நிகழ்ச்சிகள், கவியரங்குகள், பொதுவிழாக்கள்; இந்த முப்பெரும் விழாவினையொட்டி நாடு முழுதும் என்றும் போல் ஏற்பாடு செய்யப்பெற்று எழுச்சிக் கோலம் காண்பர் என் உடன்பிறப்புகள் என்பதில் சந்தேகமில்லை.

மதுரை மண்டல மாநாட்டில் அறிவித்ததை மறவாமல்; செப்டம்பர் 15 முதல் அத்திங்கள் முடியும் வரையில் - இயன்றால் அதற்கு மேலும்கூட பெரியார், அண்ணா, கழகம் பிறந்த முப்பெரும் விழா நாட்களைக் கொண்டாட வேண்டுமென்பதையும் இப்போதே நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

முப்பெரும் விழா, வெறும் திருவிழாக் கோலமாக முடிந்துவிடக்கூடாது என்பதால் தான் பெரியாரின் கருத்துகள், அண்ணாவின் எண்ணங்கள், கழகத்தின் சிந்தனை, செயல்பாடுகள் அனைத்தையும் கலை, இலக்கியம், மேடைப் பேச்சு எனப் பல்வேறு வழி வகைகளில் தமிழ்ப் பெருங்குடி மக்களிடையே எடுத்து வைத்திட, இந்த விழா நாட்களைப் பயன்படுத்தி வருகிறோம்.

ஆனால் இந்த ஆண்டு; இந்தப் பணிகளுடன் மற்றொரு பணியையும் நமது கழகம் மேற்கொள்ள வேண்டுமென மதுரை மண்டல மாநாட்டில் முடிவெடுத்துள்ளதை; நிறைவேற்றிடக் கழக அமைப்புகள் அனைத்தும் முனைந்திடல் வேண்டும்.

அது என்ன புதிய பணி? உடன்பிறப்பே, புதிய பணியல்ல; மூன்றாண்டு காலமாக மத்திய அரசிலும், மாநில அரசிலும் முற்றிப்போன நோயாக ஆகிவிட்ட ஊழல்களை அவ்வப்போது நாம் சுட்டிக்காட்டி கண்டித்துக் குரல் எழுப்பி வந்திருக்கிறோம்.

இன்று அந்த ஊழல்களையெல்லாம் தொகுத்து மக்கள் மன்றத்தில் வைத்து, நியாயம் கேட்க வேண்டிய கட்டம் உருவாகியிருக்கிறது.

போபர்ஸ், சர்க்கரை, எனப்பெரும் ஊழல்கள் இந்தியாவைச் சீரழித்து, சாதாரண மக்கள் நலன்களைப் புறக்கணித்திருப்பது போதாதென்று, புதிதாகப் புறப்பட்ட பங்குச் சந்தை ஊழல் அர்ஷத் மேத்தா என ஆரம்பமாகி; இப்போது அரசின் அமைச்சர்கள், அதிகாரிகள் எனத் தொற்று நோயாகப் பரவியுமிருக்கிறது.

காங்கிரஸ் இயக்கத்தின் முன்னாள் மத்திய அமைச்சர் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிர்தா அவர்களின் தலைமையில், பெரும்பாலான காங்கிரஸ் எம்.பி.க்களையும், மற்றும் சில எதிர்க்கட்சி எம்.பி.க்களையும் கொண்ட நாடாளுமன்ற விசாரணைக் குழுவின் அறிக்கையைக் குப்பையில் வீசி எறிந்துவிட்டு; ஊழல் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் காப்பாற்றப் புறப்பட்டுள்ள நரசிம்மராவின் போக்கை எதிர்த்து நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சிகள் போர்க் கொடி உயர்த்தியிருப்பதின் நியாயத்தை, உலக முழுதுமுள்ள நடுநிலையாளர்கள் உணர்ந்து இந்தியாவின் நிலைக்கும் இங்கு ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள சீரழிவுக்கும் இரங்கல் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியினால் நியமிக்கப்பட்டு, காங்கிரஸ் பிரமுகரையே தலைவராகக் கொண்டு, காங்கிரஸ் எம்.பி.க்களே பெரும்பான்மையினராக இருந்து; பங்குச் சந்தை ஊழல் விசாரணை நடத்தி, தந்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை, காங்கிரஸ் அரசே ஏற்றுக் கொள்ள முடியாதென்பது வேடிக்கையா? விசித்திரமா? விவேகம் ஒரு துளியுடையோர்கூட இந்த வினா எழுப்பிடத் தவறமாட்டார்களே!

நான் மாநாட்டு நிறைவுரையில் மதுரையில் குறிப்பிட்டதுபோல; மத்தியிலே இந்த ஊழல்கள், நம் மாநில அரசிலோ ஆயிரக்கணக்கான ஊழல்கள்; கெண்டை மீன்களாக! விலாங்கு மீன்களாக!

முன்பு இருந்த கவர்னர் பீஷ்ம நாராயண் சிங் அவர்களிடம் ஜெயலலிதா அரசின் நூறுகோடி ரூபாய் ஊழலுக்கான பட்டியலை, அச்சிட்டு, ஆதாரங்களுடன் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் நாள்; ஆம் - அந்த ஆண்டு முப்பெரும் விழாவையொட்டி மாபெரும் பேரணியே ஆளுநர் மாளிகைக்கு நடத்திக் கொண்டு போய்க் கொடுத்தோம்.

அரசின் டான்சி நிலத்தை ஜெயலலிதா, சட்ட விரோதமாக வாங்கியதையும் - டாமின் நிறுவனத்தின் மூலம் அந்நியச் செலாவணி மோசடி நடத்தியதையும் - சாராய சாம்ராஜ்யத்துக்கு சலுகைகள் வழங்கி கொள்ளை நடத்துவதையும் - ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தனியாருக்குத் திருப்பிக் கொடுத்து ஊழல் புரிந்துள்ளதையும் - ஸ்பிக் பங்கு ஊழல் பேரத்தையும் - ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரி முகத்தில் திராவகம் வீசப்பட்ட காரணத்தையும் - ஆசிரியப் பயிற்சி பள்ளிகள் குறித்து முன்னுக்குப் பின் முரணான ஆணைகள் பிறப்பித்து பல கோடி ரூபாய் ஊழல் செய்துள்ளதையும் - ஒப்பந்தப் புள்ளி கோராமல் சென்னை நேரு விளையாட்டு அரங்கம் அமைத்ததில் கோடிக்கணக்கில் நடந்தேறிய ஊழலையும் - இப்படிப் பதினெட்டு ஊழல்களைப் பட்டியலிட்டு ஆதாரங்களுடன்தான் ஆளுநரிடம் தந்தோம்.

ஆனால் நீண்ட மௌனத்திற்குப் பிறகு, ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் - ஒருநாள் திடீரென்று, தி.மு.கழகம் ஜெயலலிதா ஆட்சி மீது கொடுத்த ஊழல் புகார்களுக்கு ஆதாரமில்லையென்று கூறிவிட்டார்.

ஆனால் அவர் அப்படிக் கூறிய பிறகுதான்; உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் மூலம் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளுக்கான அரசு அனுமதியின் ஊழல்கள் அம்பலத்துக்கு வந்தன என்பதை அனைவரும் அறிவர்! பாவம்; ஆளுநர் பீஷ்மர்தான் அறிந்து கொள்ள முடியவில்லை.

பாவம்; ஆளுநர்தான் என்ன செய்ய முடியும்! என்னதான் நடுநிலையுடன் நின்று துலாக்கோல் முள்ளைப் போல செயல்பட வேண்டுமென எண்ணினாலும்; அந்த முள்ளை கெடிகாரத்தின் ஆறரை மணி முட்களைப் போலத் தலை வணங்கிக் குப்புறக் குனிந்து கிடக்கச் செய்திட மேலிடத்தால் முடிகிறதே!

ஆம்; மேலிடத்தாலும் முடியும்! மேலிடத்தாலும் முடியும்! பிறகு நீதி எங்கே? நியாயம் எங்கே? நேர்மை எங்கே?

1992-ல் ஆளுநரிடம் நமது கழகச் சார்பில் நாம் கொடுத்த ஊழல் புகார் பட்டியலில் 18 குற்றச்சாட்டுகள்! அடடா; இந்த இரண்டு ஆண்டுகால பரிணாம வளர்ச்சியில் அந்தப் பட்டியல் பல மடங்கு நீண்டு, பல்லாயிரம் கோடி ரூபாய் கொள்ளை என்கிற அளவுக்கு விசுவரூபம் எடுத்து நிற்கிறது!

நேரமில்லாத காரணத்தால் மதுரை மாநாட்டு உரையில் விளக்க முடியவில்லை; அப்போதே எண்பது நிமிடங்களுக்கு மேல்பேசிவிட்டேன்; அதனால் எழுதிக் காட்டுகிறேன் எனக் கூறியிருந்தேன், அந்த வாக்குறுதிக்கேற்ப;

இதோ அவற்றில் சில :-

போலி மருந்து ஊழல்

* அரசு மருத்துவமனைகளுக்கு கடந்த ஆண்டு மருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. அப்படி வாங்கப்பட்ட, சில கம்பெனிகளின் பெயர்கள் -

1. மெசர்ஸ் வின்பயோடக்,
   3, பேராசிரியர்கள் காலனி,
   கிழக்கு தாம்பரம், சென்னை.
2. செம்பியூர் மெடிக்கல்ஸ்,
   44/2, டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலை,
   சென்னை - 12.
3. கேஷியோ சர்ஜிகல்ஸ்,
   திருநெல்வேலி.

இதுபோல் சுமார் 300 கம்பெனிகளுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணை எண். 971, 29.6.93-ன் படி புதிதாக லைசன்ஸ் வழங்கப்பட்டு, அவைகளிடமிருந்து மருந்துகள் வாங்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளன. ஆனால் இந்தக் கம்பெனிகளில் பாதிக்கு மேற்பட்டவை போலி கம்பெனிகளாகும். பினாமி கம்பெனிகளாகும். இந்தக் கம்பெனிகளிலேயிருந்து மருந்து வாங்கியதாக பில் தயாரிக்கப்பட்டு, பலகோடி ரூபாய் ஊழல்கள் நடைபெற்றுள்ளன.

மருந்து உற்பத்தியாளர் அசோசியேஷன் தலைவர் வி.எஸ். ராமன் என்பவரும் - செயலாளர் முனுசாமி நாயுடு என்பவரும் - 56 கோடி ரூபாய்க்கு அரசுக்கு கடந்த ஆண்டு தாங்கள் மருந்துகளை சப்ளை செய்ததாகவும் - அரசு செயலாளரின் வாய்மொழி ஆணைக்கிணங்க - இத்தொகையிலே பத்து சதவிகிதமான 5.6 கோடி ரூபாயை முதல்வருக்கான கமிஷனாக தந்ததாகவும் எழுதியே வருமான வரித்துறை அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறார்களாம்.

இத்துறையின் செயலாளராக இருந்த இன்பசாகரன் வீட்டிலே வருமான வரித்துறை சோதனை நடத்தியபோது - பல லட்சம் ரூபாய்க்கான வங்கி ரசீதுகளும், வெளிநாட்டு நாணயமும் கிடைக்கப்பெற்றதாக செய்தி வந்தது. அந்தச் சோதனையை நடத்திய வருமான வரித்துறை அதிகாரி வேறு மாநிலத்திற்கு மாற்றப்பட்டாரே தவிர, அந்த அதிகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை உலகத்திற்கே மறைக்கப்பட்டு விட்டது.

அரசுப் பங்குகளை தனியாருக்கு விற்ற ஊழல்

* ஸ்பிக் நிறுவன ஷேர்களை தனியாருக்கு குறைந்த விலையிலே விற்றது பற்றிய ஊழலைப் போலவே அண்மையிலே - சவுத் இண்டியா ஷிப்பிங் கார்பரேஷனுடைய ஷேர் மதிப்பு வெளி மார்க்கெட்டில் 850 ரூ.

தமிழக அரசுக்குச் சொந்தமான 14 லட்சம் ஷேர்கள் - ஷேர் ஒன்று 350 ரூபாய் விலை வீதம் - பம்பாய் எஸ்.ஆர். ஷிப்பிங் கார்பரேஷனுக்கு விற்கப்பட்டுள்ளது.

இதற்கு இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் கூட - பல கோடி ரூபாய் லஞ்சம் பெற்றுக்கொண்டு இது நடைபெற்றுள்ளதாக தெரிகின்றது.

கொடைக்கானலில் ஓட்டல் கட்டியதில் ஊழல்

* கொடைக்கானலில் பிளசென்ட் ஸ்டே ஓட்டல் என்ற நிறுவனத்திற்கு - தரைப்பகுதி தளத்துடன் ஒரு மாடி மட்டும் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த ஓட்டல் நிறுவனம் - அந்த ஓட்டலை ஏழு மாடிக் கட்டிடமாக கட்டி முடித்து விட்டது.

எப்படி கட்டினீர்கள் என்று பழனி மலைகள் பராமரிப்பு வாரியம் விளக்கம் கேட்டபோது - அந்தக் கட்டிடத்தின் ஐந்து மாடிகள், சாலை மட்டத்திற்கு கீழே இருப்பதால், அதனைக் கணக்கிலே எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறினார்களாம்.

இதனை எதிர்த்து பழனி மலைகள் பராமரிப்பு கவுன்சில் உயர்நீதிமன்றத்திலே வழக்கு! 13.3.94-ல் நீதிபதி ஜெ. கனகராஜ் இந்த வழக்கிலே தீர்ப்பு கூறும்போது - ஓட்டல் நிர்வாகத்தின் வாதம் சரியானதல்ல; ஏற்கத்தக்கதல்ல; எனவே மேற்கொண்டு கட்டுமானப் பணிகளை தொடரக் கூடாது. அடித்தளம், முதல் மாடியைத் தவிர எஞ்சிய இடங்களைப் பயன்படுத்தவும் கூடாது

என்று ஆணையிட்டார்.

இத்தீர்ப்பின் மீது ஓட்டல் நிர்வாகம் மேல் முறையீடு செய்தது, அது இன்னமும் முடியவில்லை.

ஆனால் 13.5.94 அன்று தமிழக அரசின் நகராட்சி நிர்வாகத்துறை ஆணை எண் 126-ன் படி அந்த ஏழு மாடிக் கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் உத்தரவின் பேரில்தான் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக அமைச்சரிடம் அந்த ஓட்டல் நிர்வாகம் ஒரு பெருந்தொகையினை ஒப்படைத்துள்ளது.

பொறியியல் கல்லூரிக்கு மாணவர்கள் சேர்த்ததில் ஊழல்

* கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரி மாணவர் சேர்ப்பதிலே நடைபெற்ற ஊழல்.

அதாவது கட்-ஆப் மதிப்பெண்ணுக்கு குறைவாக மதிப்பெண் பெற்றவர்கள் எல்லாம் திருச்சி ஆர்.ஈ.சி. கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக கட்-ஆப் மார்க் 250.3 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தபோது 197.15 மதிப்பெண் பெற்றவர் அங்கே அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இதுபற்றி அனைத்து விவரங்களையும் திரு. உமாநாத் அவர்கள் போதிய ஆதாரங்களுடன் வெளியிட்டு, இந்த ஊழலிலே ஒரு அமைச்சரும் அவரது உறவினரும் சம்பந்தப்பட்டிருப்பதாக அனைத்து ஏடுகளும் தெரிவித்து, அந்தச் செய்தியும் வெளியிடப்பட்டது.

ஒரு மாணவர் மட்டும் இவ்வாறு சேரவில்லை. அமைச்சரின் உறவினர் ஒருவரே, சென்னையிலேயிருந்து நவம்பர் 5-ந் தேதியன்று ஒரு பட்டியலிலே இருந்த குறைந்த மதிப்பெண் வாங்கியவர்களை எல்லாம் அவசரமாக அவசரமாக அமைச்சரின் பெயரைச் சொல்லி சேர்த்திருக்கின்றார்கள்.

தாமிரபரணி ஆற்றின் கரைகளை உயர்த்தும் திட்டத்தின் ஊழல்

* தாமிரபரணி ஆற்றின் இரு கரைகளையும் சீரமைக்க ஒரு திட்டம் உலக வங்கியின் உதவியுடன் போடப்பட்டது.

திட்டச் செலவு ரூ. 23.74 கோடி. இத்திட்டத்தின் கீழ் எந்தப் பணிகளும் நிறைவேற்றப்படாமலேயே - பணம் முழுவதும் செலவழிக்கப்பட்டுள்ளதாகவும் - ஒப்பந்தக்காரர்களுக்கு ஆர்டர் ஒப்பந்தம் பணம் பட்டுவாடா எல்லாம் ஒரே நாளிலேயே செய்யப்பட்டதாகவும் திரு. தனுஷ்கோடி ஆதித்தன் எம்.பி. ஒரு குற்றச்சாட்டு தெரிவித்தார்.

இத்தொகை உலகவங்கியிடமிருந்து பெற்றதால் - இந்த ஊழல் பற்றி அவர் டெல்லியிலே உள்ள உலக வங்கி அதிகாரிகளிடம் மனு கொடுத்தார்.

தூத்துக்குடி வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவரே கூட இந்த ஊழல் பற்றிக் குறிப்பிட்டதோடு - இந்த ஊழலுக்கு சம்மதிக்காமல் எதிர்த்த அதிகாரி ஒருவர் கொலையே செய்யப்பட்டு விட்டதாகவும் கலெக்டர் முன்னிலையிலேயே தெரிவித்து அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது.

அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினை அப்படியே மூடி மறைக்கப்பட்டு விட்டது.

நியூஸ் பிரிண்ட் விரிவாக்கத் திட்டத்தில் ஊழல்

* தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் விரிவாக்கத் திட்டம் -

உலக வங்கியின் உதவியோடு இத்திட்டம் 200 கோடி ரூபாய் திட்டமாக உறுதி செய்யப்பட்டது.

இத்திட்டத்தினை நிறைவேற்ற மூன்று கம்பெனிகள் விண்ணப்பித்தன!

1. ஓவர் மெக்கானிகா இத்தாலி

2. பெலாய்ட் சகாய் இங்கிலாந்து

3. லார்சன் அண்டு ட்யூப்ரோ இந்தியா

பெலாய்ட் கம்பெனி ஆறு சதவிகிதம் கமிஷன் தர ஒப்புக்கொண்டதின் பேரில் அவர்களுக்கே இத்திட்டம் கொடுக்க முதலில் முடிவெடுக்கப்பட்டது.

பின்னர் லார்சன் அண்ட் ட்யூப்ரோ கம்பெனி பத்து சதவிகிதம் கமிஷன் கொடுக்க முன் வந்ததால் பெலாய்ட் கம்பெனிக்கு போட்ட ஆணையை ரத்து செய்துவிட்டு, லார்சன் அண்ட் ட்யூப்ரோ கம்பெனிக்கு இத்திட்டம் தரப்பட்டுள்ளது.

இந்த லார்சன் அண்ட் ட்யூப்ரோ கம்பெனிக்குத்தான் ஒப்பந்தப்புள்ளி கோராமலேயே நேரு ஸ்டேடியம் பணி தரப்பட்டது என்பதும் முக்கியம்

நர்ஸ் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமை அளித்ததில் ஊழல்

* தமிழகத்திலே உள்ள தனியார் மருத்துவமனைகளிலே - நர்ஸ்களுக்கு பயிற்சி அளிக்கும் முறையிலே - சுமார் 150 உரிமங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் கடந்த ஆண்டு தரப்பட்டுள்ளது.

அந்த மருத்துவமனைகளில் எல்லாம் - நர்ஸ் பயிற்சிக்கு மாணவிகளைச் சேர்க்க - ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் என்று வாங்கிக்கொண்டு சேர்க்கின்றார்கள்.

அதுபற்றி மருத்துவமனை உரிமையாளர்களைக் கேட்டால் - அந்தப் பள்ளிக்கான உரிமம் அரசாங்கத்திடம் பெற ஐந்து இலட்சம் ரூபாய் லஞ்சம் கொடுத்துப் பெற்றதாகக் கூறுகின்றார்கள்.

நிலக்கரி இறக்குமதியில் நடைபெற்ற ஊழல்

* தமிழகத்தின் மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை மத்திய அரசின் அனுமதி பெற்று மாநில அரசு இறக்குமதி செய்ய முன் வந்தது.

இந்த நிலக்கரி தரமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மத்திய அரசிடமிருந்து 55 சதவிகிதம் எக்சைஸ் வரி சலுகை கிடைக்கும்.

தரக்குறைவான நிலக்கரியை தந்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று ஒரு நிபந்தனை முதலில் டெண்டரில் குறிப்பிட்டிருந்த போதிலும் - இறுதி ஆணை பிறப்பித்தபோது, அதிலே இந்த நிபந்தனையை வேண்டுமென்றே சேர்க்காமல் விடப்பட்டது.

அழகேந்திரன் என்பவர் முதலில் இதற்கான அனுமதியைப் பெற்றார். அவர் மின்வாரியத்திடம் இந்த அனுமதியை மற்றொரு நிறுவனத்தின் பேரில் மாற்றுவதற்கு அனுமதி கேட்டபோது, முதல்நாள் மறுக்கப்பட்டுவிட்டது. ஆனால் மறுநாளே, அவரது வேண்டுகோளின் படியே அவர் கூறிய நபருக்கே மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது சம்பந்தப்பட்ட கோப்பிலே - பொதுப்பணித் துறை செயலாளர் 26.5.93 அன்று எழுதும்போது இதில் பதுங்கியிருக்கும் முறைகேடுகள் என்றாவது ஒருநாள் தெரிய வரும். அப்போது நாமனைவரும் கண்டனத்துக்கு உள்ளாவோம் என்று எச்சரித்துள்ளார்.

அந்தக் கோப்பிலே இறுதியாக எழுதும் போது அவர் இந்த டெண்டர் பயனற்றது என்பதே இறுதியான சிபாரிசு என்றும் தெரிவித்துள்ளார்.

பொதுப்பணித்துறை செயலாளர் இவ்வாறு எழுதியதால் நிதித்துறை செயலாளரும் இதனைத் தவிர்க்க விரும்புவதாக எழுதினார்.

ஆனால் தலைமைச் செயலாளர், இந்தக் கோப்பிலே நேரில் சந்தித்து விவாதிக்கும்படி எழுதி, அதன்படியே சந்தித்துப் பேசப்பட்டது. பொதுப்பணித்துறை செயலாளர் எழுதிய 21 பக்கக் குறிப்பிலே 12 பக்கங்கள் கிழிக்கப்பட்டு, புதிதாக வேறு பக்க எண்கள் கொடுக்கப்பட்டு, கோப்பு துறையின் அமைச்சருக்கும் முதல்வருக்கும் சென்று கையெழுத்தாகியது.

கையெழுத்திற்குப் பிறகு கோப்பு திரும்பி வந்தபோது - பொதுப்பணித்துறை செயலாளர் தன்னுடைய குறிப்பிலே 12 பக்கங்கள் கிழிக்கப்பட்டிருப்பது கண்டு, அந்த கோப்பிலேயே அதற்கான தனது கண்டனத்தைத் தெரிவித்து எழுதியும் வைத்து விட்டார்.

இந்த ஊழல் சம்பந்தமாக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதாரப்பூர்வமாக குரல் எழுப்பின. மத்திய அரசின் சுங்க

அதிகாரிகளும் இந்த நிலக்கரி தரமற்றது என்று ஆதாரபூர்வமாக நிரூபித்து விட்டார்கள்.

கண்துடைப்பாக முதல்வர் ஒரு விசாரணைக் கமிஷன் சந்துர்கர் அவர்களைக் கொண்டு அறிவித்தார். ஆனால் இன்றுவரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை. ஆட்சேபணை எழுப்பிய பொதுப்பணித்துறை செயலாளரும் பணியிலிருந்து சென்று விட்டார். கோப்புகள் எல்லாம் மாற்றப்பட்டு விட்டதாக தலைமைச் செயலக அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

அரசுத் தொழிற்சாலைகளை தனியாருக்கு விற்கும் ஊழல்

* சதர்ன் ஸ்ட்ரட்சுரல்ஸ் தொழிற்சாலையை தனியாருக்கு விற்பது பற்றி உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கிலே, கடந்த ஜூன் மாதம் நீதிபதி தீர்ப்பளித்தபோது - நஷ்டத்தில் இயங்கும் தொழிற்சாலைகளை அரசு தனியார் மயமாக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால் அரசு பொதுவாக நடத்தும் நிறுவனங்களை லாப நோக்கத்துடன் அனைத்துமே நடத்தப்பட மாட்டாது. சில நிறுவனங்களிலே நஷ்டம் வந்தாலும்கூட, பொதுமக்களின் நன்மைகளைக் கருதி, அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, அரசே அவைகளை நடத்திட வேண்டும்.

ஆக, நஷ்டத்திலே இயங்கும் ஆலைகளையே தனியாருக்கு தாரை வார்க்கக் கூடாது என்கிற போது நல்ல லாபத்திலே இயங்கும் அரசு ஆலைகளையே மலிவான விலைக்கு தனியாருக்கு விற்பதற்கான முயற்சி நடைபெறுகின்றது.

உதாரணமாக அரக்கோணத்தில் தமிழ்நாடு உருக்கு ஆலை நல்ல லாபத்தோடு இயங்கி வரும் அரசு நிறுவனமாகும்.

இதனை குறைந்த விலைக்கு தனியாருக்கு விற்க அ.தி.மு.க. ஆட்சியினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள்.

வீட்டு வசதி வாரிய நிலத்தை தனியார் ஆக்ரமித்த ஊழல்

*சென்னை கோயம்பேடு சர்வே எண். 207, 14-ஏ, 207 / 14-பி.

மொத்த 26 கிரவுண்ட்கள்.

இந்த இடம் தங்களுக்குத்தான் உரியது என்று இருதரப்பினர் வழக்கு.

ஆனால் 1990இல் தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம் இந்த இடம் தங்களுக்குத்தான் சொந்தமான இடம் என்று அறிவிப்புப் பலகை அங்கே வைத்தது.

ஆனால் இந்த இடத்தையும், இதற்கு அருகே இருந்த புறம்போக்கு நிலம் சர்வே எண். 233 இடத்தையும் இணைத்து - வீட்டு வசதி வாரியம் வைத்திருந்த அறிவிப்பு பலகையையும் அகற்றி விட்டு - அங்கே எமரால்டு ப்ரோமோஷன்ஸ் என்ற நிறுவனம் அந்த இடங்கள் தங்களுக்குரியது என்று அறிவிப்பு பலகை வைத்துள்ளது. இது எப்படி?

ஆர்.இ.சி. கல்லூரி முதல்வரை மாற்றிய ஊழல்

* அண்ணா பல்கலைக் கழகத்திலிருந்து இளங்கோ என்பவர் திருச்சி ஆர்.ஈ.சி. கல்லூரிக்கு முதல்வர் பதவிக்கு - ஐந்தாண்டு காலத்திற்கு அந்தப் பதவியிலே இருப்பதற்காக டெபுடேஷனில் சென்றுள்ளார்.

ஆனால் அந்த ஐந்தாண்டுக்காலம் முடிவதற்குள்ளேயே கல்வி அமைச்சர் ஆர்.ஈ.சி. கல்லூரி முதல்வராக, தன்னிச்சையாக ஆர். கந்தசாமி என்பவரை - நியமித்து - ஆணை பிறப்பித்தார்.

இளங்கோ உடனே உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்தார். நீதிபதி, அமைச்சரின் உத்தரவை ரத்து செய்துவிட்டு, இளங்கோ அவர்களே முதல்வராக நீடிக்க உத்தரவு பிறப்பித்தார்.

உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு கூறிய பிறகும் - அமைச்சரின் ஆணைப்படி, தான்தான் அந்தக் கல்லூரியின் முதல்வர் என்று கந்தசாமி கூறி, முதல்வர் அறையை விட்டு வெளியே வரவே மறுத்து விட்டார். எனவே, இளங்கோ மீண்டும் உயர்நீதிமன்றத்திலே நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றினை தாக்கல் செய்தார்.

அதன் மீது உயர்நீதிமன்றம் 3.3.94 அன்று பிறப்பித்த தீர்ப்பிலே - மாநில அரசு உடனடியாக கந்தசாமியை மாற்றி விட்டு - இளங்கோவை அந்தப் பதவியிலே நீடிக்கச் செய்வதோடு - கந்தசாமி நீதிமன்றத்திற்கு முன் ஆஜராக வேண்டுமென்றும் ஆணையிட்டது.

நியாய விலைக் கடைகளுக்கு பீரோ வாங்கிய ஊழல்

* கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கு இரும்பு பீரோ வழங்கப்படும் என்று ஒரு அறிவிப்பு.

அதன்படி சேலம் மாவட்டத்திலே உள்ள 1100 கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் அண்மையிலே இரும்பு பீரோ வழங்கப்பட்டது.

ஒரு பீரோவின் அடக்க விலை சுமார் ஆயிரம் ரூபாய்தான் இருக்கும். ஓராண்டிற்குகூட அந்த பீரோ தாங்காது.

ஒவ்வொரு பீரோவிற்கும் பில்லிலே போடப்பட்ட தொகை ரூ. 3,800/-

அந்தத் துறையின் அமைச்சருக்கு ஒரு பீரோவிற்கு கமிஷன் ரூ. 1,500/-

இணைப்பதிவாளர், மற்றும் துறையின் அதிகாரிகளுக்கும் இந்தப் பேரத்திலே தொகை ஒதுக்கப்பட்டது. அதுபோலவே,

ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் தார்ப்பாய் வாங்கி வினியோகிக்கப்பட்டது.

ஒரு தார்ப்பாயின் மார்க்கெட் விலை ரூ. 1,500/-. ஆனால் பில்லிலே போடப்பட்ட தொகை ரூ. 3,000/-

இந்த விநியோகத்திலும் அமைச்சருக்கு கமிஷன் தொகை ஒழுங்காகச் செலுத்தப்பட்டது.

சலவை இயந்திரங்கள் வாங்கியதிலும் ஊழல்

* தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு பெரிய மருத்துவமனைகளுக்கு, பெரிய சலவை இயந்திரம் தமிழக அரசின் பொதுப்பணித்துறை மூலமாக வாங்கப்பட்டது.

மருத்துவமனைகள், மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் வரும் என்றாலும் - பொதுப் பணித்துறையில் பராமரிப்பு பிரிவு வருவதை காரணமாகக் காட்டி பொதுப்பணித்துறை மூலமாகவே இந்தச் சலவை இயந்திரங்கள் வாங்கப்பட்டன.

டெண்டர் கேட்காமலேயே - பம்பாயில் உள்ள ஒரு நிறுவனத்திடமிருந்து, உரிய விலைக்கு மேலே. அதிக விலை வைத்து, இந்தச் சலவை இயந்திரங்கள் வாங்கப்பட்டன. இதன்மூலம் பலகோடி ரூபாய் இலாபமாக தனிப்பட்டவர்கள் பயனடைந்திருக்கின்றார்கள்.

மாநகராட்சி - நகராட்சிகளுக்கு விளக்குகள் வாங்கியதில் ஊழல்

* மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தெரு விளக்கு வாங்கியதிலும் பலகோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடைபெற்றுள்ளது.

விளக்குகளை வாங்குவதற்கு டெண்டர் கோரப்படவில்லை.

அதிலே கடைப்பிடிக்கப்பட வேண்டிய மத்திய அரசின் நடைமுறைகளும் பின்பற்றப்படவில்லை.

வெளிமார்க்கெட்டிலே 400 ரூபாய்க்கு கிடைக்கக்கூடிய விளக்குகளை, 660 ரூபாய் வீதம் விலை கொடுத்து வாங்கியிருக்கின்றார்கள்.

பலகோடி ரூபாய் இதிலேயும் அரசுப் பணம் தனிப்பட்டவர்களுக்கு - பதவியிலே இருப்பவர்களுக்கு கிடைத்துள்ளது.

உலகத் தமிழ் மாநாட்டின் பெயரால் நடைபெறும் ஊழல்

* தஞ்சையிலே உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரால் கொள்ளை தொடங்கப்பட்டு விட்டது.

தஞ்சை, திருச்சியிலே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்குச் சொந்தமான ஓட்டல்கள் எல்லாம் தனியார்களுக்கு பெறவேண்டியதைப் பெற்றுக்கொண்டு குறைந்த விலைக்கு விற்றிருக்கின்றார்கள்.

தஞ்சை சிறுவர் சீர்திருத்தச் சிறை காம்பவுண்டுக்குள் உள்ள அரசுக்குச் சொந்தமான நிலம், அமைச்சர் ஒருவரின் பினாமி பெயருக்கு விற்கப்பட்டுள்ளது.

இதுபோலவே திருச்சியிலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான இடம் தனிப்பட்டவர்களுக்கு விற்கப்பட்டுள்ளது.

இது மாத்திரமல்ல;

உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரால் தஞ்சையிலே தரப்படும் பல்வேறு திட்டப் பணிகள் எல்லாம் பத்து சதவிகிதம் கமிஷன் பெறப்பட்டு - அவைகளுக்கெல்லாம் அரசாங்கமே முன்பணம் கொடுத்து அவைகள் நடைபெறுகின்றன.

பார்த்தாயா உடன்பிறப்பே; பட்டியலை! 1992 ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாள் மற்றும் முப்பெரும் விழாவையொட்டி மாநில அரசின் மீது நாமளித்த ஊழல் குற்றங்கள்; இன்று மலையாகக் குவிந்திருக்கின்றன -

அதனால்தான் செப்டம்பர் 15 முதல் அந்த மாதம் முழுவதும், அதற்கு மேலும்கூட மத்திய அரசு ஊழல்களையும், மாநில அரசு ஊழல்களையும் மக்கள் மன்றத்திலே வைத்திடும் பணியைத் தொடங்கிட வேண்டுகிறேன்.

மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடித்து - மக்கள் விரோதப் போக்கில் நடைபெறும் மத்திய, மாநில ஆட்சிகளை எதிர்த்து நாட்டை மீட்கும் போராட்டத்திற்கு மக்களைத் தயாரிக்கும் விழாவாக இந்த ஆண்டு முப்பெரும் விழா அமையட்டும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-08-1994

2168. நோக்கம் தெரிகிறதா? போக்கு புரிகிறதா?

உடன்பிறப்பே,

தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஊழல் ஆட்சியை ஒழித்துக் கட்டப் போவதாகவும் - அந்த ஒரு குறிக்கோளுக்காகவே வழிநடைப் பயணம் மேற்கொண்டிருப்ப தாகவும் குமரிமுனையில் உரையாற்றி விட்டுக் கிளம்பினார்கள் என்ற செய்தியை மாலையில் வந்த ஏடுகளில் படித்தபோது; பரவாயில்லை - இவர்கள் புதுக் கட்சி தொடங்குவதற்கு முன்பும் தொடங்கிய பிறகும் தி.மு.கழகமென்னும் தாயின் வயிற்றைக் கிழித்திட வேண்டிக் கையில் கத்தியும் வேலும் ஏந்திப் பாய்ந்து கொண்டிருப்பதற்கு மாறாக; இப்போது பாதையை மாற்றிக் கொண்டு, ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியை அகற்றுவதே தமது நோக்கமென அறிவித்துச் செயல்படுவது பாராட்டத்தக்கதுதான் என்றெண்ணி; அவர்தம் வழிநடைப் பயணத்திற்கு மாறான கருத்து எதையும் தெரிவிக்காமலே இருந்தேன்.

ஆனால் ஜூலை 27 குமரி முனையில் புறப்பட்டபோது காலையில் பேசிய கருத்துக்கு முற்றிலும் மாறாக; அன்று மாலையிலேயே நாகர்கோயில் கூட்டத்தில் தி.மு.கழகத்தையும் என்னையும் மிகக் கடுமையாகத் தாக்கியதோடு உலகமகாப் பொய்யன் என்று எனக்கோர் பட்டத்தையும் வழங்கி மகிழ்ந்திருக்கிறார்கள்.

அடுத்து 28, 29 ஆகிய நாட்களிலும் அந்த வழிநடைப் பயணத்தில் எனக்கு அர்ச்சனைதான்! ஜெயலலிதா ஊழல் ஆட்சியை அகற்றுவது என முரசறைந்த அந்த நோக்கத்தையே மறந்துவிட்டு, மதுரையில் 29, 30, 31 ஆகிய நாட்களில் நடைபெற்ற கழக மண்டல மாநாடு குறித்தே கேலியும் கிண்டலும்

கலந்த உரைகளை வழி நெடுக மேடைகளில் முழக்கிக் கொண்டே வந்தனர்.

மண்டலம் என்பது காங்கிரஸ் கட்சிக்கு உரிய சொல்; அதனைத் தி.மு.க. பயன்படுத்துவது ஏன் தெரியுமா? காங்கிரசுடன் கூட்டணி சேருவதற்காகவே!

இப்படியோர் விஷமத்தனமான விளக்கம் தந்தனர்; வீழ்த்த வேண்டியது ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியை என்று சொன்ன வீரதீர கம்பீரத்தை மறந்து விட்டு!

சதாசிவ பண்டாரத்தார் எழுதிய வரலாற்று நூலிலேயே சோழமண்டலம், பாண்டிய மண்டலம், சேரமண்டலம் என்ற சொற்றொடர்கள் இடம் பெற்றிருப்பதை நாம் எடுத்துக் காட்டி விளக்கம் அளிக்க வேண்டியதாயிற்று!

அண்ணா காலத்தில் தி.மு.கழகமே; இந்தி ஆதிக்க எதிர்ப்பு மண்டல மாநாடுகளை நடத்தியிருக்கிறது என்ற செய்திகளைத் தேதி வாரியாக எடுத்துரைக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏறபட்டது.

மாநிலத்தில் உள்ள ஊழல் ஆட்சிக்கு எதிராகக் கிளம்பியவர்கள்; மண்டலத்துடன் மோதிக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்தது? ஏன் வந்தது?

அதாவது; அவர்கள் வெளியில் சொல்லிக் கொண்டதுதான் ஊழல் ஆட்சி ஒழிப்பு என்பதாகும்! உள்ளூர அவர்களின் நோக்கம்; ஊழல் ஆட்சியாளர்களின் உள்ளம் குளிர தி.மு.கழகத்தைத் திட்டித் தீர்க்க வேண்டும் என்பதுதான்!

புதுக்கட்சி தொடங்க, பிள்ளையார் சுழியே அப்படியொரு பேரத்துடன் கணேசர் அருளுடன் கைமாறிய பொருளுடன் போடப்பட்டதுதானே! அதனால்தான், திடீரென அவர்களுக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்தை விட்டுவிட்டுப் புதுக்கட்சி தொடங்கியதற்கான காரணத்தை ஆராய்ந்து அறிந்து, அறிந்தவற்றை மறைத்து, இட்டுக் கட்டிய பொய்களை, வாரி இறைத்திட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடனாவது நிறுத்துகிறார்களா; அதுதான் இல்லை!

விருதுநகருக்குப் போனால் காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவோம் என்கிறார்கள்! மதுரைக்குப் போனால் எம்.ஜி.ஆர்.

ஆட்சியைக் கொண்டு வருவோம் என்கிறார்கள்! பாவம் இடையே இரண்டொரு நாட்கள் அண்ணா ஆட்சியையே மறந்து விட்டார்கள்!

எம்.ஜி.ஆர்; தி.மு.க.விலிருந்து பிரிய நேரிட்டு புதுக்கட்சி தொடங்கிய பிறகு எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி எந்தவொரு தவறான விமர்சனமும் இவர்கள் செய்ததேயில்லையென்று வழி நடைப் பயணக் கூட்டங்களில் எல்லாம் சத்தியம் செய்து பேசி வருகிறார்கள்.

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். கழகத்திலிருந்து பிரிந்தபோதும் - முதலமைச்சராக இருந்த போதும் நான் அவரை விமர்சித்திருக்கிறேன். ஆனால் இன்று அ.தி.மு.க.வில் ஒட்டிக் கொண்டிருக்கும் சிலரைப் போல செவிகளில் நாராசம் பாய்ச்சும் சொற்களைக் கொண்டல்ல! எந்தவொரு தலைவரின் மறைவுக்குப் பிறகும் அவரது கொள்கைகளில் நமக்குள்ள மாறுபாடுகளை விளக்கலாமே தவிர, அவரை வேறு வகையில் தாக்கி விமர்சிப்பது மரபல்ல என்பதை உணர்ந்து அவ்வாறு செயல்பட்டு வருகிறேன் என்பதை நீ அறிவாய்!

எனவே, அவர் உயிருடன் இருந்தபோது அவரை நான் விமர்சித்தேன்; அதனை மறைத்துவிட்டு இப்போது எம்.ஜி.ஆரின் உண்மை விசுவாசிகளை ஏமாற்ற நான் விரும்பவில்லை. அவர் மறைந்த பிறகு எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் அதன் பொதுச் செயலாளர் தம்பி திருநாவுக்கரசின் அழைப்பின்பேரில் அறந்தாங்கியில் எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்து வைத்துப் புகழுரையும் ஆற்றியிருக்கிறேன்.

ஆனால் வழிநடைப் பயணத்தில் வருவோர் என்ன சொல்கிறார்கள்? கருணாநிதி, எம்.ஜி.ஆரைத் தூக்கி எறிந்தார். நான் அவரைப்பற்றி ஒரு சுடு சொல் கூறியதில்லை என்கிறார்கள்.

இதோ எம்.ஜி.ஆர். அவர்களைப்பற்றி இன்று எழுச்சிப் பயணம் நடத்துவோர் என்ன பேசினார்கள் என்பதை தேதி வாரியாகத் தெரிவித்திடுகின்றேன்.

> எம்.ஜி.ஆர். அவரது கட்சியை நடத்திடும் திறமையும் தகுதியும் உள்ளவரா? ஒருக்காலும் இல்லை. ஏனெனில் அவர் அரசியல்வாதியல்ல; சினிமா உலகில் இருந்த ஆஷாடபூதி! ஊரை ஏய்க்கும் கபட வேடதாரி. மயக்கத்தின்

பிடியில் சிக்கிய ரசிகர்களின் பாமரத்தனத்தை முதலாக்கிக் கொண்டு பித்தலாட்டம் போட்டவர். தோல்வியைத் தாங்கும் திராணியற்ற கோழை...

வளர்த்து வாழவைத்த கழகத்தை அழித்திட எண்ணிச் செய்த கொடிய துரோகத்திற்கு அறுவடையைப் பெறத்தான் போகிறார் எம்.ஜி.ஆர்...

இது ம.தி.மு.க.வின் தலைவர் 1980 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 27 ஆம் நாள் மதுரைப் பொதுக் கூட்டத்தில் பேசியது.

இந்த திட்டம் சாகடிக்கப்பட்டதற்கான காரணம் அனைவருக்கும் தெரியும். தேர்தல் நெருங்கியவுடன் தன்னை நம்பியிருந்த சரண்சிங்கின் தலையில் எம்.ஜி.ஆர். கல்லைப் போட்டார். இந்த துரோகத்தால் நெகிழ்ந்து போன சரண்சிங் சென்னைக்குத் தேவையான - மிக அவசியமான இந்தத் திட்டத்தின்மீது கல்லைப் போட்டார். சரண்சிங்கும் எம்.ஜி.ஆரும் நடத்திய நாடகத்தில் ஒருவரையொருவர் மோசடி செய்ய முனைந்து கடைசியில் சென்னைக்குத் தேவையான ஒரு திட்டம் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

இது இன்றைய ம.தி.மு.க.வின் தலைவர் 1980 மார்க் 12-ந் தேதி பொதுக்கூட்டத்திலேகூட அல்ல; ராஜ்ய சபாவிலேயே பேசியது.

கோவில் அதிகாரி சுப்ரமணிய பிள்ளை கொலை செய்யப்பட்டுதான் சாக நேர்ந்தது என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. உண்மையில் இந்த பலத்த தாக்குதலை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில், இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய அரசியல் கோழையும், அரசியல் கழைக் கூத்தாடியுமான தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., கொலைகாரர்களைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய போலீசாரை உண்மையை ஊருக்குச் சொன்ன தலைவர் கலைஞர் வீட்டுக்கு சோதனை போட அனுப்புகிறார்...

இதுவும் ராஜ்யசபாவில்தான் ம.தி.மு.க. தலைவர் 1981 நவம்பர் 27 ஆம் நாள் பேசியதாகும். இதோ இன்னொன்று .... எவ்வளவு இனிமையான சொற்கள் எடுத்துச் செய்த விமர்சனம் பார்!

மீண்டும் முதலமைச்சராக வருவேன் என்று பேச எம்.ஜி.ஆருக்கு உரிமை உண்டு. ஆனால் அவர் இனிமேல் முதலமைச்சராக வருவது என்பது பகற்கனவுதான். திரைப்படத் துறையில் கூட அவரால் மீண்டும் தலையெடுக்க முடியாது. 1957-க்கு முன்பு அவர் எந்த நிலையில் இருந்தாரோ அந்த நிலைமைக்குத்தான் அவரால் இனிவர முடியும்.

தமிழ்நாட்டு மக்கள் மறுபடியும் துரோக நச்சரவு போன்ற எம்.ஜி.ஆரைத் தலையெடுக்கவிடமாட்டார்கள்.

.... வெறி உணர்வோடு கபாலிகர்கள் கூட்டத்தின் தலைவனைப்போல எம்.ஜி.ஆர். பேசியிருக்கிறார். என் உயிர் சும்மா போகாது. இன்னொரு உயிரையும் பறித்துக்கொண்டுதான் போகும் என்று பேசுகிற அளவுக்கு அவர் வெறி கொண்டிருக்கிறார்.

இது 19.4.80 அன்று சென்னை திருவல்லிக்கேணி கூட்டத்தில் ம.தி.மு.க. தலைவர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி!

இப்படித்திட்டமிட்டு உண்மையை மறைத்து விட்டு, எம்.ஜி.ஆரை என்றுமே விமர்சித்ததில்லை என்று பொய்களைப் பரப்புகிறவர்கள்; இந்த ஊழல் ஒழிப்பு எழுச்சிப் பயணத்தில் திடீரென சாதிக் பாட்சா அவர்களின் குடும்பத்தின் மீது பெரும் அக்கறை கொண்டு; ஆகா! சாதிக் குடும்பத்துக்கு நிதி வசூல் செய்வதா? கட்சிப் பணத்திலிருந்து நிதி வழங்கக் கூடாதா? என்று ஆடு நனைகிறதே என ஓநாய் அழுத கதையாக ஓலமிடுகிறார்கள்.

கட்சிப் பணமும், தொண்டர்களிடம் நன்கொடை சீட்டுகளைக் கொடுத்து - நிதி வசூலித்து சேமித்துள்ள பணம்தான் என்பது; கோவை மாநாட்டு மிச்சப் பணத்தில் ஒரு பகுதியையும், கழகக் கட்டிடத்தையும், கழகத்து வேனையும் ஏப்பமிடத் திட்டமிட்டுத் தோற்றுப் போனவர்களுக்குத் தெரியாது போலும்!

அஞ்சா நெஞ்சன் - மானமறவன் - பட்டுக்கோட்டையின் பகுத்தறிவுச் சுடர் - தளபதி அழகிரியின் சிகிச்சைக்கு கூட்டமொன்றுக்கு இருநூறு ரூபாய் என வசூலித்துத்தான் அறிஞர் அண்ணா வழங்கினார். கலைவாணரைக் கொண்டு அழகிரி குடும்ப நிதிக்கான நிகழ்ச்சியைத் தஞ்சையில் அண்ணா அவர்கள் முன்னின்று நடத்தினார்.

தடந்தோள் வீரன் - தன்மானச் சிங்கம் - வேங்கை நிகர்த்த கவிஞன் - புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனுக்கு - அண்ணா அவர்கள் சென்னையில் வழங்கிய நிதி; அதற்கென அமைக்கப்பட்ட ஒரு குழுவினர் ஊர் ஊராகச் சென்று வசூலித்ததுதான்.

ஏன்; நம்மையெல்லாம் ஆளாக்கி - வளர்த்து, வாஞ்சை மிகக் கொண்டு, வாரித் தழுவிய பேரறிஞர் பெருந்தகை - தமிழ்த்தாயின் தலை மகன் - அண்ணாவின் குடும்பத்திற்கான நிதியும் சரி; அண்ணாவின் அமெரிக்க மருத்துவ சிகிச்சைக்கான நிதியும் சரி; கழகத்தின் சார்பில் தொண்டர்களிடமும், ஆதரவாளர்களிடமும் வசூலித்து வழங்கியதுதான்!

இவற்றையெல்லாம் உன் போன்ற கழக உடன்பிறப்புகள் மறந்திருப்பார்கள் என்று நம்பி; புறப்படும்போது குமரிமுனையில் எடுத்தியம்பிய குறிக்கோளை, குழியில் போட்டு மூடிவிட்டு - நம்மீதே குறி வைத்துப் பயணத்தைத் தொடர்கிறார்களே; ஏன், என்று நானும் நீயும் ஏற்கெனவே உணர்ந்திருந்தாலும் - இப்போதாவது நடுநிலையாளர்கள் உணர்ந்து கொள்வார்கள் அல்லவா!

செப்டம்பர் 15, 16, 17 நாட்களில் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் சாதிக் அவர்களின் குடும்ப நிதி வழங்கும் நிகழ்ச்சியும் இணைந்து நடைபெறுகிறது என்பதால் வீணர் சிலரின் விஷமப் பிரச்சாரங்களைக் காதில் போட்டுக் கொள்ளாமல், கழக உடன்பிறப்புகள் கணிசமான நிதி திரட்டும் பணியில் ஈடுபட வேண்டுமென்பதை இந்தக் கடிதத்தின் பின்குறிப்பாக - முக்கியமான குறிப்பாகச் சேர்த்திடுகின்றேன்.

அனபுள்ள,

மு. கருணாநிதி

18-08-1994

2169. சிந்திக்க ஒரு கதை!

உடன்பிறப்பே,

ஒரே ஒரு ஊரில் - அது என்ன ஒரே ஒரு ஊர்; அந்த ஊருக்குப் பெயர் கிடையாதா? பெயர் உண்டு, சொல்வதற்குள் அவசரப்பட்டால் எப்படி? ஒரு சின்னக் கதை கூறப்போகிறேன்; அதனால்தான் ஒரே ஒரு ஊரில் என்று கதையைத் தொடங்கினேன்! பெயர் அவசியம் வேண்டுமோ? சரி; தமிழூர் என்று வைத்துக் கொள்ளலாமே!

அந்த ஊரில் ஒரு கோடீஸ்வரி உண்டு! அவருக்கு அந்த ஊர்மக்களை எப்படி ஏமாற்றுவது என்ற தந்திரம் முழுமையாக அத்துப்படி! அந்த கோடீஸ்வரியின் சூது, சூழ்ச்சி, சுரண்டல் வேலை அனைத்தையும் அறிந்த நற்பணிக் குழுவினர் என்போர் அந்த ஊரிலேயே, விழிப்புற்ற மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தனர்! - அந்த ஊரில் கண்மூடித்தனம் வாய்ந்த பெரும்பாலான பாமர மக்களை, கோடீஸ்வரி, கவர்ந்து வைத்திருந்தபோதிலும் அந்தச் செல்வாக்கையும் ஆதரவையும் பெருக்கிக்கொள்ள; கோடீஸ்வரிக்கு திடீரென இன்னொரு யோசனையும் தோன்றியது. அது என்ன யோசனை? பக்கத்து ஊரில் உள்ள முகமூடி மனிதன் தமிழூர் மீது படையெடுப்பான் என்றும், அவனை ஆரம்பத்திலேயே மடக்கிப் போடத் தமிழூர் படையை முடுக்கி விட்டதால் தன் மீது அடங்காக் கோபம் கொண்டுள்ளான் என்றும் ஒரு பொய்ப்பிரச்சாரம் கோடீஸ்வரியால் கிளப்பி விடப்பட்டது.

இது கேட்ட கண்மூடிப் பாமரர்; கோடீஸ்வரி பக்கமே எல்லோரும் இருப்போம் என்று அனுதாப வெள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கினர்.

இதில் மர்மம் என்னவென்றால்; கோடீஸ்வரிக்கும் அந்த முகமூடிக்கும் ஏற்கெனவே ஓர் ஒப்பந்தம் உண்டு! என்ன ஒப்பந்தம் அது?

முகமூடிமனிதன் தமிழ்ரின் மீது படையெடுப்பேன் என்று மிரட்டுவதுபோல வெளியுலகம் நம்பும்படி நடிக்க வேண்டும் - கோடீஸ்வரியும், முகமூடியைப் பெரும் பகைவனாக எண்ணுவது போல் நாடகமாட வேண்டும்.

இந்த சதியாலோசனைக் கூத்து; பாமர மக்களின் ஏமாளித்தனம் காரணமாக வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே, கோடீஸ்வரியும் முகமூடி மனிதனும் தங்களின் அபிலாஷைகள் நிறைவேற அந்தரங்கமாகக் கூடிக்கூடிப் பேசிக்கொண்டும் புதிய புதிய திட்டங்களைப் போட்டுக் கொண்டுமிருந்தார்கள்.

முகமூடி மனிதன்; தனது நோக்கம் நிறைவேறுவதற்கு வலுவில் வந்து உதவிகளை வாரி வழங்கும் அந்த கோடீஸ்வரியைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என்று கருதினான்! முகமூடி மனிதன் என்ற பூச்சாண்டியைக் காட்டியே, அந்த ஊர் மக்களுக்குத் தன் மீதுள்ள அன்பை அனுதாபமாக்கி; அந்த நிழலிலேயே நிலையாக அந்தத் தமிழ்ரை ஆட்டிப்படைக்கலாம் என்ற நினைப்பு கோடீஸ்வரிக்கு!

இந்த நிலைமையை நன்கு புரிந்து கொண்டு; நான் முதலில் சொன்ன நற்பணிக் குழுவினர், கோடீஸ்வரியின் கோணல் நடவடிக்கைகளை ஊரறிய எடுத்துக்கூறி அம்பலப்படுத்தினர். ஆனால் கோடீஸ்வரியோ தன்னையும், தமிழ்ரையும் அழிக்க வந்த முகமூடி மனிதனை விரட்டி விட்டதாக வீரம் பேசி, அதற்கோர் வெற்றிவிழா கொண்டாடி மகிழ்ந்திருந்ததுடன்; அதேசமயம் மறைந்திருந்து முகமூடி மனிதனுக்குத் தேவையான உதவிகளையும் செய்திடத்தவறவில்லை. குறிக்கோளில் கூர்மையான கவனமுடனிருந்த முகமூடி மனிதன், தமிழ்ரில் தனக்கு ஆதரவாக இருக்கும் கோடீஸ்வரியைப் போன்ற இன்னொரு துணையும் வேண்டுமென்று விரும்பிச் செயல்பட்டான்.

அந்த மனிதன் முகமூடியணியாமல் இருந்த காலத்தில்; அவனது குறிக்கோள் என்ன என்பதை ஆய்ந்தறிந்து - குறிக்கோள் சிறந்ததாக இருந்ததால் அவனுக்கு உதவிய நற்பணிக் குழுவினர் அவன் அந்த முகமூடியணிந்த பிறகு, அவனை விட்டு விலகி விட்டனர். எனவே முகமூடி மனிதன் அந்த நற்பணிக் குழுவிலேயே ஒரு ஆளைப் பிடித்து - அந்த ஆளுக்கு கோடீஸ்வரி மூலமாக ஏராளமான பொருளுதவி கிட்டுமாறு வாய்ப்பு ஏற்படுத்திக்

கொடுத்து - அந்தப் புதிய ஆளும் நற்பணிக் குழுவை நசுக்கியே தீருவேன் என்று சூளுரைத்துப் புறப்பட்டான். அத்துடன் கோடீஸ்வரியையும், காரசாரமாக தாக்குவதுபோல் வேஷம் கட்டி வீராதி வீரனைப்போல் தன்னை காட்டிக் கொண்டான்.

இப்போது கோடீஸ்வரிக்கு இரண்டு வகையான ஆதாயம் - வெளித்தோற்றத்துக்கு விரோதிகள் போல இருந்து கொண்டு - எதிரிகள் என்று சொல்லப்படுகிற இருவருமே; கோடீஸ்வரி தனது உண்மையான எதிரியாகக் கருதுகிற நற்பணிக் குழுவை நசுக்கிடத் தனக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள்; இரகசியமாக - என்பதிலே தாங்க முடியாத ஆனந்தம்!

எப்படி உடன்பிறப்பே கதை? என்ன; கதையைப் பாதியில் நிறுத்திவிட்டு, எப்படி கதை? என்று கேட்கிறாய் என்று நமட்டுச் சிரிப்பு சிரிக்கிறாயா?

எதற்காக இந்தக் கதை என்று நினைத்துக் குழம்புகிறாயா? குழம்பாதே! நாட்டில் குழப்பம் வராமல் தடுத்திடும் நல்லெண்ணத்தின் காரணமாக இன்றைய நடப்புகளை இப்படி ஒரு கதையாக்கினேன்.

நாடு வாழ - அதுவும் அமைதியாக வாழ; நற்பணிக்குழுவினர் எந்த தியாகத்திற்கும் தயாராக இருப்பதாக ஒரு அறிவிப்பைச் செய்துள்ளனர் - அத்துடன் நிற்கிறது கதை! ஆம், சிறுகதை - ஆனால் சிந்தனைக்கோர் கதை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

23-08-1994

2170. பழச்சாறும்; விருந்தும்!

உடன்பிறப்பே,

கல்வி, வேலைவாய்ப்பு என்பவை ஒரு நாட்டுக் குடிமகனின் உரிமைப் பிரச்சினை - இதனை ஏதோ ஒருவிதமான சலுகைபோல எண்ணிக் கொண்டும், ஆண்டவன் படைப்பிலேயே தங்களின் ஆதிக்கத்தில் இவையிரண்டும் ஒப்படைக்கப்பட்டவை என உறுதிப்படுத்திக் கொண்டும் - பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் பழங்குடி மக்கள், இவற்றைத் தமது ஓரக்கண்ணால் பார்ப்பது கூடக் குற்றமெனக் கூறிக் கொண்டும் ஆதிக்கபுரியினர் செயல்படும் அதிசயத்தை; அல்ல! அல்ல! வக்கிரமான நிலையை, இந்த இருபதாம் நூற்றாண்டிலும் காண வேண்டியுள்ளதே என்ற கவலை, நெஞ்சத்தை அழுத்திக் கொண்டேயிருக்கிற சூழலில் தான் உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

ஏறத்தாழ எண்பதாண்டு கால வரலாற்றுக்குரிய சமூக நீதியை சாய்த்துச் சாம்பல் மேடாக்கிட அடுக்கடுக்காக - அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் உறங்கும் நேரம் பார்த்து இடைவெளி விட்டு - எப்படியோ ஒரு வடிவத்தில்; இடஒதுக்கீடு எனும் சமூகநீதிக்கு ஆபத்து ஏற்படுத்தும் செயல்கள் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

நீதிக்கட்சி காலத்தில் அரும்பிய இந்தச் சமூக நீதிக் கொள்கையே செல்லாது - அரசியல் அமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானது என ஒரு தீர்ப்பால்; இந்த உரிமை பறிபோனது! இழந்த உரிமையை, ஒடுக்கப்பட்ட மக்கள் பெரும் போராட்டம் நடத்தித் திரும்ப பெற வேண்டியிருந்தது.

அடுத்தொருமுறை பொருளாதார அளவுகோல்; பூங்காவில் புகுந்த புயலென, நுழைக்கப்பட்டபோது; அதிர்ச்சியுற்றனர்

பிற்படுத்தப்பட்ட மக்கள்! அதற்கும் ஒரு போர் தேவைப்பட்டது - அதன்பிறகே இழந்துவிட்ட சமூகநீதியின் அடிப்படைக் கொள்கை, எழுந்து நடமாட முடிந்தது!

இப்போதே, இந்தியாவில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் அனைவருக்கும் மண்டல் பரிந்துரை அமலாக்கத்தின் மூலம்; நல்ல பொழுது விடியுமென நம்பியிருந்திடும்போது - உள்ளதும் போயிற்றே! என ஓலமிடும் அளவுக்கு; ஏற்கெனவே மாநிலங்கள் அளவில் பெற்றிருந்த இடஒதுக்கீட்டுக்கும் மண்டல் வழக்கையொட்டி அளிக்கப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பால் ஊனம் விளைந்துவிட்டது.

அந்தத் தீர்ப்பால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடுதான்! தீர்ப்பால் மட்டுமல்ல; மாநில அரசின் மந்தத்தன்மையால்கூட தமிழ்நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையோர்க்கு பெருங்கேடு!

எனவே, இங்குள்ள அரசையும் - அங்குள்ள அரசையும், உசுப்பி, எழுப்பி விடவும், ஊக்கமுடன் செயல்பட வைக்கவும் எதிர்க்கட்சிகள் எத்தனையோ போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது.

தேசியக்கட்சிகளின் தலைவர்களுடனெல்லாம் தொடர்புகொண்டு; இடஒதுக்கீடு சட்டத்திருத்தத்திற்கான ஒப்புதலைப் பெற வேண்டியதும் அவசியமாயிற்று.

அவர்களும் அட்டியின்றித் தமது ஆதரவை வழங்குவதாக கடித வாயிலாகவே உறுதியளித்துள்ளனர்.

இப்படி உருவாக்கப்பட்டுள்ள சாதகமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு சரிந்து போகாமல் இருக்க, இன்னமும் முன் வராமல் எதற்காக மத்திய அரசு தயக்கம் காட்ட வேண்டும்?

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் இந்த இடஒதுக்கீட்டின் அளவுகளையும், அதன் தொடர்பானவற்றையும் நிர்ணயித்துக் கொள்ளும் அதிகாரத்தை வழங்குகிற வகையில்

அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்பது நமது குறிக்கோள்! அந்தக் குறிக்கோளை எட்டினால்தான்; நாளைக்கு மண்டல் கமிஷன் பரிந்துரைகளின் பயன்களையும் கூட நாடு முழுதுமுள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்றிட முடியும்.

அந்தக் குறிக்கோள் நிறைவேற நமது சமூகநீதி அணியினர் தொடர்ந்து போராடுவது என முடிவெடுத்திருந்தாலும் - தற்போது தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ள சட்டத்துக்கு நீதிமன்ற வழக்குகளால் இடையூறு வராமல் பாதுகாத்திட ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்திடும் திருத்தத்தையாவது செய்யுமாறு தமிழகக் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தியதற்கும் - நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் தமிழக உறுப்பினர்கள் இடைவிடாது வற்புறுத்தியதற்கும் - எல்லாவற்றுக்கும் மேலாக; நமது உணர்வுகளை மதித்து; நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு தருவதாக வாக்குறுதி வழங்கியமைக்கும் - பலன் கிடைத்துள்ளது என்பதற்கு அடையாளமாக இன்றைக்கு உறுதிப்படுத்தப்பட்ட செய்தி வந்துள்ளது.

இன்றா? நாளையா? உண்டா இல்லையா? என ஏடுகளில் நொடிக்கு ஒரு செய்தியாக வந்து கொண்டிருப்பது கண்டு, டெல்லியில் தங்கி பல நாட்களாக தேசிய முன்னணி இடது சாரிக்கட்சித் தலைவர்களுடனும் - மத்திய அமைச்சர்களுடனும் கலந்து பேசி ஒவ்வொரு நாளும் என்னுடன் தொலைபேசி தொடர்பு கொண்டிருக்கிற தம்பி விடுதலை விரும்பி எம்.பி.யுடன் நேற்று மூன்று நான்கு தடவையும் - இந்தக் கடிதம் எழுதும் இன்று காலை முதல், மூன்று தடவையும் பேசியிருக்கிறேன்.

அவர்தான் இறுதியாக, இனிப்பான செய்தி சொன்னார்; 24-ந் தேதி மாநிலங்களவையில் தமிழ்நாடு இடஒதுக்கீடு சட்டத்தை 9வது அட்டவணையில் சேர்க்கும் திருத்த மசோதா வருகிறது என்று!

இது இனிப்பான செய்திதான்! எனினும் இந்த இனிப்பு; விருந்துக்கு முன்பு வழங்கப்படுகிற பழச்சாறின் இனிப்பு!

விருந்து எனக் குறிப்பிடுவது; இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களும் இடஒதுக்கீடு நிர்ணயிக்கும் உரிமை கொண்ட அரசியல் சட்டதிருத்தம் - மற்றும், மண்டல் கமிஷன் வழக்கின் தீர்ப்பால் விளைந்துள்ள தீங்குகளைக் களைந்திடும் திட்டம் - தாழ்த்தப்பட்டோருக்கு ஏற்கெனவே இருந்து இப்போது பறிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பெற்றிடும் போராட்டம் - இத்தனையிலும் நாம் பெற வேண்டிய வெற்றிதான்; இந்தப் பழச்சாறுக்குப் பிறகு, தொடர வேண்டிய விருந்தாகும்.

அந்த வெற்றி விருந்து கிட்டும் வரையில் சமூகநீதிப் போராட்டம் தொடரத்தானே வேண்டும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-08-1994

2171. களிறு மீது ஒரு காக்கை!

உடன்பிறப்பே,

காட்டில் சற்று கூடுதலான பரப்பளவும் ஆழமும் கொண்ட ஒரு குழியை வெட்டுவதற்குப் பல நாட்கள் பலரும் வியர்வை சிந்திப் பணியாற்றினார்கள். மெத்த சிரமத்துக்கிடையே அந்தப் பணி நிறைவேறியது. பின்னர் அந்தக் குழியின் மீது நீண்ட மூங்கில்களைப் பரப்பினார்கள். அந்த மூங்கில்கள் பலம் வாய்ந்தவைகளாக அல்லாமல் இருந்திட கவனமாகப் பார்த்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள், காட்டில் மண்டிக்கிடந்த இலை, தழை, கொப்புகளையெல்லாம் தங்கள் மேனியில் படும் சிராய்ப்புக்கும் - குத்தும் முள்ளுக்கும் அஞ்சாமல் சேகரித்து வந்து; அந்த பலகீனமான மூங்கில் கம்புகளின் மீது, இடக்கு சிறிதுமில்லாமல் தூவி; குழியைச் சுற்றியுள்ள புல் பூண்டுகள் நிறைந்த பூமிக்கும் அதற்கும் துளி வேறுபாடுமில்லாமல் செய்தார்கள். இவ்வளவையும் முடித்துவிட்ட பிறகு; யானை பிடிக்கும் கட்டத்திற்கு வந்தார்கள். அவர்களது பல்வேறு உபாயங்களால்; சிதறியோடிய யானைகளில் ஒன்று வேகமாக விரைந்து பறந்து, தழைகளால் மூடப்பட்டு தரைபோல் காட்சி தரும் குழியில் நிலை தடுமாறிப் பெரும் பிளிறலுடன் விழுந்து விட்டது.

உழைத்து வென்றவர்களுக்குக் கேட்க வேண்டுமா, மகிழ்ச்சிக்கு? எல்லையே இல்லை எனலாம்! இருப்பினும் மகிழ்ச்சிக்கோர் எல்லை வகுத்துக்கொண்டு, குழியில் கிடந்து முழங்கிக் கொண்டிருந்த யானையை மேலே கொண்டு வர - முரட்டுக் கயிறுகள், சங்கிலிகள் அனைத்தையும் பயன்படுத்தி - இறுதியான யானை வெளிவந்த பிறகு; அதனைப் பழகிய யானைகளுடன் விட்டுப் பழக்கத் தொடங்கினார்கள்.

வைத்த குறிக்குத் தப்பாது, யானை வீழ்ந்ததிலும் - வீழ்ந்ததைக் கதை ஏற்றியதிலும் - ஏற்கெனவே பழகிய யானைகளுடன் புதிய யானையை பழக விட்டதிலும் ஏற்பட்ட பரவசத்துடன்; உழைத்தோர், ஒருவருக்கொருவர் பார்த்து புன்னகை பூத்தனர். ஒருவரையொருவர் விழிகளால் பாராட்டிக் கொண்டனர். நம் அனைவரின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்று மொழி பேசாமலே முறுவலித்துக் கொண்டனர்! மொத்த உண்மையும் அதுதானே!

அந்த நேரம் பார்த்து ஒரு காக்கை திடீரெனப் பறந்து வந்து புதிய யானையின் முதுகில் உட்கார்ந்து கொண்டு;

அந்தக் காட்டின் மரக்கிளைகள் பலவற்றில் அமர்ந்திருந்த பறவைகளைப் பார்த்துச் சொன்னது!

'பறவைகளே! பார்த்தீர்களா; என் வீர தீர சாகசத்தை! புதிய யானையை எப்படி அடக்கி ஆளுகிறேன் உணர்ந்தீர்களா; என் வலிமையை!' என உரக்கக் கத்தி கேட்டது! வேறு யாரும் யானை பிடிக்கக் காரணமில்லை; நானேதான்! என்று பலமாகச் சிரித்தது. அந்தப் பறவைகளோ பதிலுக்குச் சிரிப்பதற்கு பதிலாக - சிறகடித்துப் பறந்து போயின!

பிறகென்ன; பலநாள் பாடுபட்டவர்களை விட்டு விட்டு - ஒரு நாள் வந்து யானைமேல் அமர்ந்து கொண்டு வீராப்பு பேசும் காக்கையின் வேடிக்கையை மற்ற பறவைகள் ரசிக்க முடியுமா?

உடன்பிறப்பே, மாரிக்காலத் தொடர் கூட்டம் எனப்படும் மக்களவைக் கூட்டமும், மாநிலங்களவைக் கூட்டமும், தொடங்கிய நாள் முதல்; இரு அவைகளிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இடஒதுக்கீடு அரசியல் சட்ட திருத்த மசோதா பற்றிய குரலை ஒவ்வொரு நாளும் எழுப்பிக் கொண்டேயிருந்தனர்.

அதிலும் சிறப்பாக; மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர்கள், அ.தி.மு.க., ஜனதாதள உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர்கள் அந்த சட்டதிருத்த மசோதா பற்றிக் குரல் எழுப்பாத நாளே இல்லையென்று கூடச் சொல்லலாம்!

பிரதமரையும் மற்ற மத்திய அமைச்சர்களையும் நமது மாநிலங்களவை உறுப்பினர்கள் சந்தித்து வலியுறுத்திய வண்ணமிருந்தனர்.

பிரச்சினை எழுந்த நாட்களில் எல்லாம் மத்திய அமைச்சர் சவான் அவர்களோ; அல்லது வேறு அமைச்சர்களோ - அதனைச் சமாளித்து உறுதிமொழி அளிப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் திணறினர்!

தமிழக மக்கள் ஏமாற்றப்படுகிறார்களோ என்ற ஐயப்பாடு தோன்றவே; சமூகநீதி அணியின் தோழமைக் கட்சியினர் போராட்ட எச்சரிக்கை விடுத்தனர்.

அந்த எச்சரிக்கை குறித்து மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர் தம்பி விடுதலை விரும்பியும் - அ.தி.மு.க. உறுப்பினர் சாமிநாதன் அவர்களும்கூட கருத்து மோதல் நடத்திட, அதில் தம்பிகள் மிசா கணேசனும், வீரப்பனும் கலந்து கொண்டனர் என்பது செய்தி!

அந்தக் கருத்து மோதலையும் கடந்து இருசாராரும் இடஒதுக்கீட்டுக்கான திருத்த மசோதா விரைந்து கொண்டு வரப்பட வேண்டுமென்றே வலியுறுத்தினர்! ஆம்; மாநிலங்களவையில்தான்!

உடன்பிறப்பே; காட்டில் புதிய யானை பிடிக்கும் பணிக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டோர்; அதற்காவன அயர்வின்றி செய்து, ஒவ்வொரு நிமிடமும் உழைத்து, யானையைப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டனர்.

வேடிக்கை பார்த்தாயா; அந்தக் களிறு மீது ஒரு காக்கை வந்து உட்கார்ந்து கொண்டு - இந்த யானையைப் பிடித்த சிங்கம் நான்தான் என்று கத்துகிறது! பாவம்; தனது கத்தலை, கர்ச்சனை என்று கருதிக் கொண்டு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

29-08-1994

2172. இந்தப் பொன் இதழ் என்ன விலை?

உடன்பிறப்பே,

மூன்றாண்டுகளுக்கு முன்பு கழக ஆட்சியில் செய்தித்துறையின் மக்கள் தொடர்பு அலுவலாளர் ஒருவர், ஒரு விழாவுக்கு அழைப்பிதழ் ஒன்றுக்கு பதினெட்டு ரூபாய் கொடுத்து அச்சிட்டு வழங்கினார் என்பதறிந்து அவர்மீது விளக்கம் கேட்டு நடவடிக்கையெடுக்குமாறு கூறப்பட்டது.

ஆனால்; இன்று சென்னையில் உருவாகியுள்ள சினிமா நகர் தொடக்க விழாவுக்கு அச்சியற்றப்பட்டுள்ள அழைப்பிதழ்; அது பொன் இதழாம் - இந்தப் பொன் இதழ் என்ன விலை தெரியுமா? அதிகம் ஒன்றுமில்லை; வெறும் நூற்றி அறுபது ரூபாய்தான்! ஆம், உடன்பிறப்பே - ஒரு அழைப்பிதழ், ஒரே ஒரு அழைப்பிதழின் அடக்கம் நூற்றி அறுபது ரூபாய்! இந்தப் புன்னகை என்ன விலை? என்று பாடியது போல இந்தப் பொன் இதழ் என்ன விலை? என்று பாடத் தோன்றுகிறதல்லவா உனக்கு!

அரசின் விழாக்கள், அரசின் சார்பில் உள்ள துறைகள் நடத்தும் விழாக்கள், சிக்கனமாக நடைபெற வேண்டுமென்ற கொள்கையைச் செம்மையாகவும், சீராகவும் கடைப்பிடித்த காரணத்தினால்; கழக அரசு அழைப்பிதழ் அச்சடிப்பதுகூட ஆடம்பரமாக இருத்தலாகாது என அறிவுறுத்தி, அதனை நடைமுறைக்கும் கொண்டு வந்தது.

இன்றைக்கு ஒரு அழைப்பிதழின் விலையே நூற்றி அறுபது ரூபாய் என்றால்; என்னதான் நடக்கும் நடக்கட்டுமே! என்று இறுமாப்புடன் நின்று கொண்டு, நான் ஆணையிட்டால்... எனும் இருவார்த்தைகளை மட்டுமே ஆணவத்துடன், முழக்கிக் கொண்டிருக்கும் இந்த முதல்வரைப் பார்த்து யார்தான் என்ன செய்ய முடியும்! பிரபாகரராவ் இருக்கும் வரையில்; பிரதமர்தான் என்ன செய்யத் துணிந்து விடுவார்!

அதனால்தானே; நேற்றுவரை நிமிர்ந்து நின்ற தமிழ்நாட்டு மனிதன்கூட மனிதன் மாறிவிட்டான் எனும் பாட்டு வரிக்கு இலக்கணமாக நின்று இளித்துக் கொண்டிருக்கிறார். பூமாலை நீயே புழுதி மண் மேலே வந்தேன் தவழ்ந்தாய்? என ஜனநாயகத்தைப் பார்த்துக் கேட்டுக் கண்ணீர் விட வேண்டியிருக்கிறது!

சினிமா நகர் தொடக்க விழாவில் - பிரபுதேவா நடனமாம்! முன்னுக்கு வந்துள்ள நடிக மணி - நடன மணி! வாழ்த்துக்கள்! எனினும் அவர் இந்த விழாவில் நடனமாட வேண்டி; அவரது உடைக்கு மட்டும் சிறப்புத் தொகையாகச் செலவு ஐம்பத்தி ஐயாயிர ரூபாய்!

போனால் போகட்டும் போடா! என, இரு கைகளையும் விரித்து உயரத்தூக்கி வங்கக் கடல் நோக்கியவாறு விக்கி விக்கி அழத் தோன்றுகிறதோ! அழு! இளி! அஞ்சு! குனி! பிதற்று! என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், தொங்கும் நரம்பின் துகள்களாம் தமிழ் இனத்தைப் பார்த்துப் புயலெனச் சீறுவதின் ஓசை காதில் விழுகிறதா?

விழாவில் முதலமைச்சர் பரிசுகளை எவ்வாறு அளிப்பது - அவர் எங்கே நிற்பது? பரிசு பெறும் பரிதாபத்திற்குரியோரின் இடம் எது? எப்படி அவர்கள் பரிசுகளைப் பெறுவது - என்பதற்கோர் ஒத்திகை முதல்நாளே நடைபெற்று முடிந்துள்ளது. ஒத்திகை நிகழ்ச்சிக்கு முதல்வருக்கு பதிலாக செயலாளர் நடித்தாராம்! பாவம்; செயலாளரின் சின்னச் சின்ன ஆசை! சிறகடிக்கும் ஆசை! இப்படியாவது நிறைவேறியது!

இந்த விழாவுக்கென சென்னையில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலர் மட்டுமல்லாமல்; மாநில முழுவதுமுள்ள மக்கள் தொடர்பு அலுவலர்கள் அனைவரும் சிறப்பு டியூட்டி சென்னையிலே வழங்கப்பட்டு, அவர்களுக்கு விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் பணி அளிக்கப்பட்டுள்ளது. கல்யாண சமையல் சாதம்; கறிகளும் பிரமாதம்! விருந்து மண்டபத்தில் பி.ஆர்.ஓ.க்களின் இனிய எழுச்சிமயமான கோரஸ் இப்படிக் கேட்டிருக்கும்.

அதிலும்கூட பரிதாபம்; பார்த்தால் பசி தீரும்! எனப் பாடிவிட்டுப் போன விருந்தினர்கள் எத்தனை பேரோ? நெய்வேலி விழாவுக்கு வந்துபோன மத்திய அமைச்சர் பாஞ்சாவைப்போல! மொத்தச் செலவு இருபத்தியோரு கோடி என்கிறார்கள்!

ஆனால் பதின்மூன்று கோடியைத் தாண்டியிருக்காது என்பது நடுநிலையாளர் கணிப்பு! எஞ்சிய தொகை; எங்கே? எங்கே? பாட்டிலேயே பதில் சொல்வதென்றால்;

"ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக் கோனே!
காசு காரியத்தில் கண் வையடா; தாண்டவக் கோனே!
கட்டி அழும்போதும் தாண்டவக் கோனே;
பணப்பெட்டி மேலே கண் வையடா; தாண்டவக் கோனே!"

ஆமாம் உடன்பிறப்பே; சட்டி சுட்டதடா! கை விட்டதடா! என்ற பாட்டை அவர்கள் பாடப் போகும் நாள் வரையில்; இப்படித் தாண்டவக்கோன் பாட்டைத்தான் பாடிக்கொண்டிருப்பார்கள்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

01-09-1994

2173. கடும் பயணம் தொடருவோம்!

உடன்பிறப்பே,

இடஒதுக்கீடு சமூக நீதிக்கான அடிப்படையில் அரசியல் சட்டத்திருத்தத்திற்கு தேசியக் கட்சிகளின் ஆதரவு கோரி கடந்த ஜூன் திங்கள் 27-ஆம் நாள் நான் எல்லா தலைவர்களுக்கும் கடிதம் எழுதி அவர்களும் ஆதரவு தருவதாக உடனடியாக எனக்கு பதில் கடிதங்கள் தீட்டியதை மறந்திருக்க மாட்டாய்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் - பாரதீய ஜனதாக் கட்சியின் முன்னணித்தள நாயகர்களில் ஒருவருமான திரு. வாஜ்பாயி அவர்கள் எழுதியுள்ள பதில் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

B.J.P. has all along been a supporter of Reservations for the Backward Classes, S.C. & S.T. and shall continue to support any measure that is for their upliftment

அதாவது; பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான இடஒதுக்கீட்டை பாரதீய ஜனதா எப்போதுமே ஆதரிக்கிற கட்சியாகும் எனக் கூறியதோடு அந்த மக்கள் மேம்பாட்டுக்காக எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் பா.ஜ.க.வின் ஆதரவு உண்டு என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறே அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற இரு அவைகளிலும் தங்கள் வாக்குகளை இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக அளித்துள்ளனர்.

ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னைக்கு வந்த பா.ஜ.க. தலைவர் அத்வானி அவர்கள்; இடஒதுக்கீட்டில் 50 சத விகிதத்திற்கு மேலாக வழங்குவது என்ற நிலையை, தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களைத் தவிர்த்து வேறு எந்த

மாநிலத்திலும் ஏற்றுக் கொள்ள இயலாதென்றும் - அந்தந்த மாநில நிலைமைகளுக்கேற்ப இடஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் உரிமையை மாநிலங்களுக்கே வழங்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற கோரிக்கை பா.ஜ.க.வுக்கு உடன்பாடல்ல என்றும் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கண்டிப்புடன் கூறியிருக்கிறார்.

செப்டம்பர் முதல்நாள் முரசொலி தலையங்கத்தில் கோடிட்டுக் காட்டியிருப்பது போல; தமிழகத்திலும், கர்நாடகத்திலும் அரசியல் காரணங்களுக்காக பா.ஜ.க. இப்படியொரு நிலையை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும்.

பா.ஜ.க.வுக்கு இந்தியா முழுவதுமுள்ள மாநிலங்கள் அனைத்திலும் - பெருமளவிலோ, அல்லது சிறிய அளவிலோ, அமைப்புகளும்; அவற்றின் வாயிலாக அந்தக்கட்சி, காலூன்றுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அக்கட்சி, இந்த இடஒதுக்கீட்டுப் பிரச்சினையை அரசியல் ரீதியாக மட்டுமே அணுகக்கூடும்!

ஆனால் நமது தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில்; அகில இந்திய அளவிலான கட்சியாக இது இல்லாவிடினும் - சமுதாய ரீதியான இடஒதுக்கீட்டுத் தாக்கம், குமரி முதல் இமயம் வரையில் உள்ள எல்லா மாநிலங்களிலும் அழுத்தம் பெற்று, அந்தந்த மாநிலங்களிலுமுள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களும் கல்வி வேலை வாய்ப்புகளில் மாநில அளவில் இடஒதுக்கீடு உரிமை பெற்றிட வேண்டுமென்றும் - மாநில அரசு, மாநில அரசு நிறுவனங்களில் மட்டுமின்றி, மத்திய அரசு அலுவலகங்கள், நிறுவனங்களிலும், கல்விக் கூடங்களிலும் இடஒதுக்கீடு உரிமை வந்தாகவேண்டுமென்றும் பல ஆண்டுக் காலமாக வலியுறுத்தி வருகிற சமுதாய மறுமலர்ச்சி இயக்கமாகும்.

ஆம்; 1973ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதே அலகாபாத்தில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய நான்; மத்திய அரசு அலுவலகம், மற்றும் மத்திய அரசு நிறுவனங்களில் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து விரிவாக உரையாற்றியிருப்பதிலிருந்தே; தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல் - இந்தியா முழுதும்; அதுவும் மாநில அளவில்

மட்டுமல்லாமல் மத்திய அளவிலும் - சமூகநீதி நிலை நாட்டப்பட வேண்டுமென்பதில் கழகத்திற்குள்ள சமுதாய ரீதியிலான அக்கறை, நன்கு தெளிவாகக்கூடிய ஒன்றாகும்! அலகாபாத் மாநாட்டை முன்னின்று நடத்திய ராஜ்நாராயணன் போன்றவர்கள் 1977-ல் ஜனதா ஆட்சியில் இடம் பெற்றதால்தான் மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டது என்பது வரலாற்றுப் பேருண்மை!

அதன் பரிந்துரைகள் நடைமுறைக்கு வர வேண்டுமென்பதில் - தேசிய முன்னணி ஆட்சியில் பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்குத் துணை நின்றது தி.மு.கழகம் என்றால்; திராவிட இயக்கத்தின் சமுதாயக் கருத்துக்களுக்கு அரசியல் துணையுடன் வெற்றி மகுடம் சூட்ட வேண்டுமென்பதற்காகத்தான்!

இப்போது எனக்கு வியப்பு என்னவென்றால்; 50 சதவிகிதத்துக்கு மேல் அது 69 அல்லது 68 என்ற விகிதாச்சாரம் எல்லாம் முறையே தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களுடன் சரி; அதற்கு மேல் மற்ற எல்லா மாநிலங்களுக்கும் இடஒதுக்கீடு நிர்ணயிக்கும் உரிமை, அரசியல் சட்டத்தில் இடம்பெறக் கூடாது - அதை ஆதரிக்கமாட்டோம் என்று பா.ஜ.க. சார்பில் அத்வானி அவர்கள் அடித்துச் சொல்வதுதான்!

இதைப் போலவே எனக்கு மற்றொரு வியப்பு; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் ஏறத்தாழ அத்வானியின் குரலில் பேசுவதுதான்!

மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் எவ்வித மாறுபாடும் இல்லாத மார்க்சிஸ்ட் கட்சி; முதலில் இந்த ஒரு இடஒதுக்கீட்டு அதிகாரத்தை மாநிலங்கள் பெறுமளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதை ஏற்கத் தயங்குவது ஏனோ என்று புரியவில்லை!

இப்படியொரு சூழலில்தான்; சமூகநீதிப் பயணத்தில் இன்னும் பல வெற்றிகளைக் காணவேண்டிய அளவில் நாம் இருக்கிறோம்!

காண்போம்; அதற்கெனக் கடும் பயணம் தொடருவோம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

02-09-1994

2174. சூரிய விளக்கெடுத்து, சுடர்முகம் தூக்கிப் புறப்படு

உடன்பிறப்பே,

மதுரை மண்டல மாநாட்டைத் தொடர்ந்து முப்பெரும் விழா!

மண்டல மாநாடு மதுரையில் மட்டுமே நடைபெற்றது. முப்பெரும் விழாவோ, எழுச்சியும் உணர்ச்சியும் கொண்ட தமிழன் எங்கெல்லாம் இருக்கிறானோ; அவன் வாழும் இடமெல்லாம் கொண்டாடப்பட வேண்டும்.

இதைத்தான் மதுரை மாநாட்டு நிறைவுரையில் நான் சுட்டிக்காட்டி; செப்டம்பர் 15 முதல் தொடங்கி செப்டம்பர் 30-ந் தேதி முடியவோ, அல்லது அதற்கு மேலுமோ பெரியார், அண்ணா, கழகம் பிறந்த முப்பெரும் விழாவை ஒவ்வொரு ஊரிலும் கொண்டாடி மகிழ்வதோடு - கொள்கை விளக்கங்களும் அளித்து - அத்துடன் கொள்ளையடிக்கும் ஆட்சியை அடையாளங்காட்டி, அதனைக் குப்பையில் வீசியெறியவும் வழிவகை காண வேண்டுமென்று உன்போன்ற உடன்பிறப்புக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

போக்க வேண்டிய அழுக்குகளையும் குப்பைகளையும் போக்கிடப் போகிப் பண்டிகை கொண்டாடி; அதன் பிறகு வீட்டிலே, தைத் திருநாளில் பொங்கல் விழா எடுக்கிறோம்.

அதுபோல இல்லாவிடினும்; நாம் முப்பெரும் விழா எடுப்பதின் மூலம், நாட்டில் படிந்துள்ள குப்பைகளையும் கறைகளையும் கோடி கோடி ஊழல்களையும் களைந்தெறிய முற்படுவோம்.

பொங்கல் நாளில் முதலில் வீட்டைத் தூய்மையாக்குதல் - பிறகு விழா காணுதல்! முப்பெரும் விழாவிலோ; முதலில் விழா! பிறகுதான் தூய்மைப்பணி! காரணம்; அந்தப் பணியாற்றும் உரிய காலமாக முப்பெரும்விழாக் காலம் அமைகிறது! அமையாவிடினும் ஆங்காங்கு நாம் அமைத்துக் கொண்டாக வேண்டும்! பணியாற்றும்

காலமாக மட்டுமின்றி; படைக்கலனாகவும் நமக்கு வாய்த்திடுவது, முப்பெரும் விழா என்பதினாலேதான், உவகை ததும்ப விழாவையும் கொண்டாடிக்கொண்டு; அதே நேரத்தில் ஊழிப் பெருவெள்ளமாய் பெருக்கெடுத்திடும் ஊழல்களை ஓழித்திட ஊரெல்லாம் சென்று உரத்த குரல் எழுப்புக என மதுரை மாநாட்டில் உடன்பிறப்புக்களைக் கேட்டுக் கொண்டேன்.

ஊழல் என்பது; பாடுபட்டுழைத்திடும் மக்களின் பணம், கேடுகெட்டோர் இல்லங்களில் மலையாகக் குவிகிறதே; அது மட்டுந்தானா?

பெரியார் பெயரைச் சொல்லிக்கொண்டு - பெரியாரின் வழிவந்த பரிணாம வளர்ச்சியின் அடையாளச் சின்னம் என பிதற்றிக்கொண்டு - வேப்பஞ்சேலை கட்டி ஆடுவோரை ரசிப்பது; மண்சோறு தின்னும் மந்திரிகள் கண்டு மகிழ்வது; காவடியெடுப்போர் பக்தியினை மெச்சிப் பரவசமுறுவது; கடைசியாகத் தானே சங்கரமடம் சென்று சேவித்து உருகுவது; இவையனைத்தும்; ஏன்; இன்னமும் பல பகுத்தறிவுக்குப் புறம்பான செயல்கள், பாமரரை ஏமாற்றும் காரியங்கள், ஊழல் பட்டியலில் இடம் பெறாதவைகளா?

அண்ணாவுடன் பழகி அறிய முடியாத அகவையுடையோராக இருக்கலாம்; தவறில்லை! ஆனால் அண்ணாவின் அருகில் இருந்து இயக்கத்தின் வளர்ச்சிக்கான ஆக்கபூர்வப் பணிகளுக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்ததே நான்தான் என்று வஞ்சகர் சிலர் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அமைதியின் உருவங்கள் எனவும் அன்பின் வடிவங்கள் எனவும் நடித்திடும் நாடகமும் ஓர் பெரும் ஊழல்தானே!

அண்ணா அவர்கள், பெரியார் அவர்களின் வழி நின்று அமைத்திட்ட இந்தக் கழகத்தை ஊனப்படுத்திட உன்மத்தர் சிலர், உருட்டு விழி காட்டுவதும் - புரட்டு மொழி பேசுவதும் கூட; அவர்தம் நெஞ்சில் ஒன்று! நேரில் ஒன்று! எனப்படும் நேர்மை கெட்ட ஊழல்தானே!

கற்கண்டாய், தேன்பாகாய், கட்டித் தங்கமாய், கனகமணியாய் - இந்தக் கழகத்தைக் கண்டு, இதனை நம் கரத்தில் தந்து விட்டுப் போனார் அண்ணா!

இதனைக் காப்பதற்கு மனமின்றி, காத்திடும் கரங்களில் தீ மூட்டும் நோக்குடன், போக்குமாறிப் புழுதியள்ளித் தூற்றிடும் புல்லர்களோ சிலர் புற்றுப்பாம்பாய் நெளிந்தோடிக் கொண்டுள்ளனர்.

அந்த ஊழல்புரியினர் போடும் உத்தமர் வேடத்தைக் கலைத்து உண்மை உருவை உலகிற்குக் காட்டிட வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறதல்லவா!

இத்தனையும் விவரிக்கிறோம் - விளக்குகிறோம்; வீண் ஆரவாரமாக அல்ல; வெளிச்சம் தரும் ஆதாரங்களுடன் என்கிறபோதுதான், வெகுண்டெழுகிறது, தம்மை நமக்கு விரோதிகளாக ஆக்கிக் கொண்ட கூட்டம்!

எத்தனையோ இடையூறுகள்! காவல்துறையினர் சிறிது காலம் அவர்கள் ஏவல் கேட்பதற்குத் தயாராகத் தலைவணங்கிக் கிடக்கிறார்கள் என்ற தைரியத்தில்; வழக்கமாக ஆண்டுதோறும் நாம் எடுக்கிற முப்பெரும் விழாவுக்கே தொல்லை கொடுக்கத் தயாராகி விட்டார்கள்! அதுவும்; தலைநகரிலேயே!

“தடைக்கற்கள் உண்டென்றாலும்
தடந்தோள்கள் உண்டெனச் சிரிப்போம்”

எனப் பாவேந்தர் பாடியது; மெட்டுப் போட்டுக் கச்சேரி செய்வதற்காக அல்ல! எட்டுத் திக்கும் தமிழர் வீரம் எப்படி முழங்கியதோ; அப்படி முழங்கிடுவதற்காகத்தான் என்பதைப் புரியாதார்க்குப் புரிய வைப்போம்!

17-ந் தேதி சென்னை ராயபுரம் அறிவகம் அருகில் முப்பெரும் விழாவின் நிறைவு நாள் விழா! அன்றுதான் விருதுகள் வழங்கும் விழாவும்கூட!

செப்டம்பர் 15, 16, 17 ஆகிய நாட்களில் அண்ணா அறிவாலய வளாகத்தில் இலக்கிய அணி, இளைஞர் அணி, மகளிர் அணியினர் நடத்தும் நிகழ்ச்சிகள் - கருத்தரங்கம் - வழக்காடு மன்றம் - பட்டிமன்றம் - என் தலைமையில் கவியரங்கமும் கூட! பாடுவோர் பட்டியல் விரைவில்!

நமது இசை முரசு நாகூர் முரசு ஒலித்திடக் கேட்போம் விழா நிகழ்ச்சியில்!

வெளியூர்களில் இருந்து விழா காண விரும்பினால், அப்படி வர விரும்பும் உன்போன்ற உடன்பிறப்புகள், 17-ந் தேதியன்று சென்னை வந்தால் போதுமானது!

15, 16 ஆகிய நாட்களில் ஒவ்வொரு ஊரிலும், நகரிலும், வீதிகளிலும், ஆங்காங்கு முப்பெரும் விழாவின் எழுச்சி முகிழ்ந்திட வேண்டும்!

அது தலைநகர் விழா 17-ந் தேதிக்குப் பிறகும் தமிழர் வாழும் இடமெல்லாம் அத்திங்கள் முடிய - ஏன், முடிந்த பிறகும் தொடர்ந்திடல் வேண்டும்!

தமிழர்க்குற்ற துன்பங்கள் தொலைந்திடல் வேண்டுமன்றோ; அதனால் உடன்பிறப்பே; தொங்கும் நரம்பின் தூள்களாய் - பொட்டுப் பூச்சிகளாய் - புன்மைத் தேரைகளாய் - இனித் தமிழ் மக்கள் வாழத் தயாராயில்லை; என்பதை விளக்கிட சூரிய விளக்கெடுத்துச் சுடர் முகம் தூக்கிப் புறப்படு!

அனபுள்ள,

மு. கருணாநிதி

06-09-1994

2175. காவல்துறை, இனியாவது கவனத்தில் கொள்ளுமா?

உடன்பிறப்பே,

சமூகவிரோதிகளான கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கடத்தல்காரர்கள், கற்பழிப்போர் எனப் பலவகைப்பட்டோர் கண்டு பிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் நடுநிலையாளர்களிடம் இருவேறு கருத்துக்களுக்கே இடம் இருக்க முடியாது. ஆனால் அவர்களை அடையாளம் காட்டுவதிலும், கண்டுபிடித்துக் கொடுப்பதிலும் ஆர்வமும் அக்கறையும் காட்ட வேண்டிய பொதுமக்கள்; சட்டத்தையே தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு - அவர்களே தீர்ப்பும் வழங்கி - தண்டனைகளையும் நிறைவேற்றுவது என்பது; சில நேரங்களில் நியாயமானதாகத் தெரிந்தாலும் - அது தொடர்கதையாகி விடும் போது தொல்லைகள் பல வந்து சேரும் என்பதை அலட்சியப்படுத்தி விடக்கூடாது.

இதோ பத்திரிகையில் வந்த ஒரு செய்தி :-

கடந்த சில நாட்களுக்கு முன்பு அரியலூர் அருகே வி.கைகாட்டியில் பேருந்தில் கொள்ளையடிக்க முயன்ற இரண்டு கொள்ளையர்களை பொது மக்களே அடித்துக் கொலை செய்து பிணங்களை தெருவில் போட்டுச் சென்றனர். இதுதவிர மேலும் இருவர் இந்த சுற்று வட்டாரப் பகுதியில் எரித்துக் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு ஜெயங்கொண்டம் அருகே சோழமாதேவியில் ஆட்டோவில் சந்தேகத்துக் கிடமாக சென்ற மூவரை அடித்து உதைத்து போலீசில் ஒப்படைத்தனர். ஆட்டோவும் எரிக்கப்பட்டது.

ஆனால் இவர்கள் திருடர்கள் அல்ல என்பது போலீஸ் விசாரணையில் தெரிந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மற்றொரு கொலை சம்பவம் நடந்தது. பெரம்பலூரை அடுத்து அரும்பாவூர் அருகேயுள்ள அன்னமங்கலம் கைகாட்டி அருகே ஆறு பேர் சென்றனர். அவர்கள் இந்தியிலும், இந்தி கலந்த தமிழிலும் பேசினர். அவர்களின் நடவடிக்கையில் சந்தேகப்பட்ட ஊர்மக்கள் அவர்களை விசாரித்தனர். அவர்களிடமிருந்த பையில் அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்கள் இருந்தன. இதைக் கண்டதும் மக்கள் உஷாரடைந்தனர். மர்ம ஆசாமிகள் ஓடத் துவங்கினர். பச்சைமலை காட்டுப் பகுதிக்குள் சென்றனர். அதில் ஒருவரை மட்டும் பொதுமக்கள் பிடித்தனர். மற்றவர்கள் தப்பி விட்டனர்.

பிடிபட்ட ஆசாமிக்கு 30 வயது இருக்கும் அவன் வைத்திருந்த பையில் ஆட்டுக்கறி இருந்தது. அவனை பொதுமக்கள் கூட்டம் இழுத்துக் கொண்டு வேப்பந்தட்டை வந்தது. அங்கே ஒரு வீட்டில் வைத்து அவனிடம் விசாரித்தனர். அவன், 'நாங்கள் பெரிய கொள்ளைக் கூட்டம். என்னை நீங்கள் ஏதாவது செய்தால் என் கூட்டத்தினர் வந்து உங்களை அழித்து விடுவார்கள்' என்றானாம். இதை கேட்டதும் பொது மக்களுக்கு மேலும் ஆத்திரம் ஏற்பட்டது. கொள்ளையனை அடித்து நொறுக்கினர். அவன் மயங்கி கீழே விழுந்ததும் வேப்பந்தட்டை பாலம் அருகே தரதர என்று இழுத்துச் சென்றனர். சாலையில் கிடந்த எள்ளுச் செடிகளை அடுக்கி அதன் மேல் கொள்ளையனை தூக்கி வீசி தீ வைத்து எரித்துக் கொலை செய்தனர்.

துடிப்புடன் படிப்பதற்கு இந்தச் செய்திகள் மிகுந்த பரபரப்பை ஊட்டுவனவாக இருக்கலாம்.

ஆனால் சோழமாதேவியில் பொது மக்களால் பிடிக்கப்பட்ட மூவரைக் கொள்ளையர்கள் என்று போலீசார் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த விசாரணை முடிவுக்கு முன்பே அவர்கள் ஏறி வந்த ஆட்டோ அந்தப் பொதுமக்களால் எரிக்கப்பட்டு விட்டது; என்று செய்தியில் காணப்படுகிறது!

அன்னமங்கலத்துப் பொதுமக்களோ; ஒருவனைக் கொள்ளையன் எனப் பிடித்து அவனை வேப்பந்தட்டை எனும் ஊர்வரையில் இழுத்து வந்து, அவர்களே விசாரணை நடத்தி அவனை அடித்துக் கொன்று எள்ளுச் செடிகளைப் பரப்பி எரித்தும் இறுதிக் கடன் முடித்துள்ளனர்.

அந்தப் பொது மக்கள் செய்தது நியாயமாகத் தோன்றினாலும் - இதே நியாயத்தை வேறு சிலர், தங்களின் அநியாயத்துக்கு முன் மாதிரியாக எடுத்துக்கொண்டு, தங்களுக்குப் பிடிக்காத ஒரு நபரைக் கூட இத்தகைய முடிவுக்கு ஆட்படுத்த வழி ஏற்பட்டுவிடுமல்லவா?

இதுபோன்ற நிகழ்வுகளுக்கு என்ன காரணம் என்பதை சிந்திக்க வேண்டியது பொறுப்புடையோர் கடமையாகும்.

மின்னல் வேகத்தில் நடைபெற்று விடுகிற வன்முறைச் சம்பவங்களுக்கு, வழிப்பறிகளுக்கு, கொலைகளுக்கு, கொள்ளைகளுக்கு - போலீசார் என்ன செய்யமுடியும் என்பது ஒரு வாதமாக இருந்தாலும்கூட; அதற்காக அந்த வாதத்தையே வலிவான துணையாகக் கொண்டு, போலீசாரும் பொறுப்பற்று நடந்து கொள்வது நாட்டுக்குப் பேராபத்து என்பதை மறந்து விடக்கூடாது!

எனவே, இந்த நேரத்திலும் விழிப்புடன் இருந்து கடமையாற்றவும் - அந்தக் கடமையையும் நியாயபூர்வமாகவும், பாரபட்சமற்ற முறையிலும் சுதந்திரமாகவும் ஆற்றவும் - போலீஸ் துறை முன்வரவேண்டும்!

கட்சிகளின் ஆட்சிகள் ஒன்று மாறி மற்றொன்று வரலாம் - ஆனால் ஆட்சியின் துறைகளில் அலுவலாற்றுவோர், துலாக்கோலின் முள் போலத் தூய்மையான வகையில் நடுநிலை பிறழாதிருக்க வேண்டும்!

ஆட்சியிலிருப்பவர்களே; தங்களைச் சுற்றி அடியாட்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், என்ற பெயர்களில் தனித்தனிக் குண்டர் குழுக்களைக் கொழுக்க வைத்து, தமது பகைவர்கள் மீது ஏவி விடுகின்ற சமூக விரோதச் செயல்களைப் போலீசார், கண்டும் காணாமல் போக வேண்டியிருக்கிறது! இல்லையேல் அந்தக் குழுவில் அவர்களும் ரகசியமாக இடம் பெற வேண்டியிருக்கிறது!

இதுபோன்ற விரும்பத்தகாத - வெறுக்கத்தக்க விபரீதமான சூழ்நிலைகள்தான் - அரியலூர், அன்னமங்கலம், வேப்பந்தட்டை சம்பவங்களுக்குக் காரணமாகி விடுகின்றன என்பதை இனியாவது காவல்துறை, தனது கவனத்தில் கொள்ளுமா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

07-09-1994

2176. எந்நாளும் அண்ணன் பிறந்தநாளே!

உடன்பிறப்பே,

தமிழர் வாழும் இல்லமெல்லாம், தமிழ் வாழும் இடமெல்லாம், இன்று அண்ணா வாழ்க எனும் முழக்கம்தான்! தமிழர் உள்ள பகுதியெல்லாம் - அவர்தம் உள்ளமெல்லாம் அண்ணா வாழ்க எனும் முரசம்தான்! அழைக்கின்றார், அழைக்கின்றார் என்ற பாட்டை எத்தனை ஆண்டுகளாகப் பாடுகிறார் மேடைகளில் நாகூர் அனிபா! அந்த இசை முரசின் கீதம், வரும் 17-ஆம் நாளன்று இராயபுரம் அறிவகத்திற்கு முன்னால் நமது பேராசிரியர் தலைமையில் அலை மோதும் கூட்டத்துக்கிடையே எழும்போதும் புதியதோர் எழுச்சி கீதம் கேட்கின்ற புதிய தெம்பன்றோ எழும் நெஞ்சில்! நாற்பது ஆண்டுகளாக நமது செவிகளில் ஒலித்திடும்;

அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா

இன்னமும் சலிப்புதட்டவில்லை - சலிப்பு தட்டாது - காரணம் என்ன? அண்ணா அழைப்பது வெறும் ஆரவாரத்துக்கல்லவே! வீண் ஆடம்பரக் காட்சி காண அல்லவே! சமஸ்தானங்கள் நடத்த முனையும் சாதீய சாம்ராஜ்ய சிருஷ்டிக்காக அல்லவே! பொய் விற்றுப் பிழைக்கும் பொல்லாதார்க்குப் புகழ் மகுடம் சூட்டுவதற்காக அல்லவே! பிறகேன் அழைக்கின்றார்?

அருமைமிகு தாயகத்தைக் காத்திடத்தான் இன்றே
அழைக்கின்றார், அழைக்கின்றார் அண்ணா

எதற்காக அழைக்கின்றார்?
அழைத்துக் கொண்டே இருக்கின்றார் புரிகிறதா?

அருமை மிகு தாயகத்தைக் காத்திட!
தாயகத்திற்கு என்ன வந்தது இப்போது?

இன்னும் என்ன வேதனை வரவேண்டும்?
என்ன சோதனை வரவேண்டும்?

மண் மேட்டுக் குப்பையென்றாலும் - மாட மாளிகையின் தளமென்றாலும் - மடியில் சாய்ந்து பலரின் பிடியில் அடங்கும் கோதையொருத்தி, மங்கையர் கற்புக்கு இலக்கணம் வகுத்துப் புத்தகம் எழுதும் விசித்திர வேடிக்கை போலவும் - துறந்தேன் இல்லறமென்று தூய காவியுடுத்தித் திரியும் சடாமுடிச் சந்நியாசி; இடையிடையே துறவறம் துறந்து கடைவிழியார் இடைநெளிவில் இன்பம் துய்த்து விடிந்த பின் இளங்காலையில் ஆற்றோரம் நின்று; பெண்பற்று, மண்பற்று, பொன்பற்று கூடாது என அறிவுரை ஆற்றுவது போலவும் உன்னை விற்காதே! என்று எத்திரவு மொழி உதிர்த்த பாவேந்தரின் கருத்தையும் தூரத் தள்ளிவிட்டு; எதிரிகள் இட்டழைத்த லட்சங்களுக்கும், துரோகிகள் தொட்டணைத்துத் தந்த பெருந் தொகைகளுக்கும் விலைபோன கதை; ஊரறிந்த கதையான நிலையில் கோபுரமேறி நின்று கொள்கை முழக்கம் செய்கிறார்களே; அவர்களிடமிருந்து தாயகத்தைக் காத்திடத்தான் அழைக்கின்றார் அண்ணா!

ஊழிப் பெருவெள்ளமாய் ஊழல் பெருகிடவும் - கொலைகள் நித்திய நிகழ்ச்சிகள் ஆகிடவும் - கொள்ளைகள் அன்றாடச் செய்திகள் ஆகிடவும் - காற்றை சுவாசிப்பதற்கு மட்டும் தற்போதைக்கு லஞ்சம் தரவேண்டியதில்லை; அதுவும் எதிர்காலத்தில் எத்தனை லட்சம் அல்லது கோடி தர வேண்டியிருக்குமோ; இப்போது கணக்கிட இயலாது என்கிற அளவுக்கு நாற்றமெடுத்துப் புழுபுழுத்துப் போய்க் கிடக்கிறது நமது தாயகம்!

அருமைமிகு தாயகமாக இல்லை இப்போது! செந்தமிழ் உணர்வெனும் செந்தாமரை மொட்டுக்களை - ஜனநாயகத் தளிர்கொடிகளை - மக்கள் நலன்கள் எனும் மலர்க் கூட்டத்தை - நேர்மை, நியாயம், நெறிமுறைகளை முரட்டுக் கால்களால் மிதித்து நகரும் எருமை மிகு தாயகமாகவன்றோ இருக்கிறது இன்று!

வளர்ச்சித் திட்டம் என்கின்றார்; வளைக்கின்றார் சொந்த வளர்ச்சிக்கு; ஊழல் வலைதனை ஒழுங்காகப் பின்னி வீசி!

வளர்க்கிறோம் கல்வியென்று கூறி; கலை மகளாம் சரசுவதியின் அருள்கிட்ட வாரியிறைத்திடுக லட்சங்களை

என்கின்றார் - வறியோர் எங்கு போவார்? வதைகின்றார் - பின்னர் சிதையில் எரிகின்றார்!

சுயநிதிப் பள்ளியென்றும், கல்லூரியென்றும் - சுருட்டுகின்றார் கோடிக்கணக்கில் - அவர்தம் புரட்டுக்குத் துணை நின்று உரிய பங்கு பெறுகின்றார் ஆட்சியாளர் - இந்தக் கொடுமை மாற்றிடவும், கல்வி ஓடையில் புதிய முதலைகளாய் முளைத்துள்ள சுயநிதியாளர் ஆடும் சொக்கட்டான் சூதாட்டத்தை அகற்றிடவும் -

"எல்லாரும் வாழ்வு பெற்று
எல்லாரும் இன்புற்று
இல்லாதார்க்கும் ஏற்றமளித்து
நல்லார்க்கே நாட்டில் இடம் என்று
நிலைநாட்டும் செயலினை ஆற்றிடத்தான்"

அழைக்கின்றார் அண்ணா எனத் தெளிவடைந்து பணிபுரிந்திட வேண்டாமோ? எனவேதான் உடன்பிறப்பே;

"பகைமை, பணிந்தோட -
துரோகம் தூளாக -
ஊழல் ஒழிந்திட -
வன்முறை வீழ்ந்திட -
உரிமைகள் வென்றிட -"

ஆற்றிடுக பணியென்று அண்ணா அழைக்கின்றார் - அந்த நாளை செப்டம்பர் 15 என்று மட்டுமே என எண்ணாமல்; எந்நாளும் அண்ணன் பிறந்த நாளே! அண்ணா அழைக்கும் நாளே! எனக்கொண்டு, கொடி உயர்த்து! கொள்கை முழக்கு!

அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா!

அதன் பொருள் புரிந்து வருக உடன்பிறப்பே, வருக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

15-09-1994

2177. கிழக்கு வெளுக்கப் போகிறது!

உடன்பிறப்பே,

பெரியார், அண்ணா, கழகம் பிறந்த முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் ஏறத்தாழ ஒரு திங்களுக்குக் குறைவில்லாமல் தமிழக முழுதும் எழுச்சியுடன் நடத்தப்பட வேண்டுமென்றும், அந்த நிகழ்ச்சிகளையொட்டி - கழக அமைப்புகள் நடத்தும் பொதுக் கூட்டங்களில் நாட்டில் நடைபெறும் ஊழல்கள், சட்டம் ஒழுங்கு சீர்குலைவுகள், ஜனநாயகத்தின் கழுத்தை அழுத்தும் சர்வாதிகாரச் சேட்டைகள் மற்றும் பல மக்கள் விரோதச் செயல்கள் குறித்து கழக சொற்பொழிவாளர்கள் விளக்கங்கள் தந்து பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் உள்ள மக்களை விழிப்பு கொள்ளச் செய்ய வேண்டுமென்றும்; ஊழல் ஆட்சியை எதிர்த்து நடத்த இருக்கும் மக்கள் கிளர்ச்சிக்கு மக்களைத் தயார்படுத்துவதே முப்பெரும் விழா நிகழ்ச்சிகளின் பயனாக இருக்க வேண்டுமென்றும் கழகம் எடுத்துள்ள முடிவுக்கிணங்க; ஊழல் ஆட்சியை எதிர்த்து நடத்த இருக்கும் மக்கள் கிளர்ச்சிக்கு மக்களைத் தயார்படுத்துவதே முப்பெரும் விழா நிகழ்ச்சிகளின் பயனாக இருக்க வேண்டுமென்றும் கழகம் எடுத்துள்ள முடிவுக்கிணங்க; நான் விடுத்த வேண்டுகோளையேற்று கழக அமைப்புகள் விரைந்து செயல்படுவதறிய மிக்க மகிழ்ச்சியுறுகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வரிசையாக வகுக்கப்பட்டுள்ள தொடர் நிகழ்ச்சிகளையும் - அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிற சொற்பொழிவாளர்களையும் பற்றிய செய்திகள் மாவட்டக் கழகச் செயலாளர்களால் முரசொலி மற்றும் சில ஏடுகளில் வெளிவந்துள்ளன. மேலும் வந்து கொண்டிருக்கின்றன.

இந்த ஊக்கத்திற்குத் தூண்டுகோலாக தலைநகராம் சென்னையில் 15, 16, 17 ஆகிய நாட்களில் நடைபெற்றுள்ள முப்பெரும் விழா அமைந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

ஆண்டுதோறும் வழக்கம்போல் நடைபெறுகிற முப்பெரும் விழா எனினும்; இதுவரையில் நடைபெற்ற விழாக்களில் சிறந்த விழா எனும் பெருமைபெற்ற விழாக்களுடன் வைத்துப் புகழப்பட வேண்டிய விழாவாக இந்த ஆண்டு முப்பெரும் விழா அமைந்துவிட்டது என்றே சொல்லலாம்.

15, 16 ஆகிய இரு நாட்களையும் தென்சென்னை ஆக்ரமித்துக் கொண்டது, தம்பி சைதை கிட்டு தலைமையில்!

அந்த இரு நாட்களுக்கும் ஈடுகொடுக்கும் வண்ணம் தம்பி பலராமன் முன்னின்று நடத்திய 17-ந் தேதிய வடசென்னை ராயபுரம் பொதுக்கூட்டமும், விருது வழங்கும் விழாவும் விளங்கின!

சிங்கக் குட்டிகளென செம்மாந்து நடைபோட்ட இளைஞர் அணியினர், தொண்டர் அணியினர், மகளிர் அணியினர் கட்டுப்பாடு மிக்க பட்டாளத்தினராக, வள்ளுவர் கோட்டத்து அண்ணா சிலைக்கு அருகில் பேரணி வகுத்து வரவேற்க; நானும் பேராசிரியரும், வீராசாமியும், நாஞ்சிலாரும் மற்றும் தலைமைக் கழகச் செயலாளர்களும் முன்னணியினரும் அண்ணன் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கிவிட்டு; அன்று மாலை இலக்கிய அணித் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களை நடுவராகக் கொண்ட வழக்காடு மன்றமும் கண்டோம்!

மூன்று வழக்குகள் - வள்ளுவர் பெண்களை எப்படிக் கருதினார்? வாலியை இராமன் கொன்றது நியாயமா? கண்ணகி மதுரையை அழித்தது சரியா? என்ற தலைப்புகளில் தொடரப்பட்ட வழக்குகள் - குற்றம் சாட்டியவர் புதுவைப் பேராசிரியர் சாரங்கபாணி - மறுத்து வாதாடியவர் அருமை ஆதீனக் கல்லூரி முதல்வர் செல்வக்கணபதி - வாதங்களும், தீர்ப்பும் - செவிக்கும் சிந்தைக்குமினிய இலக்கியத் தேனருவியாக இருந்தது.

16-ந் தேதி காலையில் - மகளிர் மன்றம்; திருமதி சற்குணம் முன்னின்று அவரது அணியினருடன் நடத்திய பட்டிமன்றம் - பொருளாளர் வீராசாமி பட்டிமன்றத் தொடக்க விழா உரையாற்றினார். நானும் பேராசிரியரும் முன்னணியினரும் முன்வரிசையில் அமர்ந்து பட்டிமன்ற வாதங்களையும் - மகளிர் அறிவுத்திறனையும் வியந்து பாராட்டினோம்.

அன்று மாலை அண்ணா கவியரங்கம்; என் தலைமையில்! கவிக்கோ அப்துல் ரகுமான், கவியரசு வைரமுத்து, கவிஞர்

சோழவேந்தன், பெருங்கவிக்கோ சேதுராமன் கலந்து கொண்ட கவியரங்கும், இலக்கிய அணியின் ஏற்பாடேயாகும். முனைவர் மணிவேந்தன் வரவேற்புக் கவிதையுடன் தொடங்கிய அரங்கம்; கவிதைப் பேராறாகவே மூன்று மணி நேரம் பெருக்கெடுத்தது!

17-ந் தேதி காலையில் இளைஞர் அணியினர் புலவர் நன்னன் தலைமையில் நடத்திய கருத்தரங்கத்தை, துணைப்பொதுச் செயலாளர் நாஞ்சிலார் தொடங்கி வைத்து உரையாற்றினார். நானும் பேராசிரியரும் பொருளாளரும் நாஞ்சிலாரும் முன்னணியினரும் முன் வரிசையில் அமர்ந்து, இளைய தலைமுறையினர் ஏறுநடைச் சீயங்களாய் எழுந்து கொள்கை முழக்கமிட்ட அந்த நிகழ்ச்சியினை நேரம் போனதே தெரியாமல் சுவைத்திருந்தோம். அப்படியொரு புதிய சேனை கழகப் பாசறையின் துணைச் சேனையாக உருவாகிற காட்சி கண்டு களிப்புற்றோம்.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு குறித்து வடசென்னை இராயபுரம் கூட்டத்திலே கூடப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறேன். படித்திருப்பாய் முரசொலியில்! அணிகளின் நிகழ்ச்சிகள் முப்பெரும் விழாவுக்கு அணி செய்திடும் பொறுப்பை அந்தந்த அணியினர் ஏற்றிடினும்; அவர்களுக்கு அருந்துணையாக நின்று தென்சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி சைதை கிட்டுவும், தென்சென்னைப் பகுதிக் கழக, வட்டக் கழக செயலாளர்களும் சிறப்பித்தார்கள்.

மூன்று நாள் விழாக்களுக்கு சிகரம் வைக்கும் விழாவாக; விருது வழங்கும் விழா இந்த ஆண்டு வடசென்னையில் - இராயபுரத்தில் - அதுவும் அறிவகத்துக்கு முன்புள்ள நீண்ட பெருஞ்சாலையில் - வடசென்னை மாவட்டச்செயலாளர் தம்பி பலராமனும், பகுதிக்கழக, வட்டக் கழகச் செயலாளர்களும் வழங்கிய ஒத்துழைப்பு உதவியுடன் தலைமைக் கழகச் சார்பில் எழுச்சிக் கோலம் காட்டி நடைபெற்றது.

கழகப் பெரியவர் குறள் மணி வன்னியப் பெருமாள் - அஞ்சாத அடலேறு தியாக மறவன் அக்னிராசு - சேவைக்கோர் இலக்கணம் சென்னிமலை இலக்குமி அம்மாள் - ஆகியோர்க்கு முப்பெரும் விழா விருதுகளை, பேராசிரியர் தலைமையில் - பொருளாளர், துணைப் பொதுச்செயலாளர் முன்னிலையில் - தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், உயிரினுமேலான உடன்பிறப்புகள், வெள்ளமெனக் குழுமிய தமிழ்ப்பெரு மக்கள் முன்னிலையில் வழங்கிடும் பேறு பெற்றேன்.

அழைக்கின்றார் அண்ணா! ஆம்; இசை முரசு, அந்த எக்காளக் குரலில் எத்தனை முறை பாடினால் என்ன - தெவிட்டவா போகிறது! இரு மாவட்டக் கழகங்களின் துணையுடன் முப்பெரும் விழா, திருவிழாவாக - பெருவிழாவாக மட்டுமின்றி; திருவிடமாம் தமிழகத்தின் இருள் நீக்கும் விழாவாகவும் அமைந்தது என்பேன்!

இந்தத் தீபச்சுடரின் கொளுத்தப்பட்ட, தீபங்களின் ஒளியாக; இங்கு பெற்ற கருத்துக்களை, எழுச்சியை, உணர்ச்சியை, நாடு முழுதும் எடுத்துச் செல்ல; உடன்பிறப்புகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் தயாராகி விட்டார்கள் என்பதறிந்து பூரிப்படைகிறேன் - புத்துணர்ச்சி பெறுகிறேன் - அந்த இனம் வாழ - இடர் நீங்க - இருள் தொலைய - கிழக்கு வெளுக்கத்தான் போகிறது! அதன் விழிப்போடு சேர்ந்து தமிழுலகமும் விழிப்படையத்தான் போகிறது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

23-09-1994

2178. நடையை நிறுத்தாதே!

உடன்பிறப்பே,

நாய்கள் குரைத்துக்கொண்டேயிருக்கும்
அதற்காக நீ உன் நடையை நிறுத்தாதே!

நடுங்கி, ஒடுங்கி, ஓரம் ஒதுங்கத் தேவையில்லை
நாம் போவது கொள்ளையடிக்க அல்லவே;
கொள்ளைகளை தடுத்து நிறுத்தத்தானே!

கொள்கை பரப்ப – குறிக்கோளை எட்டிப்பிடிக்க –
வெற்றிக் குன்றின் மீது ஏறிக் கொடி நாட்ட!

தூவப்படும் எதிரிகளின் கலக விதைகளை
முள்ளாக விளைந்து தூயவனே!
உன் கால்களில் குத்தும்.

உன்னைத் தொடர்ந்து வருவோர்
பாதங்களைக் காயப்படுத்தாதிருக்க அதைத் தூக்கி,
முனை முறித்துத் தொலைவில் போட்டுவிடுக!

பாதையில் குறுக்கிடும் காட்டாறு கண்டு
பதறத் தேவையில்லை – உன் பாட்டன், பூட்டன்,
தாய், தந்தையர் கடந்தது எப்படி எனக் கணக்கிட்டுப்
பாலம் அமைத்தோ, தோள்பலம் காட்டி நீந்தியோ
பாதியில் பயணம் தடைபடாமல் ஏறுக கரையில்!

ஊளையிடும் நரிகளின் கூட்டம் ஒன்று வலப்புறம் போகும்
மற்றொன்று இடப்புறம் போகும் – அவை

வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன? மேலே
விழுந்து பிடுங்காத அளவுக்குப் பார்த்துக் கொள்க!

புதர்களில் விலங்குகள் மலைப்பாம்புகள் புரளும் - அந்த
இடர் களைய மட்டுமே கையில் ஆயுதம் தேவை!

பதர் என மண்டும் மனிதப் பகையினை மாய்க்க
பண்பெனும் வாளும் அன்பெனும் கவசமும்
ஏந்திச் செல்க!

உறைபனி மூடிய முகடுகள் மீது
ஊக்கமுடன் நீ ஏறிடும் போது;
உட்பூசலற்ற காலணி இருந்தால் தோது.
ஒருக்காலும் அது வழுக்கவே வழுக்காது!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்க் குவிந்த
அழுக்குச் சிந்தனை, ஆதிக்கச் சுமைகள்
அகற்றிடவே உன் பயணம்; அதனை மறந்து
அகதியாய்த் தமிழனை விட்டு விடாதே!

பாயிரம்பாடி உனக்குப் பாராட்டு படித்து,
பதவியைக் காட்டிப் பல்லக்கும் சுமந்திட,
பகைவர்கள் நண்பராய்க் காட்சி தருவர் - அந்தப்
படுகுழியில் விழாமல் உன்னையும் காத்து
இனத்தையும் காத்திடு!

அய்யா பெரியார் வாழ்க என முரசறைந்து பாடு!
அறிஞர் அண்ணா வாழ்க என சங்கொலித்து ஆடு!
களைப்பின்றித் தொடரலாம் கடும் பயணம் அனைத்தும்;
உழைப்பின்றி இருப்போரைச் சிற்றெறும்பும் பழிக்கும்!

கடமையினை உணர்ந்து,
கண்ணியத்தில் மலர்ந்து வெல்க;
கட்டுப்பாடு குலையாமல் கழகப் பயணம் செல்க!
கணநேரமும் ஓய்வில்லை என்று சபதம் செய்க!
உடன்பிறப்பே;
வளம் பரப்பத் தமிழகத்தில் மழையாய்ப் பெய்க!

எலிகளுக்கும் கரையானுக்கும்
இடையிடையே உன் வழியில்
தீனி போட்டாலும் போடு; ஆனால், சில ஏடுகளுக்கு
மட்டும் தீனி போடாமல் எச்சரிக்கையாய் இருந்திடு!

நூறாயிரம் காலத்துப் பயிரப்பா கழகம் – இதனை
வேரோடு வீழ்த்திவிட எத்தர்கள் சிலபேர்
தேனோடு விஷம் கலந்து தருகின்றார் கவனி! நம்
ஊனோடும் உயிரோடும் இணைந்த கொள்கைக்கு
நடத்திடுவோம் வெற்றி பவனி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-09-1994

2179. செத்துப் பிழைக்கும் மக்களுக்குச் செகத்தை அழிக்கும் சக்தியுண்டு!

உடன்பிறப்பே,

புதிய பொருளாதாரக் கொள்கையினால் இந்திய நாடு ஒரு காலனி நாட்டுத் தகுதியைப் பெறக் கூடுமென்ற நிச்சயமான அச்சத்தைத் தெரிவித்தும், காட் ஒப்பந்தம், உழைக்கும் வர்க்கத்தினருக்கு ஒரு அபாயகரமான சவால் என்பதை விளக்கியும், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம் என்பதற்குப் பதிலாக, நாணித் தலைகுனிந்து ஆதிபத்திய அந்நிய நாட்டார் கையில் ஒப்படைக்கும் நிலைக்கு ஆளானோம் எனும் அவச் சொல் நம்மை எதிர்காலத்தில் ஈட்டி முனையாகத் தாக்கும் என்பதைத் தெளிவுபடுத்தியும் தி.மு.கழகம் உள்ளிட்ட முற்போக்கு இயக்கங்கள் கடந்த இரண்டாண்டு காலத்திற்கு மேலாகவே அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்து, வியர்வைப் பட்டாளத்தின் வேதனையை வேடிக்கை பார்க்காதீர் என்று அரசுக்கு எச்சரித்து; எத்தனையோ கண்டனக் கூட்டங்கள், எத்தனையோ பேரணிகள், எத்தனையோ வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் - இங்குள்ள குமரி தொட்டு, இமயம் முட்ட; தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கின்றன.

ஏற்கெனவே வேலையில்லாத் திண்டாட்டம் எனும் உலைக்களத்துத் தணலில் தூக்கிப் போடப்பட்டுள்ள பாட்டாளி வர்க்கத்தின் நெற்றிப் பொட்டில், சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல இந்தப் பொருளாதாரத் திட்டம்; இருக்கின்ற வேலை வாய்ப்பையும் பறித்து அவர்களை நடுத்தெருவில் திரிய விடுவதற்குப் பேருரு எடுத்துள்ளது - பாமரர் மொழியில் கூற வேண்டுமாயின் பேயுரு எடுத்துள்ளது.

இந்தப் பொல்லாப் பொருளாதாரக் கொள்கை; பொந்துக்குள்ளிருந்து கிளம்பிய பெருச்சாளியாக வருவதற்கு முன்பே; தமிழகம் போன்ற சில மாநில முதல்வர்கள், பொதுத்துறையில் ஆதாயத்துடனும் - ஆக்கபூர்வமாகவும்

நடைபெற்று வந்த பல தொழிற்சாலைகளை, நிறுவனங்களை, தனியார் துறைக்கு அளிக்க முன்வந்து, அதற்குரிய பயனைத் தனியாகவே பெற்றுக் கொண்டு வருகின்றனர்.

மத்தியில் உள்ள அரசோ; போபர்ஸ் - பங்குச் சந்தை - சர்க்கரை போன்ற மகத்தானதும் வரலாற்றுப் புகழ்வாய்ந்ததுமான ஊழல்களை அடைத்துப் பரிபாலனம் செய்ய வக்குவகையின்றி, அந்த ஊழலில் புரண்டோர் - குளித்தோர் - உடலில் பூசிக் கொண்டோர் - அனைவருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துக் கொண்டு, நாட்டை நலமுறச் செய்திட வேண்டுமெனில் புதிய பொருளாதாரக் கொள்கைதான் கைகண்ட மருந்து எனக்கூறிப் பசப்பி வருகிறது. பாமர மக்களை ஏமாற்றி வருகிறது. பணத்திமிங்கிலங்கள், அதிபர்கள், சீமான்கள், கோமான்கள் - பட்டுக் கம்பளம் விரித்து இந்த அரசுக்கு வரவேற்பு விழா நடத்தி, பாராட்டுப் பத்திரம் படித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வளரா நாடு, வளர்ந்த நாட்டிடம் கடன் வாங்குவது தவறல்ல - கடனுக்கு மேல் கடன் வாங்குவதும் நமது உரிமைகளை அடமானம் வைத்தும் கடன் வாங்கினால் - இறுதியில் என்ன கதி வந்து சேரும் என்பதை அரசியல் மேதையும், பொருளாதார வித்தகருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் இருபத்தியெட்டு ஆண்டுகளுக்கு முன்பே, காஞ்சி வார இதழில் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதை முரசொலியில் நேற்று நினைவுபடுத்தப்பட்டிருந்தது.

கருத்தோட்டங்கள் வாயிலாக மட்டுமின்றி போராட்டங்கள் மூலமும் நினைவுபடுத்தும் நிகழ்ச்சிகளை, தேசிய முன்னணி இடதுசாரி அமைப்புகளும் - மற்றும் பல முற்போக்கு இயக்கங்களும் நடத்திக் காட்டியுள்ளன. மேலும் நடத்திக் கொண்டுமிருக்கின்றன.

அவற்றில் ஒரு கட்டமாகத்தான் செப்டம்பர் 29-ந் தேதி இந்திய நாடு முழுமையுள்ள நாற்பதுக்கு மேற்பட்ட தொழிற்சங்க அமைப்புகள் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்தத் தொழிலாளர் எழுச்சிக்கு, கழகமும் தனது அரசியல் ரீதியான ஆதரவை வழங்குமெனக் கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அறிக்கை விடுத்து, போராட்டம் வெற்றி பெறக் கழகச் சார்புடைய தொழிலாளர் அமைப்புகள் முன் வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு முன் இதுபோன்ற வேலை நிறுத்தப் போராட்டங்கள், இந்தக் காரணத்திற்காக அறிவிக்கப்பட்டபோது - அதில் கலந்து கொள்ளாமல் இருந்தது மட்டுமல்ல; எதிர்ப்பாகவும் செயல்பட்ட தமிழகத்தின் ஜெயலலிதா அரசு கூட, இந்த வேலை நிறுத்தப் போருக்கு தனது ஆதரவைத் தெரிவித்து, பேருந்துகள் ஓட மாட்டா என அறிவித்துள்ளது.

காட் ஒப்பந்த எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டவர்கள் மீது - தாக்குதல் நடத்தி, மார்க்சிஸ்ட் கட்சித் தோழர் ஒருவரின் கொலைக்குக் காரணமான அ.தி.மு.க.வைச் சேர்ந்தவரை இன்னமும் கைது செய்யாமல், குடவாசல் வீதிகளில் கம்பீரமாக உலவ விட்டிருக்கும் ஜெயலலிதா அரசுகூட, திடீரெனத் தானே முன்வந்து, காட் ஒப்பந்த எதிர்ப்புப் போர் நடந்திட ஆதரவு தருவது என்பது; சமூகநீதிப் பிரச்சினையில் வேறு வழியின்றி முன் வந்தது போலவே; இதிலும் மக்கள் சக்தி அத்தகைய நெருக்கடியை இந்த அரசுக்கு அளித்துள்ளது என்பதையே தெளிவாக்குகிறது.

இதைப்போலவே, உழைக்கும் மக்களின் சக்தி இன்னமும் பல ஆதிக்க சக்திகளை இதுபோன்ற நெருக்கடிக்கு உள்ளாகத்தான் போகிறது! அந்த ஆதிக்க சக்திகளுக்கு ஆபத்பாந்தவனாகவும் - ரட்சகனாகவும் இருக்கின்றவை மாநில அரசுகளானாலும் அல்லது மத்திய அரசே ஆனாலும்; இந்திய நாட்டு ஏழை எளியோர், பாட்டாளிகள், விவசாயிகள் விடுகின்ற பெருமூச்சுப் புயலில் எங்கேயோ கண்காணாத இடத்துக்குத் தூக்கி எறியப்பட்டு விடும் என்பது மட்டும்; இன்றில்லாவிடினும் விரைவில் - என்றோ ஒருநாள் நிச்சயம்!

"செத்துப் பிழைக்கும் மக்களுக்குச்
செகத்தை அழிக்கும் சக்தியுண்டு"

என, 'தூக்குமேடை படத்தில் நான்தான் ஒரு பாட்டு எழுதியிருந்தேன்!

அத்தனை சக்தி பெற்றது உழைக்கும் வர்க்கம் என்பதை உணர்ந்து; அவர்தம் எதிர்காலத்தை எருக்கம்பூ ஆக்கிவிடும் செயலில் இருந்து, தம்மை மீட்டுக் கொள்வதே ஆட்சிக் கோல் பிடித்தோர்க்கு அறிவுடைமையாகும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி 29-09-1994

2180. பெரியார் திடலில் நடந்தது என்ன?

உடன்பிறப்பே,

தமிழன் தலைநிமிர வேண்டுமென்பதற்காக அய்ம்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக எழுதுவதற்குத் தலைகுனிந்தும் - தடங்கள்; தார் போட்டவையா; மண் சாலையா? குண்டு குழியா? மேடு பள்ளமா? என்று கவலைப்படாமல் மாட்டு வண்டிகளிலும் மோட்டார் வாகனங்களிலும் ரயிலிலும் வேனிலும் விடிய விடிய விழித்திருந்து கருத்துக்களை விளக்கும் கூட்டங்களுக்குக் கடும்பயணம் மேற்கொண்டும் - இதோ, அதன் விளைவாக கழுத்தில் தாங்க முடியாத வலி - முதுகில் பொறுத்துக் கொள்ள முடியாத வேதனை - கழுத்திலும் முதுகிலும் எலும்பு இணைப்புகளிலும், நரம்புப் பிணைப்புகளிலும் தசைநார்களிலும் கோளாறு - உள்ளத்து வலிவு இருக்கிற அளவுக்கு உடல்வலிவு உன் சகோதரனுக்கு இல்லையே! இருந்தால்தான் என்ன எவ்வளவுதான் தாங்க முடியும்? இரும்பால் செய்த உடலாயிருந்தால் கூட தாங்கிட இயலாதே -

அதனால் கடந்த பத்து பனிரெண்டு நாட்களுக்கு மேலாக, படுக்கையில் கிடந்து புரள்கிற அளவுக்கு நான் மிகுந்த தொல்லைக்கு ஆளாகி, வீட்டை விட்டு வெளிக் கிளம்ப முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டதை, என்னை நேரில் வந்து சந்தித்து நலம் விசாரித்தவர்கள் வாயிலாக நீ அறிந்திருப்பாய். நரம்பியல் நிபுணர் டாக்டர் இராமமூர்த்தி அவர்களும், எலும்பு மருத்துவ நிபுணர் டாக்டர் நடராசன், குடும்ப மருத்துவர் டாக்டர் கோபால் மற்றும் டாக்டர் பெருமாள், சித்த மருத்துவர் இராமலிங்கனார் போன்றவர்களும் காட்டிய அக்கறை மிகுந்த சிகிச்சைகளாலும், மலர் மருத்துவமனை டாக்டர் இராமமூர்த்தியும், டாக்டர் கெஜராஜும் மேற்கொண்ட சோதனைகளையொட்டி தரப்பட்ட மருந்துகளாலும், அவர்கள் அனைவரின் அறிவுரைப்படி

கடைப்பிடித்த முழுமையான ஓய்வினாலும் பெருமளவு குணம் பெற்றுள்ளேன் எனினும்; இந்தத் திங்கள் முடிய நிகழ்ச்சிகளில் எதிலும் கலந்து கொள்ள இயலாதவனாக இருக்கிறேன்.

அடுத்த திங்களிலிருந்து உன்போன்ற உடன்பிறப்புகளை சந்திக்கவும், தமிழ்ப் பெருமக்களைக் கண்டிடவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுவரையில் முரசொலியில் நான் எழுதும் கடிதங்கள், உனக்கும் எனக்கும் வழக்கம்போல் அன்பு கலந்த இணைப்புச் சங்கிலியாகத் திகழும்! கடிதம் எழுதக்கூட இன்னும் இரண்டொரு நாட்கள் சென்று முனையலாம் என்றுதான் இருந்தேன். ஆனால், என் களைப்பையும், உடல் நலிவையும் மூட்டை கட்டி வைத்து விட்டு, ஆனது ஆகட்டும் என்ற ஒரு முரட்டு தைரியத்துடன் இந்தக் கடிதம் எழுத வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக நாட்டில் ஆளுங்கட்சியின் மீதுதான் தாக்குதல் கணைகள் மற்ற கட்சிகளால் பொழியப்படும் என்பது நடைமுறை நியதி! ஆனால் என்ன காரணத்தினாலோ; நமது கழகம் ஆளுங்கட்சியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சுடு கணைகளைத் தாங்குவது என்பது அன்று முதல் இன்றுவரையில் வரலாறாகவே ஆகிவிட்டிருக்கிறது.

ஆளுங்கட்சியல்லாத மற்ற கட்சிகளுக்குள் செயல்முறைத் திட்டங்களில் - கொள்கைகளில் - வேறுபாடுகள் இருப்பதும் அவை அந்தந்தக் கட்சிகளால் விமர்சிக்கப் படுவதும் கூட உண்டு எனினும்; அத்தகைய விமர்சனங்கள் கூட நமது கழகத்தின் மீது செய்யப்படுவதற்கு ஓர் அளவே இல்லாத நிலைமை இன்றைக்கு சில இயக்கங்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

காய்த்த மரத்தில்தான் கல்லடி விழும் என்ற பழமொழியை நினைவுபடுத்திக் கொண்டாலும் கூட சில தவறான செய்திகளுக்கு - அவதூறான பிரச்சாரங்களுக்கு - வரலாறுகளையே மறைத்து அல்லது திரித்து வருங்காலச் சந்ததியினரை குழப்புகிற செயல்களுக்கு - மறுப்புரையோ மனம் திறந்த விளக்கவுரையோ அளித்தால்தான்; பிறகு அந்த மாறுபாடான காரியங்கள் மறுபிறவி எடுக்காமல் இருக்கும். இல்லையேல் முருங்கை மரத்துக்

கம்பளிப்பூச்சிகள் போல, அடிமரம், கிளை, கொப்பு என்று எல்லா இடங்களிலும் தனது ஆக்ரமிப்பை விரிவாக்கிக் கொண்டு, பெரும் சங்கடத்தைத் தோற்றுவித்துவிட ஏதுவாகும்!

உடன்பிறப்பே, எந்த இயக்கத்துடன் சர்ச்சைகள் தேவையில்லை என்று கருதி இருக்கின்றேனோ; யாரிடம் வாதப்பிரதிவாதங்கள் கூடாது என உணர்ச்சிகளுக்குப் பூட்டு மாட்டி வைக்க எண்ணியிருக்கிறேனோ; அதற்கு மாறாக அந்தப் பகுதியிலிருந்தே, என்மீது என்றால் கவலைப்பட மாட்டேன்; என்னை மையமாக வைத்துக் கழகத்தின் மீது குற்றமும் குறையும் கூறப்படும்போது, கழகமெனும் கைவிளக்கை அணையாமல் காத்திடப் பெருங்கவலையுடன் பொறுப்பேற்றுள்ள எனக்கு; அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கவும் - விளக்கம் தரவுமான அவசியம் ஏற்பட்டு விடுகிறதே; நான் என்ன செய்ய!

நமது அன்புக்குரிய தளபதி வீரமணி அவர்கள் திராவிடர் கழகத்தின் ஆதரவை இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வழங்கி - அதற்கு அவருக்குச் சரியென்று பட்ட காரணத்தையும் கூறி - அந்த அம்மையாருக்கு விருதுகள், பட்டயங்கள் தந்து பாராட்டுவது அவரது - உரிமை - அவர் மனதுக்கு உகந்த காரியம் - அதில் நானோ, நமது கழகமோ தலையிட்டு தளபதி வீரமணி அவர்களைக் கண்டிக்கும் உரிமையைப் பெற்றோமில்லை.

ஆனால் அதே நேரம், ஜெயலலிதா அவர்கள் பெரியார் என்றும் அண்ணா என்றும் உதட்டளவில் உச்சரித்து இரட்டை வேடம் போடுகிறார் என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டும் நமது உரிமைக்குக் குறுக்கே வந்து நின்று நம்மை அறிவு நாணயமற்றவர்கள் என்று அர்ச்சிக்கிற அளவுக்கு தளபதி வீரமணி அவர்களுக்குக் கோபம் கொப்பளிக்கிறதென்றால்; நானோ நமது கழகத்தினரோ வெறும் சோற்றாலடித்த பிண்டங்களாக இருந்துவிட முடியாது. அப்படி இருந்துவிடலாம். அது நமது பொறுமைக்கு அடையாளமாகக்கூட இருக்கலாம். ஆனால், வேண்டுமென்றே நம்மீது சுமத்தப்பட்ட விஷமத்தனமான குற்றச்சாட்டுகள் மறுக்கப்படாமல்; அவை உண்மைதாமோ என்ற ஐயப்பாட்டைப் பொது மக்களிடம் ஏற்படுத்திவிடக் கூடும்.

மூதறிஞர் ராஜாஜி கூட சட்டப்பேரவையில் தனது சாதியைக் கூறி; சவால் விடவில்லை! ஆனால்

ஜெயலலிதாவோ; சட்டப்பேரவையில் நிமிர்ந்து நின்று தனது சாதியைப் பிரகடனப்படுத்தி; சவால் விடுகிறார் என்றால்; சுயமரியாதை இயக்கத்துடன் ஒட்டி வளர்ந்த நாம்; அதனைப் பொறுத்துக்கொண்டு ஆமைபோல் - ஊமைபோல் அடங்கிக் கிடப்பது எப்படி? அப்படிச் சபை நடுவே உயர் சாதி உயர்வுப் பிரகடனம் செய்ததுதான் திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி என்பதையும் அந்த அம்மையாரே அறிவிக்க; அது குறித்து வாய் திறக்காத வாய்மையாளர்கள் - அதனைக் கண்டித்துக் கர்ச்சனை புரிந்த நம்மைப் பார்த்து காய்ந்து விழுவது என்னே; காலத்தின் கோலம்!

இடஒதுக்கீடு பிரச்சினையில் சமூகநீதிக்காக அணி சேர்ந்த ஆறு ஏழு கட்சிகள் அறிவித்த மறியலுக்குப் போட்டியாக அதே நாளில் பந்த் அறிவித்த ஜெயலலிதாவின் உள்நோக்கத்தைக் கண்டிக்க, அந்தக் கட்சிகளுக்கு உரிமை இல்லையா?

அந்தக் கட்சிகளை டெல்லிக்கு வா என்று அழைப்புக் கடிதமும் அனுப்பிவிட்டு, அந்தக் கட்சித் தலைவர்களை பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எதுவுமே செய்யாதவர்கள் என கேலி செய்து ஏடுகளில் ஆளுங்கட்சி சார்பில் ஒரு பக்க விளம்பரமும் கொடுக்கப்பட்டதையும், மானமுள்ளவர்கள் தாங்கிக்கொண்டு அந்த மாதரசு பின்னால் டெல்லிக்குப் போக வேண்டுமா?

சரி; போகவில்லை - அதை ஜெயலலிதா கண்டித்தால் கூட அர்த்தமிருக்கிறது - அதைவிட அதிகமாக தளபதி வீரமணி அவர்கள் கண்டிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவர் கண்டித்திருக்க வேண்டியது அந்த விளம்பரத்தை அல்லவா?

இடஒதுக்கீட்டில் மற்றவர்களுக்கு இல்லாத அக்கறை இவர்கள் ஒரு சிலருக்கு மட்டுந்தானா? யார் யாருக்கு உண்மையான அக்கறையென்பதும் - வீரமணி அவர்களுக்குள்ள உண்மையான அக்கறையைப்போன்று அனைவருக்கும் உண்டு என்பதும்; கடந்த கால சரித்திரம் உணர்த்துகிற பாடம் மட்டுமல்ல; பொது மக்களுக்கும் தெரிந்திருக்கிற செய்தியல்லவா!

இடஒதுக்கீட்டுப் பிரச்சினையின் ஒரு கட்டம் இப்போது முடிவடைந்திருக்கிறது - இன்னும் அதற்கு எத்தனையோ விபத்துக்கள் விஷமிகளால் உருவாக்கப்படலாம் - இப்போதுள்ள

மண்டல் கமிஷன் பரிந்துரை வழக்கில்; உச்சநீதிமன்ற தீர்ப்பால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விளைந்துள்ள கேடுபாடுகள் நீக்கப்பட போராட வேண்டியிருக்கிறது. எனவே சமூகநீதி என்பது முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட விவகாரமும் அல்ல; இடஒதுக்கீட்டுடன் முடிந்து விடுகிற பிரச்சினையுமல்ல! அதுகுறித்து சமூகநீதியில் அக்கறையுள்ளவர்கள் அனைவரும் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

1994 ஜனவரி திங்கள் 23-ஆம் நாள் சென்னையில் தி.மு.க. சார்பில் வரலாற்றுப் புகழ்மிக்க சமூகநீதிப் பேரணி - நடைபெற்றது. கடற்கரையில் லட்சோப லட்சம் பேர் கூடி சமூகநீதிப் பிரகடனம் செய்தனர்.

1994 ஜூலைத் திங்கள் 29, 30, 31 தேதிகளில் நடைபெற்ற மதுரை மண்டல மாநாட்டில் சமூக நீதி மாநாட்டுக்கென ஒருநாள் ஒதுக்கப்பட்டு சமூகநீதி அணி சார்ந்த தலைவர்கள், லட்சக்கணக்கான மக்களிடையே முழக்கமிட்டனர்.

இப்போது சென்னையில் திராவிடர் கழகச் சார்பில் பொன்விழாவும், சமூகநீதி மாநாடும் பேரணியும் நடைபெற்றது. செப்டம்பர் 30-ந் தேதி அந்த மாநாடு என்றால்; அதனையொட்டி அன்னை மணியம்மையார் சிலையை சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் திறக்கிறார் என்றால்; அதில் நமக்கும் உள்ளூர ஒரு மகிழ்ச்சி - ஓர் உணர்வு - அதன் காரணமாகவே மணியம்மையார் அவர்களின் படத்துடன் அந்தச் செய்தி முரசொலியில் பெரிய அளவில் முன்கூட்டியே வெளியிடப்படுகிறது.

ஆனால் இதற்கிடையே தளபதி வீரமணி அவர்கள் தினமணியில் பேட்டி கொடுக்கிறார். அந்தப் பேட்டி செப்டம்பர் 21, 22, 23 என்று மூன்று நாள் தொடர்ந்து தினமணியில் வருகிறது - அந்தப் பேட்டியில் தளபதி வீரமணி அவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள் வேண்டுமென்றே, வீணாக, தி.மு.க.வை வம்புக்கிழுக்கிற அளவுக்கு இருந்தால் அது கண்டு முரசொலி வாயை மூடிக்கொண்டு கிடக்க முடியுமா?

வீரமணி அவர்களின் அந்தப் பேட்டியில் தி.மு.கழகம் கொள்கையில் உறுதியாக இல்லையென்றும் சறுக்கிவிட்ட

தென்றும் கூறிய கருத்தும் - கடவுள் மறுப்பு என்பது பெரியாரின் கொள்கையா அல்லது ஒருவழி முறையா என்ற குழப்பமும் இடம் பெற்றிருந்தன.

இதன் தொடர்பாக முரசொலியில் வெளிவந்த கருத்துக்களும் - விடுதலையில் வெளிவந்த கருத்துக்களும்; தேதி வாரியாக வருமாறு :-

ஆண்டி :-

கடவுள் மறுப்பு பெரியாருடைய கொள்கையில்லைன்னும் அது ஒரு வழிமுறைதான்னும் திடீர்னு சொல்றாங்களே; அதைப் பத்தி என்னய்யா நினைக்கிறே?

போண்டி :-

தன் கொள்கை என்னவென்று தெரியணும்தான் பெரியார்; தனது சிலைக்கு கீழே கடவுள் மறுப்பு வாசகத்தை எழுதி வைக்கச் சொன்னாருன்னு அவுங்களே சொன்னதை நீ படிக்கலியாய்யா? கடவுள் மறுப்புங்கிறது ஒரு கொள்கைன்னு பெரியாரே சொன்னதா சொல்லியிருக்காங்களே!

செப்டம்பர் 24 - முரசொலி

தி.மு.க. மீது பாய்ச்சல் நடத்தப்பட்டு, பெரியாரின் கடவுள் கொள்கை, கொள்கையல்ல; ஒரு வழிமுறை என்று கூறப்பட்டது செப்டம்பர் 23-ல்! அதற்குப் பிறகுதான் செப்டம்பர் 24-ல் முரசொலியில் ஆண்டியும் போண்டியும் மிக மென்மையாகக் கருத்தறிவிக்கிறார்கள். அதற்கு அக்டோபர் 2-ந் தேதி விடுதலை ஞாயிறு மலரில் வீரமணி அவர்கள் பதில் எழுதுகிறார்.

கடவுள் மறுப்புத் தத்துவம் என்பது - ஒரு மூடநம்பிக்கை ஒழிந்த, புதிய சமுதாயம் உருவாக்க ஒரு திட்டம் என்பதை அய்யா பகுத்தறிவாளர் மாநாடுகளில் தெளிவாக விளக்கியுள்ளார்கள். ஆண்டிகள் ரூபத்திலும், போண்டிகள் அவதாரத்திலும் வந்து ஏதேதோ எழுதுகிறார்கள். வாழ்க வசவாளர்கள்! - என்பது வீரமணி அளித்த பதில்.

உடன்பிறப்பே; செப்டம்பர் 24 முரசொலி ஆண்டி போண்டியில் எந்த வசவும் இடம் பெறவில்லை. இருந்தாலும்

அக்டோபர் 2-ந் தேதி அதற்கு எழுதிய பதிலில் வீரமணி அவர்கள் வாழ்க வசவாளர்கள் என்று வாழ்த்துகிறார்.

அதற்கும் ஒரு விளக்கம் தருவதற்காக அக்டோபர் 5-ந் தேதி முரசொலியில் ஆண்டியும் போண்டியும் பின் வருமாறு உரையாடுகிறார்கள்.

ஆண்டி :-

ஏம்பா... நம்ப ரெண்டு பேரைப் பத்தியும் விடுதலை பத்திரிகையிலே அவதாரங்கள்னு கேலி செஞ்சு கேள்வி பதில் வந்திருக்குதாமே... கேள்விப்பட்டியா?

போண்டி :-

ஜெயலலிதாவுக்கு அவுங்க ஏதோ பட்டம் கொடுத்தாங்க; ஊருல எல்லோரும் அதைக் கேலி பண்ணுனாங்க; நாங்க ஜெயலலிதா மாதிரி பெரிய ஆளுங்களுக்கு மட்டும்தான் பட்டம் சூட்டுவோம் என்பதில்லை; இதோ; கடைக்கோடியில் பிளாட்பாரத்தில் கெடக்கிற ஆண்டி - போண்டிக்குக்கூட அவதாரங்கள்னு பட்டம் கொடுத்திருக்கிறோமேன்னு - கொறஞ்ச பட்சம் அவுங்க கட்சிக்காரங்களையாவது சமாதானப்படுத்தலாமே; அதுக்காகத்தான் நம்மளைப் பத்தி எழுதியிருக்காங்க வேற ஒண்ணுமில்லை! மத்தபடி நம்ப என்ன தப்பாச் சொல்லிப்புட்டோம்! கடவுள் மறுப்புங்கறது பெரியாரோட கொள்கை இல்லை... மனித நேயமும் சமத்துவமும்தான் பெரியார் கொள்கைன்னு அவுங்க சொன்னாங்க! அப்பிடின்னா பெரியார் சிலையோட அடிபீடத்தில் மனிதநேயம் - சமத்துவம்னே எழுதியிருக்கலாமே! கடவுள் இல்லைன்னுதான் எழுதணும்னு அய்யாவே வலியுறுத்தினாருன்னு சொல்றீங்களே;- அது ஏன்னு கேட்டோம்; தப்பா?

இதற்கு விளக்கம் அளிக்க வேண்டிய விடுதலை; அதனைச் செய்யாமல்; பிரச்சினையைத் திசை திருப்பிவிட்டு தி.மு.க.வின் லட்சியம் பதவிதான் என்று பொருள்பட ஒரு பெட்டிச் செய்தி வெளியிடுகிறது.

அது வருமாறு :-

குப்பன் :- அண்ணே; காரல்மார்க்சினுடைய லட்சியம் எதுன்னு கேட்டா, என்னா சொல்லுவாங்க?

சுப்பன் :-

அவரது இலட்சியம் பொதுவுடைமை - சோஷலிசம் சொல்லுவாங்க!

குப்பன் :-

அப்ப, வர்க்கப் போராட்டம், முதலாளித்துவ எதிர்ப்பு என்பதெல்லாம்...?

சுப்பன் :-

அது லட்சியத்தை அடைய - அவரு சொன்ன வழிமுறைகள்!

குப்பன் :-

அப்ப, பெரியாருடைய லட்சியம், சுயமரியாதை, பகுத்தறிவு, மனித நேயம், சமத்துவம் - அதை அடைவதற்கான வழிமுறைகள், கடவுள் மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு என்பதுதானே சரி; அப்புறம் ஏன், சில பேரு குழப்புறாங்க...

சுப்பன் :-

அட நீ, ஒண்ணுப்பா; குழப்பறவங்களுக்கு லட்சியம் - பதவி; அதுக்கான வழிமுறை - எது வேணும்னாலும் இருக்குறப்போ, குழப்பத்தான் செய்வாங்க!

இந்த பெட்டிச் செய்தி அக் 7-ந்தேதி விடுதலையில் வெளிவந்திருக்கிறது.

அக்டோபர் 7-ந்தேதி முரசொலியில்

“தமிழர் தளபதி வீரமணியும்
தமிழ் தினசரி தினமணியும்”

என்ற தலைப்பில் அங்குசம் எழுதிய பெட்டிச் செய்தி வருமாறு:-

தினமணி பொறுப்பாசிரியர் மாலன் அவர்கள், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்களிடம் பேட்டி காணுகிறார்.

அந்தப் பேட்டி செப்டம்பர் 21-ல் தொடங்கி 23-ந் தேதி நிறைவு பெறுகிறது. பேட்டி விபரம் தினமணியிலும், விடுதலையிலும் வெளிவந்துள்ளது. அதில் சில பகுதிகள் தி.மு.கழகத்தைப் பற்றியும் இருப்பதால்; நமது கவனத்தையும் கவர்ந்தது; எனவே இது :-

கேள்வி :- பெரியாருடைய கொள்கைகளில் இருந்து திராவிடக் கட்சிகள் வெகு தூரம் விலகி வந்துவிட்டன. இதில் யார் அதிக தூரம் விலகி வந்திருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்? தி.மு.க.வா? அ.தி.மு.க.வா.?

பதில் :- ..... இரண்டு அரசியல் கட்சிகளுக்கு போட்டி வரும் போது எப்போதெல்லாம் வாய்ப்பு கெடுகிறதோ, அப்போதெல்லாம் கொள்கையைக் கைவிட்டு விடுகிறார்கள். எப்போதெல்லாம் இந்தக் கொள்கையைச் சொல்வதின் மூலமாக லாபம் வருகிறதோ அப்போதெல்லாம் பெரியார்கிட்டே இருப்பதாகச் சொல்வார்கள்...

பதிலின் மொத்த சாராம்சம் இதுதான் - தி.மு. கழகம், பெரியார் பெயரைத் தனது அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துகிறது

நடுநிலையில் இருந்து சிந்திப்பவர்களுக்கும் - தி.க.வும் தி.மு.க.வும் சர்ச்சைகளில் இறங்கக்கூடாது என்று கவலைப்படும் நல்லவர்களுக்கும் நாம் இதனைச்சுட்டிக்காட்டி, எழுப்பும் கேள்வி இதுதான் :- யார் வீண் வம்புக்கு வருவது? இந்த வம்பு வளர்ந்தால்; பெரியார் பெயரை ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவது யார் என்பதற்கான சான்றுகள் எல்லாம் தரக்கூடிய தவிர்க்க முடியாத நிலை ஏற்படுமா? ஏற்படாதா?

கொள்கை என்ற சொல்லின் அழுத்தத்தைப் பற்றி விளக்கமளித்துள்ள வீரமணி அவர்கள், தினமணி மாலன் பேட்டியில் - ஒரே பிரச்சினையில் இருவேறு விதமானதும் முரண்பாடானதுமான கருத்துக்களைக் கூறியிருப்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியத்தை அவரது செப்டம்பர் 23-ந் தேதியிட்ட தினமணி பேட்டி நமக்கு ஏற்படுத்திவிட்டது.

பெரியார் சிலைகளில் கடவுள் மறுப்பு வாசகம் இடம் பெறுவதின் அடிப்படையே; என்னையே நாளைக்கு கடவுள் அவதாரம் என்று சொல்லி என் சிலைக்கே

பூஜை பண்ண ஆரம்பித்து விடுவான், என் கொள்கை என்னவென்று தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு என்று பெரியார் சொன்னார்.

இப்படி தினமணிக்கு விடையளித்து விளக்கமளித்து பெரியாரின் கொள்கையை சுட்டிக்காட்டிய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீரமணி அவர்கள்; அதே பேட்டியில் மாலன் அவர்கள் கடைசியாகக் கேட்ட கேள்விக்கு என்ன பதில் அளித்துள்ளார் என்பதுதான் மிக முக்கியம்!

மாலன், கேள்வி :- வடவர் எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பார்ப்பனர் எதிர்ப்பு, கடவுள் மறுப்பு இவற்றை திராவிட இயக்கத்தின் முக்கிய கொள்கைகள் என்று சொல்லலாம். இந்த நான்குமே இன்றைய சமூகத்தில் நடைமுறையில் மழுங்கி தேய்ந்து போய்விட்டதா?

வீரமணி, பதில் :- ஒரு திருத்தம் சொல்ல நினைக்கிறேன். இந்த நான்கும் பெரியாருடைய கொள்கைகள் அல்ல! பெரியாருடைய லட்சியம் சுயமரியாதை, பகுத்தறிவு, மனிதநேயம், சமத்துவம். நீங்கள் சொன்ன நான்கும் அந்த லட்சியங்களை அடைய பெரியார் கையாண்ட வழிமுறைகள்.

பெரியாரின் சிலையின் கீழே பீடத்தில் எழுதப்படும் கடவுள் மறுப்பு என்பது பெரியாரின் கொள்கை என்று பெரியாரே சொன்னதாகச் சொல்கிற தளபதி வீரமணி அவர்கள்; அதே நாளில், அதே பேட்டியில், அதே மாலனிடம், அதே தினமணியில் கடவுள் மறுப்பு, பெரியாருடைய கொள்கை அல்ல! என்று கூறியிருப்பது விந்தையல்லவா?

இந்த நிலையில் தி.மு.கழகம் பெரியாருடைய கொள்கையை எப்போதெல்லாம் லாபம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம் சொல்லுமென்றும், எப்போது வாய்ப்பு கெடுகிறதோ அப்போது கைவிட்டு விடுமென்றும் தளபதி வீரமணி, தினமணிக்கு பதில் அளித்திருப்பது விந்தையினும் விந்தையல்லவா? அவரது பதிலில் அ.தி.மு.க.வுக்கு இணையாக தி.மு.க.வையும் சேர்த்து அதைவிட தாழ்வாகக்கூட

கொச்சைப்படுத்தியிருப்பதுதான் ஆதாயத்திற்காக செய்யப்பட்ட காரியம் என்று கூறிட எவ்வளவு நேரமாகிவிடும்!

- அங்குசம்

இதற்கு பதில் அளிப்பதாக எண்ணிக்கொண்டு; தினமணி பேட்டியில் வீரமணி அவர்கள் செய்த தவறை திசை திருப்புவதற்காக; 1972 ஆம் ஆண்டு பெரியார் திடலில் பெரியார் கலந்து கொண்ட ஒரு விழாவில் நடைபெற்றதாக ஒரு நிகழ்ச்சியைத் திரித்து அக்டோபர் 8-ந் தேதி தனது கற்பனையைக் கலந்து எழுதியுள்ளது விடுதலை.

27.5.1972 அன்று சென்னை பெரியார் திடலில் பகுத்தறிவாளர் கழக மாநில மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் தலைவர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், துவக்கி வைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அம்மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களும் நடுநாயகமாக வீற்றிருந்தார்கள்.

மண்டைச் சுரப்பை உலகு தொழும் என்றார் புரட்சிக் கவிஞர். அந்த மகத்தான தத்துவ நாயகர் மேருபோல் வீற்றிருக்க - பெரியாருக்கே ஒரு கடவுள் என்கிற எண்ணம் உண்டு என்கிற பொருள் தொனிக்க, தான் முதலமைச்சர் என்கிற பெரிய நினைப்பில் கலைஞர் அவர்கள் பேச - தந்தை பெரியார் அவர்கள் தலையையும் கையையும் அசைத்து தன் கருத்து அது அல்ல என்று மறுப்பளிக்க - ஒரே நேரத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் எழுந்து நின்று கடவுள் இல்லை - கடவுள் இல்லவே இல்லை என்று முழக்கமிட அந்தக் காட்சி மனக்கண் முன் நிற்கிறது - காதுகளில் இரீங்காரமும் செய்கிறது.

அந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்கள், இந்தக் காட்சியைக் கண்டவர்கள் ஆயிரக்கணக்கில் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பொது மக்களின் எதிர்ப்பையும், தந்தை பெரியாரின் மறுப்பையும் சற்றும் எதிர்பாராத முதலமைச்சர் கலகலத்துப் போய், கடவுள் இல்லை என்று சொல்பவர்களை நான் மறுப்பதாக இல்லை! என்று

ஏதேதோ சொல்லிச் சமாளித்து, அதற்கு மேல் பேச்சைத் தொடர முடியாமல் இடத்தைக் காலி செய்தார் என்பது நம் தலைமுறையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என்று எழுதியுள்ளது அக். 8-ந் தேதி விடுதலை!

உடன்பிறப்பே, அந்த நிகழ்ச்சியில் பேசவே முடியாமல் - இடத்தை காலி செய்துவிட்டு ஓடவிட்டோனாம்! 1990 ஆம் ஆண்டு கூட பெரியார் திடலில் என்னை வைத்துக் கொண்டு சூத்திரர் ஆட்சியை காப்போம்! காப்போம்! என்று மும்முறை முழங்கி, கூட்டத்தினரையும் முழங்கச் செய்த வீரமணி அவர்கள்தான் இப்படியொரு ஆதீதக் கற்பனையை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

27.5.1972-ல் பெரியார் திடலில் என்ன நடந்தது என்பதை 28.5.1972 வெளிவந்த முரசொலி அப்பொழுதே விபரமாக வெளியிட்டிருக்கிறது. 28.5.1972 முரசொலியில் வெளிவந்ததை இதோ தந்துள்ளேன்.

பெரியார் திடலில் இன்று காலை 10 மணிக்கு பகுத்தறிவாளர் மாநாடு நடைபெற்றது. முதல்வர் கலைஞர் மாநாட்டைத் துவக்கி வைத்தார். கல்வி அமைச்சர் நாவலர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். பகுத்தறிவுக் கண்காட்சியை அன்பில் தர்மலிங்கம் தொடங்கி வைத்தார். தந்தை பெரியார் அவர்கள் பேரறிஞர் அண்ணா படத்தைத் திறந்து வைத்து சொற்பெருக்காற்றினார்.

மாநாட்டை துவக்கி வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையின் பிற்பகுதி வருமாறு :-

40 வருடங்களுக்கு முன்னால், சனாதனப் புயலால், வைதீகச் சூறைக்காற்றால் இந்தத் தமிழகம் சீரழிந்த போது - தமிழகத்தைக் கரை சேர்க்க ஈரோட்டிலிருந்து கிளம்பிய பேரொளி தான் தந்தை பெரியார்.

எதை எதைச் செய்ய வேண்டும் என்று சொன்னவர் பெரியார். அதை எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொன்னவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

எதையும் சற்று வேகமாகச் செய்ய விரும்புவார்கள் பெரியார் அவர்கள். நாங்கள் சற்று நிதானமாகச் செய்ய

வேண்டுமென்று விரும்புகிறோம். இந்த விருப்பத்தை பெரியார் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்றே நினைக்கிறேன். ஆட்சி நின்று நிலைத்துச் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்து முடிக்க வேண்டுமா - இல்லை மிகுந்த வேகம் வேண்டுமா என்று பெரியார் அவர்களைக் கேட்டால் அதற்குப் பெரியார் கூறும் பதில் இந்த ஆட்சி நின்று நிலை பெற வேண்டும் என்பதாகத்தான் இருக்கும்.

அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, இந்த அரசை எங்களால் இயன்ற அளவுக்கு நடத்தி வருகிறோம்.

நாங்கள் எந்த அளவுக்கு சீர்திருத்தக் கருத்துகளுக்கு ஆதரவளிக்கிறோம் என்பதற்கு இந்த மாநாடே ஒரு எடுத்துக்காட்டாகும். 67-க்கு முன்னால் இந்த ஆட்சியில் இப்படியொரு பகுத்தறிவியக்க மாநாடு நடத்த அனுமதிக்கப்பட்டதுண்டா?

பெரியார் அவர்களால் ஆதரிக்கப்பட்ட கட்சி ஆளும் கட்சியாயிருந்த அந்தக் காலத்தில் - சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடியாக்க வேண்டுமென்று நண்பர் மாதவன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அன்று ஆட்சி புரிந்தவர்கள் அதை முறியடித்து மூலையில் தூக்கிப் போட்டனர்.

அதற்குப் பின்னர் அவர்கள் ஆட்சியே முறியடிக்கப்பட்டு, மாதவன் சட்ட அமைச்சராகி, இன்று அவரே சுயமரியாதைத் திருமணம் செல்லுபடியாகும் என்று சட்டம் போடுகிற அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது.

இதை எதற்காகச் சொல்கிறேனென்றால் பெரியார் அவர்களின் கொள்கைகளை வேகமாக முடியாவிட்டாலும், இந்த அரசு மெல்ல மெல்ல செயலாற்றித்தான் வருகிறது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

சுயமரியாதை திருமணத்தை சட்டமாக்கியபோது, பேரறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்து இந்தச் சட்டமென்ன, பெரியாருக்குப் பரிசா என்று கேட்டார்கள். இந்தச் சட்டம் மட்டுமல்ல, இந்த அரசே பெரியார்

அவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுதான் என்று அண்ணா சொன்னார்.

அந்த அளவுக்கு ஐயா அவர்களின் மேல் நாங்கள் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோம். ஆனால் கழக அரசிற்கும் ஐயா அவர்களுக்குமிடையே சில வேறுபாடுகள் தெரியலாம்.

ஆண்டவனை வணங்கத்தான் வேண்டுமா என்பது ஐயா கேள்வி. அப்படி வணங்கினாலும் தமிழிலே வணங்கக் கூடாதா என்பது எங்கள் கேள்வி. தமிழில் பேசினால் ஆண்டவனுக்குப் புரியாது என்றால் - அந்தக் கட்டத்திலேதான் - நாட்டுக்குத் தேவையா என்பது எங்களின் கேள்வி

பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையைப் பற்றி முதல்வர் விளக்கி - அண்ணா கூறிய ஒன்றே குலம்; ஒருவனே தேவன் எனும் கொள்கையைக் கூறிய போது கூட்டத்தில் இருந்தவர்கள் கடவுள் இல்லை; இல்லவே இல்லை என்றார்கள்

தொடர்ந்து பேசிய முதல்வர் கலைஞர் -

நீங்கள் கடவுள் இல்லை; இல்லவே இல்லை என்று கூறினீர்கள். இதை நான் எதிர்ப்பதாக இல்லை; இல்லவே இல்லை.

ஆனால் நாங்கள் அறிஞர் அண்ணாவின் ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் கொள்கையை ஏற்றவர்கள். அண்ணா சொன்னார், அதுவும் பெரியாரோடு இருந்த காலத்தில் தான் - ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று வேலைக்காரி படத்தில் எழுதிக் காட்டினார். அந்த - ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையிலிருந்து நாங்கள் மாறமாட்டோம்.

கண்மூடி பழக்கமெல்லாம் மண்மூடிப் போக என்ற பாடலைக் கசிந்துருகிப் பாடுகிறார்கள்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்கிற பெருமைக்குரியது தமிழ்.

முதலை உண்ட பாலனை மீட்க உதவியது தமிழ்ப் பாட்டே என்கிற சிறப்புக்குரிய தமிழ், ஆண்டவனுக்குப் புரியாதாம்.

இவர்கள்தான் அர்ச்சகராகலாம் என்று, குறிப்பிட்டவர்களை நியமிக்கும் நிலை மாற வேண்டும். முதலியாராக இருந்தாலும், அகம்படியாராக இருந்தாலும், பிள்ளையாக இருந்தாலும் - முக்குலத்தோராக இருந்தாலும் வேறு எக்குலத்தோராக இருந்தாலும் - அர்ச்சனை செய்யும் தகுதியைப் பெற்றவர்கள் - அதில் தேர்ச்சி பெற்றவர்கள் - அர்ச்சகராகலாம் என்ற கருத்திலே சட்டம் கொண்டு வந்தோம். அதற்காக நீதிமன்றத்திற்குப் போனார்கள். அதில் பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்க நான் தயாராக இல்லை. ஆனால், எங்களுடைய அந்தக் கோரிக்கைப்படி அரசியல் சட்டம் திருத்தப்பட்டே ஆக வேண்டும். இதற்குக் கிடைக்கிற பதிலில்தான் நம்முடைய தன்மான உணர்வே அடங்கியிருக்கிறது.

இந்த நேரத்திலே நான் இந்திய அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் என்று கூட அல்ல, வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். இதற்காக இந்திய அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும். தந்தை பெரியார் அவர்களால் சுயமரியாதைத் திருமணம் அறிமுகப்படுத்தப்பட்டு, அண்ணா அவர்களால் என் போன்றவர்களால் பட்டி தொட்டிகளிலெல்லாம் அந்தத் திருமணமுறை பரவியபோது என்னவெல்லாம் கேட்டார்கள் அவர்கள். அம்மி மிதிக்கக்கூடாது என்கிறீர்களே; அருந்ததி பார்க்கக் கூடாது என்கிறீர்களே, ஆணுக்கும் ஆணுக்குமா திருமணம் செய்து வைக்கிறீர்கள்? ஆணுக்கும் பெண்ணுக்கும்தானே எங்களைப்போல திருமணம் செய்து வைக்கிறீர்கள் என்றெல்லாம் கேலி பேசினார்கள்.

அன்று பெரியார் இட்ட ஒரு வித்து, இன்றைக்கும் ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி, அரசு அமைந்திருக்கிறது என்றால் அந்தப் பெருமை ஐயா அவர்களையே சேரும்.

இங்கே அன்பில் தர்மலிங்கம் திறந்து வைத்த பகுத்தறிவுக் கண்காட்சியில் உள்ள படங்கள் ஆபாசமாக இருக்கின்றன என்றால் அவை நானோ தந்தை பெரியாரோ வீரமணியோ நாவலரோ எழுதி வைத்த படங்கள் அல்ல.

திருத்தலங்களிலே தேர்களில் உள்ள சிற்பங்களின் புகைப்படங்களே அங்கு இருக்கின்றன. இப்போது நடக்கும் சில கண்காட்சிகளில் இது ஆபாசம் என்ப தற்காகத் தடை செய்கிறோமே இதை என்ன செய்வது?

90 வயதானாலும்கூட அரசியலில் இளம் மான்குட்டி போலவே துள்ளிக் கொண்டிருக்கிறார் தந்தை பெரியார் அவர்கள். அந்த மான்குட்டியின் எண்ணங்களை ஒரே அடியாக நிறைவேற்றாவிட்டாலும் மெல்ல மெல்ல அவற்றிற்கு இந்த அரசு மதிப்பளிக்கும்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் பேசினார்.

உடன்பிறப்பே, அந்தக் கூட்டத்தினர் முழக்கமிட்ட பிறகும் அந்த மேடையில் நான் தொடர்ந்து பேசியிருக்கிறேன் - கடவுளைப் பற்றி தி.மு.கழகத்தின் கொள்கையை, அண்ணாவின் கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறேன் - சலசலப்புக்கு அஞ்சக் கூடாது என்று தந்தை பெரியார் எனக்கு போதித்த அந்தத் துணிவோடும் - அண்ணா வழங்கிய அந்தக் கனிவோடும் பெரியார் அவர்களின் முன்னிலையிலேயே எனது முழு உரையையும் ஆற்றி முடித்திருக்கிறேன். ஆனால் வீரமணி அவர்களின் விடுதலை எழுதுகிறது; நான் ஏதோ சமாளித்து, இடத்தைக் காலி செய்து விட்டுப் போய் விட்டேன் என்று!

பழுத்த ஆத்திகரான மடாதிபதிகள் - கடவுள் மறுப்பை ஏற்காத குன்றக்குடி அடிகளார் போன்றவர்கள், மதுரை ஆதீனகர்த்தர் போன்றவர்கள் துணிவுடன் நின்று பெரியார் முன்னிலையிலோ; திராவிடர் கழக மேடைகளிலோ பேசமுடியுமென்றால் - என்னைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் கடவுள் நம்பிக்கை இல்லாத ஒருவன் - பெரியார் முன்னிலையில் கழகத்தின் கொள்கை ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பேசுவதற்கு எதற்காக அஞ்ச வேண்டும்? அந்த அச்சத்தை அய்யாவோ, அண்ணாவோ எனக்குக் கற்பித்திடவில்லையே!

தனிப்பட்ட முறையில் கடவுள் நம்பிக்கை இல்லாதிருப்பதற்கும் - அதை ஒரு இயக்கக் கொள்கையாகவே வைத்து நடத்துவதற்கும் வேறுபாடு உண்டு -

பண்டித நேரு கடவுள் நம்பிக்கையற்றவர் - ஆனால் அதை அவர் காங்கிரசின் கொள்கையாக ஆக்கவில்லை!

ஏன்; நண்பர் இந்துராம் கூட தன்னை ஒரு நாத்திகன் என்பதாக ஆனந்த விகடனுக்குப் பேட்டியளித்துள்ளார். ஆனால் அது, அவரது பிரண்ட் லைன் ஏட்டின் கொள்கையாக ஆக்கப்படவில்லை.

எனினும் பெரியார் அவர்கள் கடவுள் மறுப்பு என்பதைக் கொள்கையாகவே தனது இயக்கத்தில் கடைப்பிடிக்க கண்டிப்பு காட்டியவர்.

தி.மு.கழகம் கடவுள் மறுப்பைக் கொள்கையாக ஆக்கிக் கொள்ளவில்லை. அண்ணாவும் தனிப்பட்ட முறையில் கடவுள் நம்பிக்கையில்லாதவராயினும் அதனைக் கட்சிக் கொள்கையாக்கிட எண்ணிடவில்லை.

முதலமைச்சர் என்ற பெரும் நினைப்பு என்கிறாரே வீரமணி; அப்படியொரு பதவி வராத காலத்திலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள், பிள்ளையாரை உடைக்கவும் மாட்டோம் - பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கவும் மாட்டோம் என்று வெளிப்படையாகச் சொன்னவர்தான்! அதற்குப் பிறகுதான் தி.க.வுக்கும், தி.மு.க.வுக்கும் 1967 உறவு புதுப்பிக்கப்பட்டது என்பது நாடறிந்த உண்மை!

பெரியார், திராவிடர் கழகக் கொள்கைகளில் ஒன்றாக கடவுள் மறுப்பு என்பதை ஆக்கினார். அதைத்தான் தினமணி பேட்டியில் முதல் பதிலில் ஒப்புக்கொண்ட தளபதி வீரமணி அவர்கள் - அடுத்த பதிலில் அது கொள்கையே அல்ல என்று ஓங்கி அடித்துச் சொல்லிவிட்டார். ஏனிந்த குழப்பம் என்று கேட்டால்; தி.மு.க.வுக்கு கொள்கை கிடையாது - தி.மு.க.வின் லட்சியம் பதவிதான் என்கிறார்!

பதவியாளர்களின் பார்வைக்கு தவமிருப்பவர்கள் - யார்? பதவியாளர்களால் பலன் பெற்றவர்கள் - யார்? லட்சியங்களுக்காக பதவி இழந்தவர்கள் யார்?

இதனை நாடு உணருமெனினும்; இடையில் எழும் மக்கள் மறதி போக்கிட நீயும் அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காகவே; கடுமையான வலியையும் பொறுத்துக்கொண்டே இந்தக் கடிதத்தை உனக்கு எழுதினேன்.

நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும்போது, இந்தப் பிரச்சினை குறித்து எழுத நேர்ந்தது எனக்கு விருப்பமில்லையெனினும் - வரலாற்றுக் குழப்பத்தையும், கொள்கைக் குழப்பத்தையும் போக்கிட இந்த விளக்கம் அளிக்க நேரிட்டுவிட்டது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

10-10-1994

2181. மனித நேயமும் - மதுரைச் சம்பவமும்

உடன்பிறப்பே,

இந்து முன்னணியின் மாநிலத்தலைவர் தாணுலிங்க நாடார் அவர்களின் மறைவுக்குப் பிறகு அந்தப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டவரும், நாற்பத்தி ஐந்தே வயதை உடையவருமான மதுரை இராசகோபாலன் படுகொலைக்கு ஆளாகியுள்ளார். தனது உயிருக்குப் பாதுகாப்பு இல்லையென்றும், அடிக்கடி கொலை மிரட்டல்கள் வந்து கொண்டிருப்பதாகவும் காவல்துறை அதிகாரிகளுக்கு அவர் அறிவித்திருந்தும்கூட; அந்தத் துறையினர் அதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திடவில்லையென்றும் மதுரைச் செய்திகள்; ஏடுகள் வாயிலாக வந்துள்ளன. செய்தி உண்மையானால், காவல் துறையும் அதனை இயக்கும் அரசும் கடுமையான கண்டனத்துக்கு உரியவைகளாகும்.

அரசியல் அரங்கிலாகட்டும் - சமுதாயத்துறையிலாகட்டும் - மதவாதங்களிலாகட்டும் - எத்தகைய கருத்து வேறுபாடுகளையும்; பேச்சால், எழுத்தால், அறவழிச் செயலால் சந்தித்து வெற்றி காண்பதில் குறியாக இருக்கவேண்டுமே தவிர, கருத்து மாறுபாடு காரணமாக கழுத்தை அறுத்தோ அல்லது காந்தியடிகளைச் சுட்டு வீழ்த்தியது போலச் சாவில் சாய்த்தோ வெற்றி கண்டு விடலாமென எண்ணினால்; அது தற்காலிகமாகப் பழிவெறியைத் தணித்திட உதவுமே தவிர வெற்றி பெற்றதற்கான வீரப்பதக்கத்தை, அந்த வெறியர்கள் யாராயிருப்பினும் அவர்களுக்கு வரலாறு வழங்கவே வழங்காது!

தனது தலைமையில் உள்ள இந்து முன்னணி இந்த மாநிலத்தில் வளரவும் வலிவு பெறவும் அயராது பணியாற்றியவர் படுகொலைக்கு ஆளான இராசகோபாலன் என்பதையும் - வாலிப வயதில் மனைவி மக்களையும் பெற்றோரையும் உற்றார் உறவினரையும் கதறி அழ விடுத்து வன்முறைக்குப்

பலியாகிவிட்டார் என்பதையும் - நெஞ்சைக் குலுக்கும் உணர்வுடன் நினைத்துப் பார்த்து நாமும் நெகிழ்ந்து போகிறோம்.

அதே நேரத்தில் ஒரு பிரிவினர், தாங்கள் ஏற்றுக் கொண்ட, அல்லது பிறந்த மதத்திடம் காட்டும் பரிவை, பிரியத்தை, நாம் தடுத்திட முனையவில்லை எனினும்; அப்பிரிவினர் வேறொரு மதத்தின் மீது வேண்டுமென்றே வெறுப்பை நெருப்பாகக் கக்கிடும் வெறிச் செயலை அனுமதித்திட இயலாது! முடியாது! அனுமதித்தால்; அதன் காரணமாக விதை விழுந்து, வேரூன்றி, அது அமளி விருட்சமாக வளர்ந்து அதில் குலுங்கும் விஷக்கனிகளை உண்டு மனிதப் பறவைகள் ஒன்றையொன்று மாய்த்துக் கொள்ளக் கூடிய விசித்திரமும் குரூரமும் வாய்ந்த நிகழ்வுகள் ஏற்பட்டே தீரும்.

நாட்டில், கிறிஸ்தவர்களுக்கென்று தேவாலயங்கள் இருக்கின்றன. இஸ்லாமியர்களுக்கென்று தர்கா, பள்ளிவாசல், மசூதிகள் இருக்கின்றன. இந்துக்களுக்கென்று எண்ணிறந்த கோயில்கள் இருக்கின்றன. ஏனைய மதத்தினருக்கும் வழிபடும் இடங்கள் இருக்கின்றன. அவரவர்களும் அவரவர்களின் ஆலயங்கள் அல்லது வழிபடும் இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளோடு - தங்கள் செயல்பாடுகளை அமைத்துக் கொள்வதே பெரும்பாலும் வழக்கத்தில் இருந்து வருபவை.

ஆனால் இதிகாசங்களிலோ - புராணங்களிலோ கூட ஆதியிலே இடம்பிடிக்காத ஆனைமுகக்கடவுள் விநாயகர்; அந்த இதிகாச, புராணங்களின் இறுதிக் காலத்தில் இடம் பிடித்து, அதனை அரசியல் காரணத்துக்காக வடநாட்டில் லோகமான்ய பாலகங்காதர திலகர் பயன்படுத்தி, இந்து மத நெறியை வெறியாக மாற்றுகிற அளவுக்கு பிரமாண்டமான ஊர்வலங்களை நடத்தி - முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், நாற்பத்தி எண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களுக்கும், மும்மூர்த்திகளுக்கும், கந்தர்வர், கின்னரர், கிம்புருடர், அட்டதிக்குப் பாலகர் ஆகியோருக்கும் எடுக்கப்படுகிற இந்து மத விழாக்கள் போதாதென்று; இயல்பாக வீடுகளில் எளிய முறையில் கொண்டாடப்பட்ட விநாயக சதுர்த்தி விழாவை; ஜனாதிபதிகள், பிரதமர்கள், திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சியின் ? அடையாளச் சின்னமான முதலமைச்சர்கள் பிரார்த்தனை, வாழ்த்துக்கள் வழங்குகிற அளவுக்கு விரிவாக்கிப் பெரிது படுத்தி - குறிப்பாக இஸ்லாமிய மக்களுடன் மோதிக்கொள்கிற அளவுக்கு விபரீத விழாவாக மாறும்

நிலையை ஏற்படுத்திவிட்டுப் போய்விட்டார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஏற்கெனவே பல்வேறு காரணங்களால் வடபுலத்தில் துளிர்விட்ட இந்து முஸ்லீம் மதக் கலவரங்கள், இதுபோன்ற செயல்களால் மேலும் தூண்டிவிடப்பட்டுவிட்டன. இந்த வேண்டாத வேலையின் உச்சகட்டமே பாபர் மசூதி பிரச்சினையாக உருவெடுத்து, இன்னும் தீராத தீங்காக வன்முறைத் தீக்குழம்பை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞானப் புதுமைகளால் வித்தகம் புரியும் வெளிநாட்டுக்காரர்கள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் அல்லர் - எல்லோருமே இங்கர்சால்கள் அல்லர்! எனினும் அவர்கள் கடவுளர் விழாக்கள் என்ற பெயரால் இந்தியாவைப் போல மோதிக் கொண்டு அலையவில்லை. எங்காவது அப்படி ஒரு சில நிகழ்வுகள் அங்கும் இருப்பின் அதுகூட நம்மிடம் கற்றுக் கொண்டதாகவே இருக்கும். வேறு சில காரணங்களுக்காக; வெளிநாடுகளில் போர் விமானங்கள் பறக்கின்றன - குண்டுகளை வீசுகின்றன - பிணங்கள் குவிகின்றன - அமைதி எனும் இனிய பண்பாடு சீரழிகிறது; இல்லையென்று சொல்லவில்லை! ஆனால் இங்கே ஆண்டவன் பெயரால் - ரத்தக் களறி என்பது மறவெறியைத் தூண்டுவதற்காகவே கிளம்பியுள்ள ஒரு சில விஷமிகளால்தான்; அந்த விஷமிகள் அமைத்துக் கொண்டுள்ள இயக்கங்களால்தான் என்பது தெளிவான உண்மையாகும்!

சாதுக்கள், சாமியார்கள் என்று பெயர்! அவர்தம் கையிலோ சூலங்கள், ஈட்டிகள், சுக்குமாந்தடிகள்! தேவைதானா? மதத்தின் பெயரால் ஒரு முன்னணி என்றால்; அந்த மதத்திற்கு ஆக்கபூர்வமான காரியங்கள் ஆரியம் செய்யலாமே! அதைவிடுத்து திருவல்லிக்கேணிக்கும் கீழக்கரைக்கும் விநாயகர்களை ஆயிரக் கணக்கில் தூக்கிக் கொண்டு படையெடுப்பதுவா இந்து மதத்திற்கான திருத்தொண்டு?

உடன்பிறப்பே, இதையெல்லாம் நான் எழுதும் போதும் பெரியாரின் மாணவன்தானே; அண்ணாவின் தம்பிதானே - அதனால்தான் இப்படி அவனையறியாமலேயே தானாக அவன் கை எழுதுகிறது எனக் காழ்ப்பு உமிழ்வோரை நான் அறிவேன். நான் மட்டுமல்ல; இதோ கலர்ப்பொடி கலாச்சாரம் எனத் தலைப்பிட்டு ஆனந்த விகடன் 25.9.94 ஏடு; ஓர் உரையாடல் நிகழ்ச்சி வடிவில்

கட்டுரையொன்று வெளியிட்டுள்ளது. அதனை நீயும் படித்து, மற்றவர்க்கும் படித்துக் காட்டு!

இதோ விகடனில் வந்த கட்டுரை

ரமா என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த சுமதி, ஹாலில் ரமா உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அவள் அருகில் சென்றமர்ந்து நல்ல வேளை... போன ஞாயிற்றுக்கிழமை எந்த விதமான வன்முறைக் கலாட்டாவும் இல்லாம விநாயகர் ஊர்வலம் இந்த வருஷம் நடந்தது என்றாள்.

ஒருவிதத்திலே அது மனசுக்கு சந்தோஷமாத்தான் இருக்கு... ஆனா, நம்ம கலாசாரச் சீர்கேட்டைப் பத்தி நினைச்சாத்தான் வருத்தமா இருக்கு ஆன்ட்டி.

நீ என்ன சொல்றே... புரியலையே!

எனக்குத் தெரிஞ்சு பத்து வருஷத்துக்கு முன்னே கூட இப்படி விநாயகர் ஊர்வலம்... அதைத் தொட்டுக் கலாட்டா எல்லாம் கிடையாது.

அது சரி... நம்ம பழக்கப்படி விநாயகசதுர்த்தி அன்னிக்குக் களிமண்ணால பண்ணின விநாயகரையும், காகிதக் குடையையும் வாங்கி பூஜை பண்ணுவோம். மறுநாள் புனர்பூஜை பண்ணி அந்த விநாயகர் பொம்மையை வீட்டு கிணத்துலேயோ, குளத்துலேயோ, கடலிலேயோ நம்ம சௌகரியப்படி கரைச்சுடுவோம்... இப்பதானே ஒரு வாரம், பத்து நாள்னு வெச்சிருந்து கடல்ல கரைக்கறது பெரிய விழாவா ஆயிடுத்து...

அதைத்தான் ஆன்ட்டி நான் கலாசாரக் சீர்கேடுங்கறேன். இப்படிப் பத்து நாள் விழா கொண்டாடிக் கடல்ல கரைக்கறது மகாராஷ்டிரத்துலதான் வழக்கம். பம்பாய்ல பெரிசா செய்வாங்க. அதையே நாமும் காப்பியடிச்சா நம்ம பழக்கவழக்கங்கள் மாறிடுமில்லே... இப்படியே போனா நவராத்திரி ஒன்பது நாள் ஆனவுடனே பெங்காலி போல துர்க்கைப் பூஜை மாதிரி இங்கேயும் செய்யலாமே... துர்க்கை அம்மன் சிலையை எடுத்து கங்கையிலே விடறா மாதிரி இங்கேயும் காவிரியிலே விடலாமே... நமக்கு அது சரியா?

இந்துக்களுக்கு விழா எடுக்க சான்ஸ் கம்மி... அதனால இப்படிப் பண்றாங்க ரமா! நமக்கு என்ன கம்மி... தேர்த் திருவிழா இல்லியா... தெப்பம் இல்லை... மார்கழிமாச பஜனை இல்லையா?

அதெல்லாம் கோயிலைச் சுத்தித்தானே... நாலு இடத்துக்கு ஊர்வலமா போறதில்லையே...?

நாலு இடத்துக்கு ஊர்வலமா போறதுலதானே சங்கடமே, வருது ஆன்ட்டி... கடவுள் பத்தி ஆத்மார்த்தமா இருக்கணும்கறதுதான் நம் மதம்; நம் தமிழ்கலாசாரம்... உருட்டு கட்டையைச் சுத்திகிட்டு, வாற்வங்க போறவங்க மேலேயெல்லாம் கலர்ப்பொடி தூவிட்டுப் போறதில்லே ஆன்ட்டி.

அதென்னமோ நீ சொல்றது சரிதான். வடக்கே ஹோலிப் பண்டிகைக்குச் செய்யறதை இங்கேயும் ஹோலின்னு சொல்லிண்டு கலர்ப்பொடியை எல்லார் மேலேயும் வீசறாங்க... அந்த கலர்ப்பொடி விவகாரம் விநாயகர் ஊர்வலத்துலேயும் வந்துட்டது!

அன்னிக்கு நான் அவரோட ராயபுரம் போக வேண்டியிருந்தது ஆன்ட்டி. பீச் ரோடு பூரா ப்ளாக் பண்ணிட்டாங்க... எந்தப் பக்கமும் போக முடியலே. அப்புறம் சென்ட்ரல் ஸ்டேஷன்... சைனா பஜார்ரை சுத்திண்டு போய்ச் சேர்ந்தோம். அப்ப எவ்வளவு போலீஸ் மேலேயெல்லாம் கலர்ப்பொடி அடிச்சிருந்தாங்க தெரியுமா ஆன்ட்டி... பரிதாபமா இருந்தது பார்க்க...

இந்தி மொழியை எதிர்க்கறாங்களே இந்த அரசியல் கட்சிக்காரங்க... ஆனா, இந்தக் கலாசார ஊடுருவலை யாரும் எதிர்த்ததாகத் தெரியவில்லையே ரமா!

கலைஞர் மட்டும் லேசா இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். மற்றவர்களுக்கு பயம்! உடனே அந்தக் கட்சிக்கு இந்து மதவிரோதக்கட்சின்னு பெயர் வெச்சிடுவாங்களே... வோட்டுக்குப் பயந்து சும்மா இருக்காங்க அவங்க. உண்மைல பார்க்கப்போனா இந்தி மொழி வளர்றதனால தமிழ்மொழி கெட்டுப்போகப் போறதில்லே... மொழியே ஒருவர் சொல்றதை மற்றவர் புரிந்துகொள்ள ஒரு

சாதனம்தான். இப்படி நம்ம மண்ணுக்கு இல்லாத கலாசாரத்தை ஊடுருவ விடறதுலதான் உண்மையான தமிழ் பண்பாட்டுக்குக் கேடு வரும். இப்பவே பேல்பூரி, பாவ்பாஜின்னு சாப்பிடறதும், ராக்கி கட்டறதும், குஜராத்தி, மராட்டிபோல சேலை உடுத்தறதும் ஃபேஷனா போயிண்டிருக்கு... சாப்பாட்டுலேருந்து கடவுள் வழிபாடு வரையிலும் எல்லாமே மாறிடுத்து...

ஆமாமாம்... கோயில்ல மணி அடிக்கறதுகூட அப்படித்தான் ரமா. இந்த நேரத்துல இந்தச் சமயத்துலதான் மணி அடிக்கணுங்கறது நம்ம கோயில் வழிபாடு. வடக்கத்தியக் கோயில் மாதிரி உள்ளே போகும்போதும் வரும்போதும் கடவுளுக்கு அட்டெண்டென்ஸ் கொடுக்கறது மாதிரி மணி அடிக்கக்கூடாது.

இன்னும் ஒரு ஐம்பது வருஷத்துக்கு அப்புறம் நாம விநாயக சதுர்த்தியின் போது எப்படி பூஜை செய்தோம்ங்கறதே மறந்துபோய்... எவ்வளவு பெரிசா ஊர்வலம் நடத்தலாம்... அப்போ என்னென்ன விதமா விழா கொண்டாடலாம்னு யோசனை பண்ணத்தான் தமிழனால முடியும்!

வடக்கத்தியக் கலாசாரம் நம்மளை அப்படியே சாப்பிட்டுவிடும்ங்கறே... இல்லையா...

நடக்கறதைப் பார்த்தா அப்படித்தான் தோணுது....

உடன்பிறப்பே, கழகத்தவராகிய நமக்கு மட்டுமல்ல; தமிழகத்தில் உள்ள அனைவருக்குமே ஏற்பட்டுள்ள உணர்வு இதுதான்!

விகடனில் வெளிவந்ததை நான் எடுத்துக்காட்டியிருப்பது; மதுரைச் சம்பவத்தை நியாயப்படுத்த அல்ல! மதுரை போன்ற மனித நேயமற்ற இந்தக் கொடிய சம்பவங்கள், நச்சுக் கொடியாக படர்ந்து அமைதியைக் கொள்ளை கொள்ளாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

12-10-1994

2182. வதந்தி, வன்முறைக்கு வித்து

உடன்பிறப்பே,

வதந்திக்குக் கால்கள் கிடையாது. பிறவியிலேயே ஊனம்! நொண்டி! முடம்! ஆனால் ஈசல் பூச்சிக்கு இருப்பதுபோல சிறகுகள் உண்டு! அந்த சிறகுகளைப் போலவே, பறக்கத் தொடங்கிய சில விநாடிகளுக்குள் வதந்திகள் வலுவிழந்து உதிர்ந்துவிடக் கூடியவை! ஆனால் வதந்தி எனும் அந்த ஈசல்பூச்சி, பறந்து அடங்குவதற்குள் தேனீக்களைப்போலக் கொட்டிவிடும் குணம் கொண்டதாகும்.

தேனீக்கள் எனும் நல்ல பெயரை விஷமிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும் சூட்டித் தீர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டமைக்காக, தேனீக்களிடம் நான் மன்னிப்புக்கூடக் கேட்டுக் கொள்வேன்.

ஈசல்தானே பறக்கிறது என அலட்சியமாக இருப்பின்; தேனீக்களின் கொடுக்குகள் போல வதந்தி நம்மைத் தாக்கும். பொது மக்கள் அவதிப்படுவர். வியாபார நிலையங்கள் சமூக விரோதிகளின் வேட்டைக் காடாகும். வன்முறைக்கு நல்ல விருந்து கிடைக்கும்.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியாக மனிதனையே கடித்தது என்பார்களே பழமொழி; அந்தப் பழமொழி நம் வரையில் வதந்தியைப் பொறுத்து உண்மையாகவே ஆகிவிட்டது. ஆம்; அந்த அளவுக்கு பரப்பப்பட்டுவிட்டது.

பதினைந்து நாட்களுக்கு முன்பு என் கழுத்திலும் முதுகிலும் வலித் தொல்லை ஏற்பட்டு; அதற்கான சிகிச்சையும் அதைத் தொடர்ந்து ஓய்வும் மேற்கொள்ள வேண்டிய நிலைமை எனக்கு உருவானது. அதன் காரணமாக ஒரு மாத ஓய்வு எடுக்க நேரிட்டுள்ளது என்பதை தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்தது. அப்படியொரு செய்தி வந்தபோது; அது குறித்து

எந்த வதந்தியும் கிளம்பவில்லை. ஆனால் பதினைந்து நாட்களில் பெருமளவுக்கு வலித் தொந்திரவும் நீங்கி; அக்டோபர் 10 ஆம் தேதியன்று காலை 11 மணியளவில் அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்துக்குச் சென்று, பேராசிரியர் அவர்களுடனும் மற்றும் கழக நிர்வாகிகளுடனும் - காண வந்த கழக முன்னணியினருடனும் கலந்து பேசிவிட்டு பகல் 1 மணி அளவில் இல்லம் திரும்பினேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அன்றுதான் முரசொலியில் மூன்று பக்கக் கடிதமொன்றும் எழுதினேன். உடல் நலிவு நீங்கி, கழக அலுவலகப் பணிகளை நான் கவனிக்கத் தொடங்கியதை, மாலை ஏடுகளும், மறுநாள் காலை ஏடுகளும் வெளியிட்டிருந்தன.

ஆனால்; அக்டோபர் 9 -ஆம் தேதி இரவே; யாரோ மூட்டிவிட்ட வதந்தி, புகையத் தொடங்கி - சென்னை நகரில் சிற்சில இடங்களில் பரபரப்புத் தோன்றி அடங்கிய நிலையில் இருந்தபோது - 11- ந் தேதி முரசொலி அலுவலகத்திற்கும், அண்ணா அறிவாலயத்திற்கும் சென்றபோது - பெருங்கூட்டமாகக் கழக உடன்பிறப்புகள் கண்கலங்க என்னை ஆவலுடன் உற்று நோக்கினர்.

அக்டோபர் 9, 10, 11 ஆகிய இந்த மூன்று நாட்களும் வீடுகளுக்கும், கழகத் தொடர்புடைய அலுவலகங்களுக்கும், ஆதரவாளர்களான நண்பர்களுக்கும், பத்திரிகை அலுவலகங் களுக்கும் சென்னையில் மட்டுமல்லாமல்; தமிழகத்தின் பல பகுதிகளுக்கு வந்துள்ள தொலைபேசிகளும், அந்தப் பகுதிகளில் இருந்து சென்னைக்கு வந்த தொலைபேசி விசாரிப்புகளும் கணக்கிலடங்கக் கூடியவை அல்ல! அனைத்தும் கண்கலங்கும் நிலையிலானவை!

மிகக் கவலைக்கிடமான நிலையில் நான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும்; அந்த நிலையும் மீறிப் போய் விட்டதென்றும் - வதந்தி எழுந்து அந்தப் புற்றீசலின் புறப்பாட்டைச் சமாளிக்க முடியாமல் தொடர்புடைய அனைவரும் திணற நேரிட்டது. நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், நான் நலமாக இருக்கிற செய்தியை ஏடுகள் மூலம் அறிவித்து பொய்யுரைகளைக் கழகத்தினர் நம்பத் தேவையில்லை என அறிவுறுத்துகிறார். நானும் என் கைப்படவே கடிதம் எழுதி என் நலத்தை அறிவிக்கிறேன்.

ஆனாலும் தொலைபேசிகளின் மணிகள் ஓய்வின்றி ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன. குவைத், துபாய், சிங்கப்பூர், மலேசியா, பம்பாய் என தொலைபேசிகள் துளைத்தெடுக்கின்றன. நானே அவர்களிடம் நேரில் பேசி நலமாக இருக்கிறேன் என்று என் குரல்கேட்ட பிறகுதான் நிம்மதி அடைகிறார்கள். எங்கிருந்தோ விபரமறிய திரு. வாழப்பாடியார் அவர்கள் கேட்டதாக தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து நண்பர் கிள்ளிவளவன் கேட்கிறார் பதற்றமுடன்! டெல்லியிலிருந்து திரு. மூப்பனார் அவர்கள் தொலைபேசித் தொடர்பு கொண்டு என்னுடன் தழுதழுத்த குரலில் உடல் நலம் விசாரித்த பிறகே; தனக்குக் கிடைத்த தகவல் தவறானது என்று ஆறுதல் கொள்கிறார்.

மதுரையில் மனஉறுதிக்குப் பேர் போனவர்களில் ஒருவர் எனப்படுபவரும் கழக நிர்வாகப் பொறுப்பில் பல்லாண்டுகளாக இருந்தவருமான தாவூத்தேகூட இந்த வதந்தியை நம்பி, வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களிடம் ஓடி அவர் முன்னால் அழுது புலம்பினார் என்றும் - பதறிப்போன பழனிவேல்ராசன் அவர்கள் தாவூதை சமாதானப்படுத்தி அழகிரி வீட்டுத் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்ற போது; அழகிரி குடும்பத்துடன் சென்னைக்கு விரைந்து சென்றுவிட்டதாக தகவல் வந்துள்ளதாக வேறு சிலர் அழுதவாறு கூறிட, பின்னர் பழனிவேல்ராசன் அவர்கள் காவல் துறையினரிடமும் - பிறகு அழகிரி வீட்டிலும் சென்று விபரமறிந்து அந்தப் பதைப்பிலிருந்து மீளாமல் இன்று காலையில் என்னிடம் தொலைபேசித் தொடர்பு கொண்டு உரையாடிப் பெருமூச்சுவிட்டார் என்றால்; எத்தகைய வலுவான அளவில் விஷமப்பிரச்சாரம் ஒரு கூட்டத்தினரால் - அல்லது ஒரு துறையினரால் திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்பதை அலட்சியமாகப் புறக்கணித்துவிட முடியாது. நோயில் வீழ்ந்துவிட்டார் - இனிமேல் அவ்வளவுதான் - எனவே அங்கிருந்து பயனில்லை - விலகி எம்மிடம் வந்துவிடு - என மறைமுகமான மிரட்டல் அழைப்பைத்தான் இந்த வதந்திகள் தமது சிறகுகளில் சுமந்து கொண்டு திரிகின்றன.

ஈசல் பிறகு விரைவில் விழுந்துவிடுவது போல அந்த நல்லெண்ணக்காரர்கள் திட்டமும் சிதறிவிடும் என்பதைக் காலம் உணர்த்திடத் தவறாது. இமயத்தையே பறிகொடுத்துவிட்ட

பிறகும், அந்த இயக்கத்தைக் காத்து நடத்தி வருகிறோம் நாம் என்பதை நமது சரித்திரம் உணர்ந்தோர் சரியாகவே புரிந்து கொள்வார்கள்.

இன்று இந்த இயக்கம் ஒரு தனி மனிதனின் உழைப்பு, ஆற்றலால் இல்லை! இது ஒரு கூட்டுமுயற்சி! இதைத்தான் அண்ணா சொன்னார் - அதையே கடைப்பிடித்தார் - நானும் அப்படித்தான் என்பதை நீயும் மறவாதே - நம்மை வீழ்த்த சதி செய்வோரும் மறந்து மோசம் போக வேண்டாம்; பாவம்!

நமது கழக முன்னணியினர் மட்டுமல்லாமல் கழகத்தின் தோழமைக் கட்சிகளின் அலுவலகங்களிலிருந்தும், தலைவர்களிடமிருந்தும், பிரபல பத்திரிகைகளின் ஆசிரியர்கள், உரிமையாளர்கள், நிருபர்களிடமிருந்து தொடர்ந்து இதே விசாரிப்புகள்! ஈசல், தேனீயாகக் கொட்டியதால்; சில இடங்களில் கலவரங்கள்! வணிகர்கட்கும், பொது மக்களுக்கும் இடையூறுகள்! உழுவலன்பர்கள், உற்ற தோழர்கள், உடன்பிறவாச் சகோதரர்கள் தொலைபேசியில் மட்டுமின்றி; தொலைதூரமிருந்து விரைந்து வந்து நேரில் கண்ட பிறகே ஆறுதல் அடைதல்!

வதந்தியின் தாக்கம் எவ்வளவு கடுமையாக இருந்திருந்தால் - நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு; இதுவரை என்னைக் காணாதிருந்த தம்பி டி. ராஜேந்தரே வீட்டுக்குப் பரபரப்புடன் வந்திருப்பார் என்பதை நீயே எண்ணிப் பாரேன்!

தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள் பழைய நட்பின் பாசம் குறையாமல் மிகுந்த கவலையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடல்நிலை விசாரித்ததோடு; பரவியுள்ள வதந்திக்கு என்ன காரணம் என்பதையும் பதற்றமுடன் கேட்டார். நானும் அதைத்தான் ஆழமாக யோசிக்கிறேன் - இப்படியொரு தீய சிந்தையுடன் திட்டம் தீட்டி, இந்த வதந்தியைப் பறக்கவிட்டது யாராக இருக்கக் கூடும்!

எப்படியோ புறப்பட்டுவிட்ட வதந்தியை; மறுநாள் நடைபெற்ற மதுரைக் கொலைச் சம்பவத்துடன் பிணைத்துவிட வேண்டுமென்ற நினைப்புடன் - வன்முறைகளை அதிகப்படுத்திட யாரேனும் முயற்சி மேற்கொண்டனரா? அல்லது; மதுரைச் சம்பவத்தின் தாக்கத்தைக் குறைத்து வேகத்தைத் தணித்திட என் உடல் நலம் பற்றிய புரளியை; ஏதோ ஒரு துறையில் உள்ள

புத்திசாலிகள் கிளறிவிட்டு - அது மேலும் பரவிட வேண்டுமென்று ஆசை கொண்டனரா?

கழகத் தலைவர் நலமாக இருக்கிறார் - வீண் வதந்திகளை நம்பத் தேவையில்லை என்று தலைமைக் கழகம் அறிவிக்கிறது என்ற செய்தியை பொருளாளர் வீராசாமி, கொள்கை பரப்புச் செயலாளர் என்.வி.என். சோமு, தகவல் தொடர்பு செயலாளர் ஆலடி அருணா ஆகியோர் தொலைக்காட்சி, வானொலி நிலைய நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு கூறுமாறு பலமுறை கேட்டும், சமூகவிரோதிகளுக்கு இடம் தராமலிருக்கவே இச்செய்தியைச் சொல்லச் சொல்கிறோம் என விளக்கம் கூறியும்கூட; 'ஆமாம் சார்! எங்களுக்கும்கூட இப்படிப்பட்ட தொலைபேசி விசாரிப்புகள் வருகின்றன' என்று ஒத்துக்கொண்ட அந்த நிர்வாகிகள், கடைசியில் தலைமைக்கழகம் தந்த செய்தியைக் குப்பையிலே கிழித்துப் போட்டு விட்டார்கள். அது ஏன்? தெரியவில்லை!

செய்தியையே வெளியிட மறுத்துவிட்ட தொலைக்காட்சி, வானொலி நிலையங்களுக்கும் - பூதக்கண்ணாடி வைத்துத் தேடினால்கூட கண்டுபிடிக்க இயலாத அளவுக்கு தலைமைக்கழகச் செய்தியை வெளியிட்ட ஒரு சில ஏடுகளுக்கும்; ஏதோ ஒரு முக்கியமான துறையிலிருந்து குறிப்பு போயிருக்குமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. மதுரைச் சம்பவம், தொடர் நிகழ்ச்சிகளாகப் பரவிவிடாமல் இருப்பதற்குக் கெட்டிக்காரத் துறையினர் பயன்படுத்திய தந்திரமாக; இந்த வதந்தியின் விளைவுகளைக் கட்டுப்படுத்த முனையாமல் இருந்திருப்பார்களேயானால்; அதற்கு நான் பயன்பட்டமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால் கடந்த மூன்று நாட்களாக; கழக உடன்பிறப்புகளும், உயிரனைய நண்பர்களும் - துடிதுடிப்புக்கு ஆளானதும்; ஒரு சில இடங்களில் சமூக விரோதச் செயல்கள் நடைபெற்றதும் - வன்முறை தலைகாட்டத் தொடங்கியதும்; விளையாட்டாகக் கருதக் கூடிய விஷயங்கள் அல்லவே!

தங்களின் அன்புக்குரிய ஒருவருக்கு அப்படி ஏதோ ஒன்று நடந்துவிட்டால்கூட, அதற்காக - அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சமூகவிரோதிகள், கொள்ளையடித்தல், சூறையாடுதல், பொதுச் சொத்துக்களை அழித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்ட கடந்த காலநிகழ்வுகளையே நாம் கனவிலும்

ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல! ஏதும் எனக்கு நிகழாமல் உடல் நலமுடன் இருக்கும்போதே இப்படியொரு பிரச்சாரம் யாருடைய மனத்திருப்திக்காக நடத்தப்பட்டது? ஏன்? என்ன காரணம்? என்ன திட்டத்துடன்?

அண்ணா முதல்வராக இருந்தபோது; அவரது சிலையைச் சுற்றி கறுப்பு முக்காடு ஊர்வலம் நடத்தினார்கள். அப்போது அண்ணா என்ன சொன்னார் தெரியுமா? 'நான் மறைந்துவிட்டால் என் நண்பர்கள் எப்படி துக்கம் கொண்டாடுவார்கள் என்பதை நான் உயிரோடிருந்தே பார்க்கும் வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ளார்கள்' என்று சொன்னார்.

இன்று இந்த வதந்தி கிளப்பியவர்களையும் நான் அவ்வாறுதான் கருதி, அண்ணா அவர்கள், 'வாழ்க வசவாளர்கள்' என்றது போல 'வாழ்க வதந்தியாளர்கள்' என வாழ்த்துகிறேன்.

வதந்திகள் வன்முறைக்கு வித்திடும் ஆபத்து என்பதை உணர்ந்து; அது வெறும் ஈசல்பூச்சியின் சிறகுதானே - தானாகவே உதிர்ந்து விடும் என்று இராமல்; அது தேனீயாக மாறிக் கொட்டுவதற்கு இடந்தராது எச்சரிக்கையாக; இன்று மட்டுமல்ல - இதற்கும் மட்டுமல்ல - எப்போதுமே எதிலும் இருந்திடல் வேண்டுமென, உடன்பிறப்பே; உன்னையும் உன் போன்ற உடன்பிறப்புகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மூன்று நாட்கள் என்பால் காட்டிய தமிழ் மக்களின் அன்புக்கும் பாசத்திற்கும் அளவிலா ஆவலில் எழுந்த ஆர்வத்துக்கும்; என் உயிரினு மேலான உன் போன்ற உடன்பிறப்பு களுக்கும் - நண்பர்கள் அனைவருக்கும் என் இதய நன்றியைக் காணிக்கையாக்கி; என்றும் போல் என் பணி தொடரும் இந்த சூளுரையை மேற்கொள்வதைத் தவிர, இந்த இன்ப அதிர்வில் நான் வேறென்ன கூற முடியும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-10-1994

2183. பொற்காலமாம் இது?

உடன்பிறப்பே,

இது புரட்சி?யின் ஆட்சிக்காலம் - போலீஸ் துறையின் பொற்காலம் - இப்படித் தன்னைத்தானே நிலைக் கண்ணாடிக்கு முன்னால் நின்று புகழ்ந்து கொள்கிற ஜெயலலிதாவின் ஆட்சியில் போலீஸ் துறையினால் மக்களுக்கும், சட்டம், ஒழுங்கு, அமைதி போன்றவற்றுக்கும் பொற்காலமோ அல்லவோ; அந்தத் துறையிலே உள்ள பலருக்கு இது பொற்காலமாகத்தானிருக்கிறது. இக்கருத்து கேட்டு; எந்தப் போலீஸ் அதிகாரிக்கும் வருத்தமோ கோபமோ வரக்கூடாது என்பது என் வேண்டுகோள்! அதற்கு மாறாக சம்பந்தப்பட்டவர்களுக்கு, மனச்சாட்சி என ஒன்றிருந்தால்; அது அவர்களைத் திருத்த முனைந்து வெற்றி பெற்றால் அதற்காகப் பெருமகிழ்ச்சி அடைவேன்.

காவல்துறையில் உள்ளோரின் மனச்சாட்சிக்கு; கடந்த மூன்றாண்டுக் காலமாகத் தமிழகத்தில் அரசியல் காரணங்களால் ஏற்பட்ட படுகொலைகள் எத்தனை என்ற கணக்கு, நிச்சயமாகத் தெரியும். ஒவ்வொரு கொலையைப் பற்றிய விபரங்களுக்குள் செல்லத் தேவையில்லாமல் அவை குறித்து அவ்வப்போது முழுத்தகவல்கள் ஏடுகளில் வந்துள்ளன. அந்தக் கொலைகள் சிலவற்றில் அமைச்சரவையில் இருக்கும் சிலருடன் தொடர்புடைய அடியாட்கள், குண்டர்கள் பயன்படுத்தப்பட்டார்கள் என்பது காவல் துறையின் மனச்சாட்சிக்குத் தெரிந்திருந்தும் - அவற்றை திசை திருப்பி; அரசுக்குப் பிடிக்காத அதிகாரிகள், கட்சிகள் மீது பழிசுமத்துவதற்காகவே பொய் வழக்குகளை ஜோடித்து, அவற்றில் உண்மைக் குற்றவாளிகளையும் இணைத்து - அடிப்படை வழக்கைப் பொய்யில் கட்டியதின் மூலம், அந்த உண்மைக் குற்றவாளிகளைத் தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலப் பட்டிருக்கிறதா இல்லையா?

பலர் கண்கள் பார்க்க நடத்தப்பட்ட பச்சைப் படுகொலைகளில் தொடரப்பட்ட வழக்குகள்; இருவேறு கருத்துக்கு இடமில்லாமல் இவர்கள்தான் கொலைகாரர்கள் என்று மக்கள் மன்றம் எழுதாத தீர்ப்பளித்துவிட்ட நிகழ்வுகளில்கூட; நீதிமன்றங்களில் அந்த வழக்குகள், வழுக்குகிற நிலைமைக்கு சில காவல்துறை அதிகாரிகளால் ஆக்கப்பட்டிருக்கின்றனவா அல்லவா? அதனால் சில பல வழக்குகள் அந்தத் துறையின் சில அதிகாரிகளுக்குப் பொற்காலத்தை வழங்கியிருப்பதும் மறுக்க முடியாத தகவல்கள்தானே!

நீதி தாமதப்படுவது - அல்லது தாமதப்படுத்தப்படுவது - அதற்கு சர்க்காரே, சாய்காலாக இருப்பதும் பெரும் அநீதியல்லவா?

பொறுப்பில் இருப்போர், இதனைப் பட்டியலிட்டு வரிசைப்படுத்திப் பார்க்க மறுத்தாலும்; இவர்களைப் பொறுப்பில் அமர்த்திய பொதுமக்கள் எண்ணிப் பார்த்திட வேண்டாமோ?

கொலைகள், களவுகள், கடத்தல்கள் போன்ற சமூக விரோதக் கொடுஞ்செயல்கள், நித்ய நிகழ்ச்சிகளாகிவிட்டன! தனிப்படை நியமித்துப் புலன்விசாரணை என்ற அறிவிப்புகள்; சட்டம் ஒழுங்கு பற்றிக் கவலைப்படுவோருக்குச் சலிப்பு தட்டும் செய்திகளாகிவிட்டன!

கைது - வழக்கு - விசாரணை என்பவை, நாடகக்காட்சிகளாகி விட்டன! சில நேரங்களில் தெருக்கூத்துக்களாகக்கூட மாறிவிட்டன!

என்றோ ஒரு கொலை என்றால்; அதை நினைவு வைத்துக் கொண்டு - அதுகுறித்த நடவடிக்கைகளில் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டிருந்த பொது மக்களுக்கும்கூட; நாளொரு கொலை - பொழுதொரு சூறையாடல் எனச் செய்திகள் அடுக்கடுக்காகவரத் தலைப்பட்டவுடன்; அனைத்தையும் நினைவு வைத்துக்கொண்டு, அது என்ன ஆயிற்று? வழக்கு நடந்ததா? தண்டனை தரப்பட்டதா? என்பதை அறிந்து கொள்ளக்கூட முடியாத பொற்காலம் அல்லவா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தப் பொற்காலத்தை உருவாக்கி, நிலைநாட்டி, இதனை நீட்டிக்கச் செய்வதிலும் இன்றைய ஆளுங்கட்சியினரல்லவா அதிகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

தஞ்சை மாவட்டம் குடவாசலில் தங்கையன் என்ற மார்க்சிஸ்ட் தோழர் கொலையுண்டவர் - காரணம்; அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் எனக் கண்டு, அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்தியும்கூட அசைந்து கொடுக்கவில்லை; பொற்காலப் போலீஸ்துறை! ஆம்; அந்தத் துறையை இந்த அரசு, அசையவிடவில்லை!

தொடர்ந்து தஞ்சை மாவட்டத்திலேயே கொரடாச்சேரிப்பகுதியில் கண்மணி என்ற மார்க்சிஸ்டு கட்சி வாலிபர் துடிக்கத்துடிக்க - ஓடஓட விரட்டப்பட்டு - வெட்டுண்டு பிணமாக வீழ்ந்திருக்கிறார். இந்தக் கொலையும் ஆளுங்கட்சிக்காரர்களால் நடத்தப்பட்டுள்ளதாகவே செய்தி வந்துள்ளது.

மதுரையில் இந்து முன்னணித்தலைவர், தனது உயிருக்கு ஆபத்து உள்ளது - மிரட்டல்கள் வருகின்றன எனத் தெரிவித்தும் போலீசார் கண்டு கொள்ளவில்லை. விளைவு, விபரீதமாக முடிந்தது!

அந்த விளைவையொட்டி இந்து முன்னணியினர் வேறிடங்களில் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளை உரிய நேரத்தில் தடுத்து நிறுத்திடக் காவல்துறையினர் தக்க முறையில் கடமையாற்றிடவில்லை!

காலை மாலை நாளேடுகளைக் கையில் எடுத்தால் - வீடு புகுந்து கொலை! தொழிலதிபர் கொலை! வீட்டில் தனியாக இருந்த லட்சாதிபதி மனைவி கொலை! நகைகள் கொள்ளை! நீதிமன்றத்துக்கு எதிரிலேயே விலங்கிடப்பட்டு வந்த கைதிகள், போலீசார் முன்னிலையிலேயே வெட்டப்பட்டுக் கொலை! நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே கொலை! முதல்வர் குறித்து வழக்கு தொடுத்த காரணத்துக்காக நண்பர் ராஜாராம் வீட்டில் திராவகம் வீசி - கல் எறிந்து ரகளை - நீதிமன்றங்களுக்குள் ஆளுங்கட்சியைச் சேர்ந்த பெண்கள் சுப்பிரமணியசாமி போன்றவர்களுக்கு முன்னே தமது எதிர்ப்பை உணர்த்திய புரட்சிக்கரமான போர் முறை - இப்படிக் கொடுமையானதும், பழிவாங்கக் கூடியதும் - பண்பாட்டுக்கே உலைவைக்கக் கூடியதுமான - ஒரு பயங்கரக் கலாச்சாரம் இன்றைக்குத் தமிழகத்தில் வளர்ந்திருப்பதற்கும்

- அதனை வளரவிட்டிருப்பதற்கும் பெயர்தான், முதலமைச்சர் கூற்றுப்படி போலீஸ்துறையின் பொற்காலம் என்றால்; அவருக்கு வாக்களித்தோர், வாய்விட்டுச் சிரிப்பதா? அல்லது வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு; தாங்கள் செய்துவிட்ட வரலாற்றுத் தவறுக்கு அழுது புலம்பி மன்னிப்புக் கேட்பதா?

இதனை வாக்களித்தோர் முடிவுக்கே விட்டுவிடலாம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

14-10-1994

2184. கறுப்பு நாள் தரும் உணர்வு!

உடன்பிறப்பே,

இன்று தமிழர்கள் வாழும் இடமெல்லாம் கறுப்பு நாள்! கருங்கொடிகள் - கறுப்புப் பதாகைகள் - கரிய தோரணங்கள் - வாகனங்களில், உடைகளில், கறுப்புச்சின்னங்கள் - அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நமது உள்ளத்தில் மூண்டுள்ள எரிமலைச் சோகத்தை வெளிப்படுத்தும் வகையில் காட்சி தருகின்றன!

ஆம்; அண்ணாவை இழிவுபடுத்தியோர், எத்தகைய எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் - அந்தப் புயல் இதோ மையங்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்கே இந்தக் கறுப்பு நாள் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது!

நாம் அருந்திய தாய்ப்பாலுடன் கலந்து நம் ஊனையும் உயிரையும் மட்டுமல்ல; உணர்வையும் வளர்த்த தமிழ் மொழிக்கும், அந்த மொழிக்குல மக்களின் உரிமைக்கும் உலை வைக்க முயன்ற சதிச்செயலைத் தடுத்து நிறுத்த, இரத்தம் சிந்தியும், தீக்குளித்தும், சிறைப்பட்டும், சித்திரவதைகளையேற்றும் செந்தமிழுக்கோர் தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ? எனக் கேட்டுச் செருமுனையில் நின்றோரையும் - அவரெல்லாம் தமது இதய வேந்தனாக ஏற்றுக் கொண்டிருந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களையும் அமெரிக்க உளவுத்துறையின் கைப்பாவைகள் எனக்கூறிக் களங்கச்சேறு வாரி இறைத்துள்ள வஞ்சகத்தை நெஞ்சு பொறுப்பதில்லை என உலகிற்கு அறிவித்திடவே இந்த நாள் கறுப்பு நாளாக மாறியிருக்கிறது!

இந்தியத் தலைநகராம் டெல்லியில் இன்றைக்கு தமிழர்களின் அன்புக் கருவூலத்தை - பாசமலரை - பண்பின் திருவுருவை - அமைதிப்பெட்டகத்தை - இழிவுபடுத்தும் நோக்குடன்; சாக்கடைச் சகதியெடுத்துப் பேனாவில் நிரப்பிக்கொண்டுக் கிறுக்கியுள்ள வாசகங்கள் அடங்கிய இருட்டுப் புத்தகம் ஒன்று குருட்டு மனத்தினரால் வெளியிடப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டவும் - அது இந்த நாள்தான் - இன்றுதான் - என்பதை நினைவிற் கொண்டு, இந்த நாள்முதல் இந்த இழிவு துடைக்கப்படும் வரையில் களத்தில் நிற்பதற்குத் தயாராகிவிட்டோம் என்பதை அறிவிக்கவுமே தமிழ் உணர்வுள்ள இடமெங்கணும் கறுப்புச்சின்னங்கள்; கொடிகளாக - தோரணங்களாக - பதாகைகளாக அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன!

அவை அசைந்தாடுவது காற்றில் அல்ல! அல்லவே அல்ல! நமது மான உணர்வின் ஊற்றில்!

மூவேந்தர் காலத்தில் மும்முரசு கொட்டி வாழ்ந்த காலத்தில் - முட்டவரும் பகையே எட்ட நில் என்று விழியாலே வீரம் விளைத்து வெற்றி கண்ட காலத்தில் - ஓங்கி நின்ற உணர்வு, ஒடுங்கி விட்டதென்னவோ தமிழ் மண்ணில் உண்மைதான்!

அந்த உணர்வை அறவே சாகவிடாமல்; உயிரூட்டி உலவ விட்ட மாமருந்தன்றோ நமது அண்ணாவின் பேச்சும், எழுத்தும், செயலும், அவர் கண்ட கழகமும்!

இலக்கியத்தென்றலாக வீசியவர்! தமிழ் அருவியாகக் கொட்டியவர்! கலைக் களஞ்சியமாகத் திகழ்ந்தவர்! இனமானச் சூரியனாக ஒளிபொழிந்தவர்! தமிழன் பிறந்த மண்ணுக்குத் தமிழ்நாடு எனப்பெயர் சூட்டியவர்! பகைநாடுகளுக்கு இடம்தராமல் பலமுள்ள நாடாக இந்தியத் திருநாடு இருக்க வேண்டுமென்று கூறி; அதனைச் செயல்படுத்திக் காட்டியவர்!

சூதறியாதவர்! சூழ்ச்சி எண்ணாதவர்! சுயநலம் வெறுத்தவர்! எதிரிகள் வசைபாடினும்; அதனை இசையாகக் கருதிக்கொள்பவர்!

அந்த உத்தமர் உறங்கும் கல்லறையில் உலக முழுதும் வாழும் தமிழர்கள் மலர் வளையம் வைத்து வணங்குகின்றனர் - அந்த எதையும் தாங்கும் இதயத்துக்கு வாழ்த்துப் பாடாதார்

இல்லை - இருப்பினும் எவரோ ஓரிருவர், அந்தக் கல்லறை மீதே களங்கப்புழுதி வாரித் தூற்றுகின்றனர் என்றால் அவருடன் கைகோத்துக் களம் கண்டோர்க்கு, இயக்கம் நடத்தியோர்க்கு, அவரை அறிந்தோர்க்குச் சகித்துக் கொள்ளக்கூடிய செயலா அது?

இல்லை! இல்லை! சகிக்க முடியவில்லை - என்பதை அறிவிக்கவே தமிழர் உலவும் நிலமனைத்தும் இன்று கறுப்பு நாள்!

கடந்த திங்கள் அண்ணா பிறந்தநாள் கவியரங்கில் நான் கூறிய கவிதை வரிகளை இந்தக் கறுப்பு நாள்; உடன்பிறப்பே, உனக்கும் என் உயிரனைய தமிழர்களுக்கும் நினைவூட்டுமாக!

"சினம் கொள்ளல் தீதன்று தமிழுக்குக் கேடு வந்தால்!
சிங்கத்தின் கூட்டமன்றோ;
சிறுநரிகள் ஊளைக்கா தலைவணக்கம்?
பொங்குற்ற புலிகள் முன்னே புல்லியர்க்கா
ஆர்ப்பாட்டம்?
எங்குற்றான் என் தமிழன்?
இங்குற்ற இழிவுத்தனை எதிர்ப்பதற்குத் துணிவின்றிச்
செங்குத்துத் தூணைப் போல் நிற்கின்றானா?
அங்கத்தில் துடிப்பின்றிக் கிடக்கின்றானா?
அய்யோ பாவம்; அவனுக்குச்
சங்கத்தில் பாட்டெழுதி அரங்கேற்றுங்கள்!
தங்கத்தில் சிலையொன்று அமைத்திடுங்கள்!
உளி இரண்டை உதட்டின்மேல் வைத்தாற்போல்
ஒளி மிகுந்த பாண்டியர்க்கு மீசையுண்டு
இளிவந்ததில்லை என்று இன முழக்கம்
செய்வது போல் - காதின்
வெளிவரையில் படர்ந்திருக்கும் சோழன் மீசை
களிறாட்டும் துதிக்கை போன்ற
கண் நோக்கி வளர்ந்திருக்கும் - சற்று
நெளிகாட்டும் நீளமீசை தமிழ்ச்சேரன் மீசை
அன்றந்த மீசையெல்லாம் துடித்ததினால் - பகைக்
குன்றங்கள் பொடியான கதைகள் உண்டு.
இன்றந்த வீரம் வேண்டும் - மிகவும் வேண்டும்.
இன்செயலில் வீரம் தேக்கி,

வன்செயல்கள் அறவே போக்கி
முன்பிருந்த தமிழர்களின் உணர்வைப் பெறுக!
மான உணர்வைப் பெறுக!
தன்மான உணர்வைப் பெறுக!

உடன்பிறப்பே, கவிதையின் உணர்வை; நம் தமிழர்க்கு இந்தக் கறுப்புநாள் தருக!

அன்புள்ள,

மு. கருணாநிதி

17-10-1994

2185. "சகலகலாவல்லித்தனம்"

உடன்பிறப்பே,

தலைமைத்தேர்தல் அதிகாரி திரு. சேஷன் அவர்களின் புத்தகம் பேரறிஞர் அண்ணா அவர்களையும், தமிழர்கள் நடத்திய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தையும், தமிழ்நாட்டு மக்களின் அறிவாற்றலையும் இழிவுபடுத்துகிறது என்ற செய்தியை ஏடுகளில் கண்டவுடன் தமிழகத்தில் உள்ள பல கட்சிகள் கண்டன அறிக்கைகள் வெளியிட்டன. சில கட்சிகள் போராட்டங்களை அறிவித்தன. ஆளுங்கட்சியான ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வும் தனது கண்டனத்தை வெளியிட்டது. தி.மு.க. உள்ளிட்ட சில கட்சிகள் கண்டன நடவடிக்கைகளுடன் நில்லாது, அந்த நூலை எதிர்த்து நீதிமன்றம் செல்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டன. தி.மு.க.வைப் பொறுத்தவரையில் கடந்த மூன்று நான்கு நாட்கள் மேலாகவே வழக்கறிஞர் வேங்கடபதியைக் கொண்டு இந்த வழக்கை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்திட நானும், பேராசிரியரும், பொருளாளர் வீராசாமியும், முரசொலி மாறன் எம்.பி.யும், என்.வி.என். சோமுவும் கழக வழக்கறிஞர் பிரிவின் குழுவினர்களும் பலமுறை கலந்துபேசி விவாதித்து இடையே விடுமுறை நாட்கள் குறுக்கிட்டுவிட்ட நிலையில், திங்கள்கிழமைதான் உயர்நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்து சேஷனின் புத்தகம் வெளியிடப்படுவதற்கு மட்டுமின்றி, விற்பனை செய்வதற்கோ, மதிப்புரைக்காக அனுப்புவதற்கோ, இலவசமாக வழங்குவதற்கோ, எந்த ஒரு மொழியிலும் பிரச்சாரசாதனங்கள் எதன் வாயிலாகவும் அனுமதிக்காமல் தடை விதிக்கவேண்டுமென்று எனது மனுவில் முறையீடு செய்து, இடைக்காலத் தடையும் பெறப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே முதலமைச்சர் ஜெயலலிதா ஒருநாள் முந்தி, ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறுமணி அளவில் உயர்நீதிமன்ற

நீதிபதியின் வீட்டிலேயே விசாரணை செய்யுமாறு, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் அனுமதி வாங்கி, சேஷனின் புத்தகத்திற்கு இடைக்காலத்தடை பெற்று, நீதிபதிகளுக்கும் பொதுக்கூட்டத்தில் நன்றி கூறியிருக்கிறார்.

அந்தத்தடை விதித்த செய்தி நமக்கு தெரியாத நிலையில்; நமது தலைமைக்கழகம் முன்னரே அறிவித்தவாறு 16-ந் தேதி மாலை சென்னை சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ண செட்டித்தெருவில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

அந்தக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரை, எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது. முழுமையான உரை முரசொலியில் வெளிவந்துள்ளது. மீண்டும் ஒருமுறை, நீயோ அல்லது மற்ற உடன்பிறப்புக்களோ அந்த உரையைப் படித்துப் பார்க்கலாம். அந்த உரையில் எந்த ஒரு இடத்திலும் சேஷன் புத்தகத்தை எதிர்த்து ஜெயலலிதா எடுக்கும் நடவடிக்கை பற்றியோ, மற்ற கட்சிகள் எடுக்கும் நடவடிக்கை பற்றியோ மாறுபாடான விமர்சனமோ, கேலி கிண்டலோ செய்திருக்கிறேனா என்று எத்தகைய பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தாலும் அப்படி ஒரு வார்த்தையைப் பார்க்க முடியாது. காரணம் நான் அந்தக் கட்சியினர் யாரையும் குறித்து எதுவும் அந்தக் கூட்டத்தில் பேசவில்லை.

> “நாமோ, அல்லது வேறு யாரோ நீதிமன்றத்தில் இடைக்காலத் தடையோ, நிலையான தடையோ பெற்றாலும் கூட - சேஷன் பற்றிய புத்தகம் நமது உள்ளத்தில் நமது அண்ணாவைப் பற்றி ஏற்படுத்தியுள்ள புண் மாறாது! எனவே அதற்கு சேஷன் அவர்கள் வருத்தம் தெரிவிக்கும் வரையில் நமது போராட்டம் ஓயாது!”
>
> என்றுதான் அந்த உரையின் இறுதியில் உறுதியாகக் கூறியிருக்கிறேன்.

17-ந் தேதி காலையில் எழுந்தவுடன் ஐந்தரை மணி அளவில், சென்னை நகரில் வீதிகளில் கறுப்புக்கொடிகள் தோரணங்கள் கட்டப்பட்டிருப்பதைக் காணச் செல்கிறேன். அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் கருங்கொடிகள் இருப்பதைக் காணுகிறேன். ஜெயலலிதாவின் போயர்ஸ் தோட்டத்தையடுத்து இருக்கும் சாலையில் மியூசிக் அகடமியிலிருந்து அண்ணா மேம்பாலம்

வரையில் மட்டுமே கறுப்புக் கொடிகள் இல்லை. கறுப்புக்கொடிகள் மாத்திரமல்ல; சில வாரங்களாகவே நான் குறிப்பிடும் அந்தச் சாலைப் பகுதியில் அ.தி.மு.க. கொடிகளைத் தவிர வேறு எந்தக் கொடியும் கட்ட அனுமதிப்பதில்லை. அதாவது, ஜெயலலிதா குடியிருக்கும் வீட்டின் பக்கமுள்ள சாலைகளில் கூட, அவரது கட்அவுட்டுகள் வரவேற்பு வளைவுகள் - தட்டிகள் - அவர் கட்சி அல்லது அவரது தோழமைக் கட்சிக் கொடிகள் மட்டுமே கட்டலாம்; அப்படிப் பட்டா போடப்பட்டுள்ளதாம். மற்ற கட்சிகளின் கொடிகள் தென்படவே கூடாதாம். மீறித் தென்பட்டால் போலீஸ் புலிகள் அவற்றை அரை நொடியில் அகற்றி விடுவார்களாம். இதற்காக ஒரு கிளர்ச்சியை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நடத்த வேண்டியிருக்கிறது - அதைப்பிறகு பார்ப்போம்.

உடன்பிறப்பே, மியூசிக் அகடமி முதல் அண்ணா மேம்பாலம் வரை சாலையில் கருங்கொடிகளோ, தோரணங்களோ இல்லையே தவிர, மற்ற இடங்களில் அவை அடர்த்தியாகவே காட்சி தந்தன.

காலை 7 மணி அளவில், உலவும் பயிற்சியை முடித்து விட்டு - வீட்டுக்கு வந்து, காலை 9.30 மணியளவில் நான் முரசொலி அலுவலகம் சென்றபோது, காலையில் நான் கண்ட கொடிகள் பலவற்றைக் காணவில்லை. அலுவலகம் செல்லும் வழியில் விசாரித்தேன். கழகச் செயல்வீரர்கள் சொன்னார்கள்; போலீசார் கொடிகளைப் பல இடங்களில் அகற்றி எடுத்துப் போகிறார்கள் என்று!

முரசொலியிலிருந்து பொருளாளர் வீராசாமிக்கும், மாவட்டச் செயலாளர் சைதை கிட்டுவுக்கும் தொலைபேசி மூலம் செய்தி கூறி உடனடியாக கவனிக்கச் சொல்லிவிட்டு - அண்ணா அறிவாலயத்திற்கு விரைந்தேன். அப்போது ஆர்.டி. சீதாபதி ஆவேசமாக ஓடிவந்து; 'அறிவாலயத்துக்கு அருகில் கட்டப்பட்டுள்ள கருங்கொடிகளையும், காமராஜர் நினைவு மாளிகைக்கு அருகில் நெடுஞ்சாலையில் கட்டப்பட்டுள்ள கருங்கொடிகளையும் போலீசார் அகற்றிக் கொண்டுள்ளனர்; அவர்களுக்கும் கழகத்தினருக்கும் தகராறு நடைபெறுகிறது' என்று பரபரப்புடன் கூறினார்.

காவல்நிலையத்து வாசலில் கலவரம் தோன்றிவிடக் கூடாதேயென்ற கவலையுடன், நானே என் காரில் அங்கு

விரைந்தேன். காவல் நிலையத்தருகே கழகத்தினரும் பொது மக்களும் பெருங் கூட்டமாக என் காரைச் சுற்றிக் கொண்டு போலீசார், கறுப்புக் கொடிகளை அகற்றுவதையும், கறுப்புத் தோரணங்களை அறுப்பதையும் குமுறிக் கொண்டே பேரொலி எழுப்பினர். நான் அந்த அதிகாரியை இதுபற்றிக் கேட்டபோது அவரால் மௌனம் சாதிக்க மட்டுமே முடிந்தது. கடைசியாக அவர் கறுப்புக்கொடிகளை அகற்றியது காவல்துறையைச் சேர்ந்த போக்குவரத்துப் போலீசார்தான் என்பதை ஒப்புக் கொண்டார். அப்படி ஒரு ஆணை மேலிடத்திலிருந்தே பிறப்பிக்கப்பட்டிருப்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது! மிகவும் வெட்கக்கேடு.

அதனால்தான் காவல்துறையினரின் அந்த அநாகரீகப் போக்கை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பிய கழக முன்னணியினர் பலர், பல பகுதிகளில் கைது செய்யப்பட்டு மாலையிலே விடுதலை செய்யப்பட்டனர்.

எந்தவொரு பிரச்சினையானாலும்; அதற்காகக் குரல் கொடுக்கிற - போராடுகிற - உரிய கட்சிகளுக்கு பெருமை வந்து விடுமோ என்ற பண்பாடற்ற ஒரு பயத்தின் காரணமாக; ஜெயலலிதா, தனது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்துவது எல்லாம் தன்னாலேதான் முடியும் என்று சகலகலாவல்லித்தனம் காண்பித்திட முயற்சி மேற்கொள்கிறார்.

ஆளுங்கட்சியும் இணைந்து சந்திக்க வேண்டிய பொதுவான பிரச்சினைகளில்; வேண்டுமென்றே திட்டமிட்டு தொடக்கத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர்களை இழிவுபடுத்தி விட்டு - ஏன்; எதிர்க்கட்சித் தலைவர்களைப் பற்றி விமர்சன விளம்பரங்களையே பக்கம் பக்கமாகக் கொடுத்துவிட்டு; பிறகு - அடடா! பொதுப் பிரச்சினையில் ஆளுங்கட்சியுடன் ஒத்துப் போகும் நிலை எதிர்க்கட்சிகளுக்கு இல்லையேயென்று பழி சுமத்துவது இன்றைய முதல்வர் ஜெயலலிதாவுக்குக் கைவந்தகலை! இந்தப் பண்பற்ற செயலைத்தான் இடஒதுக்கீடு பிரச்சினையில் கடைப்பிடித்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மை!

இப்போது சேஷன் புத்தகம் பற்றிய பொதுப் பிரச்சினையையும் பார்க்கலாமே!

நான், இந்தக் கடிதத் தொடக்கத்திலேயே கோடிட்டுக் காட்டியிருக்கிறேன் - அதாவது சேஷனின் புத்தகத்தைக் கண்டித்து சென்னையில் 16 - ந் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் - நான் இந்தப் பிரச்சினையில் ஜெயலலிதா கட்சியையோ அல்லது வேறு கட்சிகளையோ விமர்சித்திருக்கிறேனா என்று! இல்லை; இல்லவே இல்லை!

ஆனால் ஜெயலலிதா அப்படி நடந்து கொண்டாரா? இதற்கும் பதில்; இல்லை, இல்லவே இல்லை என்பதுதான்!

17- ந் தேதி சேஷன் புத்தகத்தைக் கண்டித்து நாம் கறுப்புக் கொடி கட்டுகிறோம் மாநில முழுதும்! அதே 17-ந் தேதி ஜெயலலிதா அ.தி.மு.க.வின் விழா கொண்டாடுகிறார். அதில் நமக்கு மாறுபாடில்லை. விழாவினையொட்டி எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவிக்கிறார்! அதுவும் வரவேற்கக் கூடியதுதான்! ஆனால் அந்த நிகழ்ச்சியில்; பாவம் நாவலர் அவர்களையும் உட்கார வைத்துக் கொண்டு, என்ன பேசியிருக்கிறார்? அவரது கட்சியின் பெருமைகளைப் பேசட்டும் - எம்.ஜி.ஆரின் சிறப்புகளைப் பேசட்டும் - ஆனால் பொதுப் பிரச்சினையாகக் கருதி, எல்லாக் கட்சியினரும் என்றில்லாவிட்டாலும் அண்ணாமீது பெருமதிப்பு வைத்துள்ள கட்சிகள் ஒன்றுக்கொன்று மாறுபாடின்றி கருத்துக்களை வெளியிடும் நேரத்தில் முதலமைச்சராகவும் ஆளுங்கட்சியின் தலைவராகவும் உள்ள ஜெயலலிதா; அந்த விழாவில் தி.மு.க.வையும் மற்ற கட்சிகளையும் மிக அலட்சியமாகச் சித்தரித்துக் காட்டிப்பேசியது நாகரீகமான செயலா? நாம் மட்டுமல்ல; நாடே கேட்கிறது!

அன்று காலையில் அவர் சென்னையில் பேசியது அன்று மாலையே சென்னை ஏடுகளில் வெளிவந்துள்ளது. அவர் பேச்சு பின்வருமாறு :-

> "இன்று 17-ந் தேதி டெல்லியில் அந்த புத்தகத்தின் வெளியீட்டு விழா ஏற்பாடு செய்திருந்தார்கள். அண்ணாவின் வாரிசு என்று தன்னைத்தானே கூறிக்கொள்ளும் ஒரு தலைவர் என்ன செய்தார்? தன்னுடைய தொண்டர்கள் கறுப்புச்சின்னம் அணியவேண்டும் என்று கூறிவிட்டு வெறுமனே இருந்து விட்டார். இன்னொருவர் 20-ந் தேதி சாவகாசமாக

புத்தகத்தை எரிக்கப் போகிறாராம் - இப்படிப்பட்ட வாய்ச்சொல் வீராப்புகளில் எனக்கு நம்பிக்கையில்லை. அதனால்தான் புத்தகம் வெளிவருவதையே தடுத்து விட்டேன். என்னைப் பொறுத்தவரையில் வெற்றி மீது வெற்றிவந்து என்னைச் சேரும்."

அ.தி.மு.க. தொடங்கிய நாள் எனப்படும் விழாவில், அம்மையார் ஆற்றியுள்ள ஆணவ உரை இது!

உடன்பிறப்பே, நான் தொண்டர்களை கறுப்புச் சின்னம் அணிய வேண்டுமெனக் கூறிவிட்டு வெறுமெனே இருந்து விட்டேனாம்! அய்யோ, பாவம்; நானும் பேராசிரியரும் கழக முன்னணியினரும் தொண்டர்க்குத் தொண்டர்களாக கறுப்புடை அணிந்ததை அவர் காண இயலாவிடினும், காவல்துறை ஒற்றர்கள் மூலம் கேள்வியுற்றிருக்கலாமே! அண்ணாவின் வாரிசு என்று நான் தன்னைத் தானே கூறிக் கொள்கிறேனாம்! ஜெயலலிதா பேசியிருக்கிறார் இப்படி! நான் அப்படி என்றைக்கும் கூறிக் கொண்டதில்லை - ஆனால் ஓர் உண்மையை நாடு உணர்ந்திருக்கிறது; கருணாநிதி அண்ணாவின் வாரிசோ இல்லையோ - நிச்சயமாக சந்தியாவின் வாரிசான ஜெயலலிதா, அண்ணாவின் வாரிசுமல்ல! ஏன்; எம்.ஜி.ஆரின் வாரிசும் அல்ல! இதற்கான வாதம் ஒன்று பொதுமேடையில் ஏற்பாடு செய்தால் எம்.ஜி.ஆர். அவர்களே தந்துள்ள ஆதாரங்களை வைத்துக் கொண்டு சந்திக்கவும் தயாராகவே இந்தக் கழகம் இருக்கிறது!

அண்ணாவை பாசமுடன் நேசிப்பது யார்? மதிப்பது யார்? ஊனோடும் உயிரோடும் கலந்த உணர்வாக எண்ணி அவர் வழியில் உழைத்துக் கொண்டிருப்பது யார்?

இந்த வினாக்களுக்கு விடை கண்டிட அதிகத் தொலைவு கூடச் செல்ல வேண்டியதில்லை -

சேஷன் புத்தகம் தடை செய்யப்பட வேண்டுமென்ற வழக்கு தொடர்ந்து ஜெயலலிதாவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுசெய்தார்.

நானும், சேஷன் புத்தகம் தடைசெய்யப்பட வேண்டுமென்று வழக்கு தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தின் முன் மனுசெய்தேன்.

இருவர் மனுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் புத்தகத்திற்கு இடைக்காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

நான் தொடர்ந்துள்ள வழக்கிற்காக உயர்நீதிமன்றத்தில் அளித்துள்ள மனுவின் தொடக்கத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே அண்ணாவின் பெயரை அண்ணாதுரை என்று குறிப்பிட்டு விட்டு; அவரை அண்ணா என்றே மக்கள் அழைப்பார்கள் எனச் சுட்டிக்காட்டி விட்டு - மொத்தம் அந்த மனுவில் உள்ள பதினாலு பக்கங்களில் அண்ணா என்றே நாற்பத்தி நான்கு இடங்களில் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தப் பிரச்சினைக்காக ஜெயலலிதா உயர்நீதிமன்றத்துக்கு கொடுத்த பத்து பக்கமுள்ள மனுவில் மொத்தம் பதினைந்து இடங்களிலும் சி.என். அண்ணாதுரை என்றே குறிப்பிட்டிருக்கிறார்.

உலகமெங்குமுள்ள தமிழர்களும், தமிழர்கள் அல்லாதவர் களும்கூட அண்ணா என்று பாசத்துடனும் நேசத்துடனும் அளவிலா மதிப்பு மரியாதையுடனும் அழைத்திடும் அந்தத் தலைவரை சி.என். அண்ணாதுரை என்று குறிப்பிடும் உதவாக்கரைகள் அண்ணாவுக்குத் தங்களை வாரிசுகள் என்று பசப்பிக் கொண்டு, பம்மாத்து செய்திட ரொம்பத்தான் நெஞ்சுரம் இருக்க வேண்டும்! அந்த நெஞ்சுரம் - நஞ்சுநிகர் நினைவு - வஞ்சக உரை; யாராலும் யாருக்கு ஏற்பட்டுள்ளது என்பதைத் தமிழக மக்கள் சிந்தித்துப் பார்த்து ஜனநாயக நெறியில் முடிவுகட்டப் போகும் காலம் வெகு தூரத்தில் இல்லை!

மீண்டும் சொல்கிறேன்; அண்ணாவை இழிவுபடுத்தும் அந்த புத்தகம் தடுக்கப்பட்டால் மட்டும் போதாது; அந்தப் புத்தகத்தில் உள்ள அந்த தவறான செய்தி தவிர்க்கப்பட்டால் மட்டும் போதாது; அப்படியொரு தவறான தகவல் தரப்பட்டதை ஒப்புக் கொண்டு அதற்காக வருத்தம் தெரிவித்தால் மட்டுமே களங்கம் துடைக்கப்பட்டதாக அர்த்தம் - அதற்கு சேஷன் முன்வர வேண்டும் - இல்லையேல் அண்ணாவின் மீது சுமத்தப்பட்ட பழிச்சொல்லை சுமத்தியவர்களே அது தவறென உணர்ந்தவர்கள் எனக் கருத இயலாது - என்பதை இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்ட வரலாற்றை, யாரோ எழுதிக் கொடுத்தால் மட்டுமே

தெரிந்து கொண்டு அறிக்கை விடக்கூடிய ஜெயலலிதாக்களால் புரிந்துகொள்ள முடியாது.

எனவேதான் உடன்பிறப்பே; தனது தவறுக்கு சேஷன் அவர்கள் வருத்தம் தெரிவிக்கும் வரையில் நமது போராட்டம் தொடரும் என்று கழகம் அறிவித்துள்ள முடிவில் எந்த மாற்றமும் இல்லை! இதனை இந்த சகலகலாவல்லித்தனங்கள் முதலில் உணர்ந்து திருந்துவது நல்லது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

19-10-1994

2186. நாட்டுக்கு நல்ல காலம் எது?

உடன்பிறப்பே,

பெண் ஒருவர் தமிழகத்தை ஆள்கிறார் எனப் பெருமையோ பெருமை என்று பேசப்படுகிறதோ இல்லையோ; எங்கள் தாயே! தயாபரியே! அன்னையே! அகிலாண்டேஸ்வரியே! தெய்வமே! எங்கள் குலமாதாவே! விவேகசிந்தாமணியே! வீராங்கனையே! என்றெல்லாம் ஏடுகள் கொள்ளாத அளவுக்கு விளம்பரங்கள் - அதுவும் பக்கம் பக்கமாக - வீதிகளில் எதிரே வரும் வாகனங்களை மறைக்கிற அளவுக்கு, அதனால் விபத்துக்கள் ஏற்படுகிற அளவுக்கு வண்ண வண்ணத் தட்டிகளில் வர்ணனைகள் - இவையன்னியில் பத்தடி இடைவெளியில்; மாநிலமாளும் அந்தத்தாய் மாநிலத்து மக்களையெல்லாம் ஆசிர்வதிக்கும் பாவனையில் மின்சார சரவிளக்குக் கட் அவுட்கள் - இப்படி ஈசனை விட்டுப்பிரிந்து இவ்வுலக மக்களுக்கும், புல்பூண்டு, புழுபூச்சி எனப்படும் கோடானு கோடி உயிரினங்களுக்கும் ஆசிர்வாதம் புரிவதுபோல; ஆட்சியிலிருக்கும் அம்மணியார் பார்வதி தேவியாகவே சித்தரிக்கப்படுகிறார்.

பகைவரின் தலைகளைப் பந்தாடும் பத்தினித் தெய்வம் என்று பாராட்டுகிறார்கள் - தடை வாங்குவதில் எல்லோரையும் முந்திக் கொண்ட தாட்சாயணியே என்று தொழுதேத்துகிறார்கள் - பெரியாருக்கு இல்லாத பட்டம் - அறிஞர் அண்ணாவுக்கு, அண்ணல் அம்பேத்கருக்கு, திரு. வி.பி. சிங்கிற்கு இல்லாத பட்டம்; சமூக நீதிகாத்த வீராங்கனை என்ற சிறப்புப் பட்டத்துக்கு உரியவர் தாங்களே எனப் புகழ்ந்து வாழ்த்துகிறார்கள்!

இவ்வளவு வீரவிருதுகளும் - பாராட்டுப் பட்டயங்களும் - போதாதற்கு பொன்னும், வைரமும், ஏனைய நவமணிகளும் பரிசுப் பொருளாகக் குவிகின்றன - சூராதி சூர - ரணரங்க மார்த்தாண்டர் என்றெல்லாம் தங்களை யாராவது இயலாதோரிடம் தோள்தட்டிக் கூறிச் சுயதம்பட்டம் அடித்துக் கொண்டவர்கள்

இந்த அம்மையின் முன்னே பணத்துக்கு, பதவிக்கு, பவிசுக்கு அடிமைகள் யாமே என்றுரைத்துப் பாதம் பணிந்து பூசை செய்து கொண்டிருக்கிறார்கள்.

மகர தோரணங்கள் - மாடமாளிகை கூட கோபுரங்களைத் தாங்கிய மகோன்னத மான வரவேற்பு வளைவுகள் - பாதுகாப்புக்கு ரத, கஜ, தரக, பதாதிகள் அனைத்தும்!

வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும் அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் உம்மைச் சேரும் என்ற பாடலே இப்போது பொருத்தமான மாற்றம் பெற்று பெட்டி மீது பெட்டி வந்து என்னைச் சேரும். அதை வாங்கி வந்த பெருமையெல்லாம் உம்மைச் சேரும் என்று அம்மையார் அமைச்சர்களைப் பார்த்து ஆனந்தகீதம் பாடுகின்ற காட்சிக்குரிய ஆட்சியின் மாட்சிதான் என்னே! என்னே!

தடை வாங்கித் தாட்சாயணி ஆனீர்களா? இல்லை! இந்த ஆண்டு இடஒதுக்கீடு நியாயத்தைக் காத்தே தீருவேன் என்றீர்கள்; காத்தீர்களா? இல்லை! எல்லாமே இரட்டை வேடம்! உள்ளார்ந்த ஈடுபாடு இல்லாத எந்தக் கொள்கைக்கும்; உங்கள் ஆட்சியில் ஏற்படும் கதிதான் ஏற்படும் என்று எதிர்காலத்துக்காக, நிகழ்காலம், எழுத்துக்களைக் கல்வெட்டில் செதுக்கி வைக்கத் தவறாது! தவறவே தவறாது!

தாய் என்றும் தயாபரி என்றும் மாதா என்றும் மகேஸ்வரி என்றும் கூலிப்பட்டாளம் கிளப்பும் கோஷத்தில் மயங்கி; கோலோச்சும் ஜெயலலிதாவின் ஆட்சியில்தான் எத்தனை கோணல்கள்!

இந்த அன்னையின் ஆட்சியில்தான் அண்ணாமலை நகர் காவல்நிலையத்தில் ஒது பெண்ணைக் கற்பழித்தனர். யார்? போலீசாரே அந்தப் புனிதப் பணியில் ஈடுபட்டனர்!

வாச்சாத்தியில் பல பெண்களின் வீடுகளைச் சூறையாடி, அங்கு வாழ்ந்த பல பெண்களின் மானத்தைப் பறித்திட முனைந்தனர்! சிலர் நிலைகுலைந்தனர்! அந்தத் திருத்தொண்டும், அன்புக்கும் பண்புக்கும் அரணாக இருக்க வேண்டிய காவல் துறையினரின் கைங்கர்யமேதான்!

முடியவில்லை; அந்த வேதனைக் கதை! முத்தாண்டி குப்பத்தில் காவல்கூடம் காமக்களியாட்டக் கூடமாக்கப்பட்டது!

அந்த புண்ணியம் தேடிக் கொண்டதும் புரட்சி ஆட்சியின் பொற்காலப் போலீசார்தான்!

அடுத்து, சின்னம்பதியில் ஒரு காலத்தில் உங்கள் நண்பன் என்று உரைத்து உழைத்திட்ட காவல்துறையினர், காமதாகங் கொண்டு நடத்திய சேட்டைகளும், அதனை ஆளுங்கட்சியினர் மறைத்திட எடுத்த முயற்சிகளும் பிரசித்தம்!

இதோ, இந்திய நாடு முழுதுமிருந்தும்; ஏன் பக்கத்து நாடுகளில் இருந்தும் பக்திசிரத்தையுடனும், சுற்றுலா விருப்பமுடனும் ஏராளமான பயணிகள் வந்து போகும் புனிதஸ்தலம் எனப்படும் இராமேஸ்வரத்துக் காவல்நிலையத்தில் இரண்டு மீனவப் பெண்கள் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து பெருங்கலவரம். பெண் ஆட்சியில் பெண்களே போர்க்கோலம் பூண்டார்கள். துப்பாக்கிச்சூடு - பேருந்துகள், காவலர் வாகனங்களுக்குத் தீ வைப்பு - இவ்வாறு செய்தி வந்துள்ளது. இன்னும் பதற்றம் தணியவில்லை.

உடன்பிறப்பே, எந்த ஒரு ஆட்சியிலும் குற்றம் குறைகளை ஒரே ஒரு அத்தியாயத்தில் சுருக்கமாகச் சொல்லிவிடலாம் - ஆனால் இந்த ஆட்சியிலே; குற்றம், குறை, பழி தீர்த்தல், பழி வாங்குதல், கொலை, கொள்ளை, கடத்தல், கற்பழிப்பு, ஊழல் என்பன போன்ற ஒவ்வொரு தலைப்புக்கும் ஒவ்வொரு இராமாயணமே எழுத வேண்டும் -

மன்னிக்கவும்; இராமாயணம் கூடப் போதாது!

மகாபாரதமே எழுத வேண்டும் - ஆம்; அவ்வளவு கிளைக் கதைகள், தொடர்புடைய நிகழ்ச்சிகள் - ஆம்; அத்தனையும் நம் மாநிலத்தில் நடப்பவை! எந்த நாட்டிலும், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு இத்தனை கொடுமைகளும் குலுங்கிக் கொண்டிருக்கிற ஆட்சியாக இது கோரநர்த்தனம் புரிகிறது!

இதனை வீட்டுக்கு அனுப்பும் காலமே;
நாட்டுக்கு நல்ல காலமாகும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

22-10-1994

2187. மதுரையிலே முன்னுரையா?

உடன்பிறப்பே,

சென்னையில் ராஜா முத்தையா சிலை திறப்பு விழா நடைபெறுகிறது; அதே நாளில் மதுரையில் ராஜா முத்தையா மண்டபத்தின் அரங்கம், அடித்து நொறுக்கப்படுகிறது. எவ்வளவு அருமையான செய்தி? பார்த்தாயா? இரண்டு முத்தையாக்களும் வெவ்வேறு அல்ல; ஒரே முத்தையாதான்! அவருக்குத்தான் சென்னையில் சிலை திறப்பு விழா! அவர் பெயரால் உள்ள மண்டபத்தின் அரங்கம்தான் உடைக்கப்பட்டு சிதறுகிறது!

சென்னையில் சிலை திறப்பவர், ஆளுங்கட்சியின் தலைவர் ஜெயலலிதா! மதுரையில் மண்டபத்தில் புகுந்து அரங்கத்தை நொறுக்குபவர்கள் ஆளுங்கட்சியின் அன்பர்கள்! அகிம்சாமூர்த்திகள்! அண்ணாவின் தம்பிகள் எனத் தங்களைக் கூறிக் கொள்பவர்கள்! ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் மிகக்குறைவு என்றும் - அவர்களுக்குத் துணையாகச் சென்று அங்கே தூள் கிளப்பியவர்கள் தூய்மையான துறையைச் சார்ந்த போலீசார்தான் என்றும் நமக்குத் தகவல்!

ஏன்? எதற்காக? இந்த திடீர் தாக்குதல் - என்றால்; காரணம் இருக்கிறது!

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் திருநாவுக்கரசு அவர்கள் மதுரையில் ராஜா முத்தையா மன்றத்தில் அறக்கட்டளையொன்றைத் தொடங்கிட நாள் குறித்து, திரு. மூப்பனார், மத்திய அமைச்சர் அருணாசலம் மற்றும் தமிழக முன்னாள் அமைச்சர்கள் - சிலரையும் அந்த விழாவுக்கு அழைத்திருந்தார். அவர்களும் விழாவில் கலந்து கொள்ள ஒப்புதல் தந்திருந்தார்கள். அறக்கட்டளைக்கு எம்.ஜி.ஆர். அறக்கட்டளை என்று பெயர்!

அப்படியொரு அறக்கட்டளை திருநாவுக்கரசு தொடங்கினால்; அதனால் சட்டம் ஒழுங்கு அமைதிக்குக் குந்தகம் ஏற்படுமென்று ஒரு காரணம் காட்டித் தடுப்பதற்காக; முதல் நாளே ஒரு கலவரச் சூழ்நிலையை ஆளுங்கட்சியினர் போலீசார் துணையுடன் அரங்கேற்றிவிட்டார்கள்!

இரண்டொரு மாதங்களுக்கு முன்பே எந்த மண்டபத்துக்கு அனுமதி பெறப்பட்டிருந்ததோ; அந்த மண்டபத்தில் விழாவுக்கு முதல் நாள் அமளி!

அந்த அமளி, விழா நடைபெறும் போதும் மீண்டும் நடைபெறக்கூடும் என்பது 'மதுரைப் போலீஸ் துறையின் அனுமானம்!

எனவே, அந்த மண்டபத்தில் எம்.ஜி.ஆர். அறக்கட்டளைத் தொடக்க விழாவை திருநாவுக்கரசு முன்னின்று நடத்தக் கூடாதென்று ஒரு நல்லெண்ணம்!

அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் மதுரையில் எந்த வன்முறை நிகழ்ச்சியும் நடைபெற்றுவிடக் கூடாதென்பதற்காக; எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வின் ஊர்வலமோ, கூட்ட நிகழ்ச்சியோ எங்கும் நடைபெறக்கூடாது என்று போலீஸ் அதிகாரி ஆணை பிறப்பித்துவிட்டார்.

நாங்கள் ஏற்பாடு செய்துள்ள மண்டபத்தில் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை விழாவை நடத்தாவிட்டாலும்; எங்கள் கட்சி அலுவலகத்தில் நடத்திக் கொள்கிறோம் என்று போலீஸ் அதிகாரிகளைக் கேட்டதாகவும் அதற்கும் மறுத்துவிட்டதாகவும் தொலைபேசித் தொடர்பு கொண்டபோது திருநாவுக்கரசு அவர்கள் என்னிடம் தெரிவித்தார்.

மதுரையிலே அந்த விழாவே நடக்கக் கூடாது - நடத்தவிடக் கூடாது என்பது மேலிடம் வழங்கியுள்ள உத்திரவாம் - அதனால் விழாவையொட்டி ஊர்வலமோ, அவர்கள் கட்சி அலுவலகத்திலேயே அறக்கட்டளை தொடக்க நிகழ்ச்சியோ போலீசாரால் தடுக்கப்படலாம். நிலைமை, கைதுப்படலம் வரையில் போகலாம்! இக்கடிதம் நான் உனக்கு எழுதும்போது அப்படியொரு நிலை எதிர்பார்க்கப் படுவதாகத்தான் எனக்குச் செய்தி!

சில திங்களுக்கு முன்பு எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வினர், ஈரோடு நகரத்தில் எம்.ஜி.ஆர். சிலை திறப்பதற்கும் இப்படித்தான்

ஜெயலலிதாவின் எதிர்ப்பு! கலவரம்! போலீஸ்படை மிரட்டல்! ஏன்; சிலையையே கடத்திக் கொண்டுபோய் காவல்நிலையத்தில் லாக்கப்பில் வைத்துவிட்டனர் ஆளுங்கட்சியின் சார்பாக! பிறகு அந்தச் சிலை திறப்பு விழா நடத்த முடியாமலே போய்விட்டது! இப்போது மதுரையில் எம்.ஜி.ஆர். பெயரால் ஓர் அறக்கட்டளை தொடங்கிடவும் தடை, தடுத்திட படை, இப்படி ஓர் அரசு; அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு, நடுநிலை தவறாமல் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்திட வேண்டிய காவல் துறையையும் கைப்பாவை ஆக்கிக்கொண்டு, தனக்குப் பிடிக்காத கட்சிகளின் நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தாங்கிக்கொள்ள முடியாமல், ஆகா! நாங்கள் மதுரையில் சட்டம் ஒழுங்கைக் கெடாமல் பார்த்துக் கொள்கிறோம். அதனால்தான் அவர்கள் விழாவை, ஊர்வலத்தை அனுமதிக்க மறுக்கிறோம் என்று சொல்லுமேயானால்; அதற்கு நமது சார்பில் எழுப்பும் கேள்வி இதுதான்!

அடடா; மதுரையிலா நீங்கள் சட்டம் ஒழுங்கை; இனிமேல் புதிதாகக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கிறீர்கள்? இந்து முன்னணித் தலைவர் ராசகோபாலன், அவர் வீட்டு வாசலிலேயே வெட்டிக் கொல்லப்பட்டதும்; அதைத் தொடர்ந்து சில கொலைகள், வன்முறைகள் நடைபெற்றதும் - இந்த மதுரையில்தானே! ஒருவேளை அது, வேறு மதுரையா?

மதுரை நகரம் கொலை நகரமாகி விட்டது என்று வார ஏடுகள் எல்லாம் அந்த நித்ய நிகழ்ச்சிகளைப் பட்டியலிட்டுப் படம் போட்டுக் கட்டுரை தீட்டினவே; அந்த மதுரையிலா, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றி; வேண்டுமென்றே திட்டமிட்டு எம்.ஜி.ஆர். அறக்கட்டளை விழாவை, ஆணை போட்டுத் தடுத்து - அமைதியைக் கொலுவில் வைக்கப் போகிறீர்கள்?

மதுரையென்ன; இந்த மாநில முழுதும் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது! ஏடுகளைப் படிக்கத்திறந்தால், பக்கத்திற்குப் பக்கம்; பகற்கொள்ளை - வீடு புகுந்து கொலை - ஒன்றா? இரண்டா? உன்னிடமே இருக்கும் உடன்பிறப்பே; அந்த கொலைகளின் பட்டியல்?

விழாவுக்கு தடையுத்திரவு போட ஒரு காரணம் வேண்டுமே? போலீசார் தடுமாறினர்! காரணம் என்ன கற்பிப்பது என சொல்லித்தரப்பட்டது!

விழா நடக்கும் இடத்தில் முதல்நாளே அமளி; சிறிய அளவில் நடத்தினாலும் போதும்! அதை வைத்துத் தடை ஆணை பிறப்பிக்கலாம்! இப்படி அறிவுரை அதிகாரிகளுக்கு!

எனவே இனி எந்தவொரு நிகழ்ச்சியையும் தடுத்திட வேண்டுமென யார் கருதினாலும்; ஒரு சிறு அமளியை உருவாக்க வேண்டும் - பிறகு அந்த அமளியையே காரணமாகக் காட்டி, பிடிக்காத அந்த நிகழ்ச்சியைத் தடை செய்யுமாறு காவல்துறை அதிகாரிகளை வற்புறுத்தலாம்!

எதிர்க்கட்சிகள் என்றால் வற்புறுத்த வேண்டும் போலும்; அதை எந்த அதிகாரி காதில் போட்டுக் கொள்ளப் போகிறார்!

ஆளுங்கட்சியென்றால்; இந்த அற்ப காரணங்களை உருவாக்கி அதிகாரிகளைக் கொண்டு எதிர்க்கட்சி நிகழ்ச்சிகளைத் தடுத்துவிட ஆணையே பிறக்கும் - இனிவரும் இந்தத் தொடர்கதைக்கு மதுரையிலே முன்னுரை எழுதப்பட்டுள்ளதாகவே கருதுகிறேன்.

இந்த வஞ்சக திட்டத்தை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

23-10-1994

2188. காதுகளில், பூ சுற்றுகிறாரா?

உடன்பிறப்பே,

அமைச்சர் முத்துசாமி இடஒதுக்கீடு குறித்து ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அறிக்கையில் இடஒதுக்கீடு குறித்த விளக்கத்தை விட எதிர்க்கட்சிகள் மீது காட்டியுள்ள ஆத்திரமே அதிகமாக இருக்கிறது.

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீடு இல்லை - 50 சதவீதம்தான் என்கிற நிலை; உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாட்டு ஜெயலலிதா அரசும் ஒப்புதல் வழங்கிவிட்டதால் ஏற்பட்டு விட்டதே என்ற கவலையை எதிர்க்கட்சிகள், குறிப்பாக சமூகநீதியில் அக்கறையுடன் உள்ள கட்சிகள் தெரிவித்து; ஜெயலலிதா அரசு எதற்காக இப்படி உயர்நீதிமன்றத்தில் ஒப்புதல் தர வேண்டுமென்று குரல் எழுப்பின! இப்படியொரு செய்தி அக்டோபர் 19-ந் தேதி காலை இந்து பத்திரிகையில்தான் வெளிவந்தது.

The intention and object behind the August 18 order was to bring about and ensure a situation which would have obtained if 50 percent rule had been followed. "Now, both the counsel for the petitoner and the State of Tamil Nadu are agreed that if the said intention and object is to be achieved, the following should be the position: 36 seats will be filed by candidates who have not been admitted up to serial No. 485 i.e 50 percent of the total 70 seats in the rank list."

ஆங்கிலத்தில் உள்ள இந்துவின் இந்தச் செய்தி, தமிழாக்கம் செய்யப்பட்டும் ஏடுகளில் வெளிவந்துள்ளன. எனவே; கடந்த 3-ந் தேதியன்று உச்சநீதிமன்றத்தில் அளித்துள்ள உத்திரவுக்கான அடிப்படை என்ன என்பதை அமைச்சர் முத்துசாமியின் கூற்றுப்படி வாய்க்கு வந்தபடி வசை பாடுகிற எதிர்க்கட்சிகள் அல்ல; இந்து பத்திரிகையே இப்படித்தான் வெளியிட்டிருக்கிறது. அதன் சுருக்கம் வருமாறு :-

தமிழக அரசு தாக்கல் செய்த மனுவில் 50 சதவிகிதம் என்பது மொத்தம் உள்ள 970 இடங்களில் 485 இடங்களே ஆகும். அதில் பொதுப் போட்டியின் மூலம் ஏற்கெனவே 449 பேர் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டு விட்டனர்.

எனவே மீதமுள்ள 36 பேரை மட்டும் மற்றவர்கள் என்ற பிரிவிலிருந்தும் மீதமுள்ள 26 பேரை பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்தும் கல்லூரிகளில் சேர்க்க உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டது. இதற்கிடையில் ஏற்கெனவே வழக்கு போட்ட சம்பத்குமாரும் ஆகஸ்ட் 18 - ஆம் தேதி உத்தரவு அமல்படுத்தப்படவில்லை என்று கூறி மனு ஒன்றை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இரு மனுக்களையும் கடந்த 3 - ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.பி.ஜீவன்ரெட்டி, எஸ்.சி.சென் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் விசாரித்து 50 சதவிகித இடஒதுக்கீட்டை ஏற்கும் வகையில் மனுதாரரும், தமிழக அரசும் ஒப்புக்கொண்டபடி, 36 இடங்களில் தகுதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள 485ஆம் எண் வரையில் உள்ள மாணவர்கள் மற்றவர்கள் உயர் வகுப்பினர் என்ற பிரிவிலிருந்து கல்லூரிகளில் சேர்க்கப்பட வேண்டும். அவர்களில் யாரேனும் கல்லூரிகளில் சேராவிட்டால் மட்டுமே; பட்டியலில் 485ஆம் எண்ணுக்கு மேல் உள்ளவர்கள் கல்லூரியில் சேர அனுமதிக்கலாம்.

அதேபோல பிற்படுத்தப்பட்டவர்களின் தகுதிப் பட்டியலில் 722க்கு மேல் உள்ள 26 பேர் சேர்க்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இப்படியொரு செய்தி இந்து ஏட்டில் 19-ந் தேதி வெளிவந்தவுடனே தமிழக அரசின் சார்பில் விளக்கம் தரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் யாரோ கருவாடு பறிகொடுத்த கதைபோல 22 - ந் தேதி மாலை வரையில் மௌனமாக இருந்து விட்டு - இதற்கிடையே எதிர்க்கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டவுடன்; வழக்கம் போல் அடடா, இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்று மக்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்று தந்திரம் நிறைந்த சமாளிப்பு அறிக்கையொன்றை அமைச்சர் விடுத்துள்ளார்.

அமைச்சரின் அந்த அறிக்கையைப் படித்தால் முரண்பாடுகள் ஒன்றையொன்று முந்திக் கொண்டு குதிப்பது நன்றாகவே விளங்குகிறது.

அமைச்சரின் அறிக்கை வருமாறு :-

இந்த சட்டத்திற்கு தடைவிதிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசிற்கு எதிராக வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டு 9.8.94 மற்றும் 17.8.94 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு வந்து 18.8.94 அன்று ஒரு வார காலத்திற்குள் 62 புதிய மருத்துவக் கல்வி இடங்களை உருவாக்கி அவற்றை பொதுத் தொகுப்பிற்கு கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசிற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

உச்சநீதிமன்ற உத்தரவு சம்பந்தமாக முதல்வரிடத்தில் நான் நேரில் பேசியபோது தற்போது நாடாளுமன்றத்தில் நமது மசோதா நிறைவேறி உள்ளது. எனவே உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே அட்வகேட் ஜெனரலின் ஆலோசனையை கேளுங்கள் என்று தெரிவித்தார்.

உச்சநீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றவில்லை என்றால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வரும் என்று அட்வகேட் ஜெனரல் கருத்து தெரிவித்தார். அதன் பின் அட்வகேட் ஜெனரலின் ஆலோசனையை முதல்வரிடத்தில் நான் தெரிவித்தேன். அந்த நேரத்தில் நமது மசோதாவிற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது. மேலும் 9-வது அட்டவணையிலும் சேர்க்கப்பட்டு விட்டது. இந்த முன்னேற்றமான மாற்றங்களை முதல்வர் குறிப்பிட்டு, இந்தச் சூழ்நிலையில் நீதிமன்ற அவமதிப்பு என்பதற்கு இடமிருக்காது என்று தோன்றுகிறது. எனவே மீண்டும் அட்வகேட் ஜெனரலிடம் ஆலோசனை பெறுங்கள் என்று தெரிவித்தார்.

இதற்கிடையில் உச்சநீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றவில்லை என்பதற்காக தமிழக அரசிற்கு எதிராக, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அரசு வழக்கறிஞர் 27.9.94 அன்று கடிதத்தின் மூலமாக தெரிவித்தார்.

மீண்டும் உச்சநீதிமன்றத்தில் 3.10.94 அன்று இன்னும் 2 வார காலத்திற்குள் 62 இடங்களை உருவாக்கி நிரப்ப வேண்டும் என்று தமிழக அரசிற்கு உத்தரவு போடப்பட்டது.

உடன்பிறப்பே, இதுதான் அமைச்சர் தந்துள்ள விளக்கம் - உச்சநீதிமன்றம் ஏதோ; தானே வலிய வந்தோ அல்லது ஒரு தரப்பு வாதத்தை மட்டும் கேட்டோ உத்திரவு போட்டு விட்டதைப்போல அமைச்சர் அறிக்கையில் குறிப்பிடுகிறார். ஆனால் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜீவன்ரெட்டியும், எஸ்.சி. சென்னும் என்ன கூறியிருக்கிறார்கள் என்று இந்து செய்தி வெளியிட்டுள்ளது?

"இருமனுக்களையும் கடந்த 3-ந் தேதி உச்சநீதிமன்ற நீதிபதிகள் இருவர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் விசாரித்து 50 சதவீத இடஒதுக்கீட்டை ஏற்கும் வகையில் மனுதாரரும் தமிழக அரசும் ஒப்புக் கொண்டபடி..."

என்றுதான் இந்து More MBBS seats under open competition என்ற தலைப்பிட்டு முதல் பக்கத்து செய்தியாக வெளியிட்டுள்ளது.

இதற்கு நேர்மாறாக அமைச்சரின் அறிக்கை இருக்கிறது - குதிரைபோன பிறகு லாயத்தைப் பூட்டு என்றுகூட அல்ல; குதிரையைப் போகவிட்டுவிட்டு லாயத்தை பூட்டு என்ற கதையாக அமைச்சர் கயிறு திரிக்கப் பார்க்கிறார்! அதற்கு யாராவது தூங்குபவர் தொடையாகப் பார்க்கவேண்டும்!

இத்தனை பெரிய பிரச்சினையில்; அம்மையார் ஜெயலலிதாவுக்கு அட்வகேட் ஜெனரலுடனும், அரசு சட்டத்துறையினருடனும் அமர்ந்து விவாதித்து முடிவெடுக்கக்கூட நேரமில்லை - பாவம்; நினைப்பு இருந்தால்தானே நேரமிருக்க! அட்வகேட் ஜெனரலிடம் பேசுகிற ஒவ்வொரு கட்டத்திலும் அமைச்சர் முத்துசாமிதான் தூதராக அனுப்பப்பட்டுள்ளார். அம்மையார்; தானே அட்வகேட் ஜெனரலுடன் பேச வேண்டுமென்று எண்ணிடவில்லை!

இப்போது - எதிர்க்கட்சிகள் எல்லாம் கூச்சல் போட்டபிறகு; முன்பு; ஐதராபாத் திராட்சைத் தோட்டத்து அனந்தசயனத்தை முடித்துக்கொண்டு சென்னைக்கு ஓடிவந்து பந்த் அறிவித்ததுபோல - இப்போது அக். 18-ந் தேதியே கோப்பிலே கையெழுத்து போட்டுவிட்டார்; அதை ரகசியமாக வைத்திருந்தோம்; சமூகநீதி

எதிர்ப்பாளர்க்கு அஞ்சி என்று அமைச்சர் சாக்கு சொல்கிறார்! ஆம்; தமிழ்நாட்டு மக்களின் காதுகளில் பூ சுற்றுகிறார்!

அமைச்சரின் அறிக்கையில்; இதுவரை நிரப்பப்பட்டுள்ள இந்த ஆண்டுக்கான மருத்துவ இடங்கள் அனைத்தும் 69 சதவீத அடிப்படையிலேயே நிரப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். அப்படியானால் பொதுத்தொகுப்பில் O.C. அமைச்சர் கூற்றுப்படி 300 பேருக்குத்தான் இடம் தந்திருக்க வேண்டும். ஆனால் 19-ந் தேதி இந்துவில் வந்த செய்திப்படி ஏற்கெனவே 449 மாணவர்கள் சேர்க்கப்பட்டு விட்டார்கள் என்று தமிழக அரசே உச்சநீதிமன்ற மனுவில் குறிப்பிட்டிருக்கிறது. அதாவது 149 பேர் அதிகம் சேர்ந்திருக்கிறார்களே; இவர்கள் எந்த அடிப்படையில் பொதுத்தொகுப்புக்கு சேர்க்கப்பட்டார்கள் என்பதை அமைச்சர் விளக்குவாரா?

எப்படியோ; எதிர்க்கட்சிகள் உரிய காலத்தில் தங்களின் கண்டனக் குரலை எழுப்பியதால்; 69 சதவீதத்துக்கு மீண்டும் வந்த ஆபத்து, விலகினால் சரி! என்ன இருந்தாலும் 19-ந் தேதி தி.மு.க. சார்பில் வீராசாமி அறிக்கையும், தொடர்ந்து மற்ற கட்சித்தலைவர்களின் அறிக்கைகளும் வந்த பிறகாவது; முதலமைச்சர் முன் தேதியிட்டு கோப்பில் கையெழுத்திட்ட சந்திரஹரியின் உண்மையைப் பாராட்ட வேண்டியதுதான்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

24-10-1994

குறிப்பு :- ஹரிச்சந்திரன் உண்மையே பேசுபவன் - கலைவாணர் என்.எஸ்.கே. நடித்த நகைச்சுவைப் படத்தில் சந்திரஹரி பொய்யைத் தவிர வேறு எதுவும் பேசமாட்டான்.

2189. இட்லர், முசோலினி பாதையில்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா முடிசூட்டிக் கொண்ட 1991ஆம் ஆண்டு முதல் இதுவரையில்; ஏன் மதுரையில் நடைபெற்றுள்ள ராசகோபாலன் கொலை வரையில் - பெரும்பாலானவற்றில் ஆளுங்கட்சியின் முக்கிய புள்ளிகள் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டே இருக்கிறார்கள் என்பதை அந்தக் கொலைகள் நடந்த வட்டாரத்தில் உள்ள பொதுமக்கள் மிக நன்றாகவே உணர்ந்திருக்கிறார்கள். காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்துக்கு சமூகநீதி காத்த வீராங்கனையே! என அர்ச்சனை செய்து காவல்துறை இயக்குனர் மற்றும் தமிழ்நாடு காவல்துறை சார்பாக ஏடுகளில் ஒரு பக்க விளம்பரம் அளித்திருக்கிறார்களே இன்று; அந்தக் காவல்துறையினரும்கூட, இந்தக் கொலைகள் பலவற்றில் ஆளுங்கட்சிக்காரர்கள் நேரடியாகவோ - பின்னணியில் இருந்தோ தொடர்புடையவர்கள் என்பதை ஆய்ந்தறிந்தே வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கடமையை பாரபட்சமின்றி நியாயத்திற்குக் கட்டுப்பட்டு செய்ய முடியாமல் உண்மையான கொலைகாரர்கள் அல்லது கொலைக்கு தூண்டியவர்கள் தப்ப வைக்கப்படுவது இன்றைய ஆட்சியின் நடைமுறையாகிவிட்டது.

ஒரு குற்றவாளி தண்டிக்கப்படாவிட்டாலும் - ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவது பெரும் அநீதி; என்று காலம் காலமாக நீதியில் நேர்மையான முறையில் அக்கறை கொண்டோர் அலறிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் நடப்பது என்ன?

பச்சைப் படுகொலைகள் - பயங்கரக் கொலைகள் - பதைப்பை ஏற்படுத்தும் கொலைகள் - பரபரப்பு விளைக்கும் கொலைகள் - இவற்றில் உண்மைக் குற்றவாளிகளுக்குப் புகலிடம் தந்து

அவர்களைப் பாதுகாத்துவிட்டு - இன்றுள்ள ஆட்சியாளருக்குப் பிடிக்காதவர்கள்; அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களாக இருக்கலாம் - ஒருவேளை உயர்ந்த அதிகாரிகளாக இருந்திருக்கலாம் - ஏன்; நீதிபதிகளாகக் கூட இருக்கலாம் - அவர்களையோ அவர்களது உறவினர்களையோ - கடத்தல் வழக்கு, கொலை வழக்கு, கஞ்சா வழக்கு எனப் பல வழக்குகள் ஜோடித்து மிரட்டுவதற்குக் காவல்துறையினர் இன்று ஏவல் துறையினராகப் பயன்படுகின்றனரே என்பதுதான் நமக்குள்ள கவலை!

அண்மையில் மதுரையில் நடைபெற்ற ராசகோபாலன் கொலை குறித்த புலன் விசாரணையாகட்டும்; கைது நடவடிக்கைகளாகட்டும்; அதிகாரிகளின் போக்குகளாகட்டும்; அனைத்துமே ஐயப்பாட்டுக்குரியனவாகவே இருக்கின்றன.

இந்து முன்னணியின் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டார் என்றதும், உடனே இஸ்லாமிய சமுதாயத்தின் மீது அந்தப் பழியைப் போடலாமா என்பதே மதவெறி பிடித்த சிலரது சிந்தனையாக ஆகிவிடுகிறது.

உத்தமர் காந்தியடிகள் கொல்லப்பட்டவுடனே அந்தப்பழி முஸ்லிம்கள் மீது போடப்பட்டு நாடு முழுவதும் பரபரப்பும் வன்முறையும் தூண்டி விடப்படவில்லையா? பிறகுதானே காந்தியடிகளைக் கொன்றவன் ஒரு இந்து மதவெறியன் என்ற உண்மை உலகிற்கே தெரிந்தது!

அதுபோலவே மதுரை ராசகோபாலன் கொலையிலும் - உடனடியாக அந்தப் பழியை முஸ்லிம்கள் மீது சுமத்துவதில் அக்கறை காட்டியது மட்டுமல்ல; உண்மையான குற்றவாளிகள் ஆளுங்கட்சியினர் என்று பரவலாகப் பேசப்படுகிற நிலையை மாற்றுவதற்கான சூழ்ச்சியும் கையாளப்பட்டிருக்கிறது என்று மதுரை வட்டாரத்தில் செய்தி பரவியுள்ளது.

மதத்தகராறு காரணம் என்று சொல்லிக் கொள்வதால்; மதத்தை வைத்துத் தமிழ்நாட்டில் கால் ஊன்ற நினைக்கும் ஒரு கட்சிக்கு லாபம் - அந்த லாபம் அவர்களுக்குக் கிடைத்தாலும் பரவாயில்லை; தற்போதைக்கு இதில் சிக்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் ஆளுங்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலரை எப்படியும்

காப்பாற்றிட; மதத்தகராறு என்ற பிரச்சாரத்தைப் போர்வையாக்கிக் கொள்ள ஒரு முயற்சி நடைபெறுவதாகவும்; அநேகமாக அது முடிவடைந்துவிட்ட முயற்சி என்றும் தெரிகிறது.

போலீஸ் துறையின் சி.பி.சி.ஐ.டி. டி.ஐ.ஜி. லத்திகாசரன் மதுரையிலே முகாமிட்டு, இந்த விசாரணையிலேயே எந்த சம்பந்தமும் இல்லாத மதுரை போலீஸ் கமிஷனர் மூர்த்தி என்பவர்; ராசகோபாலன் கொலையில் அரசியல் கட்சியைச் சேர்ந்த எந்த முக்கிய பிரமுகருக்கும் சம்பந்தமில்லை என்று முந்திக்கொண்டு அறிக்கை விட்டிருக்கிறார். இப்படியொரு அறிக்கைக்கு அவசரம் என்ன வந்தது என்று மதுரையே ஆச்சரியப்படுகிறது.

இந்தச் சூழலில் மதுரை மக்கள் பீதி என்ற தலைப்பில், இந்த வார ஜூனியர் விகடன் இதழில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அது வருமாறு :-

ராஜகோபாலன் கொலையுடன் இணைத்துப் பேசப்படும் ஆளுங்கட்சிப் பிரமுகரை போலீஸின் சந்தேகக் கண்கள் சுற்றி வளைத்திருக்கின்றன. அதை உணர்ந்தோ என்னவோ, அந்தப் பிரமுகரின் தொண்டர்கள் மதுரை நகரைவிட்டுக் கிளம்பி சென்னையில் முகாம் அடித்து விட்டதாகத் தெரிகிறது.

ராஜகோபாலனின் இறுதி ஊர்வலம் நடந்தபோது சம்பந்தம் இல்லாத சில ஆளுங்கட்சிக் கரைவேட்டிகள், வழி நெடுக நின்றவர்களிடம் தயவுசெய்து இந்துக்கள் கடைகளிலேயே சாமான்களை வாங்குங்கம்மா என்று கேட்டபடி கையெடுத்துக் கும்பிட்டிருக்கிறார்கள். இந்து முன்னணிக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத இந்த நபர்கள் எரிச்சலூட்டும் வகையில் இப்படி நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும் போது கொலையை திசை திருப்பி ஒட்டுமொத்தப் பழியையும் முஸ்லிம்கள் மீது போட்டு விடுவதற்கு அந்த ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் ஏன் முயன்றிருக்கக் கூடாது? என்று சந்தேகப்படுகிறது, சி.பி.சி.ஐ.டி. போலீஸ்.

இதற்கிடையே கடந்த 13-ம் தேதியன்று அந்த ஆளுங்கட்சிப் பிரமுகரின் காரை துரத்தி வந்த போலீஸார்,

கோர்ட் வாசலில் அந்த காரை மடக்கி அதிலிருந்த மூன்றுக்கு மேற்பட்ட நபர்களை இறக்கி தங்களுடைய ஜீப்பில் ஏற்றிக்கொண்டு காரையும் டிரைவரையும் மட்டும் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள் என்பதுதான் திடுக்கிட வைக்கும் செய்தி!

அந்த ஆளுங்கட்சிப் பிரமுகரின் கடந்த கால மற்றும் நிகழ்கால நடவடிக்கைகள் அனைத்தும் அவரது அரசியல் எதிரிகளால் முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டன. இவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்தால் கட்சிக்கு அது கெட்ட பெயரைத் தந்துவிடும் என்பதால் படிப்படியாக அவரது அதிகாரங்கள் குறைக்கப்படும்! என்கிறார்கள் ஆளுங்கட்சியினர்.

இவ்வாறு நமது சந்தேகத்தை உறுதிப்படுத்தக் கூடிய செய்திகள் எல்லாம் வரும்போது ஒப்பந்த வேலைகள் தகராறுகள் - தலையீடுகள் சம்பந்தமாக நடைபெற்ற ஒரு கொலையை - மதத் தகராறு என சாயம்பூசி, மதக்கலவரம் பெருகிடாத தமிழகத்தில் அந்தக் கலவரத்துக்கு ஆலவட்டம் சுழற்றுவதும் - அந்த சுழற்சியில் ஆளுங்கட்சியினரைப் பாதுகாத்திடுவதும் - அநியாயமாக நிரபராதிகளை இழுத்துக் கூண்டில் நிறுத்துவதும் - வஞ்சகத்தின் உச்சகட்டமல்லவா என்பதை நடுநிலையாளர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

கொலை செய்த கூலிப்பட்டாளத்தில் தப்பித் தவறி ஒரு முஸ்லிம் மதத்தவர் இருக்கலாம்; அதற்காக இஸ்லாமிய மதத்துக்கும் இந்து மதத்திற்குமிடையே நடந்த மோதல் என இதனை திசை திருப்புவது; தமிழகத்தில் வேறு பல பகுதிகளில் விபரீதம் விளைவிக்கவே பயன்படும் விஷமச் செயலாகும்.

இந்த ஐயப்பாடுகளை மனத்திற்கொண்டுதான்; இந்தக் கொலை வழக்கு விசாரணைக்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் கேட்டார். ஆனால்; ஆச்சரியம் என்னவென்றால்; இந்து முன்னணியின் மாநில அமைப்பாளர் இராமகோபாலன் அவர்களோ 'விசாரணை சரியான வழியில்தான் சென்று கொண்டிருக்கிறது. எங்களுக்கு முழு

திருப்தியளிக்கிறது. எனவே சி.பி.ஐ. மத்திய புலனாய்வுத்துறை விசாரணை தேவையில்லை' என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளதுதான்!

இன்று இத்தகைய வழக்குகள் திசை திருப்பப்படலாம் - ஆனால் எதிர்காலம் என ஒன்றிருக்கிறது என்பதையே மறந்துவிட்டு; இஷ்டம் போல் இட்லர் 'முசோலினி பாதையில் செல்பவர்கள்; மக்கள் அளிக்க இருக்கும் மகத்தான தீர்ப்புக்கு முன் தலைகுனிந்து நிற்கும் நிலை வரத்தான் போகிறது என்பதை நினைவுபடுத்துவது நமது கடமை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

25-10-1994

2190. இதுவும், காட்டுமிராண்டி யுகமே!

உடன்பிறப்பே,

உலகில் உயிரினங்கள் தோன்றி, மனிதன் சமுதாய ரீதியாக வாழத் தலைப்படுவதற்கு முன்பு; காடுகளில், மலையடிவாரக் குகைகளில் வாழ்ந்த காலத்தில் உண்ண உணவுக்காக உடனிருக்கும் குடும்பத்து உறுப்பினர் ஒருவரின் உடலையே பயன்படுத்தினான் - ஆம்; மனிதனைக் கொன்று மனிதன் வாழ்ந்த காட்டுமிராண்டிக் காலம் அது!

இராகுல சாங்கிர்த்தியாயன் எழுதிய வால்காவிலிருந்து என்ற நூலில் மனித வரலாற்றின் அரிச்சுவடி எந்த அளவுக்கு வரைமுறையற்றதாகவும் மான அவமானங்களைப் பற்றிய சிந்தனை இல்லாததாகவும் - இன்று வளர்ந்துள்ள விஞ்ஞான யுகத்தின் நிழல் கூடப் படியாத மௌடீகமானதாகவும் - இரக்கம் எனும் ஒரு பொருளில்லாத இயந்திர இயக்கமாகவும் இருந்தது என்பதை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

நிர்வாணமாகத் திரிந்த ஆணும் பெண்ணும் - இலை தழைகளை உடுத்த ஆரம்பித்து, இன்று விதவிதமான உடைகளை அணிகின்றனர். இரண்டொரு நாட்களுக்கு முன்பு ஒரு செய்தி படித்தேன். சிங்கப்பூரில் ஒரு நடிகர் நடிகை திருமணமாம் - அவர்களுக்கு, தைக்கப்படும் மணவிழா உடைகளில் மட்டும் நாலுகோடி ரூபாய் பெறுமானமுள்ள நவரத்னங்கள் பதிக்கப்படுகின்றனவாம். காட்டுமிராண்டிக் காலத்துக்கும் - இந்தக் கலி காலத்துக்குமிடையே உடையில் மட்டும் எவ்வளவு வளர்ச்சி பார்த்தனையா!

மற்றொரு திருமணம் - ஒருவாரத்துக்கு முன்பு; இந்தியாவில்! எப்படித் தெரியுமா? முன்பெல்லாம் நமது முன்னோர் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பார்களே;

அதையும் மிஞ்சும் வண்ணம், விமானத்திலேயே மணவிழாப் பந்தல், மணமேடை அழகுற அலங்கரித்து, அழைப்பிதழ் பெற்று வந்த விருந்தினர்கள் புடைசூழ; விமானம் பறந்து கொண்டிருக்கும்போதே விண்வெளியில் விவாக சுபமுகூர்த்த விழா நிறைவேறியிருக்கிறது. பணம்; பாதாளம் வரையில் பாயும் என்றுதான் படித்திருக்கிறோம் - இந்தக் கோடீஸ்வரன் வீட்டுப் பணமோ; வானக்கூரை வரையிலே பாய்ந்திருக்கிறது!

மரமேற முடியாமல் தவித்த மனிதன்; கரும் பூனையும் குரங்கும் ஏறுகிறதே மரத்தில் - நம்மால் முடியவில்லையே என்று கவலைப்பட்ட அந்தக் காட்டிமிராண்டிக் காலம் மாறி; இன்று சந்திரமண்டலத்துக்கே சென்று சாதனை புரிந்து காட்டிக் கொண்டிருக்கிறான்.

வானொலிப் பெட்டியில் உள்ள திருகை, நம் கரம் கொண்டு மெல்லத் திருப்பினால் சென்னையில் தியாகராச பாகவதரின் பழைய பாடல் கேட்கிறது. அந்தத் திருகை ஒரு நூலிழை அளவு நகர்த்தினால் டெல்லியில் லதா மங்கேஷ்கர் பாடல் கேட்கிறது.

தொலைக்காட்சியின் ஒரு பொத்தானை அழுத்தினால் சந்திரபாபுவின் 'உனக்காக எல்லாம் உனக்காக' என்ற பாட்டையும் அதற்கு அவர் ஆடும் நடனத்தையும் பார்க்க முடிகிறது. இன்னொரு பொத்தானை அழுத்தினால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் மைக்கேல் ஜாக்சன் ஆடிப்பாடிக் கூத்தடிப்பதைக் காண முடிகிறது.

நுண்ணிய நூலிழை அளவு மாற்றங்களிலேயே பல்லாயிரம் மைல்களுக்காப்பாலிருந்து வரும் ஒலியை, ஒளியை - நமது தேவைக்கேற்ப பெற்று மகிழ்கிற நிலையை எய்தியுள்ளோம். அயல்நாடொன்றில் உட்கார்ந்து கொண்டு எழுதுகிறான் - அதை அப்படியே ஒரிரு நொடிகளில் Fax பேக்ஸ் வாயிலாக மற்றொரு பிரதியாக இங்கே இந்தியாவில் பெற முடிகிறது.

இன்னும் எத்தனையோ, அற்புதங்களை அடுக்கிக் கொண்டே போகலாம் - பேசத் தெரியாத, ஆடை கட்டத் தெரியாத, உறவு முறை புரியாத, ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளத் தெரியாத, அன்பு, ஈவு இரக்கம், பண்பு இவற்றுக்கெல்லாம் பொருள் தெரியாத; மன்னிக்கவும், இவற்றை நினைத்தும் பார்த்திராத அந்தக் காலத்தைத்தான் காட்டுமிராண்டிக் காலம் என்கிறோம்.

இன்று விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட காலம் - மேலும் மேலும் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிற காலம் - எனினும்; விஞ்ஞானம் வளராத காட்டுமிராண்டிக் காலத்துச் செயல்கள், விஞ்ஞானம் விரிவடைந்துள்ள இந்தக் காலத்தில் நடைபெறாமல் போய்விட்டனவா? இல்லவே இல்லை! வளர்ந்துள்ள விஞ்ஞானத்தைப் பயன்படுத்தியே காட்டுமிராண்டிக் காலத்தை நினைவூட்டிக் கொண்டிருக்கிறான் தற்கால மனிதன்! இல்லை; இவன் தற்கால மனிதன் அல்ல! இவனும் கற்கால மனிதன்தான்!

ஆகா, விஞ்ஞானப் புதுமைகள் பாரீர்! அது விளைத்திடும் விசித்திரமான வித்தைகள் பாரீர்! என்று வியந்து பாராட்டினால் மட்டும் போதுமா?

விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்தூன்றாத அநாகரிக காலத்தில் ஆயிரக்கணக்கான அடிகள் ஆழத்தில் புதைந்து கிடக்கும் அன்பும், பண்பும், மனித நேயமும், மாற்றுக் கருத்துக்களை ஏற்காவிடினும் அவற்றை மதிக்கும் மாண்பும்; இன்றைய விஞ்ஞானம் முழுவேகத்தில் வளர்ந்துள்ள நிலையிலும், அந்தப் பாதாளப் படுகுழியை விட்டு வெளிவந்ததாகத் தெரியவில்லையே!

காட்டுமிராண்டியுகத்தில் மனிதனை மனிதன் பல்லால் கொன்றான் - பிறகு கல்லால் கொன்றான் - பின்னர் வெட்டிக் கொன்றான் - அதன்பின் சுட்டுக் கொன்றான் - இப்போதோ; அதாவது விஞ்ஞான யுகத்தில் குண்டு வெடித்துக் கொல்லுகிறான்! அன்றாவது ஒருவர் இருவரை; ஒரே நேரத்தில்! இன்றோ ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கானவரை!

ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் போர்! அதில் படைவீரர் சாவு, படைக்கலன்கள் சேதம் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஒரு நாட்டுக்குள்ளேயே ஒரு கருத்துக்கும் இன்னொரு கருத்துக்கும் மோதல்! அந்தக் கருத்துவேறுபாட்டைத் தீர்த்துக் கொள்ள, காட்டு மிராண்டிக்கால மனிதனல்ல- இந்த விஞ்ஞானயுக மனிதன் என்ன செய்கிறான்? எந்த முறையைக் கையாளுகிறான்? எக்கருத்து நற்கருத்து? எக்கொள்கை ஏற்புடையது? எவர் தலைமை சிறப்புடையது? எனத் தீர்ப்பளித்து ஏற்றுக்கொள்ளும் ஜனநாயக முறையையா? ஆம்; அந்த முறைதான் என்று அவனிக்கு அறிவிப்பது என்னவோ உண்மைதான்; ஆனால் அவன் கடைப்பிடிக்கும் முறை - காந்தியடிகளைத் தீர்த்துக் கட்ட நெருங்கியிருந்தே சுட்டுத் தள்ளக்கூடிய துப்பாக்கி;

கென்னடியைத் தொலைத்திட, தொலைவிலிருந்து சரியாகக் குறி பார்த்துச் சுடும் துப்பாக்கி; இந்திராகாந்தியை, பாதுகாக்கும் சாக்கில் பலியாக்கிடப் படைக்கலன்கள்; இராஜீவ்காந்திக்கோ மனித வெடிகுண்டு - பிரேமதேசாவுக்கு மர்ம வெடி குண்டு - இதோ காமினி திசநாயகாவுக்கும் ஒரு புதிரான வெடிகுண்டு - சுமார் நூறு பேர்களின் உடல்கள் வெடித்துச் சிதறிக் கிடக்கும் காட்சியைக் காணும்போது; மற்றொரு திருபெரும்புதூர் - மனத்தை உருக்கிடும், வாட்டிடும், வதைத்திடும் முறையாகவே இருக்கிறது.

என் செய்வது; இயற்கையுடன் போட்டி போட்டுக்கொண்டு விஞ்ஞானப் புதுமைகளை ஒவ்வொரு விநாடியும் விளைவித்துக் கொண்டிருக்கிற அறிவாற்றல் மிக்க மனிதனை; அந்தக் காட்டுமிராண்டிக் காலத்துத் தாக்கம் இன்னமும் விட்டபாடில்லை!

அந்தத் தகாத தாக்கம் மனிதனைவிட்டு நீங்காத வரையில்; இந்த விஞ்ஞான காலத்துக்கும் காட்டுமிராண்டிக் காலம் என்ற பெயரே பொருந்தும்! விஞ்ஞான யுகம் எனும் பெயரை நீக்கிவிட்டு, காட்டுமிராண்டியுகம் - அதுவும் தொடரும் காட்டுமிராண்டி யுகம் என்ற பெயரையே இந்த மனிதன் திருந்தும் வரையில் சூட்டுவதில் தவறில்லை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

26-10-1994

2191. பாதமலர் தூவுகிறார் பாரதப் பிரதமர்!

உடன்பிறப்பே,

மறைந்த நண்பர் எஸ்.டி. சுந்தரம் எழுதிய 'கவியின் கனவு' நாடகத்தில் ஒரு ராஜகுரு! நான் எழுதிய மந்திரி குமாரி நாடகத்திலும் திரைப்படத்திலும் ஒரு ராஜகுரு! பேரறிஞர் அண்ணா எழுதிய 'சொர்க்க வாசல்' திரைப்படத்தில் ஒரு ராஜகுரு! அவரது 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' நாடகத்திலும் ஒரு காகபட்டர்!

இப்படி நாடகங்களிலும் திரைப்படங்களிலும், புதினங்களிலும் பல்வேறு வகையான ராஜகுருக்களை, சாது சந்நியாசி வேடத்தில் உள்ளவர்களையும் நீ கண்டிருக்கிறாய்! நான் குறிப்பிட்டுள்ள நாடகங்கள், திரை ஓவியங்கள் மட்டுமின்றி மேலும் பல துறவிகளை, பண்டார சன்னதிகளை, குருமார்களை வரலாற்று நூல்களில், நாடகம் மற்றும் திரைப்படங்களில் பார்த்துமிருக்கிறோம்.

'என்ன சுவாமிகாள், யோகாப்பியாசம் முடிந்துவிட்டதா?' என்று ஒரு மடத்து சாமியார்; இன்னொரு மடத்து சாமியார், இரவு நேரத்து மன்மத பூஜையை முடித்துவிட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வரும்போது கேட்டிடும் காட்சியை பழைய நாள் 'சந்திர காந்தா' படத்தில் பார்க்கலாம்.

எல்லா ராஜகுருக்களும், சாதுக்களும், சன்னதிகளும் மோசமானவர்கள் அல்ல என்றாலும்; பெரும்பாலோர் அந்தப் பட்டியலில் இடம்பெற்றவர்கள்தான்!

மனோன்மணியம் நாடகக் காவியத்தில் வரும் சுந்தரசாமியார், நாட்டுப்பற்று மிகுந்தவர். நல்லவர்!

'வேலைக்காரி' படத்தில் வரும் அரிகரதாஸ் என்றப் போலி வேடதாரி பழைய நாள் கேடி! சமூக விரோதி! பத்தாண்டுக்கு முன்பு பண்டாரப் பக்கிரி!

இவ்வாறு நமதியக்கத்தின் சார்பிலும் - நமதியக்கத்தினரல்லாத; ஆனால் நாட்டின் மீது சமுதாயத்தின் அறிவார்ந்த வாழ்வின் மீதும் அக்கறையுள்ள வேறு பலரின் சார்பிலும் - இன்றைக்கும் இந்தியாவின் பல பகுதிகளில் ஏமாளி மக்களின் தோளில் ஏறி உட்கார்ந்து கொள்ளும் எத்தர்களாம் கபடநாடக வேடதாரிகள் எத்தனையோ பேரை மக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டுத்தான் வருகிறது; காலம் காலமாக!

இன்னும் மக்கள் முழுமையாகத் திருந்தியபாடில்லையே என்று நாம் ஆதங்கப்படும் அதே நேரத்தில் - இன்று இந்த நாட்டை ஆளுகின்றவர்கள்; அவர்கள் ஜனாதிபதிகளாக இருப்பினும், பிரதமர்களாக இருப்பினும், முதலமைச்சர்களாக, வெறும் அமைச்சர்களாக, அரசின் பெரும் அதிகாரிகளாக இருப்பினும் அவர்கள் எல்லாம் கமண்டலதாரிகளின், காவியுடைக்காரர்களின் காலடிகளில் விழுந்து கிடப்பதையுமன்றோ காண வேண்டியுள்ளது.

பரண் மீதே அமர்ந்திருக்கக்கூடிய ஒரு சாமியாரை தரிசிக்கச் சென்று அவர் பாதங்களைத் தூக்கித் தன் தலைமீது வைத்துக் கொண்டார்; சில ஆண்டுகளுக்கு முன்பு பல்ராம்ஜாக்கர் - சபாநாயகராக இருந்தபோது!

நேருவின் மறைவுக்குப் பிறகு அவரது குடும்ப மாளிகைகள் குருதேவர்களின் மடங்களாகவும் மாறத் தொடங்கின!

நேரு போன்ற பகுத்தறிவுவாதிகள் ஆட்சி நடக்கும்போதுதான் சாது சந்நியாசிகள் கும்பமேளாத் திருவிழாவும் நிர்வாணக் கோல ஊர்வலங்களும் - கண்றாவிக் காட்சிகளாக!

மத்தியில் ஆட்சியில் இருப்போருடன் உறவு கொண்டு; உப்பரிகை அமைத்துக் கொண்ட சாமியார்கள், ஒய்யாரக்கூடம் கட்டிக் கொண்ட சந்நியாசிகள், தனி விமானங்கள் கூட வைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு செல்வத் தகுதியை உயர்த்திக்கொண்ட தபோதனர்கள் - இப்படிப் பலரது கதைகள் பத்திரிகைகளில் வந்து படித்திருக்கிறோம். அவையெல்லாம் பெரிய இடத்துச் சமாச்சாரங்கள்! சில்லறைச் சாமியார்கள் ஊருக்கு ஊர்! அவர்தம் பாதம் தொழும் பாமரரோ பல பேர்!

அவர்களிடம் பணம்படைத்தோர் ஏமாந்தனர் - இன்னமும் ஏமாறுகின்றனர்! பாவையர் பலர் கற்பையே பறிகொடுத்தனர்; ஆயினும் இன்னும் பாடம் பெற்றாரில்லை - பகவானுக்குத் தமது

குறையை எடுத்துரைக்கவல்லார், நல்லார், இவரேயென்றுப் படுகுழியில் தொடர்ந்து வீழ்வோருமுளர் இப்போதும்!

எனவே அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு, ஆண்டவன் பெயரால் ஆட்சியாளர்களையே தமக்கு அடிமையாக்கிக் கொள்ளும் நிலை; மெல்ல மெல்லவாவது தொலையுமா எனும் நமது ஏக்கத்திற்கு நேர்மாறாக; ஆட்சியின் தலைமகனாக இருப்பவரே நேற்றைய தினம் என்ன பேசியிருக்கிறார் என்பதுதான் நினைக்க நினைக்க நமக்குக் கவலை தரும் செய்தியாகும்.

உடன்பிறப்பே; டெல்லியில் ஒரு சந்திராச்சாரியாரின் பிறந்தநாள் விழா - 50வது பிறந்தநாள்விழா - அந்த விழாவில் கலந்து கொண்டு பிரதமர் பேசியிருக்கிறார். என்ன பேசியிருக்கிறார்?

> "அரசுக்கும் சாமியார்களுக்கும் இருக்கும் உறவை முறிக்க முடியாது. சாமியார்களுக்கு, ஆட்சியாளர்கள் தலைவணங்கும் ஒரே நாடு இந்தியாதான்"

அந்த விழாவில் கலந்து கொண்ட ஒரு சாமியார் கரகமாடுபவர்போல தலையில் பூரணகும்பத்தை வைத்துக்கொண்டே பிரதமருக்கு முன்னே அமர்ந்திருந்த காட்சியின் அருமையே, அருமை!

பிரதமர் ஒருவர்; அதுவும் மதச்சார்பற்ற நிலையைக் கடைப்பிடிக்கும் நாட்டின் பிரதமர் என்று சொல்லிக் கொள்பவர், அவர்தான் இப்படிப் பேசியுள்ளார். ஆட்சியாளர்கள், சாமியார்களுக்குத் தலைவணங்கும் ஒரே நாடு இந்தியாதானாம்!

அடடா; இராமாயணத்தில் தசரத சக்கரவர்த்தி, வசிஷ்டரையும் - விசுவாமித்திரரையும் எழுந்து நின்று வணங்கியவாறு வழங்கிய பணிவு பொழிவு போலன்றோ இருக்கிறது; நரசிம்மராவின் இந்த பக்திப் பரவச மிகுந்த அறிவிப்பு!

அதுவும் எந்த நேரத்தில்? அயோத்திப் பிரச்சினையில் உச்சநீதிமன்றம் தலையிடுவதற்கில்லையென அந்த மன்றத்து நீதிபதிகள் அறிவித்து விட்ட நிலையில் - அயோத்தி பாபர் மசூதி இருந்த இடத்தில் கோயில் கட்ட மீண்டும் மக்களைத் திரட்டுவேன் என அத்வானி அறைகூவல் விடுத்துள்ள நிலையில் - பிரதமர் கூறுகிறார்; நாங்கள் சாதுக்களுக்கும் சாமியார்களுக்கும் தலைவணங்குவோம் என்று!

பீடித்துள்ள நோய் நீங்கிட அருள் புரிக எனக் கேட்போர், பிள்ளை வரம் தருக அய்யனே எனக் கெஞ்சுவோர், பித்தம் தெளிந்திட மந்திரம் செய்க மகானே என மண்டியிடுவோர், சாமியார்கள் முன்னே பேசிடும் பேச்சை; ஒரு பிரதமர் பேசுவதா? பேசலாமா?

எங்களைப் போல் உங்களுக்குத் தலைவணங்குவோர் உலகில் யார் உண்டு? எனவே; ஏந்துங்கள் மீண்டும் போர்க்கொடியை! எவர் எதிர்ப்பினும்; எம் துணை என்றுமுண்டு உமக்கு! என்பதாக இந்தப் பேச்சின் மூலம் பிரதமர் மறைமுகமாக மதவெறியாளர்களுக்குப் பளிங்குக் கல் பரப்பி, அதில் பட்டுப் பாய் விரித்து, பாதமலர் தூவி, பாபர் மசூதியிருந்த இடம் நோக்கிப் பயணித்திடுக என வழி காட்டி, பக்கத் துணையும் இருப்பதற்கு தயாராகிவிட்டார் என்றுதானே புரிகிறது! இதை, நாட்டின் அமைதியில் அக்கறையுடையோர் அனுமதிக்கலாமா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

27-10-1994

2192. பாராட்டத் தயங்கிடோம்; இல்லையேல் போராட்டம்தான்!

உடன்பிறப்பே,

தலைமைக் கழக நிர்வாகக் குழுவின் தீர்மானங்களைப் படித்திருப்பாய். சேஷன் புத்தகத்திற்கு எதிர்ப்பும் கண்டனமும் அவற்றின் தொடர்பாக அறப்போராட்டமும் தீர்மானமாக உருப்பெற்றிருக்கும் அதே நேரத்தில்; தமிழக மக்களின் பிரச்சினைகளில் அவ்வப்போது கழகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக, ஈடுபடும் போராட்டங்களுக்காக, தீட்டப்படும் தீர்மானங்கள் வரிசையில் இந்த நிர்வாகக் குழுவிலும் மேலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அன்றாடம் அடுக்கடுக்காகத் தமிழகத்தில் தொடர்ச்சி கெடாமலும் தொய்வின்றியும் நிகழ்ந்து கொண்டிருக்கும், சட்டம் ஒழுங்கு அமைதிக்குச் சவால்விடும் போக்கில் உள்ள கொலைகள், கொள்ளைகள், வழிப்பறிகள், கடத்தல்கள், கற்பழிப்புகள், காவல்நிலைய மானபங்க சித்ரவதைகள் போன்றவைகளுக்கு இன்றைய காவல்துறையும், அத்துறையைத் தன் கையில் வைத்துக் கொண்டு, பொம்மலாட்ட வித்தை காட்டியவாறு எதிர்க்கட்சியினரை மிரட்ட பொய் வழக்குகளைத் தொடர்ந்து கொண்டும், பழிவாங்கும் செயலை இடையறாது கடைப்பிடித்துக் கொண்டுமுள்ள முதலமைச்சர் ஜெயலலிதாவுமே பொறுப்பாளிகள் எனக் குற்றம்சாட்டி, வன்மையான கண்டனத்தை நிர்வாகக்குழு தெரிவித்துள்ளது.

ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளில் அந்தந்த வட்டாரப்பகுதிகள், தெருக்கள், வீதிகள், சந்து பொந்துகளில் மக்களின் தேவைகளை நிறைவு செய்திடவும், நோய் நொடிகளை முன்கூட்டித் தடுத்திடும் முறைகளை மேற்கொள்ளும் தூய்மைப் பணிகளை நிறைவேற்றியும், வந்துவிட்ட நோய்களில்

இருந்து அந்த மக்களைக் காப்பாற்றிடவும், இன்னும் எத்தனையோ அவசியங்களுக்காகவும் ஆங்காங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் இருந்திட வேண்டுமென்பது ஜனநாயகத்தில் தட்டிக்கழிக்க முடியாத அம்சமாகும்.

இதனை அலட்சியப்படுத்திவிட்டு; உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற கோரிக்கைகளைப் புறக்கணித்துவிட்டுள்ள ஜெயலலிதா அரசுக்குக் காலக்கெடு கொடுத்து; கழகம் அதன் பின்னர் அந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் போராட இருக்கிறது என்பதை மறைமுகமாக அறிவிக்கும் தீர்மானமே, நிர்வாகக் குழுவின் மூன்றாவது தீர்மானமாகும்.

நெடுங்காலமாக நின்று போயிருந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை; கழகம் 1989-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நடத்திடத் திட்டமிட்டு முதல் கட்ட தேர்தல்களை முடித்துவிட்டு, அடுத்த கட்டத் தேர்தலில் அடியெடுத்து வைக்கும் நேரத்தில் ஆட்சியும் கலைக்கப்பட்டு, அதுவரை நடைபெற்று முடிந்திருந்த தேர்தல் காரணமாக பொறுப்பில் இருந்த கூட்டுறவு சங்கங்களும் கலைக்கப்பட்டு; அந்த அமைப்புகளிலும் உள்ளாட்சி மன்றங்களைப் போல தனி அதிகாரிகளின் தர்பாரும் - ஆளுங்கட்சிக்காரர்களின் ஆட்டபாட்டக் கூட்டுக்கொள்ளையும் நடைபெறுவதை எடுத்துரைத்து அந்தத் தேர்தல்களை விரைவில் நடத்திட வற்புறுத்திடும் தீர்மானமே நான்காவது தீர்மானமாகும்.

மின்வாரியத்தில் ஆயிரக்கணக்கான பணியிடங்களுக்கு ஆசிரியர் காலியிடங்களுக்கு மூப்பின் சீனியாரிட்டி அடிப்படையில் நியமனங்கள் கழக ஆட்சியில் நடைபெற்றதை மாற்றி, ஒவ்வொரு நியமனத்திற்கும் பெருந்தொகை லஞ்சம் பெறும் இந்த ஆட்சியாளர்களின் பகல் கொள்ளையைப் பகிரங்கப்படுத்துவது ஐந்தாவது தீர்மானம்.

அதற்கடுத்த தீர்மானமும் அதனையொட்டியே; கல்லூரி, பள்ளிகளில் காலிப்பணி இடங்களை உடனடியாக நிரப்புவதற்கு ஆணையிடுவதாக வெளியிடப்பட்ட அரசின் அறிவிப்பு எந்தக் குப்பைக் கூடையில் முடங்கிக் கிடக்கிறது என வினா எழுப்புவதாகும்.

ஏழாவது தீர்மானமோ; ஏழை பாழைகள், நடுத்தர மக்கள், தொழிலாளர் வர்க்கத்தினர், எட்டிப் பிடிக்க முடியாத தொலைவுக்கு விலைவாசி ஏறியுள்ளதற்கு மத்திய மாநில அரசுகள் சொல்லி வரும் மழுப்பல் பதில்களுக்கு இனியும் எத்தனை நாட்கள் செவிசாய்த்து ஓய்ந்து கிடப்பர் மக்கள் என்று போர்முரசு கொட்டத் தேதி நிர்ணயிக்க இருக்கும் தீர்மானமாகும்.

கரும்பு விவசாயிகளின் பல்வேறு கஷ்டங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நியாயமான விலையை நிர்ணயித்திட உடனடியாக உரியமுறையில் ஆவன செய்தி வேண்டுமென மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துவது எட்டாவது தீர்மானமாகும்.

இந்தத் தீர்மானங்கள் வெறும் ஏட்டளவில் இன்றி; இவற்றை வெற்றிபெறச் செய்திடக் கழகம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என, நிர்வாகக்குழுவில் நான் நிறைவுரையாற்றும்போது குறிப்பிட்டிருக்கிறேன்.

இயக்கத்தின் மீதும் இயக்கம் கண்ட இணையற்ற தலைவர் அண்ணா அவர்கள் மீதும் இழிவும் பழியும் சுமத்தப்பட்டதை எதிர்த்துப் போராட்டம்!

அதேசமயம் இன்னலுற்றுச் சீரழியும் ஏழை, எளிய, நடுத்தர, மற்றும் தொழிலாளர் வர்க்க மக்களின் இடுக்கண் களையவும் போராட்டம்!

நிர்வாகக்குழு தீர்மானங்களில் முதலாவதாக இடம்பெற்றுள்ளது சேஷனின் புத்தகப் பிரச்சினை!

அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள் காலை அச்செய்தி வந்த ஏடுகளைக் கண்டவுடன்; அன்று மாலை தொடங்கி இதுவரையில் அந்நூல் குறித்து நமது கழகம் எடுத்துள்ள நடவடிக்கைகளையும் – இனி எடுக்க இருக்கும் நடவடிக்கைகளையும், நிர்வாகக்குழுவின் முதல் தீர்மானம் விரிவாக விளக்கியிருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களையும், இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கான மொழிப் புரட்சியையும், அப்புரட்சியில் அடக்குமுறை, சித்ரவதை, சிறைச்சாலை, துப்பாக்கிச் சூடு, அதில் சாவு என தியாகங்கள் பலபுரிந்த தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களையும் களங்கப்படுத்தியுள்ளது சேஷனைப் பற்றிய புத்தகம் எனக் கேள்வியுற்றதும்;

எந்தத் தலைவரால் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதோ; அந்தத் தலைவர் மீது வீசப்பட்ட சேறு துடைத்திட வீறு கொண்டெழுந்தோம் நாம்! நமது உரிமை அது!

அண்ணாவின் பெயரைக் கட்சிக்குக் கொண்டுள்ள ஆளுங்கட்சியின் அம்மையாரும் கண்டன அறிக்கை கொடுத்தார் - அவர் கடமை அதுவெனக் கருதி!

மொழிப்புரட்சியின்போது தளபதிகளில் ஒருவராகச் செயல்பட்ட எல்.ஜி; இன்று தலைவராக இருக்கும் ம.தி.மு.க.வும் சேஷனை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பியது!

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க., தாயக மறுமலர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் சார்பிலும் கண்டன அறிக்கைகள்! போர்க்குரல்கள்!

எல்லா கட்சிகளும் தனித்தனியாகக் குரல் கொடுத்தாலும் - ஒரே குரல்; அண்ணா மீது பொழியப்பட்டுள்ள அவதூறு நீக்கப்பட வேண்டுமென்பதேயாகும்!

இவற்றில் யார் குரல் வலிமையானது - எந்தக் குரல் முந்திக்கொண்ட குரல் - இந்த வாதப்பிரதிவாதங்களுக்கே இடமில்லை.

ஆனால் சேஷனை எதிர்த்துக் குரல் கொடுப்பதிலே உள்ள அக்கறை ஆர்வத்தை விட சில கட்சியினருக்கு இந்தப் பிரச்சினையிலும் கூட தி.மு.க.வை தாக்குவதுதான் குறிக்கோளாக இருந்திடக் காண்கிறோம். அ.தி.மு.க. தலைவர், என்னை வெறும் வாய்சொல் வீரர் என்று வர்ணித்தார்! ம.தி.மு.க. தலைவர்களில் ஒருவரோ; எனக்கு இனமானம் சூடு சொரணை எதுவுமில்லை என்று காஞ்சியில் கர்ச்சித்தார்! அக்கட்சியின் பொதுச்செயலாளரே கடலூர் கூட்டத்தில் என்னை சேஷனின் ஊதுகுழல் என்று கேலி செய்தார்!

உடன்பிறப்பே, ஆளுங்கட்சித் தலைவியார் ஜெயலலிதா ஆனாலும், வேறு கட்சித் தலைவர்களாயினும் நம்மை வம்புக்கிழுப்பதுடன் நில்லாமல் வரலாற்றுப் பிழைகளையும் செய்யும் போது; குறிப்பாக 1965-ல் தமிழ்நாடு சர்க்கார்தான் இந்தியை ஆட்சிமொழியாக அறிவித்தது என்பது போன்ற தவறான விவரங்களைத் தரும்போது, மறுத்துரைப்பது நமக்குக் கடமையும் உரிமையுமாகும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இருப்பினும் இந்த ஒரு பிரச்சினையில்; தி.மு.கழகத்தினராகிய நமது போராட்டம், அண்ணாவைக் களங்கப்படுத்த முயற்சித்துள்ள சேஷனை நோக்கித்தான் என்பதை நினைவிற் கொள்ளுமாறு எழுத்தாளர்களாக, பேச்சாளர்களாக, நிர்வாகிகளாக, செயல்வீரர்களாக உள்ள உடன்பிறப்புகள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியாளர்களுக்குத்தான் நம்மைவிட இதில் அதிக அக்கறை என்பார்களேயானால்; அதைப்போல வேறு சிலரும் மார்தட்டுவார்களேயானால்; அப்படியா! சரி! மகிழ்ச்சி! என்று கூறிவிட்டு நமது களத்தில் நாம் நிற்போம்!

சேஷன் மீது தனிப்பட்ட முறையில் நமக்கு எந்தக் கோபமும் இல்லை! எனவே அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள அண்ணாவை நாம் பயன்படுத்திக்கொள்ள முனையவுமில்லை. நம்மை ஆளாக்கிய தலைவர். நமது கழகம் கண்ட தலைவர். அவரை முழுமையாக உணர்ந்தவர்கள் நாம். அவர்மீது புழுதி வாரித் தூற்றும்போது நம்மால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை; பொங்கி எழுகிறோம்! தூற்றியவர் யாராயிருப்பினும் கவலையில்லை என்று!

ஒரு உதாரணம் பாரேன்; உடன்பிறப்பே - இதே போல பிரச்சினைக்குரிய ஒரு நூல், ஆர்.வி. அவர்களால் எழுதப்பட்டது. காவிரிப் பிரச்சினைக்கு அன்று முதல் இன்றுவரை தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நிலைக்கு முற்றிலும் முரண்பாடாக - கர்நாடகத்துக்கு மிகச் சாதகமாக ஒரு கருத்து அந்தப் புத்தகத்தில் ஆர்.வி. அவர்களால் எழுதப்பட்டுவிட்டது. அதை நண்பர் குகன் ஐ.ஏ.எஸ். அவர்கள் சுட்டிக்காட்டி அறிக்கைவிட; உடனே தி.மு.கழகம் பெரும் எதிர்ப்பு தெரிவித்து - போர்க்குரல் கொடுத்தது. அதுமட்டுமல்ல; தமிழக அரசு உடனடியாக ஆர்.வி.யின் கூற்றை மறுக்க வேண்டுமென்றும் நான் குறிப்பிட்டேன். ஆனால் ஆர்.வி.யின் அந்த நூலை எதிர்த்து ஜெயலலிதா பல்லிடுக்கால்கூட ஒரு வார்த்தை பகரவில்லை.

என்செய்வது; எழுதியவர் ஆர்.வி. ஆயிற்றே! அம்மையாருக்கு ஆலோசகராயிற்றே!

ஆர்.வி. தனது கருத்தை மாற்றிக்கொண்டார். அதை அப்படி வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும்; தனது புத்தகத்தில்

எப்படி அந்தப் பிழை நேர்ந்தது என்பதைச் சிறிது விளக்கிவிட்டு, அடுத்த பதிப்பில் அது திருத்தப்படும் எனக் கூறிவிட்டார். அதன்பிறகே நமது போராட்டம் நின்றது!

ஆர்.வி. அவர்கள் கடைப்பிடித்த நிலையை - கண்ட வழியை - சேஷன் அவர்களும் கடைப்பிடிப்பதில், அவருக்கு எந்த மதிப்பும் குறைந்து விடப் போவதில்லை!

அண்ணாவின் தம்பி என்பதால்; அண்ணாவின் பாணியில் சேஷனுக்கு இதனைக் குறிப்பிடுகிறேன்.

தவறு நடந்துவிட்டது, வருந்துகிறேன். என்னைப்பற்றிய நூலில் அண்ணா குறித்து எழுந்துள்ள பிரச்சினைக்குரிய அந்தப்பகுதி நீக்கப்பட்டு விட்டது என்று கருத்தமைந்த ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டு, அவ்வாறே அதனை நீக்கியும் விடுவாரேயானால்; அதனை பாராட்டவும் கழகம் தயங்காது!

இல்லையெனில் போராட்டம்தான்; இதுவே கழக நிர்வாகக்குழு எடுத்துள்ள முடிவு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

29-10-1994

2193. அதிர்ச்சியும், ஆச்சரியமும்!

உடன்பிறப்பே,

மத்திய காங்கிரஸ் அரசின் புதிய பொருளாதார திட்டம் - இந்திய நாட்டுக்குப் பொருந்தக் கூடியதல்ல என்பதிலும்; காட் மற்றும் டங்கல் போன்றவைகளால் இந்தியாவின் சுயசார்புத்தன்மை கடுமையாக ஊனமுற்றுவிடும் என்பதிலும் நமது கழகம் அழுத்தமான கருத்துடன் இருப்பதால்தான் தனது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வன்மையாகத் தெரிவித்து வந்துள்ளது.

மேற்கண்ட கொள்ளை, திட்டங்களால் தொழிலாளர்கள் பெரும் தொல்லைக்கு ஆளாக நேரிடும் என்றும், விவசாயிகள் பாதிக்கப்படுவர் என்றும், ஏழை - எளிய - நடுத்தர மக்களின் வாழ்க்கையில் எதிர்காலத்தில் பல சோதனைகளை சந்திக்க நேரிடும் என்றும் ஆதாரபூர்வமான விளக்கங்களுடன் நமது கழகத்தின் சார்பில் எழுதியும் பேசியும் வருவதுடன், கழகத்தின் செயற்குழு - பொதுக்குழு - மாநாடு ஆகியவற்றிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புதிய பொருளாதார திட்டம் - காட் - டங்கல் - இவற்றைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களும் நடத்தியிருக்கிறோம்; அனைத்து முற்போக்குக் கட்சிகளுடன் வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் இணைந்து களம் கண்டிருக்கிறோம்.

எல்லா தொழில்களையும் தனியார் மயமாக்குதல் - அரசின் பொதுத்துறைத் தொழில்களையும் தனியாருக்கு தாரை வார்த்தல் - வளர்ந்த நாடுகளின் நிபந்தனைக்கு வளரும் நாடான இந்தியாவை உட்படுத்துதல் - பன்னாட்டு அதிபர்களுக்கு மீண்டும் ஒருமுறை இந்தியாவை வாணிபக் காலனியாக்குதல் - இவையனைத்தும் இந்த நாட்டை சோஷலிசப் பாதையிலிருந்து அறவே புறந்தள்ளுவது மட்டுமின்றி; அரும்பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்திற்கும் தங்க விலங்கு மாட்டிய கதையாகி விடும் என்பதை கழகம், தொடர்ந்து எடுத்துக்கூறி வருகிறது.

எனினும்; இதில் நாம் வேகமாக இல்லை என்பதுபோல ஓர் இட்டுக்கட்டிய கற்பனையை தமிழகத்திலுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் நண்பர்கள் மேடைப் பிரசங்கங்களாகவும் - அறிக்கைகளாகவும் வெளியிட்டு வருகின்றனர்.

அதன் உச்சகட்டமாக பழனி நாடாளுமன்றத் தேர்தலின்போது, கழகம் காங்கிரசுடன் ரகசிய உறவு கொண்டுள்ளது என்றும், கழகத்தினர் வாக்குகளை காங்கிரசுக்கு அளிக்க இருக்கின்றனர் என்றும், அதனால்தான் அந்தத் தேர்தலில் தி.மு.க. தலைவர் மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி எங்குமே பேசவில்லை என்றும் அன்பு நண்பர் நல்லசிவன் எம்.பி. அவர்களே அறிக்கை விடுத்தார். அவரது கட்சி ஏட்டிலும் அவ்வாறு என்னைப்பற்றியும், கழகத்தைப் பற்றியும் சித்தரிக்கப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து நான் பழனி நகரத்தில் பேசியதைக் கூட ஆதாரத்துடன் அவர்களுக்கு எடுத்துக்காட்டியபோது, பழனியிலும் சரி; வேடசெந்தூரிலும் பேசவில்லையே என்றுதான் என்னையும் கழகத்தையும் குற்றம் சாட்டினர்.

பழனி நாடாளுமன்றத் தேர்தலில்; காங்கிரஸ் மூன்றாவது இடத்தில் வந்ததையும், கழகமோ கடந்த தேர்தலைவிட லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் அதிகம் பெற்று இரண்டாவது இடத்தில் வந்ததையும் நாம் சுட்டிக்காட்டியபோதும்; மார்க்சிஸ்ட் கட்சியினர் தங்கள் பிரச்சாரத்தை நிறுத்திக் கொள்ளவில்லை.

புதிய பொருளாதாரக் கொள்கை - காட் டங்கல் ஆகியவற்றை எதிர்த்து நடத்தும் கூட்டுப் போராட்டத்துக்கு தி.மு.க.வை அழைத்தோம். அவர்கள் வரவில்லை. இதிலிருந்தே அவர்கள் காங்கிரசுடன் ரகசிய உறவு கொண்டுள்ளது தெரிகிறது என்று கருத்தமைந்த அறிக்கைகளையே வெளியிட்டுக் கொண்டிருந்தனர்.

ஏன்; கடந்த சில வாரங்களுக்கு முன்பு கூட ஒரு கூட்டுப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துவிட்டு; அதே சமயம் நிருபர்களிடம் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது; தி.மு.க. காங்கிரஸ் உறவு என்ற எங்கள் குற்றச்சாட்டு அப்படியே இருக்கிறது என்றுதான் கூறியிருக்கிறார்.

இவற்றிலிருந்து அவர்கள் மக்களுக்குத் தெரிவிக்க விரும்புவது; கழகத்திற்கு புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதிலோ - காட் மற்றும் டங்கலைக் கண்டிப்பதிலோ அக்கறையில்லை என்பதுதான்!

இது அவர்களின் புனைந்துரை - கற்பனை - வேண்டுமென்றே தி.மு.க. மீது பழிசுமத்தும் செயல்!

காட், டங்கல், புதிய பொருளாதாரம் பற்றிக் கழகத்தின் கண்டனக் கருத்துகள்; கல்லில் செதுக்கப்பட்டவைகளாக ஆதாரப்பூர்வமாக அழியாமல் உள்ளன.

ஆனால் நம்மை அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்துக்கும் உள்ளாக்கும் செய்திகள் மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமையிடத்தில் இருந்துதான் இப்போது வருகின்றன.

கடந்த மாதம் மேற்கு வங்க சட்டப் பேரவையில் மார்க்சிஸ்ட் கட்சியின் முதல்வர் நண்பர் ஜோதிபாசு அவர்கள் அந்த மாநிலத்தின் புதிய தொழிற் கொள்கை அறிவிப்பை செய்துள்ளார்.

மேற்கு வங்கத்தின் தொழில் வளர்ச்சிக்காக பன்னாட்டு மூலதனக் கம்பெனிகளும், இந்தியத் தொழில் அதிபர்களும், என்.ஆர்.ஐ.களும் புதிய புதிய தொழில்களைத் தொடங்க முன்வர வேண்டும். அந்த தொழில்களுக்கு தொழிற் சங்கங்களின் மூலம் ஏற்படக்கூடிய சிக்கல்களையும் தவிர்த்திடுவதற்கு எல்லா நடவடிக்கைகளை எடுக்கவும் அரசு தயாராக இருக்கிறது என்பதுதான் அந்த அறிவிப்பின் சாரமாகும்.

மேற்கு வங்கத்தின் இந்தப் புதிய தொழிற்கொள்கை ஆளுங்கட்சி கூட்டணி வட்டாரத்திலும், இடதுசாரிகள் மத்தியிலும், பத்திரிகைகள் மட்டத்திலும் பெரியதோர் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

பன்னாட்டு கம்பெனிகளுக்கு அழைப்பு விடுப்பது - தனியார் துறையை ஊக்குவிப்பது ஆகியவைகளைக் கொள்கையாகக் கொண்ட நரசிம்மராவின் ஆட்சியை எதிர்த்து, அகில இந்திய அளவில் சிறை நிரப்பும் போராட்டம் - ஒருபுறத்தில்! மற்றொரு புறத்தில் மேற்கு வங்க தொழில் வளர்ச்சிக்கென; நரசிம்மராவின் கொள்கையையே மார்க்சிஸ்ட் கட்சி முதலமைச்சர் தமது மாநில அரசின் கொள்கையாக அறிவித்தல்!

இந்த முரண்பாடுகள் பற்றிய கேள்விகளுக்கு செய்தியாளர்கள் மத்தியில் பதிலளிக்க முன் வந்த மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் அரிகிஷன் சிங் சுர்ஜித் அவர்களின் பதில்தான் மேலும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

அவர் சொன்ன பதில் என்ன? இதோ; இதுதான்!

நாங்கள் ஒன்றும் மேற்கு வங்கத்தில் சோஷலிசத்தை உருவாக்கிக் கொண்டிருக்கவில்லை.

We are not building socialism in West Bengal

அன்புள்ள,

மு. கருணாநிதி

05-11-1994

2194. ஏன்? ஏன்? ஏன்? என்ன பதில்?

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீடு இல்லை - 50 சதவீதம்தான் என்கிற நிலை; உச்சநீதிமன்றத்தில் மீண்டும் அக்டோபரில் தமிழ்நாட்டு ஜெயலலிதா அரசு ஒப்புதல் வழங்கிவிட்டதால் ஏற்பட்டுவிட்டதே என்ற கவலையை எதிர்க்கட்சிகள், குறிப்பாக சமூகநீதியில் அக்கறையுடன் உள்ள கட்சிகள் தெரிவித்து; ஜெயலலிதா அரசு எதற்காக இப்படி உச்சநீதிமன்றத்தில் ஒப்புதல் தரவேண்டுமென்று குரல் எழுப்பின!

அக்டோபர் 19-ந் தேதியன்று இந்து ஏட்டில் முதல் பக்கத்தில் வெளிவந்துள்ள செய்தியின் அடிப்படையில்தான், கழகமும் மற்றும் சமூகநீதியில் அக்கறையுடன் உள்ள கட்சிகளும் இதற்கான விளக்கத்தை ஜெயலலிதா அரசிடம் கோரின.

விளக்கமளிப்பதாகக் கூறிக் கொண்டு அமைச்சர் முத்துசாமி செய்தியாளர்களிடம் முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முயல்பவரைப் போல; அப்படி எந்த ஒப்புதலும் இந்த ஆண்டு நடைமுறைக்கு வரவேண்டிய 69 சதவீத இடஒதுக்கீடுக்கு மாறாக 50 சதவீதத்திற்கென உச்சநீதிமன்றத்தில் தரவில்லையென்று சாதித்தார். அப்போதுகூட அவர் இந்து ஏட்டில் வெளிவந்த செய்தி தவறு என்று கூறவில்லை.

அந்தச் செய்தியை தமிழக அரசு மறுத்திடவே இல்லை.

ஆம்; எப்படி காவிரி ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டுடன் காலாவதி ஆகிவிட்டது என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வி. புத்தகத்தில் தமிழ்நாட்டு நலனுக்கு எதிராக ஒரு அபாண்டத்தை எழுதியபோது அதனை மறுத்திட வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொண்டு அறிக்கை விட்டும்கூட, ஆர்.வி.யின் கருத்தை இந்த அரசு மறுக்கவில்லையோ; அதைப் போலவே இந்து ஏட்டில்; உச்சநீதிமன்றத்தில் இப்போது மீண்டும் ஒருமுறை

அக்டோபர் 3-ந்தேதி இந்த அரசு 50 சதவீதத்துக்கு ஒத்துக் கொண்டதை வெளியிட்டிருப்பதை மறுக்க முன்வரவில்லை.

ஆர்.வி.யின் புத்தகத்தை மறுக்காததற்குக் காரணம்; அவர் இந்த அரசின் அந்தரங்க ஆலோசகர் என்பதால்!

இந்து ஏட்டில் அக்டோபர் 19-ல் வந்த செய்தியை மறுக்காததற்குக் காரணம்; அப்படி மறுத்தால்; இந்து ஏடு, உச்சநீதிமன்றத்தில் அக்டோபர் 3-ந் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பின் ஆதாரங்களை வெளியிட்டு விடும் என்ற அச்சம் ஏற்பட்டதால்!

அமைச்சர் முத்துசாமி அவர்கள்; உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மீண்டும் ஒருமுறை இடஒதுக்கீடுப் பிரச்சினையில் பெரும் துரோகம் விளைவித்து விட்டதையும் - 50 சதவீதத்துக்கு ஒப்புதல் அளித்து விட்டதையும் - தந்திரமாக மறைத்துவிட்டு செய்தியாளர்களையும் - பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களையும் ஏமாற்றி விட்டதாக பெருமைப்பட்டுக்கொண்டதுதான் மிச்சம்.

இவரது கூற்றில் சமூகநீதியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு போராடி வருகிற திராவிடர் கழகத்தின் அதிகாரபூர்வ ஏடான விடுதலை கூட நம்பி; அக்டோபர் 25-ந் தேதி எழுதிய தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டது.

> 69 சதவிகித இடஒதுக்கீட்டுக்காக - தமிழகத்தில் தனிச்சட்டம் உருவாக்கப்பட்டு - அந்த சட்டம் அரசியல் சட்டம் 9-வது அட்டவணையிலும் இணைக்கப்பட்ட பிறகு, 69 சதவிகித இடஒதுக்கீடு சட்டத்தில் நீதிமன்றம் குறுக்கிட உரிமை இல்லை; என்றாலும், உச்சநீதி மன்றம் இந்தப் பிரச்சினையில் சட்ட அம்சங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இடஒதுக்கீடு 50 சதவிகிதத்துக்கு மேல் போகக்கூடாது என்ற அடிப்படையில் - கடந்த அக்டோபர் 3-ஆம் தேதி - உச்சநீதிமன்றம், ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது; இதன்படி, பொதுப்போட்டியில் மட்டும் 62 இடங்களைக் கூடுதலாக நிரப்ப வேண்டும் என்று அந்த உத்தரவு கூறுகிறது;
>
> உச்சநீதிமன்றத்தின் இந்த ஆணையை ஏற்று செயல்பட தமிழக அரசு முடிவு செய்துவிட்டதாகவும் - இதில் ஒரு

சமரசத்தீர்வுக்கு - தமிழ்நாடு அரசு வந்துவிட்டதாகவும் இந்து நாளேடு வெளியிட்ட உறுதி செய்யப்படாத - ஒரு கற்பனை செய்திதான் - இந்தப் பிரச்சினையை மீண்டும் அரசியலாக்கி இருக்கிறது.

உச்சநீதிமன்றத்தில் 50 சதவிகித இடஒதுக்கீட்டுக்கு - தமிழக அரசு எழுதிக் கொடுத்து விட்டது என்று கடந்த காலங்களில் செய்துவந்த உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை மீண்டும் துவக்கியிருக்கிறார்கள்; தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் முத்துசாமி - இந்தப் புகார்களுக்கு எல்லாம் தெளிவான விளக்கங்கள் ஆதாரத்தோடு அளித்திருக்கிறார்.

இவ்வாறு விடுதலை இதழ் திட்டவட்டமாக தலையங்கம் எழுதிய பிறகு; நமக்கே ஒரு ஐயப்பாடு!

இந்துவின் செய்தி உண்மையா?

அமைச்சர் கூறுவது உண்மையா?

என்பதுதான் அந்த ஐயப்பாடு!

எனவே அக்டோபர் 3-ந் தேதியன்று உச்சநீதிமன்றம் இடஒதுக்கீடு குறித்து வழங்கிய தீர்ப்பின் நகல் படிவத்தை தம்பி என்.வி.என். சோமு மிகவும் முயற்சி எடுத்து பெற்றுத்தர; அதனைப் படித்துப் பார்த்தோம்.

அந்தத் தீர்ப்பின் தமிழாக்கத்தையும் சுருக்கமாகத் தந்திருக்கிறேன்.

"தமிழக அரசு, ஆகஸ்டு 18-ம் தேதிய உச்சநீதிமன்ற உத்தரவை அமல்படுத்தவில்லை என்று கூறி எஸ்.பி. சம்பத்குமார் மனு தாக்கல் செய்ததையும், உச்சநீதிமன்ற உத்தரவை மாற்றி அளிக்கும்படி தமிழக அரசு மனு தாக்கல் செய்ததையும் நீதிபதிகள் பரிசீலித்தனர்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.பி. ஜீவன் ரெட்டியும், எஸ்சி. சென்னும் அக்டோபர் 3-ம் தேதி பின்வருமாறு உத்தரவிட்டனர்.

50 சதவிகித இடஒதுக்கீட்டு ஏற்கும் வகையில் மனுதாரரும், தமிழக அரசும் ஒப்புக்கொண்டபடி 36 இடங்களில் தகுதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள

485-ம் எண் வரையில் உள்ள மாணவர்கள் மற்றவர்கள் - அதாவது உயர் வகுப்பினர் என்ற பிரிவிலிருந்து கல்லூரிகளில் சேர்க்கப்பட வேண்டும். அவர்களில் யாரேனும் கல்லூரிகளில் சேராவிட்டால் மட்டுமே; பட்டியலில் 485-ம் எண்ணுக்கு மேல் உள்ளவர்கள் கல்லூரிகளில் சேர அனுமதிக்கலாம். அதேபோல் பிற்படுத்தப்பட்டவர்களின் தகுதிப் பட்டியலில் 722-க்கு மேல் உள்ள 26 பேர் சேர்க்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு வழக்கறிஞருக்கும் மனுதாரர் வழக்கறிஞருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 50 சதவீதம் என்ற உத்திரவு இரண்டு வார காலத்தில் நடைமுறைக்கு வரவேண்டுமென்றும், நீதிபதிகள் ஆணை பிறப்பித்தனர்.

பொறியியல் கல்லூரிகளில் அட்மிஷன் குறித்தும் இதே நிலை கடைப்பிடிக்கப்பட வேண்டும்."

அக்டோபர் 27-ந் தேதி நடைபெற்ற தலைமை நிர்வாகக் குழுவினையொட்டி நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்திலும் உச்சநீதிமன்றத்துத் தீர்ப்பு நகல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால்; இதுவரை அரசிடமிருந்தோ, அமைச்சரிடமிருந்தோ எந்த பதிலும் இல்லை.

தம்பி பரிதி இளம்வழுதி எம்.எல்.ஏ. சட்டப்பேரவையில் இதைக் கேட்க முயன்று முடியாமற் போயிற்று என்று ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

இப்போது இந்த அரசின் பல்லவி என்னவென்றால், மீண்டும் உச்சநீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு செய்துள்ளோம் என்பதுதான்!

நமது கேள்வியெல்லாம், தமிழக அரசின் இடஒதுக்கீடு சட்டம் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்ட பிறகும்; ஜெயலலிதா அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மீண்டும் ஒரு முறை 50 சதவீதம் என்பதற்கு பழைய கறுப்பனே கறுப்பன் என்ற பாணியில் ஒப்புதல் அளித்தது ஏன்? ஏன்? ஏன்? இதற்குத்தான் பதில் தேவை! என்ன பதில்?

அன்புள்ள,

மு. கருணாநிதி

07-11-1994

2195. தேசியத் தமிழனும் - திராவிடக்கட்சி ஆட்சியும்!

உடன்பிறப்பே,

ஒரு வார இதழில் வெளிவரும் தமிழன் பதில்கள் என்ற தலைப்பில் தரப்பட்டுள்ள விடையில் பொதுப்படையாக திராவிடக் கட்சிகள் மீதுள்ள காழ்ப்பு உணர்வு, எந்த அளவுக்குக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்த நிலையில் எழுதப்படுவதே இந்தக் கடிதம்.

> “1967-ல் தி.மு.க. பதவிக்கு வந்து இன்னமும் திராவிடக் கட்சிகள் நீடித்திருக்க இந்தி எதிர்ப்புதான் காரணம் என்று ராகவன் பேட்டி கொடுத்திருக்கிறாரே?”

இது கேள்வி. அதற்கு தமிழனின் பதில் என்ன தெரியுமா?

> “உங்கள் மனத்தை நீங்களே கேட்டுப் பாருங்கள். திராவிடக் கட்சிகளின் ஊழல் மீது வெளிப்படையாகவே வெறுப்பு; அவற்றின் ஊதாரித்தனம் குறித்து உள்ளூரப் புகைச்சல். நிர்வாகத்தை நினைத்தால் நெஞ்சமெல்லாம் பொருமல், ஆடம்பரம் குறித்து அடிவயிற்றில் ஆத்திரம். அலங்கார மேடைப்பேச்சு அறுபத்தியேழோடு போச்சு. அதற்குப் பின் பேச்செல்லாம் கேலிக்கிடமாச்சு. இத்தனைக்கும் பிறகு இவர்களுக்கு ஏன் வோட்டுப் போடுகிறீர்கள்? காங்கிரசுக்குப் போடும் வோட்டு, இந்திக்குக் கதவைத் திறந்துவிடும் என்று உள்ளூர ஓர் அச்சம் இருப்பதால்தானே!”

இப்படி ஒரு பதிலை எழுதி; இந்தி மீது தனக்கு எதிர்ப்பு உணர்ச்சி இருக்கிறதா இல்லையா என்பதை ஐயப்பாட்டுக்கு உரிய ஒன்றாக்கிவிட்டு; அதே நேரத்தில் திராவிடக் கட்சிகள் என்று பொத்தாம் பொதுவாக தி.மு.கழகத்தையும் சேர்த்து காழ்ப்பு அர்ச்சனை நடத்தியுள்ளார் நண்பர்!

இப்பொழுதெல்லாம் சில பத்திரிகை ஆசிரியர்களுக்கு இது ஒரு மேனியா என்று ஆகிவிட்டது.

நூறு கோடி, ஆயிரம் கோடி என்று ஊழல் நடைபெறுகிறது - பெட்டிகள் இல்லையேல் பேட்டிகள் இல்லை - விதி முறைகளை மீறி, சட்டத்தை மீறி, அரசு நிலங்களை சொத்துக்களை முதலமைச்சரே வாங்குகிறார் - இந்த விபரங்கள் ஊழல் பெரு வெள்ளத்தில் ஒரு துளி! புகழ் போற்றும் விளம்பரங்கள் என்ற பெயரால் அரசு செலவிலும், அமைச்சர்களின் செலவிலும் அன்றாடம் ஏடுகளில் முழுப்பக்க விளம்பரங்கள்; கோடிக்கணக்கான ரூபாய் செலவில்! சென்னைக்கு மட்டுமே கார்களில் பவனி! சென்னையைத் தாண்டுவதெனில் அரசு செலவில் இலட்சக்கணக்கான ரூபாய்களை வாரி இறைத்து, தனி விமானப் பயணம் - மற்றும் ஹெலிகாப்டர் - ஆங்காங்கு பெரும் செலவில் ஹெலி பேடுகள்! ஒவ்வொரு வெளியூர் பயணத்துக்கும் டி.ஜி.பி. முதற்கொண்டு மொத்த காவல்துறையே பாதுகாப்பு என்ற பெயரால் பந்தா நடத்தக் கிளம்பிவிடுகிறது! இத்தகவல்கள் எல்லாம் ஊதாரித்தனத்தில் ஒரு எள் முனை அளவுதான்! நிர்வாகம், நீதி, சட்டமன்றம் என்ற ஜனநாயகத்தின் தூண்கள் நிமிர்த்த முடியாத அளவுக்குச் சாய்க்கப்பட்டுக் கிடக்கின்றன! பேச்சில் அலங்காரமில்லை; உதிர்ந்த மயிர் - தெரு நாய் என்று தமிழாய்ந்த தமிழ்மகனை நடமாடும் பல்கலைக் கழகத்தையே ஏசித் தீர்த்த அகங்காரமே வெளிப்பட்டது!

இத்தனையும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஜெயலலிதாவின் ஆட்சியில்தான் என்பது தமிழன் எனும் புனைப்பெயர் தாங்கியுள்ள நண்பருக்குத் தெரியு மெனினும் இதுதான் சமயமென்று மொத்தமாக திராவிடக் கட்சிகளே இப்படித்தான் என்று ஒரு சித்திரவதை வரைந்திட முற்பட்டிருப்பது; ஏன் என்பது நமது சிந்தனைக்குரியதாகும்.

இன்று நடைபெறும் எண்ணிலடங்கா ஊழல்கள், ஊதாரித்தனங்கள், நிர்வாக அலங்கோலம், நீதியில் தலையீடு - மிரட்டல், அலட்சியப்போக்கு, ஆணவப் பேச்சு, அடாவடி இட்லர் பாணி நடவடிக்கை, மத்திய அமைச்சர் ஒருவரை விமானத்திலிருந்து கீழே விரட்டிவிடப் பயன்படுத்திய ஆத்திரமொழி, அநாகரிகப் போக்கு - இவற்றையும் இவற்றுக்கு

மேலும் நடைபெறும் எல்லா வகையான ஒழுங்குமுறை குலைக்கும் செயல்களையும் குறிப்பிட்டுக் கண்டிக்கவோ - விமர்சிக்கவோ - நண்பர் தமிழனுக்கு ஓரளவு ஆர்வம் இருப்பது உண்மை எனினும்; அவருக்கு இந்தச் சாக்கில் திராவிட இயக்கத்தின் மீது மொத்தமாக சேறுவாரி இறைத்தால்தான் மனநிம்மதி!

அவருக்கு மட்டுமல்ல; வேறு சிலருக்கும் கூட அப்படி ஒரு ஒவ்வாமை அலர்ஜி திராவிட இயக்கம் என்றாலே!

உடனே கேட்கக் கூடும்; தி.மு.க. ஆட்சியின் மீது விசாரணைக் கமிஷன் போடவில்லையா? மத்திய அரசே வழக்குகள் தொடரவில்லை? என்று!

வேடிக்கை என்னவென்றால் கழக அரசின் மீது புகார்ப் பட்டியலைத் தொகுத்துக் கொடுத்த எம்.ஜி.ஆர். அவர்களே; அந்தப் புகார்கள் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றுதான் விசாரணைக் கமிஷனுக்கு வக்காலத்து தாக்கல் செய்தார். வீராணம் போன்ற குற்றச்சாட்டுகளிலே கூட பணம் தொடர்பான குற்றம் நிரூபிக்கப்படவில்லையென்றும் நடைமுறை நிர்வாகக் குறைபாடுகள் மட்டுமே உண்டு என்றும்தான் கமிஷன் அறிவித்தது.

தி.மு.கழகம் எமர்ஜென்சியை எதிர்த்தமைக்காக; அரசியல் உள்நோக்கத்துடன் அமைக்கப்பட்ட கமிஷன் என்றும், தொடரப்பட்ட வழக்கு என்றும் சென்னைப் பொதுக் கூட்டங்களிலேயே அசோக் மேத்தா, பாபு ஜெகஜீவன்ராம், சாந்திபூஷண் போன்ற தலைவர்கள் திட்டவட்டமாக எடுத்துரைத்தனர். கழக ஆட்சி நடைபெறும்போதே, லோகநாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் வெளிப்படையாகப் பலமுறை தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

கமிஷன் முன்பும், தொடரப்பட்ட வழக்குகளிலும் எமர்ஜென்சி நெருக்கடியால் கழகத்திற்கு எதிராக சாட்சி சொல்ல நேரிட்டது என்பதை, முதலில் சாட்சி சொன்னவர்களே ஒப்புக்கொண்டனர். கழக அரசின் அமைச்சர்கள் மீது இந்திராகாந்தி அரசின் மத்திய அரசுத்துறை தொடர்ந்த வழக்குகளை அவர்களே திரும்பப் பெற்றுக் கொண்டனர். எனவே அவையனைத்தும் ஆதாரமின்றி அரசியல் உள்நோக்கத்திற்காக பழிவாங்கிய படலம் என்பது பட்டவர்த்தனமாக உண்மையாயிற்று!

தி.மு.க. ஆட்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில தவறுகள் நடைபெற்றதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவற்றில் எல்லாம் தங்குதடையின்றி தயக்கம் சிறிதுமின்றி நெருங்கிய நண்பராயிற்றே - உறவினராயிற்றே என்று பாராமல் உடனடியாக கிரிமினல் நடவடிக்கை வரையிலே எடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று; சென்னை மாநகராட்சி மன்றத்தில் நடைபெற்ற ஊழல் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட போது, அந்தக் கணமே கழகப் பொறுப்பில் இருந்த மாநகராட்சியைக் கலைப்பதாக அறிவித்து, அறிவித்தபடி கலைத்து - மேயர்களாக இருந்த கழகத்தினர் சிலரையும் கூட கைது செய்து கூண்டில் நிறுத்தியது தி.மு.க. ஆட்சியில்தான்! அந்த நடவடிக்கைகளில் கழக அரசு எந்த தலையீடும் செய்யவில்லையென அப்போது பொறுப்பிலிருந்த நரசிம்மன் ஐ.பி.எஸ். என்ற போலீஸ் அதிகாரி கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகுகூட பத்திரிகை ஒன்றில் எழுதினார்.

எனவே எந்த ஒரு தவறு - புகார் - விதிமுறைக்கு மாறான செயல், சுட்டிக் காட்டப்பட்டாலும் அது குறித்துத் தக்க நடவடிக்கைகளை சட்ட பூர்வமாக எடுத்து அதில் பாரபட்சம் காட்டாமல் ஆட்சியைக் கழகம் நடத்தியது என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன.

1989-ல் மீண்டும் கழகம் ஆட்சிக்கு வந்தபோது ஒரு சட்டமன்ற கழக உறுப்பினர் அரசுப்புறம்போக்கில் கட்டிடம் ஒன்று கட்டுகிறார் என ஒரு பத்திரிகையில் செய்தி வந்தவுடன்; உடனடியாக அந்தக் கட்டிடத்தை அரசு அவரிடமிருந்து பறித்து கையகப்படுத்திக் கொண்டதையும் நாடு மறந்திருக்காது.

உண்மைகள் இவ்வாறு இருக்க; திராவிட என்ற சொல் இன்றுள்ள ஆளுங்கட்சியின் பெயரில் இடம் பெற்றிருக்கிற காரணத்தினாலேயே; பொதுப்படையாக தி.மு.க. ஆட்சியையும் இணைத்து திராவிடக் கட்சிகளின் ஆட்சி என்றாலே இப்படித்தான் என்று விமர்சிப்பது என்ன நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை.

நண்பர் தமிழன் ஒரு தேசியவாதி என்பதால் இந்தக் கேள்விகளை அவர் முன் வைப்பது என் கடமை. தர்மதேஜா கப்பல் ஊழல் விசுவரூபம் எடுத்தது திராவிடக்கட்சி ஆட்சியிலா?

கெய்ரான் ஊழல்; நாடே அதிர்ந்ததே - அதுவும் திராவிடக் கட்சி ஆட்சியில்தானா?

முந்திரா ஊழல்; முடைநாற்றமெடுத்ததே; யார் காலத்தில்? திராவிடக் கட்சியினர் டெல்லியில் ஆட்சி நடத்திய போதா? லாட்டரிப் பரிசுச் சீட்டு ஊழல்; திராவிடக் கட்சி ஆட்சியிலா டெல்லியிலே பூதாகாரமாக உருவெடுத்தது. போபர்ஸ் ஊழல்; திராவிடக் கட்சியின் பிரதமர் டெல்லி சிம்மாசனத்தில் இருந்தபோதா?

நீர் மூழ்கிக் கப்பல் ஊழல்; நடத்தியது எந்தக் கட்சி ஆட்சி? திராவிடக் கட்சி ஆட்சியா? பங்குச் சந்தை ஊழல் - பாராளுமன்றக் குழு விசாரணை - அர்ஷத் மட்டுமல்ல; அமைச்சர்களுக்கும் பங்கு உண்டு என்ற முடிவு - திராவிடக் கட்சியின் ஆட்சியிலா? அடுத்துத் தொடர்ந்து நடந்த சர்க்கரை பேர ஊழல்; அதற்கும் திராவிடக் கட்சிதான் காரணமா? அந்தக் கட்சியின் ஆட்சியா டெல்லியில்? அவ்வளவு ஏன்; 1938-ல் நமது மாநிலத்தில் நடந்த திருவேங்கிமலை நில ஊழல் திராவிடக் கட்சி ஆட்சியிலா?

குறிப்பிட்டு இன்றுள்ள ஆட்சியின் அலங்கோலங்களைச் சுட்டிக் காட்டி, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய கடமையுணர்வை விட்டு விட்டு; எல்லா திராவிடக் கட்சிகளும் இப்படித்தான் என்று ஒரு மாயையை உருவாக்கி; அந்த மாயையில் மறைந்து கொண்டு இன்றுள்ள ஆட்சியாளர் தப்பித்துக் கொள்ள மார்க்கம் வகுப்பதுதான் தமிழன் எனும் நண்பரின் நோக்கமெனில்; அதுபற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை!

அந்த நோக்கம் அவருக்கு இருக்காது என்ற நம்பிக்கையில் எழுதப்பட்டதே இந்தக் கடிதம் - பொத்தாம் பொதுவில் தி.மு.க.வையும் சேர்த்து திராவிடக் கட்சி ஆட்சிகள் என ஏசுவோருக்கும் இது, பதிலாக அமையட்டும் என்ற நினைவுடன்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

08-11-1994

2196. உடனடிக் கடமையை உணர்ந்திடுவோம்!

உடன்பிறப்பே,

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்று சட்டமன்றம். அது மாநில அளவில் உள்ளதாகவும் இருக்கலாம்; அல்லது மத்தியில் உள்ள நாடாளுமன்றமாகவும் இருக்கலாம். அங்கேதான் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறும் வாய்ப்பையும் - அவர்களின் தேவை; அவர்களை உள்ளடக்கிய சமுதாயத்தின் தேவை; நாட்டின் தேவை, வலிவு, பொலிவு, வளம் இவற்றைப் பற்றியெல்லாம் விரிவாக விவாதித்து நல்ல முடிவுகளைக் காண்பதற்காக மக்களின் பிரதிநிதிகள் செல்கிறார்கள்.

அங்கே அவர்கள் கடமையாற்றுவதற்காகச் சொல்லிக் கொண்டு விதிமுறைகளுக்கு மாறாகச் செயல்படுவதும் கூடாது; அதே சமயம் அய்யோ! இங்கு முக்கியமான பிரச்சினைகளுக்குக்கூட வாய்த்திறக்க முடியவில்லையே; அட விதியே! என்று தலையில் கை வைத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையும் கூடாது.

ஒரு சட்டமன்ற நடவடிக்கையில் இன்றுள்ள விதிமுறை சட்டங்களின்படி கவர்னர் உரை ஆற்றுவது - நிதி நிலை அறிக்கை படிப்பது - முறையே கொள்கை அறிவிப்பு, திட்டப்பணிகள் என்ற அளவில் மிக முக்கியமான அலுவல்களாகும்.

அந்த அலுவல் நேரங்களில் ஆளுங்கட்சியின் மீது தமக்குள்ள அதிருப்தியை, வெறுப்பை, கண்டனத்தைத் தெரிவிக்க எதிர்க்கட்சியினர் அவைக்கு வராமலிருப்பது ஜனநாயகத்தில் ஒரு முறையாகும்!

அல்லது அவைக்கு எதிர்க்கட்சிகள் வந்து, தமது கண்டனத்தை ஓர் அறிக்கை வாயிலாகத் தெரிவித்து விட்டு வெளிநடப்பு செய்து விடுவது என்பது மற்றொரு முறையாகும்!

இந்த இரண்டு முறைகளுக்கும் மாறாகச் செயல்படுவது; ஜனநாயகம் எனும் உயர்ந்த கோட்பாட்டை மதிப்பதாகாது!

ஆனால் அந்த உயர்ந்த கோட்பாடு உடைபடும் விதத்தில் எந்த சட்டமன்றத்தில் யார் அல்லது எந்தக் கட்சி முதன் முதலாக அந்தத் தொடக்கப்பணி ஆற்றியது என்பதை நான் சொல்லி, புதிதாக யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில்லை.

ஒவ்வொரு சட்டமன்றத்திலும் ஆட்சியாளர் மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் கொடுக்கும் உரிமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. ஆனால் அந்தத் தீர்மானம் எப்படி அளிக்கப்படவேண்டும் - எப்படி அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆதரவு தர வேண்டும் - எப்படி தேதி குறிப்பிட்டு விவாதிக்கப்பட வேண்டும் என்பதற்கெல்லாம் எழுதி அச்சடிக்கப்பட்ட சட்டமன்ற விதிமுறைகள் உண்டு.

அந்த விதிமுறைகள் எங்கே, எப்போது, எவரால் மீறப்பட்டன என்பது; ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று கூறப்படும் பத்திரிகைத் துறையினர் அறிந்த ஒன்றேயாகும்.

அதேபோல நிதிநிலை அறிக்கை படிக்கும் நாளில்; அந்த ஒரு அலுவலைத் தவிர வேறு அலுவல் அல்லது பிரச்சினை எடுத்து விவாதிப்பதில்லை.

அதற்கு முரணாக ஒரு மாநில சட்டமன்றத்தில் மோதல் ஏற்படுத்தி, விதிமுறைகளைக் காலில் போட்டு மிதிக்க முற்பட்டவர்கள் யார் என்பதையும் ஜனநாயகத்தின் நான்காவது தூண் நன்றாகவே அறியும்.

இப்படியெல்லாம் விதிமுறைகளுக்கு விரோதமாகத்தான் செயல்படுவோம் - இல்லையேல் விபரீதம் விளைவிப்போம் என்று வில்வளைத்துக் கொண்டிருந்த எதிர்க்கட்சியொன்று; விபத்து காரணமாக ஆளுங்கட்சியாகி விடுகிறதென்று வைத்துக் கொள்வோம்!

அடடா; அப்போது அது, எதிர்க்கட்சியினரைப் பார்த்து பேசுகிற விதிமுறை - படித்துக் காட்டுகிற சட்டங்கள் - எதிர்க்கட்சியினர் கூறியவைகளை மட்டுமல்ல; அவர்களையே தூக்கி வெளியே எறியச் செய்யும் கட்டங்கள்; என்னே ஜனநாயகம்! என்னே ஜனநாயகம்! ஜனநாயகத்தின் நான்காவது தூண்களில் சில தூண்கள் தவிர; மற்ற தூண்கள் நாவசைக்கவும் துணியாத நாகரிகப் பண்பாடுதான் என்னே! என்னே!

மாநிலங்களவை, மக்களவை, இவற்றை முன் மாதிரியாகக் காட்டி சில சட்டசபைகளிலும்; ஓரிரு மரபுகள் நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன!

அதாவது ஆளுநர் உரை படிக்கும் நாள், நிதிநிலை அறிக்கை படிக்கும் நாள் மற்றும் இரங்கல் தீர்மானத்துக்கான விடுமுறை நாள் - தவிர மற்ற நாட்களில் கேள்விநேரம் முடிந்தவுடன் சில முக்கிய பிரச்சினைகள் குறித்து உறுப்பினர்கள் ஆட்சியாளர்களிடம் விளக்கம் கோருவதும் விளக்கமிருந்தால் ஆட்சியாளர் சார்பில் அவையில் விடையளிப்பதுமே அந்த நீண்டகால மரபாகும்!

அப்படி உறுப்பினர்கள் எழுந்து கேட்கும் விளக்கம் அதாவது 'சீரோ அவர்' விளக்கம்; ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக இருந்தால், அனுமதிப்பதும் - இல்லாத பட்சத்தில்; உறுப்பினரை, அவரது இருக்கையிலிருந்தே எழவொட்டாமல் மிரட்டுவதும் - அடக்கி அமரவைப்பதும் - அடுத்து நடவடிக்கையாக வெளியே தூக்கி எறிவதும்; எந்த மாநிலத்தில் - எந்த ஆட்சியில் - எந்த சட்டமன்ற நடவடிக்கையாக இருக்கிறது என்பதை இந்த இந்திய பூபாலமே அறியும்! என் செய்வது; ஜனநாயகத்தின் நான்காவது தூண்களில் ஒன்றிரண்டைத் தவிர மற்ற தூண்கள் எல்லாம் அல்லித் தண்டைப்போல வளைந்து கொடுக்கும் தூண்களாகிவிட்டனவே; வாரி வழங்கப்படும் விளம்பரங்களை முன்னிட்டு!

ஒரு ஊரில் ஒரு சட்டமன்றத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஒரு சட்டம்; வேண்டாவெறுப்பாக; ஆனால் வேறு வழியின்றி; தன்னையும் சமூகநீதியின் அன்னையாகக் காட்டிக்கொள்ள; நிறைவேற்றப்படுகிறது. ஊரெல்லாம் விழா! நாடெல்லாம் விழா! பாராட்டு; சீராட்டு; திருநாள் தேரோட்டம்! எல்லாம்! எல்லாம்! எல்லாமே!

மன்னன் சாலமன் கொலு மண்டபத்தில்; குழந்தையைப் பாதிபாதியாக கூறுபோட்டு - ஆளுக்கு 50 சதவிகிதம் அளித்திடுக என்று வாதிட்டாளாமே; இரண்டு தாய்களில் ஒருதாய்; அதுபோல ஒரு தெய்வத்தாய் ? ? ? வாதிட்டு; அதனால் வம்பே வந்துவிட்டது!

ஆனால் குழந்தையின் உண்மைத்தாய் அதற்கு ஒப்புக் கொள்வாளா? ஒப்புக் கொள்ளத்தான் முடியுமா?

சமூகநீதிக் குழந்தைக்கு எந்த ஊனமும் ஏற்படக் கூடாதென்றுதானே; இங்கிருக்கும் சமூகநீதிக் காவலர்களும், நாடு

முழுதுமுள்ள அனைத்துக் கட்சியினரும் துணையாக நின்றனர்! அந்தக் குழந்தையைத் துண்டிக்கலாம் என ஒப்புதல் தந்தது ஏன்?

இப்போது; நிலைமை மீண்டும் கட்டுமீறியதும் - இரட்டை வேடம் அம்பலத்திற்கு வந்ததும்; குழந்தையைக் காப்பாற்றியே தீருவேன் என்று கூச்சல்போடுவது யாரை ஏமாற்ற?

குழந்தையை பாதிபாதியாகக் கூறுபோட கொலு மண்டபத்தில் கொற்றவன் கையில் கொடுவாள் எடுத்துக் கொடுத்தது நீதானே! அப்படிக் கொடுத்ததற்கு இதோ இருக்கிறதே ஆதாரம் என்று எடுத்து நீட்டிட; அந்த மன்றத்தில் ஓர் இளைஞன் எழுந்தான்! அடக்கி, ஒடுக்கி அநாகரிக வார்த்தைகளால் அர்ச்சித்து அவனை வெளியேற்றிவிட்டனர்.

ஜனநாயகத்தின் முதல் தூண்; இப்படிச் செல்லரித்துப் போய், உருக்குலைத்து, ஆடிக் கொண்டிருக்கிறது!

ஜனநாயகத்தின் தூண்களாம்; நீதி, நிர்வாகம், சட்டமன்றம், பத்திரிகை எனும் நான்கையும் பழுது பார்த்து; காலத்தால் சாயக்கூடாத அந்தத் தூண்களை; யாருடைய ஜாலத்தாலோ சாய்ந்து விடாதபடிக்காத்து நிற்கும் பொறுப்பை; மக்கள் மன்றம் அலட்சியப்படுத்தும் ஒவ்வொரு நாளும் இந்த நாட்டுக்குத் தீமை பயக்கும் நாளேயாகும்!

அந்த மக்கள் மன்றத்தை முழுமையாக விழிப்புறச் செய்து, வீறு கொள்ளச் செய்து, வீழ்த்திக் காட்டுவோம் சர்வாதிகாரத்தை என முழங்கிடச் செய்ய; முரசு கொட்டுவதே நாட்டு நலனில் அக்கறை கொண்டோரின் உடனடிக் கடமையாகவும், பணியாகவும் இருந்திடல் வேண்டுமன்றோ!

அன்புள்ள,

மு. கருணாநிதி

09-11-1994

2197. உண்மை ஒருநாள் விழித்துக் கொள்ளும்!

உடன்பிறப்பே,

சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கழக உறுப்பினர் தம்பி இளம்வழுதி மூன்றாவது முறையாக வெளியேற்றப்பட்டு - மூன்று முறை வெளியேற்றப்பட்ட காரணத்தால் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முழுவதிலும் பங்கு பெறக் கூடாது என்று கூறியதோடு - சட்டமன்ற வளாகத்திற்குள்ளே நடமாடக் கூடாது என்று பேரவைத் தலைவரால் ஆணையிடப்பட்டிருக்கின்றார். ஆமாம், சட்டமன்ற வளாகத்திற்கு வரக்கூடாது என்று கூட அல்ல; நடமாடக்கூடாது என்றே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியின் ஊழல்கள், முறைகேடுகள், தவறுகள் பற்றி எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர்களை பேச விட்டு, அதற்கு அமைச்சர்கள் பின்னர் தங்கள் பதில் உரையிலே விளக்கம் கூறுவதுதான் ஜனநாயக மரபு. ஆனால் தற்போதோ, எதிர்க்கட்சி உறுப்பினர் ஆட்சியின் முறைகேடுகளைப் பற்றிப் பேசத் தொடங்கினாலே, நான்கைந்து அமைச்சர்கள் அதற்கு குறுக்கிட்டுப் பதில் கூறுவதும், உடனடியாக பேரவைத் தலைவர் நேரம் முடிந்து விட்டதாகக் கூறி தடுத்து நிறுத்துவதும்தான் வாடிக்கையாகியுள்ளது.

இன்று கழக உறுப்பினர் தம்பி இளம்வழுதியை வெளியேற்றும்போது, அவரைப் பற்றி பேரவைத் தலைவர் குறிப்பிட்டுப் பேசியதை, பின்னர் அவரே சபைக் குறிப்பிலிருந்து அகற்றியிருக்கின்றார். ஏனென்றால் அந்த அளவிற்கு அது கடுமையான வார்த்தை என்பது அவருக்குப் புரிய வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்களை அமைச்சர்கள் மறுக்கலாம். ஆனால் அரசாங்கத்தின் கணக்கு வழக்குகள் பற்றி அரசின் சார்பிலேயே அமைக்கப்பட்டிருக்கும் தணிக்கைக் குழு ஆண்டு தோறும் தணிக்கை செய்து அறிக்கை தருவதும், அது முறையே பேரவையிலே வைக்கப்படுவதும் மரபாக இருந்து வருகின்றது. அந்த வகையிலே மார்ச் 1993 வரைக்குமான தணிக்கைக் குழுவின் அறிக்கை இந்த ஆண்டு நவம்பர் 7- ந் தேதி பேரவையிலே வைக்கப்பட்டுள்ளது.

அரசின் அந்த தணிக்கைக்குழு அறிக்கையிலே;

தி.மு.கழகத்தின் சார்பில் 16.9.92 அன்று ஆளுநர் அவர்களிடம் இந்த ஆட்சியின் ஊழல்கள் பற்றி கொடுத்த குற்றச்சாட்டுப் பட்டியலிலே உள்ள ஒரு முக்கிய குற்றச்சாட்டுப் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது.

தி.மு.க. சார்பிலே 16.9.92 அன்று ஆளுநரிடம் தரப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியலிலே ஏழாவது குற்றச்சாட்டு ஸ்பிக் பங்கு ஊழல் பற்றியதாகும். அதன் விவரம் வருமாறு :-

ஸ்பிக் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் டிட்கோ எம்.ஏ. சிதம்பரம் குழுவும் இணைந்து நடத்தும் கூட்டு நிறுவனமாகும். 1992இல் ஸ்பிக் நிறுவனம் தனது பங்கு முதலீட்டை 50 சதவிகிதம் உயர்த்த முனைந்து, அதற்காக உரிமைப் பங்குகளை வெளியிட முடிவு செய்தது. ஸ்பிக் நிறுவனத்தின் பங்குதாரர் என்ற முறையில், டிட்கோ நிறுவனத்திற்கு, இவ்வாறு ஸ்பிக் நிறுவனம் உரிமைப் பங்குகளை வெளியிட முன் வந்த காரணத்தின் மூலம் - 50,83,000 புதிய பங்குகளை மேலும் பெறுவதற்கு வாய்ப்பு கிட்டியது. மிகவும் லாபகரமாக ஸ்பிக் நிறுவனம் இயங்கி வந்தாலும், அந்த நிறுவனத்தின் பங்குகள் வெளிமார்க்கெட்டில் மிக அதிக விலைக்கு விற்றுக்கொண்டிருந்த படியினாலும், டிட்கோ அரசு நிறுவனம், அந்த பங்குகளை தனக்குள்ள உரிமை காரணமாக மிகவும் குறைந்த விலைக்கு வாங்கி, அதிக இலாபத்தினைப் பெறுவதற்கு வழிவகை இருந்தது. அந்த புதிய உரிமைப் பங்குகளை வாங்குவதற்கு தேவையான தொகையினை டிட்கோ நிறுவனமே தனது சொந்த வருமானத்திலிருந்து திரட்டியிருக்க முடியும். ஆனால் அரசு டிட்கோ நிறுவனம் இந்த புதிய பங்குகளை வாங்கிட அனுமதிக்காததின் காரணமாக, டிட்கோ நிறுவனம் அந்த நிறுவனத்தில் தன் பெரும்பான்மை உரிமையை இழக்கின்ற

வகையிலும், எம்.ஏ. சிதம்பரம் குழுவினர் ஸ்பிக் நிறுவனத்தில் தங்களது பங்கை எளிதாக உயர்த்திக்கொள்ளவும் வழிவகை செய்தது. மேலும் இந்தப் பிரச்சினையிலே அரசு கடைப்பிடித்திருக்க வேண்டிய வழிமுறைகளை எந்தெந்த அளவிற்கு மீறியது என்பது பற்றியெல்லாம் ஆளுநரிடம் நாம் தந்த குற்றச்சாட்டு பட்டியலிலே தெளிவாக உள்ளன.

"அரசு இந்த முடிவினை எடுத்தபோது ஸ்பிக் நிறுவனத்தின் ஒரு பங்கின் மதிப்பு ரூ. 120 முதல் 130 வரை என்றிருந்தது. ஆனால் அரசு இந்தப் பங்குகளை வெறும் 27 ரூபாய் என்ற ரீதியில் எம்.ஏ. சிதம்பரம் குழுவுக்கே விற்றுவிட்டது. டிட்கோ நிறுவனம் தனது பங்குகளை சிதம்பரம் குழுவிற்குத்தான் விற்க வேண்டுமென்று எந்த ஒப்பந்தமும் கிடையாது. அரசின் இந்த நடவடிக்கையின் காரணமாக 54 கோடி ரூபாய் இழப்பு டிட்கோ என்ற அரசு நிறுவனத்திற்கு ஏற்பட்டது. இதில் நியாயத்தை எடுத்துக்காட்ட உறுதியாக நின்ற ஒரு ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரிக்குப் பரிசாக திராவக வீச்சு நடைபெற்றது."

இந்த விவரங்களையும், மற்றும் இதுபோன்ற பல்வேறு ஊழல் புகார்களையும் உள்ளடக்கித்தான் 16.9.92 அன்று அன்றைக்கிருந்த ஆளுநரிடம் கழகத்தின் சார்பில் புகார் பட்டியல் தரப்பட்டது. அன்றைக்கு இருந்த ஆளுநர் பீஷ்மநாராயணர் இந்தக் குற்றச்சாட்டையும் கண்டுகொள்ளாமலே கண்ணை மூடிக் கொண்டு, ஆதாரம் இல்லை என்று ஒதுக்கி வைத்து விட்டார். ஆனால் அந்த ஊழலுக்கு என்ன ஆதாரம் என்பதை, அரசாங்கமே நியமித்த தணிக்கைக்குழு அறிக்கையாகத் தயாரித்து, அது சட்டப் பேரவையிலும் இப்போது வைக்கப்பட்டுள்ளது. ஒருவேளை அந்த தணிக்கை அறிக்கைப் புத்தகம் முதல்வர் பார்வைக்கு முன் கூட்டியே சென்றிருந்தால்; அதன் கதி என்ன ஆகியிருக்குமோ? நல்லவேளையாக எப்படியோ அவர் கண்ணுக்குத் தப்பி, உண்மை புத்தக வடிவில் அதுவும் இந்த அரசே வெளியிட்ட புத்தக வடிவில் சட்டப்பேரவையில் வைக்கப்பட்டுவிட்டது. அரசுத் தணிக்கை அதிகாரி, இந்தப் பிரச்சினை பற்றி அதிலே என்ன கூறியிருக்கிறார் என்பதையும் பார்க்கலாம்.

''Southern petrochemical Industries Corporation Limited SPIC - a jont sector company in which TIDCO was holding 88,40,000 shares of Rs. 10 each at the end of March 1991, constituting 26 percent of SPICs equity made right issue of Zero Coversion Bonds ZCB the ration of 1:50 i.e. bonds which are interest free and which are coverted after the expiry of specified period nto equity shares at relatively low premium as compared to the price at which shares of ZCB issuing companies are traded the stock exchange, to finance their expansion programmes. As participation in SPICs rigt issue of ZCB would entail an investment commitment of Rs. 12.71 crores, TIDCO south 19.2.92 orders of the Government for sanction of an interest free ways means advance of Rs. 12.71 crores. The Government informed 7.3.92 TIDCO, that, considering the current policy of disinvestment, the present diffcult financial position and other relevant factors, it might renounce its right to the ZCB SPIC. In their meeting held on 18th March 1992, TIDCO renounced its rights to 1,76,800 ZCB favour of SPIC's co-promoters Shri M.A. Chidambaram and his associates for a consideration of Rs. 12.37 crores. Tidco estmated the value of the existing share after the issue of rights and giving a set off from the value for the interest cost to be borne by the co-promoter as detailed below :-

In arriving at the value TIDCO assumed that the rights issue would cause erosion in the market value of its existing share holdings and worked out the loss to be compensated as premium for renouncing the rights with reference to the equity price Rs. 80 per share that prevailed in the stockmarket on the 'record date' 24th January 1992. This was not correct in as much as the rate that prevailed the market on the record date itself wa sa cum rights price and represented the value taking into account the conversion after a period. As such, discounting the rate further to arrive at the present value was not proper and was not supported by any set formula.

As regards the 'record date' with referece to which the market rate of Rs. 80 per share was adopted, it may be stated that there was no cause effect relation between the two, in as much effect relation between the two, in as much as the record date was only a cut-off date for deciding the eligibility of a share holder to receive the rights. The rate that prevailed before the date on which the rights were renounced was, however, Rs. 108 per share 28th February 1992. Had TIDCO adopted this rate for computing the value of premium to be received, it would have had to revenue advantage of Rs. 12.09 crores. In this connection it may be mentioned that the movement in SPIC's equity price in the stock market during the period of rigts issue 31st January 1992 to 10th April 1992 showed a upward trend.

The above matters were reported to the Management and Government May 1993; their replies had not been received September 1993.

உடன்பிறப்பே, தணிக்கைக் குழுவில் குறிப்பிடப் பட்டுள்ளதின் தமிழாக்கத்தை பின் வருமாறு சுருக்கித் தந்துள்ளேன்.

"கூட்டுத் தொழில் நிறுவனமான ஸ்பிக் நிறுவனத்தில், டிட்கோ பங்கு ஒன்று பத்து ரூபாய் பெறுமானமுள்ள 88,44,000 பங்குகளை மார்ச் 1991இல் கொண்டதாக விளங்கியது. இது 26 சதவிகிதம் பங்குகளைக் கொண்டது என்பதோடு, அந்த நிறுவனம் விரிவாக்கம் செய்யும் போது, புதிய பங்குகளையும், கடன் பத்திரங்களையும் பெறுவதற்கான உரிமையையும் கொண்டதாகும். அவ்வாறு ஸ்பிக் நிறுவனம் தனது புதிய பங்குகளை வெளியிட முன்வந்தபோது, தனது உரிமைப் பங்குகளைப் பெற இந்த அரசின் டிட்கோ நிறுவனத்திற்கு 12.71 கோடி ரூபாய் தேவைப்பட்டதால், 19.2.92இல் டிட்கோ நிறுவனம் அரசிடம் 12.71 கோடி ரூபாய் வட்டியில்லாத முன்தொகை என்ற அடிப்படையிலே ஆணையிட்டு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. 7.3.92

அன்று அரசாங்கம், டிட்கோவிற்கு எழுதிய பதிலிலே, தற்போதுள்ள அரசின் கொள்கையான முதலீட்டினைத் திரும்பப் பெற்றுக்கொள்வது என்பதன்படியும், சிரமமான நிதிநிலையினாலும் வேறுபல காரணத்தினாலும், ஸ்பிக் வழங்கிடும் புதிய பங்குகளை டிட்கோ வாங்காமல் தனது உரிமையை விட்டுக்கொடுத்து விட வேண்டுமென்று தெரிவித்தது. 18.3.92 அன்று கூடிய டிட்கோ கூட்டத்திலே, டிட்கோ தான் வாங்க உரிமை படைத்த 1,76,800 பங்குகளை, ஸ்பிக் நிறுவனத்தின் கூட்டு நிறுவனரான எம்.ஏ.சிதம்பரம் குழுவினரிடம் 12.37 கோடி ரூபாய்க்கு விட்டு கொடுத்து விடுவதென்று முடிவெடுக்கப்பட்டது. இந்த 12.37 கோடி ரூபாய் எவ்வாறு கணக்கிடப்பட்டது என்பதும் தணிக்கைக்குழு அறிக்கையிலே விவரமாக குறிக்கப்பட்டுள்ளது ஆனால் இவ்வாறு கணக்கிட்டு பங்குகளின் விலை மதிப்பு பற்றி முடிவெடுத்தது சரியானதல்ல என்பதோடு, எந்த வகையான வழிமுறைகளின்படியும் அமைந்ததாக இல்லை.

பதிவுத் தேதி என்பதைப் பொறுத்தவரையிலே, 24.1.92ஆம் தேதியன்று பதிவுத் தேதி என்று எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அந்தத் தேதி பங்குதாரர் பங்கு பத்திரங்களை வாங்குவதற்கு தகுதியானவரா என்பதை நிர்ணயிக்கக் குறிக்கப்பட்ட தேதியே தவிர, அந்தத் தேதியின்போது இருந்த மதிப்பான ரூ. 80; பங்கின் மதிப்பாக கருதப்பட்டு கணக்கிடப் பட்டுள்ளது. இவ்வாறு முடிவெடுப்பதற்கு முன்பாகவே - அதாவது 28.2.1992 அன்றே ஒரு பங்கின் விலை 108 ரூபாயாக இருந்தது. டிட்கோ நிறுவனம் இந்தத் தொகையினை அடிப்படையாக வைத்து, பங்குகள் பற்றி விலையினை நிர்ணயித்திருந்தால், 12.09 கோடி ரூபாய் வருமானத்தினை அரசுத்துறையான டிட்கோ அடைந்திருக்க முடியும். இந்தப் பிரச்சினையில் பார்க்கும்போது, இந்தக் காலக்கட்டத்தில் ஸ்பிக் நிறுவனத்தின் பங்குகள் வெளிச்சந்தையிலே - அதாவது 31.1.92க்கும் 10.4.1992க்கும் இடையிலே

-. ஏறுமுகமாக இருந்து வந்தது என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

மேலே சொன்ன கருத்துக்களை அந்த நிர்வாகத்திற்கும் அரசாங்கத்திற்கும் 1993ஆம் ஆண்டு மே திங்களிலே தெரிவிக்கப்பட்டது. ஆனால் செப்டம்பர் 1993 வரையிலும் அவர்களின் பதில்கள் வரவில்லை."

உடன்பிறப்பே, இவ்வாறு அரசாங்கத்தின் தணிக்கைக்குழு அறிக்கையிலே தமிழக அக்கவுண்டண்ட் ஜெனரல் தணிக்கை நந்தினி ஒய். காப்தி என்பவரும், மத்திய அரசின் தணிக்கை அதிகாரி சி.ஜி. சோமையா என்பவரும் கையெழுத்திட்டு தந்த அறிக்கையில் எழுதப்பட்டுள்ள வாசகத்தைதானே நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

பங்கின் மதிப்பு குறைவாகக் கணக்கிடப்பட்டு எம்.ஏ. சிதம்பரம் குழுவினரிடம் விற்கப்பட்டது என்றும், அரசாங்கத்தின் கணக்குப்படி மதிப்பிட்டால் கூட 12 கோடி ரூபாய் அளவிற்கு லாபம் கிடைத்திருக்கும் என்றும் அரசு தணிக்கை அதிகாரியே இப்போது எழுத்துப் பூர்வமாக தெரிவித்து விட்டார்.

இந்தப் புகார்கள் குறித்து அரசாங்கத்திற்கு மே மாதம் தெரிவிக்கப்பட்டதற்கு செப்டம்பர் வரையிலே எந்தப் பதிலும் இல்லை என்று தணிக்கை அதிகாரியே எழுதியிருக்கின்றார்.

நாம் ஆளுநர் பீஷ்மநாராயண சிங்கிடம் அளித்த குற்றச்சாட்டுகளின் பட்டியலில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஊழல் குறித்தும் கூறியிருந்தோம். ஆனால் அந்த நல்ல மனிதர் அதிலும் ஆதாரமில்லையென்று அப்போது சொல்லிவிட்டார். ஆனால் அந்தப் பிரச்சினை உச்சநீதிமன்றம் வரையில் சென்று இந்த அரசின் முறைகேடுகள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் எந்த அளவு இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டதை நாடு நன்கறியும்.

இப்போது மத்திய மாநில அரசுகளின் தணிக்கை அதிகாரிகளே ஸ்பிக் ஊழலில் எத்தனை கோடி அரசுக்கு இழப்பு என்பதை தெளிவாக்கி; அதை புத்தகமாக அச்சிட்டும் - சட்டப்பேரவையிலேயே வைத்துள்ளனர்.

தணிக்கை அதிகாரிகள் 12 கோடி ரூபாய் அளவுக்குத்தான் இழப்பு என்ற போதிலும், அந்த அதிகாரிகளே

குறிப்பிட்டிருப்பதுபோல பங்குகளின் விலை ஏறுமுகமாக இருந்த நிலையிலும்; மேலும் அதிக இழப்பை அதாவது நாம் அன்று குற்றச்சாட்டில் கூறியுள்ளது போல இழப்புத் தொகை ஐம்பது கோடியைத் தாண்டியிருக்கிறது என்பதையும் மறந்து விடக்கூடாது.

12 கோடியோ அல்லது 50 கோடியோ அரசுக்கு இழப்பு - ஆனால் அந்த இழப்புக்கான ஊழல் பணம் பலகோடி ரூபாய் கமிஷனாக எந்தத் தனிப்பட்டவருடைய கருவூலத்திற்கு சென்றது என்பது கூடவா; அன்றைய ஆளுநருக்குத் தெரியாவிடினும்; இன்று நாட்டு மக்களுக்கு தெரியாமல் போய்விடும்! இதற்கெல்லாம் பதிலை இந்த அரசிடம் எதிர்பார்க்க முடியுமா? கேட்டால் கெட்அவுட் தானே விடையாகக் கிடைக்கும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

10-11-1994

2198. நன்கொடை கேட்பதிலும் நாகரிகக்கேடா?

உடன்பிறப்பே,

உலகத் தமிழ் மாநாடு, தமிழகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்றிருக்கிறது. மீண்டும் தமிழகத்தில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் மதுரை மாநகரில் நடைபெற்றிருக்கிறது. அந்த மாநாடுகளுக்கு அரசின் சார்பில் ஐம்பது கோடி அறுபது கோடியெனப் பணம் செலவழிக்கப்படவில்லை.

தமிழின் தொன்மைப் பெருமையை - சீர்மையை - செழுமையை - இலக்கிய, இலக்கண வளத்தை எடுத்துக் காட்டுவது; போற்றிப் புகழ்வது; அத்தகைய மொழி மீது இன்றுள்ள தலைமுறையும் எதிர்காலத் தலைமுறையும் இடையறாப் பற்றுக்கொண்டு அம்மொழியைக் காத்திடும் பேரரணாக விளங்குவது என்பது மட்டுமல்லாமல்; இன்றுள்ள நிலையில் மிக முக்கியமான உலகில் வளர்ந்து வரும் அறிவு யுகத்திற்கு ஏற்ற வண்ணம் நமது தாய்மொழியும் வலிமை வாய்ந்த கருவியாக ஆக்கப்பட்டாக வேண்டும் என்பதும் உலகத் தமிழ் மாநாட்டில் குறிக்கோளாகும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இதுவரை எண்ணிக்கையில் ஏழு உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ள போதிலும், அந்த மாநாடுகளையொட்டிய கருத்தரங்குகள் - ஆய்வரங்குகள் - அவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகள் இன்னமும் முழுமையான பயனை விளைவித் திடவில்லை என்பதை ஒப்புக்கொண்டுதானாக வேண்டும்.

மாநாட்டின் அகத்தே இந்த அரங்குகள் ஒவ்வொருவரின் திறனை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, எல்லோரும் இணைந்து

ஏற்றதொரு முடிவெடுத்து; இயங்கத் தொடங்கியது. வளரும் தமிழியக்கம் என்ற நிலை இன்னும் வந்தபாடில்லை.

மாநாட்டினையொட்டி புறத்தே நடைபெறும் விழாக்கோலத்தில் அக்கறை காட்டுவதில் தமிழனாகப் பிறந்தவனுக்கு மகிழ்ச்சியில்லாமற் போகாது!

ஆனால் அத்தகைய புறக்கோலத்தின் பொலிவு பாரீர் என்று காட்டுவதின் மூலம்; ஐம்பது அறுபது கோடி ரூபாய் செலவு எனக் கணக்கு காட்டி; தமிழ் எனும் போர்வையில் பெருச்சாளிகள் பங்கு போட்டுக் கொள்வதை எந்தத் தமிழ்மகன்தான் ஏற்றுக் கொள்ள முடியும்!

அதனால்தான் உலகத் தமிழ் மாநாடு எனும் உயர்ந்த ஒரு தலைப்பிட்டு; ஊழல் மாநாடு ஒன்றை நடத்துவதை வாய்மையுடையோர் எவரும் வரவேற்க இயலாத நிலை இருக்கிறது.

உடன்பிறப்பே, இப்போதே இந்த மாநாட்டுக்காக எந்த எந்தப் பிரிவினர் எப்படி எப்படி மிரட்டப்படுகிறார்கள் என்பதை ஓர் எடுத்துக்காட்டு வாயிலாக விளக்குகிறேன்; இதிலிருந்தே இவர்களின் தமிழ்த்தொண்டு எந்த வழியில் செல்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்த உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அரசின் உணவுத்துறைச் செயலர் திரு. ஏ.எம். சாமிநாதன் ஐ.ஏ.எஸ். அவர்கள் செப்டம்பர் 23 எனத் தேதியிட்டு, அரிசி ஆலை சங்கத்தலைவர் திரு. வி. சந்திரசேகரன் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்புகிறார்.

அதன் தமிழாக்கம் பின்வருமாறு :-

அன்புமிக்க திரு. சந்திரசேகருக்கு,

தஞ்சாவூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் தயாரித்து வழங்குவது பற்றி - மாண்புமிகு உணவு அமைச்சர் தங்களுடன் நடத்திய விவாதங்கள் தொடர்பாக இக்கடிதத்தை எழுதுகிறேன். ஆந்திராப் பொன்னி அரிசி அல்லது அதற்கு இணையான ரகத்தைச் சேர்ந்த அரிசி - இந்தத் திட்டம் தொடர்பாக 150டன் தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலுள்ள எல்லா அரிசி ஆலை அதிபர்களும் - இதற்காகும் அரிசியை நன்கொடையாக வழங்க முன்வந்தால் - உணவுப் பொட்டலங்கள் தயாரிப்பதற்கு ஆகும் மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பகுதியை அது ஈடுகட்டக்கூடும். மீதியுள்ள இரண்டு பகுதி செலவை தமிழக அரசு ஏற்றால் - ஒரு ரூபாய்க்கு ஒரு பொட்டலம் என்ற விலையில் பொது மக்களுக்கு வழங்க முடியும்.

தங்கள் பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேன்.

உண்மையுள்ள

ஏ.எம். சாமிநாதன்

இந்தக் கடிதத்தைத் தொடர்ந்து எழுத்தில் இல்லாமல்; வாய்ச் சொல்லால் செய்யப்பட்ட மிரட்டலின் எதிரொலி; அந்த அரிசி ஆலை சங்கத்தின் செயலாளர் திரு. கே.எஸ். ஜெகதீசன் அவர்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலை மாவட்டச் சங்கங்களின் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கேட்கிறது பார்! அக்கடிதத்தின் நகல் இதோ இந்த என் கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள; அதே வடிவம் குலையாமல்! இதையும் படித்துப்பார்!

பதிவு எண் : 28/190 தொலைபேசி : 46189

தமிழ்நாடு அரசி ஆலை உரிமையாளர்கள்,

நெல் - அரிசி வணிகர்கள் சங்கங்களின் சம்மேளனம்

ஆலை அரங்கம் மனை எண். 217, அறிஞர் அண்ணா நகர், மதுரை - 625 020.

கடித எண் : 51/94 தேதி : 29.10.94

அன்புடையீர், வணக்கம்.

பொருள் : 1995 ஜனவரியில் தஞ்சையில் நடைபெற உள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - வருகை தருவோர்க்கு உணவளித்தல் சம்பந்தமாக

மேற்படி மாநாட்டின்போது பொது மக்களுக்கு உணவு வழங்குவதற்காக சம்மேளனம் 150 டன் 15 லாரி லோடு பொன்னி பச்சரிசியை இனாமாகத் தரவேண்டுமென்று

நமது உணவமைச்சர் அவர்களின் கோரிக்கையை சம்மேளனப் பொதுக் குழுவின் 18.10.94 சென்னைக் கூட்டத்தில் ஏற்றுக் கொண்டதைத் தாங்கள் அறிவீர்கள். அந்த அரிசியைக் கொள்முதல் செய்வதற்கான நிதியை மாவட்ட வாரியாக வசூலிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக திருச்சியில் இன்று 29.10.94ல் கூடிய சம்மேளனச் செயற்குழுக் கூட்டம் ஒவ்வொரு மாவட்டமும் வழங்க வேண்டிய நிதி எவ்வளவு என்பதை நிர்ணயித்துள்ளது. அந்த விவரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி தங்கள் மாவட்டத்திற்கு நிர்ணயித்துள்ள தொகையை 1994 நவம்பர் 20க்குள் தவறாமல் அனுப்பி உதவ வேண்டுகிறோம்.

இந்த நன்கொடை சம்பந்தமாக, அரசு உணவுத்துறைச் செயலாளர் அவர்கள் நமது சம்மேளனப் பிரதிநிதி, துணைத் தலைவர் திரு. வி. சந்திரசேகரன் அவர்களுக்கு எழுதிய 23.9.94 தேதி கடிதத்தின் போட்டோ நகல் தங்கள் பார்வைக்கு இத்துடன் அனுப்பியுள்ளோம்.

நிர்ணயித்த தொகையை அனுப்பத் தவறும் மாவட்டங்களில், மாவட்ட அதிகாரிகள் தலையிட முற்படக் கூடும். அத்தகைய விரும்பத்தகாத, வருந்தத்தக்க நிலை எந்த மாவட்டத்திலும் ஏற்படாது என்று உறுதியாக நம்புகிறோம்.

நிர்ணயித்த தொகையை சம்மேளனப் பெயருக்கு பாங்க் டிராப்ட் எடுத்து மதுரை அலுவலகத்திற்கு அனுப்பிவையுங்கள். நன்றி

தங்கள்,

ஒப்பம் கே.எஸ். ஜெகதீசன்

செயலாளர்

இந்த நிலையை எண்ணிப் பெருமூச்செறிந்து அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலை சங்க நிர்வாகிகள், அந்த மாவட்டத்தில் உள்ள தாலுக்கா அரிசி ஆலை சங்கங்களின் நிர்வாகிகளுக்கு கடிதம் எழுதி எச்சரிக்கிறார்கள். அவற்றில் ஒன்று, இதோ; விழுப்புரம் இராமசாமியார் படையாட்சியார் மாவட்டத்தில்

அனுப்பப்பட்ட கடிதம். அதையும் அதன் வடிவம் குலையாமல் இக்கடிதத்தில் இணைத்துள்ளேன்.

பெறுநர்

அனைத்து தாலுக்கா சங்க நிர்வாகிகள், தென் ஆர்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், நெல் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர் சங்கம்

அன்புடையீர்,

பொருள் : 1995 ஜனவரி உலகத் தமிழ் மாநாட்டுக்கு வரும் பொது மக்களுக்கு - அரசு வேண்டுகோளுக்கிணங்க அரிசி வழங்குதல் குறித்த சம்பந்தமான கடிதம் உடனடி செயற்குழு கூட்டம் கூடி முடிவெடுத்தல் சம்பந்தமாக

நமது மாநில சம்மேளன சங்க செயற்குழுக் கூட்டம் கடந்த 29.10.94ல் திருச்சியில் நடைபெற்று அங்கு முடிவெடுத்த விபரங்களை இணைப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதப்படி தஞ்சையில் 1995 ஜனவரியில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற உள்ளதால் அந்த மாநாட்டிற்கு வரும் பொது மக்களுக்கு உணவு வழங்க தமிழ்நாடு பூராவும் 1500 மூட்டை ப. அரிசி 100 கி கட்டாயம் வழங்க வேண்டுமென்று சம்மேளன கூட்டத்தினால் முடிவெடுக்கப்பட்டுள்ளதால் இது சம்பந்தமாக நமது இரு மாவட்டங்களும் சேர்த்து எவ்வளவு அரிசி வழங்கலாம் என்பது குறித்து அவசர முடிவெடுக்க வேண்டியுள்ளதால் விழுப்புரம் செஞ்சி ரோட்டில் உள்ள மாவட்டத் தலைவர் அரிசி ஆலையில் 7.11.94 பகல் 2 மணி அளவில் நடைபெற உள்ளது. அவ்வமயம் ஒவ்வொரு தாலுக்காவில் இருந்தும் தாலுக்கா சங்க நிர்வாகிகளும் முக்கிய அரிசி ஆலை உரிமையாளர்களும் அவசியம் கலந்து ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டுகிறோம். மேலும் சம்மேளன கடிதத்தில் சரியாக வசூல் செய்து கொடுக்காத

மாவட்டத்தில் அரசு அலுவலர்களை கொண்டு வசூலிக்கும் நிலைமை ஏற்படுத்திவிடாதீர்கள் என குறிப்பிடப்பட்டதை கவனத்தில் கொண்டு அவசியம் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

கடிதங்களைக் கண்டனைய உடன்பிறப்பே; நான் உனக்கு எழுதும் கடிதங்கள் கண்டு எத்தனையோ வகையான உணர்வுகளைப் பெற்றிருப்பாய்! பாச உணர்வு - நேச உணர்வு - உடன்பிறப்பு என்பதால் நீங்காத அன்பு உணர்வு - இன உணர்வு - தமிழ் உணர்வு - தன்மான உணர்வு - சமதர்ம உணர்வு - சமத்துவ உணர்வு - இப்படி வகை வகையான உணர்வுகளை நீங்களும் நானும் பெற்றிருக்கிறோம்.

ஆனால் இன்று நான் இணைத்துள்ள இந்தக் கடிதங்கள் மூலம்; அன்னைத் தமிழ் உணர்வை வளர்ப்பதைக் காட்ட வேண்டியதற்குத் தேவைப்படும் அன்பு உணர்வைவிட அதிகார உணர்வையன்றோ இந்த அரசு பிரகடனப்படுத்துகின்றது.

மாநாட்டுக்கு வரும் மக்களுக்கு உணவு வழங்குவது தேவைதான்! அவர்களைப் பட்டினி போட வேண்டுமென்று இதயமற்றோர்கூட இயம்பிடார்!

ஆனால்; அதற்காக? கையில் அதிகாரமிருக்கிறது என்பதற்காக வேண்டுகோளைக் கூட மிரட்டலாக்குவதா? நன்கொடை கேட்பதைக்கூட நாகரிகமாகக் கேட்கக் கூடாதா?

உதாரணத்திற்கு; இந்த மாநாட்டையொட்டி இப்படி ஒரு செய்தி! இன்னும் எத்தனையோ; யார் கண்டது? காலம்தான் கண்டுகொள்ள வேண்டும்! நிச்சயம் காணத்தான் போகிறது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

11-11-1994

2199. பாசறை அமைகிறது; பல லட்சம் பேர் சிறை ஏகிட!

உடன்பிறப்பே,

11.11.1994 வெள்ளிக்கிழமையன்று அண்ணா அறிவாலயம் - கழக அலுவலகத்தில் நடைபெற்ற தோழமைக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவு - நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் - அவற்றில் இடம் பெற்றுள்ள செய்திகள் அனைத்தையும் நீ ஏடுகளில் கண்டிருப்பாய். தீர்மானத்தின் பிரதிகளை இணைத்து மாவட்டக் கழகங்களின் செயலாளர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் நான் உடனடியாக அஞ்சல்வழிக் கடிதங்களும் அனுப்பியுள்ளேன். ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள நமது தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகளையும், ஒன்றிய மற்றும் வட்டங்களின் அளவில் உள்ள நிர்வாகிகளையும் எவ்வளவு விரைவாகக் கலந்து பேச முடியுமோ; அந்த அளவு விரைவாக அணுகிக் கலந்து பேசி, டிசம்பர் 15ஆம் நாள் நடைபெற இருக்கும் தமிழகம் தழுவிய மாபெரும் மறியல் போராட்டத்துக்குத் தகுந்த ஏற்பாடுகளையும், உரிய பிரச்சார முறைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கழக அமைப்புகளுக்கும் கழகச் சார்புடைய அணிகளுக்கும் இன்று நான் எழுதும் இக்கடித வாயிலாகவும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

பேராயர் எஸ்றா. சற்குணம் அவர்கள் இன்றைய முரசொலியில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல தமிழ்நாடு முழுகிக் கொண்டிருக்கிறது. அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆறாத புண்ணாகச் சீழும் இரத்தமும் பெருகி மூக்கைத் துளைக்கும் முடை நாற்றத்தின் மூலம், சுவாசப்பைகளையே அழுத்தி நிறுத்துகிற அளவுக்கு நிலைமை முற்றிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த துர்நாற்றத்தை மறைக்கப் புண்ணுக்குப் புனுகு பூசும் வேலையில் இன்றுள்ள ஜெயலலிதா அரசும்; அலங்கோலமாகி அழுகிச் சிதைந்துள்ள உடல் போன்று

ஆகிவிட்ட இந்த அரசின் நிர்வாகமெனும் நிர்வாணமேனியை மறைத்திட சல்லாத்துணி கொண்டு போர்த்த முயன்றிடும் ஏடெழுதும் ஏந்தல்களும்; தோத்திரத் துதிபாடி பதவி பணத்துக்குப் பாத்திரம் ஏந்துவோரும் காட்சிதரும் கண்ணைக் கலங்க வைக்கும் நிகழ்ச்சிகளின் ஆரவார அட்டகாச அரங்கமாக இன்றைய தமிழகம் இருப்பதை யாரே மறுத்திட இயலும்; மண்டியிட்டு மகுடத்தின் தயவு நாடுவோர் தவிர!

ஏழை எளிய மக்களை விலைவாசிக் கொடுமை ஒருபுறம் அழுத்திக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை ஆதரித்துக் கொண்டே; அவர்களைவிடப் பல படிகள் மேலே போய்; இருக்கின்ற பொதுத்துறைகளையும் தனியாருக்குத் தாரைவார்த்து விட்டு - தரவேண்டியதைத் தந்திடுக எனக்கேட்டு, பெறவேண்டியதை, பெருமளவு பெற்றுக் கொண்டு - ஏழைத் தொழிலாளிகள் ஏங்கி நிற்கவும், அவர் தம் விழிகள் அழுதழுது வீங்கிடவுமான நிலைமை; நாளுக்குநாள் வளர்ந்தோங்கி வறுமையின் வாசலுக்கு ஏழை எளியோர் மட்டுமல்ல; நடுத்தர மக்களையும் துரத்திக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் எந்தப் பிரிவு மக்களும் மனநிறைவு பெற்றிருக்கவில்லை; சீமான்கள் பூமான்கள் தவிர்த்து!

அதிலும் குறிப்பாகத் தமிழ் மாநிலத்தின் நிலையோ கேட்க வேண்டியதில்லை! ஏழை, எளிய, நடுத்தர வர்க்கத்தினரான எல்லாப் பிரிவினரின் கரங்களிலும் தூக்கிப் பிடித்துள்ள போர்க்கொடிகள், காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன! அசைந்தாடும் அக்கொடிகள் விளைவிக்கும் புயல் காற்று எப்போது வீசத் தொடங்கும்; எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் எதேச்சாதிகாரிகளின் கொட்டம் எப்போது அடங்கும் என்று நாள் குறிப்பிட முடியாது எனினும்; அது நடந்தே தீரும் என்பதற்கு பல நாட்டு வரலாறுகள் சான்று பகன்று கொண்டுள்ளன. அந்தச் சான்றுக்கு எடுத்துக்காட்டாகத்தான் எழுச்சிப் போராட்டம் ஒன்றை தோழமைக் கட்சிகள் டிசம்பர் 15 அன்று தொடங்க இருக்கின்றன.

இந்தப் போராட்டத்துக்கு தேவையான ஆயிரம் காரணங்கள் இருந்தபோதிலும்; மக்களின் பல்வேறு விதமான பிரச்சினைகளை - அவை உணவுப் பிரச்சினையாக இருக்கலாம், குடிநீர்ப் பிரச்சினையாக இருக்கலாம், சுகாதாரப் பிரச்சினையாக இருக்கலாம் - இப்படிப்பட்ட பிரச்சினைகளை எடுத்துரைத்து இடித்துரைக்கும்

எதிர்க்கட்சிகளைப் பேச அனுமதிப்பதில்லை, கூட்டம் நடத்திட அனுமதிப்பதில்லை, ஏன் எதிர்க்கட்சியினரில் சில செயல்வீரர்களை உயிருடன் நடமாடவே அனுமதிப்பதில்லை, எனக் கங்கணம் கட்டிக்கொண்டு தர்பார் நடத்திடும் தலைக்கனம் கொண்ட போக்கினை, தட்டிக் கேட்காமல் இருக்கமுடியுமா? எழுதி எழுதிக் கேட்டாயிற்று - பேசிப் பேசிக் கேட்டாயிற்று - ஆர்ப்பாட்டங்கள், உண்ணா நோன்புகள், எனும் முறைகளைக் கடைப்பிடித்துக் கேட்டாயிற்று!

இவற்றுக்கும் பிறகு, தம்மைத் திருத்திக் கொள்வதற்குப் பதிலாக, ஆளுங்கட்சியினர் - மக்களால் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள ஜனநாயக அரங்கு எனப்படும் சட்டமன்றத்தையே, ஆளுங்கட்சியின் உறுப்பினர்களுக்கு மட்டும் உரிய இடமாக ஆக்கிக் கொண்டு - எதிர்க்கட்சியான காங்கிரஸ் எடுத்துரைக்கும் நியாயமான கோரிக்கைகளையும், மற்றும் தி.மு.க., கம்யூனிஸ்டு கட்சிகள், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. போன்ற கட்சிகளின் உறுப்பினர்கள் அவையின் முன்வைக்கும் பிரச்சினைகளையும் துச்சமெனக் கருதி - துரத்தியடிக்கிற நிகழ்ச்சி நாளும் தொடருகிறதென்றால்; பிறகேன் சட்டமன்ற கூட்டம்? அதற்கேன் பல லட்சக்கணக்கான ரூபாய் வீண் செலவு?

ஜெயலலிதாவின் வீட்டிலிருந்தே - சேடப்பட்டியின் அறையிலிருந்தே; ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குத் தொலைபேசி மூலம் தாக்கீதுகளை அனுப்பி; ஆளுங்கட்சியின் அடிவருடும் ஏடுகள் சிலவற்றில் அந்தச் செய்திகளை விஸ்தாரமாகப் பரப்பி விடலாமே?

என்ன ஆதிக்க உணர்வு இருந்தால்; ஆயிரம் கருத்து மோதுதல்களுக்கிடையே பெரியார் காலத்தில், பேரறிஞர் அண்ணா காலத்தில், மூதறிஞர் ராஜாஜி காலத்தில், கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் காலத்தில், ஏன், பக்தவச்சலம் காலத்தில் - என் நண்பர் எம்.ஜி.ஆர். காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அரசியல் பண்பாடுகளை அறிந்தவன் என்ற முறையில் அவ்வழி நடந்தவன் நடப்பவன் என்ற முறையில் கேட்கிறேன்; மத்திய அமைச்சர் மாண்புமிகு அருணாசலத்தை மதுரை விமான நிலையத்தில் இவ்வளவு கீழ்த்தரமாக நடத்தி யிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? நம் தம்பி பரிதி இளம்வழுதியைக் காட்டுமிராண்டி என்றும் வாடா போடா என்றும் பேசி ஏசிட

ஆணவக் கொழுப்பு வழங்கிய அதிகாரம் எத்தனை நாளைக்கு என்று கேட்டிட வேண்டாமா?

உள்ளாட்சிமன்றத் தேர்தல் இல்லை - உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரால் கொள்ளை - எம்.ஜி.ஆர். விழா நடத்த தம்பி திருநாவுக்கரசுக்கு உரிமை கிடையாதாம்! அமைதிக் குழுவில் தலைவராயிருக்கும் ஜனதா தளத் தலைவர் மனோதங்கராஜ் மீதே கொலை முயற்சி வழக்காம்! சமூக நீதியை சாய்த்திட இவர்கள் ஆடுகிற இரட்டை வேடத்துக்கெல்லாம் தாளம் போட வேண்டுமாம்! கொடவாசலில் தங்கய்யாவைக் கொலை செய்த குற்றவாளி, கோட்டை அமைச்சரின் குடைக்குள்ளே மறைந்து கொள்வாராம்! திண்டுக்கல் இஸ்லாமிய இளைஞர் காசிம் கொலையில் காவல்துறை மௌனம் சாதிக்குமாம்! லாக்கப் சாவுகள், கற்பழிப்புகள், வழிப்பறி, கொள்ளை, கொலைகள் நாளும் தொடருமாம்! ஊதாரிச் செலவுகள் நிற்காதாம்! உயர்ந்துவிட்ட விலைவாசிகள் - வரிகளும், கட்டணங்களும் இறங்கவே இறங்காதாம்; மேலும் உயருமாம்! இவற்றையும், இன்னும் பலவற்றையும் நமது தோழமைக் கட்சிகளின் கூட்டத்தில் விவாதித்துத்தான் டிசம்பர் 15 ஆம் நாள் அறப்போர் மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கழக அமைப்புகள், அணிகளில் பொறுப்பு வகிப்போர் - ஏனைய தோழமைக் கட்சிகள் அமைப்புகளுடன் ஆங்காங்கு தொடர்பு கொண்டு டிசம்பர் 15ஆம் நாள் போராட்டத்தில் ஒன்றல்ல இரண்டல்ல பல லட்சம் பேர் சிறை சென்றிட திட்டம் வகுத்திடுவீர்! மக்கள் சக்தியைத் திரட்டுவீர்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

13-11-1994



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022